# கீதங்களும் கைப்பிரதிகளும்

S.K. Rajan
Tuckerammalpuram

அட்டவணை

# அகர வரிசை

அ ஆ இ உ எ ஏ ஐ ஓ

க கா கி கு கே கை

கொ கோ ச சா சி சீ சு

செ சொ சோ ஞா

த தா தி தீ து தெ தே

தொ தோ

ந நா நி நீ நெ நே நோ

ப பா பி பு பூ பெ பொ

போ

ம மா மி மு மூ மே

யா யூ

வ வா வி வீ வே

ஜீ

# அட்டவணை

பாடல் தலைப்பு பாடல் எண்

0. கடவுள் வாழ்த்து

## அ

1. அஞ்சாதே, இயேசு இரட்சகர்-------------------------332
2. அடியேன் மனது வாக்கும் கொடிய----------------------251
3. அடைக்கலம் அடைக்கலமே இயேசுநாதா உன் -----------333
4. அத்தன் மனுவானாரே - கிறிஸ்து நம--------------------115
5. அத்தனே உன் திருநாமத்தை --------------------------298
6. *அதிகாலையில் பாலனை தேடி*-------------------------- 9
7. அதி-மங்கல காரணனே, ------------------------------ 18
8. அந்தச் சிலுவையை நேசிப்பேன் --------------------- 209
9. அந்தர பானு சுந்தர சோதி --------------------------- 504
10. அந்தோ காண்கிறேன் - என ---------------------------488
11. அந்தோ சிலுவைப் பவனி பார் - சோகி ------------------171
12. அப்பா உம் சித்தமென்று அருமை மகன் கூவினதும் --------163
13. அப்பா, தயாள குணாநந்த மோனந்த, --------------------165
14. அம்மா நான் என்ன செய்வேன் நீர்தான் -----------------197
15. அருகில் நின்ற அன்னையாரை ------------------------195
16. அருணோதயம் எழுந்திடுவோம்------------------------ 54
17. அருணோதயம் செபிக்கிறேன் ------------------------- 55
18. அருமையுள் ளேசுவே குருசினில் மரித்தென் --------------252

19. அருவுருவே, நரருருவாய், என் நிமித்தம் இது தருணம், -----188

20. அருளின் மா மழை பெய்யும்---------------------------414

21. அரூபியே, அரூப சொரூபியே, – எமை, ஆளும் பரிசுத் -----413

22. அல்லே லூயா அல்லே லூயா -------------------------- 49

23. அல்லே லூயா தேவனை அவருடைய------------------- 15

24. அழைக்கிறார் அழைக்கிறார் இதோ---------------------422

25. அன்பரே என்னுடை தோழரே வாரும் ------------------- 76

26. அன்பரே கூடுங்கள் ஆனந்தம் பாடுங்கள் --------------- 105

27. அன்பிதோ! அன்பிதோ! அன்பிதோ! என்னை ------------365

28. *அன்பின் தேவ நற்கருணையிலே*----------------------213

29. அன்பே பிரதானம், – சகோதர --------------------------366

30. அன்பே! அன்பே!! அன்பே!! --------------------------371

31. அன்று கிறிஸ்து மரித்திடச் சூரியன் ---------------------179

32. அன்ன மேநீ தூது போவேன்----------------------------244

33. அன்னமே சீயோன் கண்ணே அன்பரதோ போறாரடி --------173

34. அன்னமே சீயோனே என்தன் சொர்ணமே----------------242

35. *அனாதி தேவன் உன் அடைக்கலமே*-------------------- 3

36. அனுக்கிரக கால மிதை அசட்டை செய்யாதே ------------423


## ஆ


37. ஆ! அம்பர உம்பர மும்புக ழுந்திரு -------------------- 106

38. ஆ! இன்ப காலமல்லோ? – செபவேளை -----------------253

39. ஆ! வாரும் நாம் எல்லோரும் கூடி -----------------------219

40. ஆ, ஆ! பூலோக வாழ்வே! அநித்தியம் ------------------482

41. ஆச்சரியமான காட்சியைப் பார்க்கலாம் வா – ஆ! கல்------174

அட்டவணை

42. ஆசீர்வதியும் – சுவாமி என்னை ----------------------265
43. ஆசீர்வதியும் கர்த்தரே, ஆனந்த மிகவே -----------------465
44. ஆசீர்வாதம் வேணும், ஆவியான சீவ தேவ. -------------498
45. ஆசை யாகினேன், கோவே; – உமக் -------------------- 29
46. ஆசைக் கிறிஸ்தரசே வாரும் – உந்தன் -----------------266
47. ஆண்டவர் பங்காகவே, தசம பாகம், -------------------393
48. ஆண்டவரின் நாமமதை ஈண்டு போற்றுவேன் – அவர் ------ 30
49. ஆண்டவா, மோட்ச கதி நாயனே, ---------------------254
50. ஆத்தும அடைக்கலம் அன்புள்ள இயேசுவே, ----------- 350
51. ஆத்துமமே, என் முழு உள்ளமே; – உன் ----------------- 34
52. ஆத்ம நாதன் திருவடியே – நமக் ----------------------424
53. ஆத்ம நேசர் ஆவலாய் ஓடி --------------------------425
54. ஆதம் புரிந்த பாவத்தாலே மனுடனாகி ----------------- 180
55. ஆதாரம் நீதானையா – என் துரையே -------------------334
56. ஆதி பராபரனின் சுதனே, கிறிஸ்தேசுநாதா, – எனக்---------186
57. ஆதி யாம் மகா இராசனே – எந்த வேளையும்-------------267
58. ஆதித் திருவார்த்தை திவ்விய -------------------------138
59. *ஆதிபிதாக் குமாரன் – ஆவி திரியேகர்க்–கு* --------------- 2
60. ஆதியாம் பரஞ் சோதியே அருளானந்த குரு சுவாமியே-----128
61. ஆமென், அல்லேலூயா! மகத்துவத் தம்பராபரா! ----------226
62. ஆயத்த செபம் செய்ய பெலன் தாரும் சுவாமி -------------268
63. ஆரணத் திரித் துவமே, – எமை ------------------------269
64. ஆரிடம் போவேன் நான் அவதிகள் மிகுந்திடில் -----------299
65. ஆரிவ ராராரோ – இந்த – அவனியோர் மாதிடமே ---------145

66. ஆரும் துணை இல்லையே, எனக் ----------------------312
67. ஆரையா பெருமானே – எனக்------------------------ 94
68. ஆலயமே தஞ்சம் – கிறிஸ் --------------------------- 406
69. ஆவியை மழைபோலே யூற்றும் – பல --------------------416
70. ஆவியை யருளு மே,சுவாமீ, – எனக் --------------------415
71. ஆவியைப் பிதாவின் கையில் ------------------------ 206
72. ஆனந்தக் கண்ணீர் பொழியும் தேசமதில்-----------------489
73. ஆனந்தப் பரனைத் துதி செய்தால், வரும் ---------------- 36
74. ஆனந்தம் ஆனந்தமே – ம --------------------------- 390
75. ஆனந்தம் பாடிடுவோம், அமலா திபர்க்கே ---------------386
76. ஆனந்தமே பர மானந்தமே – இயேசு --------------------387
77. ஆனந்தமே! செயா! செயா! ---------------------------77
78. ஆனீரோ பாலகனாய் – ஆதிபனே ஆனீரோ? ------------127


## இ


79. இங்கித னுஞ் சொன்னேன், அங்கிராதே தம்பி------------ 102
80. இத்தரையில் என்னை மீட்க ஏழையாக வந்தவா -----------318
81. இத்தனை பாடேன் பட்டீர் – இறையே, என்னாலே ---------182
82. இந்த இர வில்எமைக் காரும் – இயேசையாவே நீர்--------- 66
83. இந்த மங்களம் செழிக்கவே – கிருபை செயும் -------------466
84. இந்த வேளை வரவேணும் – என் இயேசு நாதா ----------- 270
85. இந்த வேளையினில் வந்தருளும் தேவ ------------------417
86. இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும் -------------- 410
87. இந்துதேச மாதர்நாமும், எழுந்திடுவோம் -----------------464
88. இம்மட்டும் சீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த ------------ 78

[அட்டவணை](#)


89. இம்மணர்க் குன்னருள் ஈ பர வாசா, ---------------------467

90. இயேசு அண்டை சேருவோம் ஒளியில் ஒளியில் --------- சிபா 1

91. இயேசு இராசனே ஆசிடை தாரீரோ -------------------- 260

92. இயேசு என் அஸ்திபாரம் ஆசை எனக்கவரே -------------319

93. இயேசு என்றதிரு நாமத்திற்கு --------------------------- 32

94. இயேசு கிறிஸ்து நாதர் ----------------------------------426

95. இயேசு சீக்கிரம் வரப் போகிறார் ------------------------227

96. இயேசு துரை சுவாமியைத் தினம்துதி மனமே-------------- 37

97. இயேசு நசரையி னதிபதியே – பல -----------------------272

98. இயேசு நாதனே, – இரங்கும், என் -----------------------273

99. இயேசு நாமம் ஒன்றை நம்புவீர், ------------------------427

100. இயேசு நாயகனைத் துதி செய், செய் -------------------- 24

101. இயேசு நேசா வாரும்---------------------------------- 13

102. இயேசு நேசிக்கிறார், இயேசு நேசிக்கிறார் ----------------374

103. இயேசு ராசா இதென்ன கோலம் – நீர் -------------------149

104. இயேசு ராசா, – எனை – ஆளும், நேசா ----------------- 38

105. இயேசு வரும் நாளதனில் என் உள்ளம் பொங்கிடுமே, -------245

106. இயேசுநாயகா, வந்தாளும் – எந்நாளும், திவ்ய ------------468

107. *இயேசுபிரான் எங்கள் இயேசுபிரான்* --------------------- 4

108. இயேசும கேசனைநான் – சிந்திப் பதென் -----------------377

109. இயேசுமக ராசனை என்றும்துதித்துப் போற்றுவோம் -------- 14

110. இயேசுராசன் வருவார் தூதரோடும் வருவார் ------------- 230

111. இயேசுவின் நாமமே *திருநாமம்*, – முழு ------------------- 5

112. இயேசுவே கிருபாசனப் பதியே, கெட்ட ---------------- 302

[அட்டவணை](#)


113. இயேசுவை நான் நம்பி சீவியம் செய்குவேன் --------------328

114. இயேசுவைப் பார்த்து நட - என் நேசா ---------------- சிபா 14

115. இயேசுவைப் போல்நல்ல நேசருண்டோ ---------------- சிபா 2

116. இயேசுவையே துதிசெய் நீ, மனமே---------------------- 22

117. இயேசையா நாங்க ளிப்போ இன்பமாக இங்கு கூடி ---------271

118. இயேசையா, பிளந்த ஆதி மலையே,------------------- 320

119. இரங்கும், இரங்கும், கருணை வாரி,---------------------314

120. இரட்சகர் பட்சம் எனக் கிருந்தால் ----------------------353

121. இரட்சிப்பை உயர்த்திக் கூறுவோம், ---------------------428

122. இராக்காலம் கர்த்தருடை நல்வீட்டில் நிற்குமவர் ------------71

123. இராச ராச பிதா மைந்த தேசு லாவுசதா ------------------139

124. இவராலே யல்லோ பரதேசி யாகினே னையா -------------382

125. இவரே பெருமான் - மற்றப் பேர் -------------------------429

126. இன்ப துன்ப நேரத்திலும் உன் அன்புள்ள ----------------331

127. இன்பக் கானானுக்குள் ஏழை செல்ல------------------- 490

128. இன்பம் துறந்தீரே இயேசு தேவா----------------------- 150

129. இன்பமே றும்கானான் நாடதில் -------------------------491

130. இன்றே நீ என்னுடன் இருப்பாய் பரதீசில்------------------192

131. இன்றைக் கென்னுட னிருப்பாய் - என்ற நல் வாக்கு ---------193

132. இன்றைக் கென்னுடன் நீ பரதீசி லிருப்பாய் ----------------194

133. இன்றைக்கே மனந்திரும்புவாய், ----------------------- 430

134. இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய், இயேசுநாதையா; ---- 56

135. இன்னமும் தாமதித்தால் என்னமா யான் பிழைப்பேன்--------229

136. இன்னும் நீ என்ன செய்கிறாய் - குணப்படாமல்-------------431

137. இனி நமக் கென்ன பயமேது – இயேசு -------------------355

## உ

138. உகந்தவரைத் தேடு, உறுதி பெற நாடு -------------------286
139. உச்சித மோட்ச பட்டணம் போக ------------------------492
140. உயிர்த்தன ரேசு மரித்த மூன்றாம் நாள்-------------------221
141. உருகாயோ நெஞ்சமே நீ ---------------------------- 190
142. *உலகம் தராத அன்பை* --------------------------------- 6
143. உலகமுன் சதமென்று எண்ணியிராதே-------------------432
144. உலகில் பாவப் பாரத்தால் சோரும் – இளைப்--------------433
145. உலகையோர் நிலைஎன்றெண் ணாதே – கணம்------------434
146. உலோக ஞானத் தாலே மோசம் போகாதே ------------- சிபா 3
147. உலோக நாதா உலோக நாதா, -------------------------285
148. உலோகம் வேண்டாம் யாதும் வேண்டாம் -----------------399
149. உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா?-----------------246
150. உனக்கொத் தாசை வரும்நல் உயர்பரு-------------------343
151. உன்தன் ஆவியே, சுவாமி என்தன் மீதினில் ---------------418
152. உன்தன் சுயமதியே நெறி என்று ------------------------398
153. உன்னத வீட்டை சீக்கிரம் சென்று ----------------------493
154. உன்னதத்தின் தூதர்களே ஒன்றாகக் கூடுங்கள் -------- சிபா 19
155. *உன்னதமானவரின் – உயர் மறைவிலிருக்கிறவன்*----------- 6

## எ

156. எங்கே சுமந்து போகிறீர் – சிலுவையை நீர்----------------172
157. எங்கே தேடுவேன் – நான் ----------------------------368
158. எத்தனை திரள் என் பாவம், என் தேவனே!-------------- 303

159. எந்தன் இயேசு உன்னதத்தில் ---------------------------327
160. எந்தை எந்தை முந்துந் திருமகன் -----------------------107
161. எந்நாளு மே துதிப்பாய் – என்னாத்து மாவேநீ! ------------ 39
162. எப்போதும் நாதனைத் தோத்திரி – நாள்------------------ 41
163. எருசலேமே எருசலேமே, ------------------------------158
164. எல்லா சாதிக் காரரே ஏகபரனைத் துதியுங்கள்------------- 43
165. எல்லாம் இயேசுவே, – எனக் கெல்லா மேசுவே. -----------321
166. எலலோகீம் தாமே மனு வேல னாகினார் – குரு ------------134
167. எழுந்தருள் எகோவா – எங்கட்------------------------- 408
168. எழுந்திடுவீர் நீர் வாலிபரே நாமும் ----------------------436
169. எழும்பு சீயோனே! இயேசு இதோ வருகிறார் --------------228
170. என் அப்பா தாய் மேய்ப்பர் ---------------------------358
171. என் சீவன் சுகம் பெலன் யாது--------------------------348
172. என் தேவனே என் தேவனே – எனை ஏன் கைவிட்டீர்-------199
173. என் தேவனே, என் தேவனே, ------------------------- 200
174. என் மீட்பர் உயிரோடிருக்கையிலே – எனக் ----------------341
175. எனக்கினி என்பயம் இயேசு என் துணையே ------------- 330
176. என்செய்வேன் மகனே நான் -----------------------------196
177. என்தன் – ஆத்ம நேசர் எங்கே! -------------------------232
178. என்தன் நிர்பந்தம் பாரும்! என் மக்களே! -----------------435
179. என்தன் பூமானைக் காண சிந்தை பெருகுதையோ ----------247
180. எனது கர்த்தரின் இராசரீக நாள் --------------------------241
181. என்மேலுள்ள நின்சர்வ நன்மைகட்காக நான் -------------376
182. என்றைக்கு காண்பேனோ, என் இயேசு தேவா ------------239

183. என்ன சந்தோசம் என்ன சந்தோசம் --------------------383
184. என்ன சுகம்!, ஆகா! என்ன சுகம் - என் ------------------494
185. என்ன பாக்கியம்; எவர்க்குண்---------------------------143
186. என்னஎன் ஆனந்தம், என்னஎன் ஆனந்தம்---------------381
187. என்னுடன் வருவா ரேசு - இயேசு, இயேசு-----------------487
188. என்னை உமக்கொப்பு வித்தேன்------------------------ 400
189. என்னைச் சீவ பலியாய் - ஒப்புவித்தேன், ----------------395
190. என்னையும் உம தாட்டின் மந்தையோ ------------------ 409

## ஏ

191. ஏங்குதே என் அகந்தான் - துயர் -----------------------177
192. ஏது மனு வேடந் தரித்தீர்? ----------------------------125
193. ஏதுக் கழுகிறாய் நீ - ஏழை -----------------------------133
194. ஏதேன் வனத் தோட்டம், என்ன சிங்கார வனம் -------- சிபா 15
195. ஏலி ஏலி லாமா சபத்தானி ------------------------------198
196. ஏழையை மீட்ட இயேசுவே சுவாமி, -------------------- 401
197. ஏற்றுக்கொண்டருளுமே, தேவா! - இப்போ ----------------499
198. ஏன் இந்தப் பாடையா? - நான் --------------------------162

## ஐ

199. ஐங்கா யத்தினடைக் கலந் தாவே -----------------------274
200. ஐயரே நீர்தங்கும் - என்னிடம்! ------------------------- 68
201. ஐயனே உமது திருவடி களுக்கே ------------------------- 57
202. ஐயா கொல்கதா மலை நாதா - எனக் --------------------275
203. ஐயா நீரன்று அன்னாகாய் பாவின் வீட்டில் ---------------184
204. ஐயா, உமது சித்தம் ஆகிட வே வேணும்.------------------397

205. ஐயையா, நான் ஒரு மா பாவி – என்னை-----------------262
206. ஐயையா, நான் பாவி – என்னை -----------------------313
207. ஐயையா, நான் வந்தேன் – தேவ -----------------------396
208. ஐயோ என் செல்வச் சீராளச் சிகா மணியைச் -------------183
209. ஐயோ, நான் ஒரு பாவ சென்மி ஆனேனே -------------- 300

## ஒ

210. ஓ! தாகம் மிகுந்தவரே, அமர்ந்த-------------------------437
211. ஓ! ஸ்திரீ வித்தேசையா, --------------------------------276
212. ஓசன்னா பாடுவோம் இயேசுவின் தாசரே-----------------157
213. ஓசன்னா! தாவீதின் புதல்வா --------------------------- 160
214. ஓய்வு நாளதை தாபித் தருளிய ------------------------ 72
215. ஓய்வுநாள் இது சபையே – தேவன் ---------------------- 73
216. ஓய்வுநாள் இது மனமே – தேவனின் --------------------- 74
217. ஓர் வெண்ணங்கி ஓர் பொன்முடி -------------------- சிபா 4

## க

218. கண்களை ஏறெடுப்பேன் ----------------------------352
219. கண்ணையா கண்ணீர் பாரேன்--------------------------296
220. கதிரவன் எழுகின்ற காலையில் இறைவனைத் ------------ 58
221. கர்த்த ருக்குக் காணிக்கை ---------------------------- 402
222. கர்த்தர் பிறந்தார் உத்தமர் மகிழ்வார்----------------------126
223. கர்த்தரின் பந்தியில் வா, – சகோதரா ---------------------411
224. கர்த்தன் சத்துவத்தில் நித்தம் வளரும்---------------------322
225. கர்த்தாதி கர்த்தனின்று பெத்தலைப் பதி பிறந்தார் -----------119
226. கருணா கரனே பதமே சரணம் ------------------------ 45

227. கருணா லயபீடா - எமைக் ---------------------------359
228. கருணாகர தேவா, இரங்கி இந்தக் ---------------------- 67
229. கல்லான நெஞ்சை இன்றே மாற்றுவீர் - ஐயா -------------277
230. கல்லும் அல்லவே - காயம், ----------------------------483
231. கவனம், கவனம், கவனம் கிறிஸ்து ---------------------- 82
232. கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப் பெருங்கருணை --- 210
233. கனசோ பனப்பதியே புயபல வா நீ தப நேசா -------------- 79
234. கனம், கனம் பராபரன் கருணையின் குமாரனே ------------166
235. கன்னி மரி பாலனே கருணை மனுவேலனே ---------------215

## கா

236. காட்டும், நல் வகை காட்டும், ஐயரே; --------------------323
237. காணக் கிடைக்காத தங்கம் - இவர் ---------------------122
238. காணிப் பூமி பரனே - கவலைக்குள் -------------------- 100
239. காப்பார், உன்னைக் காப்பார்,---------------------------335
240. *காரிருள் வேளையில் கடும் குளிர் நேரத்தில்* --------------- 8
241. காலம் ஆதாயப்படுத்து - உனது சீவன் ------------------438
242. காலமே தேவனைத் தேடு; - சீவ------------------------ 60
243. காலமே தேவு பஜி - அருணோதய ---------------------- 59
244. காலை நேரத்தில் கர்த்தன் இயேசுவை------------------- 61
245. காவில் நீர் பட்ட ஆத்துமக் கஸ்தியை --------------------164
246. கானம் பாடுவோம் மேசியாவின் ------------------------ 83

## கி

247. கிஞ்சிதமும், நெஞ்சே, அஞ்சிடாதே; - நல்ல -------------339
248. கிருபை புரிந்தெனை ஆள் - நீ, பரனே;------------------ 360

249. கிருபையே உன்னை இந்நாள் வரையும் காத்தது ---------- 370

250. கிருபைவேண்டும் நாதா – இயேசு வேஉம் திவ்ய -----------375

## கு

251. குணப் பட இதுவே தருணமையா ----------------------439

252. குணப்படு, பாவி; தேவ ------------------------------ 304

253. கும்பிடுகி றேனான் கும்பிடுகி றேன் – எங்கள்-------------- 27

254. குருசினில் தொங்கியே குருதியும் வடியக் -----------------178

## கே

255. கேளுந் தெய்வங் கேளும் – தவம் ----------------------- 88

## கை

256. கை நிறைந்த கருவூலமே------------------------------151

## கொ

257. கொலைக்காவணம் போறார், அன்னமே – ஆதாம் ---------175

## கோ

258. கோடா கோடி ஸ்தோத்திரம் பாடி ----------------------- 31

259. கோழி தன் குஞ்சுகளைக் -------------------------- சிபா 7

## ச

260. சத்தாய் நிட்களமாய் ஒருசாமிய மும்மிலதாய், -------------356

261. சத்திய வேதத்தைத் தினம் தியானி ----------------------288

262. சந்தோச தினம் சந்தோச தினம் சுவாமி பிறந்த நாள் --------131

263. சம்மன சோர் வாழ்த்தும் – தக்க-------------------------- 87

264. சமயமாம் இரதத்தில்யான் ------------------------------495

265. சமாதானம், ஓதும் ஏசுகிறிஸ்து -------------------------141
266. சரணம் சரணம் அனந்தா சச்சிதானந்தா!-----------------169
267. சரணம் சரணம் அனந்தா சச்சிதானந்தா,-----------------170
268. சரணம் நம்பினேன் இயேசு நாதா - இது -----------------255
269. சரணம், சரணம், சரணம் எனக்குன் -------------------- 19
270. சருவே சுராஏழைப் பாவிஎன் பேரிலே ----------------- 305

## சா

271. சாலேம் குமாரத்தியே - உன் நாயகர் -------------------233
272. சாலேமின் இராசா, சங்கையின் இராசா, --------------- 240
273. சாவெனக் காதாயம் சல்தி விளைக்கும் -----------------354

## சி

274. சிங்கார ஒரேப் சார்பில் மங்காத் ------------------- சிபா 17
275. சித்திர வர்ணப் பொற்சரிகைச் சேலை யுடுத்தி -------------469
276. சிலுவை தனில் உயிர் பிரிய திரு மகனார் முகம் நோக்கி ---- 207
277. சிலுவை நிழலில் அனுதினம் அடியேன் ------------------372
278. சிலுவையை நான் விடேன், ---------------------------388

## சீ

279. சீயோன் பிரயாணிகளே நீங்கள் -----------------------248
280. சீர் இயேசு நாதனுக்குச் செய மங்களம் - ஆதி ----------- 509
281. சீர்மிகு வான்புவி தேவா, தோத்ரம், -------------------- 40
282. சீவ சுந்தர விலாசா மங்களம் ------------------------ 506
283. சீவ நாயகர் இதோ சிசுவாகப் பிறந்தார்-------------------113
284. சீவனைக் கொடுப்பேன் சீவாதி பதிக்கே ---------------- 380

அட்டவணை

## சு


285. சுத்தம் தரவே, மருந்தொன் றிருக்குது------------------- 440

286. சுதன் பிறந்தார், சுதன் பிறந்தார், ----------------------- 108

287. சுந்தர மேசையா உன் திரு நாமத்தை -------------------389

288. சுந்தரப் பரம தேவ மைந்தன் இயேசுக் கிறிஸ்துவுக்கு -------- 42

289. சுப செயய மங்களமே நித்திய சுப செப மங்களமே --------- 508

290. சுவாமி இவர்க்கிதை மன்னியும் சுவாமி ------------------191


## செ


291. செக சோதிப் பராபரனே யூதர்குல-----------------------132

292. செகநாதா, குரு பரநாதா, திரு -------------------------147

293. செகமதி லுதித்த செய சோதியே – நரர்-------------------361

294. செபமே சீவன் செபம் செயம் ---------------------------261

295. செயம் செயம் அல்லேலூயா செயம் செயம் -------------- 501


## சொ


296. சொந்தம் உமக்கினி என் இயேசுதேவா – பாவ-------------294

297. சொல்லரும் மெய்ஞ்ஞானரே, மேன்மைப்பிரபுவே ----------146


## சோ


298. சோபன கீதம் பாடுவோம் – சுவிசே – மேன்மை ------------441


## ஞா


299. ஞான சுவிசேடமே-----------------------------------287


## த


300. தசம பாகங்களை – நமக்குத் -------------------------- 403

301. தந்தானைத் துதிப்போமே – திருச் ------------------------ 26
302. தந்தை தந்தை தந்தை தேவனார் ------------------------ 80
303. தந்தைசரு வேஸ்பரனே, --------------------------------284
304. தம்புரானே இயேசுநாதா பொன்னுகாந்தா – எந்தன் --------279
305. தருணம் இதில் அருள்செய், இயேசு ---------------------316
306. தருணம் இதுவே, கிருபை கூரும்,------------------------ 21
307. தருணம் ஈதுன் காட்சி சால---------------------------- 20
308. தற்பரனே எனது மேய்ப்பர் தாழ்ச்சியை-------------------351

## தா

309. தாக மானீரோ இயேசு தற்பரா சுவாமி------------------- 201
310. தாகத்தைத் தீருமையா – அபி ------------------------- 404
311. தாகம் கொண்டனரே – எருசலை------------------------ 85
312. தாகமா யிருக்கிறே னென்றார் – என் இயேசு சுவாமி------- 202
313. தாசரே, இத்தரணியை அன்பாய் ------------------------442
314. தாவீதின் ஊர்தனிலே – சின்னப் பாலகா -----------------114
315. தாவீதின் புத்திரனைச் சாலோமின் மங்களனை------------ 120

## தி

316. திக் கெட்டும் கீதம் தங்க, தேவ மகிமை பொங்க------------ 96
317. திரியேகா, மரியோவா, --------------------------------256
318. திருமுகத் தொளிவற்று பெருவினைக ளில்உற்று------------311
319. திவ்விய வாசகன் பாருங்கள் – யோவான் மூப்பன்---------- 101

## தீ

320. தீம் தோமென நடனம் செய்குவோம்----------------------385

321. தீய பாவக் கேட்டை நீக்குமே–திருச் சபை யோரே ---------- 93
322. தீய மனதை மாற்ற வாரும், ----------------------------263
323. தீயன் ஆயினேன், ஐயா! – எளியேன் உற்ற---------------297

## து

324. துங்கனில் ஒதுங்குவோன் பங்கமின்றித் தங்குவான் ---------344
325. துதி ஓயாமல் செலுத்திடுவேன் – பரி---------------------378
326. துதிக்குப் பாத்திரன் நீயே, நிதிக்கருணை வாரியே ----------449
327. துதிதங்கிய பரமண்டல சுவிசேடக நாமம் ----------------- 23
328. துரை மக இராசனே ஜேஜே -----------------------------249
329. துறவற மேவி – வேத ---------------------------------- 91

## தெ

330. தெய்வன்பின் வெள்ளமே, திருவருள் தோற்றமே, ----------369

## தே

331. தேவ ஆசனத்தின் முன்ன தாகவே---------------------496
332. தேவ கிருபை ஆசீர்வாதம் ------------------------------362
333. தேவ சுதன் பூவுலகோர் பாவம் ஒழிக்க – மனு---------------152
334. தேவ சேயோ, தேவ சேயோ, சீவ வான ------------------ 109
335. தேவ பால சிங்கம் மனுவாயினார் -------------------------117
336. தேவ பிதா என்றன் மேய்ப்பன் அல்லோ? ----------------- 340
337. தேவசுதன் பூவுலகோர் பாவ மெல்லாம் தீரத்---------------189
338. தேவசேயன் பால்யர் சேனையர் நாமே ---------------- சிபா 5
339. தேவதே, ஓர் ஏக வஸ்து, தேவ நாமனாம் கிறிஸ்து ---------- 10
340. தேவனைத் துதியுங்கள் – அல்லேலூயா--------------------17

அட்டவணை

341. தேவா இந்த நேரம் நின்னாசீர் வாதந் தா ---------------- 470
342. தேவா, இரக்கம் இல்லையோ? - இயேசு ---------------- 280
343. தேவா, திருக்கடைக்கண் பார், ஐயா; --------------------281
344. தேவா, பர தேவா, ஓ! ஏ ------------------------------- 62
345. தேவாச னப்பதியும் சேனை தூதரம் விட்டுத்---------------156
346. தேவாதி தேவ சுதன் ------------------------------- 103
347. தேவாதி தேவனுக்கும் தேவ குமாரனுக்கும்--------------- 507
348. தேன் இனிமை யதிலும் சத்ய வேதம் --------------------293
349. தேன்இனி மையிலும் ஏசுவின் நாமம் --------------------463

## தொ

350. தொண்டு செய்வேன், என்றும் - தொண்டு செய்வேன்-------384
351. தொழுகிறோம் எங்கள் பிதாவே ------------------------ 48

## தோ

352. தோத்திர பாத்திரனே, தேவா, -------------------------- 63
353. தோத்திரம் இயேசுநாதா - உமக்கென்றும் ---------------- 33
354. தோத்திரம் செய்வேனே, - இரட்சகனைத் ---------------- 35
355. தோத்திரம் தோத்திரம் அல்லேலூயா -------------------- 50
356. தோத்திரம் தோத்திரமே - இயேசு ---------------------- 46
357. தோத்திரம் பாடி துதிபணிந் தேற்றி --------------------- 53
358. தோத்திரம்! கிருபை கூர், ஐயா; ------------------------ 69
359. தோத்திரிக்கிறேன் நான் தோத்திரிக்கிறேன்; - தேவ--------- 44
360. தோழரே சேர்ந்து வாருங்கள்------------------------ சிபா 6

அட்டவணை

## ந

361. நடப்போம் வாருங்கள் சீயோன் மலைக்கு ----------------497
362. நம்கிறிஸ் தரசன் கல்லறை விட் டுயிர்த்தெழுந்தாரே ---------225
363. நமது மணவாளருக் கெதிர்கொண்டு---------------------238
364. நம்ப வேண்டாம் நம்ப வேண்டாம்------------------------443
365. நம்பிவந்தேன், மேசையா, நான் நம்பி வந்தேனே ------------342
366. நம்பினேன், உன தடிமை நான், ஐயா – திடப்---------------324
367. நம்மை ரட்சிக்கவென்று நாடி நாதன் ---------------------124
368. நல்ல வாக்கியம் – நமக் குண்டு------------------------- 84
369. நல்லாயன் யேசு சாமி, இராசதாவீதுடை மகவு, ------------153

## நா

370. நாசலோக மீதிலே வாசஞ்செய் புறாவன்னமே --------------484
371. நாதப் பராபரன் தேவ மனோகரன் நரரூப மாகினார்----------121
372. நாதனேசு நலமிந்த திறவுகோலாமே – இந்த----------- சிபா 21
373. நாதா, சிறுவரின் பண் கேள் ஐயா! ----------------------- 98
374. நாம் நற்சுகமாய்ப் பெத்லேம் நகர் பொய் திரும்புவோம் ------112

## நி

375. நித்தம் அருள் செய் தயாளனே – எங்கள்------------------ 81
376. நித்திய சீவனின் நினைவெனக் கருளும்------------------ 92
377. நித்தியானந்தத்தை நாடு – பர----------------------------444
378. நினையேன், மனம், நினையேன் தினம் -------------------357

## நீ

379. நீயுனக்குச் சொந்தமல்லவே – மீட்கப்பட்ட பாவி!-----------394

அட்டவணை

## நெ


380. நெஞ்சமே ஏன் வீணாய் சஞ்சலம் கொள்கின்றாய் ----------329

381. நெஞ்சமே, கெத்சமேனக்கு -----------------------------187

382. நெஞ்சமே, தள்ளாடி நொந்து, நீ கலங்காதே – கிறிஸ் -------346


## நே


383. நேச இயேசு பாலனை நித்தம் துதித்துப் பாடுவோம் --------- 51

384. நேசமணி வாசமணி ஈச னென்னும் இயேசு மாமணி --------325

385. நேசமே எழுந்து இயேசு இராசனை ------------------- 250


## நோ


386. நோக்கிப்பார், நோக்கிப்பார் சிலுவையை நோக்கிப்பார் ------216


## ப


387. பக்தர் யாரும் வாரும் பாடிப் போற்றுவோம்---------------224

388. பட்ட பாடு போதா தோடா – பேயே------------------- சிபா 8

389. பணிந்து நடந்து கொண்டாரே – பரன் பாலனும் ------------148

390. பத்தி யாய்ச்செபம் பண்ணவே----------------------- சிபா 9

391. பந்திவிட் டெழுந்திருந்தார் பரமர் என் இராசா-------------159

392. பயமேது நமக்குப் பயமேது-----------------------------349

393. பரம சீயோன் நகர் அதிபதி வருகிற ---------------------234

394. பரம சேனை கொண்டாடினார்;------------------------ 110

395. பரலோக தேவா நரலோக மக்களும் -------------------- 52

396. பரனே, பரப்பொருளே, –நித்திய -------------------------161

397. பரிசுத்தர் கூட்டம் இயேசுவைப் போற்றி ------------------243

398. பரிசுத்தர் பரிசுத்தரே இயேசையா உம்மைப் ---------------391

399. பல்லரங்க கனக சபை மானுவேலனே---------------- சிபா 16
400. பவனி இதோ செல்கின்றார் பார் ---------------------------155
401. பவனி செல்கின்றார் இராசா – நாம் ----------------------154
402. பவுலின் சிநேகிதனைப் பாரும் – இன்று ------------------- 90

## பா

403. பாடித் துதி மனமே – பரனைக்கொண்-------------------- 25
404. பாடுபட்ட இயேசையா பட்டபலன் தாருமையா ------------214
405. பாதகர்க் காய்ப்படும் பாடுகளைக் கண்ணால்---------------176
406. பாதகன் என் வினைதீர் ஐயா – கிருபாகரா, நின் ----------- 306
407. பாதகனாய் நானலைந்தேன் பாவி -----------------------295
408. பாதம் ஒன்றே வேண்டும்; – இந்தப் -----------------------347
409. பாதைக்கு தீபமாமே---------------------------------- 290
410. பார் பார் பார் இயேசுவின் ஜீவன் போகுது பார்------------- 208
411. பார், ஐயா; எளியேன் செய்------------------------------315
412. பார்க்கமுனம் வருவேன் நெருக்கத்தில்--------------------264
413. பார்ப்பேனே என் நேசரை நான், --------------------------379
414. பாரும் உந்தன் கிருபைக் கண்ணாலே---------------------471
415. பாலகர்எல் லாரும்கூடி பரம இரா சனைத் தேடி--------- சிபா 10
416. பாலர் ஞாயிறிது, பாசமாய் வாரும் --------------------- 104
417. பாலரே நடந்து வாருங்கள், ------------------------- சிபா 13
418. பாவ நாசக ரேசு பாடுபட் டுயிர்த்தார் -------------------- 220
419. பாவத் தின்பயன் நரகம், நரகம் ---------------------------447
420. பாவத்தின் சாபத்தைத் தீர்த்தவர் இயேசு -------------------446
421. பாவம் செய்யாதே நீ பாவம் செய்யாதே ----------------- 445

422. பாவம் போக்கும் சீவ நதியைப் ---------------------------448
423. பாவி ஓடிவா, உன் பாவப் பாரம் தாங்க இயேசு ------------ 450
424. பாவி நான் என்ன செய்வேன் – கோவே-------------------181
425. பாவி நான் செய்த பாவம் தீர்க்க – இந்தப்------------------185
426. பாவி பரம சுதன் தாவி உனைத் தயவாய் ----------------- 454
427. பாவிக்கு நேச ராரே-----------------------------------451
428. பாவிகளை மீட்கவந்த பரனி இவர்தாமே ------------------452
429. பாவியாகவே வாரேன்; பாவம் போக்கும்------------------ 307
430. பாவியாம் எனை மேவிப் பார், ஐயா --------------------- 301
431. பாவியே உனைத்தானே தேடித் துயர் மேவினார்;------------412
432. பாவியே நீ போகும் போது, கூட வருவ தென்ன? ------------453
433. பாவியே, பாவியில் பாவியே, உனில் ---------------------363

## பி

434. பிதாசுதா சுத்தாவியே நமோ நமோ நமோ------------------ 1
435. பிரதிட்டை செய்ய வாரும், பெரியோனே! -----------------481
436. பிலிப்பும் சின்ன யாக்கோப் பென்னும்--------------------- 89
437. பின் செல்வேன் என் மீட்பரே – நானும்மைப் ---------------317

## பு

438. புறப்படுங்கள் தேவ புதல்வரின் ஊழியரே ----------------- 455

## பூ

439. பூச் சொரிவோம் புண்ணியரே மாப்பிள்ளை பெண்மேல் -------472
440. பூரண கிருபையின் மயமே, தேவா,-----------------------367

அட்டவணை

## பெ

441. பெத்தலேகேம் ஊரோரம் சத்திரத்தை நாடி----------------123
442. பெற்தலையில் பிறந்தவரைப் ----------------------------137

## பொ

443. பொக்கிஷம் சேர்த்திடுங்கள் – பரத்திலே ------------------ 405
444. பொற்பு மிகும் வானுலகும்--------------------------------167
445. பொன்னகர் பயணம் போகும் புண்ணியர்களே, -------------486
446. பொன்னின் கிரீடம் வெண்ணங்கி -------------------------237
447. பொன்னேசு தம்புரான் நன்னேச இரட்சகன்----------------364

## போ

448. போதாது நீ------------------------------------------- 308
449. போற்ற வாரும் பெத்லேம் நகர் மீதினில் -------------------136

## ம

450. மகனே, உன் நெஞ்செனக்குத் தாராயோ? ---------------- 309
451. மகிழ் கொண்டாடுவோம் மகிழ் கொண்டாடுவோம் ----------223
452. மகிழ்வோம் இயேசுவில் மகிழ்வோம் – பரன்----------------392
453. மங்களங்கள் பாடிடுவோம் சங்கீதத் தியானத்தோடு --------- 505
454. மங்களம் சுபமையா பூமாது மணவாளா ------------------ 503
455. மங்களம் செழிக்க கிருபை அருளும் ---------------------473
456. மங்களம்! செய மங்களம்----------------------------------- 502
457. மங்களமணி மங்களமணி மங்களமணியே -----------------474
458. மங்கா சுபகன மங்களமே – மனம் -------------------------475
459. மண வாழ்வு புவி, வாழ்வினில் வாழ்வு --------------------476

460. மணே சனே இன்னே! நினதருள்புரி சுகிர்த ----------------478
461. மரி மரி பாலா, மங்கள சீலா, ----------------------------- 86
462. மரித்தாரே கிறிஸ்தேசு உனக்காகப் பாவி ------------------217
463. மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார்,----------------------485
464. மலரெடுத்துப் பூ முடித்து ---------------------------------477
465. மலையடி ஓரத்திலே மாட டையும் கொட்டிலிலே------------135
466. மறவாதே மனமே – தேவ சுதனை ------------------------ 75
467. மன்னுயிர்க்காகத் தன்னுயிர் விடுக்க ---------------------111
468. மன்னுருவானார் ஆதி மன்னுருவானார் – ஏதும் ----------- 130

## மா

469. மா துன்ப மே அடைந்தோர் – மறு லோக ------------------- 99
470. மாட்சிமிகும் மோட்சநகர் மகிமை என் ---------------- சிபா 11
471. மாம்பூ மகிழம்பூ மணக்கும் ஞான மல்லிகைப்பூ -------------479
472. மாயையில் மனம் ஓட வையாதே – உன்னை ---------------456
473. *மாலையில் துதிப்போம்* -----------------------------------211
474. மாற்றீ ரென்கவலை – அருள்பெற ------------------------282

## மி

475. மிகையாகத் தூஷணித்துச் -------------------------------168

## மு

476. முடிந்ததென் நீரோ ஐயா ------------------------------- 203
477. முடிந்ததென்று இயேசுநாதர் ---------------------------- 204
478. முள்முடி சூட்டப்பட்டார் --------------------------- சிபா 18

அட்டவணை

## மூ


479. முச்சொடுங்கும் நேரம் முடிந்தது என்றீரே இயேசு நாதா ---- 205


## மே


480. மேகமீதில் இயேசு சுவாமி வேகம் வாராரே ----------------231

481. மேகமீது தூத ரோடிதோ இதோ -------------------------235

482. மேசியா இயேசு நாயனார், - எமை----------------------144

483. மேலோக இராசன்வருங் கால மாகுது--------------------236


## யா


484. யார் இவர் ஆரோ? யார் இவர் ஆரோ? ----------------- 140


## யூ


485. யூதர் இராசசிங்கம் உயிர்த் தெழுந்தார் -------------------222


## வ


486. வந்தருள், ஈ சன்மனைகாண்; மகிமைஏகோ --------------257

487. வந்தவர் ஆரையா - இங்கே - வந்தவர் ஆரையா ----------116

488. வந்தாள்இம் மண வீட்டிலே - மண ---------------------- 480

489. வந்தாளுமே எந்நாளுமே, ------------------------------ 11

490. வந்து நல்வரம் தந்தனுப்பையா ------------------------ 500

491. வர வேணும், என தரசே, ------------------------------ 28

492. வரவேணும் பரனாவியே இறங்கும் ----------------------419

493. வரவேணுமே - வல்ல ஆவியே நீர்--------------------- 420

494. வல்ல ஆவியே எங்கள் மீதிலே--------------------------421

## வா


495. வா இயேசு பாதம் ------------------------------------459

496. வா எங்கள் சுவாமி வா இந்த நேரத்திலே -----------------258

497. வா வா நேசா, வளர்சுவி சேடத்தின் -------------------- 460

498. வா, பாவி, கர்த்தரின் அண்டைக்கு வா.------------------457

499. வா, பாவி, மலைத்து நில்லாதே, வா ---------------------458

500. வாடி அம்மா வாடி,-ஒரு-ஞானப் பாட்டைப் பாடி ------ சிபா 20

501. வாரா வினை வந்தாலும் சோராதே மனமே;---------------345

502. வாரீரோ சுகந்தமிட ------------------------------------218

503. வாரீரோ? வினை தீரீரோ? எனைக்-----------------------373

504. வாருங்கள் வாருங்கள் தோழிப் பெண்காள் ---------------461

505. வாருஞ்சபை யோரே வாரும் – சுற்றி ------------------- 407

506. வாரும் பெத்தலை வாரும் – வாரும் ---------------------118

507. வாரும், எமது வறுமை நீக்க ----------------------------283

508. வாருமையா போதகரே! வந்தெம்மிடம் தங்கியிரும்;---------259

509. வாவா செகதீசா – வரம்தரவே------------------------ 12

510. வாழ்த்துகிறேன் இயேசு சுவாமி------------------------ 64

511. வான இராச்சியம் வந் ததோ ஓகோ!---------------------462

512. வானபராபரனே, இப்போம் – வாரும்எம் மத்தியிலே -------- 16

513. வானம் திறந்தருளும் பல தானங்களை இந்நேரமிதில் ------- 47

514. வானம் பூமியோ? பராபரன் ------------------------------142

515. வானாதி தாள் காட்டும் – நல்ல---------------------------291


## வி


516. விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்; – மெய் -------------338

517. விசுவாசியின் காதில்பட இயேசுவென்ற நாமம் ------------337

518. விடியும் நேரத்தில் வெள்ளி உதிக்குது-------------------- 65

519. விடுவேனோ நான் உம்மை விடுவேனோ. ----------------326

520. விந்தையில் விந்தையை வந்து பாராய் – மா --------------129

521. வினை சூழா திந்த இரவினில் காத்தாள், ----------------- 70

522. வினையேன்? பாவ வினையேன்? – சொல்லும் ------------ 95

# வீ

523. *வீசும் ஒளியினிலே ஆ... ஆ...* ------------------------212

524. வீராதி வீரர் இயேசு சேனை நாங்கள், --------------- சிபா 12

# வே

525. வேத சிகாமணி லூக்கா இதோ ------------------------- 97

526. வேத நூல் ஓதிடும் நல்ல மேய்ப்பர் ----------------------336

527. வேத புத்தகமே, வேத புத்தகமே,------------------------289

528. வேத வசன விதைதனைப் புவியில்----------------------292

529. வேறு ஜென்மம் வேணும் – மனம்----------------------- 310

# ஜீ

530. ஜீவனேசு கிருபாசன்னா, எனின் -----------------------278

அட்டவணை

# (கீதங்களும் கைப்பிரதிகளும்)
## I. கடவுள் வாழ்த்து

**1. காம்போதி** **ஏகதாளம்**

**பல்லவி**

**பிதாசுதா சுத்தாவியே நமோ நமோ நமோ**

**அனுபல்லவி**

பேசருந் திரியேக தேவனே நமோ நமோ நமோ

1. அம்புவி படைத்தவா எம்பதம் தொலைத்தவா – பிதா
2. அரிய தேவநற்சகாயம்புரிந்த ரட்சகா – பிதா
3. சீடருள்ள மேவியே தேற்றுவீர் தேவாவியே – பிதா
4. முகில்மீதேறும் வாகனேமுத்தொழில் புரிவோனே – பிதா
5. கவிவரம் அளித்திட கடைவிழி விழித்திட – பிதா

**2.**

***பல்லவி***

***ஆதிபிதாக் குமாரன் – ஆவி திரியேகர்க்–கு***
*அனவரதமும் தோத்திரம் – திரியேகர்க்–கு*
*அனவரதமும் தோத்திரம்*

***அனுபல்லவி***

*நீதமுதற் பொருளாய் நின்றருள் சருவேசன்*
*நிதமும் பணிந்தவர்கள் இருதயமலர் வாசன்*
*நிறைந்த சத்திய ஞான மனோகர*
*உறைந்த நித்திய வேத குணாசர*
*நீடு வாரி திரை சூழு மேதினியை*
*மூடு பாவ இருள் ஓடவே அருள்செய் – ஆதி*

அட்டவணை

### *சரணங்கள்*

1. *எங்கணும் நிறைந்த நாதர் – பரிசுத்தர்கள்*
*என்றென்றைக்கும் பணிபாதர்*
*துங்கமாமறைப்பிர போதகர், கடைசி நடு*
*சோதனை செய் அதி நீதர்,*
*பங்கில்லான், தாபன் இல்லான் பகர் அடி முடிவில்லான்,*
*பன் ஞானம், சம்பூரணம், பரிசுத்தம், நீதி, என்னும்*
*பண்பதாய் சுயம்பு விவேகன்*
*அன் பிரக்க தயாளப்பிரவாகன்*
*பார்தலத்தில் சிருஷ்டிப்பு, மீட்பு, பரி*
*பாலனத்தையும் பண்பாய் நடத்தி அருள் – ஆதி*

2. *நீதியின் செங்கோல் கைக்கொண்டு – நடத்தினால் நாம்*
*நீணிலத்தில்லாமல் அழிந்து*
*தீதறு நரகில் தள்ளுண்டு மடிவோமென்று*
*தேவ திருவுளம் உணர்ந்து*
*பாதகர்க்குயிர் தந்த பாலன்யேசுவைக் கொண்டு*
*பரன் எங்கள் மிசை தயை வைத்தனர்; இது நன்று*
*பகர்ந்த தன்னடி யார்க்குறு சங்சலம்*
*இடைஞ்சல் வந்த போதே தயவாகையில்*
*பாரில் நேரிடும் அஞ்ஞான சேதமுதற்*
*சூரியன் முன் இருள் போலவே சிதறும் – ஆதி*

3.

### *பல்லவி*

***அனாதி தேவன் உன் அடைக்கலமே***
*அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே*

### *அனுபல்லவி*

*இந்த தேவன் என்றென்றுமுள்ள*
*சதா காலமும் நமது தேவன்*
*மரண பரியந்தம் நம்மை நடத்திடுவார்*

அட்டவணை

### *சரணங்கள்*

1. *காருண்யத்தாலே இழுத்துக் கொண்டார்*
*தூய தேவ அன்பே*
*இவ்வனாந்திரத்தில் நயங்காட்டி உன்னை*
*இனிதாய் வருந்தி அழைத்தார்* – *இந்த*

2. *கானகப் பாதை காரிருளில்*
*தூய தேவ ஒளியே*
*அழுகை நிறைந்த பள்ளத் தாக்குகளை*
*அரும் நீரூற்றாய் மாற்றினாரே* – *இந்த*

3. *கிருபை கூர்ந்து மன துருகும்*
*தூய தேவ அன்பே*
*உன் சமாதானத்தின் உடன்படிக்கைகளை*
*உண்மையாய் கர்த்தர் காத்துக்கொள்வார்* – *இந்த*

4. *இப்புவி யாத்திரை கடந்திடுவாய்*
*தூய தேவ தயவால்*
*கடும் கானகத்தில் கர்த்தர் மார்பினிலே*
*கிடைக்கும் இளைப்பாறுதலே* – *இந்த*

5. *வறண்ட வாழ்க்கை செழித்திடுமே*
*தூய தேவ அருளால்*
*நித்திய மகிழ்ச்சி தலைமேல் இருக்கும்*
*சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போம்* – *இந்த*

6. *ஆனந்தம் பாடித் திரும்பியே வா*
*தூய தேவ பெலத்தால்*
*சீயோன் பர்வதம் உன்னைச் சேர்த்திடுவார்*
*சந்ததம் மகிழ்ச்சி அடைவாய்* – *இந்த*

அட்டவணை

**4.**

***இயேசுபிரான் எங்கள் இயேசுபிரான்***
*உலகத்தின் இறைவன் இயேசுபிரான்*

1. *ஆற்றலும் அவரே அமைதியும் அவரே*
*அன்புக்குத் தலைவன் இயேசுபிரான்*
*அடைக்கலம் என்று புகுந்தவர் நெஞ்சில்*
*அருளாய் நிற்பவர் இயேசுபிரான்*
*அனுதினம் அவரைத் தொழுதவர் உயிரை*
*பயிர் போல் வளர்ப்பவர் இயேசுபிரான்*

2. *உயர்ந்தவன் தாழ்ந்தவன் பேதத்தை அறுத்து*
*உலகத்தில் வாழ்ந்தவர் இயேசுபிரான்*
*மாணிக்க உலகில் மனிதனாய் தோன்றி*
*மக்களைக் காப்பவர் இயேசு பிரான்*

**5.**

***பல்லவி***

**இயேசுவின் நாமமே *திருநாமம்,* – முழு**
*இருதயத்தால் தொழுவோம் நாமும்*

**சரணங்கள்**

1. *காசினியில் அதனுக் கிணையில்லையே; – விசு*
*வாசித்த வர்களுக்குக் குறையில்லையே – இயேசு*

2. *இத்தரையில் மெத்தவதி சயநாமம்; – அதை*
*நித்தமுந் தொழுபவர்க்கு ஜெய நாமம் – இயேசு*

3. *உத்தம மகிமைப் பிரசித்த நாமம்; – இது*
*சத்திய விதேய மனமொத்த நாமம் – இயேசு*

4. *விண்ணவரும் பண்ணுடன் கொண்டாடும் நாமம்; – நமை*
*கண்டதிர்ந்து பயந்தோடு தேவநாமம் – இயேசு*

5. *பட்சமுள்ள ரட்சைசெயு முபகாரி – பெரும்*
*பாவப்பிணிகள் நீக்கும் பரிகாரி – இயேசு*

அட்டவணை

## 6.

***உலகம் தராத அன்பை***
*தருவாய் இயேசு பாலா*
*பலம் இல்லை என்ற நெஞ்சில்*
*அருள் கூரும் தேவ பாலா*

*1.* *கரைகாணா துன்ப வெள்ளம்*
*பிரண்டோடும் வேளை வந்தீர்*
*இருக் கைகள் மீட்டி என்னை*
*உம் அருகில் அணைத்து கொண்டீர்*
*உம் அருகில் அணைத்து கொண்டீர்*

*2.* *வானோர்கள் சேனை பாட*
*மேய்ப்பர்கள் தேடி சென்றார்*
*மாமன்னர் பொன்னும் தந்தார்*
*நான் என் செய்வேன் தேவ பாலா*
*என் உள்ளம் உன் சொந்தம் பாலா*

## 7.

***உன்னதமானவரின் – உயர் மறைவிலிருக்கிறவன்***
*சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்*
*இது பரம சிலாக்கியமே*

***பல்லவி***

*அவர் செட்டையின் கீழ் அடைக்கலம் புகவே*
*தம் சிறகுகளால் மூடுவார்*

*2.* *தேவன் என் அடைக்கலமே*
*என் கோட்டையும் அரணுமவர்*
*அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்*
*என் நம்பிக்கையும் அவரே* *– அவர்*

*3.* *இரவின் பயங்கரத்துக்கும்*
*பகலில் பறக்கும் அம்புக்கும்*
*இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்*
*நான் பயப்படவே மாட்டேன்* *– அவர்*

*4.* *ஆயிரம் பதினாயிரம்*
*பேர்கள் உன் பக்கம் விழுந்தாலும்*
*அது ஒரு காலத்தும் உன்னை அணுகிடாதே*
*உன் தேவன் உன் தாபரமே* *– அவர்*

அட்டவணை

*5. தேவன் உன் அடைக்கலமே*
*ஒரு பொல்லாப்பும் உன்னைச் சேருமோ*
*ஒரு வாதையும் உன் கூடாரத்தையே*
*அணுகாமலே காத்திடுவார் – அவர்*

*6. உன் வழிகளிலெல்லாம்*
*உன்னை தூதர்கள் காத்திடுவார்*
*உன் பாதம் கல்லில் இடறாதபடி*
*தம் கரங்களில் ஏந்திடுவார் – அவர்*

*7. சிங்கத்தின் மேலும் நடந்து*
*வலுசர்ப்பத்தையும் மிதிப்பாய்*
*அவர் நாமத்தை நீ முற்றும் நம்பினதால்*
*உன்னை விடுவித்துக் காத்திடுவார் – அவர்*

*8. ஆபத்திலும் அவரை நான்*
*நோக்கிக் கூப்பிடும் வேளையிலும்*
*என்னை தப்புவித்தே முற்றும் இரட்சிப்பாரே*
*என் ஆத்தும நேசரவர் – அவர்*

8.

***காரிருள் வேளையில் கடும் குளிர் நேரத்தில்***
*ஏழைக் கோலமதாய்*
*பாரினில் வந்தது மன்னவனே*
*உன் மாதயவே தயவு*

*1. விண்ணுலகில் சிம்மாசனத்தில்*
*தூதர்கள் பாடிடவே*
*வீற்றிருக்காமல் மானிடனானது*
*மா தயவே தயவு*

*2. விண்ணில் தேவனுக்கே மகிமை*
*மண்ணில் சமாதானம்*
*மனுதரில் பிரியம் மலர்ந்தது உன்தன்*
*மா தயவே தயவு*

அட்டவணை

9.

***அதிகாலையில் பாலனை தேடி***
*செல்வோம் நாம் யாவரும் கூடி*
*அந்த மாட்டையும் குடில் நாடி*
*தேவ பாலனை பணிந்திட வாரீர்*
*வாரீர் வாரீர் வாரீர்*
*நாம் செல்வோம்*

*1. அன்னைமா மரியின் மடிமேலே*
*மன்னன் மகவாகவே தோன்ற*
*விண் தூதர்கள் பாடல்கள் பாட*
*விரைவாக நாம் செல்வோம் கேட்க – அதி*

*2. மந்தை ஆயர்கள் யாவரும் அங்கே*
*அந்த மன்னவன் முன்னிலை நின்றே*
*தம் கந்தை குளிர்ந்திட போற்றும்*
*நல்ல காட்சியை கண்டிட வாரீர் – அதி*

10.

**பல்லவி**

**தேவதே, ஓர் ஏக வஸ்து, தேவ நாமனாம் கிறிஸ்து**
தேவன் ஆதியே நமா!

**அனுபல்லவி**

ஜீவ ஆவி எகோவா, அல்பா ஒமேகா, நமஸ்து – ஒரு – தேவ

**சரணங்கள்**

1. மூவராய் அரூபியாய் முன் ஊழி ஊழி காலம் வாழ்
பாவதாழ் விலாவலா, பராபரா, தயாபரா! – ஒரு – தேவ

2. ஆதியாய்அ னாதியாய், அரூபியாய்ச்சொ ரூபியாய்,
நீதிஞாய நேர்மையாய், நீடூழிஆள் சுயாதிபா!–ஒரு – தேவ

3. மாசில்லா நேசவாச மட்டில்லா நன்மையே,
தேசுலா வனாதி இயேசு மாசிறந்த உண்மையே!–ஒரு–தேவ

அட்டவணை

4. ஈறில்லாமெய்ஞ் ஞானஜோதி, ஏகமாம்ஆ னந்தமே,
மாறிலாத னுக்ரகஞ்செய வந்தஆதி யந்தமே!–ஒரு –தேவ

# துதி ஸ்தோத்திரங்கள்

**11. இராகம்: தேசிகம், காப்பி** **தாளம்: ஆதி**

**கண்ணிகள்**

**வந்தாளுமே எந்நாளுமே,**
உன்நாமமே என்தாபமே
இந்நேரமே கண்பாருமே

2. என்ஏசையா உன்ஆசையைக்
கொண்டோசையாய் நான்பேசவே
நின்னாசிதா நன்நேசமாய்

3. தேவாவியே வரந்தாரும்,
இப்பாவியின் பவந்தீரும்
உம்ஜோதியின் ஒளிவீசும்

4. இப்பாரிலே நின்பேரையே
தப்பாமலே நான்பாடியே
எப்போதுமே கொண்டாடுவேன்

5. சத்துருக்கள் சதிசெய்ய
நித்தம்எனை நெருக்குகிறார்
அத்தனேதா அடைக்கலம்

6. நாதனுன்னை என்னேரமும்
ஓதும்தேவ தாசரையே
ஆதரித்தே ஆண்டருள்வாய்

அட்டவணை

**12. இராகம்: ஆனந்தபைரவி.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**வாவா செகதீசா – வரம்தரவே**
வாவா ஜெகதீசா – இதுசமயம்
வாவா ஜெகதீசா – உன் மகிமையை
யார்யார் யார் அறிவார்.

**சரணங்கள்**

1. காவில் கனிபுசித்த ஏவையின் மக்களுக்காய்
பூவில் கன்னிபா லுண்டவா, புகல்சொல்லாதே – வாவா

2. இரண்டுமூன் றுபேர்கூடித் தொண்டுபு ரியும்வேளை
அண்டையில் வருவேன் என்றீரே, அட்டிசொல்லாதே– வாவா

3. பன்னிரு சீஷர்களும் பரிசுத்த ஆவிபெற்று
பற்பல பாஷைபேசினார், பிரசங்கம் செய்ய – வாவா

4. கேளுங்கள் அப்பொழுது கிருபையா கக்கொடுப்பேன்
தட்டுங்கள் திறப்பேன் என்றீரே, தாமதமென்ன – வாவா

5. மோசே முதலாயுள்ள தீர்க்கர் முனிவருக்கும்
ஆசீர்வா தம்கொ டுத்தவா, அருள் புரிய – வாவா

**13. இராகம்: பியாக்** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**இயேசு நேசா வாரும்**
பாச மாகத் தேடி வந்த – இயேசு

**சரணங்கள்**

1. ஐந்தப்பம்சில மீன்கள்கொண்டு
ஐயாயிரம் பேர்களுக்கு
பந்தி போச னம்அ ளித்த – இயேசு

2. பலபலவித மாகநாங்கள்
செய்துவந்த பாவங்களைச்
சிலுவை தன்னில் சுமந்து தீர்த்த – இயேசு

அட்டவணை

3. பொன்னகரின் அதிபதியாம்
இரட்சகரின் பிள்ளைகளை
துன்ப மிலலா மலே காக்க - இயேசு

4. பதினொருவர் கூடிநிற்க
ஒலிவமலை யின்உச்சியில்
மேக ரதம் ஏறிச் சென்ற - இயேசு

5. அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா கர்த்தருக்கு
அல்லே லூயா ஆமென், ஆமென்! - இயேசு

**14. இராகம்: ஆங்கிலம்** **தாளம்: ஏகம்**

**பல்லவி**

**இயேசுமக ராசனை என்றும்துதித்துப் போற்றுவோம்**

**அனுபல்லவி**

நேசமுடன் எம்மைமீட்க நீசவடி வானோனை

**சரணங்கள்**

1. சருவலோக நாதனை சகலபரி பாலனை
அருபரூப தேவனை அடியார்க்கனு கூலனை - இயேசு

2. எத்தனையோ இடர்கள் துன்பம் சித்தமிரங்கிக் காத்தோனை
நித்தமும் தயாபரனை முற்றும்கரு ணாகரனை - இயேசு

3. உன்னதத்தில் ஏகமாய் ஒய்வில்லாத நாதமாய்
இன்னிசைசெய் ராகமாய் இசைந்துபாடும் கீதமாய் - இயேசு

**15.**

**பல்லவி**

**அல்லே லூயா தேவனை அவருடைய**
பரிசுத்த ஆலயத்தில் அவரைத் துதியுங்கள் - என்றும்
அவரைத் துதியுங்கள் - என்றும் - அவரைத் துதியுங்கள்

அட்டவணை

**அனுபல்லவி**

வல்லமை விளங்கும் வானத்தைப் பார்த்து
வல்லமை விளங்கும் கிரியைகளுக் காக
அல்லே லூயா அல்லே லூயா
அல்லே லூயா அல்லே லூயா
அவரைத் துதியுங்கள் – என்றும்
அவரைத் துதியுங்கள் – என்றும் அவரைத் துதியுங்கள் –அல்லேலூயா

**சரணம்**

மாட்சிமை பொருந்திய மகத்துவத் துக்காய்
எக்காளத் தொனியோடும் அவரைத் துதியுங்கள் – என்றும்
அவரைத் துதியுங்கள் – என்றும் – அவரைத் துதியுங்கள்

வீணைசுர மண்டலம்தம் புருநடனத் தோடும்
யாழோடும் குழலோடும் ஏகதாளத் தோடும்
அல்லே லூயா அல்லே லூயா
அல்லே லூயா அல்லே லூயா
அவரைத் துதியுங்கள் – என்றும்
அவரைத் துதியுங்கள் – என்றும்– அவரைத் துதியுங்கள் –அல்லேலூயா

**16.**

**கண்ணிகள்**

**வானபராபரனே, இப்போம் – வாரும்எம் மத்தியிலே**
வந்துநின் திருக்கரத்தால், எம்மை – ஆசீர்வ தியுமையா,
எல்லாமகிமை கனமும், துதியும் ஏற்றிட வாருமையா!

2. பக்தரின் மறைவிடமே, ஏழை – மக்களின் அதிபதியே!
பாதமே கூடும் பாலகர் எமக்குப் – பரிசுத்த மீயுமையா,
வாக்குமாறா தேவா,வாரும் வல்லமையால் நிறைக்க,

3. கிருபா சனப்பதியே, நின் – கிருபையால் நிலைத்திடவே,
கஷ்டமதிலும் நஷ்டமதிலும் நின் – கருணையால் நின்றிடவே
நின்சக்தியோடும் பக்தியில்யாம் பூரண ராகிடவே

4. தாய்என்னை மறந்தாலும், ஐயா – நீர் மறவாதிருக்க,
ஆவியினால்எம் உள்ளமீ தினில் – அக்கினி பற்றிடவே,
எகோவாவே, எங்களின் ராசா, எழுந்து வாருமையா,

5. நினைத்திடா தினமதினில், எம் கர்த்தரே, வருவீரே,
ஆவிஆத் மாசரீரம், முற்றும் – மகிமையில் சேர்த்திடவே,
மாசிலாப் பரிசுத்தராக மண்மீது துலங்கிடவே.

6. வாதை பிணிதீர, எம் – வாய்த்த மருந்தேநீர்
பாவசாப ரோகமுற்றும் மாற் றிடும்திரு ரத்தமே,
கல்வாரிஅன்பை பெற்றிடநாம் விரைந்து ஏகிடவே.

7. ஆகாய மேகமீதில், எக் – காளம்தொனித்திடவே,
அன்பின் தயாளன் ஆனந்தபூமான், வரவே – இரண்டாம்
முறையே,
ஆசையோடு காத்திருந்து செபித்திட வல்லமையாய்.

**17.**

**பல்லவி**

**தேவனைத் துதியுங்கள் – அல்லேலூயா**

தேவனைத் துதியுங்கள் – ஆ ஆ ஆ ஆ!

**சரணங்கள்**

1. அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில்
அவரைத் துதியுங்கள் – அல்லேலூயா – தேவனைத்

2. அவர் வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப்
பார்த்து துதியுங்கள் – அல்லேலூயா – தேவனைத்

3. அவர் வல்லமையுள்ள கிரியைகளுக் காக
அவரைத் துதியுங்கள் – அல்லேலூயா – தேவனைத்

4. மாட்சிமை பொருந்திய மகத்துவத் திற்காய்
அவரைத் துதியுங்கள் – அல்லேலூயா – தேவனைத்

5. எக்காளத் தொனியோடும் வீணை சுரமண்டலத்தோடும்
அவரைத் துதியுங்கள் – அல்லேலூயா – தேவனைத்

6. தம்புரோடும் நடனத்தோடும் துதியுங்கள்
யாழோடும் தீங்குழலோடும் – அல்லேலூயா – தேவனைத்

7. ஓசை யுள்ள கைத்தாளங் களோடும்
அவரைத் துதியுங்கள் – அல்லேலூயா – தேவனைத்

8. பேராசை யுள்ள கைத்தாளங்க ளோடும்
அவரைத் துதியுங்கள் – அல்லேலூயா – தேவனைத்

9. சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதியுங்கள்
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா – தேவனைத்

**18. இராகம்: சுருட்டி.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**அதி–மங்கல காரணனே,**
துதி–தங்கிய பூரணனே, – நரர்

**அனுபல்லவி**

வாழ்வின் துறந்தோர் ஏழையாய்ப் பிறந்த
வண்மையே தாரணனே! – அதி

**சரணங்கள்**

1. மதி–மங்கின எங்களுக்கும்,
திதி–சிங்கினர் தங்களுக்கும் – உனின்
மாட்சியும், திவ்விய காட்சியும் தோன்றிட
வையாய் துங்கவனே! – அதி

2. முடி–மன்னர்கள் மேடையையும்,
மிகு–உன்னத வீடதையும் – எண்ணா
மாட்டிடை யேபிறந் தாட்டிடை யர்தொழ,
வந்தனையோ தரையில்? – அதி

3. தீய–பேய்த்திர ளோடுதற்கும்,
உம்பர்–வாய்திரள் பாடுதற்கும், – உனைப்
பின்பற்று வோர்முற்றும் துன்பற்று வாழ்வதற்கும்
பெற்றநல் கோலம் இதோ? – அதி

அட்டவணை

## 19. இராகம்: செஞ்சுருட்டி. தாளம்: பிலந்தி

**பல்லவி**

**சரணம், சரணம், சரணம் எனக்குன்**
தயை புரியும், என் பரனே

**அனுபல்லவி**

மரணத் தின்பெலன் அழித்து யிர்த்தஎன்
மன்னா, ஓசன்னா!

**சரணங்கள்**

1. தரணி தனில்வந் தவத ரித்ததற்
பரனே, எனக்காக–வலு
மரணம் அடைந்தும், உயிர்த்தெ ழுந்ததென்
மகிமை, நித்திய பெருமை;– – சரணம்

2. சுரர்கள் போற்றும் பரனே, உனக்குத்
துரோகியான எனக்கு – நீயே
இரவு பகல்என் குறைவு நீக்க, உண்
டேது நலம்என் மீது;– – சரணம்

3. எவ்வித நன்மைக்கும் காரண னே,உனை
ஏழை அடியேனே, – பற்றி
இவ்வுலகத் தில்எவ் வேளையும் போற்றவே
இரங்காய், எனக் கிரங்காய் – சரணம்

4. தப்பின ஆடதற் கொத்த அடியேனைத்
தானே வந்து தேட, – உனக்
கெப்படிச் சித்தம் உண்டானதிவ் வற்பனுக்கு,
அற்புதமாம் முடி சூட.– – சரணம்

## 20. இராகம்: பைரவி. தாளம்: திரிசுரம்

**பல்லவி**

**தருணம் ஈதுன் காட்சி சால**
அருள் அனாதியே, – திவ்ய – சருவ நீதியே

அட்டவணை

**சரணங்கள்**

1. கருணை ஆச னப்ர தாப
சமுக சன்னிதா, மெய் – பரம உன்னதா, – தருணம்

2. பரசுரர் நரர் பணிந்து போற்றும்
பரம நாயகா, – நின் – பக்தர் தாயகா, – தருணம்

3. உன்ன தத்திருந் தென்னை ஆளும்
ஒரு பரம்பரா, – நற்–கருணை அம்பரா, – தருணம்

4. அரிய வல்வினை தீப்ப தற்குற
வான தட்சகா,–ஓர்–அனாதி ரட்சகா, – தருணம்

5. அலகை நரகை அகற்றி, முழுதும்
அடிமை கொண்டவா, – என்–தருமை கண்டவா, – தருணம்

6. தினம் தினம் நரர்க் கிரங்கும்,
தேவ பாலனே, – இம்–மானு வேலனே, – தருணம்

**21. இராகம்: இந்துஸ்தானி.**

**பல்லவி**

**தருணம் இதுவே, கிருபை கூரும்,**
வழி பாரும், பதம் தாரும், தாரும்.

1. கருணைதெய் வகுமாரா, கணமனு டவதாரா;
அருமை ரட்சக வேசுநாதா, – உல
கனைத்தும் வணங்கும் சத்ய வேதா, – உன்றன்
அடியர்க் கருளும் திருப் பாதா, – சத்பிர
சாதா, நீதா! – தருணம்

2. வானத்திலிருந்த வந்த ஞானத்தொளி சிறந்த
மகிமைப் பிரதாவின் திருப்பாலா, – ஆதி
மைந்தர்க் கிரங்கும் அனுகூலா, – கன
விந்தைக் கருணை மனுவேலா, – மெய்ந்
நூலா, சீலா!– தருணம்

3. அற்ப உலக வாழ்வில் அலைந்து, நிலைகுலைந்து,
அலகைப்படு குழியில் வீழ்ந்து, – தாழ்ந்து,
அஞ்சி அஞ்சிநலிந் தேனே;– அடிமைக்
கஞ்சல் என்றுசொல்லும் கோனே, – சீ
மானே, தானே!– தருணம்

4. இந்த உலகத்தெமைச் சந்தித் தனுக்கிரகித்த
சொந்தக் கிருபைகள் மாகாத்ரம், – அவை
சிந்தித்து மடியாவிச் சேத்ரம், – நிர்ப்
பந்த அடியர்கள் எம் மாத்ரம்! – பத
தோத்ரம்! தோத்ரம்!– தருணம்

**22. இராகம்: எதுகுலகாம்போதி. தாளம்: ஆதி**

**பல்லவி**

**இயேசுவையே துதிசெய் நீ, மனமே**
ஏசுவையே துதிசெய், – கிறிஸ் தேசுவையே,

**சரணங்கள்**

1. மாசணு காத பராபர வஸ்து,
நேச குமாரன் மெய்யான கிறிஸ்து, – இயேசுவையே

2. அந்தர வான்தரை யுந்தரு தந்தன்,
சுந்தர மிகுந்த சவுந்தரா நந்தன், – இயேசுவையே

3. எண்ணின காரியம் யாவு முகிக்க,
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க, – இயேசுவையே

**23. இராகம்: இந்துஸ்தான், டப்பா. தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**துதிதங்கிய பரமண்டல சுவிசேடக நாமம்**
சுபமங்கள மிகுசம்பிரம சுபசோபன சேமம்!

அட்டவணை

**சரணங்கள்**

1. அதிசுந்தர நிறைகொண்டுயர் அருள்மோக்கிச தீபன்,
கதிஉம்பர்கள் தொழும்இங்கித கருணைப்பிர தாபன், – துதி

2. மந்தைஆயர் பணிந்துபாதம் மகிழ்ந்துவாழ்த்திய அத்தனார்
நிந்தையாய்ஒரு கந்தைமூடவும் வந்தமாபரி சுத்தனார் – துதி

3. திருவான்உல கரசாய்வளர் தேவசொரூ பனார்
ஒரு மாதுடை வினை மாறிட நரர் ரூபம தானார் – துதி

4. அபிராம் முனி இடமேவிய பதிலாள் உபகாரன்
எபிரேயர்கள் குலம்தாவீதென் அரசற்கோர் குமாரன் – துதி

5. சாதாரண வேதாகம சாத்திர சுவிசேடன்
கோதே புரி ஆதா முடை கோத்திர திரு வேடன் – துதி

6. விண் ணாடரும் மண் ணாடரும் மேவுந் திருப் பாதன்
பண்ணோதுவர் கண்ணாம்வளர் பரமண்டல நாதன் – துதி

**24. இராகம்: கமாசு.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**இயேசு நாயகனைத் துதி செய், செய்**
செய், செய், செய், இயேசு நாயகனை

**சரணங்கள்**

1. பாசந் தனிலுழலும் பேய்மதியே, – ஐயன்
பாதத்தை அன்றி உனக்கார் கதியே?
பூசும் மாங்கிஷ மொடு புவி நிதியே – வெறும்
பொய், பொய், பொய், பொய், பொய் – இயேசு

2. ஆணுவ மெனும்பே யினைமுடுக்கும் – பர
மானந்த சுககிரக பதம் கொடுக்கும்,
வேண அபீட்டங்கள் வந்தடுக்கும் – இது
மெய், மெய், மெய், மெய், மெய் – இயேசு

3. தகைபெறும் விண்டலந் தனிலுதயம் – செயும்
சசி, கதிர் மீன்முதல் பொருளெதையும்
வகையுடன் அருள் கடவுளை இருதயம் – தனில்
வை, வை, வை, வை, வை – இயேசு

4. நாதபூத பௌதீக தாபகனை – வேத
நாவலர் மீதிலென்றும் ஞாபகனை,
ஓதரிதான சர்வ வியாபகனைப் – பணிந்
துய், உய், உய், உய், உய் – இயேசு

**25. இராகம்: காம்போதி. தாளம்: ஆதி**

**பல்லவி**

**பாடித் துதி மனமே – பரனைக்கொண்**
டாடித் துதி தினமே.

**அனுபல்லவி**

நீடித்த காலம தாகப்ப ரன் எமை
நேசித்த பட்சத்தை வாசித்து வாசித்துப் – பாடி

**சரணங்கள்**

1. தீர்க்கத ரிசிகளைக் கொண்டு முன்னுறச்
செப்பின தேவபரன் இந்தக் காலத்தில்
மார்க்கம தாகக் குமாரனைக் கொண்டு
வழுத்தின அன்பை விழித்து தியானித்துப் –பாடி

2. சொந்த சனமாக யூதரைத் தள்ளித்
தொலையில் கிடந்த புறசாதி யாம்எமை
மந்தையில் சேர்த்துப் பராபரன் தம்முடை
மைந்தர்க ளாக்கின சந்தோடத் துக்காக –பாடி

3. எத்தனை தீர்க்கர் அநேக அப்போஸ்தலர்
எத்தனை போதகர் கள்,இரத்தச் சாட்சிகள்,
எத்தனை வேண்டுமோ அத்தனையும் தந்திங்
கித்தனையாய்க் க்ருபை வைத்தநம் கர்த்தனை – பாடி

அட்டவணை

**26. இராகம்: பியாகு.** **தாளம்: ரூபம்.**

**பல்லவி**

**தந்தானைத் துதிப்போமே – திருச்**
சபையா ரே,கவி – பாடிப் பாடி.

**அனுபல்லவி**

விந்தை யாய்நமக் கனந்த னந்தமான,
விள்ளற் கரியதோர் நன்மை மிகமிக – தந்தானைத்

**சரணங்கள்**

1. ஒய்யாரத்துச் சீயோனே, – நீயும்
மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து
ஐயனே சுக்குனின் கையைக் கூப்பித்துதி
செய்குவையே, மகிழ் கொள்ளு வையேநாமும் – தந்தானைத்

2. கண்ணாரக் களித்தாயே, – நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து;
எண்ணுக் கடங்காத எத்தனையோ நன்மை
இன்னு முன்மேற் சோனா மாரிபோற் பெய்துமே, – தந்தானைத்

3. சுத்தாங்கத்து நற்சபையே, – உனை
முற்றாய்க் கொண்டிடவே அலைந்து திரிந்து
சத்துக் குலைந்துனைச் சத்தியாக்கத் தமின்
ரத்தத்தைச் சிந்தி எடுத்து உயிர் வரம். – தந்தானைத்

4. தூரம்திரிந்த சீயோனே, – உனைத்
தூக்கி யெடுத்துக் கரத்தினி லேந்தி
ஆரங்கள் பூட்டி யலங்கரித்து உனை
அத்தன் மணவாட்டி யாக்கினதும் என்னை! – தந்தானைத்

5. சிங்காரக் கன்னிமாரே, – உம்அ
லங்காரக் கும்மி யடித்துப் படித்து
மங்காத உன்மண வாள னேசுதனை
வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப் பணிந்திடும். – தந்தானைத்

அட்டவணை

**27. இராகம்: நாதநாமக்கிரியை.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**கும்பிடுகி றேனான் கும்பிடுகி றேன் – எங்கள்**
குருவேசு நாதர்பாதங் கும்பிடுகிறேன்

**சரணங்கள்**

1. அம்புவி படைத்தவனைக் கும்பிடுகிறேன்; – எனை
ஆண்டவனை, மீண்டவனைக் கும்பிடுகிறேன்;
நம்புமடி யார்க்கருளைக் கும்பிடுகிறேன்; – பவ
நாசனை க்கிரு பாசனைக் கும்பிடுகிறேன்;
தம்பமெனக் கானவனைக் கும்பிடுகிறேன்; – நித்திய
சருவ தயாபரனைக் கும்பிடுகிறேன்;
உம்பர்தொழும் வஸ்துவையே கும்பிடுகிறேன்; – தொனித்
தோசன்னா வோசன்னாவென்று கும்பிடுகிறேன். – கும்பிடு

2. ஒருசரு வேசுரனைக் கும்பிடுகிறேன்; – ஒன்றும்
ஒப்பதில்லா மெய்ப்பொருளைக் கும்பிடுகிறேன்;
திருவுரு வானவனைக் கும்பிடுகிறேன்; – தவிது
சிம்மாச னாதிபனைக் கும்பிடுகிறேன்;
குருவென வந்தவனைக் கும்பிடுகிறேன்; – யூதர்
குருகுல தேவதையைக் கும்பிடுகிறேன்;
அருமைரட் சகனைக் கும்பிடுகிறேன்; – என
தாத்துமாவின் நேசர்தனைக் கும்பிடுகிறேன் – கும்பிடு

**28. இராகம்: இரமா மனோகரி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**வர வேணும், என தரசே,**
மனுவேல், இசரேல் சிரசே.

**அனுபல்லவி**

அருணோ தயம் ஒளிர் பிரகாசா,
அசரீரி ஒரே சரு வேசா – வர

அட்டவணை

**சரணங்கள்**

1. வேதா, கருணா கரா, மெய்யான பரா பரா
ஆதார நிராதரா அன்பான சகோதரா,
தாதாவும் தாய் சகலமும் நீயே!
நாதா, உன் தாபரம் நல்குவாயே. – வர

2. படியோர் பவ மோசனா, பரலோக சிம்மாசனா,
முடியா தருள் போசனா, முதன்மா மறைவாசனா,
இடையர் குடிலிடை மேவி எழுந்தாய்,
இமையவர் அடிதொழு மேன்மையின் எந்தாய், – வர

3. வானோர்தொழும் நாதனே, மறையாகம போதனே,
கானாவின் அதீதனே, கலிலேய வினோதனே,
ஞானாகரமே, நடுநிலை யோவா,
நண்பா, உன்னத நன்மையின் மகாதேவா. – வர

**29. இராகம்: யமுனாகல்யாணி.** **தாளம்: ரூபகம்.**

**பல்லவி**

**ஆசை யாகினேன், கோவே; – உமக்**
கனந்த ஸ்தோத்திரம், தேவே.

**அனுபல்லவி**

இயேசு கிறிஸ்து மாசத்து வத்து
ரட்சகா, ஒரே தட்சகா, – ஆசை

**சரணங்கள்**

1. வேதா, ஞானப் பர்த்தா, – என்
தாதா, நீயே கர்த்தா;
மா தாரகம் நீ என்றே, பர
மானந்தா, சச்சி தானந்தா. – ஆசை

2. கானான் நாட்டுக் கரசே, – உயர்
வான் நாட்டார் தொழும் சிரசே,
நானாட்ட முடன் தேடித், தேடி,
நாடிப், பதம் பாடி, – ஆசை

அட்டவணை

3. வீணாய்க் காலம் கழித்தேன்; – சற்றும்
தோன்றாமல் நின்று விழித்தேன்;
காணா தாட்டைத் தேடிச் சுமந்த
கருத்தே எனைத் திருத்தே. – ஆசை

4. வந்தனம், வந்தனம், யோவா! – நீ
சந்ததம் சந்ததம் கா வா;
விந்தை யாய்உனைப் பணிந்தேன், சத்ய
வேதா, யேசு நாதா – ஆசை

**30. இராகம்: சஹானா. தாளம்: மீசுரம்.**

**பல்லவி**

**ஆண்டவரின் நாமமதை ஈண்டு போற்றுவேன் – அவர்**
ஆளுகையின் நீதிஅன்பின் வாழி சாற்றுவேன்

**சரணங்கள்**

1. உத்தம வழியில் நிதம் புத்தி கொள்ளுவேன்; – மன
உண்மையுடன் வாழ்ந்துதீய கன்மம் தள்ளுவேன். – ஆண்ட

2. கெட்ட விசயங்கள் எனை ஒட்டுவதில்லை; – மதி
கேடரின் புரளிகளும் கிட்டுவ தில்லை. – ஆண்ட

3. வஞ்சகங்களை உகக்கும் நெஞ்சை நீக்குவேன்; – பொல்லா
மார்க்கங்களி லேநடக்கும் தீர்க்கம் போக்குவேன். – ஆண்ட

4. மற்றவனை ஏசி வாயால் குற்றங்கள் செய்யும் – துட்ட
மாந்தர் மேலே பற்றாமலென் பாந்தவம் நையும், – ஆண்ட

5. பொய்யர்களை என்னுடனே உய்ய ஒட்டேனே; – மகா
புரளிசெய்யும் எத்தர்களின் திரளில் கிட்டேனே. – ஆண்ட

அட்டவணை

## 31.

### பல்லவி

**கோடா கோடி ஸ்தோத்திரம் பாடி**
கிறிஸ்து வின்அன் பைருசிப் போமே

### அனுபல்லவி

சேற்றி லிருந்து தூக்கி எடுத்துத்
தேற்றி அணைத்துக் காத்துக்கொண்டாரே தேவசுதன்

### சரணங்கள்

1. பாவியை மீட்க பரன்சித்தங் கொண்டார்
பரலோகம் துறந்து பாரினில் பிறந்தார்
பரமனிவ்வேழையைத் தேடியே வந்தார்
பாதம் பணிந்தேன் பதில்ஏது முண்டோ – பூவுலகில்

2. தேவனின் சித்தம் செய்யும் படியாய்
தாசனின் கோலம் தாமெடுத் தணிந்து
தற்பரன் நொறுக்கச் சித்தங்கொண் டாலும்
தம்மைப் பலியாய் தத்தம் செய்தாரே – எந்தனுக்காய்

3. ஆடுக ளுக்காய் உயிர்தனைக் கொடுத்து
கேடு வராது காக்கும்நல் மீட்பர்
தேடியே என்மேல் வைத்தநே சத்தால்
தினந்தினம் நன்றி கூறித் துதிப்பேன் – இறையவனை

4. தாவீது கோத்திர சிங்கமாய் வந்ததும்
காந்தத் தாலெனைக் கவர்ந்துகொ ண்டாரே
மேவிய தேவ ஆட்டுக்குட் டியுடன்
தங்கியிருப்பேன் சீயோன் மலையில் – நித்தியமாய்

5. குயவன்றன் கையில் களிமண்ணைப் போல
குருவே நீர்என்னை உருவாக்கு மையா
மாசற்ற மணவாட்டி யாய்கியே என்னைக்
காத்துக் கொள்ளும்படி கருணைகூர் ஐயா – ஏழையென்னை

அட்டவணை

**32.**

**பல்லவி**

**இயேசு என்றதிரு நாமத்திற்கு**
எப்போதுமே மிகத் தோத்திரம்

**சரணங்கள்**

1. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வல்லமை யுள்ள நாமமது – துயர்
சொல்லித் துதித்திடும் நாமமது – இயேசு

2. வேதாளம் பாதாளம் யாவையும் செயித்த
வீர முள்ளதிரு நாமமது – நாமும்
வென்றிடுவோ மிந்த நாமத்தினால் – இயேசு

3. பாவத்தி லேமாளும் பாவியை மீட்கப்
பாரினில் வந்தமெய் நாமமது – பர
லோகத்தில் சேர்க்கும் நாமமது – இயேசு

4. உத்தம பக்தர்கள் போற்றித் துதித்திடும்
உன்னத தேவனின் நாமமது – உல
கெங்கும் சொலித்திடும் நாமமது – இயேசு

5. சஞ்சலம் வருத்தம் சோதனை நேரத்தில்
தாங்கி நடத்திடும் நாமமது – தடை
முற்று மகற்றிடும் நாமமது – இயேசு

**33.**

**தோத்திரம் இயேசுநாதா – உமக்கென்றும்**

தோத்திரம் இயேசுநாதா
தோத்திரம் செய்கிறோம் நின்னடி யார்திரு
நாமத்தின் ஆதரவில்

அட்டவணை

2. வானதூதர் சேனைகள் – மனோகர
கீதங்களால் எப்போதும்
ஓய்வின்றிப் பாடித் ஸ்துதிக்கப் வேபெறும்
மன்னவனே உமக்கு

3. இத்தனை மகத்துவமுள்ள – பதவிஇவ்
வேழைகள் எங்களுக்கு
எத்தனை மாதய வு,நின் கிருபை
எத்தனை ஆச்சரியம்!

4. நின்உதிர மதினால் – திறந்தநின்
ஜீவ புது வழியாம்
நின்அடி யாருக்குப் பிதாவின் சந்நிதி
சேரவுமே சந்ததம்.

5. இன்றைத் தினமதிலும் – ஒருமித்துக்
கூட உம் நாமத்தினால்
தந்தநும் கிருபைக் காய்உமக் கென்றும்
ஸ்தோத்திரம், ஸ்தோத்திரமே!

6. நீரல்லால் எங்களுக்குப் – பரலோகில்
யாருண்டு ஜீவ நாதா
நீரே யன்றி இகத்தில், வேறொரு
தேட்டமில்லை பரனே.

**34. இராகம்: இந்துஸ்தானி.**

**பல்லவி**

**ஆத்துமமே, என் முழு உள்ளமே; – உன்**
ஆண்டவரைத் தொழு தேத்து; – இந்
நாள்அள வன்புவைத் தாதரித்த
ஆண்டவரைத் தொழு தேத்து.

**சரணங்கள்**

1. போற்றிடும் வானோர், பூதலத் துள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மை யுள்ள - ஆத்துமமே

2. தலைமுறை தலைமுறை தாங்கும் விநோத
உலக முன் தோன்றி ஒழி யாத - ஆத்துமமே

3. தினம்தினம் உலகில்நீ செய்பல வான
வினைபொறுத் தருளும் மேலான - ஆத்துமமே

4. வாதைநோய், துன்பம் மாற்றி, அனந்த
ஓதரும் தயைசெய் துயிர் தந்த - ஆத்துமமே

5. உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்,
முற்றும் கிருபையினால் முடி சூட்டும் - ஆத்துமமே

6. துதிமிகுந் தேற தோத்தரி தினமே,
இதயமே, உள்ளமே, என் மனமே - ஆத்துமமே

**35. இராகம்: பைரவி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**தோத்திரம் செய்வேனே, - இரட்சகனைத்**
தோத்திரம் செய்வேனே.

**அனுபல்லவி**

பாத்திர மாகஇம் மாத்ரம் கருணைவைத்த
பார்த்திபனை, யூதக் கோத்திரனை, என்றும் - தோத்திரம்

**சரணங்கள்**

1. அன்னை மரி சுதனை, - புல் மீது
அமிழ்துக் கழுதவனை
முன்னணை மீதுற்ற சின்னக் குமாரனை,
முன்னுரை நூற்படி, இந்நிலத் துற்றோனை - தோத்திரம்

அட்டவணை

2. கந்தை பொதிந்தவனை, – வானோர்களும்
வந்தடி பணிபவனை
மந்தையர்க் கானந்த மாட்சிய ளித்தோனை,
மானபரன் என்னும் ஞான குணவானை – தோத்திரம்

3. செம்பொன் னுருவானைத் – தேசிகர்கள்
தேடும் குருவானை,
அம்பர மேவிய உம்பர்கு ழாங்களோ(டு)
அன்பு பெறநின்று, பைம்பொன் மலர் தூவி, – தோத்திரம்

**36. இராகம்: இந்துஸ்தான், பியாக். தாளம்: ஏகம்.**

**நாமாவளி**

**ஆனந்தப் பரனைத் துதி செய்தால், வரும்**
ஆனந்தம் பர மானந்தம்

2. தம்பா துங்கா தயாபரா
சம்பூ ரணா சம்பூரணா

3. ஓம் சதா தயை புரி பாலா
ஒருபர குருவே அனுகூலா.

4. தோத்திர கீர்த்தன சுவிசேடா
சாத்திரி போற்றிய சருவேசா.

5. செபசெப செபசெப மந்திரனே
சிங்கார மனுவேல் சுந்தரனே.

6. அருஉரு ஒருபர மகா தேவா
பாவிகள் கவனம் தாதாசீவா.

7. அடிமுடி விலனே அவதாரா
அற்புத நலனே அதிகாரா.

**37. இராகம்: பியாக். தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**இயேசு துரை சுவாமியைத் தினம்துதி மனமே**

அட்டவணை

### அனுபல்லவி

தினந்துதி மனமே, தினம்துதி மனமே – இயேசு

### சரணங்கள்

1. தன்னுருவில் நன்னயமாய் உன்னை வரைந்தாரே
மன்னுயிர் பிழைக்கத்தம தின்னுயிர் ஈந்தாரே – இயேசு

2. தியாகபலி யாகநரர்க் காக இறந்தாரே
மாகருணை யாகஜீவ வாசல் திறந்தாரே – இயேசு

3. வீம்புசெய்யும் பாம்பின்தலை தாம்சிதறி னாரே
நாம்பிழைக்க நாம்தழைக்க தாம்பலியா னாரே – இயேசு

**38. இராகம்: தோடி.** **தாளம்: ரூபகம்.**

### பல்லவி

**இயேசு ராசா, – எனை – ஆளும், நேசா**

### சரணங்கள்

1. மாசிலா மணி ஆன முச்சுடர்
மேசியா அரசே, – மனு
வேலே, மாமறை நூலே தேவசெங்
கோலே, இங்கெனின் மேலே அன்பு செய். – இயேசு

2. தாவீ தரசன் மைந்தா, – நின்
சரணம், சரணம் எந்தா! – சதா
னந்தா வா னந்தா, உ
வந்தாள்; மிக வந்தனம், வந்தனம்! – இயேசு

3. ஐயா, என்மனம் ஆற்றி, – உன
தடிமை என்றெனைத் தேற்றி, – குண
மாக்கி, வினை நீக்கி, கை
தூக்கி, மெய்ப் பாக்கி யம்கொடு. – இயேசு

அட்டவணை

4. சுத்த திரித்துவ வஸ்துவே, – சுவி,
சேட மகத்துவ கிறிஸ்துவே, – பரி
சுத்தனே, கரி சித்தெனை இ
ரட்சித் தடிமைகொள்; நித்தியம் தோத்திரம்! – இயேசு

5. மங்களம் ஈசாவே, – வளம் மிகும்
சங்கையின் ராசாவே, – நரர்
வாழ்வே, மன் னாவே, மெய்த்
தேவே உமக் கோசன் னாவே! – இயேசு

**39. இராகம்: பியாகு. தாளம்: சாப்பு.**

**பல்லவி**

**எந்நாளு மே துதிப்பாய் – என்னாத்து மாவேநீ!**
எந்நாளு மேதுதிப்பாய்!

**அனுபல்லவி**

இந்நாள் வரையிலே உன்னத னால்செய்த;
எண்ணில்லா நன்மைகள் யாவு மறவாது – எந்நாளுமே

**சரணங்கள்**

1. பாவங்கள் எத்தனையோ – நினையாதி ருத்தார்உன்
பாவங்கள் எத்தனையோ?
பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப்
பாரினில் வைத்த மகாதய வைஎண்ணி – எந்நாளுமே

2. எத்தனையோ கிருபை – உன்னுயிர்க் குச்செய்தாரே,
எத்தனையோ கிருபை?
நித்தம் உனைமுடி சூட்டின துமன்றி,
நித்திய மாகவும் சீவனை மீட்டதால் – எந்நாளுமே

3. நன்மையா லுன்வாயை – நிறைத்தா ரே,பூர்த்தியாய்
நன்மையா லுன்வாயை;
உன்வய துகழு கைப்போல் பலங்கொண்டு,
ஓங்குஇ ளமைபோ லாகவே செய்ததால், – எந்நாளுமே

4. பூமிக்கும் வானத்துக்கும் – உள்ளதூ ரம்போலவே,
பூமிக்கும் வானத்துக்கும்,
சாமி பயமுள்ள வர்மேல் அவர்அருள்
சாலவும் தங்குமே, சத்திய மேயிது, – எந்நாளுமே

5. மன்னிப்பு மாட்சிமையாம் – மாதேவ னருளும்
மன்னிப்பு மாட்சிமையாம்,
எண்ணுவா யோகிழக் குமேற்கும் தூரமே?
எண்ணில் உன்பாவம்அ கன்றதத் தூரமே, – எந்நாளுமே

6. தந்தைதன் பிள்ளைகட்கு – தயவோடி ரங்கானோ
தந்தைதன் பிள்ளைகட்கு?
எந்தவே ளையும்அ வரோடு தங்கினால்,
சொந்தம்பா ராட்டியே தூக்கிச்சு மப்பாரே; – எந்நாளுமே

**40. இராகம்: சங்கராபரணம். தாளம்: ஆதி.**

**திபதை – கண்ணிகள்**

**சீர்மிகு வான்புவி தேவா, தோத்ரம்,**
சிருஷ்டிப்பு யாவையும் படைத்தாய், தோத்ரம்,
ஏர்குணனே தோத்ரம்! – அடியர்க்
இரங்கிடுவாய், தோத்ரம் – மா நேசா.

2. நேர்மிகு அருள் திரு அன்பா, தோத்ரம்!
நித்தமு முமக்கடி யார்களின் தோத்ரம்!
ஆர் மணனே, தோத்ரம்! உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா!

3. சீவன், சுகம், பெலன், யாவுக்கும் தோத்ரம்!
தினம், தினம் அருள் நன்மைக் காகவும் தோத்ரம்!
ஆவலுடன் தோத்ரம்! உனது
அன்பினுக்கே தோத்ரம் – மா நேசா!

4. ஆத்தும நன்மைகட் காகவும் தோத்ரம்!
அதிசய நடத்துதற் காகவும் தோத்ரம்!
சாற்றுகிறோம் தோத்ரம்! – உனது
தகுமன்புக்கே தோத்ரம், – மா நேசா!

அட்டவணை

5. மாறாப் பூரண நேசா, தோத்ரம்!
மகிழொடு செபமொழி மாலையின் தோத்ரம்!
தாராய் துணை; தோத்ரம்! – இந்தத்
தருணமே கொடு தோத்ரம், – மா நேசா!

**41. இராகம்: பியாகு.** **தாளம்: சாப்பு.**

**பல்லவி**

**எப்போதும் நாதனைத் தோத்திரி – நாள்**
தப்பாமல் ஆண்டவன் பொற்பாதத் தைபணிந்து,

1. இப்பூத லத்தில் நீர்மனு ஜென்ம மாகினை
ஏதுக்கென் றுள்ளத்தில் எண்ணிக்கை யாங்நினை
அப்பாஎன் அப்பாவென் றழைக்கப்பி றந்தனை – எப்போதும்

2. சண்டாள னாகினை உன்தோசம் நீங்கவே
சாயுட்சிய வாழ்வுடன் சந்தோசம் ஓங்கவே
மண்டல விண்டலன் உன்னைக்கை தாங்கவே – எப்போதும்

3. கிறிஸ்தேசு நாயகன் கிருபைஉன் பூரணம்
கெம்பீர மாகநீ சொல்வா யுச்சாடணம்
பரிச்சேதம் சாலம்வேண்டாம் தாழ்மைமுதற் காரணம் – எப்பொ

4. வீட்டிலும் காட்டிலும் வெளியிலும் வழியிலும்
பாட்டிலும் படிப்பிலும் தேட்டிலும் செழிப்பிலும்
நாட்டிலும் நகரிலும் ஞான முயற்சியிலும் – எப்போதும்

5. தம்புர்கின்ன ரங்கள்சாலர் வீணைமிர்தங்கம்
தப்லா வுடனுமே சங்கீத நாதமாய்
அம்பலச் சித்தனை அன்போடு பாடியாடி – எப்போதும்

**42. இராகம்: ஆனந்த பைரவி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**சுந்தரப் பரம தேவ மைந்தன் இயேசுக் கிறிஸ்துவுக்கு**
தோத்திரம், புகழ்ச்சி நித்திய கீர்த்தனம் என்றும்!

## அனுபல்லவி

அந்தரம் புவியும் தந்து, சொந்த ஜீவனையும் ஈந்து
ஆற்றினார்–நமை ஒன்றாய்க் கூட்டினார்–அருள் முடி
சூட்டினார், கிருபையால் தேற்றினா ரே,துதி – சுந்தரப்

## சரணங்கள்

1. பாதகப் பசாசால் வந்த தீதெனும் பவத்தால் நொந்த
பாவிகளான நமை உசாவி மீட்டாரே;
வேத பிதாவுக் குகந்த சாதியாகக் கூட்டவந்த
மேசியாவைப் பற்றும் விசு வாச வீட்டாரே,
கோதணுகா நீதிபரன் பாதமதின் ஆதரவில்
கூடுங்கள்; பவத்துயர்
போடுங்கள்; செயத்தைக் கொண்
டாடுங்கள் துதிசொல்லிப் பாடுங்கள், பாடுங்கள் என்றும் –சுந்த

2. விண்ணிலுள்ள சோதிகளும் எண்ணடங்காச் சேனைகளும்
விந்தையாய்க் கிறிஸ்துவைப் பணிந்து போற்றவே
மண்ணிலுள்ள சாதிகளும் நண்ணும்பல பொருள்களும்
வல்லபரன் எனத்துதி சொல்லி ஏத்தவே
அண்ணலாம் பிதாவுக் கொரே புண்ணியக் குமாரனைக்கொண்
டாடிட, – அவர் பதம்
தேடிட, – வெகு திரள்
கூடிட, துதி புகழ் பாடிட, பாடிட, என்றும் – சுந்த

3. சத்தியத் தரசர்களும் உத்தியோகத் துரைகளும்
சங்கத்தோர் களுங்கிருபை தங்கி வாழவே,
எத்திசை மனிதர்களும் பக்தர் விசுவாசிகளும்
ஏக மிகுஞ் சமாதான மாக வாழவே,
உத்தம போதகர்களும் சத்யதிருச் சபைகளும்,
உயர்ந்து – வாழ, தீயோன்
பயந்து – தாழ, மிக
நயந்து, கிறிஸ்துவுக்குச் செயந்தான், நயந்தான் என்றும் – சுந்த

அட்டவணை

**43. இராகம்: இந்துஸ்தானி, பியாக்.** **தாளம்: ஏகம்.**

**கண்ணிகள்**

**எல்லா சாதிக் காரரே ஏகபரனைத் துதியுங்கள்**
எல்லா சனக் கூட்டமே, என்றும் அவரைப் துதியுங்கள்

2. கர்த்தர்சேனை கர்த்தரே, சுத்தர்பரி சுத்தரே
முற்றும்இந்தப் பூமியை, மூடுமவரின் கிருபையால்

3. இந்த ஓய்வு நாளிலே, ஏற்றியதுதி தோத்திரம்
தூபமான காணிக்கை, காணுதெகிரு பாசனம்.

4. ஆசனத்திருக்கும் சுவாமிக்கும், ஆட்டுக்குட்டிக்கும்
என்றைக்கும்
நேச தோத்திர வல்லமை, நித்தநித்தமுண் டாகவே

5. வானம்பூமி யாவையும், வகுத்தபரா பரனையே
வரிசையுடன் கூடியே, வாழ்த்துங்கள் சபை யார்களே

**44. இராகம்: நாதநாமக்கிரியை.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**தோத்திரிக்கிறேன் நான் தோத்திரிக்கிறேன்; – தேவ**
சுந்தரக் கிறிஸ்துவேந்தைத் தோத்திரிக்கிறேன்.

**சரணங்கள்**

1. சேத்திரத்தொ ரேகோவாவைத் தோத்திரிக்கிறேன்; – கன
திவ்வியதிரித் துவத்தைத் தோத்திரிக்கிறேன்;
பாத்திரமாக்கிக் கொண்டோனைத் தோத்திரிக்கிறேன்; – உயர்
பரமண்ட லாதிபனைத் தோத்திரிக்கிறேன்;

நேத்திரக்கிரு பாநதியைத் தோத்திரிக்கிறேன்; – சதா
நித்தியமாகத் துவத்தைத் தோத்திரிக்கிறேன்;
கோத்திரத் திசராவேலைத் தோத்திரிக்கிறேன்; – யூதர்
கொற்றவனைப் பெற்றவனைத் தோத்திரிக்கிறேன். – தோத்

2. அண்டர்களி னாயகனைத் தோத்திரிக்கிறேன்; – அதற்
கற்புறத்தை யப்புறத்தைத் தோத்திரிக்கிறேன்;
மண்டலமெ லாமறியத் தோத்திரிக்கிறேன்; – முழு
வானவரும் பார்த்துநிற்கத் தோத்திரிக்கிறேன்;
தொண்டனிட்டுத் தொண்டனிட்டுத் தோத்திரிக்கிறேன்; – மனச்
சிந்தையினால், விந்தையினால் தோத்திரிக்கிறேன்;
தொண்டனடி யெனென்று தோத்திரிக்கிறேன்; – என்றன்
துன்பமெல்லாந் தீருமென்று தோத்திரிக்கிறேன். – தோத்

**45. இராகம்: தன்யாதி** **தாளம்: ஆதி.**

**"எத்தனை திரள் என் பாவம்" என்ற மெட்டு**

**கருணா கரனே பதமே சரணம்**
கடைவிழி பார் ஐயனே!

**அனுபல்லவி**

திருவா னோளிபிர காச சொரூபி
சித்தமி ரங்கித்தயை வைத்தருள் வாயே

1. ஆதத்தி னாலடர்ந்த மாசறுத் திடவந்த
அருணோ தயம்நீயே
பாதக ரானஅடி யார்பிழை போக்கி
பரம சுதந்திர பாக்கிய மருள்வாய் – கருணா

2. உலகம் உடல்அலகை இடர்கள் செய்யுதே
உனதகம் எனைவையே
நிலைவர மாயுன தாவியை ஈந்து
நிதமும் உனைமறவா நெஞ்சையு மருள்வாய் – கருணா

3. பாவவிடம் அகற்றும் பண்டிதன் நீயே
பலபல தேவர் பொய்யே
சாவழித்தே நித்ய சீவன் அளித்திடும்
சகராசா இயேசு மகாராசா சுவாமி – கருணா

4. சற்குண தாசனும் சபைகளுங் கூடி
சங்கீத ராகம் பாடி
பொற்புறு முன்திருச் சேவடி போற்றி
புகழ்ந்தோம் மகிழ்ந்தோம் பொன்னகர் கிறையே – கருணா

அட்டவணை

**46.**

**கண்ணிகள்**

**தோத்திரம் தோத்திரமே – இயேசு**
சுவாமிக்குத் தோத்திரமே
தோசி எனை இரட்சித்த – பரி
சுத்தர்க்குத் தோத்திரமே.

**சரணங்கள்**

2. கோடாகோடி தூதர் – சபை
கூடி நடனமாடி
பாடியு மைத்து திக்க – பாவி
யானும் உமைத் துதிப்பேன்

3. கன்னியர் கீதம் ஏற்றி – இயேசு
மன்ன னையே போற்றி
உன்னியு மைத்துதிக்க – ஊமை
யானும் உமைத் துதிப்பேன்.

4. பரிசுத்த வான்கள் சங்கம் – எங்கள்
பார்த்திபன் இயேசுவையே
தரிசித்துமே துதிக்க – தாசன்
யானும் உமைத் துதிப்பேன்.

5. மூப்பர்கள் சுற்றி நின்று – எங்கள்
முன்னவன் இயேசுவையே
ஆர்ப்பரித் துத்துதிக்க – அடி
யானும் உமைத் துதிப்பேன்.

**47.**

**பல்லவி**

**வானம் திறந்தருளும் பல தானங்களை இந்நேரமிதில்**
வானவனே ஞானமுள்ள வல்லகுரு நாதனே!
தேனிலும் மதுரம் திவ்யஆசீர் வாதங்கள்

அட்டவணை

**சரணங்கள்**

1. **சத்தியமும் ஜீவனுமாய் நித்தமுமே வாழ்ந்திடும்**
கர்த்தனே எங்கட்கும் கரம்தந்து தாங்கிடும்
சுத்தமாய் நடப்பதற்கும் சுத்தஆவி தந்திடும்
சித்தமோடு இந்தவேளை வந்தி றங்கிடும் – வானம்

2. என்னைமுற்றும் மாற்றிட உன்னதபெல னூற்றிடும்,
இன்னும்இன்னும் ஈசனே! உம் நல்வரங்க ளீந்திடும்,
கண்ணிகளில் சிக்கிடாமற் கண்மணிபோல் காத்திடும்,
கன்மலையும் மீட்பருமென் காவலும் நீரே. – வானம்

3. சுயவாடம் பரம்முற்றும் சுட்டெரிக்க வேணுமே,
தயவுதாழ் மையினாவி தந்தருள வேணுமே,
மாயமான யாவினின்றும் மனமதை பெணுமே,
ஆயனே அடியார் களின்அடைக் கலமே – வானம்

4. அதிக மதிகமன்பில் அமிழ்ந்தே அனுதினம்
புதிய நாவுகளாலும் புகழ்ந்துமைப் போற்றிட
அதிசயமே! அகத்தின் குறைகள கற்றியே
இது சமயமுன் னதபெல னீந்திடும் – வானம்

**48.**

**பல்லவி**

**தொழுகிறோம் எங்கள் பிதாவே**
பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே

**அனுபல்லவி**

பரிசுத்த அலங்காரத் துடனே
தரிசிப்பதினால் சரணம் சரணம்

**சரணங்கள்**

1. வெண்மையும் சிவப்பு மானவர்
உண்மையே உருவாய்க் கொண்டவர்
என்னையே மீட்டுக் கொண்டவர்
அன்னையே இதோ சரணம் சரணம் – தொழுகிறோம்

அட்டவணை

2. தங்க தலையு டையவர்
தலைமயிர் சுருள் சுருளானவர்
பதினாயிரம் பேரில் சிறந்தவர்
பதினா யிரமாம் சரணம் சரணம் – தொழுகிறோம்

3. கண்கள் புறாக்கண்கள் போல
கன்னங்கள் பாத்திகள் போல
சின்னங்கள் சிறந்த தாலே
எண்ணில்லாத சரணம் சரணம் – தொழுகிறோம்

4. கரங்கள் பொன்வளை யல்கள்போல
நிறங்களும் தந்தத் தைப்போல
கால்களும் கல்தூண்கள் போல
காண்பதாலே சரணம் சரணம் – தொழுகிறோம்

5. சமஸ்த சபையின் சிரசே
நமஸ்காரம் எங்கள் அரசே
பிரதானம் எம்மூலைக் கல்லே
ஏராளமாம் சரணம் சரணம் – தொழுகிறோம்

6. அடியார்களின் அஸ்திபாரம்
அறிவுக்கெட் டாத விஸ்தாரம்
கூடிவந்த எம்அலங் காரம்
கோடா கோடியாம் சரணம் சரணம் – தொழுகிறோம்

7. பார்த்திப னேகன தோத்திரம்
கீர்த்தனம் மங்களம் தோத்திரம்
வாழ்க வாழ்க வாழ்க என்றும்
அல்லே லூயா ஆமென், ஆமென் – தொழுகிறோம்

**49.**

**பல்லவி**

**அல்லே லூயா அல்லே லூயா**
அற்புதனே ஒமே காவே!

[அட்டவணை]

**சரணங்கள்**

1. தோத்திரம் பாடிப் போற்றுவேன்
தோத்திரம் இயேசு ராசனுக்கே
ஆதியு மந்தமு மில்லோனே
அரூப சொரூபா தோத்திரம் – அல்லேலூயா

2. பொன்னகர் மன்னர் புல்லணை மீதிலே
பிள்ளையாய் வந்தார் தோத்திரம்
பட்சமுற்றே எந்தன் பாவந் தீர்த்த
பெத்தலை வாசனே தோத்திரம் – அல்லேலூயா

3. மாயமாய் உலகை மறந்தநான்
மன்னவா உன்அன்பில் மகிழ்ந்திட
மயங்காமல் நீர்தா ரணியில்
மனுவான அன்புக்காய் தோத்திரம் – அல்லேலூயா

4. மங்களமே சீயோன் மணாளா
மாறாத பூரண சீராளா
மங்காத நித்திய வாசனே
மாசற்ற அன்புக்காய் தோத்திரம் – அல்லேலூயா

5. அமரர் போற்றும் அழகுள்ளோய்
அரூபியே சொரூபியே தோத்திரம்
எமது பாவம் நீக்கினாய்
என்றும் உன்கரம் ஆக்கினாய் – அல்லேலூயா

**50.**

**கண்ணிகள்**

**தோத்திரம் தோத்திரம் அல்லேலூயா**
துதிசெய் வார்கள் யாத்திரையார்
கீர்த்தனம் கீர்த்தனம் அல்லேலூயா
கீதமு ழங்குவார் யாத்திரையார்.

2. பரம கானான் ஓரத்திலே
பாய்விரித் தோடும் கப்பலைப்பார்
சிறப்புடன் மகா ராசர்களும்
சேமமாய் ஏறிப் போவதைப்பார்.

3. ஆயிரங் கோடிசனங்களெல்லாம்
ஆர்ப்பரிப் பார்கள் மோட்சத்திலே
அனந்தக் கோடா கோடிக ளெல்லாம்
ஆயத்த மாகிறார் பூதலத்தில்.

4. சுத்த சுவி சேட ஒளி
சுற்றிச் சுற்றி ஓடுது பார்
பக்தியுள்ள பரிசுத்தர்கள்
பரமகானான் சேர்வதைப் பார்.

**51. "இயேசுமக ராசனை என்றும் துதித்து" என்ற மெட்டு.**

**பல்லவி**

**நேச இயேசு பாலனை நித்தம் துதித்துப் பாடுவோம்**

**அனுபல்லவி**

ஆசையோடு பாசமாய் அவர்பாதத்தை தேடுவோம்

**சரணங்கள்**

1. காவில்ஏவை செய்தமா பாதகம் தொலைக்கவே
சீவதேவ தேவனார் சிறுபாலன் ஆயினர் – நேச

2. வான சேனை கூடுதே மங்க ளங்கள் பாடுதே
ஈனப் பேயும் ஓடுதே எங்கும் புகழ் நீடுதே – நேச

3. பாவிகளை மீட்கவே பரலோகம் சேர்க்கவே
ஆவியான ரூபனார் அற்பநரர் ஆயினார் – நேச

4. சங்கீதங்கள் பாடுவோம் சுவாமி இயேசு நாதர்க்கே
இங்கிதங்கொண் டாடுவோம் இசுரவேலின் மீட்பர்க்கே – நேச

5. சத்தியம் தவறாததம் புத்திரனைத் தந்தநம்
நித்திய பிதாவுக்கே நேர்ந்து துதி செலுத்துவோம் – நேச

6. சுவாமி இயேசு நாதனை சந்ததமும் போற்றுவோம்
நேமிவந்த ராசன்மேல் நேசக்கவி சாற்றுவோம் – நேச

அட்டவணை

**52. இராகம்: வனஸ்பதி** **தாளம்: ஆதி**

**பரலோக தேவா நரலோக மக்களும்**
சருவ வல்லமை காண வரமருள் வாய்ஐயா

2. கிறிஸ்துமெய்த் தேவா, மரித்தெழுந் தோனே
விரித்தே னுமது வேதம் வரமருள் வாய்ஐயா

3. தேற்றர வாளா மாற்றமில் லோனே
சாற்றினே னுந்தன் சாட்சி வரமருள் வாய்ஐயா.

4. தோத்திரம் தேவா துதிஉமக் கையா
பாத்திர மாகவந்து காத்துக்கொள் வாய்ஐயா

**53.**

**பல்லவி**

**தோத்திரம் பாடி துதிபணிந் தேற்றி**
பாத்திரா உம்மைப் பணிவுடன் அடிபணிந்தேன்.

**அனுபல்லவி**

கர்த்தரே கிருபை யுடன்என்
கலக்கங்கள் மிகநீக்கி – நின்
கருணை செய்வீர் நோக்கி – தோத்திரம்

**சரணங்கள்**

1. மனுடவ தாரா பவவினை தீராய்
பூவில்இவ் வாண்டதைப் புனிதநெ றியில்காவா
போதக நாயகமே – நீர்
சீவனின் ஊற்றமே – நான்
பருகிட சுரந்திடுமே – தோத்திரம்

2. கன்னியின் மைந்தா கருணையின் நேசா
கஸ்தியால் வந்த நித்திய மகிமையிதே
கானக வழியதிலே – நீர்
கரங்கொடுத் தணைத்ததையே – நான்
கனவிலும் மறக்கலாமோ – தோத்திரம்

அட்டவணை

3. அழகில் சிறந்தோர் அதிசய ரூபர்
ஆதர வற்றோரின் அருமையா னோர்அவரை
இந்நிலம் உம்மையல்லால் – என்
இடந்தீர்க்க வேறொருவர் – இவ்
விடமுண்டோ யானறியேன் – தோத்திரம்

# III. நாள் வழிபாடு

**காலை**

**54.**

**கண்ணிகள்**

**அருணோதயம் எழுந்திடுவோம்**
பரனேசுவைத் துதிப்போம்,
அருணோதயம் பரமானந்தம்
பரனோடுற வாடவும்.

2. இதைப்போன்றொரு அருணோதயம்
எம்மைச்சந்திக்கும் மனமே
ஆ!என்னானந்தம்! ஜோதி சூரியனாம்
எந்தன்நேசரெ ழும்பும்நாள்.

3. நன்றியாலுள்ளம் பூரித்திடுதே!
அன்னையாமேசு காருண்யம்
ஒவ்வொன்றா யிதைத் தியானம் செய்யவும்
எவ்வாறு மேற்ற சந்தர்ப்பம்

4. போன ராவினில் ஜீவித்தோர் பலர்
லோகம் விட்டுமே போய் விட்டார்,
ஆயினும் நமக்கிந்தத் நாளையும்
தந்த நேசரை துதிப்போம்.

அட்டவணை

5. நான்நிர் வாணியாய் வந்தவண் ணம் நிர்
வாணியா யங்கு போகின்றேன்;
கூடச் செல்லவும் பூவிலொன் றுண்டோ?
நாடி போமந்த நாட்டிற்கே.

6. ஆயென் நேசரின் அன்பை யெண்ணவும்
ஆனந்தம் பரமானந்தம்!
ஆயென்னே சரோர் நவ வான்புவி
தானஞ் செய்ததே ஆனந்தம்

7. பார்!தன் னேசரின் மார்பில் சாய்ந்தேகும்
யாவரிள் இவ்வனாந்திரம்?
எந்தன் நேசரின் கூடச் செல்கிறேன்,
சொந்த இராச்சியத்தில் சேரவும்.

8. கொண்டல் மோதும் வறண்ட நாடிதில்
நண்பரே கைவி டாதேயும்!
ஆசையோடு நான் வாறேனென் துக்கம்
பாசமா யங்குத் தீர்த்திடும்!

**55.**

**பல்லவி**

**அருணோதயம் செபிக்கிறேன்**

அருள்பரனெ கேளுமேன்
ஆவிவரம் தாருமேன் – என் இயேசுவே

**சரணங்கள்**

1. கருணையுடன் கடந்தராவில் காப்பாற்றினீர் தெய்வமே
கரங்கு வித்துத் தோத்தி ரிக்கிறேன் – என் இயேசுவே
சிரங்கு னிந்து தோத்தி ரிக்கிறேன் – அருணோ

2. இந்தநாளைக் காணச் செய்தீர் இரக்கமுள்ள தெய்வமே
இதற்கா யும்மைத் தோத்தி ரிக்கிறேன் – என் இயேசுவே
இதயத் தாலும் தோத்தி ரிக்கிறேன் – அருணோ

3. கதிரவன்எ ழும்பிவரும் முறையின் படி என்மேலே
கர்த்த ரேநீர் பிரகா சித்திடும் – என் இயேசுவே
நித்தம் நித்தம் பிரகா சித்திடும் – அருணோ

4. உலோகமதில் நான்புகுந்து வேலைசெய்யப் போகிறேன்
தூத னாலே காவல் செய்யுமேன் – என் இயேசுவே
சமுகம் என்னைச் சூழச் செய்யுமேன் – அருணோ

5. பகலில்வரும் மோச மொன்றும் தமியன் மேல்வி ழாமலே
பாது காக்க வேணும் தெய்வமே – என் இயேசுவே
சூது வாது போக்கும் அண்ணலே – அருணோ

6. மாமிசமும் கண்ணும்இந்த மாய்கையில்வி ழாமலே
ஆவிக் குள்அ டங்கச் செய்யுமே – என் இயேசுவே
பாவிக் கருள் பெய்யச் செய்யுமே – அருணோ

**56. இராகம்: சுருட்டி.** **தாளம்: அடதாள சாப்பு.**

**பல்லவி**

**இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய், இயேசுநாதையா;**
இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய்.

**அனுபல்லவி**

அன்றுன் உதிரம் நரர்க் கென்று சிந்தி மீட்டெனை
வென்றியுடன் ரட்சித்த நன்றி போலே எனக்கு – இன்றை

**சரணங்கள்**

1. போன ராவில் என்னைக்கண் பார்த்தாய், – பலவிதமாம்
பொல்லா மோசங்களில் தற்காத்தாய்;
ஈன சாத்தான் எனையே இடர்க்குள் அகப்படுத்தி
ஊனம் எனக்குச் செய்யா துருக்கமுடன் புரந்தாய்; – இன்றை

2. கையிட்டுக் கொள்ளு மென்றன் வேலை – யாவிலுமுன்றன்
கடைக்கண் ணோக்கி அவற்றின் மேலே,
ஐயா, நின் ஆசீர்வாதம் அருளி, என் மனோவாக்கு
மெய்யால் நின் மகிமையே விளங்கும்படி ஒழுக. – இன்றை

3. எத்தனையோ விபத்தோர் நாளே; – தஞ்சம் நீ என
எளியேன் அடைந்தேன் உன்றன் தாளே;
பத்தர் பாலனாய், எனைப் பண்பாய் ஒப்புவித்தேன், உன்
சித்தம் எனது பாக்கியம், தேவ திருக்கு மாரா, – இன்றை

4. பாவச் சோதனைகளை வென்று, – பேயுலகுடல்
பண்ணும் போர்களுக் கெதிர் நின்று,
சீவ பாதையில் இன்றும் திடனாய் முன்னிட்டுச் செல்ல
தேவ சர்வா யுதத்தைச் சிறக்க எனக் கணிந்து, – இன்றை

**57. இராகம்: காம்போதி.** **தாளம்: ஆதி.**

**"தேனினும் மதுரம் இயேசுவின் நாமம்" என்ற மெட்டு.**

**ஐயனே உமது திருவடி களுக்கே**
ஆயிரந் தரந் தோத்திரம் – இயேசு
மெய்யனே உமது தயைகளை அடியேன்
விவரிக்க எம் மாத்திரம்?

2. கண்விழி போலவே அடியேனைக் காத்த
கர்த்தனே நமஸ் காரம் – இந்த
மண்மிசை யும்மா லன்றியிப் பூச்சி
வாழுமோ இந்நேரம்.

3. சென்றநா ளிரவில் தேவரீ ரென்னைச்
சேர்த்தர வணைத்தீரே – இன்றும்
அந்தடை வாயிப் பகலிலும் கிருபை
யாகஆ தரிப்பீரே.

4. ஊழியந் தனைநான் உண்மையாச் செய்ய
உதவிநீர் செய்வீரே – இந்த
ஏழைநா னுமக்கே இசைய நல்லாவி
இன்பமாய்ப் பெய்வீரே.

5. அத்தனே உமது மகிமையை நோக்க
அயலான் நலம்பார்க்க – வெகு
சித்தமா யருளும் மெய்விசு வாசம்
தேவனே உமக்கேற்க.

6. இயேசுவின் முகமே நோக்கி நீர்ஐயா
ஏழையின் செபங்கேளும் – உந்தன்
தாசனை உமது இராட்சியந் தனில்நீர்
தற்காத் தேயருளும்.

**58. இராகம்: பூபாளம்.** **தாளம்: சாப்பு.**

**கண்ணிகள்**

**கதிரவன் எழுகின்ற காலையில் இறைவனைத்**
துதி செய்ய மனமே, – எழுந்திராய்.

2. வறண்டு தண்ணீரற்ற வனம்இந்தப் புவிதனில்
திரண்ட தயை தேவை,– நாடுவேன்.

3. கடவுளின் வல்லமை, கனமகிமை காணும்
இடமதில் செல்வதே – என் இஷ்டம்.

4. ஜீவனைப் பார்க்கிலும் தேவனின் காதலை
ஆவலாய் நாடி நான் – போற்றுவேன்.

5. ஆயுள் பரியந்தம் ஆண்டவர் நாமத்தை
நேயமாய் பாடிநான் – உயர்த்துவேன்.

6. மெத்தையில் இராக்காலம் நித்திரை கொள்கையில்
கர்த்தரின் செயல்களை – சிந்திப்பேன்.

7. அல்லும் பகலும்நான் அவர்செட்டை களின்கீழ்
தொல்லைக்கு நீங்கியே – ஒதுங்குவேன்.

8. ஆத்துமம் தேவனை அண்டிக் கொள்ளஅவர்
நேத்திரம் போல்என்னைக் – காக்கிறார்.

அட்டவணை

59.

**பல்லவி**

**காலமே தேவு பஜி – அருணோதய**
காலமே தேவு பஜி

1. காலமே நீ எழுந்து கடவுளைத் துதிநன்று
காலை தாமதம் நன்றன்று, கருத்துடனே – காலமே

2. சிச்சுக் கிச்சென்று சிட்டு கிளைகளில் கூவுது
கீக்கோ குருவி கத்துது, கருத்துடனே – காலமே

3. வானம்பாடி அருக்கன் வருகையைக் கூறுது
வாச மலர் மலருது, கருத்துடனே – காலமே

4. ஓசை முழங்குந் தம்புர் மீட்டிமத் தளம் கொட்டி
மேசைய னேசுவைக் கிட்டி, கருத்துடனே – காலமே

**60. இராகம்: மோகனம். தாளம்: ரூபகம்**

**பல்லவி**

**காலமே தேவனைத் தேடு; – சீவ**
காருண்யர் பாதம் பணிந்து மன்றாடு

**அனுபல்லவி**

சீலமுடன் பதம் பாடிக்கொண் டாடு;
சீரான நித்திய ஜீவனை நாடு – காலமே

**சரணங்கள்**

1. மன்னுயிர்க்காய் மரித்தாரே; – மனு
மைந்தனெனப் பெயர் வைத்திருந் தாரே;
உன் சிருட்டிகரை நீ உதயத்தி லெண்ணு;
உள்ளங் கனிந்து தனிசெபம் பண்ணு. – காலமே

2. பாவச் சோதனைகளை வெல்லு; – கெட்ட
பாருடல் பேயுடன் போருக்கு நில்லு
ஜீவ கிரீடஞ் சிரத்தி லணியச்
சிந்தனை செய்;மனு வேலனைப் பணிய – காலமே

3. சிறுவர் களென்னிடஞ் சேரத் –தடை
செய்யா திருங்க ளென்றார் மனதார;
பரலோக செல்வ மவர்க்குப் பலிக்கும்;
பாக்கிய மெல்லாம் பரந்து ஜொலிக்கும் – காலமே

4. வேலையுமக்குக் கைகூட – சத்ய
வேதன் கிருபை வரத்தை மன்றாட,
காலை தேடுவோ ரென்னைக் கண்டடைவாரே,
கண்விழித்துச் செபஞ் செய்யுமென் றாரே. – காலமே

## 61. ''ஓய்வு நாளிது மனமே தேவனின்'' என்ற மெட்டு

**பல்லவி**

**காலை நேரத்தில் கர்த்தன் இயேசுவை**
கனிவுடன் துதி பாடுவேன்

**அனுபல்லவி**

காலை நேரத்தைக் காணவும் செய்த
கருணை நாயனைப் போற்றுவேன்

**சரணங்கள்**

1. கடந்த ராவினில் கண் மணியைப்போல்
காத்தவர் எங்க ளேசுவே,
அடர்ந்த நோய்பிணி அசடில் லாமலே
அன்ப ரேசெனைக் காக்கிறார் – காலை

2. பந்தம் தீர்த்தெனைப் பாது காத்தவர்
பரம நாயக னேசுவே,
சொந்தமாய் என்னை யாளும் நாயகன்
சந்ததம் என்னைக் காக்கிறார் – காலை

3. ஆதித் தன்ஒளி வீசும் காலையில்
அன்பர் தன்ஒளி காண்கிறேன்,
ஆதித்தன் என்ற பேர்ப டைத்தஎன்
அன்ப ரெசெனைக் காக்கிறார் – காலை

அட்டவணை

4. மத்தி யானத்தின் பாழ்க்க டிப்பிலும்
கர்த்த னேசுஎன் காவலன்,
துத்தி யம்துதி பாடிப் போற்றவே
நித்தமும் கிருபை செய்கிறார் - காலை

5. இந்த நாளிலும் என்னைக் காப்பவர்
இன்ப மானஎன் னேசுவே,
சந்ததம் உண்மை சாட்சி கூறவே
சிந்தை கூர்ந்தென்னைத் தேற்றுறார் - காலை

6. இந்த நாளில்நான் செய்யும் ஊழியம்
எந்தை யேஉமக் கேற்றதாய்,
சொந்தமாய் உந்தன் கணக்கிலே வைத்து
சந்ததம் என்னைத் தேற்றுறார் - காலை

**62. இராகம்: காம்போதி. தாளம்: ஆதி**

**பல்லவி**

**தேவா, பர தேவா, ஓ! ஏ**
கோவா, எனைக் கா, வா.

**அனுபல்லவி**

கா,வா, எனைஇக் காலையில் எழுந்து,
கண்பார்த் தென்மேல் கருணை புரிந்து, - தேவா

**சரணங்கள்**

1. கடந்த இராஅந்த காரம் பின் வாங்க,
காலை ஒளி கண்ணுறக் காத்தெனை ஓங்க,
உடந்தையாக என்னை உரித்துடன் தாங்க,
உன்அருள் புரிஇடை யூறுகள் நீங்க, - தேவா

2. பாவம் பசாசுலக பாசம் விட்டோட,
பரலோக வாழ்வினைப் பத்தியாய்த் தேட
பூவில் விசுவாசப் போராட்டம் ஆட,
புண்ணியன் உன்னையே போற்றி மன்றாட; - தேவா

அட்டவணை

3. இந்தநாளில் அடியேன் எழுந்து பணிகள்ஆற்ற,
ஏற்ற சவுக்கியம்பெலன் என்னிடம் தோற்ற,
வந்தருள் உன்திரு வசனமே சாற்ற,
வரம்அளித் திடஉன்னை வாழ்த்தியே போற்ற; – தேவா

4. இந்நிலந் தன்னிலே, இறைவா, நீ மாத்திரம்
ஏந்தித் தொழும்மகிமை ஏற்றிடப் பாத்திரம்;
உன்இடந் தான்நோக்கும் ஊன்றிஎன் நேத்திரம்,
ஓதிடுவேன் என்றும் உமக்கே மாதோத்ரம். – தேவா

**63. இராகம்: போர்த்துகீஸ். தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**தோத்திர பாத்திரனே, தேவா,**
தோத்திரந் துதியுமக்கே.
நேத்திரம் போல் முழு ராத்ரியுங் காத்தோய்!
நித்தியம் துதியுமக்கே!

**சரணங்கள்**

1. சத்துரு பயங்களின்றி – நல்ல
நித்திரை செய்யவெமை
பத்திர மாய்ச்சீ ராட்டி யுறக்கியே
சுற்றிலுங் கோட்டை யானாய் – தோத்திர

2. விடிந்திருள் ஏகும்வரை – கண்ணின்
விழிகளை மூடாமல்,
துடிகொள் தந்தைபோல் படிமிசை எமது
துணைஎனக் காத்தவனே, – தோத்திர

3. காரிருள் அகன்றிடவே, – நல்ல
கதிரொளி திகழ்ந்திடவே;
பாரிதைப் புரட்டி உருளச்செய் தேகன
பாங்கு சீராக்கி வைத்தாய். – தோத்திர

4. இன்றைத் தினமிதிலும் – தொழில்
எந்தெந்த வகைகளிலும்
உன் திரு மறைப்படி ஒழுகிட எமக்கருள்
ஊன்றியே காத்துக்கொள்வாய் – தோத்திர

[அட்டவணை]

64.

**பல்லவி**

**வாழ்த்துகிறேன் இயேசு சுவாமி**
வாழ்த்துகிறேன் இக்காலையிலே

**அனுபல்லவி**

அற்புதமாய் இராமுழுவதும் அடியேனைக் காத்தீரே – வாழ்

**சரணங்கள்**

1. உமதுசெட்டை நிழல,திலே படுத்திருந்தேன் இராமுழுவதும்
உமதுகரம் அணைத்திடவே ஆறுதலாம் நித்திரையும் –வாழ்

2. நித்திரையை இன்பமாக்கி பத்திரமாய் இருதயத்தை
சுத்தமான இரத்தத்திற்குள் சுத்தமாக வைத்திருந்தீர் – வாழ்

3. பலவிதமாம் சோதனைகள் எமைச்சூழ வந்திருந்தும்
பாதுகாத்தீர் அன்புடன் ஒன்றும்எமை அணுகாமல் – வாழ்

4. சந்திப்பீரே இக்காலையில் தந்திடவே திருவரங்கள்
சந்தோஷமாய் பகல்முழுதும் ஆவிக்குள்ஏ ழைபிழைக்க – வாழ்

5. தந்திடுவீர் அபிஷேகம் தானேபுதி தாய்இந்நாளில்
நடத்திடுவீர் உமது ஆவி உமதுசித்த போல் நடக்க – வாழ்

6. பாவமென்றும் அணுகிடாமல் பரிசுத்தமாம் பாதைசெல்ல
தேவையான சர்வாயுதங்கள் தாரும்ஜெப ஆவியுடன் – வாழ்

7. படைக்கிறேன்என் இருதயத்தை பலிபீடத்தில் முற்றுமாக
கடைக்கண்ணுடன் செவியினோடு வாயும்கையும் காலுமாக
– வாழ்

8. செய்திடுவேன் எப்பொழுதும் உம்துசித்தமே ஆசையுடன்
உய்திடுவேன் மெய்யாக ஓதிடுவேன் உமதுவார்த்தை – வாழ்

9. எனைக்காண்போர் உம்மைக்காண உமதுசாயல் எனில் வேண்டும்
எனில்வேண்டும் பொறுமையுடன் தாழ்மைஅன்பு யாவையுமே
- வாழ்

10. நேசரேஉம் திருவருகை நிச்சயமே வந்திடினும்
ஆசையுடன் சந்திக்கவே ஆயத்தமாய் ஆக்கிக்கொள்ளும்
- வாழ்

**65.**

**கண்ணிகள்**

**விடியும் நேரத்தில் வெள்ளி உதிக்குது**
வீட்டுச் சேவலும் விழித்துக் கூவுது
வடிவில் மிகுந்தோர் பறவை பாடுது
வணங்க மனமேநீ எழுந்திராய்!

2. காகங் கூவுது காலை யாச்சுது
காணுங் கீழ்த்திசை வெளுத்துக் காணுது
ஆகம் பணிந்து அடியார் துதிக்கிறார்
அதிக சீக்கிரம் எழுந்திராய்!

3. மயில்கள் தோகையை விரிக்க நெளிக்குது
மாகான விலங்கினம் ஓடி ஒளிக்குது
குயில்கள் ஓசையைக் காட்டத் துவக்குது
குருவை வணங்க நீ எழுந்திராய்!

4. அந்த காரங்கள் அகன்று போகுது
அடுக்குத் தாமரை அரும்பு மலருது
இந்த நேரத்தில் இணங்கித் துதிசெய்தால்
இரக்கங் கிடைக்குமே எழுந்திராய்!

5. இயேசு நாமமே இன்ப ரசமென
ஏற்றுத் துதிசெயும் அடியார்க் கருள்செய்ய
இயேசு நாமத்தை எண்ணி இக்காலை
ஏழை மனமே நீ எழுந்திராய்!

அட்டவணை

## மாலை

**66. இராகம்: சயிந்தவி.** **தாளம்: ஆதி.**

**கண்ணிகள்**

**இந்த இர வில்எமைக் காரும் – இயேசையாவே நீர்**
உந்தன்திருக் கண்ணாலே பாரும்.

2. சென்ற பகல் முழுதும் நீரே – எங்க ளுக்கொரு
தீமை வராமல் காத்தீர் தேவே.

3. சரீர ஆத்தும நன்மை ஐயா – எல்லாம் உம்மாலே
தட்டின்றி பெற்றுக் கொள்வோம் மெய்யாய்.

4. இரவில் நித்திரை செய்யும் போதே – காக்கும் தூதர்கள்
இறங்கிச் சூழச் செய்யும்இப் போதே

5. சுகமான நித்திரையைத் தாரும் – சாத்தான் சோதனை
துன்பம் வராமலே தற்காரும்.

6. அக்கினி மோசங்களால் சேதம் – பொல்லாங்குகள்
அணுகாமல் காத்திடுமே பாசம்.

7. மறுநாள் அதிகாலையைக் காண – கிருபை செய்யும்
மனுவேல் உமது பாதம் பூண

8. நெஞ்சம் விழித்து உம்மைக் கெஞ்சும் – சீயோன் மகளின்
நேயாநீர் இங்கு வந்து கொஞ்சும்.

9. தாசர் சபையாரின் மன்றாட்டு – ஐயா உமது
சமுகம் வரட்டுமே தாராட்டு.

**67. இராகம்: காம்போதி.** **தாளம்: சாப்பு.**

**பல்லவி**

**கருணாகர தேவா, இரங்கி இந்தக்**
கங்குலில் எனைக் கா, வா.

**அனுபல்லவி**

இருளேதும் அணுகாமல் இரவிலும் பகல்போல
என்றும் ப்ரகாசமாக இலங்குமா திரியேக. – கருணாகர

**சரணங்கள்**

1. சென்ற பகலில் காத்து, சேர் விபத்துகள் நீத்து
சேர்த்தையே வழி பார்த்து, திகில் தீர்த்து;
நன்றி யதற்குத் துதி நவில்வன்; நீ என் கதி
நாடும் என் அதிபதி; நமஸ்காரம் உனக்கதி! – கருணாகர

2. நித்திரையில் உட்புகுந்து, சத்துருப் பசாசு வந்து
நெருங்காமல் நீ எழுந்து நிலை புரிந்து,
சுத்தநெஞ்சோ டமைந்து தூங்க நல் துயில் தந்து,
தூதர் காவல் நிறைந்து, துணையாய் என்னோ டிருந்து – கரு

3. தாதா, அண்டினேன் உன்னைத் தஞ்சம் நீயே, என்னைத்
தாங்குவதார பின்னை, சார்வன் நின்னை;
வேதா, நான் உன் தொண்டு வினைஞன் என் நிலை கண்டு,
மீண்டுன் செட்டைகள் விண்டு விலகாத ணைத்துக்கொண்டு.
– கருணாகர

4. தீய எண்ணங்கள் பாற, திகில் கனவுகள் மாற,
திவ்ய சிந்தை உள் ஊற, திறம் ஏற,
காயம் உயிரும் கூட, கருத்துன்னோ டுறவாட,
காலை நல்லறம் நாட, கரிசித்துன் துதிபாட. – கருணாகர

***–ஜான் பால்மர், நாகர்கோவில்.***

**68. இராகம்: சங்கராபரணம்.** **தாளம்: ஏகம்.**

**ஐயரே நீர்தங்கும் – என்னிடம்!**

ஐயரே நீர் தங்கும்! – இப்போ
அந்திநே ரம்பொழு தஸ்தமித் தாச்சே
ஐயாநீர்இ ரங்கும்.

2. பகல்முழு துங்காத்தீர், – சென்ற
பகல்முழு துங்காத்தீர், – தோத்திரம்
பரம னேஇந்த இரவிலும் வாரும்
பாவி யைநீர் காரும்.

அட்டவணை

3. தங்கா தொருபொருளும் – என்னிடம்
தங்கா தொருபொருளும்; – இயேசு
தற்பர னேநீர் ஒருவரே யென்னில்
தங்கித் தயை புரியும்!

4. நீர்தங் கிடும்வீட்டில் – இயேசுவே
நீர்தங் கிடும் வீட்டில்; – எல்லாம்
நிறைவே குறையுண் டாமோ கர்த்தா?
நின்னை விடமாட்டேன்.

5. என்பா வம்மன்னியும் – இறையே!
என்பா வம்மன்னியும்! – அப்போ
தெளியேன் உம்மோ டயர்வேன் இரவில்
எனக்கோர் திகிலேது?

6. எனக்கு நீர் காவல் – என்றும்
எனக்கு நீர் காவல் – என்தன்
இனத்தார் சனத்தார் எளியோர் வலியோர்
எல்லாவர்க் குங்காவல்.

7. உயிரே துமையன்றி – பாவிக்
குயிரே துமையன்றி – எந்தன்
உடன்உயிர் உம்மால் உய்கிற தையா,
உத்தம னேதங்கும்.

8. உம்மோ டேபடுப்பேன் – ஐயா
உம்மோ டேபடுப்பேன்! – இரவில்
உம்மோ டயர்வேன், சேதமில் லாமல்
உம்மோ டெழுந்திருப்பேன்.

9. மரணம் செயித்தோர்நீர் – மெய்யாய்
மரணம் செயித்தோர்நீர் – உம்மால்
மரணமே கூரெங் கேநர கேநின்
வலுசெய மெங்கென்பேன்.

*–ஞா. சாமுவேல் ஐயர்*

அட்டவணை

**69. இராகம்: கல்யாணி.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**தோத்திரம்! கிருபை கூர், ஐயா;**
விழி பார், ஐயா, விழி பார், ஐயா!

**சரணங்கள்**

1. பாத்திரம் இலா எனை நேத்திரம் என உச்சிதமாய்க்
காத்து வந்திடும் எனது கர்த்தாதி கர்த்தனே! – தோத்திரம்

2. இந்த நாள் அளவிலும் வந்த துன்பம் யாவுமே
என்றனை விட்டகலவே இரங்கிய தேவனே. – தோத்திரம்

3. மனதிலும் வாக்கிலும் மட்டில்லாத பாவி நான்;
எனது தீதகற்றி ஆளும், ஏகாம்பர நாதனே. – தோத்திரம்

4. போதனே, நீதனே, புனிதசத்ய வேதனே,
கீதனே, தாசர் துதி கேளும், இயேசு நாதனே. – தோத்திரம்

**70. இராகம்: தன்யாசி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**வினை சூழா திந்த இரவினில் காத்தாள்,**
விமலா, கிறிஸ்து நாதா!

**அனுபல்லவி**

கனகாபி சேகனே, அவனியர்க் கொளிர்பிர
காசனே, பவ நாசனே, ஸ்வாமி, – வினை

**சரணங்கள்**

1. சென்ற பகல் முழுது மென்னைக்கண் பார்த்தாய்
செய் கருமங்களில் கருணைகள் பூத்தாய்;
பொன்றா தாத்ம சரீரம் பிழைக்க ஊண் பார்த்தாய்;
பொல்லாப் பேயின் மோசம் நின்றெனைக் காத்தாய், – வினை

2. சூரியன் அத்தமித் தோடிச் சென்றானே;
ஜோதிநட் சத்திரம் மெழுந்தன வானே,
சேரும் விலங்கு பட்சி உறைபதி தானே
சென்றன; அடியேனும் பள்ளி கொள்வேனே. – வினை

அட்டவணை

3. ஜீவன் தந்தெனை மீட்டோய் சிறியேன் உன் சொந்தம்;
செகத் தின்பங்கள் விழைந்து சேர்தல் நிர்ப்பந்தம்;
பாவியேன் தொழுதேன் நின் பாதார விந்தம்;
பட்சம் வைத்தாள்வையேல், அதுவே ஆனந்தம். – வினை

4. இன்றைப் பொழுதில் நான்செய் பாவங்கள் தீராய்;
இடர்கள் துன்பங்கள் நீங்க என்னைக்கை சேராய்;
உன்றன் அடிமைக் கென்றும் உவந்தருள் கூராய்;
உயிரை எடுப்பையேல், உன் முத்தி தாராய். – வினை

*– பாளையங்கோட்டைப் பாடல்*

**71. தாராட்டு.** **தாளம்: ஏகம்.**

**சங்கீதம் 134**

**இராக்காலம் கர்த்தருடை நல்வீட்டில் நிற்குமவர்**
தாக்கான ஊழியரே சகலபேரும் கும்பிடுங்கள்

2. கர்த்தருக்கே உங்களுடைக் கைகளையும் ஏறெடுத்து
சுத்ததலம் நோக்கியுங்கள் ஸ்தோத்திரத்தை செய்திடுங்கள்

3. வானம் புவிபடைத்த மட்டில்லா வல்லபரன்
ஞானச் சீயோன் நகரில்நின்று நம்மையா சீர்வதிப்பார்

## ஓய்வு நாள்

**72. இராகம்: ஆனந்த பைரவி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**ஓய்வு நாளதை தாபித் தருளிய**
உன்னதா, உமக்கே தோத்திரம்!

**அனுபல்லவி**

மாய்விலா மறையையாம் மனதில் உட்கொண்டு,
வாழ்த்தி, உம்மைப் புகழ்ந்துபோற்ற வாய்விண்டு – ஓய்வு

அட்டவணை

**சரணங்கள்**

1. தேகக் கவலை, தொழில், யாவையும் ஒழிக்க;
திவ்ய சிந்தையால் எங்கள் இதயமே செழிக்க,
ஏகன் நின் அருள் பெற்றிங் கிகல்அற அழிக்க,
எவரும் திருநாளாய்க் கொண்டாடி எக்களிக்க. – ஓய்வு

2. விண்ணோ ருடன் யாவரும் ஆவியில் கூட,
வேதா, உம்மைப் புகழ்ந்து மங்களம் பாட,
மண் உலகில் போராட்டச் சாலையில் ஓட,
வரம் அளித்திட உம்மைக் கெஞ்சி மன்றாட, – ஓய்வு

3. முத்தி வழி விலக்கும் துர்க்குணம் மாற்றி,
முன் நின் றெம்மை நடத்தியே கரை ஏற்றி,
எத்தேசத்தாரும் உம்மை ஏகமாய்ப் போற்றி
இறைஞ்ச அருளும் உமதாவியை ஊற்றி. – ஓய்வு

***–ஜான் பால்மர், நாகர்கோவில்***

**73. இராகம்: போர்த்துக்கீசியம். தாளம்: ஏகம்.**

**“ஆரிவ ராராரோ” என்ற மெட்டு**

**பல்லவி**

**ஓய்வுநாள் இது சபையே – தேவன்**
உவந் துனக் கருளினாரே

**அனுபல்லவி**

ஆதலால் அவர்திரு ஆலயம் ஏகுவோம்
வாருங்கள் சபையோரே – ஓய்வுநாள்

1. புவிவான் உயிர் படைத்து – தேவன்
புகழோடு தொழில் முடித்து
ஆறு தினம்சென் றேழில் அமர்ந்தனர்
ஆ! திருச் சபையோரே – ஓய்வுநாள்

2. வேலை தொழில்கள் நிறுத்தி – நமது
தேவனை முன்னிறுத்தி
காலை மாலை தவறாது தேவாலயம்
வாருங்கள் சபையோரே – ஓய்வுநாள்

3. நாள்இதை நினை மனமே – நமது
நாதன் உயிர்த்த தினமே
வானிருந் திறங்கின வலுதிரு ஆவியின்
நாள் திருச்சபையோரே – ஓய்வுநாள்

4. கர்த்தர் வசனம் கேட்டு – அதை
பத்திரம் அகம் வைத்து
கற்பனை நான்கினில் கர்த்த ருரைப்படி
காருந் திருச் சபையோரே – ஓய்வுநாள்

**74. இராகம்: கல்யாணி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**ஓய்வுநாள் இது மனமே – தேவனின்**
உரை யைத் தியா னஞ் செய் கவனமே.

**அனுபல்லவி**

நேய தந்தையர் சேயர்க் குதவிய
நெறி இச் சுவிசேட வசனமே – ஓய்வுநாள்

**சரணங்கள்**

1. ஜீவ சுக புத்திர செல்வம் தந்தவர்
சேவடி உனக் கபயமே;
மேவி அவர்கிரு பாசனத்தின் முன்
வேண்டிக் கொள், இது சமயமே. – ஓய்வுநாள்

2. ஆறு நாளுனக் களித்தவர், இளைப்
பாறி எழினில் களித்தவர்
கூறும் பூரண ஆசீர் வாதத்தைக்
குறித்துணை இதற் கழைக்கிறார். – ஓய்வுநாள்

3. கர்த்தர் ஆசனம் குறுகிக் கேள்இன்று
காலை நண்பகல் மாலையும்;
சுத்தம் விரும்புவோர் மாத்திரம் வந்து
துதிக்கத் தகும்இத்தே வாலயம். – ஓய்வுநாள்

அட்டவணை

4.	ஆத்ம தேகம்நீ கடவுட்குப் படைப்
பாற்ற நற்சுப நாளிதே;
அறையிலே சமு சார செபம் செய்வோர்
அடைவர் பலனிதில் அதனமே	– ஒய்வுநாள்

***–பாளையங்கோட்டைப் பாடல்.***

# புத்தாண்டு

**75. இராகம்: காம்போதி**	**தாளம்: சாப்பு.**

**பல்லவி**

**மறவாதே மனமே – தேவ சுதனை**
மறவாதே, மனமே, ஒருபொழுதும்

**சரணங்கள்**

1.	திறமதா கஉனைத் தேடிப் புவியில் வந்து,
அறமதாகச் செய்த ஆதி சுதன் தயவை.	– மறவாதே

2.	விண்ணின் வாழ்வும் அதன் மேன்மை அனைத்தும்விட்டு
மண்ணில் ஏழையாய் வந்த மானு வேலை.	– மறவாதே

3.	கெட்ட மாந்தர் பின்னும் கிருபை பெற்று வாழ
மட்டில் லாத பரன் மனுடனான தயவை.	– மறவாதே

4.	நீண்ட தீமை யாவும் நீக்கிச் சுகம் அளித்திவ்
வாண்டு முழுதும் காத்த ஆண்டவனை எந்நாளும். – மறவாதே

5.	நித்தம் நித்தம் செய்த நிந்தனை பாவங்கள்
அத்தனையும் பொறுத்த அருமை இரட்சகனை – மறவாதே

6.	வருடம், வருடம் தோறும் மாறாத் தமதிரக்கம்
பெருகப் பெருகச் செய்யும் பிதாவின் அனுக்ரகத்தை –மறவாதே

***– வேதநாயகம் சாசுதிரியார்***

அட்டவணை

## 76. ''கர்த்தர் பிறந்தார் உத்தமர் மகிழ்வார்'' - என்ற மெட்டு

**கண்ணிகள்**

**அன்பரே என்னுடை தோழரே வாரும்**
ஆனந்தம் பாடிடுவோம் – நாம் நாம்
ஆனந்தம் பாடிடுவோம்
ஆண்டவர் நமக்கு ஈந்த கிருபைக்காய்
ஆனந்தம் பாடிடுவோம்.

2. ஆயிரத் தொளாயிரத்து தறுபதாம் ஆண்டிதில்
ஆனந்தம் பாடிடுவோம் – நாம் நாம்
ஆனந்தம் பாடிடுவோம்
ஆபத்து நாளை அடியார் கழித்தோம்
ஆனந்தம் பாடிடுவோம்.

3. பேயினை செயித்து வாயை அடைத்தோம்
ஆனந்தம் பாடிடுவோம் – நாம் நாம்
ஆனந்தம் பாடிடுவோம்
தீயனின் சோதனை தீவினை கழித்தோம்
ஆனந்தம் பாடிடுவோம்.

4. பஞ்சங்கள் பசிகள் நோய்களை செயித்தோம்
ஆனந்தம் பாடிடுவோம் – நாம் நாம்
ஆனந்தம் பாடிடுவோம்
சஞ்சலப் படுத்தும் தீயனை மிதித்தோம்
ஆனந்தம் பாடிடுவோம்.

5. இன்ப சுகங்கள் யாவையும் கண்டோம்
ஆனந்தம் பாடிடுவோம் – நாம் நாம்
ஆனந்தம் பாடிடுவோம்
துன்பப் பசாசின் துர்க்குணம் விட்டோம்
ஆனந்தம் பாடிடுவோம்.

6. பிதாவுக்கும் சுதனுக்கும் தேவா விக்கும்
தோத்திரம் செய்திடுவோம் – நாம் நாம்
தோத்திரம் செய்திடுவோம்
ஆதி யோடந்தம் அவரே என்று
தோத்திரம் செய்திடுவோம்.

அட்டவணை

## 77. இராகம்: இந்துத்தாணி

**பல்லவி**

**ஆனந்தமே! செயா! செயா!**
அகமகிழ்ந் தனைவரும் பாடிடுவோம்.

**அனுபல்லவி**

ஞானரட்சகர், நாதர் நமை –இந்த
நாள்வரை ஞாலமதினில் காத்தார் – புகழ்

**சரணங்கள்**

1. சங்கு கனம், வளர் செங்கோ லரசிவை
தளரா துளகிறிஸ் தானவராம்,
எங்கள் இரட்சகரேசு நமைவெகு
இரக்கங் கிருபையுடன் இரட்சித்ததால் – புகழ்

2. முந்து வருட மதனில் மனுடரில் வெகு
மோசதுன்பங்கள் தனிலேயுழல,
தந்துநமக்குயி ருடையுண வும்வெகு
தயவுடன் இயேசு தற்காத்ததினால் – புகழ்

3. பஞ்சப்பசிக்கும் பட்டயத்துக்கும் வெகுகொடும்
பாழ் கொள்ளைநோய் விடரோகத்திற்கும்
தஞ்ச இரட்சகர் தவிர்த்து நமைஇத்
தரைதனில் குறைதணித் தாற்றியதால் – புகழ்

***–மறைத்திரு. V. மாசிலாமணி, திருப்பூவனம்***

## 78. இராகம்: துசாவந்தி தாளம்: ஆதி.

**பல்லவி**

**இம்மட்டும் சீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த**
எண்ணமாய் தோத்திரிபோ மாக.

**அனுபல்லவி**

நம்மை இரட்சிக்க வந்து தம்மைப் பலியாய்த் தந்து
நற்சுகம் மேவவும் அற்புத மாகவும் –

**சரணங்கள்**

1. காலம் சொல் போல் கழியும் தண்ணீரைப் போல் வடியும்;
கனாவைப் போலேயும் ஒழியும்;
வாலிபமும் மறையும், சீலம் எல்லாம் குறையும்;
மண்ணின் வாழ் வென்றும்நிற்க மாட்டாது;
கோலப் பதுமைக்கும் நீர்க் குமிழிக்கும் புகைக்குமே

கொண்ட உலகத்தில் அண்ட பரன் எமைக்
கண்டு கருணைகள் விண்டு தயவுடன் – இம்மட்டும்

2. பலவித இக்கட்டையும் திகில்களையும் கடந்தோம்,
பரம பாதையைத் தொடர்ந்தோம்;
வலியதீ மையைவென்றோம்; நலியும்ஆசையைக் கொன்றோம்,
வஞ்சகர் பகைக்கும் தப்பி நின்றோம்;
கலி என்ற தெல்லாம் விண்டோம்; கர்த்தாவின் மீட்பைக்
கண்டோம்;

காய்ந்த மனதோடு பாய்ந்து விழுகணம்
சாய்ந்து கெடவும் ஆராய்ந்து நெறியுடன் – இம்மட்டும்

3. கன சேதம் வருவிக்கும் கேடுகட்கோர் முடிவு
தந்து, நொறுங்கினதைக் கட்டி,
கன சபையை ஆதரித் தன்பாய் ஆசீர்வதித்து,
கண்நோக்கி எல்லார்மேல் அன்றன்று
தினமும் அருள் உதிக்கச் செய்து, தமது தேவ

சிந்தை யினோடதி விந்தைய தாய்உயிர்
மைந்தனால் எங்களை இந்த வினோதமாய் – இம்

*–வேதநாயகம் சாத்திரியார்.*

### 79. "இன்றேசையா உதித்தார்" - என்ற மெட்டு

**பல்லவி**

**கனசோ பனப்பதியே புயபல வா நீ தப நேசா**
கருணாகரப் பரமே மனோகர காந்தி செக தீசா.

அட்டவணை

**சரணங்கள்**

1. எம தாயுளைக் கிருபையால் செய முடி
சூடி இலங்க வைத்தாய் – இக
வாழ்வி லும் ஒரு தாழ்வில்லா வெகு
சோபித மாக வைத்தாய் – கனசோ

2. சேயர் பால்யராய் நடுப் பிராய ராய் உயிர்
நீங்கின தெத்தனை பேர் – செக
மீதினில் எமைப் பாது காத்தருள்
செய்தனை எத்தனை சீர் – கனசோ

3. புது ஆண்டதில் பெற வேண்டும் நன்மை கள்
ஈந் தருளே தாங்கி – பூ
பதியில் நேரிடும் சதிய றுத்திடும்
திருக்கர மோங்கி – கனசோ

4. சுர மண்டலம் தம்புர் வீணை பிற்றில் மிர்
தங்கம் சாலர் முழங்க – துதி
தந்த தோழர்கள் நாங்கள் யாவரும்
கெம்பீர மாய்விளங்க – கனசோ

*–இரத்தினம் பரதேசியார், பாளையங்கோட்டை.*

**80. "எந்தை எந்தை முந்தும் திருமகன்" - என்ற மெட்டு**

**தந்தை தந்தை தந்தை தேவனார்**
விந்தை விந்தை விந்தையொடு நமக்கு
இந்த இந்த நவ வருடம்
தந்தனர் வந்தனமே

ஆ! அதிசய புது வருட மிதில்
அனந்தம் புகழ் கொள்வோம் மனதில்
ஆ! இது சமயம் குணப்படுவோம்
அமலனடி பணிந்தேற்றிடுவோம்

அட்டவணை

2. சிந்தை சிந்தை சிந்தை யதனிலும்
சொந்த சொந்த சொந்த நாவிலும்
கந்தை கந்தைச் செயலிதுவே
கன்மிக ளாயினோமே

ஆ! கொடிதான சாபமுற்றோம்
அலகை விடய மெய்யகமு முற்றோம்
மா கொடிதாம் நகரமதில் யாம்
மாய்ந்திடாமல் கிறிஸ்தன்பு பெற்றோம்

3. மிக்க மிக்க மிக்கத் துதி சொலத்
தக்க தக்க தக்க வரந்தரப்
பக்க பக்க மதுதனிலே
பரனைமன் றாடுகின்றார்

ஆ! கனம் பிதாசுத னாவியர்க்கும்
அகமகிழோடு பாடுவோ மென்றைக்கும்
ஆ! மனம் வாய்செய்கை யதனிலும் யாம்
அம்பரன் மறைக்கிசைந் தொழுகிடுவோம்

4. வாழி வாழிஎம் தேசத் தலைவரும்
வாழி மந்திரி மார்அவர் அலுவல்களும்
வாழி தமிழகம் வாழி இந்தியா
வாழி திருச்சபை வேதியரும்

வாழி கிறிஸ்தவ கல்லூரிகளும்
வாழி வைத்திய தாபனமும்
வாழி செல்வர்கள் ஏழைகளும்
வாழி யாரும்என் றூழி ஆமேன்

**81. இராகம்: பங்களா.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**நித்தம் அருள் செய் தயாளனே – எங்கள்**
நேசா இயேசு மணாளனே! – சுவாமி

அட்டவணை

### அனுபல்லவி

உத்தம சற்குண தேவ குமாரா
உம்பர்கள் சந்ததம் போற்றும் சிங்காரா
சத்திய வேத வினோ தலங்காரா
சதி செய்யும் பேய் தலை சிதைத்த ஒய்யாரா – நித்தம்

### சரணங்கள்

1. பட்ச பரம குமாரனே – எங்கள்
பாவம் தீர்க்குமா வீரனே – சுவாமி
அச்சய சவுந்தர ஆத்தும நாதா
அடியார்கள் துதிசெயும் ஆரண போதா
இரட்சண்ய சுபசுவி சே டலங் காரா
இராச கெம்பீர சங்கீத பொற் பாதா – நித்தம்

2. சென்றாண் டெமை முகம் பார்த்தவா – ஒரு
சேதவிக் கின மின்றிக் காத்தவா – சுவாமி
இன்றோர் புது வரு டாரம்பம் கண்டோம்
ஏக சந்தோடமாய்ச் சந்தித்துக் கொண்டோம்
குன்றா துமதுடை ஆவியை ஈந்து
கூடவே இருந்தடி யார்செபம் கேட்டு – நித்தம்

## திருநாட்கள், சிறப்பு நாட்கள்

**82. இராகம்: செஞ்சுருட்டி. தாளம்: பிலந்தி.**

**பரி. அந்திரேயாவின் திருநாள் - நவம்பர் 30ஆம் நாள்**

**“சரணம் சரணம் சரணம் எனக்குன்” – என்ற மெட்டு**

### பல்லவி

**கவனம், கவனம், கவனம் கிறிஸ்து**
கடைக்கண் பாரும் கர்த்தாவே.

அட்டவணை

**அனுபல்லவி**

தவன முடனான் தபசு புரிந்தேன்
தச்சா – என் – அச்சா

**சரணங்கள்**

1. அந்திரே யாவின் திருநா ளின்று
அடிபணிந்தே னுந்தன் பாதம் – அவன்
சிந்தையில் யோவானின் சீடனென் றோதவும்
தேவாட்டுக் குட்டியைக் கண்டான் – கவனம்

2. "போதகரே நீரும் எங்கே இருக்கிறீர்
புண்ணிய வானே நீர் சொல்லும்" – என
ஆதரவுடனே "வந்துபா ரென்று" மே
அடைத்திட வில்லையோ நில்லும் – கவனம்

3. மீனைப் பிடித்தவா மானிட ரைப்பிடி
மேன்மை யுனக் குண்டா மென்றீர் – இந்த
மானைப் பிடித்திட மனமு மில்லையோ
மாட்டே னென்றாலும் நீர் வென்றீர் – கவனம்

4. சத்திய வசன மான்வலை வீசி
சைதியா, திரேசியா, க்ரீசும் – பாட்ரே
சண்டாளன் ஈசியசு மனைவி மக்சிமில்
லாளைக் குணப்படச் செய்தாய் – கவனம்

5. இன்று அடையாள மான சிலுவையில்
இந்த மா பக்தனும் சாக – அது
என்றும் பிரிட்டிசின் இராச்சிய யூனியன்
இன்பக் கொடியாக வீச – கவனம்

6. இந்த விதமாக நாங்களும் உமக்கு
இருத யமுடன் வாக்கு – நடை
மந்த மில்லாமலே ஊழியஞ் செய்திட
மன்றாடும் செப முண்டாக்கு – கவனம்

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

அட்டவணை

**83. இராகம்: செஞ்சுருட்டி.** **தாளம்: ஆதி.**

**பரி. தோமாவின் திருநாள் - திசம்பர் 21ஆம் நாள்**

**"வானம் பூமியோ பராபரன்" – என்ற மெட்டு**

**பல்லவி**

**கானம் பாடுவோம் மேசியாவின்**
கருணை தேடுவோம் – ததியிது.

**அனுபல்லவி**

வானசேனையே – மா
ஞான வீணையே – ததியிது – கானம்

**சரணங்கள்**

1. தேமாவின் திருநாள், சும்மாவோ பெருநாள்
தோன்றும் இரட்சகன் மாண்டெட முந்தவர்
காண்டிடத் தயை பூண்ட நிச்சயம்
மா தியிது – கானம்

2. இரு மன முடையோன், மறுகுண முடையோன்
இந்தத் திதிமு அடைந்த யேக்கம்
நிந்தைக் கிடமென் றறிந்து நோக்கும்
மா ததியிது – கானம்

3. கண்டு விசுவாசம், கொண்டதுவே மோசம்
கண்டிடா விசு வாச முடையோர்
விண்ட இயேசுவின் தொண்ட ராகுவர்
மா ததியிது – கானம்

4. பார்த்தியா, ஏடேசா, பகரும் இந்தியா
நேர்த்தியாய் மதராசில் போதகம்
நிரம்பச் செய்ததெ தோமா சாதகம்
மா ததியிது – கானம்

5. மயிலாப் பூரிலே மாண்ட வூரினிலே
கயிலா யம்போல் தோமையர் ஆலயம்
காணுது பார் அதைப் பார்ப்பது மாநயம்
மா ததியிது – கானம்

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

[அட்டவணை]

**84. இராகம்: சங்கராபரணம்.** **தாளம்: ஆதி.**

**பரி. பவுலின் திருநாள் - சனவரி 25ஆம் நாள்**

**"என்ன பாக்கியம்" – என்ற மெட்டு**

**பல்லவி**

**நல்ல வாக்கியம் – நமக் குண்டு**
இரட்சகர் பாக்கியம்.

**அனுபல்லவி**

எல்லையில் லாத்தயை எங்கும் நிறைந்தது
வல்ல பவுல்திரு நாளுமே வந்தது – நல்ல

**சரணங்கள்**

1. பவு லென்னும் நாமம் – பழைய பேர்
சவு லென்னும் கேமம்,
சிலி சியா நாடதில் சிறந்த தோர் தரிசுவில்
கலியுக யூதனாம் கமாலியேல் சீடனாம் – நல்ல

2. மார்க்க விரோதி – பரிசுத்த
வான்கள் குரோதி
ஆர்க்குமே அஞ்சாமல் ஆச்சாரி யனிடம்
தீர்க்கமாய் நிருபங்கள் மூர்க்கமாய் வாங்கினார் – நல்ல

3. ஆணென்றும் பாரான் – ஐயோ இது
பெண்ணென்றும் ஓரான்
நானென்ற ஆணவனம் மிஞ்சித் தமஸ்குவும்
தோணவே வந்தவன் துள்ளி விழுந்திட்டான் – நல்ல

4. இயேசுவைக் கண்டான் – சுவாமியே நீர்
யாரென்று கேட்டான்
மாசுகள் நீங்கிட மாறிக் குணப் பட்டான்
மேசியா நாமத்தை மெச்சிப்பிர சங்கித்தான் – நல்ல

5. புற சாதியாரும் – வரத் தகாப்
புறக் கணிப் பாரும்
பரலோக வாழ்வதில் பங்கு பெறுவாரென்ற
பரம இரகசியம் பவுலுக்கு வெளியாச்சு – நல்ல

6. அன்புள்ள வசனம் – அனைவரும்
அறிந்திடத் தவனம்
ஆசியா, ஐரோப்பா, அடுத்த பிரித் தானியா
அடங்கலும் சுவிசேடம் அறிவித்துச் சிறைப்பட்டான் – நல்ல

7. நியமங்கள் சுருதி – பல பல
நிருபங்கள் எழுதி
நிந்தை யுபத்திரவம் நெடுந்துன்பந் தான்பட்டு
நேரோ ராயனென்னும் நீசனால் மாண்டிட்டான் – நல்ல

8. திருச் சபை யோரே – சுவிசேடம்
செப்பிடு வீரே
பரிசுத்த பவுலைப்போல் பலருமே குணப்பட்டு
தரிசித்து இயேசுவின் சரணம் புகுந்திடும் – நல்ல

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**85. இராகம்: யமுனா கல்யாணி. தாளம்: ஆதி.**

**பரி. கன்னிமரியாள் சுத்திகரிப்புத் திருநாள் - பிப்ருவரி 2ஆம் நாள்**

**"பாதம் வந்தனமே" – என்ற மெட்டு**

**பல்லவி**

**தாகம் கொண்டனரே – எருசலை**
யாகம் கண்டனரே

**சரணங்கள்**

1. வேகமுடனே கன்னிமாதா விரைந்து சென்றனரே
பாலகனுடனே தேவாலயமே – பலியிட – தாகம்

2. பிரதிஷ்ட்டையின் பெரிய திருநாள் பிரபல மோங்க
மரியன்னையும், மனு மகனும் – தொழுதிட – தாகம்

3. சென்மப் பாவமும் கன்மப் பாவமும் சிறிது மில்லாத
சிசுவுடனே, புறாவுடனே – பலியிட – தாகம்

4. மாது மரியாள் தாயும் அன்னாள் தந்தை யோயாக்கீம்
மகிழ்ந்திடவே, களித்திடவே – துதிசெய – தாகம்

5. கேன்டில்–மாஸ்–டே, தோன்றவே ஒளி,கிளம்பி சொலித்திட
கீர்த்தியுடனே, பூர்த்தியுடனே – பலியிட – தாகம்

6. தேட்டமுடை சீமோன் அன்னாள் தெரிசனம் கண்டார்
சிரம் பணிந்தார், கரம் விரித்தார்–துதியுடன் – தாகம்

7. பிரசவித்தவன் தோத்திரம் செய்ய, பிள்ளை களிக்க
பின்னுள்ள பேர், பின் பற்றவே–பணிவுடன் – தாகம்

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**86. இராகம்: மோகனம். தாளம்: ஆதி.**

**பரி. மத்தியாவின் திருநாள் - பிப்ருவரி 2ஆம் நாள்**

**“சாலேமின் இராசா சங்கையின்” – என்ற மெட்டு**

**கண்ணிகள்**

**மரி மரி பாலா, மங்கள சீலா,**
மனதில் வாருமேன், மனதில் வாருமேன் – இன்று
மத்தியா வின்திரு நாளினில் வந்தோம்,
மகிழ்ந்து பாருமேன்.

2. எழுபது சீடரில் இவனொரு சீடனாய்,
எண்ணியிருந்தோம், எண்ணியிருந்தோம் – அப்போம்
ஏற்பட்ட சீட்டினால், இந்தப் பதவிக்கு,
இசைந்தவனானான்

3. பாதகம் செய்து நற் பதவியை இழந்த,
பாவி யூதாசின், பாவி யூதாசின் – தானம்
மாதவர் போற்றும் இம் மத்யாவுக் கேற்பட்ட,
மகிமை என் சொல்வோம்

அட்டவணை

4. ஐம்புல ஆசையை, மாமிச இச்சையை,
அடக்கியாண் டிடும், அடக்கியாண்டிடும் – என்று
ஆவலுடன் சுவிசேட மறை சொல்லி,
அறைந்து கூவினான்.

5. கல்லெறி பட்டு எருசலேம் விட்டுக்
கப்ப தோக்கியா, கப்பதோக்கியா – ஏகி
கர்த்தனைப் போல சிலுவை யறையுண்டு,
கண்ணை மூடினான்.

6. குருவபிசேடம் செய்யத் தெரிந்திடக்,
கோமான் கற்பனையோ, கோமான் கற்பனையோ? – இந்தக்
குவல யத்தவர் மாதிரி பார்த்திட,
குறித்த மா முனியோ?

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**87.**

**பரி. கன்னிமரியாள் மங்களவாக்குத் திருநாள் – மார்ச்சு 25ஆம் நாள்**

**“வானாதிதாள் காட்டும்” – என்ற மெட்டு**

**பல்லவி**

**சம்மன சோர் வாழ்த்தும் – தக்க**
சாட்சி கன்னி மரியாள்.

**அனுபல்லவி**

அம்மனா யென்றும் அடியார் புகழ்ந்திட
ஆண்டவர் இயேசுவின் அன்னையு மாயினர் – சம்மன

**சரணங்கள்**

1. காபிரியேல் தோண – அதைக்
கண்டவளும் நாண
மாபிரி யமான தாயாரே யுமக்கு
மங்கள வாக்குண்டு, இங்கதைச் சொல்கிறேன் – சம்மன

[அட்டவணை](#)

2. கேட்டிடுவீர் கவனம் – கிருபை
பெற்றவளே மவுனம்
நாட்டினில் கர்த்தரும் உம்மோடி ருக்கிறார்
நல்லம கவைநீர் பெற்றிடு வீரென – சம்மன

3. பெண்களி னந்தனிலே – உமக்குப்
பெரியவோர் ஆசீர்வாதம்
கண்மணி யைப்பெறக் காட்சி கிடைத்தது
கர்த்தரு டபலம் உம்மேல்நி ழலிடும் – சம்மன

4. எனினிச் சந்தேகம் – அந்த
எலிசபெத் தைநோக்கும்
மாமுனி யோவானின் தாயுமோர் மலடி
மாதவள் கர்ப்பமு மானது நிச்சயம் – சம்மன

5. ஈன்றிடு மைந்தனுக்கு – நினைவாய்
இயேசெனும் பேரிடுவீர்
தோன்றிடு மாதர்கள் சங்கம னைத்திலும்
சொல்லுவர் “தாயர் நாள்” என்றுமே சோபனம் – சம்மன

6. மாதர்கள் கூடிடவும் – பல
மந்திரம் ஓதிடவும்
வேதபா ராயண மோடுசெ பதபம்
விந்தையின் சாக்கிர மெந்துநா ளாகவும் – சம்மன

7. கன்னிமா தாவாழ்க – இயேசு
கர்த்தாதி கர்த்தன் வாழ்க
பன்னிரு சீடரும் பரிசுத்த வான்களும்
பாரினில் மேவும்தி ருச்சபை யும்வாழ்க – சம்மன

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

அட்டவணை

88.

**பரி. மாற்குவின் திருநாள் - ஏப்ரல் 25ஆம் நாள்**

**“வேறு சென்மம் வேணும்” – என்ற மெட்டு**

**பல்லவி**

**கேளுந் தெய்வங் கேளும் – தவம்**
கேடுபா டாகவே தோணினும் என் ஜெபம்

**சரணங்கள்**

1. பாழுமு லகத்தில் நாளும்கு றையுண்டு
ஆளுமெ னைமுற்றும் தாளும்ப ணிந்திட – கேளுந்

2. பர்னபா வின்ஓர்ச கோதரி மரியாள்
பண்புமக ன்மாற்கு வின் திரு நாளிது – கேளுந்

3. பேதுரு வாலிவன் பேணிக்கு ணப்பட்டான்
பின்புப வுல்கூறப் பம்பிலி யாவிட்டான் – கேளுந்

4. இரெண்டாம்சு விசேடம் விண்டானே தம்பி
கண்டோம்பு றசாதி கொண்டோம்இரட் சிப்போதி– கேளுந்

5. கானாவி லாறுசா டிகளி லொன்றையும்
காத்தனின் பந்தியில் தண்ணீர்சு மந்தவன் – கேளுந்

6. சீரிடும் யூதர்கள் சீப்புரு தீவிலே
மாறிட வேவேதம் கூறிந டந்தவன் – கேளுந்

7. அந்திய காலம்அ லெக்சாந்தி ரியாவை
ஆளும்த லைவராய மர்ந்தயோ வானிவன் – கேளுந்

8. வேதனை யாகவே கல்லிலி ழுபட்டான்
வேனீசுபட் டணத்தில் மேனிழு டப்பட்டான் – கேளுந்

9. இந்தமா சாதுவைப் போலவே நாங்களும்
இன்பசு விசேடம் எங்கும்உ ரைத்திட – கேளுந்

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

அட்டவணை

**89. இராகம்: ஆனந்த பைரவி** **தாளம்: ரூபகம்**

**பரி. பிலிப்பு, பரி. யாக்கோபு திருநாள் - மே முதல் நாள்**

**“தருணம் இதில் அருள்செய்” – என்ற மெட்டு**

**பல்லவி**

**பிலிப்பும் சின்ன யாக்கோப் பென்னும்**
பெரியார் திரு நாள் தானிது
பேணும்காட்சி தோணும் தவம்
பிடியும்பதம் படியும்.

**அனுபல்லவி**

வலிப்ப முடன் கிறிஸ்தே பிதா
வரக் காண்பியும் மறக்கே னென
உரைக்க இயேசு விரைக்க பலர்
சிரிக்க வகை புரிந்தா னந்த – பிலிப்பும்

**சரணங்கள்**

1. ஐந்தப் பழும் இரு மீனையும்
அடைந்த பையன் உடந்தை போல
அருகே யிவன் வருக குரு
பெருகச் செய்த தறிவோம்
விந்தைக் கிரேக்கர் நின்றே சுவைக்
காண யிதோ வந்தோ மென
விளிக்க யிவ னழைக்க இயேசு
களிக்க செய்த வொழுக்கம் பாரும் – பிலிப்பும்

2. பிரிகி யாவின் திசையி லவன்,
பிரசங் கங்கள் முரச மொடு
பெய்ய மக்கள் உய்ய பல,
பேயின் கிரியை நைய
திருகிப் பலர் மருகி யொரு,
சிலுவை தனி லறைந்தே கொல்ல
ஐராப் போலி யெனுமாந் தலம்,
அடக்கம் செய்தான் நாத்தா னியேல் – பிலிப்பும்

3. அல்பே யுவின் மகனே மரி,
யனையே யாக்கோப் தாய் தந்தையர்
ஆதிச் சபை இயேசு சகோ,
தரனே யென வழைத்தார்!
மல்போ ரிடும் யூத ரோடு,
புற சாதியார் சபையே சேர
வகையே செய்து பகையை வென்று,
வைத்தா னிந்தச் சித்தா னந்தன் – பிலிப்பும்

4. எருசா லேமின் கண்கா ணியாய்,
இருந்துநிரு பமுமே செய்து
என்றும் சபை நின்றும் வர,
இருந்தான் பெருந்துணாய்
மறுலோகமே புகவே யந்தப்,
பரிசே யர்கள் பழிவாங் கினர்
மார்க்கம் பெரிதாச்சு யிது,
தீர்க்கமான பேச்சுச் சொன்னேன் – பிலிப்பும்

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**90. இராகம்: ஏதுகுல காம்போதி. தாளம்: ஆதி**

**பரி. பர்னபாவின் திருநாள் - சூன் 11ஆம் நாள்**

**"உலகில் பாவப் பாரத்தால்" – என்ற மெட்டு**

**பல்லவி**

**பவுலின் சிநேகிதனைப் பாரும் – இன்று**
பருனபா திருநாள்தான் வாரும்.

**அனுபல்லவி**

கவலை யொழித்தே வேதங் கூறும் – செபம்
கருத்தி லிருத்திப் போதந் தாரும் – ஐயா – பவுலின்

**சரணங்கள்**

1. ஆறுத லின்மகனாம் யோசே – முன்னே
அழைத்தா ரப்போஸ்தலரி னாசை
தேறுதலான லேவி வம்சம் – இவர்
சீப்புரு தீவி லொரு அம்சம் – ஐயா – பவுலின்

அட்டவணை

2. விசுவாசத் தாலும் ஆவியாலம் – நிறை
வேதிய ரொழுக் கத்தி னாலும்
மிசனெரி ஊழிய மென்மேலும் – இவர்
மிலான் சபைக் கண்கா ணியானாலம் – ஐயா – பவுலின்

3. அந்தி யோக்கியா முத லான – பல
அன்பின் சபைகளையும் காண
எந்தைக் கிறிஸ்து பதம்பூண – இவர்
எருசலை நகரெங்கும் தோண – ஐயா – பவுலின்

4. சாலேமிப் பட்டணத்தில் சாக – பொல்லாச்
சண்டாளர் கல்லா லெறிந் தேக
காலம் ஐந்தாம் நூற்றாண்டில் தேகம் – கண்டார்
கனத்த சீனோ ராயன்முன் வேகம் – ஐயா – பவுலின்

5. பாட சாலைகளிலே தங்கும் – கல்வி
படிக்கும் மாணவர் நீரே சிங்கம்
பரிசுத்த ஆவி வரம் வாங்கும் – இந்தப்
பாரினில் உங்கள் புகழ் ஓங்கும் – ஐயா – பவுலின்

6. ஆஸ்தி எல்லாவற்றையும் விற்றார் – கிறிஸ்தின்
அப்போஸ்தலர் பாதம் படைத்தார்
நேர்த்தியான பங்கைத் தெரிந்தார் – செல்வம்
நிலையற்ற தென்றெ நிச்சயித்தார் – ஐயா – பவுலின்

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**91. இராகம்: இந்துந்தானி. தாளம்: ஆதி**

**பரிசுத்த யோவான் ஸ்நானகனின் திருநாள் - சூன் 14ஆம் நாள்**

**"குணப்படு பாவி" – என்ற மெட்டு**

**பல்லவி**

**துறவற மேவி – வேத**
தோரணையே கூறி – யோவான்.

அட்டவணை

**அனுபல்லவி**

அறம்பொருளின்ப வீடு மடைந்தவன்
ஆதரை மீதினில் மாதவஞ் செய்தவன் - துறவற

**சரணங்கள்**

1. மலடி பெற்ற மகன் - அந்த
மவுனிக் குற்ற சுதன்
தலைமை பெற்றவன் காண் - காட்டில், தனித்த சந்யாசி
பலவி தமுள்ள பரிசேயர் சதுசேயர்
பணிந்த தீட்சையும் வாங்கிடச் செய்தவன் - துறவற

2. இந்தப்பு வனந்தனில் - அவன், எரிந்து ஒளி வீசும்
விந்தைவி ளக்கொளிபோல்-வேதம், விளங்கப் போதித்துமே
அந்தப் போர்ச் சேவகர் ஆயக்கா ரரெல்லாம்
வந்து மன மாறி வாங்குந் தீட்சையென்றான் - துறவற

3. சுய வெறுப்புடையோன் - பாவ, வினை மறுப்பு டையோன்
தயவு ருக்கமுடன் - தூய, தன்மை நிறைந் திடுவோன்
பய முறுத்தியே பாவிக ளஞ்சிட
பரலோக இராச்சியம் வந்தது என்றவன் - துறவற

4. எலியா வின் னாவி-வரம், ஏற்றுப் புவி மேவி
சொலியாய் ஞானதீட்சை - யோர்தான், சுற்றிலுந் தான்
கலியாய் நின்ற கரடர் முரடரைக்
கட்டுக் கடங்காரைக் குட்டத்தி லாழ்த்தினன் - துறவற

5. மேசியா முன் தூதன் - அவர், மேதினியில் வழியை
ஆசையாய் ஆயத்தமாய் - வைத்து, அடி பணிந்த நின்றான்
ஓசையாய்ச் சத்தமாய் ஓங்கிப் பிர சங்கித்து
நீதியை யாவர்க்கும் நிறையக் காட்டினன் - துறவற

6. கச்சை யரைக்க சைத்துக்-காட்டு, ஒட்டகத் தோலுடுத்து
இச்சையன் ஏரோதை-அது, இலட்சை யென் றெச்சரித்து
மச்சீரஸ் கோட்டையில், மன்னும் சிறையினில்
மாது ஏரோதியா ளாலே மடிந்தவன் - துறவற

அட்டவணை

7. இயேசு சபையோரே – நீங்கள், என்றுமே சாட்சி சொல்லும்
மாசு மறு வுடையோர்–மனம், மாறிடப் போதித்திடும்
கூசாமல் இயேசுவின் நாமம் புகன்றவர்
ஆசார நீதியில் ஓசாரம் பெறுவர் – துறவற

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**92. இராகம்: தன்யாசி. தாளம்: ஆதி**

**பரிசுத்த பேதுருவின் திருநாள் - சூன் 29ஆம் நாள்**

**“எத்தனை திரள் என் பாவம்” – என்ற மெட்டு**

**பல்லவி**

**நித்திய சீவனின் நினைவெனக் கருளும்**
நிமலா கிறிஸ்து நாதா

**அனுபல்லவி**

சித்திய டைந்த சீமோன் பேதுரு திருநாள்
சீருடன் தொழுதிட ஆலயந் தனில் வந்தோம் – நித்திய

**சரணங்கள்**

1. அந்திரே யாவின் சகோதரன் சீமோன்
ஆண்டவர் கேபா வென்றார்
முந்திமுந் தியேபேசி, முதல்வனெ னப்பேர் பெற்றான்
மோட்சாதி தேவசுதன் சீவகி றிஸ்து என்றான் – நித்திய

2. பரலோக இராச்சியத் திறவுகோல் கொடுக்கிறேன்
பாரினில் நீ எதையும்
கட்டுதல் கட்டவிழ்த்தல் காரியம் அனைத்தையுந்
கருத்துடன் செய்வாயென் றுரைத்தனை பரனே – நித்திய

3. என்சகோ தரன் குற்றம் எழுத ரம் செய்தால்
இரங்கியான் பொறுப் பேனென்றான்
இயேசுபெருமானே நீர், எழெழுபது தரம்
இணங்கி மன் னிப்பதுன் கடமை யென் றீரே – நித்திய

4. எல்லாவற்றையும் விட்டோம் என்ன கிடைக்குமென்றான்
எம்பிரானே நீரும்
பன்னிரு சிம்மாசனப் பதவியும் ஆளுகையும்
நூறத்த னைபலனும் நுகர்ந்திடு வீரென்றீரே – நித்திய

5. தேவ நற் கருணையில் சீடரின் கால்களைச்
சிறப்புடன் கழுவு கையில்
தேவரீர் என் பதம் தீண்டவும் படுமோ?
திருச்சித்த மிருந்திடில், தேகமுழுது மென்றான் – நித்திய

6. முன்னவ னைவெறுத்து மூன்றுத ரமறுத்து
முழு மன துட னழுது
பின்னவன் குணப் பட்டுப், பெந்தேகோஸ் தாவி பெற்று
பிரசங்கம் செய்திடப் பெருஞ்சபை தோன்றிற்று – நித்திய

7. இரட்சிப்பின் அதிபதி நிச்சயம் உயிர்த் தெழ
இராயப்பன் கண்டு தொழ
பட்சமா யாடுகளைப் பாலிய குட்டிகளை
இட்டமாய் மேய்ப்பாயாக என்று மொழிந்த கோனே – நித்திய

8. அற்புதம் பேதுரு அனந் தனந்தம் செய்து
ஆவியின் வரமும் பெற்று
ஆசியா, பித்தினியா, அந்தப் பொந்து, கலாத்யா
அட்ட திசையும் சபை அமைத்தனன் துணிவுடன் – நித்திய

9. பெலவீனன் பேதுரு பெலசாலி யாகினான்
பெரும் இரத்தச் சாட்சி யானான்
மலைவுறும் ரோமையில், மடிந்தனன் என்றுமே
மாண்புறு கிளமெண்று வரைந்தனர் நிருபமும் – நித்திய

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

அட்டவணை

**93. இராகம்: காமாசு.** **தாளம்: ரூபகம்.**

**பரிசுத்த யாக்கோபு திருநாள் - சூலை 25ஆம் நாள்**

**"நீ யுனக்குச் சொந்த மல்லவே" – என்ற மெட்டு**

**பல்லவி**

**தீய பாவக் கேட்டை நீக்குமே–திருச் சபை யோரே**
தீய பாவக் கேட்டை நீக்குமே.

**அனுபல்லவி**

தீய பாவக் கேட்டை நீக்கும், ரீ–ரீ–ரீ–ரீ
செபித்துக் கர்த்தரின் வசனம் நோக்கும் – தீய

**சரணங்கள்**

1. பெரிய யாக்கோப் திருநாள் தானிது – பிர பல மீட்பர்
பொவனர்க் கேசென் றழைத்த பேரிது
அரிய கலிலே யோவான் அண்ணன் ரீ–ரீ–ரீ–ரீ
அந்தச் செபதே யுகந்த மகன்தான் – தீய

2. தயவு டன்மேசி யாவுங் கூப்பிட – ஒரு தடையு மின்றி
தந்தை யும்ப டகும் விட்டிட
பயமு டனந்த அன்னை சாலோமி ரீ–ரீ–ரீ–ரீ
பத்தி யுடனே அனுப்பி விட்டனள் – தீய

3. இரண்டு மக்களைக் கொண்டு வந்தனள் – கிறிஸ்தேசு முன்பு
தொண்ட னிட்டவள் கேட்டுக் கொண்டனள்
உம்பர் இராச்சியம் தன்னிலிருக்க ரீ–ரீ–ரீ–ரீ
ஒருவன் வலமும் ஒருவன் இடமும் – தீய

4. திருமந் திரமும் தெரிந்திலை யென்றார்–நம தருமை ரட்சகர்
தேவ சித்தமோ அறிந்திலை யென்றார்
மறுவு லகின் மேன்மை யனைத்தும் ரீ–ரீ–ரீ–ரீ
மனுடர் விருப்பப் படிந டக்குமோ – தீய

5. மூவிசேட சமய மானதில் – யாக் கோபி ருக்க
முதன்மைச் சீடர் மூவர் நடுவதில்
யவீரு வீட்டில் தாபோர் மலையில் ரீ–ரீ–ரீ–ரீ
எருச லையுடன் கெதுச மனையில் – தீய

6. துட்ட ஏரோது அகிரிப் பாவினால் – யாக்கோபு மரிக்க
துரோக யூதர் தானும் ஏவினார்
குற்றம் சாட்டிய உத்தி யோகனும் ரீ–ரீ–ரீ–ரீ
குணப்பட் டுடனே கொல்லப் பட்டனன் – தீய

7. வைராக்கிய ஆவி யுள்ளவன் – இவன் சரிதை முழுதும்
மார்க்க வீரம் தாக்கும் வாக்குள் ளோன்
தைரி யத்துடன் சாட்சி சொல்லுவீர் ரீ–ரீ–ரீ–ரீ
தகுந்த பதவி அடைந்து கொள்ளுவீர் – தீய

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**94. இராகம்: யமுனா கலியாணி. தாளம்: ரூபகம்.**

**பரிசுத்த பர்த்தொலொமேயுவின் திருநாள் - ஆகஸ்று 24ஆம் நாள்**

**“ஆசையாகினேன் கோவே” – என்ற மெட்டு**

**பல்லவி**

**ஆரையா பெருமானே – எனக்**
கறிவு தாரும் பூமானே.

**அனுபல்லவி**

தீரையா வினை வேறே யார்துணை
சின்மயா – தேவ – தன்மையா. – ஆரையா

**சரணங்கள்**

1. பர்த் தொலொ மேயு திருநாள் – வரப்
பார்த் திருந் தேன் நான் வெகு நாள்
நர்த்தன மொடு பாட – அந்த
நாத்தானியேலும் ஆட – ஆரையா

2. கானா வூரில் பிறந்தோன் – யாரும்
காணா மற் செபம் புரிந்தோன்

ஏனோ மோசே தீர்க்க–தரிசி
எழுத்தாம்? என்ன–கருத்தாம்? – ஆரையா

3. நாச ரேத்தில் நன்மை – யுண்டோ
நயந்து கொள்ளும் தன்மை
பேச வந்தீர் பிலிப்பே – அவர்
பேரும் – இயேசு – சிரிப்பே – ஆரையா

4. வந்துமே பார்த்திடு தம்பி – அப்போ
வசைசொல்லமாட்டாய் நம்பி
எந்தை இயேசு கிறிஸ்து – எனக்க
எசமான் – இரட்சா – பெருமான் – ஆரையா

5. முணக்க முடனே நாத்தான் – வந்து
முணுமு ணென்றுமே பார்த்தான்
வணக்க முடனே பணியு – முன்னே
வரைந்தார் – வாக்குப் – பறைந்தார் – ஆரையா

6. உத்தம இசரவேலன் – உயர்
அத்திம ரத்தின்கீழ் சீலன்
கர்த்தன் கிறிஸ்து உரைக்கக் – காட்சி
கண்டான் – மாட்சி – கொண்டான் – ஆரையா

7. ரபியே நீர்தேவ சுதனே – இசரேல்
ராசாதி ராசனுந் தானே
தவிதி றைவனீர் தவமே யுமகன்
நானே – பாவி – நானே – ஆரையா

8. இந்தியா மார்க்கம் வரவே – நாத்தான்
எங்கணும் சாட்சி யுறவே
அந்திய காலம் தோலை யுரித்து
அறைந்தார் – குரு – சறைந்தார் – ஆரையா

9. சிலுவை யிலிருந் திறக்க – உயிர்
திரும்ப வும்வந்து பிறக்க
அலகை மனுடன் உலக வாளால்
அறுத்தான் – சிர – சறுத்தான் – ஆரையா

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

அட்டவணை

**95. இராகம்: பரசு.** **தாளம்: ஆதி.**

**பரிசுத்த மத்தேயுவின் திருநாள் - செப்டம்பர் 21ஆம் நாள்**

**“நினையேன் மனம் நினையேன்” – என்ற மெட்டு**

**பல்லவி**

**வினையேன்? பாவ வினையேன்? – சொல்லும்**
நினை வற்ற மானிடரே

**அனுபல்லவி**

மனமே தினம் கனமே வளர்
கருமங் களின் நிறைவால் – வினையேன்

**சரணங்கள்**

1. மத்தேயுவின் திரு நாளிது, மாறும் – குணம் – மாறும்
பற்றே யிவன் பேரில் பொருள், பரம–வர–மாகும்
முத்தே மறு பேரும் லேவி, யூரும் நச ரேத்தாம்
மோன மிகு வான செல்வம், முழங்கும் இது விளங்கும் – வினை

2. ஆயத் துறை தனிலே நின்று, அனந்தம் பொருள் சேர்த்தான்
மாயப் பிர பஞ்ச மேன்மை, மனம்போ லிவ னடைந்தான்
நேயத் துடன் இயேசு எனைப் பின் செல் என் றிடவே
ஓயாப் பல தொல்லைகளை ஒழித்தான் மனங் களித்தான்
–வினை

3. விருந், தோம்பினன் கிறிஸ்தே மிக, வியக்கப் பலர் களிக்க
மருந் தோம்பிடும் அரும் பாவிகள், ஆயக் காரரும் சுகிக்க
கரும் பேயெனும் பரிசேயர்கள், துரும்பே யென மதிக்க
பெரும் போதகம் புரிய இயேசு, பெருமா னருள் சொரிய–வினை

4. எபிரே யரின் பாடை தனில் எழுதிச் சுவி சேடம்
எங்கும் ஒளி வீசச் செய்த தியல்பே யிவன் போதம்
அபிரா முடை குலமேவிய, அழகாம் எரு சலையின்
அருகும் எத்தி யோப்பா தேசம், அனைத்தும் சாட்சி யானான்
–வினை

5. எத்தி யோப்பி யாவில் இவன் இரத்தச் சாட்சி யாக
மத்தி யான வேளைதனில் மரித்தே இவன் சாக
சலெர்னோ வெனும் இடந் தேகமும், தானே கொண்டுபோக
ராபட் குஸ்கார்ட் ஆலயத்தில், நாட்டம் பலர் காட்ட – வினை

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**96. இராகம்: துசாவந்தி. தாளம்: ஆதி.**

**பரிசுத்த மிகாவேல் முதலான சகல தேவ தூதர்களின் திருநாள்**
**- செப்டம்பர் 29ஆம் நாள்**

**“இம்மட்டும் சீவன் தந்த” – என்ற மெட்டு**

**பல்லவி**

**திக் கெட்டும் கீதம் தங்க, தேவ மகிமை பொங்க**
செபித்துத் துதித்திடுவோ மாக. – திக்

**அனுபல்லவி**

இக்கட்ட னைத்துந்தீரும், இயேசு சபையே வாரும்
இன்ப தேவாலயம் அன்புட னேகிடும்

**சரணங்கள்**

1. மைக்கேல் காபிரி யேலும், வான் தேவ தூதர்களும்
வந்து வணங்குந் திரு நாள் தான்
தக்க மறை புகலும், இரட்சிப்பின் சுந்தரம்
தங்கு பவர்களின் நிமித்தம்
பக்கவூ ழியம் செய்யும் பணி விடை ஆவிகள் தாம்
பரம பிதாவின் முன் கரங்கள் குவித்துமே
பரலோக சுரரோடு பாடி மகிழ்ந் திடும் – திக்

2. மனமது திரும்புற, ஒரு பாவி யினிமித்தம்
மங்களம் பாடிடுவர் வானில்
தினமும் ஆராதனையில் தேவ தூதர் வருவார்
ஸ்திரீகள் முக்காடிட்டுக் கொள்வீர்
கனமா யோவான் பிறப்பும், கர்த்தன் பிறப்பும் சொல்லக்
காபிரி யேல்வர மாபிரி யங்கொள,
கண்டு சகரியா பண்டு பயந்தனன் – திக்

3. பராபர வூழியமும் பாரில் மனுட ரையும்
பரா மரிக்க வுதவி செய்வார்
நிரா மய ரூபமோடு நின்று பிசாசை வென்று
நிஷ் டாங்க யோகமும் செய்வார்
மரித்த ஆத்துமாக்களை, எடுத்து லோகமே விட்டு
மா பர தீசிணி லேகிட ஆபிர
காமுடை மடியதி லேவிட அறிகுவர் – திக்

4. உயிர்த் தெழுந் தோர்க ளெல்லாம் ஒன்றாகி டாத படி
ஒழுங்குட னேபிரிப்பா ரன்று
பரிசுத்த வான்கள் வேறு பாவிகள் தானும் வேறாய்ப்
பகுத்து நிறுத்திக் கிறிஸ்து முன்பு
ஞாய விதி நடக்கும் போது மாதூ தர்களும்
நடுங்குவர் மீட்பர்க்கும் மீட்கப்பட் டோருக்கும்
நாதனே இயேசுவின் நாமமே செயமெனத் – திக்

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**97. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி.**

**பரிசுத்த லூக்காவின் திருநாள் - அக்டோபர் 18ஆம் நாள்**

**“தேவ பிதா எந்தன் மேய்ப்ப னல்லோ” – என்ற மெட்டு**

**பல்லவி**

**வேத சிகாமணி லூக்கா இதோ**
விளம்பும் வாக்கியம் கேட்டிடுவீர்.

**அனுபல்லவி**

ஆதரை யிலிது அவன் திரு நாள்
அன்புடன் செபம் செய்திடு வீர் – வேத

**சரணங்கள்**

1. ஆத்தும வைத்தியன் பவுல் தோழன்
அந்தி யோகியா செனன மென் பார்
நேர்த்தியாய் மூன்றாம் சுவி சேடம்
நிகழ்ந்த நடபடி எழுதினவன் – வேத

[அட்டவணை]

2. பரிசுத்த ஆவியின் புத்தகமே
பல அப்போஸ்தலர் ஊழியமே
கரிசனை யோடதை எழுதி விட்டான்
கண்டதும் கேட்டது மாம் வசனம்– வேத

3. காணா திருந்தும் இயேசுவை யே
கருத்தாய் நம்பி விசு வாசித்தான்
மேனான் தேயோப் பிலுவுக்கு மே
விவித நூலிரண்டும் செய்து வைத்தான் – வேத

4. புறசா தியிலிவன் புண்ணிய வான்
புகழ்ச்சி பெற்றோன் சபை தோறும்
முரசா யிருந்த திரு வசனம்
முழக்கிச் சித்திரம் வரைந்திடுவான் – வேத

5. ஆரோக் கியந்தரும் ஔடத மாம்
ஆத்தும சக்திக் கரு மருந்தாம்
லூக்கா எழுதிய சுவி சேடம்
நுட்ப முடனதைப் படித்திடுவீர் – வேத

6. மக்கே தோனியோ மா அகாயா
மல்குதல் மாத்தியாமா இற்றாலி
ஒக்கவே பிராஞ்சு இன்ஸுவிலும்
ஓதினான் பொயிஷியா தேசமெங்கும் – வேத

7. எண்பதாம் வயதில் பிரசங்கம்
எங்கும் செய்து வரும் போது
வம்பர்கள் கூடிச் சிலுவை செய்ய
வரைந்த ஒலிவ மரம் பார்த்தான் – வேத

8. பாட்ரே வூரில் போதிக்க வும்
பாதகர் கூடி ஒலிவ மரம்
தூக்கே யென்றார் லூக்காவும்
தொங்கி மரித்துச் சாட்சி யானார் – வேத

9. அன்பன் சடலம் கான்ஸ் டாண்டின்
நோபிள் பட்டணம் அடக்கம் செய்தார்
பின்பும் இற்றாலி தேசம் கொண்டு
பிரிய முடனதைப் பேணினரே – வேத

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**98. இராகம்: மலையாமி.** **தாளம்: ரூபகம்.**

**பரிசுத்த சீமோன் யூதா திருநாள் - அக்டோபர் 28ஆம் நாள்**

**“தேவா திருக்கடைக்கண் பார் ஐயா” – என்ற மெட்டு**

**பல்லவி**

**நாதா, சிறுவரின் பண் கேள் ஐயா!**
பவம் தீர் ஐயா, பவம் தீர் ஐயா

**அனுபல்லவி**

வேதா கிறிஸ்து இயேசு போதா பரிந்து பேசு – நாதா

**சரணங்கள்**

1. சீமோன் யூதா திருநாள், சேவித்தோம் இதோ பெருநாள்
ஆமென் அல்லே லூயா வென்போமே ஐயா – சுவாமி – நாதா

2. பக்தி வயி ராக்கியத்தால், பாருளோர் செலோத்தே யென்பார்
முத்தி வழியே தெரிந்தோன் தான் ஐயா – சுவாமி – நாதா

3. கானானிய னான சீமோன், கர்த்தனின் சகோதரனே
கள்ளர் நச ரேத்தூ ரார்தாம் ஏசினார் – சுவாமி – நாதா

4. சீப்புரு–சிரேனே–மோரி, ஸ்பானியா பிரிட்டனிலும்
கோப்புடன் சுவிசேடமே கூறினான் – சுவாமி – நாதா

5. சிலுவையில் சீ மோனும் சாக, சீற்ற முள்ள யூதேயாவில்
சலுகை யில்லாத் தொமிஷன் காலமே – சுவாமி – நாதா

6. கன்னிமரி சகோதரி பெற்ற மகனாம் யூதாவும்
பன்னி ரப்போஸ் தல ரோடு சேர்ந்தனன் – சுவாமி – நாதா

அட்டவணை

7. வேறு பேர் ததே லெபேயு, விவேகம் யூகம் வைராக்கியம்
மாறு தலுள் ளவு லோகம் தானையா – சுவாமி – நாதா

8. ஆண்டவரே எங்களையும், மீண்ட உம்மைக் காட்டியதேன்?
வேண்டுகிறேன் சொல்லும் என்றான் யூதாவும் – சுவாமி – நாதா

9. என்னி லன்போ டென் வசனம், கைக்கொண்டால் நானும் பிதாவும்
உன்னில் வாசம் பண்ணு வோமென் றோதினீர் – சுவாமி – நாதா

10. மூர்க்க மள்ள பார சீகர், மார்க்கம் யூதா போதிக்கவும்
மூட பக்தி ஞானிகளும் கொன்றனர் – சுவாமி – நாதா

11. பரிசுத்த மார்க்கப் பட்டோர், பக்தியுடன் காக்கப் பட்டோர்
பார்க்கும்படி யோர் நிருபம் செய்தனன் – சுவாமி – நாதா

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**99. இராகம்: பைரவி. தாளம்: ஆதி.**

**சகல பரிசுத்தவான்களின் திருநாள் - நவம்பர் முதல் நாள்**

**"ஆ! இன்ப காலமல்லோ" – என்ற மெட்டு**

**பல்லவி**

**மா துன்ப மே அடைந்தோர் – மறு லோக**
வாழ் வின்ப மே அடைந்தார்

**அனுபல்லவி**

பூவின்ப மேன்மையைப் போக்கும்து ரிச்சையை
பொன்னுலக வாஞ்சை தன்னில் மனம் வையும் – மா துன்ப

**சரணங்கள்**

1. பரிசுத்த வான்கள் அதோ – பரலோக
வாசிகள் நாங்க ளென்றே
தரிசித்து இயேசுவையே – வணங்குகிறார்
சாஷ்டாங்கம் தொண்டனிட்டு
கரிசனை யோடே நாம் கடவுளைத் துதிப்போமே
வரிசையுடன் நின்று வாழ்த்துங் கவிபாடி – மா துன்ப

அட்டவணை

2. முத்திரை போடப் பட்டோர் – நெற்றிதனில்
முகருந் தரிக்கப் பட்டோர்
நித்திய காலமதாய் – பரமனின்
நீடூழி இராச்சியத்தில்
பக்தியு டன்வளர் பாங்குசிங் காசனம்
சுற்றிலும் நின்றுபி தாவைத் தொழுகிறார் – மா துன்ப

3. சகலப ரிசுத்தரும் – திருவுள்ள
சாட்சிய ளித்தவரும்
பகலும் இரவு மில்லா – மோட்சமதில்
பாடுறார் சங்கங் கூடி
எண்ணுக்க டங்கிடா ஏகப்பெ ருங் கூட்டம்
எல்லாம் தரித்தது வெள்ளையங் கிமட்டும் – மா துன்ப

4. மரித்தோர் உயிர்த்தோரும் – மானிலத்தில்
மாளா திருப்போம்
சிறுத்தோர் பெருத்தோரும் – சீமைகளில்
செந்தமிழ் கற்றோரும்
நாலா சாதி பாடை நாற்றிசை மாந்தரும்
நாதன் திருச்சபை ஐக்கிய மாகிறார் – மா துன்ப

5. விசுவாசம், சாந்தம், அன்பு – வைராக்கியம்
வேண்டும் பொறுமை, உண்மை
சகோதர சிநேகம், கற்பு – கபடில்லாத
தாழ்மை, ஆவி யெளிமை
இருதய சுத்தமோ டெங்கும் சுவிசேடம்
எடுத்துச் சத்ய சாட்சி கொடுத்து உயிர் விட்டு – மா துன்ப

6. மேன்மை உயிர்த்தெழுதல் – அடைந்திட
மிகவும் வாதிக்கப்பபட் டார்
பூமி வெடிப்பில் னுள்ளும் – மலைக் குகைப்
பொந்து புடைகட் குள்ளும்

நிந்தைய டிபட்டுக் காவல் கல் லெறிபட்டு
மந்தை மந்தையாக வாளால றுப்புண்டு – மா துன்ப

7. வெள்ளாட்டுத் தோல்களையும் – வெருண்ட
செம்மறித் தோல்களையும்
கள்ளந டிகரைப் போல் – போர்த்துக்
கடி பட்டார் நாங்களாலே
எண்ணெய்க் கொப்பரை காய்ச்சி, இரு பக்கம் பொரிபட்டு
வண்ணமே னிகளை வழித்திடக் கொடுத்திட்டு – மா துன்ப

8. தெரிந்து கொள்ளப் பட்டோரே – கிருபையாய்த்
தேவாட்டுக் குட்டி இரத்தம்
மருந் தென்னும் நற்கருணை – சமயமாம்
வாங்குவீர் பிர சாதம்
கிறிஸ்துவின் ஞான சரீரத்தின் ஐக்கியம்
கிடைத்திட மேன் மேலும், கெஞ்சுங்கள், கெஞ்சுங்கள்
– மா துன்ப

9. நானா வித வாசம் – பொருந்திய
நற்கந்த புட் பங்களை
கானாவூ ரிலொருவன் – சேர்த்துக் கட்டி
காட்டும் பூச் செண்டது போல்
மேனாள் திருச் சபை, மேம்படு பக்தரை
ஞானமு டன் கூட்டி, நம் கையில் தந்தனர் – மா துன்ப

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**100. இராகம்: காம்போதி. தாளம்: ஆதி.**

**சகலஸ்தாவான் திருநாள் - திசம்பர் 26ஆம் நாள்**

**“பாடித்துதி மனமே” – என்ற மெட்டு**

**பல்லவி**

**காணிப் பூமி பரனே – கவலைக்குள்**
ளாணிப் பூமி திறனே

அட்டவணை

### அனுபல்லவி

மாணிக்க மான இஸ் தேவான் திரு நாளில்
வந்து பணிந்தோம் மனம்பத றி இதோ – காணிப்

### சரணங்கள்

1. தேவான் கிரேக்கப்பே ரானாலும் யூதனே
செப்பிடும் ஏழு உதவிக்கா ரர்களில்
ஆர்க்கும் பெரியவ னான விசுவாசி
அன்பின் பரிசுத்த ஆவி உபதேசி – காணிப்

2. உத்தம சத்திய வேதோப தேசத்தை
ஓதியு ணர்ந்து ஒழுகி நடந்தவன்
தர்க்கம் செய்த லிபர்த்தீனர், சிரேனர்கள்
சகலரின் ஞானமும் தவிடு பொடி யாச்சு – காணிப்

3. ஆபிர காமுடன் ஈசாக்கு, யாக்கோபு
அன்பன் யோசேப்பு, மோசே, ஆரோன், யோசுவா
தாவீது, சாலோமோன் ஆலயம் வரையும்
சத்திய ஆவிக்குள் குத்திப் பிர சங்கித்தான் – காணிப்

4. திவ்யதெ சோமய தேவம கிமையில்
திருச்சுதன் இயேசு வலப்பாக மிருக்கக்
கண்டனன் வானத்தை அண்ணாந்து பார்த்துமே
காட்சி சொல்ல யூதர் கூக்குர லிட்டார்கள் – காணிப்

5. காதுக ளையடைத் துக்கொண்ட பாய்ந்துமே
கல்லாலெ றிந்தார்கள் பொல்லாத பாதகர்
தீது செய்யுஞ் சவுல் பாதத்தி னருகே
திட்டமாய் சாட்சிகள் வைத்தார்கள் வஸ்திரம் – காணிப்

6. துன்பம டைந்தோன் தொழுதேசுவே என்தன்
ஆவியை யேற்றுக் கொள்ளும் ஆண்டவா இதோ
இந்தப் பவத்தை இவர்மேல் சுமத்தாமல்
இருமென்று நித்திரை யாயினன் தேவா னும் – காணிப்

7. யூயோசி யாவென்ற சக்கர வர்த்தினி
யூகித்து தேவான் மரித்த யிடந் தனில்
ஆலயங் கட்டினள் அந்த எருசலேம்
ஆதிக் கிறிஸ்தவர் மாண்டார் ஈராயிரம் – காணிப்

8. ஆண்ட முப்பத் தெட்டில் மாண்ட தேவான் உடல்
அழியாம லிருந்தது நானூற்றுப் பதினைந்தில்
மீண்டுந் தேகமதைக் கான்ஸ்டாண்டின் நோபிளும்
மிஞ்சிய ரோமை நகரிலும் பேணினா – காணிப்

9. சஞ்சல மோடு தயங்கும் கிறிஸ்தவர்
சாது தேவானின் சரிதை நினைத்திடும்
வஞ்சக லோக மயக்கம் வரும்போது
வானத்தை நோக்கிப் பரவச மாகிடும் – காணிப்

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**101. இராகம்: துசாவந்தி. தாளம்: ஆதி.**

**பரிசுத்த யோவான் சுவி திருநாள் - திசம்பர் 27ஆம் நாள்**

**“புத்தியாய் நடந்து வாருங்கள்” – என்ற மெட்டு**

**பல்லவி**

**திவ்விய வாசகன் பாருங்கள் – யோவான் மூப்பன்**
திருநாள் தொழுதிட வாருங்கள்.

**அனுபல்லவி**

ஒவ்விய மனமும் வாக்கும் ஒழுக்க வணக்க மாக்கும்
செவ்விய செப தேயுவின் செல்லப்பிள்ளை தானாக்கும் –திவ்

**சரணங்கள்**

1. ஏகோவா கிருபை யுள்ளவர் – ஆக இருந்தார்
இந்தப் பேர ருத்த முள்ளவன்
வாகான பெத் சா யிதா வின் – வலையுடன்
வள்ளமுந் தள்ளியே வந்தவன்
தாகமுடன் இயேசு குரு நாதனுக்குப் பணிவிடை
வேக முடன் செய்த தாயும் சாலோமி என்னப்படுவாள் –திவ்விய

[அட்டவணை]

2. இயேசு நச ரேயன் கூப்பிடத் – தடை யின்றி
எழுந்த வரைப் பின் சென்றிட
நேசமுடன் அன்பு கூர்ந்திட – நெடுகிலும்
நிஷ் களங்க சிநேக மூடிட
பாசமில்லாச் சமாரியர் பக்தி செய்யா திருந்ததால்
ஆசையோடே வான் நெருப்பால் அழிக்க வரங் கேட்டவன்
– திவ்விய

3. இடிமுழக்க மைந்த னென்றுமே – இதினாலே
இட்ட பேரும் நின்ற தென்றுமே
படியிலொரு புதிய சீடன் – அற்புதங்கள்
பாங்குடனே செய்தவுடன்
நொடியி லேசு நாமம் சொல்ல நோகப் பேசித் தடுத்திட்டான்
முடிவிலே நம் இரட்சகரும் மூப்பனுக்குப் புத்தி சொன்னார்
– திவ்விய

4. சத்திய யோவானும் பேதுரும் – சற் குரு வுடன்
சகல நாளுமே சதுரும்
முக்கிய சமய மனைத்தும் – ஒன்றாகவே
முதன் மையுடனே நினைத்தோம்
புத்தியாய் ஆயத்தம் பஸ்கா, போதக அன்னாவின் மனை,
எத்தியே கல்லறை பார்க்க, இருவரும் ஓடினார்கள் – திவ்விய

5. ஆண்டவன் சிலுவை யடியில் – யோவான் நிற்க
அன்னை மரி தாயு மாகினள்
மாண் டெழுந்த தேவ சுதனார் – மறுபடியும்
வந்து வந்து காட்சி யளித்தார்
நீண்ட காலம் தானிருந்து நேர்த்தியாய்ச் சபைகள் நாட்டிப்
பூண்டிடும் கிறிஸ்து அன்பில் பூரிப்பாய்ப் பனுவல் செய்தான்
– திவ்விய

6. நாலாம் சுவி சேஷ முழுதும் – சோதியின் கதிர்
ஞானப் பிர காச வெளிச்சம்
மேலான நிருப மனைத்தும் – சவ வார்த்தை
வேதாந்த சித்தாந்த போதகம்
பூலோகம் வானமும் போக, புதிய சிருட்டி யாக
காலம் வரு முன்னே தீர்க்கன் காட்டினன் வெளிப்படுத்தல்
– திவ்விய

7. தேவனால் பிறந்த வரைத் தான் – எவன் அறிவான்?
தேவனால் பிறந்தோன் அறிவான்
பாவ பாசமுள்ள மனுடன் – யோவான் முனியைப்
பத்மு தீவில் சிறை யாக்கினான்
ஆசியாவி லுற்ற சபை ஏழையும் நிலைப்படுத்தி
அந்த எருசலேம் நகர் அழிவையும் பார்த்துக் கொண்டான்
– திவ்விய

8. பூரண வயது நூறில் – சாயுச்சியமாம்
புண்ணிய நித்திரை யூரில்
ஆரணக் கிழவன் மரிக்க – அனந்தம் சபை
அன்புடன் அதை விசாரிக்க
மாரண வேதம் போதிக்க மக்களும் மனங் கொதிக்க
மந்திரம் நிறைந்த மனப் பக்தியுடன் முத்தி சேர்ந்தான்
– திவ்விய

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**102. இராகம்: எதுகுல காம்போதி.** **தாளம்: ஆதி.**

**குற்றமில்லாப் பாலகருடைய திருநாள் - திசம்பர் 28ஆம் நாள்**

**“கிஞ்சிதமும் நெஞ்சே அஞ்சிடாதே” – என்ற மெட்டு**

**பல்லவி**

**இங்கித னுஞ் சொன்னேன், அங்கிராதே தம்பி**
இயேசுவைக் கும்பிடு நீ – கிறிஸ்து – இயேசுவைக் கும்பிடு நீ.

**அநுபல்லவி**

சங்கீத முடனே சாற்றிக் கவி பாடி
சற்குரு நாதனைச் சரணஞ் செய்திடப்
பங்கு பெறுவர்கள் பாலியர் வாலிபர்
பாரிலுள்ள மூப்பர் வந்துமே கூட்டமாய் – இங்கித

**சரணங்கள்**

1. குற்றமில் லாச்சிறு பாலகர் திருநாள்
கூடிடும் தம்பியரே – இயேசு
கொற்றவ னுங்களைப் பற்றுத லாகவே
கொண்டு வரவே சொன்னார்

உற்ற சீடர்களும் பெற்ற தாய்மார்களை
ஓடுங்கள் நில்லாதே யென்று விரட்டவும்
தட்டி அவர்களைக் கிட்ட வரச் செய்த
தாவீதின் மைந்தனுக் கோசன்னா பாடுங்கள் – இங்கித

2. சாத்திரிகள் வந்து யூதருக்கு இராசா
எங்கே செனித்தார் என்றார் – ஏரோதே
சங்கட முடன் ஆசாரியர் பாரகர்
சகல கூட்டத்தையும்

கூடி வரச் செய்து கிறிஸ்து வானவர்
கூசாம லெங்கேபி றப்பாரெ னச் சொல்லும்
நாடிவி சாரிக்கப் பெத்தலே மூரிலே
நாதன்வ ருவாரென் றோதிம றைசொன்னார் – இங்கித

3. வஞ்சக ஏரோது நெஞ்சில் கபடமாய்
வணங்க நான் வரு வேன் – என்று
பஞ்சமா பாதகன் சாத்திரி மார்களை
வந்துமே போகச் சொன்னான்

கஞ்சம லர்முகம் போலேக திர்விடும்
கண்மணி பாலனைக் கண்டுவ ணங்கினார்
அஞ்சாமல் வேறோர்வ ழிநடந்தே அவர்
ஆளும்தே சம்நோக்கிப் போயினர் வேகமாய் – இங்கித

4. பெத்தலே மூரிலும் சுற்றுப்பு றத்திலும்
பிள்ளைகள் அத்தனையும் – பிடித்தான்
கர்த்தன்கி றிஸ்துவும் தப்பினர் தூதரின்
காவல் வலஞ் சூழ

மொத்தமாய் இரண்டுவ யதுக்கு உட்பட்ட
மோனமி கும்பால ரெல்லாம் கொலை செய்தான்
பத்தமு டன்பெற்றோர் கத்திய ழுதிடப்
பாழான ஏரோது பார்த்து மகிழ்ந்தனன் – இங்கித

அட்டவணை

5. பேருக்கு மாத்திரம் இரத்தச் சாட் சிகளாய்ப்
பிள்ளைகள் மரிக்க – பின்னும்
பெத்தலை நாதரின் சித்தத்தி னாலே
பிறவி யியல் பானார்

ஊருக்கும் கீர்த்திக்கும் ஒன்றும் செய்யவில்லை
உத்தம சத்தியத் தோடே உயிர் விட்டார்
பாருக்குள் ளேயிது போதனை யாச்சுது
பாருங்கள் பாடுங்கள் பாலகரே நீரும் – இங்கித

6. பண்டு திருச்சபைப் பாலியர் நாளிதில்
பட்ச மாய் வாசித்திடும் – வேதம்
கண்டு எடுத்துமே நோக்கிடு மதினில்
காட்டும் பொருள் கேளும்

விண்டுரைக் கில் ஆட்டுக் குட்டியா னவரின்
விந்தைப் பிதாநாமம் நெற்றிக ளில்பட்ட
இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரும்
இரட்சாபெ ருமானைப் போற்றிவ ணங்குகிறார்–இங்கித

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**103. இராகம்: இந்துஸ்தானி. தாளம்: ஆதி.**

**புறசாதியாருக்குக் கிறிஸ்து வெளிப்பட்ட நாளாகிய பிரசன்னத் திருநாள்**

**– சனவரி 6 ஆம் நாள்**

**“இயேசு கிறிஸ்து நாதர் எல்லாருக்கும் இரட்சகர்” – என்ற மெட்டு**

**பல்லவி**

**தேவாதி தேவ சுதன்**
சிறு பால னாக வந்தார்.

**சரணங்கள்**

1. ஏவாளின் பாவத் தாலே, இருள் நிறைந்த வுலகம்
சீவாதி பதி இயேசு, செக சோதி யாக வந்தார்.

2. திவ்விய தேசோமய, தேவப்பி ரகா சத்தால்
திறந்தது வான லோகம் தெரிந்தது சோதி யுமே

3. எழும்பிப் பிர காசி; இதோ உன் ஒளி பாரு
விரும்பியே கர்த்த ருன்மேல், வெளிச்சம் உதிக்கச் செய்தார்

4. புறசாதி யாருக் கையன், பொன் னம்ப லக்காட் சியாய்
பிர சன்னத் திரு நாளாய், பெரிய இரட் சிப்பாய் வந்தார்

5. கிழக்கத்தி சாத்தி ரிகள், கிறிஸ்து பிறந்த போது
வழக்க மில்லாத வெள்ளி, வானில் உதிக்கக் கண்டார்.

6. கண்டவ ரெழுந் துமே, கானான் தேசமே சென்று
கர்த்தாதி கர்த்தனுக்குக் காணிக்கை தான் படைத்தார்.

7. படைத்தார்கள் பொன்னையும், பச்சைத் தூப வர்க்கமும்
பாங்குடன் வெள்ளைப் போளம், பாளம் பாளமாய் வைத்தார்.

8. வைத்தார் சரீரமே வாழை வெட்டிச் சாய்த் தாற்போல்
சாஷ்டாங்க தெண்டனிட்டு, சாத்திரிகள் கும்பிட்டார்.

9. சோதிட சாத்திரிகள், தொழுது பணியுங் கோனே
பாவிக ளெங்க ளுள்ளம் பரிசுத்த மாகச் செய்யும்.

***– S. உவால்டர் கவிராயர், தென்மலை.***

**பாலியர் சங்கம்**

**104. இராகம்**:

**பல்லவி**

**பாலர் ஞாயிறிது, பாசமாய் வாரும்**
பாடி இயேசு நாமம் பணிந்து போற்றும்

**அனுபல்லவி**

தாலந்தை புதைத்திடாமல் தாமதமே பண்ணிடாமல்
ஞாலமீ திறங்கி வந்த சுவாமி இயேசு அன்பாய் எண்ணிப்–பாலர்

அட்டவணை

**சரணங்கள்**

1. பாலர் சங்கத்தாலே மாட்சிமை பெற்றோம்
பாலர் நேசர் பதம் பணியக் கற்றோம்
பாரில் ஜோதி வீசுகின்ற பரிசுத்த வேதம் கற்றோம்
ஊரில் எங்கும் வேத வாசிப் போதும் பாலியர் நேசன் கண்டோம்
– பாலர்

2. தேடி வந்தலையும் தேசிகருண்டு
பாடி ஆர்ப்பரிக்க பாலர் பாட்டுண்டு
கூடி வந்து ஆனந்திக்க கூட்டப் பண்டிகையு முண்டு
நாடி மீட்பர் பாதம் பாலர் தேட எல்லா ஏது முண்டு. – பாலர்

3. இன்று மட்டும் நம்மை ஏந்தி வந்தாரே
இன்னும் நித்யமும் பாது காப்பாரே
அன்பின் சங்கம் இதைக் கொண்டு ஆத்ம நேசர் செய்துவரும்
எண்ணி முடியா நன்மையை ஏகமாக எண்ணிக் கொண்டு
–பாலர்

4. பெற்ற தாய்மாரே நீர் உற்றுக் கேளீரோ
சற்று எங்கள் சங்கம் நோக்கிப் பாரீரோ
உங்கள் மேலுள்ள பொறுப்பைத் தங்கள் மேலே தாங்கிவரும்
எங்கள் அன்பின் சங்கம் என்றும் ஏகன் அன்பால்
செழித்தோங்க – பாலர்

5. குட்டி பேணிடாத கோனார் தானுண்டோ
நட்டி வருமென்று நன்குணராரோ
பட்சமுள்ள மேய்ப்பர்களே இட்டராம் உறுப்பினரே
இரட்சகரின் கட்டளையை செய்யும் நீர் மதித்து –பாலர்

6. வேண்டும் நன்மை செய்யும் மேன்மை சங்கத்தை
தூண்டும் உங்கள் ஜெப தூபம் அதினால்
மீண்டும் மிக்க ஆசையுடன் மின்னும் வெள்ளிபொன் எடுத்து
ஆண்டவரின் பாதம் வந்து அன்பதாய்ப் படைப்பீராக – பாலர்

அட்டவணை

### சுவிசேடப் பண்டிகை

**105. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**அன்பரே கூடுங்கள் ஆனந்தம் பாடுங்கள்**
எம்பரன் இயேசுவை என்றென்றும் நாடுங்கள் - அன்பரே

1. நல்லநாள் இதிலே நாதனைப் பணியுங்கள்
செல்வ பாக்கி யந்தரும் சீமானைத் தேடுங்கள் - அன்பரே

2. சுவிசேடப் பண்டிகைச் சோபன தினமதில்
கவி பாடிப் போற்றியே கர்த்தனைக் கொண்டாடுங்கள் - அன்ப

3. வல்ல தேவன் நம்மோடு வந்திட மன் றாடுங்கள்
தொல்லை யணு காமலே சுத்தனருள் செய்குவார் - அன்பரே

4. கர்த்தரின் கட்டளை கைக்கொண்டு திட்டமாய்
உத்தமரின் திவ்விய இரட்சிப்பைக் கூறுவோம் - அன்பரே

5. பக்தியாய் செபித்துப் பாடியே பூரிப்போம்
நித்தனார் நம்மையே நீடூழி வாழ்விப்பார் - அன்பரே

6. ஆத்தும ஆதாயம் அன்புடனே செய்குவோம்
பாத்திர ராக்கியே பரன்ஆசீர் புரிவார் - அன்பரே

# IV. *கிறிஸ்துவின் வாழ்க்கை*

## *பிறப்பு*

**106. இராகம்: இந்துஸ்தானி.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**ஆ! அம்பர உம்பர மும்புக ழுந்திரு**
ஆதிபன் பிறந்தார்.

**அனுபல்லவி**

ஆதிபன் பிறந்தார் – அம – லாதிபன் பிறந்தார் –ஆ!

**சரணங்கள்**

1. அன்பான பரனே! – அருள் – மேவுங் காரணனே! – நவ
அச்சய சச்சிதா ரட்சகனாகிய
உச்சித வானே! – ஆ!

2. ஆதம் பவமற, – நீதம் – நிறைவேற, – அன்று
அல்லி ராவினில் வெல்லை அடியினில்
புல்லணையிற் பிறந்தார் – ஆ!

3. ஞானர்கள் தேட, – நல்ல – வானவர் பாட, –மிக
நன்னய, உன்னத பன்னரும் மேசையா
இந்நிலம் பிறந்தார் – ஆ!

4. கோனவர் நாட – தானவர் – கொண்டாட, – என்றும்
கோத்திரர் தோத்திரஞ் சாற்றிடவே யூதக்
கோத்திரன் பிறந்தார்! – ஆ!

5. விண்உடு தோண, – நல்ல – மன்னவர் பேண, – ஏரோது
மைந்தனின் சிந்தை யழுந்திக் கலங்கிட
விந்தையாய்ப் பிறந்தார். – ஆ!

***–ஜே. யாக்கோபு, கருவூர்.***

**107. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி**

**எந்தை எந்தை முந்துந் திருமகன்**
நிந்தை நிந்தை உந்தும் புவிதனில்,
விந்தை! விந்தை! மனுவுருவாய்
வந்தனர்; சந்தோடமே!

ஆ! சந்தோஷம்! துதி சொல்லுவோம்;
ஆ! சந்தோஷம்! குதி கொள்ளுவோம்;
ஆ! சந்தோஷம்! கன மகிமை
அவர் என்றும் பெறுகுவரே

2. வானோ ரானோர், ஞானிகள், இடையர்கள்
கான தான மான பல செயல்
வான மீன நடையொடுமே
மோனம் மிகுதனமே.

தங்கள் சிறுபுல் லணைதனிலே
எங்கண் மணிஅனை அருகினிலே
இங்கிங் கெனவழு கிறகுரலோ!
இது பரன் உறு திறலோ?

3. துங்கம் துங்கம் துங்கம் நிறை வலு
சிங்கம் சிங்கமு கங்கண் டலகைப
துங்கும் சிங்கும் பங்கமுறும்
மங்கும் மடிவுறுமே.

மாபல சாலிகள் பாலரொடும்
மாகவி பாடுமின் ஆடவரும்
பூவையர் ஆடுவிர் ஆவலொடும்
புவிபுரந் திடுவோர் வந்தார்.

***–மறைத்திரு. ந. தைரியம், வத்தலக்குண்டு.***

**108. இராகம்: சகானா. தாளம்: ஆதி**

**பல்லவி**

**சுதன் பிறந்தார், சுதன் பிறந்தார்,**
துதிமிகு தேவ சுதன் பிறந்தார்.

**சரணங்கள்**

1. சருவ தயாப சகாய பிரதாப
கிருபைப் பிதாவின் தற்சுபாவ – தேவா – துதி

2. பரமாபி சேக பட்ச சிநேக
பெருமான் மகத்துவ திரியேக – தேவா – துதி

3. மனுடரை மீட்க மறுபிறப் பாக்க
கனிவினை யாவையும் தீர்க்க – தேவா – துதி

4. இந்நிலத்தை நாடி முன்னணையைத் தேடி
கன்னிமா திரியிடம் நீடி – தேவா – துதி

5. பெத்தலேகம் ஊரில் மெய்த்தவிதின் வேரில்
பத்தர்களுக் காக இப்பாரில் – தேவா – துதி

***–வேதநாயகம் சாத்திரியார்.***

**109. இராகம்: ஆனந்த பைரவி. தாளம்: ஆதி**

**பல்லவி**

**தேவ சேயோ, தேவ சேயோ, சீவ வான**
மன்னா, மா திவ்விய கிருபா சன்னா
பாவிகளின் பிர சன்னா,
தேவ சேயோ, தேவ சேயோ, ஆண்டருள்
செயும்; ஓசன்னோ!

**சரணங்கள்**

1. ஆவியாய் அனாதியாய் அமர்ந்த தேவ சேயோ,
மூவுல கனைத்தையும் முன்தந்த தேவ சேயோ, – தேவ

2. சுந்தர மிகும்பரமா னந்த தேவ சேயோ,
நந்தர் மகிழ்ந் தடிபணிந்த தேவ சேயோ, – தேவ

3. செங்கோல் தவிதிறைஞ்சுந் துங்க தேவ சேயோ,
மங்காக் கிருபை சிறந்த சங்கைத் தேவ சேயோ, – தேவ

4. மாட்டுக் கொட்டிலில் பிறந்த வல்ல தேவ சேயோ,
மீட்டுக் கொண்டெமைப் புரந்த மேன்மைத் தேவ சேயோ, – தேவ

***–வேதநாயகம் சாத்திரியார்.***

அட்டவணை

**110. இராகம்: ஆனந்த பைரவி.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**பரம சேனை கொண்டாடினார்;**
பரன் இரக்கத்தைப் பாடினார்

**சரணங்கள்**

1. பரத்திலே இருந்து பதி பெத்தலேம் வந்து,
பரன்நர ரூ பணிந்து பணிவானதிற் சிறந்து, – பரம

2. இரவின் இருளை மாற்றி இடையர் மனதைத் தேற்றி
கிருபைப் பரனைப் போற்றிக் கிறிஸ்தின் பிறப்பைச் சாற்றி – பரம

3. சர்ப்பப் பேயை வென்று, சகலர்க் கேய நன்று
அற்புதமாக இன்று அத்தன் பிறந்தாரென்று – பரம

***– தைரியம் றைற்றர்.***

**111. இராகம்: செஞ்சுருட்டி.** **தாளம்: ஆதி**

**கண்ணிகள்**

**மன்னுயிர்க்காகத் தன்னுயிர் விடுக்க**
வல்ல பராபரன் வந்தார், வந்தார். – பாவீ

2. இந்நிலம் புரக்க, உன்னதத் திருந்தே
ஏக பராபரன் வந்தார், வந்தார். –பாவீ

3. வானவர் பணியுஞ் சேனையின் கருத்தர்,
மகிமைப் பராபரன் வந்தார், வந்தார். –பாவீ

4. நித்திய பிதாவின் நேய குமாரன்
நேமி அனைத்தும் வாழ வந்தார், வந்தார் –பாவீ

5. மெய்யான தேவன், மெய்யான மனுடன்
மேசியா, ஏசையா வந்தார், வந்தார். –பாவீ

6. தீவினை நாசர், பாவிகள் நேசர்
தேவ கிறிஸ்தையா வந்தார், வந்தார். –பாவீ

7. செய அனுகூலர், திவ்விய பாலர்
திரு மனுவேலனே வந்தார், வந்தார். –பாவீ

***–வேதநாயகம் சாசுதிரியார்***

அட்டவணை

**112. இராகம்: செஞ்சுருட்டி.**

**பல்லவி**

**நாம் நற்சுகமாய்ப் பெத்லேம் நகர் பொய் திரும்புவோம்**

**அனுபல்லவி**

இதோ வாரும் போவோம் ஜல்தி – நாம்

**சரணங்கள்**

1. என்றும் கேளா வான கீதம் இன்று கேட்குதே – அது
இன்று முதல் எங்கள் துயர் என்றும் நீக்குதே – இதோ

2. யூதேயா தேசம் தாவீது வேந்தன் கிளையில் – இது
ஏதையா இது விசேடம் இந்த நாளையில் – இதோ

3. வானபரன் கிருபையினால் ஞானமாகவே – நரன்
ஆன மகா தாழ்மையைப் போய்ப் பார்த்து வரவே – இதோ

4. ஆதி மனுடர்கள் பரிபாவம் தீர்ப்பதாய் – பரஞ்
சோதி புவி வந்தார் இது அன்பின் ஆழமே – இதோ

5. சங்கீதத் தொனியாய் வளர் பெத்லேம் ஓடுவோம் – மகிழ்
கெம்பீரத்தோ டெக்காளமாய்க் கீதம் பாடுவோம் – இதோ

6. ஊக்க மிகும் திருச்சபையோர் குருக்கள் யாவரும் – இனி
நீக்கமில் சமாதானமாய் நிலைத்து வாழவே – இதோ

**113.**

**பல்லவி**

**சீவ நாயகர் இதோ சிசுவாகப் பிறந்தார்**

செய மங்களம் பாடித் துதி கொண்டாடுவோம் – சீவ

**சரணங்கள்**

1. மாசில்லா மெய்ஞ்ஞான மாசிரோமணியை
மனமகிழ்ச்சி யாக மகிழ்ந்து போற்றுவோம்
மங்களப் பதம் பாடி மகிழ் கொண்டாடுவோம் – சீவ

2. அதிசயமான இயேசு இரட்சகரை
ஆவியினால் கண்டு அறிந்து கொள்ளுவோம்
ஆகா இதுவும் மெத்த அதிசயந்தானே – சீவ

3. மாட்டுக் கொட்டிலில் தேவ ஆட்டுக் குட்டியார்
எமை மீட்டு இரட்சித்திடத் தேட்டம் கொண்டாரே
ஆகா இதுவும் மெத்த அதிசயம்தானே – சீவ

4. தேவன் மனுடனான சிறப்பைக் கண்டிட
சிறந்த பெத்தலேம் நகர் பறந்து போய் வருவோம்
ஆகா மெத்த மெத்த ஆச்சரியமே – சீவ

5. இன்று பெத்லகேமில் உதித்த இயேசுவை
இன்று நெஞ்சில் ஏற்றுக் கொள்வீர் நேசரே
ஆகா இதுதான் மெத்த ஆசீர்வாதமே – சீவ

**114. இராகம்: உசேனி** **தாளம்: ஆதி**

**தாவீதின் ஊர்தனிலே – சின்னப் பாலகா**
சத்திரத்தின் பக்கத்திலே

2. மாட்டுத் தொழுவத்திலே – சின்னப் பாலகா
மாடடையுங் கொட்டிலிலே

3. சேலை துணியுமின்றி – சின்னப் பாலகா
சிலிர்த்து நீர் தூங்கையிலே

4. சாத்திரி மார்கள் வந்து – சின்னப் பாலகா
சாஷ்டாங்க தொண்டனிட்டார்

5. காணிக்கை வைத்தனரே – சின்னப் பாலகா
கண்டு நின்று ஆர்ப்பரித்தார்

6. தூதர்கள் பாடினாரே – சின்னப் பாலகா
தோத்திர கீதங்களை

7. நாங்களும் கண்டோமையா – சின்னப் பாலகா
நாட்டில் இல்லா ஆச்சரியம்

அட்டவணை

**115. இராகம்: ஆனந்த பைரவி.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**அத்தன் மனுவானாரே – கிறிஸ்து நம**
தத்தன் மனுவானாரே

**அனுபல்லவி**

அத்தன் நமது மத்தி யஸ்தன்,
மரிய கன்னி வித்த னான – அத்தன்

1. காலம் நிறைவேறினதால் – முன் சொன்னபடி
காலன் சத்திய வேத நூலன் நமது பரி
பாலன் இரட்சிப்பின் செங்கோலன் நல் பாலனான – அத்தன்

2. தந்தைக் கிணையானாரே – குமாரனே
தந்தை நின் பரமகு ழந்தை ஒருசிறுகு ழந்தை
எனவருதல் விந்தை விந்தை விந்தை இதோ – அத்தன்

3. குற்றம் சுமந்த ஆடே – பிணை யான தோடே
குற்றம் சுமந்து பவமுற்று மொழிய உதி
ரத்தைச் சிந்திட மத்தி யஸ்தத்தைப் பாரென்று – அத்தன்

4. பட்ச மிக வானாரே – தவீது வேரே
பட்சம் பரமசபை மெச்சும் படியன்பாக
வச்சிரமணி கவியின் லட்சம் லட்சம் லட்சம் துதி – அத்தன்

**116. இராகம்: செஞ்சுருட்டி.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**வந்தவர் ஆரையா – இங்கே – வந்தவர் ஆரையா**

1. சுந்தரப் பரன் சொரூபமாய் – பரி
சுத்தமோடு பெத்தலையில் உற்ற குடிலுக்குள்ளே – வந்தவர்

2. தேவனும் மனிதனுமாய் – தம்
சிந்தையில் மகிழ்ந்து மாட்டு விந்தைத் தொழுவத்தினில் –வந்த

3. பராபனொரு மகனோ – கெட்ட
பாவிகளை ஆவலுடன் பூவிலெங்கும் தேடிக்கொண்டு–வந்தவர்

4. பரனுக்கும் மனிதனுக்கும் – பிணைப்
பட்டு நடுப்பட்டு வினைப்பட்டுப் பரிதபிக்க – வந்தவர்

5. தூதர்கள் அதிபதியே – தீர்க்கர்
சொன்னபடி உன்னதமாய் முன்னணையிலே படுக்க – வந்தவர்

6. இயேசுக் கிறிஸ்தரசே – உலக
இரட்சகனாம் இரட்சகனென் றுச்சிதநா மத்தைக் கொண்டு
– வந்தவர்

**117. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி**

**“ஜங்கா யத்தின் அடைக் கலந்தாவே” – என்ற மெட்டு**

**தேவ பால சிங்கம் மனுவாயினார்**
மனுவாயினார் செகத்தில் மனுவாயினார்.

2. வான சேனைகள் துதித்திடவே
துதித்திடவே பரனைத் துதித்திடவே.

3. கானகத் தாட்டிடையர் பணிந்திடவே
தொழுதிடவே சுதனைத் தொழுதிடவே.

4. ஆதி சர்ப்பமதை நசுக்கிடவே
நசுக்கிடவே தலையை நசுக்கிடவே.

5. நிர்ப்பந்த நரர்களை மீட்டிடவே
மீட்டிடவே நரரை மீட்டிடவே.

6. ஆதி வேதாளத்தை அடக்கிடவே
அடக்கிடவே நரகில் அடக்கிடவே.

7. தேவ தாசர்களைச் சேர்த்திடவே
சேர்த்திடவே பரத்தில் சேர்த்திடவே.

8. சரணம் அதி சரணம் அதி சரணம்
துதி சரணம் சுதனுக் கதி சரணம்.

9. ஆமென் அல்லே லூயா அல்லே லூயா
அல்லே லூயா அல்பா ஒ மேகா.

**118. இராகம்: போர்த்துக்கீசு.** **தாளம்: ஏகம்.**

**"ஆரிவராராரோ" என்ற மெட்டு**

**வாரும் பெத்தலை வாரும் – வாரும்**
வரிசை யுடனே வாரும்;
வாரு மெல்லாரும் போய் வாழ்த்துவோம் இயேசுவை
வாரும் விரைந்து வாரும்.

2. எட்டி நடந்து வாரும் – அதோ
சற்றே நிமிர்ந்து பாரும்
பட்டணம் போல் சிறு பெத்தலேம் தெரியுது
வாரும் மகிழ்ந்து வாரும்.

3. ஆதியி லதமேவை – அந்நாள்
அருந்திய பாவ வினை
ஆதி திரித்துவ மே மனிதத்துவம்
ஆயினா ரிது புதுமை.

4. விண்ணுல காதிபதி – தீர்க்கர்
சொன்னதி லுள்ள படி
மண்ணுல கில்மரி கன்னி வயிற்றினில்
மானிட னாயுதித்தார்

5. சொல்லுதற் கரி தாமே – தேவ
சுந்தர சோபனமே
புல்லணையில் பசு முண்ணணையில் இயேசு
பூபதி தான் பிறந்தார்

6. மந்தை மாட்டகத்தில் – மாது
மரியவள் மடி தனிலே
கந்தைத் துணியதை விந்தைத் திருமகன்
காரண மாயணிந்தார்

7. தூதர் பறந்து வந்து – தேவ
துந்துபி புகழ் பாட
மாதவ ஞானிக ளாயர்கள் பணிந்து நல்
மங்கள கீதம் பாட.

8. உன்னத மதி லுண்டாம் – தேவனுக்
கோசி யன்னா மகிமை
இந்நில மதில் சமாதானம் மனுடர் மேல்
எழில் பிரியம் புதுமை.

## 119. "ஆனந்த பண்டிகையை ஆசரிப்போம்" - என்ற மெட்டு

**கர்த்தாதி கர்த்தனின்று பெத்தலைப் பதி பிறந்தார்**
கானகத்தின் மேய்ப்பர் காண வானுலக சேனை பாட
தற்பரன் அற்புதன் இப்புவியிலே உதித்தார்

2. தங்க லோகம் விட்டிங்குச் சத்திரத்தில் தாழ்ச்சி யுற்றார்
தங்கவிடம் அற்றவராய் மந்தை ஆவிதனிலுற்றார்
விந்தையாய்க் கந்தை பொதிந்தன்னை கர்ப்ப முற்யவித்தார்

3. பாவியை இரட்சைசெய்யப் பார்த்திபன் பட்சம்கொண்டார்
பட்சம்கொண்டார் பட்சம்கொண்டார் பாலன்மிகப்
பட்சம்கொண்டார்
தாவியே ஓடிப்போய்நம் பாலன்பதம் பணிந்திடுவோம்

4. கெம்பீரம் இங்கிதமாய் எங்கு மிகக் கேட்கு தின்று
கேட்குதின்று கேட்குதின்று கிறிஸ்தேசு பிறந்தாரென்று
இங்கிதம் பாடிடுவோம் இயேசு மகா ராஜருக்கே

அட்டவணை

### 120. "**இம்மானுவேலரசே**" - **என்னும் மெட்டு**

**பல்லவி**

**தாவீதின் புத்திரனைச் சாலோமின் மங்களனை**
சுவாமி என் ஆண்டவனை தாம், தாம், தாம்!

**அனுபல்லவி**

பாடினேன் தினம் தேடினேன் – தாவீதின் – தாவீதின்

1. பரமண்ட லாதிபனைப் பாவியின் இரட்சகனைப்
பரிசுத்த ரூயியனைப் பார், பார், பார்!
பாடுவேன் தினம் தேடுவேன் – தாவீதின்

2. பொன்னகர் மன்னவனைப் பூமியில் வந்தவனை
எந்நேரமும் துதிப்பேன் நான், நான், நான்!
ஏத்துவேன் புகழ் ஏத்துவேன் – தாவீதின்

3. ஆட்டுக்குட்டி யானவனை ஆண்டவர் தன்மகனை
ஆத்தும இரட்சகனை ஆம்! ஆம்! ஆம்!
அண்டினேன் பதம் அண்டினேன் – தாவீதின்

4. இம்மானு வேலரசை ஏழை மரிசுதனை
இத்தரை மீட்டவனைத் தான், தான், தான்!
ஏற்றுவேன் துதி ஏற்றுவேன் – தாவீதின்

5. நித்திய சத்தியனை நீதியின் சூரியனை
நேசனாம் இயேசையனை யான், யான், யான்!
நேத்திரமதால் நோக்குவேன் – தாவீதின்

### 121. "**செகசோதிப் பராபரனே யூதகுல**" - **என்னும் மெட்டு**

**பல்லவி**

**நாதப் பராபரன் தேவ மனோகரன் நரரூப மாகினார்**

[அட்டவணை]

## அனுபல்லவி

ஆதம் ஏவை செய்த பாதகம் போக்கிட அன்னையிட மேவினார்– நாதப்

## சரணங்கள்

1. விண்ணுலகம் விட்டு மண்ணுலகம் தொட்ட விந்தை மகானந்தமே
பண்ணிசை பாடியே என்னேசு இரட்சகர் பாதம் பணிந்திடவே –நாதப்

2. தூயர்கள் போற்றவும் ஆயர்கள் ஏத்தவும் தோன்றின அச்சயனே
நாயனே நல்ல சகாயனே முற்பவ நாசனாம் இரட்சகனே –நாதப்

3. கைத்தாளம் சீரடி மத்தளம் பேரோலி கண் கண் கணீரெனவே
அத்தனே உன்னருள் சித்தமே வைத்தருள் ஆனந்தம் பாடிடவே
–நாதப்

4. பெத்தலேகம் பதி சத்திரத்தில் கன்னி பெண்மடி மீதிடமே
சித்தம் உவந்து நீர் நித்திரை செய்கிற செய்தி நல் அற்புதமே –நாதப்

5. பக்தர்களும் பரிசுத்தர்களும் புகழ் பட்ச தயாபரனே
சித்தமுடன் வான முத்தர்களும் மகிழ் செப்பும் நல் அற்புதனே –நாதப்

**122.**

## பல்லவி

**காணக் கிடைக்காத தங்கம் – இவர்**
மானு வேலாய்வந் தவதரித்தார் – துங்கம்!

1. கண்களினால் காணக் கிடையாத காட்சி
கண்டோம் நாங்கள் களி கொண்டோ மின்று மாட்சி – காண

2. மட்டில்லாக் கிருபையால் மக்களை மீட்க
கொட்டிலில் இவரோர் குழந்தை வடிவானார் – காண

3. வான தூதன் சொன்ன ஞான தேசிகரை
ஊனக் கண்ணால் கண்டு உள்ளம் மகிழ்வோமே – காண

4. பாலும் தயிர் வெண்ணெய் பாகும் படைத்து நாம்
பாதம் பணிந்து பண்பாடி துதி செய்வோம் – காண

அட்டவணை

**123. இராகம்: சங்கராபரணம்.** **தாளம்: ஏகம்.**

**பெத்தலேகேம் ஊரோரம் சத்திரத்தை நாடி**
கர்த்தன் இயேசு பாலனுக்கு துத்தியங்கள் பாடி
பக்தியுடன் உத்தமியே வாடி – பெத்தலேகேம்

2. காலம் நிறை வேறின போ திஸ்திரியின் வித்து
சீல கன்னி கற்பத் தாவி யாலே உற்பவித்து
பாலனான இயேசு மேசையாவே – பெத்தலேகேம்

3. எல்லை இல்லா ஞானபரன் வெல்லை மலை யோரம்
புல்லனையி லேபிறந்தார் இல்லமெங்கும் மீரம்
தொல்லைமிகும் அவ்விருட்டு நேரம் – பெத்தலேகேம்

4. வான் புவி வாழ் இராசனுக்கு மாட்டகந்தான் வீடோ
வானவர்க்கு வாய்த்த மெத்தை வாடின புல்பூண்டோ
தானே பழம் கந்தை யல்லோ மானே – பெத்தலேகேம்

5. அந்தரத்தில் பாடுகிறார் தூதர் சேனை கூடி
மந்தை ஆயர் ஓடுகின்றார் பாடல் கேட்கத் தேடி
இன்றிரவில் என்ன இந்த மோடி – பெத்தலேகேம்

6. ஆட்டிடைய அஞ்சுகிறார் அவர் மகிமை கண்டு
அட்டியின்றி காபிரியேல் சொன்ன செய்தி கொண்டு
நாட்டமுடன் இரட்சகரைக் காண – பெத்தலேகேம்

7. இந்திரி உடு கண்டரசர் மூவர் நடந்தாரே
சந்திர தூப போளம் வைத்து சுதனைப் பணிந்தாரே
விந்தையது பார்க்கலாம் வா ஓடி – பெத்தலேகேம்

**124. இராகம்: கரகரப்பிரியா.** **தாளம்: ஆதி.**

**“சத்யமென்று மேதளரா நாடு” – என்ற மெட்டு**

**நம்மை ரட்சிக்கவென்று நாடி நாதன் –**
மானிலத்தில் வந்தாரிங்கு தேடி மோட்ச –
பாக்கியங்க ளானந்தங் கோடி என்று –
மானிடர் மேலே அன்பு நீடி – நம்மை

அட்டவணை

2. பெத்தலேமில் பிள்ளையானா ரென்று தூதர் –
சோபன கீதத் தொனி யொன்று ஆயர் –
வேகமாய்ச் சத்திரமே சென்று ஏழைக் –
கோலமாய் முன்னணையில் கண்டு – நம்மை

3. யூதஇராசப் பிள்ளை யானா ரென்று வான –
சோதி வழி நடக்கச் சென்று சில –
சாத்திரிகள் வணங்கி நின்று மூன்று –
காணிக்கைகள் படைத்தா ரன்று – நம்மை

***–S. கோயில்பிள்ளை உபதேசியார், ஆள்வானேரி.***

**125. இராகம்: காப்பி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**ஏது மனு வேடந் தரித்தீர்?**
ஏசையா மேசையா ஆசையாய்ச் சுவாமி – ஏது

**அனுபல்லவி**

1. மாது எவை வாழவோ? மருளலகை தாழவோ?
ஏதேன் வினை மாளவோ? எம்மை யர சரளவோ? – ஏது

2. காயமில்லா நேயனே கருணை மொழி வாயனே
தூய தூய தூயனே தோத்திரம் நல் ஆயனே – ஏது

3. சுத்த தேவ பாலனே சுந்தரக் குமாரனே
நித்தம் துதி ஏகனே நேமியாள் செங்கோலனே – ஏது

4. நீதி நிறை வேறவும் நீசர் கரை யேறவும்
ஆதி பாவ மாறவும் அண்டினோர் விண் ணேறவும் – ஏது

**126. இராகம்: காம்போசி.** **தாளம்: ஏகம்.**

**கர்த்தர் பிறந்தார் உத்தமர் மகிழ்வார்**
துத்தியம் செய்வோமே – நாம் நாம் – துத்தியம் செய்வோமே
காவ லவர்தான் பாவிகள் நமக்குக் களித்திடு வோம் நாமே!

[அட்டவணை](#)

2. சத்தமிட்டு இதயம் மகிழ்ந்து
சுவாமியைத் துதித்திடுவோம் – நாம் நாம் – சுவாமியைத் துதித்திடுவோம்
சகல பாவங் களையும் நீக்கத் தற்பரன் பிறந்தாரே!

3. பெத்த லேகேம் ஊரில் வந்து
பிள்ளையாய்ப் பிறந்தாரே – ஏழைப் – பிள்ளையாய்ப்
பேயின் தலையை நசுக்கவென்று பேதைபோ லானாரே!

4. வீட்டையும் விட்டு நாட்டையும் விட்டுத்
தொழுவத்தி லேபிறந்தார் – மாட்டுத் – தொழுவத்திலே பிறந்தார்
மேன்மை நமக்குக் கொடுக்க வென்று விரும்பிப் பிறந்தாரே!

5. தேவ தூதர் வணங்கி நிற்க
செயமாய்ப் பிறந்தாரே – உலகில் – செயமாய்ப் பிறந்தாரே
தேவ கோபம் தீர்க்கவென்று சிறியவர் ஆனாரே.

6. இடையர் வந்து பாதம் பணிந்தார்
எழுந்திருப் போம்நாமும் – இப்போ – தெழுந்திருப் போம்நாமும்
இசுரவேலின் மகிமை இவரே இவரைத் தொழுதிடுவோம்.

7. சாலேம் நகரில் மேலோர் கூட்டம்
தரித்துப் பஜித்திருப்போம் – நாம் நாம் – தரித்துப் பஜித்திருப்போம்
சம்புத் தீவின் சனங்கள் நாமே சுவாமியைத் துதித்திடுவோம்

8. சீலையு மின்றித் துணியு மின்றிச்
சிலிர்த்துப் படுத்திருந்தார் – தேவன் – சிலிர்த்துப் படுத்திருந்தார்
கோலாகோலம் கந்தையை மூடிக் குளிரை அனுபவித்தார்.

9. பாவிகள் நமக்கு பாக்கியம் தரவே
பரனார் குறைவடைந்தார் – தேவ பரனார் குறைவடைந்தார்
கூவி யழுதும் எடுப்பா ரின்றிக் குளிரை அனுபவித்தார்.

அட்டவணை

**127. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி.**

**"திரியேகா மரியோவா" – என்ற மெட்டு**

**ஆனீரோ பாலகனாய் – ஆதிபனே ஆனீரோ?**
சீராளும் கண்மணியே – தேடரிய பரன் திருமகவாய்

2. தீர்க்க ருரைத்தபடி – தாவீதின் ஊர்தனிலே
மார்க்கமாய் மரியாளின் – மாவேந்தர் நீர் பிறந்தீரோ?

3. மகிமையின் இராசாவின் – திரு மடியைவிட்டு இந்த
மாடடையுங் கொட்டிலிலே – வாழ்ந்தீரோ? பரன் திருமகவாய்

4. முன்னோர்கள் வாஞ்சித்த முன்னவனே முதலோனே
மன்னன் தாவீது குல – மைந்தனாய்ப் பிறந்தீரோ?

5. வரை திரை பூப் படைத்த – வாழ் பிதாவின் திருமடியில்
வரிசையுடன் சொகுசாக – வாழ்ந்தீரோ பரன் திருமகவாய்

6. ஆதி பிதா சுதன் ஆவிதிரி யேகருக்கும்
அன்றென்றும் இன்றென்றும் – அல்லேலூயா தோத்திரமே

**128. இராகம்: இந்துஸ்தான் பியாக்.** **தாளம்: ஆதி.**

**ஆதியாம் பரஞ் சோதியே அருளானந்த குரு சுவாமியே**
நீதியாய் ஒரு பாதி இராவினில் நீர் பிறக்கவும் மானீரோ.

2. வனத்தி லஞ்சுகள் பாடவும் நல்ல வாத்தியம் கேட்கவும்
மூன்று ராயர்கள் தேடவும் நல்ல பொன் தூப வர்க்கம் படைக்கவும்.

3. அந்தப் பெத்தலேம் ஊரேகி மனு வானவா எனக்கானவா
கன்னி மாமரி பாலனே எங்கள் சுவாமியே ஏசுநாயகா!

4. அந்த மாட்டுத் தொழுவத்திலே சிறு பிள்ளையாகப் பிறந்தீரே
கந்தைத் துணிகளால் சுற்றி முன்னணையில் கிடந்தீரே.

5. மார்கழி மாதப் பனியிலே வெல்லை மலையிலே ஒரு
குகையிலே
கன்னி மா மரி வயிற்றிலே கண்டோர் மனம் எல்லாம் உருகவே

**129. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி.**

**விந்தையில் விந்தையை வந்து பாராய் – மா**
சுரந்த வேந்தனார் தேவ சுதன்
கந்தை பொதிந்து சிசுவானார்

அற்புதம் அற்புதம் அற்புதமே – திகழ்
பொற்பரா தற்பரன் அற்பமான
கர்ப்பத்தில் உற்பத்தி யானது பார்!

2. பண்டு மறை யுரைவி ண்டபடி – பூ
மண்டலத் தொண்டர்கள் கண்டிடவே – விண்
மண்டலம் விட்டு உதித்தனரே – அற்புதம் அற்புதம்

3. செகத்தில் பெத்தலைப் புல்லணையில் – மா
மகத்வமான மனுவேலர்
அமுதுக் கழுத கோலத்தைப் பார் – அற்புதம் அற்புதம்

4. தாவினில் பாவிக ளானவரை – இதோ
தாவி மீட்கவென்று தாவீதினூர்
ஆவிடைப் பிறந்தார் சேவியுங்கள் – அற்புதம் அற்புதம்

5. துங்க தூதர் சங்கம் அங்களித்து – சுப
மங்கள தீங்கவி எங்கெங்குமே
இங்கிதம் முழங்க ஆர்ப்பரித்து – அற்புதம் அற்புதம்

6. சாஸ்திரி மார்கள் தம் ஆஸ்தியுடன் – பிர
வேசித்துக் கிறிஸ்து சமஸ்தனையே
நமஸ் கரித்தார் ஈசாயின் வேரை – அற்புதம் அற்புதம்

அட்டவணை

**130. இராகம்: கமாசு.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**மன்னுருவானார் ஆதி மன்னுருவானார் – ஏதும்**
தன்னிகரில்லாத ஆதி மன்னுருவானார்

**சரணங்கள்**

1. மன்னன் தாவீது வங்கிசக் கன்னிகை மாது – அந்தக்
கன்னி யென்னும் அன்னை மரி தன்னிடமாக – மரி
தன்னிடமாக

2. வல்லமைத் தேவன் தீர்க்கர் சொன்ன மெய்சீவன் – சிறு
வெல்லை மலைக் கல்லுறுத்தப் புல்லணையிலே – பசும்
புல்லணையிலே

3. எப்பொருள் மேலா நின்ற விற்பன நூலான் – ஆதிப்
பொற்பரர் சுரர் பணிய அற்புதமாக – ஆதி
அற்புதமாக

4. ஆயர்கள் கூட உயர் ஞானிகள் தேட – யூத
ராயனென்றதாலே ஏரோ தேயுமே வாட
ஏரோதேயுமே வாட

**131. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**சந்தோச தினம் சந்தோச தினம் சுவாமி பிறந்த நாள்**
சுந்தர தேவ சுதன் கிறிஸ்தேசு சுவாமி பிறந்த நாள்

**சரணங்கள்**

1. தீர்க்கர் செப்பிய மொழிப்படியே செந்தாமரை வளர்
ஜெருசலைப் பதியடுத்த பெத்தலேம் தீரத்தில் பிறந்தார்–சந்தோ

2. தூதர் சேனைகள் கூடி மகிழ்ந்து கொண்டாடு வதைப்பாரும்
சோபனம் சோபனம் இயேசு சுவாமியைத் தொட்டிலில்
போய்ப்பாரும் – சந்தோச

அட்டவணை

3. அந்தரம் பூலோகம் சுவர்க்க மனைத்தும் அமைத்த திருச்சுதன்
நிந்தை மிகுங்குடில் முன்னணையில் கந்தை நேரே
போர்த்தனரே – சந்தோச

4. பொன்னுலகத்தினில் தேவனுக்குத் துதி பூலோகத்தினிலும்
மண்ணில் சமாதானம் மானிடர் மேல்பிரிய மாகி வாழ்வாரே
– சந்தோச

5. இந்த ரட்சகர் இல்லாமல் வேறொரு இரட்சகர் இல்லையே
எங்கள் பாவச் சுமை நீக்கிட வந்த இம்மானுவேல் இவரே
– சந்தோச

6. எல்லாரும் வாரும் இயேசு சுவாமியை ஏத்தித் துதித்திடுவோம்
பொல்லாத பாவிகளாகிய நமக்குப் பிறந்த இரட்சகரை
– சந்தோச

7. சிமியோன் அன்னாள் செங்கரத் தேந்திய சேசு இரட்சகரே
திருமுகப் பிரகாசம் அருளும் தேவ இரட்சகரே. – சந்தோச

8. பொன்னுலகம் விட்டு இவ்வுலகம் வந்த பொறுமையுள்ள சுதன்
பொன்னுலகந் தன்னில் எங்களை ஏற்றப் பூலோகம் வந்தார்.
– சந்தோச

9. இவ்வுலகம் வந்து எங்களைப் போசித்த இம்மானுவேலரசே
இசரவேலின் தெய்வ மான எங்கள் இரட்சகரே. – சந்தோச

10. அலகை சிரசை மிதித்து வெற்றியை அளித்த இராசாவே
ஆயிர மாயிர மான புகழும் அடங்க மாட்டாதே. – சந்தோச

**132. இராகம்: இந்துஸ்தான் பியாக். தாளம்: கண்ட சாப்பு.**

**பல்லவி**

**செக சோதிப் பராபரனே யூதர்குல**
சோபித மணியே.

அட்டவணை

**சரணங்கள்**

1. மாளிகையிலையோ மாட்டுக்கொட்டிலிலே
மகிபன் யூதா சிங்கமே – ஏழை
மாது வயிற்றினில் தானே பிறந்தது
மானிடர் பாவந் தானே – செக

2. பெத் லேகம் பதி புத்ர சிகாமணி
அத்தன் கிருபா நிதியே – வெகு
தத்துவமாகவே இத்தரை மீதினில்
கர்த்தர் வந்தார் துதி – செக

3. அச்சம் விடுங்கள் மெய்ச்சுதன் பிறந்தார்
அகிலத்தி லுள்ளோரே – வெகு
நிச்சயம் ரட்சகர் நீக்குவார் பாவத்தை
நீசக் குலத்தாரே – செக

4. அந்தர வானவர் சுந்தர ரூபியர்
அற்புதமாக வந்தார் – வெகு
விந்தையதாகவே மங்களம் பாடுவோம்
வேத சிரோமணிக்கே – செக

5. மன்னவர் மூவர் வந்து வந்தனம் செய்தனர்
மானுவேல் ராஜனையே – நல்ல
பொன் வெள்ளைப் போளம் தூப வர்க்கம் வைத்துப்
போற்றிப் பணிந்தனரே – செக

**133. இராகம்: நாட்டை. தாளம்: மிஸ்ர சாப்பு.**

**தேவாரம்**

**ஏதுக் கழுகிறாய் நீ – ஏழை**

மாது நான் என்ன செய்வேன்
கூதலடிக்கிறதோ – பாலா
குளிரும் பொறுக்கலையோ.

அட்டவணை

2. தந்தைக்குத் தச்சு வேலை – மாதா
தானும் எளியவளே
இந்த மா சங்கடத்தில் – பாலா
என்ன பெருமை யுண்டு

3. மூடத்துணி யில்லையோ – இந்த
மாடடையுங் கொட்டிலிலே
வாடையடிக்கிறதோ – பாலா
வாடித் தவிக்கிறாயோ

4. வான் தூதர் தாலாட்டைக் – கேட்ட
மாமணியே உனக்கு
நான் பாடும் தாலாட்டுக் – கேட்க
நன்றா யிருக்கலையோ.

5. சோதியே சுந்தரமே – மனுச்
சாதியை மீட்க வந்த
நாதனே நீ அழுதால் – இந்த
நாடும் சிரியாதோ

6. கல்லு மழுகத்துறதோ – உன்தன்
பொன்னான மேனியிலே
புல்லு மழுத்துறதோ – பாலா
பொங்கி யழுகிறாயே.

7. ஏங்கி ஏங்கி அழுதால் – தூதர்
ஏராளமாக வந்து
தாங்கிடுவார்க ளென்று – பாலா
தாவி யழுகிறாயோ.

8. இல்லாத ஏழைகட்கு – இன்பம்
எல்லாம் கொடுக்க வந்த
செல்வமே நீ அழுதால் – ஏழை
என்ன செய்வேன் ராஜாவே.

அட்டவணை

**134. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**எலலோகீம் தாமே மனு வேல னாகினார் – குரு**
பால னாகினார் செயம் அல்லேலூயாவே.

**அனுபல்லவி**

இதுஎன்ன அதிசயமிது என்ன புதுமை
இருதயக் கம்பீரமதால் ஏத்தித் தொழுவோம்
இங்கிதம் இங்கிதம் சங்கீதம் சங்கீதம்
இயேசு பகவானை என்றும்
இறைஞ்சித் தொழுவோமே நாம்

**சரணங்கள்**

1. முட்டைகளெல்லாம் திரண்டு இட்டமாய்க்கூடி – இயேசு
கட்டழகன் வருகையைத் திட்டமாய்க் கூறி – ஆ! இது

2. பூத சர்ப்பத்தைக் குருசில் மோதி அடிக்க – பர
வேதியன் வந்து பிறந்தார் மா துரிதமே–ஆ! இது

3. பந்துபோலவே வெள்ளி அந்தோ தோன்றுதே – அதை
சிந்தையில் மகிழ்ந்துணர்ந்த சந்துட்டி கொள்வோம் – ஆ! இது

**135. (இராகம்: செஞ்சுருட்டி)** **(தாளம்: ஆதி)**

**தரு. – ஏசல்.**

**மலையடி ஓரத்திலே மாட டையும் கொட்டிலிலே**
கானப் புல் மெத்தையிலே – இயேசு – காரண ராய்ப் பிறந்தாரே

காரண ராக இத் தாரணி மீதில்
பூரண ராகப் பிறந்தாரே என் சுவாமி
ஆரணம் பாடி அடிபணிந் தேத்தித்
தோரணங் கட்டித் தொழுதிடவே வாரும்
(தான தன்னான தன்னன்ன நா நா)

2. சாட்சியாய்க் கூறவந்த சர்வ வல்லவர் தூதன்
மாட்சிமை யாயுரைத்த வார்த்தையதைக் கேட்டுணர்வீர்
நாச்சியார் கன்னிமரி யம்மாள் வயிற்றில்
மாட்சிமை யுள்ளோ மதலையாய் பிறந்தார்
காய்ச்சிய பாலும் கடையாலுமே கொண்டு
காட்சி காணவே கருதினாரே மேய்ப்பர் – தான

3. வானத்தி லேயுதித்த வழி காட்டி வெள்ளி யதால்
ஞாலத்தின் சாஸ்திரிகள் நடந்தாரே காட்சி காண
ஞானத்தி னாலேகண்ட சாஸ்திரி மார்கள்
தானத்தி லேயுதித்த தற்பரனைக் காண
மேனத்தின் காணிக்கை கொண் டார்ப்பரித்தே வந்தார்
தானத்தி லுள்ள சகோதரரே வாரும் – தான

4. காசினியி லுள்ளோர் செய்த கொடும் பாத கத்தாலே
மாசில்லா இயேசு சுவாமி மதலையாய்ப் பிறந்தாரே
ஆசுள்ள குற்றம் அதிகமாய்ச் செய்தோர்
மாசுள்ள பாவம் சகலமும் தீர்க்க
காசினியில் சீவன்விட் டுயிர்த்தெழுந்து போன – அத்
தாசனைக் காணவென்று ஆர்ப்பரியு மிப்போ – தான

5. வாரும் சகோதரரே வல்லவர் நாளதிலே
சேரும் சகோதரரே தேவனைப் போற்றுதற்கு
தேவனைப் போற்றுதற்கு சீக்கிரமே வாரும்
காவனத்தில் தின்ற கனியின் பாவம் போக்க
பூவனத்தில் வந்த அந்தப் புண்ணியரின் வார்த்தை– இத்
தாசனத்தி லுள்ளோர்க்கு சமாதான வார்த்தை – தான

**136. இராகம்: செஞ்சுருட்டி** **தாளம்: ரூபகம்**

**பல்லவி**

**போற்ற வாரும் பெத்லேம் நகர் மீதினில்**
புல்லில் பிறந்த மாவல்லமைத் தேவனை – போற்ற

அட்டவணை

**அனுபல்லவி**

ஏற்ற தீர்க்கன் இயேசையா உரைப்படி
இருளோடவும் அருள் நீடவும் மரிமாதிடம் உதித்தோரைப்
– போற்ற

1. ஆதியில் ஸ்திரீ வித்தென்னு மேவைக்கு
அன்புடன் வாக்கரு ளப்பட்ட நாயனார்
சோதியாய் யூதர் குலமதில் தோன்றினார்
சமாதானம் சமாதானம் சமாதானம் பூமியில் – போற்ற

2. விண்ணுலகத்தி லிருந்து ஏராளமாய்
வெண்ணுடை போர்த்த நற் றூத ரிறங்கியே
மண்ணுலகில் வந்த புண்ணிய நாதர்க்கு
மங்களம் மங்களம் மங்களம் பாடுகிறார் – போற்ற

3. தங்கச் சிம்மாசனம் பொன் நகர் வீதியும்
தள்ளிவிட்டே இந்தப் பாவியைத் தேடியே
மங்கை எளிய ஓர் கன்னியிடம் வந்த
மனுவேலர் திருநாமம் ஒரு போதும் மறவாதே – போற்ற

4. கல்லணையோ கட்டில் வெல்லை நகரிலே
காட்டு மடம் உமக்கேற்ற அரண்மனை
புல்லணையோ மெத்தை செல்லக் குமாரனே
புதுமையிது புதுமையிது புதுமையிது எந்நாளும் – போற்ற

5. நித்ய பிதாச்சுதன் ஆவியும் வாழ்கவே
நிலந்தனில் சபைதான் தழைத்தோங்கவே
சத்ய வேத விரோதிகள் மங்கவே
சாமியின் கீதம் இதயத்தில் தங்கவே – போற்ற

**137. இராகம்: சாரங்கி** **தாளம்: திஸ்ர ஏகம்**

**பல்லவி**

**பெற்தலையில் பிறந்தவரைப்**
போற்றித் துதி மனமே – நிதம்

**சரணங்கள்**

1. முன்பு அவர் சொன்னபடி முடிப்பதற்காக – இங்கு
மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே

2. சருவத்தையும் படைத்தாண்ட சருவ வல்லவர் – இங்குத்
தாழ்மையுள்ள தாய் மடியில் தலை சாய்க்கலானார்.

3. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவ மைந்தனார் – இங்குப்
பங்கமுற்றுப் பசுத் தொட்டியில் படுத்திருக்கிறார்

4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங் கொண்டோர் – இங்கு
ஆக்களுடை சத்தத்துக்குள் அழுது பிறந்தார்

5. இந்தடைவாய் அன்பு வைத்த எம்பெருமானை – நல்
எண்ணமுடன் போய்த் துதிக்க ஏகிடுவோமே

***– ஜான் பால்மர், நாகர்கோவில்***

**138. இராகம்: ஆங்கிலம் தாளம்: ஆதி**

**பல்லவி**

**ஆதித் திருவார்த்தை திவ்விய அற்புதப் பாலகனாகப் பிறந்தார்;**
ஆதந்தன் பாவத்தின் சாபத்தைத் தீர்த்திட
ஆதிரை யோரையீ டேற்றிட

**அனுபல்லவி**

மாசற்ற ஜோதி திரித்துவத் தோர் வஸ்து
மானிட ரூபந்தனை எடுத்து
மகிமையை மறந்து தமை வெறுத்து
மனுக்குமாரன் வேஷமாய்,
தாம் தாம் தன்னர வன்னர
தீம் தீம் தீமை யகற்றிட
இங்கிர்த, இங்கிர்த, இங்கிர்த நமது
இருதயத்திலும் எங்கும் நிறைந்திட – ஆதி

அட்டவணை

**சரணங்கள்**

1. ஆதாம் ஓதி ஏவினர்; ஆபிரகாம் விசுவாச வித்து
யூதர் சிம்மாசனத் தாளுகை செங்கோல்
ஈசாய் வங்கிஷத் தானுதித்தார். –ஆதி

2. பூலோகப் பாவ விமோசனர், பூரண கிருபையின் வாசனர்
மேலோக இராஜாதி இராஜன் சிம்மாசனன்
மேன்மை மகிமைப் பிரதாபன் வந்தார் –ஆதி

3. அல்லேலூயா! சங்கீர்த்தனம் ஆனந்த கீதங்கள் பாடவே
அல்லைகள், தொல்லைகள் எல்லாம் நீங்கிட
அற்புதன் மெய்ப்பரன் தற்பரனார் –ஆதி

***–வேதநாயகம் சாத்திரியார்***

**139. இராகம்: ஆங்கிலம் தாளம்: ஆதி**

**பல்லவி**

**இராச ராச பிதா மைந்த தேசு லாவுசதா**
நந்த யேசு நாயகனார் சொந்த மேசியா நந்தனே!

**அனுபல்லவி**

செகதீசு ரேசுரன் சுக நேச மீசுரன் மக – இராச

**சரணங்கள்**

1. மாசிலா மணியே! மந்த்ர ஆசிலா அணியே!
சுந்தர நேசமே பணியே, தந்திர மோசமே தணியே;
நிறைவான காந்தனே! இறையான சாந்தனே! மறை – இராச

2. ஆதியந்த மில்லான் அந்த மாதினுந்தியிலே
முந்த வேத பந்தனமாய் வந்த பாதம் வந்தனமே
பத ஆமனாமனா! சுதனாமனாமனா! சித – இராச

3. மேன்மையா சனனே! நன்மை மேவுபோசனனே!
தொன்மை பான்மை வாசனனே! புன்மைபாவ மோசனனே!
கிருபா கரா நரா! சருவேசுரா! பரா! சிரீ – இராச

4. வீடுதேடவுமே, தந்தை நாடு கூடவுமே
மைந்தர் கேடு மூடவுமே, விந்தையோடு பாடவுமே,
நரவேட மேவினான்; சுரராடு கோவினான், பர – இராச

*– வேதநாயகம் சாத்திரியார்*

**140. இராகம்: உசேனி** **தாளம்: ஏகம்**

**பல்லவி**

**யார் இவர் ஆரோ? யார் இவர் ஆரோ?**
யார் இவர்? பரன் வார்த்தை மாமிசம்
ஆயினர் இவரோ?

**சரணங்கள்**

1. ஈர் ஐந்து குணம் இல்லாதோர் போலே,
பாரினில் ஓர் எளிய கன்னிகையின்
பாலர் ஆனாரோ? – யார்

2. ஊரில் ஓர் இடமும் உகந்திட இல்லையோ?
சீர் அல்லாக் குடியிற் பிறந்தார் அதி
சயம் ஆனவரோ? – யார்

3. கர்த்தத்துவமோ காணாது தோள் மேல்;
சுற்றிவைக்கப் பழந்துணியோ? இவர்
தூங்கப் புல் அணையோ? – யார்

4. சேனை தூதர், இதோ! சிறப்புடன் பாட,
கானகக் கோனர் காண வர, இவர்
கர்த்தர் ஆவாரோ? – யார்

5. முந்து தீர்க்கர் பிதா மொழிந்த தெதிர்பார்த்த
சொந்தமான ஜனம் இஸ்ரவேலின்
சூரியன் இவரோ? – யார்

6. பாவியான என்மேல் பட்சமே மிகவாய்
சீவனைக் கொடுக்கப் பிறந்த என்றன்
சீவ நாயகரோ? – யார்

*–வேதநாயகம் சாத்திரியார்*

அட்டவணை

**141. இராகம்: இந்துஸ்தான் கார்வா.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**சமாதானம், ஓதும் ஏசுகிறிஸ்து**
இவர் தாம், இவர் தாம், இவர் தாம்.

**சரணங்கள்**

1. நாம தாதிப் பிதாவின் திருப் பாலர் இவர்,
அனுகூலர் இவர், மனுவேலர் இவர். – சமாதானம்

2. நேய கிருபையின் ஒரு சேயர் இவர்,
பரம ராயர் இவர், நம தாயர் இவர். – சமாதானம்

3. ஆதி நரர் செய்த தீதறவே,
அருளானந்தமாய், அடியார் சொந்தமாய். – சமாதானம்

4. ஆரணம் பாடி, விண்ணோர் ஆடவே,
அறிஞோர் தேடவே, இடையோர் கூடவே, – சமாதானம்

5. மெய்யாகவே மே சையாவுமே
நம்மை நாடினாரே, கிருபை கூறினாரே. – சமாதானம்

6. அருளானந்த மோட்ச வழி காட்டினாரே,
நிலை நாட்டினாரே, முடி சூட்டினாரே – சமாதானம்

– வேதநாயகம் சாசுதிரியார்

**142. இராகம்: செஞ்சுருட்டி.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**வானம் பூமியோ? பராபரன்**
மானிடன் ஆனாரோ? என்ன இது?

**அனுபல்லவி**

ஞானவான்களே, நிதானவான்களே, – என்ன இது? – வானம்

அட்டவணை

**சரணங்கள்**

1. பொன்னகரத் தாளும், உன்னதமே நீளும்
பொறுமைக் கிருபாசனத்துரை,
பூபதி வந்த தேததிசயம்? – ஆ! என்ன இது? – வானம்

2. சத்திய சருவேசன், துத்திய கிருபைவாசன்,
நித்திய பிதாவினோர்
மகத்துவக் குமாரனோ இவர்? – ஆ! என்ன இது? – வானம்

3. மந்தைக் காட்டிலே மாட்டுக்கொட்டிலிலே
கந்தைத் துணியைப் பொதிந்த சூழ்ச்சி,
நிந்தைப் பாவிகள் சொந்தக் கண்காட்சி, ஆ! என்ன இது?
– வானம்

4. வேறே பேரல்ல, சுரர் விண்ணவர் ஆருமல்ல;
மாறில்லாத ஈறில்லாத வல்லமைத் தேவனே
புல்லில் கிடக்கிறார். – ஆ என்ன இது? – வானம்

5. சீயோனின் மாதே, இனி க்ஷணந் தரியாதே,
மாய மென்ன? உனக்குச் சொல்லவோ?
வந்தவர் மணவாளன் அல்லவோ? – ஆ! என்ன இது? – வானம்

***–வேதநாயகம் சாஸ்திரியார்***

**143. இராகம்: சங்கராபரணம். தாளம்: ஆதி**

**பல்லவி**

**என்ன பாக்கியம்; எவர்க்குண்**
டிந்தச் சிலாக்கியம்?

**அனுபல்லவி**

விண்ணவரும், புவி மேவும் முனிவர்களும்
மன்னவருங் காணா மகிபனை யான் கண்டேன்; – என்ன

**சரணங்கள்**

1. வானகந்தானோ, – அல்லதிது வையகந் தானோ?
ஆனகம் சென்று எழுந்த அரும்பொருள்
கானகந் தன்னில் என் கையில் அமர்ந்தது; – என்ன

2. போதும் இவ்வாது, – பரகதி போவேன் இப்போது;
ஏதேன் என்ற பரதீசும் வந்திட்டது;
எண்ணில்லாத செல்வம் என் கையில் கிட்டுது; – என்ன

3. சாமியைக் கண்டேன்;– மகானந்தம்– சாலவுங் கொண்டேன்
காமரு தேங்கனி வாய்கள் துடிப்பதும்,
கண்ணும் மனமும் களிக்க விழிப்பதும்;– – என்ன

4. அன்னமும் நீயே;– கிடைக்கருஞ் – சொர்ணமும் நீயே,
மின்னறு மேகத் திருக்கை துறந்தையோ?
மேதினி தன்னை ரட்சிக்கப் பிறந்தையோ? – என்ன

***–காபிரியேல் உபதேசியார், பார்வதியாபுரம்.***

**144. இராகம்: காமாசு.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**மேசியா இயேசு நாயனார், – எமை**
மீட்கவே நரனாயினார், எமை
மீட்கவே நரனாயினார்.

**சரணங்கள்**

1. நேசமாய் இந்தக் காசினியோரின்
நிந்தை அனைத்தும் போக்கவே,
மாசிலான் ஒரு நீசனாகவே
வந்தார் எம் கதி நோக்கவே; – மேசியா

2. தந்தையின் சுதன் மைந்தர் பாதகம்
சகஸ்தமும் அற வேண்டியே
விந்தையால் குடில் மீது வந்தனர்
விண்ணுலகமும் தாண்டியே; – மேசியா

அட்டவணை

3. தொண்டர் வாழவும் அண்டரின் குழாம்
தோத்திரம் மிகப் பாடவும்,
அண்டு பாவிகள் விண்ணடையவும்
ஆயர் தேடிக் கொண்டாடவும்; – மேசியா

4. தேவனாம் நித்ய ஜீவனாம் ஒரே
திருச் சுதன் மனுவேலனார்
பாவிகள் நரர் பாவம் மாறவே
பார்த்திபன் தேவ பாலனார். – மேசியா

***– C. யோசேப்பு, நாகர்கோவில்.***

**145. இராகம்: போர்த்துகீஸ். தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**ஆரிவ ராராரோ – இந்த – அவனியோர் மாதிடமே**
ஆனடை குடிலிடை மோனமா யுதித்தஇவ்
வற்புத பாலகனார்!

**சரணங்கள்**

1. பாருருவாகுமுன்னே – இருந்த – பரப்பொருள் தானிவரோ?
சீருடன் புவி, வான், அவை பொருள் யாவையுஞ்
சிருட்டித்த மாவலரோ? – ஆரிவ

2. மேசியா இவர்தானோ? – நம்மை– மேய்த்திடும்– நரர்கோனோ?
ஆசையாய் மனிதருக்காய் மரித்திடும் அதி
அன்புள்ள சீமானோ? – ஆரிவ

3. தித்திக்குந் தீங்கனியோ? – நமது – தேவனின் கண்மணியோ?
மெத்தவே யுலகிருள் நீக்கிடும் அதிசயம்
மேவிய விண்ணொளியோ? – ஆரிவ

4. பட்டத்துத் துரைமகனோ? – நம்மைப் – பண்புட னாள்பவனோ?
கட்டளை மீறிடும் யாவர்க்கும் மன்னிப்புக்
காட்டிடும் தாயகனோ? – ஆரிவ

5. ஜீவனின் அப்பமோதான்? – தாகம் – தீந்த்திடும் பானமோதான்
ஆவலா யேழைக ளடைந்திடும் மடைக்கலம்
ஆனவ ரிவர்தானோ– – ஆரிவ

***–மறைத்திரு. V. மாசிலாமணி, திருப்புவணம்.***

அட்டவணை

## *தெய்வத் திருப்பணி, தெய்வமாட்சி*

**146. இராகம்: உசேனி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**சொல்லரும் மெய்ஞ்ஞானரே, மேன்மைப்பிரபுவே**
சுரூபத் தரூபக் கோனாரே – உரை

**அனுபல்லவி**

வல்லறஞ் சிறந்து மனுவானாரே – உயர்
இல்லறந் துறந்து குடிலானாரே – உரை – சொல்லரும்

**சரணங்கள்**

1. மாடாயர் தேடும் வஸ்துபகாரி, – மிகு
கேடாளர் நாடுங் கிறிஸ்து சற்காரி,
வையகம் புரப்பதற்கு வந்தாரே, – அருள்
பெய்து நவமும் தவமுந் தந்தாரே, – உரை – சொல்லரும்

2. அச்சய சவுந்தர அசரீரி – அதி
உச்சித சுதந்தர அருள்வாரி,
ஐயா வல்லாவே, மாதேவா – ஓ!
துய்யா, நல்லாவே, ஏகோவா, – உரை – சொல்லரும்

3. பாவ வினை யாவையுந் தீர்த்தாரே, – உயர்
தேவ சபையில் எமைச் சேர்த்தாரே;
செல்லமாய் முகம் பார்த்தாரே, – பெரும்
பொக்கிஷம் போல் எமைச் சேர்த்தாரே, – உரை – சொல்லரும்

*– வேதநாயகம் சாத்திரியார்.*

**147. இராகம்: தன்யாசி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**செகநாதா, குரு பரநாதா, திரு**
அருள் நாதா, இயேசு பிரசாதா நாதா!

அட்டவணை

### அனுபல்லவி

திகழுறுந் தாதா, புகழுறும் பாதா,
தீதறும் வேத போதா! – செகநாதா

### சரணங்கள்

1. முற்காலம் ஆதிமைந்தர் மோசப் பிசாசு தந்திர
மொய் கொண்டு கனியுண்ட பழியாலோ?
நற்காலம் நீ தெரிந்து, நவின்ற வண்ணம் பரிந்து,
நரதேவனாக வந்தாய் மொழியாலோ? – செகநாதா

2. எளிய வேடந் தரித்தே இங்கவ திரித்தாலும்,
இமையோர் வந் திறைஞ்சிடத் தெரிந்தாயே;
ஒளிசெய்யும் மணிமுடி உயர்மன்னர் தொழும்படி
உடு வழி காட்டிடப் புரிந்தாயே – செகநாதா

3. அருந் தவன் கையில் தங்கி, அன்பின்பக் கடல் பொங்கி,
ஆலயத்தில் துதிக்க களித்தாயே,
வரும் தவ மதியால் முன் மற மன்னன் தேடிட, உன்
மலர் முகங் காட்டாமல் ஒளித்தாயே – செகநாதா

4. மக்கள் உளக் களங்கம் மாசற்றொளி விளங்க,
மதுரப் பிரசங்கம் யார்க்கும் உரைத்தாயே;
சிக்கடர் துன்மனத்தைத் திருத்தி, அறத்தின் வித்தைத்
திருத் தயை கூர்ந் தெவர்க்கும் விதைத்தாயே. – செகநாதா

5. இட்டமுடன் நேசித்தும் எமக்குபதேசித்தும்
இணையில் பேரின்பக் கண்ணால் பார்த்தாயே;
துட்டப் பேயைக் கடிந்தும் துஞ்சினர்க் குயிர் தந்தும்
துன்பப் பிணி பலவுந் தீர்த்தாயே. – செகநாதா

6. நிகராய் இப் பெரு நன்றி நீ இயற்றின தன்றி
நீதிக்கும் பலியாகப் பரிந்தாயே;

புகர்கொள் எமை நினைந்து பூங்காவில் மிக நொந்து
பொருவில் உதிர வேர்வை சொரிந்தாயே. – செகநாதா

7. தனையர்வல் நோயைக்கண்ட தாயார் மருந்துட் கொண்ட
தகைமை எனப் பேரன்பு கூர்ந்தாயே;
வினையர் வெம் பாவக் கேடு விலக அரிய பாடு
மேவி அனுபவிக்க நேர்ந்தாயே – செகநாதா

8. சயிலம் பிளந்திடவும் தபனன் வில் மங்கிடவும்
சாமி எமைப் புரக்க மரித்தாயே;
உயிரோடு செஞ்சுடர்போல் உயிர்த்துத், திருவுடல்மேல்
உற்ற ஐந்து காயங்கள் தரித்தாயே. – செகநாதா

9. மாதவர் எங்கும் செல்ல மறை உபதேசஞ் சொல்ல
வரங்கள் அளவில்லாது பொழிந்தாயே;
ஓத ஒண்ணாத துங்க உன்னதமான அங்கம்
உலகில் அமைத்து முத்திக் கெழுந்தாயே. – செகநாதா

10. அமரர் முற்றும் அறியார், அடிகள் சற்றும் அறியார்,
ஆர் உன் திறல் அறிவார், கர்த்தாவே
எமது பவம் பொறுத்தே, இரக்கம் எம்மேல் உகுத்தே,
எமைப் புரந்தாளும், மானப் பர்த்தாவே – செகநாதா

*– வீரமாமுனிவர்*

**148. இராகம்: காம்போதி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**பணிந்து நடந்து கொண்டாரே – பரன் பாலனும்**
கனிந்து தாய் தந்தையர்க்கு

**அனுபல்லவி**

அணிந்து தேவ தயவைப் பணிந்த மனதினோடு
தணிந்து அவர்க்கு எதிர் முனைந்துசொல் லாதபடி – பணி

அட்டவணை

1. தந்தை தாய் தமை மதித்து – அவருடைய
தயவின் சித்தத்துக் கமைந்து
மைந்தர்கள் உலகினில் வாழ்ந்து இருப்பாரென்று
சிந்தை மகிழ்ந்து பரன் செப்பிய மொழிப்படி – பணி

2. தந்தைக்குகந்த வேலையில் – அவருடனே
விந்தை யுடனே பயின்றார்;
நிந்தை இது வென்றெண்ணிச் சிந்தை கலங்கிடாமல்
எந்த விதமும் நரர் தம்மைப் பின்பற்றி யேக – பணி

3. பாவம் ஒன்று தவிர, – நம்மைப்போலப்
பாடுள்ளவராய் நின்றாரே;
நாவில் செயலில் எண்ணில் நடந்தாரே புனிதமாய்;
நாமும் அவரைக் கண்டு நடந்திடுவது நன்று, – பணி

4. ஆவியில் பலம் அடைந்தார் – உலக தேவ
அறிவிலும் நிறைவு கொண்டார்;
தேவ கிருபையிலும் திருமறை முறையிலும்
பூவில் அவர்க்கு நிகர் புனித னில்லாதபடி – பணி

***–மறைத்திரு. சீமோன், மதுரை.***

**149. இராகம்: பியாகு.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**இயேசு ராசா இதென்ன கோலம் – நீர்**
ஏழையாய் வந்த காலம்.

**சரணங்கள்**

1. சொந்தத் திரு மகனார் – நமை
மந்தையிற் சேர்ப்பதற்காய் – மகா
நிந்தைக்குள்ளானாரல்லோ – இயேசு

2. ஞானக் களஞ்சியத்தை – பொய்
யான மனுடர் கூடி – அவ
மானப் படுத்தினாரே – இயேசு

அட்டவணை

3. வெண்ணங்கி நானுடுத்த – கொடும்
முண்முடி செவ்வங்கியோ – என்
அண்ணலே நீரணிந்தீர் – இயேசு

4. எல்லா உலகத்தையும் – ஒரு
சொல்லால் படைத்தீ ரல்லோ – உம்
வல்லபம் எங்கே ஐயா – இயேசு

*– V. தேவசிந்தாமணி உபாத்தியாயர், அத்திகுளம்.*

**150. இராகம்: சங்கராபரணம். தாளம்: ஆதி.**

**இன்பம் துறந்தீரே இயேசு தேவா**
ஏழையேன் நற்கதி சேர்ந்திடவே

2. தந்தை மடியைநீர் தள்ளியேதான்
கந்தை பொதிந்த குழந்தையானீர்.

3. நன்மையே செய்து சுற்றித்திரிந்த
நாதனே உம்அருள் வேணுமையா.

4. பன்னிரு சீடர் பாதம் கழுவிப்
பாரிலுழைத்த உம்சிந்தை தாரும்.

5. இரத்தவேர்வை எனக்காய்ச் சொரிந்தீர்
இத்தயைக்காக நான் என்ன செய்தேன்.

6. தன்னுயிர் வெறுத்துநீர் குரு செடுத்தீர்
என்னுயிரை நான் வெறுக்கச் செய்தீர்.

7. தாழ்மையின் மேன்மை நான் கண்டிடவே
பாழ்ங்குழி போய்ப்பர மேறினீரோ?

அட்டவணை

8. என்னைப் பெருமையாய் எண்ணிநானே
உம்மைமறந்து துரோகி யானேன்.

9. என்னைப் பலர் புகழ்ந்தால் மகிழ்வேன்
உம்மைச் சுமக்கும் கழுதை நானே.

10. இந்தப் பெருந்தாழ்மை என்னுள் வர
ஏழை எனக்கருள் ஈந்திடுமே.

***–V.D. சகாயம் பிரசங்கியார், நாகர்கோவில்.***

**151. இராகம்: சல நாட்டை.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**கை நிறைந்த கருவூலமே**
கண்டு களிக்கலாம் முத்தேலமே – என்

1. அண்டபு வனமதில் அரியஓ ராணிமுத்து
பண்டுலகோர் தேடித்தேடிப் பார்த்தடையா வானமுத்து
இரண்டுமூன்று என்றுசொல்ல ஞாயமில்லை ஏகமுத்து
கண்டவர்கள் வாங்கிடாமல் கண்ணடையா யோகமுத்து – கை

2. ஆதிமுத்து ஜோதிமுத்து அந்தரங்க மானமுத்து
ஆருக்குங் கிட்டுமது அன்பருக்க மைந்தமுத்து
நீதிமுத்து வேதமுத்து நேசமுத்து இராசமுத்து
நிமிடத்துற் கோர்வருணம் நேர்ந்திலங்கும் சீவமுத்து – கை

3. அம்பரத்தில் ஆனமுத்து அலங்கார மானமுத்து
அஞ்சுரண்டை ஒன்றதாக்கி அறிபவர்க் கேற்றமுத்து
கொஞ்சுமுத்து பஞ்சகுணம் குடிகொண்ட யாகமுத்து
கோடிகோடி யேகொடுத்தும் தேடார்க்கெட்டாதமுத்து – கை

4. கையிலே விலங்கிட்டு காலிலே குட்டையிட்டு
மெய்யிலே சட்டையிட்டு வேதியன்முன் னேதென்பட்டு
மையிலே மையைப் போட்டு மாயலோக வேடம் விட்டு
வாஞ்சித்துக் கேட்பவர்க்கு வந்தமையும் செல்வமுத்து – கை

அட்டவணை

5. சச்சிதா னந்தமுத்து சுவாமிகிறிஸ் தானமுத்து
சத்துருவை யும்வசப்ப டுத்துமுத்து சாந்தமுத்து
கெர்ச்சனை யாய்த்திரியும் கெடுகூளி யோட்டுமுத்து
கிருபைக் கடிமை இப்போ கெஞ்சுமுத்து தஞ்சமுத்து – கை

**152. இராகம்: காம்போதி.** **தாளம்: ஆதி.**

**கண்ணிகள்**

**தேவ சுதன் பூவுலகோர் பாவம் ஒழிக்க – மனு**
சென்மமாக வன்மையுள்ளோன் தன்மையாய் வந்தார்

2. வந்த பின் தம் தந்தையர்க் குகந்தபடியே – பர
மண்டலன் பூ மண்டலத்தோர் தொண்டன்போல் ஆனான்.

3. தொண்டனாகி, அண்டர் கோமான் விண்ட மறையே – பரி
சுத்தம், மகா சத்யம், மிகு புத்திக்கும் ஊற்றே.

4. புத்தி மிகு வித்தமறை யைத் துலக்கவே – பல
யோதகன்மார் பூதலத்தின் மீதில் தெரிந்தார்.

5. பூதலத்தில் வேதமுறை ஓதி நரர்க்குள் – அற்
புதங்கள் செய் துசிதங்கள் ஓதிக் கதங்களை வென்றார்.

6. இயேசு உல காசைகளின் மாசறுக்கவும் – மாந்தர்க்
கீடேற்றத்தைத் தேடவும் மிகு பாடுகள் பட்டார்.

***– தேவவரம் முன்ஷி, திருவனந்தபுரம்.***

**153. இராகம்: பியாகடை.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**நல்லாயன் யேசு சாமி, இராசதாவீதுடை மகவு,**
ஒரே மகவு, ஆட்டுக்காய் உயிர் தாரார்.

அட்டவணை

**சரணங்கள்**

1. எல்லார்க்கும் பெரியான், எம்பிரான் தம்பிரான்
ஏகவஸ்தொரே ஏகோவா, – மா
தேவ கிறிஸ்து நீ கா, வா, வா, – நல்

2. மன்னர் மன்னர் கொண்டாடிய நீடிய
வானப் பரமகு மாரா வோ, – அதி
ஞானத் திறம் மிகும் வீராவோ, – நல்

3. விண்ணாடர் முழங்க மண்ணாடர் விளங்க
மேவி வந்தமே சையாவே, – படு
பாவி சொந்தம் இயேசையாவே, – நல்

4. சீராட்டுக் காட்டி எந்தையார் தந்தையார்
திருக்கடைக் கண்ணால் பார்த்தாரே; – வந்து,
திரும்பத் திரும்ப எனைச் சேர்த்தாரே. – நல்

5. ஆட்டைக் கூட்டி ஓர் தொழுவத்தில் அடைப்பார்,
அரிய நல்ல மேய்ச்சல் கொடுப்பார், – அன்
பாகத் தோளினிலே எடுப்பார். – நல்

***–வேதநாயகம் சாத்திரியார்***

**154. இராகம்: யமனாகல்யாணி. தாளம்: ரூபகம்.**

**“ஆசையாகினேன் கோவே” – என்ற மெட்டு.**

**பல்லவி**

**பவனி செல்கின்றார் இராசா – நாம்**
பாடிப் புகழ்வோம் நேசா.

**அனுபல்லவி**

அவனி தனிலே மறி மீதேறி
ஆனந்தம் பரமானந்தம் – பவனி

அட்டவணை

**சரணங்கள்**

1. எருசலேமின் நிதியே – சுரர்
என்றுந் தொழுஞ் சீயோன் பதியே
அருகில் நின்று அனைவர் போற்றும்
அரசே எங்கள் சிரசே – பவனி

2. பன்னிருவர் ஆடைதரித்து – நின்று
பாங்காய் வஸ்திரம் விரித்து
நன்னயம் சேர் மனுவின் சேனை
நாத கீதம் ஓத. – பவனி

3. குருத்தோலைகள் பிடிக்க – பாலர்
கும்பல் கும்பலாக நடிக்க
பெருத்த தொனியாய் ஓசன்னா வென்று
போற்ற மனம் தேற்ற. – பவனி

4. பெரியோர்கள் பலர் தடுக்க – நல்ல
வறியோர்கள் பலர் அடுக்க
தெரியாதோரும் பரிசுத் தாவியால்
தேட அருள் கூட – பவனி

5. வேத பாரகர் மயங்க – அருள்
வேத சாத்திரம் இலங்க
பாதகமதைத் தவிர்த்துத் தொலைத்த
பாலா தேவ சீலா – பவனி

**155. இராகம்: தீரசங்கராபரணம். தாளம்: ஆதி.**

**பல்லவி**

**பவனி இதோ செல்கின்றார் பார்**
பார்த்திபனார் எருசலேமுக்கு.

[அட்டவணை]

## அனுபல்லவி

பவனி யிதோ செல்கிறதைப்
பார்த்திடுவோம் பாலர்களே - பவனி

## சரணங்கள்

1. தேவனுடைய செல்வப் பாலன்
சீவனுள்ள தேவ மைந்தன்
தேவ தூதர் சேனை விட்டார்
பூவில் வந்து பாடு பட்டார் - பவனி

2. தாசன் தீர்க்கன் சகரியா
தானுரைத்த சொற்படியே
பாசமா யோர் மறிமே லேறி
நேசமாய் நம் இயேசு ராசா - பவனி

3. முன்னணியும் பின்னணியும்
முழங்குதே ஓசன்னா வென்று
மன்னவனார் மேன்மையுடன்
மவுனமாகப் போகிறாரே - பவனி

4. வழிதனிலே மரக் கிளைகள்
வஸ்திரங்கள் விரித்திருக்க
பதியிலுள்ள பரிசேயர்கள்
அதிபதிகள் அதிர மிக - பவனி

5. சீயோன் நகர் திகிலடைய
சிறுவர் கூட்டம் துதி முழங்க
பெரிய துரை போகிறாரே
அருகிலுள்ளோர் அதிசயிக்க - பவனி

6. குருத்தோலைக் கொடி பிடித்து
குழந்தைகள் கீதம் பாட
குருவேசு நாதரதோ
கும்பலோடு போகிறாரே - பவனி

அட்டவணை

# குருத்தோலை ஞாயிறு

**156. இராகம்: சிந்து கல்யாணி.** **தாளம்: ஆதி.**

**தேவாச னப்பதியும் சேனை தூதரம் விட்டுத்**
தேவர்குல மாய்வருவ தாரையா – இவர்
தேவ னுரைப்படி பாவ வினைப்படி
ஏவை மனப்படி ஆவல் மிகப்படி
வணங்கும் செக சோதிப் பொருள் தானையா.

2. முன்னணி பின்னணியில் ஓசன்னா ஓசன்னாவென
ஓர் மறியின் மேல்வருவ தாரையா – இவர்
உத்தம நேசனாம் சத்திய போசனாம்
பக்தரின் வாசனாம் நித்திய ஈசனாம்
உன்ன தத்தின் மேன்மைத் தெய்வம் தானையா

3. வழியில் மரக்கிளைகள் வரிசைய தாய்ப்பரப்ப
வஸ்திர மீதில் வாருவ தாரையா – இவர்
வல்லவ ராங்குரு சொல்தவ றாக்குரு
நல்லவ ராங்குரு துல்லிப சற்குரு
வரமிகுந்த தேவ குரு தானையா

4. சீயோன் குமாரி தன்னை நேயம தாகத் தேடிச்
சிங்கார மாய் வாருவ தாரையா – இவர்
சீருற் றதிபனாம் பேர்பெற் றிறைவனாம்
பாருற் றதிபனாம் வேருற் றெழுந்தனாம்
சீவ வழி சொல்லும் நேசர் தானையா.

5. பாலர் துதித்திடவும் ஞாலம் மதித்திடவும்
பாவல ருடன் வருவ தாரையா – இவர்
பசியற்றி ருந்தவர், புசிப்பற்றி ருந்தவர்
வசையற்றி ருந்தவர், அசைவற்றி ருந்தவர்
பாவ விமோ சன ராசன் தானையா

அட்டவணை

6. எருசலேம் வீதி வழி பெரிய திரளுடனே
குருத்தோலை வீசி வார தாரையா – இவர்
அரிவை பவமற, பெருமை நிதந்தர,
கிருபைத் துரந்தர, அருமை நிரந்தர
இயேசுக்கிறிஸ் தென்ற துரை தானையா.

**157. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி.**

**பல்லவி**

**ஓசன்னா பாடுவோம் இயேசுவின் தாசரே**
தாவீதின் குமாரனுக்கு உன்னதத்தில் ஓசன்னா!

**சரணங்கள்**

1. முன்னும் பின்னும் சாலேம் நகர்ச் சின்னப் பாலர் பாடினார்
அன்று போல இன்றும் நாமும் அன்பாய்த் துதி பாடுவோம்.

2. சின்னமறி மீதிலேறி அன்பர் பவனி போனார்
இன்னும் அவர் என் அகத்தில் வந்து அரசாளுவார்.

3. பாவமதைப் போக்கவும் இப் பாவியைக் கை தூக்கவும்
பாசமுள்ள இயேசுராசர் பவனியாகப் போகிறார்.

4. பாலர்களின் கீதம் கேட்டுப் பார்த்திபரும் மகிழ்ந்தார்
ஜாலர் வீணையோடு பாடிப் பாதமுத்தி செய்குவோம்.

5. குருத்தோலை ஞாயிறிதில் நம் குருபாதம் பணிவோம்
கூடி அருள் பெற்று நாமும் தேவனையே போற்றுவோம்.

***–இரத்தினப் பரதேசியார், திருநெல்வேலி.***

**158. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி.**

**எருசலேமே எருசலேமே,**
எருசலேமே எருசலேமே! என் பிரிய சாலேமே!
விரும்பி வந்தேன் பார்! இதோ பார்! இதோ பார்!

2. கனியைக் காணேன், கனியைக் காணேன்,
கனியைக் காணேன், கனியைக் காணேன் கனிந்துருகியே!
தனியே யான் வந்து தவிக்கிறேன், தவிக்கிறேன்!

3. இந்த நாளாயினும், இந்த நாளாயினும்
இந்த நாளாயினும், இந்த நாளாயினும், இணங்க மனமோ
என்தனிடம் பெற சமாதானம், சமாதானம்!

4. சுவாமி இயேசு சுவாமி இயேசு
சுவாமி இயேசு சுவாமி இயேசு சந்திக்கும் காலமோ
சாய்ந்து போகுதையோ, பரிதாபம் பரிதாபம்!

5. கண்க ளில்லையே, கண்க ளில்லையே
கண்களில்லையே கண்களில்லையே, கர்த்தனுன் இராசாவை
கண்டா னந்தித்துமே, களிகூர, களிகூர!

**159. இராகம்: செஞ்சுருட்டி.** **தாளம்: ஆதி.**

**“இயேசு துரை சுவாமியை” என்னும் மெட்டு**

**பல்லவி**

**பந்திவிட் டெழுந்திருந்தார் பரமர் என் இராசா**

**அனுபல்லவி**

பன்னிரு சீடருக்கும் பணிவிடை செய்ய வென்று

**சரணங்கள்**

1. வஸ்திரம் கழற்றி மறு சீலையை எடுத்து
அரையிலே கட்டிக்கொண்டு அவர் செய்த செய்கை பார் – பந்தி

2. பாத்திரத்தில் தண்ணீர் மொண்டு சீடரண்டை வந்து
சீடருடைய கால்களையும் சீக்கிரம் கழுவினாரே – பந்தி

3. கட்டியிருந்த தமது சீலையால் துடைத்தார்
கடந்த பேதுருவையும் கழுவவும் நின்றார் – பந்தி

4. நானுன்னை கழுவாவிட்டால் அருமைப் பேதுருவே
என்னிடத்தில் பங்குமில்லை என்றுனக்குச் சொல்லுகிறேன்
– பந்தி

அட்டவணை

5. மெய்யாகவே மெய்யாகவே உங்களிலொருவன்
என்னைக்காட்டி கொடுப்பானென்று உங்களுக்குச்
சொல்லுகிறேன் – பந்தி

6. பன்னிருசீடர்களும் நானோ நானோ வென்றார்
காட்டிக்கொடுக்கும் யூதாசும் நானோ ரபி என்றான் – பந்தி

**160.**

**ஓசன்னா! தாவீதின் புதல்வா**
ஓசன்னா! ஓசன்னா!

1. ஆயிரக் கணக்கான வருடங்களாய் – எம்
ஆண்டவ ரேஉம்மை எதிர்பார்த்தோம்
இசரவேல் சனங்களை ஆளவரும் – எம்
இயேசு இரட்சகரே எழுந்தருளும்.

2. தாவீ தரசனின் புத்திரரே – ஒரு
தெய்வீக முடியோடு வர்தவரே
தர்ம ரெனப்புக ழடைந்தவரே – எம்
தேவாதி தேவனே வருவீரே.

3. கோவேறிக் குட்டியே வாகனமாய் – சிறு
குழந்தைகள் துணியே பஞ்சணையாய்
இலைகளே உமது செயக்கொடியாய் – எம்
இறைவனே இன்புறச் செய்வீரே.

4. குருடர் அநேகர் ஒளிபெற்றார் – முடம்
கூன்குரு டர்செவிடர் சகாயம்பெற்றார்.
குட்டர் அநேகர் நலம் பெற்றார் – எம்
மனுக்குலம் இரட்சிக்க வந்தவரே.

5. உலகமே உமது அரிய வேலை – எம்
உயிருமே உமது மாபுதுமை
உலகத்தை யாண்டு வருபவரே – எம்
உலகரசே! உள்ளே புகுவீரே.

அட்டவணை

**161. இராகம்: உசேனி.** **தாளம்: சாப்பு.**

**கண்ணிகள்**

**பரனே, பரப்பொருளே, –நித்திய**
பாக்கியானே, சத்திய வாக்கியனே,
நரரான பாவிகட்காய் – இந்த
நானிலத்தில் வந்த வானவனே

2. வேறொர் மலர்க்காவில் – சென்று
வேதனைப் போற்றி, மனம் நொறுங்கி
ஆறாக் கொடுந் துயரம் – உந்தன்
ஆத்துமத்தில் வரலானதுவோ?

3. ஈராறு சீடர்களில் – பண
இச்சை மிகுந்த ஒரு சீடன்,
பேர் யூதாசு காரி யோத்தாம், – அவன்
பேசினதின்படி காசு பெற்று

4. ஒன்னாரின் கும்புகளை – அழைத்
தோடிவந்தே, உம்மை நாடிவந்தே,
கன்னத்தில் முத்தமிட்டே, – உம்மைக்
காட்டிக்கொடுக்கத் துணிந்தானோ?

5. காட்டிக் கொடுத்திடவும் – அந்தக்
காதகராகிய பாதகர் கை
போட்டே பிடித்திடவும், – பின்னும்
பொற்கரங் கட்டி இழுத்திடவும்,

6. செம்புருவை யைப் போலே – கூடச்
சென்றிடக் காய்பாமுன் நின்றிடவும்,
அம்பரனே, உந்தனுக்கு – இந்த
ஆபத்துவந்த தென் பாவம் அல்லோ?

***–வேதநாயகம் சாத்திரியார்***

அட்டவணை

**162. இராகம்: செஞ்சுருட்டி.** **தாளம்: சாப்பு.**

**பல்லவி**

**ஏன் இந்தப் பாடையா? – நான்**
என்ன தருவேன் இதற் கீடையா?

**அனுபல்லவி**

ஆனந்த நேமியே – எனை ஆளவந்த குரு சுவாமியே – ஏன்

**சரணங்கள்**

1. கெத்செமனே யிடம் ஏகவும், – அதின்
கெழு மலர்க் காவிடைப் போகவும்,
அச்சயனே, மனம் நோகவும், – சொல்
அளவில்லாத் துயரமாகவும், – ஏன்

2. முழுந்தாள் படியிட்டுத் தாழவும், – மும்
முறை முகம் தரைபட விழவும்,
மழுங்கச் சினம் உமைச் சூழவும், – கொடு
மரண வாதையினில் மூழ்கவும், – ஏன்

3. அப்பா, பிதாவே, என்றேத்தவும், – துயர்
அகலச் செய்யும் எனச் சாற்றவும்,
செப்பும் சித்தமாக என்று போற்றவும், – ஒரு
தேவதூதன் வந்து தேற்றவும், – ஏன்

4. ஆத்துமத் துயர் மிக நீடவும், – குழம்
பாக உதிர வேர்வை ஓடவும்,
சாத்திர மொழிகள் ஒத்தாடவும், – உந்தன்
தாசரும் பதந்தனை நாடவும், – ஏன்

***–இயேசுதாசன் அண்ணாவியார், கும்பகோணம்.***

**163.**

**“இராக்காலம் கர்த்தருடைய” – என்ற மெட்டு**

**அப்பா உம் சித்தமென்று அருமை மகன் கூவினதும்**
அப்பா உம் சித்தமென்று அரும்பா டடைந்ததும்

[அட்டவணை]

2. வானத்திலே யிருக்கும் வல்லவரின் தூதனவன்
வையகத்தை மீட்க வந்த வல்லவரைத் தேற்றினதும்

3. நெற்றியினால் வேர்வை சிந்தம் நீசராம் எங்களுக்காய்
நித்தியனார் பொன்மேனி இரத்தமாய்ப் பொங்கினதே

4. இரத்தமதாய்ப் பொங்கி நிற்கும் நேசர் முகம் பாராயோ
பார்த்தால் உன் பாவமெல்லாம் பஞ்சாகு மென்றாரே

5. பாதகராம் நாங்கள் செய்த பாதகத்தை நீர் சுமந்து
தேவ கோ பாக்கினையின் செக்காட்டப் பட்டீரோ

6. செக்கதிலே ஆட்டப்பட்டீர் செந்நீர் வடிய விட்டீர்
தேவ கோ பாக்கினையின் தீயை அணைத்து விட்டீர்

7. தீயை அவித்ததினால் தீபாவி மோச மற்றேன்
மோட்சத்துக் காளானேன் முதல்வா உமின் கிருபை

8. உம் கிருபை எண்ணி எண்ணி உம்மேல் நிதம் உருகி
எம் பாவத்தைத் தள்ள இறைவா துணைபுரியும்

9. பாவத்திலே நிலைக்கும் பாவியே உம்முடைய
பாடு பரிதாபம் பாழ் நரகும் பங்காகும்

10. பாழ்நரகில் பங்கடையப் பாருலகில் இரட்சகரும்
பாடுபட வந்ததில்லை பார்த்துணர்ந்து கொள்வாயே

11. பார்த்து மனதுணர்ந்து பாவமதை நீ வெறுத்தால்
பார்த்திபனார் தம்வலத்தில் பாக்கியமாய் வாழ்ந்திடுவாய்

12. வாழ்ந்திருக்க வென்று வருவார் திருச்சுதனார்
வாழ்ந்திருக்கும் வேளை தனில் வாழ்த்திப் புகழ்ந்திடுவார்

13. வாழ்த்திப் புகழ்ந்திடுவார் வானோர் புடைசூழ
வாழுவாய் நீடூழி காலமெல்லாம் வாழ்ந்திடுவாய்

**164. இராகம்: மாஞ்சி, நாதநாமக்கிரியை. தாளம்: ரூபகம், சாப்பு.**

**கண்ணிகள்**

**காவில் நீர் பட்ட ஆத்துமக் கஸ்தியை**
கலகத்தால் பாய்ந்த குருதி நீர் வேர்வையை
தேவரீர் சின்னமா யங்கே பாவி போல்
சிறந்ததை அறிவேன் – என் நேசரே
இறந்ததை மறவேன்.

2. வேகமாய் இயேசு காய்பா முன் நின்றிட
வெருண்டு சீடர் ஒளிந் தோடக் காய்பா முன்
கோபமாய் யூதர் குற்றங்கள் சாற்றினும்
கொற்றவன் இருந்தார் – மவுனமாய்
செற்றலர் திரண்டார்.

3. கள்ளன் போல் திரு வள்ளலைக் கட்டியே
காவல் செய்து கற்றூணின் சேர்த் திறுக்கியே
வெள்ளம் போல் இரத்தம் பீரிடவே தேக்கம்
வேந்தனை அடித்தார் – அவர் வெகு
சாந்தமாய்ப் பொறுத்தார்.

4. துங்கன்மேல் வண்ணச் சிவப்பாடை போர்த்து
செங்கோ லென்றே மூங்கில் கோலைக் கொடுத்து
சென்னியிற் பார முள் முடி தரித்துச்
சேவகர் அடித்தார் – அடித்ததார்
சொல்லென வுரைத்தார்.

5. சீரற்றவர்களால் கொலைக்களம் நோக்கியே
தீதற்றவர் பெருஞ் சிலுவையைத் தூக்கியே
மாசற்ற சில மாதர் புலம்பிட
வல்லவர் நடந்தார் – பல புத்தி
சொல்லியே விரைந்தார்.

6. காலிலாணி கடாவிய காயமும்
கரமும் சிதைத்திட முள் முடிப் பாரமும்
விலாவி லீட்டி துளைத்த வதையோடு
விமலனே ஏங்கினார் – சிலுவையில்
கவலையாய்த் தொங்கினார்

7. வானங் குமுறிடப் பூமியதிர்ந்திட
மன்னாலயத்திரை யிரண்டாய்க் கிழிந்திட
மயானக் குழியில் பக்தர்கள் வெளிப்பட
மானுவேல் மரித்தார் – நமது இராசன்
சீவனை கொடுத்தார்.

8. எந்தையே இயேசுவே சொந்த மணவாளா
கந்தை ஒழிந்திட நிந்தை யழிந்திட
சொந்தமா யென்னை ஆட்கொண்ட பேரன்பைச்
சிந்தையில் மறவேன் – உம்மை என்றும்
விந்தையாய்த் தொழுவேன்.

**காய்பா**

**165. இராகம்: கெவுளிபந்து.** **தாளம்: அடம்.**

**அப்பா, தயாள குணாநந்த மோனந்த, வேதா, – பொல்லா**
இப்பாரில் காய்பாமுன் ஏகினீரோ, இயேசுநாதா?

2. குற்றம் சுமத்தப் பொய்ச் சாட்சிகளைத்தேடினாரோ? – அந்தச்
செற்றலர் எல்லாம் திரண்டேக மாய்க்கூடி னாரோ?

3. கன்னம் சிதைந்ததோ? கண்கள் சிவந்ததோ? சுவாமி – பொறி
மின்னிக் கலங்கி, விசனம் உற்றீரோ, அன்பு நேமி?

4. மெய்யான சாட்சியிட் டையனே சொன்ன உம் மீதே – தீயர்
பொய்யான சாட்சியிட் டையோ சுமத்தினார் தீதே.

5. என் கட்டை நீக்கி ஈடேற்ற வாதைக்குள் ளானீரோ? – உம்மைப்
பின் கட்டாய்க் கட்டிப், பிலாத்திடங் கொண்டு போனாரோ?

6. இத்தனை பாடுகள் நீர்பட்ட தென்கொடும் பாவமே – என்றன்
கர்த்தனே, உன் மீதில் வந்ததையோ தேவ கோபமே.

7. நீர் பட்ட பாட்டைப்போல், ஆர் பட்டுத் தாங்குவார் தேவே?
–பவக்
கார்பட்ட நெஞ்சமும் சீர்பட்டுப் போகுமே கோவே.

***–இயேசுதாசன் அண்ணாவியார், கும்பகோணம்***

அட்டவணை

## நீதிமன்றம்

**166. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**கனம், கனம் பராபரன் கருணையின் குமாரனே**
தினம்! தினம் கீர்த்தனம்; ஜெயம்! ஜெயம்! ஸ்தோத்திரம்!

**சரணங்கள்**

1. வனந்தனிலே மானிடர் வருந்தின பாதகம் அற,
கனிந்து நமதாண்டவர் கடுந்துயரம் பூண்டனர். – கனம்

2. அன்னாவும், காய்பாவுமாய் அடர்ந்த சங்கம் யாவரும்
இன்னா ஞாயங் கூறியே எதிர்த்துத் தீர்ப்பதிட்டனர். – கனம்

3. ஞாய சங்கம் நடுவிலே நாதனைச் சினந்தொரு
தீய பாவிதான் அவர் திரு முகத் தறைந்தனன். – கனம்

4. ஆகடிய மாக முக் காட திட் டிராவெல்லாம்
ஏகனைப் பரிகாசமாய் ஈனர் குட்டவும் செய்தார். – கனம்

5. கைச் சரசம் பண்ணினார்; காவல் மீதிருத்தினார்;
அச்சமற்ற கந்தையாய் அநேக தூஷணஞ் சொன்னார். – கனம்

6. சங்க முன்னிரண்டு பொய்ச் சாட்சிகள் எழுந்துமே,
பங்கமாக் கூறினும், பரிந்து கேட்டிருந்தனர். – கனம்

7. பெத்தரிக்கமாகவே பேதுரு அப்போஸ்தலன்
சத்தியங்கள் பண்ணியே தான் மறுதலித்தனன். – கனம்

8. கஸ்தியதுறச் சொல்லிக் கனன் றெழுந்து ஆரியன்
வஸ்திரம் கிழித்துமே மரணத் தீர்ப்பி யம்பினான் – கனம்

***– வேதநாயகம் சாத்திரியார்.***

அட்டவணை

**பிலாத்து**

**167. இராகம்: மோகனம்.** **தாளம்: ரூபகம்.**

**தரு**

**பொற்பு மிகும் வானுலகும்**
பூவுலகும் படைத்த பரப்பொருளே - இங்கே
பொந்திப்பிலாத் தரண்மனையில்
வந்து நிற்கும் காரணமேன், கோவே

2. கற்பனை மீறிய பாவத்தால்
கடின நரகாக்கினைப் படாமல் - உன்னைக்
காப்பதற் கிங்கே ஞாயத்
தீர்ப்பில் உற்றோம் சீயோனின் மாதே.

3. துய்ய திரு மேனி எல்லாம்
நொய்ய உழுத நிலம்போல ஆகிக் - கன
சோரி சிந்த வாரதினால்
நீர் அடிக்கப்பட்ட தென்ன? கோவே

4. வையகத்தின் பாதகத்தால்
செய்யும் நடுதீர்வை யெல்லாம் ஆற்ற - இந்த
வாதை எல்லாம் பட்டிறக்கப்
போத மனம் சம்மதித்தோம் மாதே.

5. செய்ய கண்கள் உறச் சிவந்து,
திருக் கன்னங்கள் தடித்து மிக வீங்கித் - தூய
சென்னியின் ரோமங்கள் எல்லாம்
வின்ன முற்றிங் கிருப்ப தென்ன? கோவே

6. மையிருளில் குருக்களுடை
மாளிகையில் படுத்தின பாடெல்லாம் - இங்கே
வன் கொலைஞரால் அடிக்க
பங்கமுற்ற கோலம் இது மாதே

*-வேதநாயகம் சாத்திரியார்*

அட்டவணை

## ஏரோது

**168. இராகம்: மோகனம்.** **தாளம்: ரூபகம்.**

**மிகையாகத் தூஷணித்துச்**
சகலாத்து மேற் சட்டை ஒன்றிட்டு – யூதர்
வேந்தன் எனச் சேவகர்தாம்
காய்ந் திசைத்த கோரணியென்? தேவே

2. பகைகாரப் பாவிகளைத்
தொகையாக வானுலகில் சேர்த்து – அங்கே
பார்த்திபராய்ச் சமுகத்தினில்
ஏற்றிவைக்க வேண்டி அன்றோ மாதே

3. முள்ளின் ஒரு முடி சமைத்து,
வள்ளல் உம்தன் சிரத்தழுத்தி வைத்தே – கணு
மூங்கில் தடியால் அடிக்க
ஓங்கு துயர் அடைந்தீரோ? கோவே

4. தெள்ளி முகம் மினுக்கி மிகச்
சிரத்தை அலங்கரித்துக் கந்தை தீர்த்து – நித்ய
சீவன் முடி உன் தலையில்
ஓவியமாய்ச் சூட்ட அன்றோ மாதே

5. நன்னயஞ்சேர் என்னுத்ம
நாயகரே மெய்க்கிறிஸ்து வேந்தே – நீர்செய்
நன்றி குன்றாதே ஒழுக
என்றும் எனக்கருள் புரியும் – தேவே

6. கன்னியரே சீயோனின்
மின்னரசே ஞான மடமானே – உன்னைக்
காத்தருள்வோம் மணவீடு
சேர்த்தருள்வோம் கலங்காதே மாதே.

*–வேதநாயகம் சாத்திரியார்*

அட்டவணை

## பிலாத்து

**169. இராகம்: சங்கராபரணம்.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**சரணம் சரணம் அனந்தா சச்சிதானந்தா!**
தாவீதின் மைந்தா, ஓசன்னா! சரணபதந் தா

**சரணங்கள்**

1. தேவசுதன் பொந்தியுப் பிலாத்தினிடமே
சென்று பல பாடுபடவும் தயவானார் – சரணம்

2. தந்து செய்து பொந்தியுப் பிலாத்துத் துரைதான்
தற்பரனை விட்டுவிடத் தன்னுள் எண்ணினான். – சரணம்

3. பரபாசோ டதிபதியைப் பணிய நிறுத்திப்,
பாதகனை யோ இறையை யோ விட என்றான். – சரணம்

4. சீவனுடை அதிபதியைச் சிலுவையில் கொன்று,
திருடனையே விட்டுவிடத் தீயவர் கேட்டார். – சரணம்

5. தண்ணீர் தனை எடுத்துக் கை கழுவியே,
தற்பரனைக் கொல்வதற்கங் கொப்புக்கொடுத்தான். – சரணம்

6. கள்ளனையே விட்டு விட்டு யூதர்கட்காகக்
காவலனைக் குருசறையப் பாவியும் தீர்த்தான். – சரணம்

***–வேதநாயகம் சாத்திரியார்***

## ஏரோது

**170. இராகம்: சங்கராபரணம்.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**சரணம் சரணம் அனந்தா சச்சிதானந்தா,**

தாவீதின் மைந்தா, ஓசன்னா! சரணபதந் தா

[அட்டவணை]

**சரணங்கள்**

1. பித்தன் என்று வெள்ளை அரைச் சட்டை அணிந்து
பேதக ஏரோதே பரி காசம் பண்ணினான் – சரணம்

2. கற்றூணில் சேர்த்திறுகக் கட்டி, வலுவாய்க்
காவலன் தன் சேர்வை எல்லாம் கூடி அளித்தார். – சரணம்

3. முள்ளின் முடி செய்தணிந்து, வள்ளல் எனவே,
மூர்க்க முடனே தடிகொண் டார்க்க அடித்தார். – சரணம்

4. கையினில் செங்கோலதென்று மூங்கில் ஒன்றிட்டுக்
காவலன் நீ யூதருக்கென் றோவியஞ் சொன்னார். – சரணம்

5. துப்பினார் முகத்தினில் அதிக்கிரமமாய்
துன்னிய கைக்கோலை வாங்கி சென்னியில் போட்டார்.
– சரணம்

6. முழங்காலிலே இருந்து தெண்டன் பண்ணியே,
முன்னவனைத் தான்இறைஞ்சிக் கன்னத் தறைந்தார்.
– சரணம்

***–வேதநாயகம் சாத்திரியார்***

## கொல்கதா

**171. இராகம்: முகாரி.** **தாளம்: ஆதி.**

**சரணங்கள்**

**அந்தோ சிலுவைப் பவனி பார் – சோகி**
ஆண்டவர் படுந்துயர் ஆறுமோ – நாம்
அழுதாலும் தான் தீருமோ – குரு
சன்றி மீட்பு ஒப்பேறுமா – சகி சகி

2. தோளில் பாரம் அழுந்தவே – அவர்
தேய்ந்து கீழே விழுகிறார் – ஐயோ
தூக்கி விடுவார் இல்லையோ – மா
தோசி என்னால் இத் தொல்லையோ – சகி சகி

அட்டவணை

3. தூக்கென்றவரை அதட்டுறான் – ஒரு
தீயோன் முறுக்கிப் பிதற்றுறான் – அங்கே
துடுக்காய் சவுக்கைச் சுழற்றுறான் – ஒருவன்
தொந்தரை செய்தே அலட்டுறான் – சகி சகி

4. மெல்ல இயேசு நடக்கிறார் – வேர்த்து
மெய் சோர்ந் துள்ளம் சடைக்கிறார் – தம்மைப்
பலியாய் விருப்புடன் படைக்கிறார் – என் தன்
பாவக் கடன்களை அடைக்கிறார் – சகி சகி

5. மாதா ஏங்கித் தேம்புறார் – நன்மை
வாங்கினோர் புலம்பி ஏங்குறார் – சீமோன்
மதி சோர்ந்து குருசைத் தாங்குறான் – ஐயோ
மருகி யோவான் முகம் வீங்குறான் – சகி சகி

6. சோலையில் வந்த பாவத்தால் – இதோ
சாலையின் வழியே போகிறார் – அலங்
கோலமாகி என்னால் சாகிறார் – தேவ
கோபாக்கினையில் வேகிறார் – சகி சகி

7. கல்வாரி மலையில் ஏறுகிறார் – மெய்
கருகியும் அன்பு கூருகிறார்– துயர்
காதல் மருகியே சாகிறார் – பின்னும்
கருணை மொழி கூறி ஏகிறார் – சகி சகி

***–இரத்தினப் பரதேசியார், திருநெல்வேலி.***

## சிலுவை

**172. இராகம்: கெண்டை. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**எங்கே சுமந்து போகிறீர் – சிலுவையை நீர்**
எங்கே சுமந்து போகிறீர்?

**சரணங்கள்**

1. எங்கே சுமந்து போறீர் இந்தக் கானலில் உம
தங்கம் முழுதும் நோக ஐயா, என் இயேசு நாதா, – எங்கே

2. தோளில் பாரம் அழுந்த, தூக்கப் பலம் இல்லாமல்,
தாளுந் தத்தளிக்கவே தாப சோபம் உற நீர் – எங்கே

3. வாதையினால் உடலும் வாடித் தவிப்புண்டாகப்
பேதம் இல்லாச் சீமோனும் பின்னாகத் தாங்கிவர – எங்கே

4. தாயார் அழுதுவரச் சார்ந்தவர் பின் தொடர
மாயம் இல்லாத ஞான மாதர் புலம்பி வர – எங்கே

5. வல்ல பேயைக் கொல்லவும் மரணந்தனை வெல்லவும்
எல்லை இல்லாப் பாவங்கள் எல்லாம் நாசமாகவும் – எங்கே

6. வண்டக் கள்ளர் நடுவில் மரத்தில் தொங்குவதற்கோ?
சண்டாளர்களைத் தூக்கும் தலையோட்டு மேட்டுக்கோ?
–எங்கே

7. மாசணுகாத சத்திய வாசகனே, உமது
தாசர்களைக் காக்க நீர் தாங்காச் சுமையை எடுத் – தெங்கே

***–இயேசுதாசன் அண்ணாவியார், கும்பகோணம்.***

**173. இராகம்: பியாகு.** **தாளம்: ரூபகம்.**

**அன்னமே சீயோன் கண்ணே அன்பரதோ போறாரடி**
மன்னவனார் நமக்காகத் தம்மை பலியிடப் போறார்.

2. இன்னுமென்ன செய்யப் போறார் கன்னியரே சோரி சிந்த
என்னருமை இயேசு பாலன் சின்னப்படப் போறாரடி.

3. குப்புற விழுந்து துயர் அற்புதன் அடைந்தாரடி
அப்புறம் இரத்த வேர்வை அந்தோ சிந்தி நின்றாரடி

4. பன்னிரு சீடர்களில் பே ராசை கொண்ட யூதாசு
மன்னர் புகழ் தேசிகரை மாபாவி காட்டிக் கொடுத்தான்.

5. ஆகடிய யூதர் கூடி அண்ணல் திருக்கரத்தைக் கட்டித்
தேகம் துடி துடிக்க ஓங்கி யோங்கி யடித்தார்.

6. பித்தனென்று வெள்ளை அரைச் சட்டை ஒன்று தானணிந்து
பேதை ஏரோது மன்னன் பேசிப் பரிகாசஞ் செய்தான்.

7. பாரச் சிலுவை சுமந்து பாதகரோடே நடந்து
போறார் துயர் விரியப் பொங்கி மனம் நொறுங்கி.

8. கொல்கதா மலைதனிலே குருசினில் சுதன் மரிக்க
கோதுஇல்லா நீதிபரன் போறார் அதோ பார் சகியே!

**174. இராகம்: வராளி.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**ஆச்சரியமான காட்சியைப் பார்க்கலாம் வா – ஆ! கல்**
வாரிச் சிலுவையில் வானவன் தொங்குகின்ற
ஆச்சரியமான காட்சியைப் பார்க்கலாம், வா

**அனுபல்லவி**

சூட்சமுறும் தேவ காட்சியாங் கற்பனைத்
துய்யத்தை நரர்மீறி – மகா
துர்குணப் பேயின் தந்திரத்தினால்
தூய்மை விட்டனர், வாய்மை கெட்டனர்;
சுத்த கிறிஸ்தரசன் – தேவனுடை
சித்தன், அமை சிரசன் மாந்தர்களின்
துன்பத்தைப் போக்கவும், இன்பத்தைச் சேர்க்கவும்
தோசஞ் செய்பாதகன் வேசமாய்த் தொங்குகின்ற – ஆச்ச

**சரணங்கள்**

1. எருசலை நகர் மருவுங் கல்வாரி
என்னப்பட்ட ஒரு மேடு – அதில்
இயேசு கிறிஸ் தெனும் நேச மகத்துவன்
எங்களுக்காய்ப்படும் பாடு – மரக்
குருசில் ஏறியே சிரசில் முண்முடி
கொண்டதும் நொந்ததும் நீடு – அப்போ
கொற்றவன் தன்முகம் சற்றேனுங் காட்டாத

குறையதும் ஒரு பீடு
குருதி வடியவே சுருதி முடியவே
பருதி மறையவே, திரையுங் கிழியவே
கொலைஞர் அவமதிக்க – துட்டனாம்
அலகை மனங்கொதிக்கக் கசப்புடன்
கோனே என்னை நீர் ஏனோ கைவிட்டீர்
கொடுக்கிறேன் ஜீவனை, எடுத்திடு மென்றழும் – ஆச்ச

2. பூலோகத்தாரே இம்மேலான காட்சியின்
புண்ணியத்தை வந்து பாரும் – தேவ
புத்திரன் பக்கத்தில் குத்துண்டு பாய்கின்ற
புனித இரத்தமும் நீரும் – நமை
மேலோகஞ் சேர்க்கின்ற சாலக்கி ருபையின்
வித்தார ஊற்றென்று சேரும் – அதில்
விழுந்து ஆத்துமம் முழுகிப் பாவந் தீ
வினை அகன்றிட வாரும்
சீலமற்ற மாந்தர் கோலமுற்ற வேந்தர்
சீவ னதிபதி சாவினாலே நம்மைத்
தெய்வ லோகஞ் சேர்க்க – நித்தியமாய்
உய்யும் சுத்தோராக்க சுத்த பிதா
செல்வக் கிறிஸ்தந்தக் கல்வாரி மேட்டினில்
சீவன் துடிக்கதத்தம் ஆவி விடுகின்ற – ஆச்ச

***–T. யோசேப்பு, நெய்யூர்.***

**175. இராகம்: கேதாரகௌளம். தாளம்: ஆதி.**

**பல்லவி**

**கொலைக்காவணம் போறார், அன்னமே – ஆதாம்**
கொடிய பாவத்தால் இதோ முனன்மே!

**அனுபல்லவி**

வலமைச்ச தாநித்திய
தலைமைத்தே வாதிபத்திய
வஸ்த னாதிதிருச் சேயன்
உத்தம கிறிஸ்து ராயன்
மனுடர்க ளுடைபிணை யாளிமத் யஸ்தன்

எனுடைபி ரியமண வாளசி ரேட்டன்
வங்கண விங்கித லங்கிர்த நேசன்
சங்கமு ழங்கிய சங்கையின் இராசன்
மருகிய துயரொடு குருசினில் மடிய
திருவுள மாய்நம தேகவுங் கொடிய – கொலை

1. பொந்தி யுப்பி லாத்துவின் கீழாக – நின்று
புண்ணிய னார்பாடு பட்டுச் சாக
பூரியர் ஆரியர் வீரிய மாயடர்
காரிர வேசெய்கொ டூரம லாதினம் – கொலை

2. புடவிக்கிருளே விடியற் பொழுதே
படிறுக் கொடியோர் இடுகட் டுடனே யிரண
போரினார வார மாக மனுடகு
மாரான்மீ தகோர மாக முறையிட – கொலை

3. சிந்தை நடுங்கச் செய்யும் லோக ஞாயத்
தீர்ப்பின் உபாய மெல்லாம் போக
புந்திக்க டாதமாயம் போவிச்சம் பிரதாயம்
பொய்மைமன தானநேயம், பொற்புப்பேச் சா லென்னாதாயம்
– கொலை

**176. இராகம்: கேதாரகௌளம். தாளம்: ரூபகம்.**

**பல்லவி**

**பாதகர்க் காய்ப்படும் பாடுகளைக் கண்ணால்**
பாருங்கள் பாவையரே.

**அனுபல்லவி**

காதகன் பாவி யூதாசு காட்டிக் கொடுக்க விண்ணைக்
காட்டும் கல்வாரிமலைக் கோட்டில்நம் பிணையாளி – பாதகர்

**சரணங்கள்**

1. பக்தர் பெருமான் இரு கைத்தலம் விரிக்கிறார்,
பாவியைப் போல் வாதை மேவி உத் தரிக்கிறார்;
பெத்தம் உளமனத்தார் கத்திக்கொக் கரிக்கிறார்,
பேதை மரி தன்மார்பில் மோதி ஆ குலிக்கிறார். – பாதகர்

அட்டவணை

2. கள்ளர் கயவர்பலர் துள்ளித் தூஷணிக்கிறார்,
காடி கலந்தகடற் காளானைத் திணிக்கிறார்;
வள்ளல் செவி யுளைக்கும் வார்த்தைகள் பிணைக்கிறார்,
மாறுபா டுள்ள ரபி மார்புறக் கணிக்கிறார். – பாதகர்

3. கைவிட்ட தெனவென்று கலங்கிநின் றழுகிறார்,
காயுநின் மலன்கோபத் தீயினில் முழுகிறார்,
மையுற்ற கொலைஞர்க்காய் மன்றாடித் தொழுகிறார்;
வானோர் அரசன் ஏழு வாக்கிய மொழிகிறார். – பாதகர்

4. மாலுற்ற திருவுடல் கீலற்று நழுவுதே,
மாற்றல ரிற்கொடிய கூற்றுயிர் பிழியுதே,
பாலுற்ற நறுவிலா வேல்பட்டுக் கிழியுதே,
பாணியும் குருதியும் தோணியே வழியுதே. – பாதகர்

*–மறைத்திரு. E.J. குளோரியா ஐயா, திருச்சிராப்பள்ளி.*

**177. இராகம்: சங்கராபரணம்.** **தாளம்: திரிசுரம்.**

**பல்லவி**

**ஏங்குதே என் அகந்தான் – துயர்**
தாங்குதில்லை முகந்தான்.

**அனுபல்லவி**

பூங்காவிலே கனிந்தேங்கி நீர் மன்றாட
ஓங்கியே உதிரங்கள் நீங்கிய துயர் கண்டு – ஏங்குதே

**சரணங்கள்**

1. மேசியா வென்றுரைத்து – யூத
இராசனென்றே நகைத்து,
தூஷணித்தே அடித்து – நினைக்குட்டி
மாசுகளே சுமத்தி,
ஆசார மின்றியே ஆசாரி யனிடம்
நீசர்கள் செய்கொடும் தோஷமது கண்டு – ஏங்குதே

2. யூதாஸ் காட்டிக்கொடுக்க – சீமோன்
பேதுரு மறுதலிக்க,
சூதா யெரோதே மெய்க்க – வெகு
தீதாயுடை தரிக்க,
நாதனே, இவ்விதம் நீதமொன் றில்லாமல்
சோதனையாய்ச் செய்யும் வேதனையைக் கண்டு – ஏங்குதே

3. நீண்ட குரு செடுத்து – எருசலேம்
தாண்டி மலையெடுத்து,
ஈண்டல் பின்னே தொடுத்து – அவரின்மேல்
வேண்டும் வசை கொடுத்து
ஆண்டவர் கை காலில் பூண்டிடும் ஆணியால்
மாண்டதினால் நரர் மீண்ட ரென்றாலுமே, – ஏங்குதே

**178. இராகம்: லாவணி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**குருசினில் தொங்கியே குருதியும் வடியக்**
கொல்கதா மலைதனிலே – நம்
குருவேசு சுவாமி கொடுந் துயர், பாவி!
கொள்ளாய் கண் கொண்டு.

**சரணங்கள்**

1. சிரசினில் முள்முடி உறுத்திட அறைந்தே
சிலுவையில் சேர்த்தையோ! – தீயர்
திருக்கரங் கால்களில் ஆணிக ளடித்தார்
சேனைத்திரள் சூழ. – குருசினில்

2. பாதகர் நடுவில் பாவியி னேசன்
பாதகன்போல் தொங்க, – யூத
பாத கர்பரி காசங்கள் பண்ணிப்
படுத்திய கொடுமைதனை – குருசினில்

3. சந்திரசூரிய சகல வான் சேனைகள்
சகியாமல், நாணுதையோ! – தேவ
சுந்தர மைந்த னுயிர்விடுங் காட்சியால்
துடிக்கா நெஞ்சுண்டோ? – குருசினில்

அட்டவணை

4. ஈட்டியால் சேவகன் எட்டியே குத்த
இறைவன் விலாவதிலே, – அவர்
தீட்டிய திட்சைக் குருதியும் நீரும்
திறந்தூற் றோடுது, பார்! – குருசினில்

5. எருசலேம் மாதே, மறுகி நீயழுது
ஏங்கிப் புலம்பலையோ? – நின்
எருசலை யதிபன் இளமண வாளன்
ஏற்ற கோல மிதோ? – குருசினில்

***–மறைந்திரு. S.G. இயேசுவடியான் ஐயர், புதியம்புத்தூர்.***

**179. இராகம்: ஆகிரி, செஞ்சுருட்டி. தாளம்: ஆதி, ரூபகம்.**

**அன்று கிறிஸ்து மரித்திடச் சூரியன்**
அப்போதே மறைய – ஐயையோ
ஆண்டவன் பாதக ரோடு சிலுவையில்
ஆணியில் தொங்கிடவே – ஐயையோ.

2. பச்சை மரத்துக்கிப் பாடுகளே யாயின்
பட்டதற் கெப்பாடோ – ஐயையோ
மட்டற்ற நம்மேசு நாதர் திருமேனி
மரமதில் தொங்குதே – ஐயையோ.

3. ஈட்டியால் சேவகன் எட்டியே குத்திட
வன்மனம் சகிக்குமோ – ஐயையோ
பாதகர் மத்தியில் பாவிபோல் தொங்கிட
என்மனம் துடியாதோ – ஐயையோ.

4. பூமியெங்கும்அந்த காரம்உண் டாகவே
என்ன இது விந்தையோ – ஐயையோ
தேவாலயத் திரைச் சீலை இரண்டாகக்
கிழிந்தது மதிசயமே – ஐயையோ.

5. பட்ட மரம் போன்ற நீசருக் காகவே
பாடு பட்டீர் பரனே – ஐயையோ
பாராம லும்மைக் கனியாமல் யூதர்
பற்றிப் பிடித்தனரே – ஐயையோ.

*–V. சத்தியநாதன், சுவிசேஷபுரம்.*

**180. இராகம்: முகாரி.** **தாளம்: ஆதி.**

**கண்ணிகள்**

**ஆதம் புரிந்த பாவத்தாலே மனுடனாகி**
வேதம் புரிந்தென் சிறை விடுத்தீரோ – பரனே.

2. ஏவை பறித்துத் தின்ற கனியின் வினைகள் தீரப்
பாவத்துக்காகப் பலி ஆனீரோ – பரனே.

3. வேத கற்பனை எல்லாம் மீறி நரர் புரிந்த
பாதகந் தீரப்பாடு பட்டீரோ – பரனே.

4. தந்தைக் கடவுளுக்குத் தகன பலி யளித்து
மைந்தரை மீட்க மனம் வைத்தீரோ – பரனே.

5. சிலுவைச் சுமை பெறாமல் தியங்கித் தரையில் வீழக்
கொலைஞர் அடர்ந்து கோட்டி கொண்டீரோ – பரனே.

6. வலிய பாவத்தை நீக்கி மனுவை ஈடேற்றி வைக்கச்
சிலுவை சுமந் திறங்கித் திகைத்தீரோ – பரனே.

7. சென்னியில் தைத்த முடி சிலுவையின் பாரத்தினால்
உன்னி அழுந்தத் துயர் உற்றீரோ – பரனே.

8. வடியும் இரத்தங்களோடு மருகித் தவித்து வாடிக்
கொடிய குருசில் கொலை யுண்டீரோ – பரனே.

9. வானம் புவி படைத்த வல்ல பரனின் மைந்தா
ஈனக் கொலைஞர் கையில் இறந்தீரோ – பரனே.

10. சங்கை இயேசு இராசாவே சத்ய அனாதி தேவே
பங்கமுற்று வாதைகள் பட்டீரோ – பரனே.

அட்டவணை

**181. இராகம்: சங்கரபரணம்.** **தாளம்: திரிசுரம்.**

**பல்லவி**

**பாவி நான் என்ன செய்வேன் – கோவே**
ஜீவன் நீர் விட்டதற்காய்

**அனுபல்லவி**

தேவ கோபத்தினால் மேவிச் சிலுவையில்
தாவி உயிர் விட்டு, சீவித்த தென்கொலோ? – பாவி

**சரணங்கள்**

1. நாடி எனைத் தயவாய் – மணஞ் செய்யத்–தேடி வந்தீர், அரசே,
ஆடுகளுக்காக நீடி உயிர் தரப்,
பாடு பட்டுக் குரு சூடிறந்தீர் அன்றோ? – பாவி

2. பொன்னுல காதிபனே,– தேவரீர் – என்ன செய்தீர், ஐயனே?
சின்னப் படுத்தவும், கன்னடித் தடிக்கவும்,
சென்னியில் முண்முடி தன்னை அழுத்தவும், – பாவி

3. வாரால் அடிக்கப்பட்டுக், – குட்டுண்டு
வாதைப்ட் டெண்ணம் அற்றீர்;
சீரா, மனுடவ தாரா, சருவாததி
காரா, பரமகு மாரா, ஓலோலமே! – பாவி

4. வாதை உமக்கெதினால் – உண்டாயிற்று – பாதகி பாவத்தினால்;
வேதம் நிறைவுற, ஆதி பவம் அற,
நீதி தரும் இயேசு நாத சுவாமியே,– – பாவி

5. குற்றமற்ற மீட்பர் – பவக்கடன் – முற்றும் அறத் தீர்ப்பர்;
கொற்ற வர்க்கும், கல்வி கற்றவர்க்கும், சுரர்
மற்ற வர்க்கும், அள வற்ற கிருபையே. – பாவி

***– வேதநாயகம் சாத்திரியார்***

**182. இராகம்: கமாசு.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**இத்தனை பாடேன் பட்டீர் – இறையே, என்னாலே**
இத்தனை பாடேன் பட்டீர்

அட்டவணை

### அனுபல்லவி

சித்தம் மகிழ்ந்தே நாடி,
சத்துருப் பாவியைத் தேடி, – இத்தனை

### சரணங்கள்

1. தந்தை முதல்வர் சேயனே, சருவாதி நாயனே,
பொந்தியுப் பிலாத்தின் கீழாய், நிந்தனை துயருக் காளாய்
– இத்தனை

2. முள்ளின் முடி சூடியே, மூர்க்கர் வசை பாடியே,
வள்ளலே, மகா உரத்த கள்ளனுடனே நிறுத்த – இத்தனை

3. குருதி சிந்தி ஓடவே, கொலைக்களம் நீடவே,
பருதி இருண்டு போகக், கரங் கழல் அணி நோக, – இத்தனை

4. எந்தை மனு வேலனே, தந்தை அனு கூலனே,
உன்தன் ஐந்து காயத்தாலே எந்தன் வினை தீர் அன்பாலே
– இத்தனை

***–தைரியம் றைற்றர்.***

### அன்னை புலம்பல்

**183. இராகம்: மலையாமி.** **தாளம்: சாப்பு.**

**ஐயோ என் செல்வச் சீராளச் சிகா மணியைச்**
சிலுவையில் மடிய விட்டு – ஓகோ
கொடுமையாய் அடிமைநான் குவலய மீதினில்
கூவென் றலறி நிற்கின்றேன்.

2. பாரி லுள்ளபெரி யோர்களின் பெண்மக்கள்
பார்த் தெதிர் காத்திருந்தும் – ஓகோ
பாவி என் வயிற்றிலே பெருந்துன்ப மடையவோ
பரனே நீ வந்துதித்தாய்.

3. பெற்ற தில்லை யென்று பெண்கள் நகைத்தாலும்
பேதை துயரில்லையோ – ஓகோ
பெற்றதினால் மெத்தப் பெருந்துயர் வாதைகள்
பெரிதாய் அடையலாச்சே.

4. அன்று சம்மனசு கிருபை பெற்றவ ளென்றார்
இதுவோ கிருபை அம்மா – ஓகோ
நன்று சிமியோனும் சொன்ன மொழிப்படி
வந்து பலித்ததுவே.

5. மூன்றரை ஆண்டாக முக்கிய நன்மைகள்
மிகப் பெற்ற யூதாசே – ஐயோ
முப்பது வெள்ளிக்கோ முத்தமிட்டே பொல்லா
மூர்க்கர்க்குக் காட்டி விட்டாய்.

6. ஐயோ பிலாத்துவே அநியாயத் தீர்ப்பிட்டாய்
ஆறுமோ என் மனது – கள்ளன்
பரபாசை நீக்கியே பரனைக் குருசறையப்
பாவி ஒப்புவித்தாயே.

7. எருசலேம் வீதியில் குருசோடு சென்றஎன்
ஏழைக் குமாரன் எங்கே – ஐயோ
எருசலேம் மாதரே என்மகன் இயேசுவை
இங்கு நீர் கண்டதுண்டோ.

## சிலுவைத் தியானம்

**184. இராகம்: நீலாம்புரி.** **தாளம்: ஆதி.**

### திபதைக் கண்ணிகள்

**ஐயா நீரன்று அன்னாகாய் பாவின் வீட்டில்**
நையவே பட்ட பாடு – இயேசையாவே!
கைகள்கட் டப்பட்டதோ? கால்கள்தள் ளாடினதோ?
கயவர்கள் தூஷித்தாரோ – இயேசையாவே!

2. திரு முகம் அருள் மங்க, செங்குரு திகள்பொங்க,
இருளர் கஸ்தி கொடுக்க – இயேசையாவே!
பொறுமை, அன்பு, தயாளம், புனிதமாக விளங்க
அருமைப் பொருள தான – இயேசையாவே!

3. முள்ளின் முடியணிந்து, வள்ளலே என்றிகழ,
எள்ளளவும் பேசாத – இயேசையாவே!
கள்ளன்போலே பிடித்துக் கசையால டித்துமிகக்
கன்மிகள் செய்த பாவம் – இயேசையாவே!

4. கற்றூணில் சேர்த்திறுக்கிச் செற்றலர் தாம்முறுக்கிக்
கர்வங்கொண்டே தூஷிக்க – இயேசையாவே!
சற்று மிரக்க மில்லாச் சண்டாளன் ஓடி வந்து
சாடிக்கன் னத்தறைய – இயேசையாவே!

5. பொன்னான மேனியதில் புழுதி மிகப் படிய
புண்ணியன் நீர் கலங்க – இயேசையாவே!
அண்ணலே, அன்பருய்ய அவத்தைக ளைச்சகித்தீர்;
அடியேனைக் காத்தருளும் – இயேசையாவே.

***– ஆ. சவரிமுத்து போதகர், திண்டுக்கல்.***

**185. இராகம்: முகாரி.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**பாவி நான் செய்த பாவம் தீர்க்க – இந்தப்**
பாரிலே ஏழை ரூபம் தேவன் எடுத்தாரே.

**சரணங்கள்**

1. காவிலே ஏவை செய்த பாவம் – இந்தக்
காசினி யெல்லாம் பரவிக் கொண்டதே மாசாபம்
மேவியே தேவனுடை கோபம் – வந்து
மேல் சுமந்து தீர்த்தும டிந்ததே பரிதாபம் – பாவி

2. மோதியே இரத்த வேர்வை யோட – காவில்
மும்முறை முழங்கால் நின்று கெஞ்சியே மன்றாட
ஜாதியார் மூர்க்கங் கொண்டு தேட – தம்மைத்
தஞ்சமென்று எண்ணிவந்த சீடர் முகம் வாட – பாவி

3. தையலார் முன் அழுது போக – பெற்ற
தாயார்மரி யாளும் வாடித் தயங்கிப்பின் னேக
மெய்யெல்லாம் புண்களாக நோக – சாலேம்
வீதி வழியாகச் சென்றார் விமலர்எனக் காக – பாவி

அட்டவணை

**186. இராகம்: ஆகிரி.** **தாளம்: அடதாள சாப்பு.**

**புலம்பல்**

**ஆதி பராபரனின் சுதனே, கிறிஸ்தேசுநாதா, – எனக்**
காகவே இத்தனை பாடுகள் பட்டீரோ, இயேசுநாதா?
தீதணுகாத பராபரன் சேய் அல்லோ, இயேசுநாதா? – நீர்
செய்த குற்றம்அணு வாகிலும் தான் உண்டோ, இயேசுநாதா?
பாதகன் நான் அல்லோ கட்டுண்ணவேண்டிய தேசுநாதா? – சற்றும்
பாவம் இல்லாத நீர் கட்டுண்ணப் பட்டதேன், இயேசுநாதா?
வாதை எனக்கு வரத்தகும் அல்லவோ, இயேசுநாதா? – சற்றும்
மாசணு காதநீர் வாதைக்குள் ஆனீரோ, இயேசுநாதா?

2. மத்தியஸ் தனாய்எனக் காக வந்தீர் அல்லோ, இயேசுநாதா? –இந்த
வஞ்சகன் சொந்தப்பி ணையாளி நீர் அல்லோ, இயேசுநாதா?
எத்தனை பாதகம் செய்தவனாகிலும், இயேசுநாதா – எனை
இரட்சிப்ப தும்கடன் அல்லாமல், ஆர் கடன், இயேசுநாதா?
சத்துரு நான் என் றறிந்தும் இருந்தீரே, இயேசுநாதா? – கெட்ட
சண்டாளன் சிந்தையை முற்றும் அறிவீரே, இயேசுநாதா?
சித்தம் இரங்கி, எனைமுகம் பார்க்கவே, இயேசுநாதா? – என்னைத்
தேடி வலிய வரத்தய வானீரோ, இயேசுநாதா?

3. பத்தம் இல்லாதது ரோகிதான் அல்லவோ, இயேசுநாதா? – உமைப்
பாடுபடுத்தின பாதகன் நான் அல்லோ, இயேசுநாதா?
பெத்தரிக்கமான பெருமையினாலே நான், இயேசுநாதா? – கெட்ட
பேயைச் சிநேகித்து, இக்கோலம் ஆகினேன், இயேசுநாதா
புத்தி இல்லாத மிருகம்போல் ஆயினேன், இயேசுநாதா; – மனம்
போன வழியெல்லாம் போய் அலைந்தேங்கினேன், இயேசுநாதா
சித்தம் வைத்தென் பேரில் திருக்கடைக் கண்ணோக்கி,
இயேசுநாதா – உன் தன்
சீர்பதம் எப்போதும் சேவை புரியச்செய், இயேசுநாதா?

***–வேதநாயகம் சாத்திரியார்***

அட்டவணை

**187. இராகம்: சங்கராபரணம். தாளம்: சதுர்ச்ர ரூபகம்.**

**“என் மனுவைக் கேட்கும் நாதா” – என்ற மெட்டு**

**பல்லவி**

**நெஞ்சமே, கெத்சமேனக்கு**
நீ நடந்து வந்திடாயோ
சஞ்சலத்தால் நெஞ்சுருகி
தயங்குகின்றார் ஆண்டவனார்!

2. ஆத்துமத்தில் வாதை மிஞ்சி
அங்கலாய்த்து வாடுகின்றார்
தேற்றுவார் அங்காரு மின்றித்
தியங்குகின்றார் ஆண்டவனார்!

3. தேவ கோபத் தீச்சூளையில்
சிந்தை நொந்து வெந்துருகி
ஆவலாய்த் தரையில் வீழ்ந்து,
அழுது ஜெபம் செய்கின்றாரே.

4. அப்பா பிதாவே இப்பாத்திரம்
அகலச் செய்யும் சித்தமானால்,
எப்படியும் தம் சித்தம் போல்
எனக் காகட்டும் என்கின்றாரே.

5. இரத்த வேர்வை யாலே தேகம்
மெத்த நனைந் திருக்கு தையோ!
குற்ற மொன்றும் செய்திடாத
கொற்றவர்க் கிவ் வாதை யேனோ?

6. வானத்தி லிருந்தோர் தூதன்
வந்தவரைப் பலப்படுத்தத்,
தாம் அதிகச் சஞ்சலத்தால்
தரையில் விழுந் தழுகின்றாரே.

7. தாங்கொண்ணா மயக்கம் கொண்டு
தம் சீடர் உறங்கி வீழ
ஆங்கவர் தனித்திருந்து
அங்கலாய்த்து வாடுகின்றார்

8. இந்த ஆத்ம வாதை யெல்லாம்
எந்தன் பாவத் தால் வந்ததே
சுந்தரம் சேர் இயேசுவே என்
தோசம் பொறுத் தாளுமையா.

**188. இராகம்: முகாரி.** **தாளம்: ஏகம்.**

**அருவுருவே, நரருருவாய், என் நிமித்தம் இது தருணம்,**
ஏன் வருத்தமாய் – எனதேசுவே, ஐயா, நீர்
அவஸ்தையுறக் காரணமேன்,
ஆதி மொழியாலோ?

2. சோரி சிந்தும் வேர்வையால், என்நிமித்தம், இது தருணம்,
ஏன்வருத்தமாய் – எனதேசுவே, ஐயா நீர்
சோர்ந்து விழுந் தழுவ தெவர்
தீவினையின் பயனோ?

3. ஆவியிலே தேவனையால், என்நிமித்தம், இதுதருணம்
என் வருத்தமாய் – எனதேசுவே, ஐயா, நீர்
அழுது கெஞ்சும் காரண மேன்
ஆதாம் ஏவாள் வினையோ?

4. பொற்கிரீடம் அணிசிரசில், என்நிமித்தம், இதுதருணம்
ஏன்வருத்தமாய் – எனதேசுவே, ஐயா – நீர்
போத நொறுங்குண்ட செயல்
பொற்கொடி செய்வினையோ?

5. வன்மையுடன் உடல்கிழிய, என்னிமித்தம் இதுதருணம்
ஏன்வருத்தமாய் – எனதேசுவே, ஐயா, நீர்
வாரடிகள் பட்ட தேனோ
மானிடர்கள் செய் வினையோ?

6. அருட்கரங்கள் இரண்டிலேயும், என்னிமித்தம், இதுதருணம்
என்வருத்தமாய் – எனதேசுவே, ஐயா, நீர்
ஆணியறை யுண்டது பெண்
அறுத்த கனி வினையோ?

7. பங்காய்ப் பூம்பாதமதில், என்நிமித்தம், இதுதருணம்
ஏன்வருத்தமாய் – எனதேசுவே, ஐயா, நீர்
படுகாய மான தேவை
பறித்த கனி வினையோ?

8. திருவிலாவில் ஈட்டியினால், என்னிமித்தம், இதுதருணம்
ஏன்வரத்தமாய் – எனதேசுவே, ஐயா, நீர்
திறத்தோடும் காட்சி அவள்
செய்த தீவினை தானோ?

9. துய்யதிரு மேனி எல்லாம், என்நிமித்தம், இதுதருணம்
ஏன்வருத்தமாய் – எனதேசுவே, ஐயா, இங்கே
சோரி வெள்ளம் பாய்வது முன்
சொன்ன மொழி யாலோ?

10. தேவனுமாய், மனுடனுமாய், என்நிமித்தம், இதுதருணம்
ஏன்வருத்தமாய் – எனதேசுவே, ஐயா, இங்கே
தேடி வந்த காரணமேன்
தேவன் உரை தானோ?

11. கன்னியர்க்குள் நான் ஒருபெண், என்நிமித்தம், இதுதருணம்
ஏன்வருத்தமாய் – எனதேசுவே, ஐயா, நீர்
கஸ்தி யுறக்காரண மேன்
கருணை கொண்ட தாலோ?

**189. இராகம்: லாவணி.** **தாளம்: ரூபகம்.**

**தேவசுதன் பூவுலகோர் பாவ மெல்லாம் தீரத்**
திருமரண மானசெய்கை சிந்தைசெய் என் னுளமே.

அட்டவணை

2. எருசலையில் ஈராறு சீஷருடன் பஸ்காத்
திருவிருந்தை ஆசரித்துச் சேர்ந்தே நற்கெத்சேமில்

3. கெத்சேமனே சீடர்பதி னொருவருடன் சென்று
கெஞ்சிஒரு செபமுறையை மிஞ்சி அவர் செய்ய

4. செய்தநம தாண்டவரின் திருமேனி எல்லாம்
செந்நிறமாய்ச் சிவந்துடலில் சேர்ந்த இரத்தமெல்லாம்

5. இரத்தமெல்லாம் வேர்வையதாய்ப் புற்றரையி லோட
இரட்சகனார் அயர்ந்துடனே குப்புற விழுந்தார்.

6. தாரணியோர் பாவம்யாவும் தற்பரனார் கண்முன்
திரண்டு ஒரு பாத்திரத்தில் புரண்டுவரக் கண்டார்

7. கண்ட சுதன் மெய் சோர்ந்து கர்த்தனது சித்தம்
மண்டலத்தில் ஆகவென்று மறுபடி மன்றாடி

8. மன்றாடி மிகவாடி நிற்கு மந்த வேளை
சென்றாரங் கொருதூதர் செம்மறியைத் தேற்ற

9. தேறுதல டைந்தகுரு சீடரிடம் போக
ஆறுதலாய்த் தூங்கினஅம் மூவரைக் கண்ணுற்றார்

10. கண்ணுற்றுப் பார்த்தவரைக் கைதட்டி எழுப்பி
என்ன இது நித்திரை எழுந்திருங்கள் போவோம்

11. போவோம் அதோபெரிய கும்பலையே பார்க்கச்
சேர்வோம் எதிர் கொண்டு மனப் பூர்வமாய் ஒப்பிக்க

12. ஒப்பிக்க வென்று சொல்லித் தற்பரனார் போகக்
குப்புற விழுந்தா ரந்தக் கூட்டமெல்லாம் தாழ

13. தாழ வீழ்ந்த கூட்டமதைத் தற்பரனார் கிட்டி
மீளவும் எழுப்பியபின் வீரமுள்ள சீடன்

14. சீடனாம் பேதுரு மிக மூர்க்க வெறி கொண்டு
வீசினானோர் பட்டயத்தால் மல்கூசின் காதை

15. காதை ஒட்டிப் பேதுருவைக் கண்டனம் செய்வித்து
வாதை யாவும் பட்டிறக்க வந்தவரைக் கண்டான்

16. கண்டவுடன் சண்டாளப் பாதகன் துரோகி
கன்னமதில் முத்தமிட்டுக் காட்டினான் யூதாசே.

17. யூதாசு காட்டஅந்த யூதர் பிடித்துடனே
யுகம்வனைந்த கரமதையே மிக நெருங்கக் கட்டி

18. கட்டி வரும் வழியில் செய்த நிட்டூர மெல்லாம்
கண்டு கல்லு முருகுமதைச் சொல்லவும் நாவில்லையே

19. நாவினால் சொலற்கரிய நடபடிக்கை யெல்லாம்
நடத்தியே காய்பா மனையில் நாதனைச் சேர்த்தார்கள்

20. சேர்த்தபின்பு அந்தக்காய்பா தேவசுதன் தம்மைச்
செய்த நிந்தை மிகுதியல்லோ எருசலையோர் காண.

**190. இராகம்: சலநாட்டை. தாளம்: திரிபுடை.**

**பல்லவி**

**உருகாயோ நெஞ்சமே நீ**
குருசினில் அந்தோ பார்!
கரங்கால்கள் ஆணி யேறித்
திருமேனி நையுதே.

அட்டவணை

**சரணங்கள்**

1. திண்டுபோல எண்டிசையின்
தொண்டர் பாவம் ஆண்டான் மேல்
நின்றதே ஒர் பண்டு ஏவை
தின்ற சாபம் மண்டுதே - உருகாயோ

2. தாகம் மீறி நா வரண்டு
தங்க மேனி மங்குதே
இயேசுபரன் கண் அயர்ந்து
எத்தனையாய் ஏங்குறார் - உருகாயோ

3. வல்ல பேயை வெல்ல வானம்
விட்டு வந்த தெய்வம் பார்
புல்லர் ஈதோ நன்றி கெட்டுப்
புறம்பாக்கினார் அந்தோ - உருகாயோ

4. மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை
மாய்க்க வந்த மன்னனார்
இந்நில மெல்லாம் புரக்க
ஈனக் குரு சேறினார் - உருகாயோ

5. மூவுலகம் தாங்கும் தேவன்
மூன்று ஆணி தாங்கிடச்
சாகும் வேளை வந்திப் போது
சிலுவைதனில் தொங்குறார் - உருகாயோ

6. நித்திய காலம் பத்திரமாய்
நீசர் உய்ய வந்தவர்
சத்திய வாசன் சித்தமேவும்
சங்கை இராசன் இங்கு பார் - உருகாயோ

அட்டவணை

**191. இராகம்: இந்துஸ்தானி.** **தாளம்: ஆதி.**

## முதலாம் திருமொழி

**“பிதாவே, இவர்களுக்கு மன்னியும்: தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே” லூக்.23:34**

**“வாராவினை வந்தாலும்” என்ற மெட்டு**

**பல்லவி**

**சுவாமி இவர்க்கிதை மன்னியும் சுவாமி**
செய்வ தறியார்இ வர்களிப் பூமி.

**சரணங்கள்**

1. சுவாமி என அறியாமற் செய்தார்கள்
சற்றும் இரக்கஅற றேஇருந் தார்கள் - சுவாமி

2. தாங்கள் செய்வதின்ன தென்றறியார்கள்
தற்பரன் என்னை இங் காரறிவார்கள் - சுவாமி

3. முள் முடி சூட்டி எனைப் பழித்தார்கள்
மூங்கி லெடுத்தோன் மெலடித்தார்கள் - சுவாமி

4. நீசச் சண்டாளர் என் கண் கட்டினார்கள்
நீ சொல்லிப் போடெனவே சூட்டினார்கள் - சுவாமி

5. கன்னத் தடித்துக் கலங்க வைத்தார்கள்
மன்னனே என்று பகடி செய்தார்கள் - சுவாமி

6. என் தன் முகத்தினிலே துப்பினார்கள்
என்னை வைதுவைது வசை செப்பினார்கள் - சுவாமி

7. பொய்யான சாட்சிகளைக் கூட்டினார்கள்
போதனை செய்து குற்றஞ் சாட்டினார்கள் - சுவாமி

8. வாரதினால் என்னையே அடித்தார்கள்
வாதை அநேகஞ் செய்தே முடித்தார்கள் – சுவாமி

அட்டவணை

9. பாதகம் செய்தவனை விடுத்தார்கள்
பாழ்மரத்தை என் தோள்மேல் வைத்தார்கள் – சுவாமி

10. கால்கரத் தாணி கடாவி வைத்தார்கள்
கள்ளர் நடுவில் மரிக்க வைத்தார்கள் – சுவாமி

11. வஸ்திர மெல்லா உரிந்து கொண்டார்கள்
கஸ்திப் படுத்தி வதைத்துக் கொன்றார்கள் – சுவாமி

**192. இராகம்: இந்துஸ்தானி. தாளம்: ஆதி.**

**இரண்டாம் திருமொழி**

**"இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகின்றேன்" லூக்.23:43.**

**"இம்மணர்க் குன்னருள் ஈபரவாசா" என்ற மெட்டு**

**பல்லவி**

**இன்றே நீ என்னுடன் இருப்பாய் பரதீசில்**
என்ற நல்வாக்கு இப்பா விக்கு ஈவீரே

1. கர்த்தா நும் இராச்சியத்தில் சேரும் போதென்னையும்
கருத்தில் வையு மென்ற கள்ளன் பெற்றாற்போல் – இன்றே

2. கொல்லும் உம் பகைவர்க்குக் கூறும் மன்னிப்பைக்
கூர்ந்து கள்ளன் கேட்டுக் குணப்படும் தன்மையாய் – இன்றே

3. குருசின் உம் ரூபத்தைக் கொலைஞன் அகம் பதித்து
உருகியே தன்னெஞ்சம் உமைப் பற்றச் செய்தீரே – இன்றே

**193. இராகம்: சாவளி. தாளம்: ஆதி.**

**"காலம் ஆதாயப்படுத்து" என்ற மெட்டு**

**பல்லவி**

**இன்றைக் கென்னுட னிருப்பாய் – என்ற நல் வாக்கு**
என்னேசு சொன்னார் விருப்பாய்.

### அனுபல்லவி

இன்றே பரதீசினில் என்னோடு வந்து நீயும்
குன்றா நல்லாசீர் வாதங் கண்டானந்திப்பாய் பாவி – இன்றைக்

### சரணங்கள்

1. பக்கத்துக் கள்ளன் பழிக்க – அதட்டியே
தக்க ஆலோசனை சொன்னான்.
மிக்கப் பிழைக ளுணர்ந்து – என் குற்றத்திற்கு
ஏற்கும் இத் தண்டனை என்றான்
மெச்சும் இந் நல்லுணர்வை அச்சன் மனதில் நோக்கி
இச்சணமே என்னோடு இரட்சண்யம் சேருவாயே – இன்றைக்

2. தம் குற்றத்தை யுணருவோர் – இத்தாரணியில்
கண்டு பிடிப்ப தரிதே
பின் குற்றம் பாராட்டுவோர்கள் – உலகில் மெத்தப்
பேதையில் பேதைகள் தானே
அன்புற்ற கள்ளனைப்போல் தம் குற்றத்தை யுணர்வோர்
இன்புற் றெந்நாளும் வாழ்வார் ஈசன் கிருபையினால்–இன்றைக்

***–மறைத்திரு. V. ஞானபரணம், ஆள்வானேரி.***

**194. இராகம்: தந்யாசி. தாளம்: ஆதி.**

**“எத்தனை திரள் என் பாவம் என் தேவனே” என்ற மெட்டு**

### பல்லவி

**இன்றைக் கென்னுடன் நீ பரதீசி லிருப்பாய்**
இதுவே மெய் யென்றீரே.

### அனுபல்லவி

அன்று வலபாரிசக் கள்ளன் வேண்டுதல் கேட்டுச்
சிந்தை இரங்கினாற்போல் செய்யும் நான் படுபாவி – இன்றைக்

### சரணங்கள்

1. திருமுகப் பிரகாசம் அருள் அவன் பிழைத்தான்
திருவருள் செய்யும் எனக்கே
கிருபையின் மேற் கிருபை பெருகிட விழி பாரும்
மரண சமயமும் உம் மலர்முக ஒளி தாரும் – இன்றைக்

2. ஆயுள் காலமெல்லாம் அநியாயம் செய்தவன்
அடைந்தது பரகதி ஆச்சரியம்
பாயும் பேரன்புடைய பகவான் கிருபையினால்
பரம வாழ்வு பெறுவார் பாவிகள் எவருமே – இன்றைக்

***– M.S. ஞானப்பிரகாசம் உபதேசியார், குருவிகுளம்.***

**195. இராகம்: சலநாட்டை. தாளம்: திர்புடை.**

**மூன்றாம் திருமொழி**

**"அப்பொழுது இயேசு தம்முடை தாயையும் அருகே நின்ற தமக்கு, அன்பாயிருந்த சீஷனையுங்கண்டு, தம்முடைய தாயை நோக்கி, ஸ்திரியே அதோ உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி, அதோ உன் தாய் என்றார்" யோவா.19:26–27.**

**"உருகாதோ நெஞ்சமே" என்ற மெட்டு**

**அருகில் நின்ற அன்னையாரை**
ஆவலாய் ஒப்புவித்தார்
அருமையுள்ள சீடன் யோவான்
அன்பாய்ப் பாது காக்கவே.

2. தாய் தந்தையை ஆயுள் மட்டும்
நேயமுடன் பாதுகாக்கச்
சேயருக்குக் கற்பித்தவர்
செய்து தாமே காட்டினார்.

3. சாக்குப் போக்குச் சொல்லிடாமல்
வாக்குடன் கற்பனையைத்
தீர்க்கமாய்க் கைக்கொள்ளுவோர்கள்
தீர்க்காயுசும் பெறுவார்.

***–மறைத்திரு. I.J. ஐயாத்துரை, ஆள்வானேரி.***

**196. இராகம்: சுருட்டி, காப்பி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**என்செய்வேன் மகனே நான்**
இதற்கோ உனைப் பெற்றெடுத்தேன்!

அட்டவணை

**அனுபல்லவி**

இறைவா இது சோதனையோ இப்படி முடிந்திட

**சரணங்கள்**

1. இப்போ நான் வாடிநிற்க இக்கட்டு வந்ததையோ
சிலுவையின் மீதினிலே சீவனும் போகுதையோ
அன்பே முன்பே ஆதர வில்லை ஐயா – என்செய்வேன்

2. நேசன் யோவானை யுமே நியமித்தாய் எனைக் காக்க
நின்னையே நான் நினைக்க நெஞ்சமோ ஆறுதில்லை
நினைவே கனவே நிலையில்லா தலைவேனே – என்செய்வேன்

3. சாவுரு வேளை தன்னில் சான்றோர்க ளைநினைத்து
சற்குருநின் போதனையைச் சரிவரச் சாற்றி வைத்தாய்
கர்த்தா கர்த்தா காரும் காரும் என்னை – என்செய்வேன்

4. ஐயையோ பாலகனே அதிசயமாய் வந்துதித்தாய்
அருமையாய் வளர்ந்திங்கு அவதிக்குள் அமைந்தனையே
அருமைத் திருமைந் தனே உயிரெரியுதையோ – என்செய்வேன்

5. யூதர்கன் னத்த டிக்க இறைவா நீ துடி துடிக்க
கண்ணினால் பார்த்திருக்க கர்த்தனே சோதனையோ
கருவாய் உருவாய் கருப்பத்தில் வந்தவனே – என்செய்வேன்

6. பாவிக ளைத்தேற்றப் பாவக்கறை அகற்றப்
படுகிற பாடுகளை நான் பார்ப்பேனோ என் மகனே
பலமாய் உரமாய் அடிகள் விழுகுதையோ – என்செய்வேன்

7. கன்னத்திலடிபடவும் கனத்த சிலுவை தூக்கவும்
கள்ளரோடு சாகவும் காலமோ என் மகனே
கருத்தாய் உரித்தாய் கரத்தால் எடுத்தேனே – என்செய்வேன்

அட்டவணை

## 197.

**“பாவி நான் என்ன செய்வேன் அழல் பற்றி” என்ற மெட்டு**

**அம்மா நான் என்ன செய்வேன் நீர்தான்**
அழ வேண்டாம் அங்கம் பதறி – அம்மா

1. உகந்த யோவான் உம் மகன் நான்
உள்ளன்பால் சம்பாதித்தேன்
மகிழ்ந்தும்மை ஆதரிப்பான் – அம்மா

2. தந்தை தாய் பேணிடுவோர் மண்ணில்
தக்க மறை சொற்படி
சந்ததம் வாழ்த்திடுவார் – அம்மா

3. என்னுடை இராச்சியமோ அது
இகத்திற்குரியதில்லை
மண்ணாள வந்தேனல்லேன் – அம்மா

4. பரனைவிட எதையும் அதிகமாய்ப்
பாரில் நேசிப்பவர்கள்
பரத்துக்கு பாத்திரர் அவ்லர் – அம்மா

5. உலகம் பாராட்டுமந்த மாபெரும்
உரித்தான இரத்த பாசம்
பலனற்ற பாழ் நேசமாம் – அம்மா

6. கிறிஸ்துவுக்குள் எல்லாரும் எங்கும்
சகோதர சகோதரிகள்
விரித்தேன் மெய் யன்பிதுதான் – அம்மா

7. என் பிதா சித்தப்படி – எங்கும்
எப்போதும் நடப்பவர்கள்
என் தாய் சகோதரரே – அம்மா

***–S. ஞானசிகாமணி, அத்திகுளம்.***

அட்டவணை

198.

## நான்காம் திருமொழி

**"ஏறக்குறைய ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு, ஏலி, ஏலி, லாமா சபக்தானி என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு என் கடவுளே என் கடவுளே என் கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று அர்த்தமாம். மத்.27:46**

### பல்லவி

**ஏலி ஏலி லாமா சபத்தானி**
சால மெஞ்ஞானி சர்வ நித்யானி.

### சரணங்கள்

1. நேச குமாரன் என்று சொன்னீரே
பாசமில்லையோ பரம செங்கோலா - ஏலி

2. பலர் படும் பாட்டை ஒருவர் சுமந்தால்
நிலைக்குமோ தேகம் ஒருநிமிட நேரம் - ஏலி

3. மகனையும் மறக்க மனமும் வந்ததுவோ
செகத்தோர்க்காய் வந்த நற்பல னிதுவோ - ஏலி

4. பாவிகள் படுத்தும் பாடு போதாதோ
காவலா! நீரும் கைவிட லாமோ - ஏலி

**199. இராகம்: கெண்டை. தாளம்: ஆதி**

**"எங்கே சுமந்து போகிறீர்" என்ற மெட்டு**

### பல்லவி

**என் தேவனே என் தேவனே - எனை ஏன் கைவிட்டீர்**
என் தேவனே என் தேவனே.

### சரணங்கள்

1. வன்ம நெஞ்ச யூதர்களும் மற்றும் சிநேகிதரும்
சென்ம கன்ம பாவிகளும் சேர்ந்தெனைக் கை நெகிழ்தார் - என்

2. என் தீட்சை நாளில் என்பால் இனிய சாட்சி பகர்ந்து
என் நேச சுத னென்றீர் யானும் நேசித்தே னிப்போ - என்

3. வாழ்நாள் பரியந்தமே தஞ்சமென் றும்மைச் சார்ந்தோர்
வான்கதி சென்றுவல பாரிசம் வீற்றிருப்பார் – என்

**200. இராகம்: மோகனம். தாளம்: ரூபகம்.**

**“பொற்பு மிகும் வானுலகும்” என்ற மெட்டு**

**என் தேவனே, என் தேவனே,**
என்னைக் கைவிட்டெங்கே சென்றீர் கோனே? – இந்த
வன் கொலைஞர் விருப்பத்திற்கு
என்னை ஒப்புக் கொடுத்ததென்ன – தேவே.

2. தொல்லுலகின் பாவப் பாரம்
அல்லல் படுத்தி வருந்தி மிகவாய்க் – கொடும்
வல்லிருள் என் கண்ணை மூட
நல்லாய் முகம் மறைத்ததென்ன – கோவே

3. தீயர் தமைத் திருக்கரத்தால்
நேயமுடன் அணைத்தேற்று இரட்சித்து – நல்
ஆயன் மந்தை சேர்ந்திடவோ
மாய மாயெனைக் கைவிட்டீர் – தேவே

4. நோய் நீங் கித் தன் சேய் சுகிக்க
தாய் மருந்தருந்திப் பத்யம் காப்பாள் – யானும்
பாவியை நீதிமானாக்கப்
பாவிபோற் கைவிடப் பட்டேனோ – கோவே

5. வித்தொன்று செத்திடினே
பத்தாய் நூறாய்ப் பலன் தருமே அதுபோல் – யான்
செத்திடின் பொல்லார் பிழைத்துப்
புத்திரராகவோ கைவிட்டீர் – தேவே

6. பாவத்தா லுண்டாம் மரணம்
யாவரையும் விழுங்கிப் போடாதிருக்கத் – தீய
பாவத்தை வென்றேன் அவ்வாறு
சாவை வெல்லவோ கைவிட்டீர் – கோவே.

*–S. ஞானையா, சுவிசேஷபுரம்.*

அட்டவணை

**201. இராகம்: மோகனம்.** **தாளம்: ஏகம்.**

**ஐந்தாம் திருமொழி**

**'அதன் பின்பு எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேத வாக்கியம் நிறைவேறத் தக்கதாக' 'தாகமாயிருக்கிறேன்' என்றார். யோவா.19:28.**

**“உந்தன் ஆவியே சுவாமி எந்தன் மீதினில்” என்ற மெட்டு**

**தாக மானீரோ இயேசு தற்பரா சுவாமி**
தாரணியோர் மேல் கடுந்தாக மானீரோ.

2. நித்திய சீவ நதி நீரே யாயினும்
நீசக் குருசிவ் நிற்கத் தாகமானீரோ.

3. நாவும் வரண்டு மேல் நாவோடே ஒட்டி
யாவும் இருண்டுவரத் தாகமானீரோ.

4. கடற் காளானில் கடுங் காடியோ உமக்
கான பானமோ நல்ல கர்த்தனே சுவாமி.

5. பாவி அடியேன் உம்மில் பாசம் வைத்திடப்
பானமாகவே தாக நாட்டங் கொண்டீரோ.

**202. இராகம்: வராளி.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**தாகமா யிருக்கிறே னென்றார் – என் இயேசு சுவாமி**
தாகமா யிருக்கிறே னென்றார்.

**சரணங்கள்**

1. ஆக மத்தி லன்று சொன்னார் தாகமுள்ளோர் யாரும் வாரும்
தாகம் தீர்ப்பே னென்றே இந்தக் தாகமதென்ன தாகமோ–தாகமா

2. ஆகார் இசர வேலருக்கு அடவியில் தாகந்தீர்த்தோர்
ஏகா விசுவாச முள்ளோன் தாகமடையா னென்றவர் – தாகமா

3. தாகமது இரண்டுவிதம் சரீர ஆத்தும தாகம்
தேக சோரி சிந்து தாகம் சீரடையா ஆன்ம தாகம் – தாகமா

*–M.S. ஞானப்பிரகாசம் உபதேசியார், குருவிகுளம்.*

அட்டவணை

**203. இராகம்: செஞ்சுருட்டி** **தாளம்: ரூபகம்**

## ஆறாம் திருமொழி

**"இயேசு காடியை வாங்கின பின்பு, "முடிந்தது" என்று சொல்லி". யோவா.19:30.**

**பல்லவி**

**முடிந்ததென் நீரோ ஐயா**
முன்னாள் வினையான தெல்லாம்

**சரணங்கள்**

1. தேவபிதா சித்தமதைத் திட்ட மாகவே
செய்துநிறை வேற்றி இப்போம் சிலுவை மீதேறி நின்று – முடிந்த

2. பூரணரான இயேசு புண்ணியக் கிரியை
பூர்த்தியாய் செய்து இப்போம் பூமி விட்டு ஏகு முன்னே –முடிந்த

3. வேண்டிய பாடனைத்தும் வேதனே நீரும்
தாண்டியே உத்தரித்து தாரணி விண்டேகு முன்னே – முடிந்த

4. தேவ கற்பனைகளெல்லாம் திட்டமாகவே
செய்தே மரணவாயில் செப்பவே இந்த வார்த்தை – முடிந்த

**204. இராகம்: சங்கராபரணம்** **தாளம்: ஆதி**

**"பாடுபட்ட இயேசையா" என்ற மெட்டு**

**பல்லவி**

**முடிந்ததென்று இயேசுநாதர்**
முழக்கத்துடன் மொழிந்தனர்

**அனுபல்லவி**

அடியாருக்காய் யாவற்றையும்
முடித்துவிட்ட படியினால் – முடிந்ததென்று

**சரணங்கள்**

1. நியாயப் பிரமாண மெல்லாம்
நிறைவேற்றியே தீர்ந்த பின்
தியாக பலியாகத் தம்மைச்
செலுத்துகின்ற தருணத்தில் – முடிந்ததென்று

2. மோசே முதலான தீர்க்கர்
முன்னுரைத்த வைகளைக்
காசினியில் வந்துதித்துக்
கர்த்தன் நிறை வேற்றினார் – முடிந்ததென்று

3. இரட்சண்ய ஏற்பாட்டைத் தம்
இரத்தத்தாலே முத்திரித்து
இரக்கத்தினால் மோட்ச வாசல்
திறந்து வைத்து விட்டபின் – முடிந்ததென்று

4. முற்றும் நம்மைத் தாங்கிடவும்
முழுவதுமாய் இரட்சிக்கவும்
குற்றமின்றித் தமக்கு முன்னே
நிற்கச் செய்யவும் வல்லோர் – முடிந்ததென்று

**205.**

**“அப்பா தயாள குணானந்த” என்ற மெட்டு**

**மூச்சொடுங்கும் நேரம் முடிந்தது என்றீரே இயேசு நாதா**
மூவரும் செய்த **ஆலோசனை** முடிந்ததோ இயேசு நாதா

2. ஆவியால் பேசின தீர்க்கரின் வார்த்தைகள் இயேசு நாதா
மேவிச் சிலுவையைத் தாவி முடிந்ததோ இயேசு நாதா

3. முந்தின ஏற்பாடு முன் னடையாளங்கள் இயேசு நாதா
முற்றும் மறைந்து முழுதும் முடிந்ததோ இயேசு நாதா

4. தேவாசனம் விட்டுப் பூதலமே வந்த இயேசு நாதா
தேவ சித்த நோக்கம் யாவும் முடிந்ததோ இயேசு நாதா

5. மாண்டு மனிதரை மீட்டுக் கொண்டதினால் இயேசு நாதா
மானிட இரட்சிப்பு முற்றும் முடிந்ததோ இயேசு நாதா

6. மீட்பின் கிருபையில் பாக்கியமில்லாமலே இயேசு நாதா
மீட்கப் பட்டோர்களின் இலக்கம் முடிந்ததோ இயேசு நாதா

7. எம் துன்பம் துக்கம் எல்லாம் முடிந்து போச்சே இயேசு நாதா
ஏழை இதற்கு நானென்ன பதில் செய்வேன் இயேசு நாதா

அட்டவணை

8. இன்னமு மும்முடை ஆவியின் வேலையை இயேசு நாதா
என்னில் முடித்து ஈடேறவே செய்திடும் இயேசு நாதா

**206. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி**

## ஏழாம் திருமொழி

**“அப்பொழுது இயேசு, 'பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்' என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி சீவனை விட்டார்”. லூக்.23:46.**

**“லோகநாதா லோகநாதா” என்ற மெட்டு**

**ஆவியைப் பிதாவின் கையில்**
ஆவலாய் ஒப்புவித்தீர்
சீவனுள்ள தேவ சேயாம்
சேசுநாத சுவாமியே.

2. மரண அதிகாரியையும்
மரணத்தால் அழித்ததால்
மரணத்தின் கூர் வல்லமை
மடக்கிப் பயம் நீக்கினீர்

3. சாவின் பள்ளத் தாக்கி னூடே
தாசர் செல்லும் நேரத்தில்
தேவா எங்கள் ஆத்துமாவைத்
தேற்றித் திடப்படுத்தும்

4. சாவே உன்கூர் எங்கே யென்று
செயகீதம் பாடியே
தேவலோகம் சேர்ந்தென் றென்றும்
சேமமாக வாழச் செய்வீர்

5. பாவி பயமின்றிச் சாக
பார்ப்பே னுந்தன் மாதிரி
தேவ சாயல் என்னில் காண
தேடுவேன் உம் நீதியை

அட்டவணை

# மரணம்

**207. இராகம்: ஆகிரி.** **தாளம்: ரூபகம்**

**சிலுவை தனில் உயிர் பிரிய திரு மகனார் முகம் நோக்கி**
தேவ அன்னை கூவி யழுதாள் – வெகுவாய், ஆ! ஆ!

2. உலகமதி விருசோரர் நடுவாக மரமீதில்
உறங்குவதும் சுகமாச்சோ – என் மகனே, ஆ! ஆ!

3. பல பல பேரவமாக பகடியொடு பாராட்ட
பாங்கதனில் நித்திரை யானீரோ – என் மகனே, ஆ! ஆ!

4. ஐயாயிரவர் பசியை அமர்த்தி அரவணைத்த
அருட் கைகள் அயர்ந்து சோர்ந்ததுவோ–என் மகனே, ஆ!ஆ!

5. சங்கிலி துரட்டிக் கசைவார் முள் பிரம்படியால்
சரீர பலவீன மானீரோ – என் மகனே, ஆ! ஆ!

**208. இராகம்: செஞ்சுருட்டி.** **தாளம்: சாப்பு**

**“வா பாவி மலைத்து நில்லாதே தேவா” – என்ற மெட்டு**

**பல்லவி**

**பார் பார் பார் இயேசுவின் ஜீவன் போகுது பார்**

**சரணங்கள்**

1. கண்விழி வீழ்ந்திடக் கைகள் தளர்ந்திட
கால்களும் சோர்ந்து விழ
விண்ணொளி மங்கியே ஆவி பிரிந்துதிரு
மேனி குளிர்ந்திடவே – பார்

2. கல்வாரி வெற்பிலே காரி ருட்டிலே
காணுது செவ்வானம்
நல்மாரி பெய்யுது செவ்வாரி வீசுது
நாடு செழித்திடவோ? – பார்

3. பஞ்ச காயங்களில் செஞ்சுனை பாயுது
பாவி நெஞ்சைக் கழுவ
சஞ்சீவி பஞ்சப் பிரளயம் சாடுது
தற்பரன் பக்கத்திலே – பார்

4. பாவ நாசத்திலே புண்ணிய கன்மலை
பார் முனி ஓங்கிய கோல்
கோப தாபத்திலே வீசின வீச்சிலே
குமிழி விட் டோடுது பார் – பார்

5. ஐந்து மண்டபத் தாறு பெதஸ்தா
அங்கதோ கல்வாரியில்
ஐந்து மடையும் உடைந்து மிகவாய்
அருள் வெள்ளம் சாடுது பார் – பார்

6. வல்ல தேவன் கையில், வாய தைத்திறந்து
வலுத்த சத்தமிட்டு,
பொல்லார்க்காய்த் தம் ஆவி தன்னை ஒப்புவித்துப்
பொற்பரன் கண் மூடினார் – பார்

**209. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**அந்தச் சிலுவையை நேசிப்பேன்**
பலம் ஒய்ந்து நான்சாகும் வரை,
தொல்சிலு வையைநான் பற்றுவேன்
பின்அதால் கிரீடத்தை அணிவேன்

**சரணங்கள்**

1. கொல்கொதா மலைமேல் தோன்று ______ சிலுவை
அல்லல் பழிப்பின் சின்னமதாம்,
நீசப்பாவி கட்காய் நேசர்மாண் டாரதில்
நேசிப்பேன் அத்தொல் சிலுவையை.

2. தேவாட்டுக் குட்டிதம் மாட்சிமை வெறுத்து
உலகொர் பழித்த குருசை,
கல்வாரி மலைக்கே சுமந்தார் எனக்காய்
கவர்ந்த தென்னுள்ளத் தைஅது.

3. என்பாவம் மன்னிக்க, என்னைச் சுத்தமாக்க,
நேசர் மாண்ட சிலுவையதோ!
தூய குருதி தோய்ந்த அந்தச் சிலுவை
அழகெத் தனைமாட் சிமைபார்!

4. குருசின் இழிவை மகிழ்வாய்ச் சுமந்தே
மேன்மை பாராட்டுவேன் நிந்தையில்
பின்னால் மோட்ச லோகில் நேசர் கூட்டிப்
பங்களிப் பார்தம் மகிமையில்!

## தேவாரம்

**210. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி**

**கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப் பெருங்கருணை**
வெள்ளமுகந் தருள்பொழியும் விமலலோ சனநிதியை
உள்ளமுவப் புறுதேனை உயிர்க்குயிரை உலவாத
தெள்ளமுகைத் தீங்கனியைச் சிலுவைமிசைக் கண்டேனே.

***கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப் பெருங்கருணை***
***வெள்ளமுகந் தருள்பொழியும் விமலலோ சனநிதியை***
***உள்ளமுவப் புறுதேனை யுயிர்க்குயிரை யுலவாத***
***தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவைமிசைக் கண்டேனே.***

***(357)***

2. படிசாய்ந்த பெரும்பாவப் பரஞ்சுமந்து பரமர்திரு
மடிசாய்த்த திருமேனி வதைந்திழிசெங் குருதியுக
முடிசாய்ந்த பெருமானை மூதலகை தலைநசுக்கிக்
கொடி சாய்த்த கொற்றவனைக் குருசின்மிசைக் கண்டேனே.

***படிசாய்த்த பெரும்பாவப் பரஞ்சுமந்து பரமர்திரு***
***மடிசாய்த்த திருமேனி வதைந்திழிசெங் குருதியுக***
***முடிசாய்த்த பெருமானை மூதலகை தலைநசுக்கிக்***
***கொடிசாய்த்த கொற்றவனைக் குருசின்மிசைக்***
***கண்டேனே. (358)***

3. மூவினைக்கு மும் முதலாய், மும்முதலு மொருமுதலாந்
தேவினைக்கை தொழுதேத்துந் திரிகரண சுத்தருந்தம்
நாவினைக்கொண் டேத்தரிய நல்லறத்தின் தனித்தாயைத்
தீவினைக்கோர் அருமருந்தைச் சிலுவைமிசைக் கண்டேனே.

*மூவினைக்கு மும்முதலாய் மும்முதலு மொருமுதலாந்*
*தேவினைக்கை தொழுதேத்துந் திரிகரண சுத்தருந்தம்*
*நாவினைக்கொண் டேத்தரிய நல்லறத்தின் றனித்தாயைத்*
*தீவினைக்கோ ரருமருந்தைச் சிலுவைமிசைக் கண்டேனே.*
*(360)*

4. மூவாத முதல்வனைமுது சுருதி மொழிப் பொருளை
ஓவாத பெருங்குணத்த உத்தமனை, உலகனைத்தும்
சாவாத படிகாக்கத் தனுவெடுத்துத் துஜங்கட்டுந்
தேவாதி தேவனையான் சிலுவைமிசைக் கண்டேனே.

*மூவாத முதலவனை முதுசுருதி மொழிப்பொருளை*
*ஓவாத பெருங்குணத்த வுத்தமனை யுலகனைத்தும்*
*சாவாத படிகாக்கத் தநுவெடுத்துத் துசங்கட்டுந்*
*தேவாதி தேவனையான் சிலுவைமிசைக் கண்டேனே. (361)*

5. மறம் வளர்க்குங் களருளத்தை வளமலிதண் பணையாக்கி
அறம்வளர்க்கும் அருண்முகிலின் அன்புமழை மாரிபெய்து
புறம்வளர்க்கும் இரட்சிப்பின் புகழமைந்த புண்ணியத்தின்
திறம்வளர்க்குஞ் செழுங்கிரியைச் சிலுவைமிசைக் கண்டேனே.

*மறம்வளர்க்குங் களருளத்தை வளமலிதண் பணையாக்கி*
*அறம்வளர்க்கு மருண்முகிலி னன்புமழை மாரிபெய்து*
*புறம்வளர்க்கு மிரட்சிப்பின் புகழமைந்த புண்ணியத்தின்*
*திறம்வளர்க்குஞ் செழுங்கிரியைச் சிலுவைமிசைக்*
*கண்டேனே. (365)*

6. காயொளியில் கதிர்பரப்புங் களங்கறுநீ தியின்சுடரைப்
பாயொளிகொள் பசும்பொன்னைப் பணிக்கருஞ்சிந்
தாமணியைத்
தூயொளி கொள் நித்திலத்தைத் தூண்டாத சுடர்விளக்கைச்
சேயொளிகொள் செம்மணியைச் சிலுவைமிசைக் கண்டேனே.

***காயொளியிற் கதிர்பரப்புங் களங்கமினீ தியின்சுடரைப்***
***பாயொளிகொள் பசும்பொன்னை பணிக்கருஞ்சிந் தாமணியைத்***
***தூயொளிகொ ணித்திலத்தைத் தூண்டாத சுடர்விளக்கைச்***
***சேயொளிகொள் செம்மணியைச் சிலுவைமிசைக்***
***கண்டேனே. (366)***

***–இப்பாடல்கள் H.A. கிருஷ்டிணன் பாடிய இரட்சண்ய யாத்திரிகத்திலுள்ள பத்துப்பாடல்களில் ஆறு பாடல்கள்.***

**211.**

***மாலையில் துதிப்போம்***
*மகிழ்வுடனே மனக்களிப்புடனே*
*மான் புகழ் இயேசுவை வானவரோடே*

*1. காலை மாலை உறங்காரே – நம்*
*காவலனாயிருப்பாரே*
*ஆவலுடன் துதி சாற்றிடுவீரே – மாலை*

*2. கிருபையின் வாக்கு தந்தாரே – அதை*
*அருமையாய் நிறை வேற்றினாரே*
*உரிமையுடன் புகழ் சாற்றிடுவீரே*

*3. சோதனை வந்திட்ட நேரம் – அவர்*
*போதனை செய்தார் அந்நேரம்*
*சாதனையாகவே நிற்கச் செய்தாரே*

*4. அழைத்த மெய் அழைப்பிலேதானே*
*நாம் உழைத்திட பெலன் தந்ததேனே*
*ஏகமாய் ஏசுவின் நாமத்தைதானே*

*5. வயல் நிலம் ஏராளம் காட்டி – அதில்*
*அறுவடை தாராளம் ஏற்றி*
*அரிக்கட்டோடே வர கிருபை செய்தாரே*

6. ஆணி துளைத்திட தானே தன்னை
தியாகமாய் கொடுத்திட்ட தேனே
ஏகமாய் ஏசுவின் நாமத்தை தானே

7. ஆயிரம் நாவிருந்தாலும் அவர்
அன்பை துதிக்கப் போதாது
பதினாயிரம் பேரில் சிறந்தவரை நாம்

8. உன்னதருக்கு மகிமை
இந்த பூமியிலே சமாதானம்
மனுஷரில் பிரியம் உண்டாகச் செய்தாரே

**212.**

***வீசும் ஒளியினிலே ஆ... ஆ...***
*தோன்றும் இயேசு நாதா*
*கிருபை தாரும் என் நாதா*

1. அல்லல்படும் உமது மக்களை
அனைக்க வருவீரே என் நாதா
பரத்தில் சேர்ப்பீரே ஆ... ஆ...
இதோ சீக்கிரம் மேக ரதத்தில்
வருவென் என்றவரே மகிழும் என் புறாவே

2. தமக்கு உள்ள பொருட்கள் அனைத்தும்
இழந்த வேளையிலும் யோபு
இழந்த வேலையிலும் ஆ... ஆ...
மனம் நொந்து வல்ல தேவனை
கைவிடவில்லை மகிழ்ந்து துதி செய்தான்

அட்டவணை

*3. கிபியோன் மலைமேல்*
*சூரியனை நில் என்றானே யோசுவா*
*உமக்குள் இருந்ததினால் ஆ... ஆ...*
*அந்த வல்லமை இந்த வேளை*
*ஈயும் எங்களுக்கு, வாழ்த்தும் இயேசைய்யா*

*4. விசுவாச உலத்திலே*
*உமக்குள் நின்றானே – எலியா*
*மழையை மாற்றினானே ஆ... ஆ...*
*சத்துரு மத்தியில் ஜீவ தேவனை*
*வெளிப்படுத்தினானே மகிமை சூடினானே*

*5. விடிவெள்ளி தோன்று மளவும்*
*போராடினானே யாக்கோபு*
*தேவ தூதனிடம் ஆ... ஆ...*
*தேவனோடும் மனிதனோடும்*
*போராடி ஜெயித்தான் இஸ்ரவேலானான்*

*6. கல்லெறிந்து இரத்தம் சிந்த*
*கொன்ற போதிலும் ஸ்தேவான்*
*கலங்கி துடிக்கவில்லை ஆ... ஆ...*
*என் பிதாவே இவர்க்கு மன்னியும்*
*என்று பகர்ந்தானே உண்மை பக்தனே*

**213.**

***அன்பின் தேவ நற்கருணையிலே***
*அழியாப் புகழோடு வாழ்பவரே*
*அன்புப் பாதையின் வழி நடந்தே*
*அடியோர் வாழ்ந்திட துணை செய்வீர்*

[அட்டவணை]

*1. அற்புதமாக எமைப் படைத்தீர்*
*தற்பரன் நீரே எமை மீட்டீர்*
*பொற்புடன் அப்ப குண ரசத்தில்*
*எப்பொழுதும் வாழ் இறைவனானீர்*
*எத்தனை வழிகளில் உமதன்பை*
*எண்பித்தெமை நீர் ஆட்கொண்டீர்*

*2. கல்வாரி மலையின் சிகரமதில்*
*கனிவுடன் தினம் எம்மை நிலை நிறுத்தும்*
*நற் கருணை விசுவாசமதில்*
*நம்பிக்கையூட்டி வளர்த்திடுவீர்*
*இளமையின் பொலிவால் திருச்சபையும்*
*யாவரும் வாழ தயை புரிவீர்*

**214. இராகம்: காப்பி. தாளம்: ஆதி**

**பல்லவி**

**பாடுபட்ட இயேசையா பட்டபலன் தாருமையா**

**அனுபல்லவி**

கேடுகெட்ட மானிடர்மேல் கிருபைபரி பாலித்தாய் - பாடு

1. கள்ளனைக் கண் பார்த்து விண்ணில் சேர்த்த கருணாகரா
சொல்லி முடியாத பாவம் செய்த கள்ளன் நானையா - பாடு

2. கொன்ற பொல்லாத யூதருக்காய் மன்றாடின மேசையா
நன்றிகெட்ட பாவி என்தன் இரண்டகங்களை தீரையா - பாடு

3. மறுதலித்த சீடனுக்கு மாப்புச் செய்த ஆவண்டவா
பொறுதி வைத்தென் பாவ முற்றும் போக்கி யருளப்பனே - பாடு

4. முட்கிரீடம் தாங்கி சீவ பொற் கிரீடம் வாங்கினீர்
துட்டன் எனக்கும் ஓர் சிறு பொற் கிரீடம் தா ஐயா - பாடு

அட்டவணை

**215.**

**ஒப்பாரி**

**கன்னி மரி பாலனே கருணை மனுவேலனே**
எங்கள் பாவங்களைப் பொறுத்துக் கொள்ளும் சுவாமி

2. குருசிலறை யுண்டவா கொல்கதாவில் மாண்டவா
எங்கள் பாவங்களைப் பொறுத்துக் கொள்ளும் சுவாமி

3. ஐந்து திருக் காயனே அண்டினோர் சகாயனே
சிலுவை அண்டினோம் உமதடைக்கலம் சுவாமி

4. உதிரப் பிரவாகனே உலகோர் பவநாசனே
சிலுவை அண்டினோம் உமதடைக்கலம் சுவாமி

5. பரிசுத்த இயேசுவே பரலோக இராசனே
பாவம் மன்னித்தோம் என்பீர் சுவாமி

6. தன்னுயிர் தந்தவா சாவாஉயிர் ஈந்தவா
சரணம் சரணமே ஆமென், சுவாமி!

**216.**

**கண்ணிகள்**

**நோக்கிப்பார், நோக்கிப்பார் சிலுவையை நோக்கிப்பார்**
கொல்கதா நாயகன் மீட்பின்பே ரன்பையே.

2. மந்தையின் ஆடுகள் வழியிட றாமலே
நித்யசீ வவழி கொற்றவா காண்பித்தீர்

3. பாவவி னைநீக்கும் நாதன்ப டும்பாட்டை
வெம்பாவி விசுவாசக் கண்ணினால் காண்கிறேன்.

4. படுமரச் சிலுவைமேல் இயேசுவை நோக்கியே
கடும்பாவ நோய் தீர்க்கும் மருந்தெனக் கண்டேனே.

அட்டவணை

5. ஐந்துகாய சீவஊற்று திறந்துபாய்ந் தோடவே
கண்ணுள்நீர் தூவிநான் அவ்வூற்றில் மூழ்கினேன்.

6. மும்முறை தரையின்மேல் விழுந்துமே செபித்தார்
என்பாவத் தாலல்லோ உன்னதா ஏங்கினீர்.

7. திருமனை யாள்என்னை சீவகிரீடம் சூட்டவே
தேன்அு மதமே முட்கிரீடம் பூண்டீரோ.

8. வஞ்சகன் நெஞ்சினால் விளைத்ததீ வினையினால்
நேசரின் விலாவினில் ஈட்டியும் பட்டதே

9. வலியான் கரங்கள் செய் பாவங்கள் தொலைக்கவே
அன்பரின் கரங்களில் ஆணிகள் பாய்ந்ததே.

10. கள்ளனும் அசுத்தனும் ஆகிய என் பேர்க்காய்க்
குருசினில் மன்னவன் மாண்டதைக் காண்கிறேன்.

11. ஐங்காயச் செட்டைக்குள் அடைக்கலந் தாருமே
ஐம்புலன் செய் பாவத்தை ஆணியா லடியுமே

12. வலப்பக்கக் கள்ளனைத் திருக்கண்ணால் நோக்கினாய்
அடியேனை மனத்தினில் பொதிந்து காத்திடுவையே – நோக்கிப்

**217. இராகம்: இந்துஸ்தானி.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**மரித்தாரே கிறிஸ்தேசு உனக்காகப் பாவி**
உனக்காகப் பாவி, உனக்காகப் பாவி.

**சரணங்கள்**

1. திரித்துவத் தில் ஒருவர் தெய்வீக சேயே,
தீன தயாளத்துவ மனுவேலே பாராய்; – மரித்தாரே

அட்டவணை

2. லோகத்தின் பாவத்தைத் தேகத்தில் சுமந்தே
லோலாய மாய்நின்றார் சிலுவையில் பாராய்; – மரித்தாரே

3. மகத்தான தண்டனை நிவிர்த்திப்ப தற்கே,
மாபாடு பட்டுத் தரித்ததே பாராய்; – மரித்தாரே

4. மன்னிப்புண் டாகவே மத்தியஸ்த ராக
மாவாதைக் குள்ளானார் தாமே நீ பாராய். – மரித்தாரே

## உயிர்த்தெழுதல், பரமேறல்.

**218. இராகம்: காப்பி.** **தாளம்: ஏகம்**

**பல்லவி**

**வாரீரோ சுகந்தமிட**
மகிமைக் கிறிஸ்துவின் சடலமதை

**அனுபல்லவி**

யாரோ நமக்கென்று திறந்திடுவான்
சீராய்ச் சுகந்த மீடுவதற்கு.

1. வாரத்தின் முதல்நாள் காலையிலே
மரியாள் கல்லறைக் கேகினாளே
கல்லறையை உற்றுப் பார்க்கையிலே
இயேசுவின் சடலத்தைக் காணவில்லை.

2. காணாம லழுதுகொண் டிருக்கையிலே
இரண்டு தேவ தூதர் தோன்றினாரே
யாரைத் தேடுகிறீர் என்றனரே
தேவதூதர் மரியாளிடம்

3. எங்களே இயேசுவைக் கண்டீரோ
என்று மரியாள் வினாவினாளே
சங்கைக் கிறிஸ்துவோ உயிர்த்தெழுந்தார்
இங்கில்லை என்றார் தேவதூதர்.

4. இப்படி யேங்கிநின் றழுகையிலே
இயேசு "மரியாள்!" என்றாரே
இம்மொழி கேட்ட மாத்திரத்தில்
"இரபூனி!" என்றாள் மரியாளும்!

**219. இராகம்: போர்த்துகீசு.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**ஆ! வாரும் நாம் எல்லோரும் கூடி**
மகிழ் கொண்டாடுவோம் – சற்றும்
மாசிலா நம் மேசு நாதரை
வாழ்த்திப் பாடுவோம்.

**சரணங்கள்**

1. தாரகம் அற்ற ஏழைகள் தழைக்க நாயனார் – இந்தத்
தாரணி யிலே மனுடவ தாரம் ஆயினார். – ஆ!

2. மா பதவியை இழந்து வறியர் ஆன நாம், – அங்கே
மாட்சி உற வேண்டியே அவர் தாழ்ச்சி ஆயினார். – ஆ!

3. ஞாலமதில் அவர்க் கிணை நண்பர் யாருளர், – பாரும்
நம் உயிரை மீட்கவே அவர் தம் உயிர் விட்டார் – ஆ!

4. மா கொடிதான சாவின் வலிமை நீக்கியே, – இந்த
மண்டலத்தி னின்றுயிர்த் தவர் விண்டலஞ் சென்றார். – ஆ!

5. பாவிகட்காய்ப் பரனிடம் பரிந்து வேண்டியே, – அவர்
பட்சம் வைத் துறும் தொழும்பரை இரட்சை செய்கிறார்.– ஆ!

**220.**

**"சீவநாயகர் ஈதோ சிசுவாக" என்னும் மெட்டு**

**பல்லவி**

**பாவ நாசக ரேசு பாடுபட் டுயிர்த்தார்**
பாதாளம் விட்டேறிப் பார்த்துக் கேகிட

அட்டவணை

**அனுபல்லவி**

தேவசமுகம் கண்டு சிறப்பாய் வீற்றிட - பாவ

**சரணங்கள்**

1. பாவிகளுக் காக பரனி டத்திலே
பரிந்துபேசிப் பாக்யம் பகிர்ந்த ளிக்கவே
விரைந்து வாரும் போவோம், விமலனைப் பார்க்க - பாவ

2. எல்லாம் செயங் கொண்ட ஏக சக்ராதிபதி
நல்லார் மனதைத் தேற்ற நாதன் உயிர்த்தாரே
பொல்லாததை எல்லாம் மீட்கப் பொறுமையா யிருந்து - பாவ

3. மண்ணிலிருந் தெழுந்து விண்ணுக்குச் செல்ல
மகிமையான தேவன் செயமாக உயிர்த்தார்
ஆ என் நேசா நீயும் ஆயத்த மாகு - பாவ

4. சாவின் பள்ளத்தாக்கைத் தாமாக செயித்து
பேயின் தலையை வென்ற பிதாசுதன் உயிர்த்தார்
பூவின் மனுடர்க் கெல்லாம் புண்ணிய மளித்திட - பாவ

5. வானமண்டல வீட்டின் லோகத்திற்கு வர
கோனார் இயேசுராசர் ஆயத்தமாயிருக்கிறார்
அதால் நேசா நீயும் ஆயத்த மாகாயோ - பாவ

6. அதோ பார்க்கும் யாரும் பயந்து நடுங்கிட
இதோ சீக்கிரம் இயேசு வருவேன் என்கிறார்
அதால் பாவி அவர் அருகில் ஓடிவா - பாவ

**221. இராகம்: பியாகு** **தாளம்: ஆதி.**

**உயிர்த்தன ரேசு மரித்த மூன்றாம் நாள்**
உன்னதத்தோ ரின்னிலத்தில்
நன்னயங் கொண்டாட.

2. பண்டை வினை நீங்க மண்டலத்தோ ரோங்க
எண்டிசையி லும்பேர் வெற்றிக்
கொண்டாட்ட முழங்க.

3. சேவகர் நடுங்கக் காவலர் தயங்க
சீடர்கள் பூட்டிய வீட்டில்
செபத்தில் காத்திருக்க

4. கந்த வர்க்கம் தூபம் கைகளி லெடுத்து
காலையில் கல்லறை போன
கோதையருந் தியங்க.

**222. இராகம்: ஆங்கிலம் தாளம்: ஆதி.**

**யூதர் இராசசிங்கம் உயிர்த் தெழுந்தார்**
உயிர்த் தெழுந்தார் நரகை ஜெயித்தெழுந்தார்

2. வேதாளக் கணங்கள் ஓடிடவே,
ஓடிடவே உருகி வாடிடவே.

3. வானத்தின் சேனைகள் துதித்திடவே
துதித்திடவே பரனைத் மதித்திடவே.

4. மரணச் சங்கிலிகள் தெறிபட்டன
தெறிபட்டன நொடியில் முறிபட்டன!

5. எழுந்தார் என்றதொனி எங்குங் கேட்குதே
எங்குங் கேட்குதே, பயத்தை என்றும் நீக்குதே.

6. மாதர் தூதரைக் கண்டக மகிழ்ந்தார்,
அகமகிழ்ந்தார் பரனை அவர் புகழ்ந்தார்.

7. மரித்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை
மரிப்பதில்லை என்றும் மரிப்பதில்லை

அட்டவணை

**223. இராகம்: ஆங்கிலம் தாளம்: ஆதி.**

**பல்லவி**

**மகிழ் கொண்டாடுவோம் மகிழ் கொண்டாடுவோம்**

**சரணங்கள்**

1. இந்நாளில் இயேசு நாதர் உயிர்த்தார் கம்பீரமாய்
இகல் என்பவை யாவும் வென்றதிக வீரமாய்

2. போர்ச்சேவகர் சமாதி சூழ்ந்து காவலிருக்க,
புகழார்ந் தெழுந்தனர், தூதன்வந்துகல் மூடி பிரிக்க – மகிழ்

3. அதி காலையில் சீமோனோடு யோவானும் ஓடிட,
அக்கல்லறை யினின் றேகினர் இவர் ஆய்ந்து தேடிட, – மகிழ்

4. பரிசுத்தனை அழிவுகாண வொட்டீர் என்று முன்
பகர் வேதச்சொற்படி பேதமற்றெழுந்தார் திருச்சுதன்; – மகிழ்

5. இவ்வண்ணமாய்ப் பரன் செயலை எண்ணி நாடுவோம்
எல்லோருமே களிகூர்ந் தினிதுடன் சேர்ந்து பாடுவோம் – மகிழ்

**224. இராகம்: ஆங்கிலம் தாளம்: ஆதி.**

**“நித்திய சுப கல்யாணி” என்ற மெட்டு**

**பல்லவி**

**பக்தர் யாரும் வாரும் பாடிப் போற்றுவோம்**
உத்தம இயேசு பாதம் பக்தியாய்ப் பணிவோம்

**சரணங்கள்**

1. சீவாதி பதி ஈதோ! செயங் கொண்டே எழுந்தார்
தேவாதி தேவன் தூய திருவடி பணிவோம். – பக்தர்

2. கல்லறை தன்னை விட்டு வல்லவர் எழுந்தார்
நில்லாமல் அவர் சாட்சி சொல்லியே சாற்றுவோம்– பக்தர்

அட்டவணை

3. எத்தன் என்றவர் ஓடப் பக்தர் துதிபாட நம
தத்தன் எழுந்தா ரின்று துத்தி யம்செய் வோமே – பக்தர்

4. முச்சத் துருவை மிதித்து இரட்சகர் எழுந்தார்
அச்ச மென்பதை நீக்கி நிச்சய மேதந்தார் – பக்தர்

5. மகிமை இயேசு நாயகர் மகதலா மரியின்
மயக்கம் நீக்கி விட்டு செயவாக் கருவினார் – பக்தர்

6. சத்ய சபையின் வித்தே சபையின் நாயகமே
பக்தர் அகத்தின் முத்தே பாவியின் தாரகமே – பக்தர்

7. ஆசீர் வாதம் தாரும் அருமை இயேசுநாதா
வாசமலர் சூடி வாழ்த்தியே போற்றுகிறோம் – பக்தர்

**225. இராகம்: முகாரி** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**நம்கிறிஸ் தரசன் கல்லறை விட் டுயிர்த்தெழுந்தாரே**

**அனுபல்லவி**

உயிர்த்தெழுந்தாரே உயிர்த்தெழுந்தாரே – நம்கிறிஸ்

1. தாமெ ழுந்தார் ஞாயிற்றிலே ஆதித்தன்போலே – நம்கிறிஸ்

2. ஏவை பாவ முற்றுந் தீர – ஈனப் பேய் ஓட – நம்கிறிஸ்

3. பத்தர் பாவம் முற்றுந் தீர – இரத்தம் சிந்தினார்– நம்கிறிஸ்

4. கேருபீன்கள் சேராபீன்கள் – கெம்பீரித்தாட – நம்கிறிஸ்

5. பாதாளம் வேதாளம் யாவும் – பரிகரித்தவர் – நம்கிறிஸ்

6. சூக்குமெ சரீரடுடன் – காட்சி தந்தவர் – நம்கிறிஸ்

அட்டவணை

**226. இராகம்: ஆங்கிலம்** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**ஆமென், அல்லேலூயா! மகத்துவத் தம்பராபரா!**
ஆமென், அல்லேலூயா! செயம்! செயம்! அனந்த தோத்திரா

**அனுபல்லவி**

ஆம் அனாதி தந்தார், வந்தார், இறந்
துயிர்த்தெ ழுந்தாரே, உன்னதமே! – ஆமென்

சரணங்கள்

1. வெற்றிகொண் டார்ப்பரித்து – கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து – முறித்து;
பத்ராசனக கிறிஸ்து – மரித்து
பாடுபட்டுத்தரித்து, முடித்தார் – ஆமென்

2. வேதம் நிறைவேற்றி, – மெய் தோற்றி
மீட்டுக்கரையேற்றி, – பொய்மாற்றி,
பாவிகளைத் தேற்றி, – கொண்டாற்றி
பத்ராசனத் தேற்றி வாழ்வித்தார்.– ஆமென்

3. சாவின் கூர் ஒடிந்து, மடிந்து
தடுப்புச் சுவர் இடிந்து, – விழுந்து,
சீவனே விடிந்து – தேவாலயத்
திரை ரெண்டாய்க் கிழிந்து ஒழிந்தது – ஆமென்

4. தேவ கோபந் தீர்ந்து – அலகையின்
தீமை எல்லாஞ் சோர்ந்து, முடிந்தது;
ஆவலுடன் சேர்ந்து, – பணிந்துகொ
டாடும் களிகூர்ந்து, மகிழ்ந்து – ஆமென்

*–வேதநாயகம் சாசுதிரியார்*

அட்டவணை

# வருகை, நியாயத்தீர்ப்பு

**227.**

**இயேசு சீக்கிரம் வரப் போகிறார்**
மாசில்லாதோர் ஆகாயத்தில் மறைந்தே போவார்

2. கிரியை யுடையோர்க்கொரு கிரீடமாமே
மரியின்மா மைந்தனுக்கு மகுடமாமே

3. அடக்கமா யோடினோர்க் கழியாக் கிரீடம்
ஆருயிர் கொடுத்தவர்க்குச் சீவ கிரீடம்

4. ஆத்துமாதா யஞ்செய்தோர்க்கு ஆனந்தக் கிரீடம்
மந்தை மேய்த்த வர்களுக்கோ மகிமைக் கி ரீடம்

5. பிரசன்னத்தை வாஞ்சிப்போர்க்கு பேரின்பக் கிரீடம்
பின்னால் விடப்படுவோர்க்குப் பெரிய தண்டனை!

6. அன்று போன இயேசு இன்று இங்கு வந்தாலோ
நன்று என்று ஒன்று மின்றி ஏகிடு வோமோ?

7. அவரை இரட்சகராய் ஏற்றுக் கொண்டாலோ
அல்லேலூயாப் பாடிக்கொண்டே ஏகிடு வோமே!

**228.**

**பல்லவி**

**எழும்பு சீயோனே! இயேசு இதோ வருகிறார்**

**சரணங்கள்**

1. இயேசுவின் வருகை மிகச் சமீபமாகுதே – இனி
மோசந்தான் அசதியாகச் சீவித்து வந்தால் – பின்பு
அலறிடுவாயே இயேசு கைவிடும்போது! – வேகம்

அட்டவணை

2. பூலோக நேசம் உன்னில் சற்றும் வேண்டாமே
மேலோகம் பார்த்தே இப்பூலோகத்தை வெறு – இது
மாய லோகமே உன்னை மோசம் போக்குமே! – வேகம்

3. பாவங்கள் இருதயத்தில் ஏதேனு ண்டோ – சிறு
பாரங்கள் உன்னைக் கீழே தள்ளிவிடுமோ – உன்தன்
இருதயத்தை நீ பரிசுத்த மாக்காயோ – வேகம்

4. இலௌகீகக் கவலையோடும் பெருந்தீனியும் – வெறு
மாமிச சுபாவத்தோடு நான் என்பதுமே – உனை
மோசம் போக்குகின்ற தீய ஆசை, ஒழிப்பாய்! – வேகம்

5. மேகத்தில் இயேசுராசன் வேகம் வரவே – பரம்
ஏறுவார் பரிசுத்தர் வேறு ரூபமாய் – அன்று
மேக மேறி நீயும் நானும் ஆனந்தம் கொள்வோம் – வேகம்

6. ஆகாயத்தில் நடக்கும் கல்யாணத்திலே – தூதர்
பாடுவார் அல்லேலூயா செட்டை அடித்து – அப்போ
அங்கி ருப்பாயோ பூவில் ஓடி ஒளிப்பாயோ? – வேகம்

7. அந்திக் கிறிஸ்து அரசாட்சி செப்பும் காலத்தில் – கோப
அக்கினி பூமியில் சொரியும் வேளையில் – நாமும்
அகப்படாமலே அன்று தப்பிக் கொள்வோமோ – வேகம்

**229. இராகம்: பியாகு** **தாளம்: ரூபகம்**

**பல்லவி**

**இன்னமும் தாமதித்தால் என்னமா யான் பிழைப்பேன்**

**அனுபல்லவி**

மன்னவா பிராண நாயகா – இன்னமும்

1. மானிடரை மீட்க வந்த வான ராஜனே
எனதபிமான நேசனே – இன்னமும்

2. பார்த்த பார்வையா லென்கண்களும் பூத்துப் போகுதே
வருகைக் காயத்த மாகுதே – இன்னமும்

3. பூமி யெங்கு மிகுந்த யூதரைச் சாமி தேடுகிறார்
அவர் சாலேமுக் கோடுகிறார் – இன்னமும்

4. இராச்சிய மறை நாற் றிசையிலும் சாட்சி கூறுதே
புதிய காட்சி நேருதே – இன்னமும்

5. பஞ்சம் யுத்தம் நியாயக் கேடுகள் பறந் துலாவுதே
உலகின் நிறைந்து லாவுதே – இன்னமும்

6. அன்பு குளிர்ந் தாவியின் அனல் ஆறிக் காணுதே
மனம் வேசாறிக் காணுதே – இன்னமும்

7. ஆதி சர்ப்பம் பொரிந் தென்மேல்தன தம்பை எய்யுதே
உலகம் கெம்பி வையுதே – இன்னமும்

8. காதல்கொண்ட மங்கைக்குன் முகம் காட்டும் இயேசையா
தாலி பூட்டும் மேசையா – இன்னமும்

**230.**

பல்லவி

**இயேசுராசன் வருவார் தூதரோடும் வருவார்**
பக்தரை வானத்தில் சேர்த்திடவே – நான்
ஜோதியாய் அவர்முகம் கண்டிடுவேன் – பின்னும்
செயகெம்பீரம் கொண்டுளம் பொங்கிடுவேன் – இயேசு

2. மணவாளனோடு மணவாட்டியாம் சபை
மங்களமாய்க் கவி சாற்றிடுமே – அப்போ
மாட்சிமையோடு நாம் பாடிடுவோம் – அவர்
நேசத்தின் ஆழத்தை ருசித்திடுவோம் – இயேசு

அட்டவணை

3. முத்திரையிட்ட சுத்தர் வெள்ளை அங்கி தரித்தோர்
கர்த்தர் சமுகத்தில் நின்றிடுவார் – அதில்
சேர்ந்திடுவேன் நானும் பாடிடுவேன் – அன்று
பொன் முடி சூடி யாடிடுவேன் – இயேசு

4. காதலித் தேன்நான் காசினி யாசை விட்டுக்
கர்த்தரோ டென்றும் உறவாடிட – அங்கு
கனக மணவறை சொலித்திடுமே – அப்போ
கர்த்தர் நம் இயேசுவில் சுகிப்போமே – இயேசு

5. வானத்தின் எக்காளம் தொனித்திடும் சமயத்தில்
சுத்தர்கள் யாவரும் பறந்திடுவார் – அப்போ
அத்தனின் கலியாண விருந்ததிலே – நாமும்
பத்தியாய் மகிழ்ந்துண்டு களிப்போமே – இயேசு

**231.**

**பல்லவி**

**மேகமீதில் இயேசு சுவாமி வேகம் வாராரே**

**அனுபல்லவி**

ஆயத்த முள்ளோரை ஆகாயஞ் சேர்க்கவே
அவர் வாராரோ – மேகமீதில்

**சரணங்கள்**

1. ஆண்டவர் தாமே ஆர்ப்பரிப் போடே
அவனியில் வாராரே
மீண்டவர் எல்லாம் மேலோகமே செல்ல
மேதினியை விடுவார் – மேகமீதில்

2. கிறிஸ்துவுக்குள் மரித்தோ ரெல்லாம்
கிளம்பியே எழும்பிடுவார்
மரிக்கா திருக்கும் பரிசுத்த ரெல்லாம்
மறுரூபம் ஆவாரே – மேகமீதில்

அட்டவணை

3. பாடுபட் டோருக்கு பலன ளிப்பாரே
பாடுபட்டவர் தாமே
கூடும் நமக்கோ குறைவில்லாப் பலனும்
கூவியே கொடுத்திடுவார் – மேகமீதில்

4. அவரு ரைத்த அடையாளங்க ளெல்லாம்
தவறாமல் நடக்கிறதே
அவர்வரும் வேளையை மனிதர் அறியார்
ஆண்டவ ரேயறி வார் – மேகமீதில்

5. ஆயிரம் ஆண்டு ஆளுகை செய்வார்
ஆண்டவர் இயேசு தாமே!
நீதி சமாதானம் நிறைந்தே யிருக்கும்
சோதியின் ஆளுகையில் – மேகமீதில்

6. அல்லே லூயா கீதமே பாடி
அகமகிழ்ந் தாடிடு வோம்
வல்லவர் வந்திடும் வேளையும் இதோ
மெல்லவே நெருங்கிற்றே – மேகமீதில்

**232.**

**பல்லவி**

**என்தன் – ஆத்ம நேசர் எங்கே!**

**அனுபல்லவி**

அவர் எங்கே, அவர் எங்கே
அவர் எங்கே, எங்கே, எங்கே, எங்கே! – என்தன்

**சரணங்கள்**

1. நகரத்தின் தெருவீதி சென்று – நான்
நலமுடன் தேடினேன் நன்று – ஐயோ
தேடியும் காணாமல் நின்று – முகம்
வாடி மயங்குகிறேன் இன்று – என்தன்

அட்டவணை

2. காட்டு மரங்களில் தானும் – நல்ல
கிச்சிலி மரம்போல காணும் – செல்வக்
குமாரருக் குள்ளே இவர்தானும் – குடி
யிருப்பது போலவே தோணும் – என்தன்

3. பதினாயிரம் பேரில் சிறந்தோர் – அதி
வெண்மை சிவப்புக் கலந்தோர் – தலை
பொன் மயமாய் விளங்கிவார் – மயிர்
சுருள் சுருளாய் இருப்பவரே – என்தன்

4. லீபனோன் போலவர் தோற்றம் – மிக
மதுர மவர்வாயின் மாற்றம்
லீலிப்புட்பங்கள் போன்ற இதழ்களில் – நின்று
வாசனை வெள்ளைப்போளம் வடியும் – என்தன்

5. இடதுகை என்தலைக்கீழ் வைத்து – அவர்
வலது கையால் அரவணைத்து – என்னை
மகிழ்ந்து மணந்து கொள்வதாலே – நான்
மயக்கமடைவேன் நேசத்தாலே – என்தன்

**233.**

**பல்லவி**

**சாலேம் குமாரத்தியே – உன் நாயகர்**
தாமதம் செய்வாரோ

**சரணங்கள்**

1. கோல மிகும் இயேசு ராசன்
கொற்றவா குலத்து வாசன்
ஞால மெங்கும் புகழ் நேசன்
நடுத்தீர்வை தரும் ஈசன் – சாலேம்

அட்டவணை

2. சிக்கிரம் வந் துனைக் கூட்டிச்
செல்வேனென் றன்புபா ராட்டி
வாக்க ளித்த படி கிட்டி
வருவ துண்மையேசீ மாட்டி – சாலேம்

3. கன்னியே சீயோன் குமாரி
காலம் அடுக்குதே நாரி
மன்னவர் தமக்குப் பாரி
மணந்து கொள்வாருனைச்சிங் காரி – சாலேம்

4. சாட்சிகள் பழியை வாங்கித்
தாரும் எங்கட்கு வெண்ணங்கி
மாட்சிகொள் பொன் நகர் நோக்கி
வாரும் இயேசுவே கண்ணோக்கி – சாலேம்

**234. இராகம்: தன்யாசி** **தாளம்: ஆதி**

**“எத்தனை திரள்என் பாவம்என் தேவனே” என்ற மெட்டு**

**பல்லவி**

**பரம சீயோன் நகர் அதிபதி வருகிற**
பவனியைப் பார்க்க வாகும்

**அனுபல்லவி**

அருவுரு வானயென் நசரேசு ராசன்
அருமைச் சீயோன் மகள் புகழுங் கிருபாசனன்

**சரணங்கள்**

1. ஆரவாரத் தோடு தூதர்க ளெக்காள
ஆர்ப்பரிப் போடு வாராரே!
வீரமா முனிவர்கள் வெண்சாம ரைகள்வீச
மேகத்தில் வாராரே!
பார்க்கப் பயங்கரம் யார்க்கும் பயங்கரம்
படபட மடமட திடுதிடு எனவரும் – பரம

[அட்டவணை](#)

2. இரத்தச் சாட்சிகள் முதல் உயிரடைந் தெழும்பியே
இராசாவுக் கெதிர் சொல்லுவார்;
சுத்த பரிசுத்தரும் மேக வாகன மேறி
சுவாமியினிடம் செல்லுவார்;
எத்தனை பாக்கியம் எத்தனை சந்தோசம்
உத்தமி யேஎழுந்து சற்றே நடந்து வா வா - பரம

3. புத்தி யில்லாத கன்னி யாஸ்திரி களைப் போலப்
புறம்பே நின்று விடாதே,
அத்தத்தின் வாழ்வை நம்பி நித்திய மோட்சானந்த
ஆசையைப் போக்கிவிடாதே,
கர்த்தரின் சேனைகள் ஆயத்தப் படுகிறார்
காலங் கடத்தினால் பேர் மோசம் பெரிய மோசம் - பரம

4. அரையில் சத்தியக் கச்சை மனதில் மறை விளக்கு
அணையாமல் வைத்துக் கொள்வாய்;
குறையாமல் விசுவாசம் ஆவியின் எண்ணெய்தனைக்
கூட எடுத்துக் கொள்வாய்;
நிறை வான ஞானாகாரம் மறைவான மன்னாக் கொண்டு
நேசராம் இயேசு வாரார் ஆசையுடன் ஓடிவா - பரம

5. காலஞ் சுருங்கிட்டது வேதம் பரம்பிட்டது
கண்ணைத் திறந்து பாரே!
ஞாலமெங்கும் நடக்கும் போலிக் குணங்கள் எல்லாம்
நன்றா யறிந்து கேளே!
ஆலச் சர்ப்பத்தை வென்ற மூலக் கிறிஸ்து நாதர்
அருளிய சாட்சிகள் அணுவும் தவறவில்லை - பரம

6. அருமை ரட்சகரே உம் மகிமையின் இராச்சியத்தில்
அடியேனை நினைத்தருளும்;
திரு இரத்தத்தாலே மீட்ட கிறிஸ்தவர் யாவரையும்
திருவடி களில் சேரும்;
இரவும் பகலும் உம்மை ஏத்திச் செபித்து வர
என்றும் தேவாவியினால் எனக்கு வரமளியும் - பரம

அட்டவணை

**235. இராகம்: ஆங்கிலம்** **தாளம்: ஆதி**

**மேகமீது தூத ரோடிதோ இதோ**
மேசையா கிறிஸ் தேசையா என தாசை நேசையா
வாரார் வாரார் மகிழ் கெம்பீரமாய்!

2. தேகத்தோடு போனவர் இவர் இவர்
திரும்பவும் பதினாயிரம் பரி சுத்தர் சூழ்ந்திட
கோடா கோடி சேனை கூடவே.

3. ஆரவாரம் கேட்குதே அதோ அதோ
ஆட்டுக்குட்டியின் பாட்டோடெக்காளம் அதிர்ந்தொலிக்குதே
அல்லேலூயா அருமை இரட்சகா

4. ஒலிவ மலைவிட் டேகினார் அன்றே அன்றே
உருவத் தோடவர் திரும்பி வாரதை உற்று நோக்குவோம்
ஓடிப் பாடி உவந்து போற்று வோம்!

5. மனுவேல் இராசன் வருகிறார் அதோ அதோ
மலை அதிர்ந்திட புவி குலுங்கிடக் கடல் கலங்கிட
வானோர் ரானோர் வணங்கி நிற்கிறார்

6. இயேசு இராசன் புறப்பட்டார் செயா செயா
செக மலை கட லுள் நல்லோர் உயிர்த் தெதிர்த் சென்றேகினார்
ஓடி நாடிப் பரத்தை நோக்கியே

7. ஏதேன் பரதீசு பார் அதோ, அதோ!
இயேசுவும் அவர் தேவியும் அங்குக் கூடி வாழ்கிறார்
இல்லை தொல்லை என்றும் பாக்கியம்.

**236. இராகம்: ஆங்கிலம்** **தாளம்: ஆதி**

**மேலோக இராசன்வருங் கால மாகுது**
சாலோக மகிமை பெறலாம் – பாவி யோடிவா.

2. பாவம் நித்தமும் மனம் நோகச் செய்யுது
பரிசுத்தர் இத்த லத்தில் வந்தால் – கவசந் தரிப்போம்.

[அட்டவணை]

3. இரவு போயிற்று பகல் சமீப மாயிற்று
இருளின் செய்கை தள்ளி ஒளியின் – கவசந் தரிப்போம்.

4. குடிவெறி வேண்டாம் கோள்குண்டணி வேண்டாம்.
பகலின் பிள்ளைகள் போல் சீராய் – நடக்கக் கடவோம்.

5. எருசலேம் நகர் மகா அரசர் மாளிகை – அதை
ஏறிட்டுக் கண்ணாலே பார்த்தால் – ஏக்கம் தீருமே

6. தூதர் சேனைகள் துதி பாடும் ஓசையால் – இப்
பூதலம் திடுக்கிட – வானோர்கள் மகிழ்வார்.

7. உப்பார்சின் தங்கக் கச்சை இடையிற் கட்டியே
உம்பர்கள் ஒழுங் காக நின்று – கீதம் பாடுவார்.

8. ஆசனங்களில் இயேசு தாசரிருப்பார் – அதின்
மத்தி யிலோர் ஆசனம் – இம் மானுவேலர்க்கு.

9. ஏழுடுகையில் மார்ப ருகே பொற் கச்சை
வெண் பஞ்சு நிறமாம் சிரசு – இயேசுவுக்குண்டு.

10. பார்க்கக் கூடாத பரிசுத்த சோதியாய் – மே
லோக இராசன் வீற்றிருப்பார் – தூதர்கள் சூழ.

11. கேரூபின்களும் வானில் சேராபீன்களும் – கெம்
பீரமாய் முழங்கும் ஓசை – கேட்டு மகிழ்வார்.

12. சேனையின் தேவன் பரி சுத்தர் சுத்தரே – என்
றோய்வில் லாமல் நான்கு சீவன் – போற்றி நிற்குமே.

13. காலம் போகுது பகலோன் வருகிறார் – பல
மாகவே உன் இரட்சிப்பை நீ–தேடிக் கொண்டிரு.

14. பரிசுத்தரைக் காண வெகு சுத்தம் வேண்டுமே
திரு இயேசுவே உம் இரத்தத்தாலே – சுத்த மாக்குமே.

15. தோத்திரம் சொல்வேன் மிகத் தோத்திரம் சொல்வேன்
பிதாவுக்கும் சுதன் ஆவிக்கும் தோத்திரம் சொல்வேன்.

அட்டவணை

**237. இராகம்: ஆனந்தபைரவி** **தாளம்: ரூபகம்**

**"காலம் ஆதாயப்படுத்து" என்ற மெட்டு**

**பல்லவி**

**பொன்னின் கிரீடம் வெண்ணங்கி – வென்றோனுக்கல்லோ**
பூட்டுவாள் சீயோனின் பாங்கி – சுத்தப்

**அனுபல்லவி**

மன்னன் கிறிஸ்து மண வாளராம் இயேசு இராசர்
மின்னல் ஒளியாய் வரும் வேளை சமீபிக்குதே – பொன்னின்

**சரணங்கள்**

1. போராட்ட நாட்களிதல்லோ – பகைஞரெல்லாம்
பொல்லாப்பாய் நிற்கிறாரல்லோ
மாறாட்டக்கால மிதல்லோ–அன்பு குறைந்து
மாய்மாலம் பெருகுமல்லோ
வாறார் கிறிஸ்து இருவாளாயுதம் வீசி
பேராசைப் பாவிகளை நீற்றும் அன்பரின் ஆசை – பொன்னின்

2. காலம் கடத்திவிடாதே – கண்ணீர் விட்டாலும்
காண்பாயோ சென்ற நாட்களை
சாலங்கள் செய்து நில்லாதே – மரணம் வந்தால்
தாமதம் சொல்ல ஏலாதே,
வால வயதும் மாயை மண்ணின் பொருளும் மாயை
சீல முடனே வேத நூலாகமத்தை எடு – பொன்னின்

3. அந்திக் கிறிஸ்துவினாவி – எழும்பி எங்கும்
நிந்தைப் படுத்தி நிற்குதே
சிந்தை கலங்கும்படியாய்ப் – பற்பலதீமை
செய்யும் படி யோசிக்குதே
எந்த விதம் செய்தாலும் எங்கோன் கிறிஸ்துவுக்கு
உன்தன் முழுமனதும் ஒப்புவித்துப் போராடு – பொன்னின்

அட்டவணை

4. வேதாக மத்தின் பொருளாம் – இயேசு மேசியா
வெற்றிச் சபையி லிருந்து
ஆதா மிழந்த பாக்கியம் – தரும்படிக்க
ஆயிர மாயிர மான
தூதர்க ளோடு விண்ணில் தோன்றுவார் கெம்பீரமாய்
எதேனின் செல்வம் சீவன் எல்லாம் வருகுதல்லோ– பொன்னின்

**238. இராகம்: பிலகரி. தாளம்: ஆதி**

**“இந்தக் குழந்தையை நீர்” என்ற மெட்டு**

**பல்லவி**

**நமது மணவாளருக் கெதிர்கொண்டு போவோம் வாரும்**

**அனுபல்லவி**

தமது மணவறைக்குள் வாழ்ந்து சுகித்திருக்க – நமது

**சரணங்கள்**

செங்கோல் கையிற் பிடித்து
சிம்மா சனத்தில் ஆளும்
சங்கை அதிபதியைக்
கண்டு சந்தித் திடுவோம் – நமது

2. வெள்ளை அங்கி தரித்து
வெள்ளோலை கைப் பிடித்து
செல்ல நடை நடந்து
சீக்கிரம் போவோம் வாரும் – நமது

3. மனையாட்டி கைப்பிடிக்க
மயங்கித் தியங்குகிறாள்
நினையாத நேர மதில்
மணவாளன் வந்திடுவார் – நமது

4. ஆட்டுக் குட்டியின் கலி
யாண விருந்தருந்த
அணையாத தீவட்டியும்
குறையா எண்ணையுங்கொண்டு –நமது

5. தங்கக் கிரீடம் சூடித்
தமது பத்ரா சனத்தில்
இங்கித மாக ஆளும்
இம்மானு வேலருக்கே – நமது

**239. இராகம்: இந்துஸ்தானி. தாளம்: ஆதி**

**பல்லவி**

**என்றைக்கு காண்பேனோ, என் இயேசு தேவா**

**அனுபல்லவி**

குன்றாத தேவ குமாரனைத் தானே நான் – என்றைக்கு

**சரணங்கள்**

1. பரகதி திறந்து, பாரினில் பிறந்து,
நரர் வடிவாய், வந்த இராச உல்லசானை. – என்றைக்கு

2. ஐந்தப்பம் கொண்டு அநேகருக்குப் பகிர்ந்து,
சிந்தையில் உவந்தவ சீகர சிநேகனை. – என்றைக்கு

3. மாசிலாத நாதன், மாமறை நூலன்,
இயேசுவின் திருமுக தரிசனம் நோக்கி நான். – என்றைக்கு

***–வேதநாயகம் சாஸ்திரியார்.***

**240. இராகம்: மோகனம். தாளம்: ஏகம்**

**சாலேமின் இராசா, சங்கையின் இராசா,**
சுவாமி, வாருமே – இந்தத்
தாரணி மீதினில் இராச்சியஞ் செய்திட
சல்திவாருமே, சல்தி வாருமேன் – சாலேமின்

2. சீக்கிரம்வருவோ மென்றுரைத்துப்போன
செல்வக்குமாரனே செல்வக்குமாரனே– இந்தச்
சீயோனின் மாதர்கள் தேடித்தி ரிகின்ற
செய்திகேளீரோ? செய்திகேளிரோ? – சாலேமின்

3. எட்டி எட்டி உம்மை அண்ணாந்துபார்த்துக் கண்
பூத்துப்போகுதே, பூத்துப்போகுதே – நீர்
சுட்டிக்காட் டிப்போன வாக்குத்தத்தம் நிறை
வேறலாகுதே, நிறைவேறலாகுதே – சாலேமின்

4. நங்கை எருசலேம் பட்டணம் உம்மை
நாடித் தேடுதே, நாடித் தேடுதே – இந்த
நானிலத் திலுள்ள யூதச்சா தியும்மைத்
தேடிவாடுதே, தேடிவாடுதே – சாலேமின்

5. சாட்சியாக சுபவி சேடம்
தரணிமேவுதே தரணிமேவுதே – இந்தச்
சாட்சிக ளுடைய இரத்தங்க ளெல்லாம்
தாவிக்கூவுதே, தாவிக்கூவுதே – சாலேமின்

**241. இராகம்: அசாவேரி. தாளம்: சிந்து**

**பல்லவி**

**எனது கர்த்தரின் இராசரீக நாள்**
எப்போ வருகுமோ?
ஏங்கும் என் கலி நீங்க மகிழ்ச்சி
எப்போ பெருகுமோ?

**அனுபல்லவி**

மனிதசுதனின் அடையாளம் விண்ணில் காணும் என்றாரே,
வல்லமையோடு மகிமையாய்த்தோன்றி வருவேன் என்றாரே
– எனது

**சரணங்கள்**

1. தேவ தூதரின் கடைசி எக்காளம் தொனி முழங்கவே,
செகத்தில் இயேசுவைப் பற்றி மரித்தோர் உயிர்த்தெழும்பவே;
சீவ னுள்ளோறும் அவருடன்மறு ரூபமாகவே,
செகத்தில் பக்தர்கள் கர்த்தரிடத்துக் கெழுந்துபோகவே – எனது

2. தூதர் எக்காளத் தொனியி லென்னிடம் சேர்ப்பேன் என்றாரே,
சோதனை காலந்தனில் தப்பவுன்னைக் காப்பேன் என்றாரே;
பாதக மனுசாதி வேதனை அடையும் என்றாரே,
பாவ மனிதன் தோன்றி நாசமாய்ப் போவான் என்றாரே. – எனது

3. சூரியன் இருளாகிச் சந்திரன் இரத்தமாகவே,
சோதி நட்சத்தி ரங்கள் அத்திக் காய்போல் உதிரவே;
பாரில் அக்கினி வீழ்ந்து மூன்றிலோர் பங்கு வேகவே,
பயங்கள், பஞ்சங்கள், யுத்தங்கள், பூமி அதிர்ச்சி தோன்றவே
– எனது

4. சாதிகட்குக் கொடியாய் ஈசாயின் வேரன் றேறுவார்;
சகலரும் அவர் கொடியின்கீழ் வந்து பணிந்து சூழுவார்;
நீதியாய்த் தானே மேசியா எங்கும் ஆளுகை செய்வார்;
நித்தம்பிர புக்கள் நியாயமாய்த் துரைத்தனம் செய்வார். – எனது

5. எருச லேமி லிருந்து சீவ நதிகள் ஓடுமே,
ஏழைகள் மன மகிழ்ந்து கர்த்தரை ஏத்திப் பாடுமே;
வருடமாயிரம் அளவும் பூமியில் பலன்கள் நீடுமே,
வான இராச்சிய சேனைகள் யாவும் வந்து கூடுமே. – எனது

6. சஞ்சலங்களும் தவிப்புகள் யாவும் ஓடிப் போகுமே,
சந்தோஷத்தோடு மகிழ்ச்சியும் வந்து சார்ந்து பிடிக்குமே;
நெஞ்ச மகிழ்ந்து நீதிமான்களின் வாய் துதிக்குமே,
நித்திய சீவனைப் பெற என்றன் மனம் துடிக்குமே. – எனது

7. சீக்கி ரமாக வருகிறேன் என்று சொல்லி விட்டாரே,
சீவ விருட்சந் தனில் அதிகாரம் தருவேன் என்றாரே;
பாக்கியமுள்ள சுவிசேடத்தைக் கைக்கொள்ளச் சொன்னாரே,
பார்க்கப் பார்க்க நல் வேதவாக்கியம் தோன்றும் என்றாரே!
–எனது

***–பாளையங்கோட்டைப் பாடல்.***

**242. இராகம்: செஞ் சுருட்டி. தாளம்: ஆதி**

**அன்னமே சீயோனே என்தன் சொர்ணமே உன் நேசரிதோ**
வாசலண்டை கூவி நிற்கிறார் – பிரியமே உன்
ஆசை கொண்டு லாவி நிற்கிறார் – நேச
உத்திமியே மகா பத்தினியே உன
தத்தனிதோ பனி மத்தியில் நிற்கிறார்

ஓடி வந்தவர் முகம் பாராயோ? – உள்ளே அழைத்துன்
நேசரிடம் ஓர் சொல் கூறாயோ?

2. வஸ்திரங் கழற்றி இப்போ நித்திரை செய்கிற என்னை
வா வா என்ற ழைக்கிறவர் யார் – ம காத்திரமாய்
ராவே வந்த ழைக்கிறவர் யார் – இப்போ
செப்பமதாகவே நித்திரை செய்கையில்
சொப்பனமோ இது மெய்ப்பொருளோ
சோதிக்க என்னால் கூடுதில்லையே – ஐயோ எனக்குப்
பாதிக் கண்ணு றக்க மில்லையே

3. நித்திரை மயக்கத்தாலே அத்தனை மறந்து விட்டேன்
நேசமணி லீலி புஷ்பமே – எங்கும் மணக்கும்
ஆசையுள்ள ரோசா புஷ்பமே – இங்கே
அத்திமரங்கள் பூத்தது காய்த்தது,
கொத்துத் திராட்சைக் குலைகளி லங்குது
கோதையே என்னோ டெழுந்து வா – நேரமாகுது
ஆவலாய் என்னோ டெழுந்து வா.

4. என்தனுடை தோழிகளே, என்தன் சகோ தரிகளே
என்னருமை நேச ரெங்கம்மா – ஐயோ பாவி நான்
என்ன இனி செய்குவேன் சும்மா – என்
நாயகனார் தலை வாசலிலே மறை
வாகவே நின்றெனைக் கூவிய ழைக்கையில்
பாவி ஓடி வந்தே னில்லையே – பிறகு வந்தால்
நேச ரங்கு தானு மில்லையே.

5. என்னினிய தோழியரே, எருசலே மின் மக்களே
என்னருமை நேசர் சாயலை – நான் என்ன சொல்வேன்
பொன்னகரி லுள்ளோர் அவரே – பதி
னாயிரம் பேரில் சிறந்தவராம் தலை
மேவிய தங்கமும் தாவிய அங்கமும்
இந்திர நீல ரத்தினங்களாம் – இழைத்த பிர
காசமுள்ள யானைத் தந்தமாம்.

6. அந்தமுள்ள ரூபவதியே உன்தன் நேசர் எங்கே போனார்
உன்னோடு கூடவே நாங்களும் – வழி பிடித்து
மன்னனைத் தேடுவோம் வாருங்கள் – இவர்
அத்தனார் இயேசு மகத்வனார் நம்மை
முக்தி லோகத்தினில் சேர்ப்பதற் காகவே
இத்தனை தூரமே தாழ்த்தினார் – வாருங்கள் சென்று
கர்த்தனைக் கண்டங்கு வாழ்த்துவோம்.

**243.**

**பரிசுத்தர் கூட்டம் இயேசுவைப் போற்றி**
பாடி மகிழ்ந்தாடி யங்கே கூடிட
பர மானந்த கீதமங் கெழும்ப
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே!

2. ஆட்டுக் குட்டியும் அரசாட்சி செய்ய
அண்டினோ ரெவரும் அவரைச் சேர
அன்பர் அன்றெல்லார் கண்ணீரும் துடைக்க
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே!

3. பேதுரு பவுலும் யோவானும் அங்கே
பின்னும் முற்பிதாக்கள் அப்போஸ்தலரும்
இரத்தச் சாட்சிகளும் திரளாய்க் கூட
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே!

4. ஜெகத்தில் சிலுவை சுமந்தோ ரெல்லாம்
திருமுடி யணிந்தி லங்கிடவும்
தேவ சேயர்களா யெல்லாரும் மாற
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே!

5. சோத னைகளை வென்றவர் எவரும்
துன்பம் தொல்லை களைச்சகித் தவரும்
சோதி ரூபமாய்ச் சொர்க்கலோகில் சொலிக்க
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே!

6. கன்னிகையைப்போல் கர்த்தன் சபையன்று
மன்னர் மணாள னேசுவை மணந்து
பின்னும் சொல்லரிதாம் நலம்நுகர
நீ அங்கிருப்பாயோ? சொல் என் மனமே

அட்டவணை

**244.**

**"நேசமே எழுந்து இயேசு ராசனை" என்ற மெட்டு**

**பல்லவி**

**அன்ன மேநீ தூது போவேன்**
மன்னனை அ ழைத்து வாவேன்

**அனுபல்லவி**

கன்னல் மொழி சீயோ னென்தன்
காதலை யவர்க்குச் சொல்லி – அன்ன

**சரணங்கள்**

1. வண்ணமணி மார்பழகன் வானவர் பணியும் இராசன்
இன்ன மேதா வரக் காணோம் இக்கணமென் மேல் தயவாய் – அன்ன

2. பத்தினி எனைக் கெடுக்க பதிலி ருக்கு மிச்சைப்
பாதகப் பசாச கலப் பங்கம் வந்த ணுகிடாமல் – அன்ன

3. நித்திய வாழ்விட மொன்று றெத்தனம் செய்து திரும்ப
இத்தரை வருவே னென்றார் இன்னம் வரக் காணேனடி–அன்ன

4. இத்தனையும் கேட்டாலவர் இக்கணமே வந்திடுவார்
சத்தியம் சத்தியம் ஞான சிகாமணி சொல்லுகிறேன் – அன்ன

**245.**

**கண்ணிகள்**

**இயேசு வரும் நாளதனில் என் உள்ளம் பொங்கிடுமே,**
எந்நேரம் வந்திடினும் இரப்பேன் நான் ஆயத்தம்.

2. வருவரே மன்னர் தாம் மகிமையுள்ள தூதரோடும்
வானமண் டலமசைய வானோர் எக்காளமுடன்.

3. அன்பின் கயி றற்றுவிழ அலகை நெஞ்சம் துடிதுடிக்க,
எம் பெருமான் இயேசுவுடன் ஏழையேன் சேர்ந்திடவே!

4. தாசன் தன் வலப்புறத்தில் நாதன் இயேசு இருந்திடினும்
பாதம் சேராதோரை இடபுறமாய்ச் சேர்ந்திடவே.

5. சென்ம சரீரமெல்லாம் மண்ணுடன் மண்ணாகிடவே,
ஆன்ம சரீரமது அதனின்று தோன்றிடவே

6. சீவனைக் கண்டடைந்தொர் செகமதில் மீந்திருந்து,
தேவசுதன் திருவருளால் திரு உருவாய் மாறுவரே.

7. மணவாளன் வருகையினில் மகிழ்ந்திடுவார் கன்னியரே,
மனம் போல் நடப்பவரும் மகிழுவரோஅந் நாளதினில்?

8. தம்பதிகள் மகிழ்வது போல் அன்பருடன் மகிழ்வேன் நான்,
இன்பமதைச் சாற்றிடவே என் நாவுக் கேலாதே!

**246.**

**பல்லவி**

**உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா?**

**சரணங்கள்**

1. பூவில் இயேசு வரும்போது பொல்லாரோ டிடுவார்
இந்தவிதம் நீஇருந்தால் என்னசெய் திடுவாய்? – உன்

2. மேகங் களுடன் வருவேனென்று சொன்னவர்
இப்போமே கந்தனில் வருந்நேரம் கிட்டிச்சேருதே – உன்

3. தேவ தூதரோடும் பெரும்எக் காளத்தோடும்
தம்பக்தரைச் சந்திக்குந்நேரம் கிட்டிச் சேருதே – உன்

4. அவபக்தர் அக்காலத்தில் அழுதிடுவார்
அவர்வரும் போதுஇரட்சிப் படையமாட்டார் – உன்

5. பாவங்களில் சீவிப்பார் பதுங்கிடுவார்
பரிசுத்த மாக்கப்பட்டோர் பறந்திடுவார் – உன்

6. இரக்கமுள்ள இந்தநாளில் மனந்திரும்பு
இந்நிமிடம் ஏற்றுக்கொள்வார் மன்னிப்பீதோ – உன்

7. உனக்காய் மரித்த இயேசு காத்து நிற்கிறார்
இயேசு உன்னைப் பட்சமாக ஏற்றுக்கொள்வார் - உன்

8. பரனைஏற்றுக் கொள்ளாதோர் அந்தநாளிலே
பதுங்கிநித் தியமாகப் பரிதவிப்பார் - உன்

**247.**

**பல்லவி**

**என்தன் பூமானைக் காண சிந்தை பெருகுதையோ**
என்றைக்குக் காண்பேனோ - நான்

**சரணங்கள்**

1. சுந்தரத் தில்மிகுந்து அந்தரத் திலிருக்கும்
எந்தன் பூமாணை காண - அழகுடைய
அண்ணல் இயேசுவைக்காண - என்தன்

2. விண்ணிலி ருந்தவர் மண்ணின்மேல் வந்தவர்
கன்னியிடம் பிறந்தவர் - இலாசருக்காகக்
கண்ணீர் விட்டழுதவர் - என்தன்

3. இன்னும் வரஎன்னத் தாமதம் சொல்லுவீர்
சொன்ன வாக்கை நினைத்து - அடியேனுந்தன்
பாதம் பணிந்து வந்தேன் - என்தன்

4. பொல்லாதோ ரை இரட்சிக்க வல்லப ராபரன்
என்னதுய ரடைந்தார் - அதை நினைத்தால்
சொல்ல முடியுதில்லை - என்தன்

5. கன்னத்தில் அடிபட்டுக் கண்ணீர் விடும்வேளை
என்னை நினைத்தீரே நீர் - அதை நினைத்தால்
உம்மைப றந்திடுமே - என்தன்

**248. இராகம்: சங்கராபரணம்** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**சீயோன் பிரயாணிகளே நீங்கள் சீக்கிரம் விழித்திருங்கள்!**
சீயோன் ஓட மத்தியில்நீர் நித்திரை செய்யலாமோ?

அட்டவணை

**அனுபல்லவி**

1. தூக்கத்தி னின்றுணர உங்கள் வேளையும் வந்தது காண்
சுற்றிலும் ஏறிட்டுப் பார்த்துச் சோபை யடைந்திடுவீர்.

2. மாரிகாலம் சென்றது மழை பெய்து ஒழிந்ததுவே
மாட்சிமிகும் புட்பம் எங்கும் வாசனை வீசிடுதே!

3. பட்சிப்பறவைகளும் தங்கள் பாடல்கள் பாடிடவே
காட்டுப்புறா கூவும் சத்தம்இந் நாட்டினில் கேட்டிடுதே.

4. அத்திமரம் துளிர்த்து அதன் காய்கள் பழுத்திடுதே
நத்திநீர் விரும்பும் சத்தம்இந் நாட்டினில் கேட்டிடுதே.

5. இன்னம் நீ தூங்கிடலோ நண்பா நீ எப்போ தெழுந்திடுவாய்
அன்னமே என அழைக்கும் அன்பரின் சத்தம் கேளாய்.

6. கன்மலையின் வெடிப்பும் மலை தன்னிலுள்ள பிளப்பும்
கர்த்தன் வரும் நேரம் உம்மைக் காட்டிக் கொடுத்திடுமே.

**249.**

**பல்லவி**

**துரை மக இராசனே ஜேஜே**

துரை மக இராசனே சுவாமி!

**அனுபல்லவி**

தூரத் தலம் போன தாலே
மாறிப் போயிற்றோ – உன் அன்பெங்கே?– துரை

**சரணங்கள்**

1. என்கணவ னேகுணாளா, இன்பமேரஞ் சிதமணாளா
பைங்கிளியே என்கண்ணாளா
சுந்தர மான கந்தப் போளமே – துரை

அட்டவணை

2. தத்தம் பண்ணி யேதந்தாயே, இத்தரையி லேவந்தாயே
இரத்தம் சிந்தித் தெத்தெ டுத்து
சுத்தம் பண்ணி முத்தி தந்தவா – துரை

3. செங்கோலும் திருமுடியும், தங்கச்சிலு வைக்கொடியும்
துங்கா என்னில் தங்குந் தேவா
லங்கிர் தமும் கண்டு வாழ்வேன் – துரை

4. இதோசல்தி வாரேனென்றாய், இன்றளவெங் கிருந்து
கொண்டாய்!
சிந்தை யுங்க லங்கு தேதி
யங்குதேம யங்குதே என்ன – துரை

5. விண்ணான சோதியிலே, கண்ணாடி வீதியிலே
என் ஆவல் தீரப் பாடி
உன்முன் ஆடி நின்னை நாடுவேன் – துரை

6. பொல்லாத லோகத்திலே, நில்லேனிப் பருவத்திலே
எல் லாம றிந்த தேவா
வா வா என்னைக் காவா – துரை

***–இரத்தினம் பரதேசியார், திருநெல்வேலி.***

**250. இராகம்: மோகனம். தாளம்: ஆதி**

**பல்லவி**

**நேசமே எழுந்து இயேசு இராசனை அழைத்து வாவேன்.**

**அனுபல்லவி**

பாசத்தால்ப ரிசம்தந்த ஆசைமண வாளநேசா.

**சரணங்கள்**

1. மாயஉல கத்தில் நின்று, வாடுகிறேன் என்று சொல்வாய்
பேயும் கெட்ட நெஞ்சும் என்னை, ஏய்க்குதே அதையும்
சொல்வாய்.

அட்டவணை

2. தட்டித்தட்டி எழுப்பியும்நான் பட்டமரம் போலிருந்தேன்
மட்டில்லாத ஞானமண வாளரைப்பொ றுக்கச்சொல்வாய்.

3. சீக்கிரம் வருவேனென்ற, வாக்கும் நெடுங் காலமாச்சே
சீயோனாம் மனைவிசற்றே, தூங்குகிறாள் என்று சொல்வாய்.

4. பொன்முடி அரசர்தந்த பொற்கையிற் கறைபிடித்துச்
செந்நிறமாம் ஊற்றைத்தேடி ஓடுகிறாள் என்று சொல்வாய்.

5. வர்ணமணி இராசர்தந்த பொன்னணிக ளிற்சிலதை
அண்டர்கோன்மு கத்தைப்பார்க்க ஆசிக்கிறாள் என்று
சொல்வாய்.

6. ஒண்டியாய்ப் புலம்பும்பர மண்டலப்பி தாமகனாம்
அண்டர்கோன்மு கத்தைப்பார்க்க ஆசிக்கிறாள் என்று
சொல்வாய்.

7. ஆறுதலு மில்லைசாத்தான், சீறுதல திகமம்மா
தேறுதல்செய் உம்மாவியைத் தாரும்தாரும் என்றுகேட்பாய்.

8. சத்துருக்கள் மூன்றுபேரால், மெத்தவுங் கலக்கமம்மா
உத்தமச மாதானத்தைத் தாரும்தாரும் என்றுகேட்பாய்.

9. ஆவியில்கு ளிரதிகம், பாவத்தில்வெ றுப்புமில்லை
தாவித்தாவிக் கெஞ்சமனம் தாரும்தாரும் என்றுகேட்பாய்.

10. சிந்தைஎல்லாம் சீயோன்மேலே, விந்தைமனு வேலருக்கு
ஐந்துகாயம் காட்டிநின்று தேடுகிறார் என்றுசொல்வாய்.

அட்டவணை

# V. கிறிஸ்தவ வாழ்க்கை

## 1. செபம், மன்றாட்டு

**251. இராகம்: ஆனந்தபைரவி.** **தாளம்: ஆதி**

**கண்ணிகள்**

**அடியேன் மனது வாக்கும் கொடிய நடத்தை யும்மே**
ஆவியால் சீர்ப்ப டுத்தும் சுவாமி.

2. உமக்கே யான்சொந்தம்; தீயோர் தமக்கந் நியனாய்ப் போக
உதவும் எளியே னுக்கென சுவாமி.

3. பூமி யில்வசித் தும்நீர் தாமே எனது வாஞ்சை;
புகலி டம்அளி யும்என் சுவாமி.

4. சஞ்சல மேதெ னக்கு? பஞ்சம் படைக ளேது?
தஞ்சம் நீர்தாம் எனக்கென் சுவாமி

5. விண்ணி லோரிட மும்யான் மண்ணு லகைவெ றுக்க
மெய்த்த வமும்தா ரும்என் சுவாமி.

***–தேவவரம் முன்சி, திருவனந்தபுரம்.***

**252.**

**கண்ணிகள்**

**அருமையுள் ளேசுவே குருசினில் மரித்தென்**
ஆவி யைமீட் டஇரட் சகனை,
சகலமும் மறந்துநான் சகலமும் வெறுத்துநான்
தஞ்சம்என் றுனையே தேடி வாறேன்!

2. வீடும் மறந்துநான் நாடும் மறந்துஎன்
உடையவ னேஉந்தன் திருமுகம்காண
அடியனை வழியதில் பலவித ஆபத்தின்
நடுவினில் நடத்தி பரிபா லித்தாய்!

3. அப்பனோ அம்மையோ அண்ணனோ தம்பியோ
அன்புகூ ருவரோ நண்பா உனைப்போல்,
சகலமும் மறந்துநான் சகலமும் வெறுத்தேன்நான்
சாமிநின் பாதம் போதும் எனக்கு!

4. எந்தனுக் காகநீ எப்பாடு பட்டனை
எந்தையே நான்உனக் கீடெதும் செய்திலேன்!
முந்திய உன்திரு உன்னத அன்பைநான்
முற்றிலும் நம்பியே இக்கதி அடைந்தேன்!

5. நான்உனைத் தேடாத காலத்தில் நீஎனை
நாடியே தேடி நம்பிக்கை யளித்தாய்;
ஈனச் சிலுவையில் ஏறிடத் துணிந்தெந்தன்
எண்ணத்தை எல்லாம்நீ கொள்ளைகொண் டாயே!

6. நம்பிக்கை இல்லாதோர் நானிலத் தோருக்கு,
நாளொரு மூன்றில்நீ சாவைவென் றுயிர்த்ததால்,
அம்பரன் உனைப்போல், வெம்பாவி ஏழையேனும்
உம்பரம் தனிலுயர் வேனெனக் காட்டினாய்!

7. பஞ்சம் பசியுடன் நிந்தை தூஷணிகளை
பட்டுநான் மகிழ்வேனே, பராபரன் இயேசுவுக்காய்!
உந்தனைச் சேவித்து நிந்தை அடைவதில்
உன்னத இன்பம் சுரந்து வருகுமே!

8. ஆவிதே கம்உயிரும் பேயுல குடலோடு
மேவிடும் போரில்என் தூய்மையைக் காத்திட
உந்தனின் ஆவிஎன் சிந்தையில் வேணுமே
உவந்தளிப் பாய்நின் உன்னத ஈவையே!

**253. இராகம்: பைரவி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**ஆ! இன்ப காலமல்லோ? – செபவேளை**
ஆனந்த கால மல்லோ?

அட்டவணை

### அனுபல்லவி

பூவின் கவலைகள் போக்கினன் ஆசையை
பொன்னுல காதிபன் முன்னே கொண்டேகிடும். – ஆ!

### சரணங்கள்

1. துன்பம் துயர்நீக்கிப், பொல்லாங்கள் – சோதனை கள்போக்கி
அம்பர வாசிகளோ–டிதயத்தை–இன்ப உறவாக்கி,
கெம்பீர மாகவே தம்பிரான் ஆசனம்
கிட்டி மகிழ்வுட னுற்று வரச்செய்யும். – ஆ!

2. சீவஆ றுதல்பெற்று,–பிஸ்காவின்–சிகரம தனில்உற்று,
தேவந கர்கண்ணுற்று,–சடலத்தைச்–செகத்தில்எ ரிந்துவிட்டு,
ஆவி களிப்பொடு ஆகாயஞ் செல்லவே,
அன்போடு பார்த்துநல் வந்தனஞ் சொல்லுவேன் – ஆ!

***–M. வேதமாணிக்கம், நெய்யூர்.***

**254. இராகம்: இந்துஸ்தானி. தாளம்: ஆதி**

### பல்லவி

**ஆண்டவா, மோட்ச கதி நாயனே,**
மீண்டவா, பாவிக் கிரங்கு வாயே.

### சரணங்கள்

1. நீண்டஆயு ளுள்ளவா, நெறிமறைகொ டுத்தவா,
தாண்டிவ்உல கில்வந்தாயே, தயாளமுள்ள இயேசுவே – ஆண்

2. பெத்தலேக மூரிலே பிள்ளையாய்ப்பி றந்தாயே;
சித்தம்வைத்தி ரங்கமாட்டாயோ, தேவசீல மைந்தனே? – ஆண்

3. பாவியான ஸ்திரீஉன் பாதமுத்தி செய்திட
சீவவாக்கு ரைக்கவில்லையோ, தேற்றல்செய்யும் மீட்பரே?
–ஆண்

4. பேதலித்த சீமோனைப் பேணிமுகம் பார்த்தாயே;
ஆதரவு நீதான் அல்லவோ, அருமையுள்ள அப்பனே? – ஆண்

5. கொல்கதாம லையிலே குருசினில்தொங் கையிலே
பொல்லாருக்கி ரங்கவில்லையோ, பொறுமையுள்ள தேவனே?
– ஆண்டவா

6. பாவவினை தீர்க்கவே பாடுமிகப் பட்டாயே;
கோபமின்றி என்னைநோக்காயோ, குருசில்அறை யுண்டவா?
– ஆண்டவா

***–J.C. அருளப்பன், வடதிருநெல்வேலி.***

**255. இராகம்: நாதநாமக்கிரியை. தாளம்: சாப்பு**

**பல்லவி**

**சரணம் நம்பினேன் இயேசு நாதா – இது**

**அனுபல்லவி**

தருணம், தருணம், உன்தன் கருணை கூர், வேதா – சரணம்

**சரணங்கள்**

1. நின்அரு ளால்இங்கே வந்து – என்றும்
நின்அடைக் கலமாக என்னையே தந்து,
முன்நாள்வி னையைத் துறந்து, – ஆதி
மூலமே, உனக்கோலம், இரட்சியும் என்று – சரணம்

2. சன்னதி முன்தொண்டன் நின்றே – என்றும்
தாயான கருணை உனக்குஉண் டென்றே,
சென்னிமேல் கரம்தூக்கி நின்றே – உனைச்
சேவிக்கும் எளியேனைக் கோபிக்காய் என்றே – சரணம்

3. அலைவாய்த் துரும்புபோல் ஆடி – உன
ததிகரு ணைவரச் செம்பாதந் தேடி,
தொலையாத வாழ்வை மன்றாடி, – அன்பின்
தோத்ரசங் கீர்த்தன கீதங்கள் பாடி – சரணம்

4. இனியக ருணைபொழி வேதா – எனை
இருகரத் தால்அணை எம் இயேசு நாதா;
கனிவினைத் தொலைத்த நந்நீதா, – நசரைக்
கர்த்தாதி கர்த்தா, உன் கருணையைத் தா, தா – சரணம்

***–சத்தியநாதன் உபதேசியார், தஞ்சை நகரம்.***

**256. இராகம்: சங்கராபரணம்.** **தாளம்: ஆதி**

**"ஆனிரோ பாலகனே ஆதிபனே ஆனிரோ" – என்ற மெட்டு**

**திரியேகா, மரியோவா,**
கருணைசெய்வாய், காக்க வா!
இருளெனையே இடர்செய்யுதே,
இருகரங் கொடுத்தெனை இரட்சிக்க வா.

2. நிலையாதஇப் பூதலத்தில்
தொலையாத கவலைகொண்டேன்
நிலையான இயேசையனே
மலைக்கவி டாமலெனை இரட்சிக்க வா

3. பரமாளும் பார்த்திபனே,
நரரையாளும் நாயகனே;
சுரர்பணியும் செய்யவனே,
சரணமுன் தாளடி பணிந்தேனே.

4. பேய்தானும் புரளிபண்ணி
காய்மவிகா ரங்கொள்ளுதே;
தீக்கிடங்கில் தள்ளிவிடாமல்
திடன்பெலன் அளித்தெனை இரட்சிக்க வா.

5. பத்தாவேபரி சுத்தாவே
கர்த்தாவேஎமைக் காரையா!
சுத்தாதி சுத்தாவே
துதிபுகழ் அனவ ரதமுமக்கே.

**257. இராகம்: புன்னாகவராளி.** **தாளம்: ரூபக சாப்பு**

**கண்ணிகள்**

**வந்தருள், ஈ சன்மனைகாண்; மகிமைஏகோ வாவே – உனை**
வாழ்த்தும்அடி யார்க்குநிதம் வாய்த்தபெரு வாழ்வே.

### அனுபல்லவி

அந்திபகல் இங்குனைவந் தடையுமடியார்க் கிரங்கி,
ஆதரவாய் ஆண்டுகொள்வாய், வேதபரா பரன்குமாரா – வந்த

### சரணங்கள்

1. திருக்கருணை மொழியால்மனத் திருக்கறுக்கும், பொருட்
டெழுந்து,
தீயவினை மதித்தழிப்பாய், தேவர்பெரு மானே!
பெருக்கமுள உன்வசனம் பேதையருக் கேபலிக்க
உருக்கமுடன் இரங்கும்ஐயா, உன்பதமே தஞ்சம்தஞ்சம்!

2. பஞ்சம்படை, நோவுதுன்பம், பயங்கரம்செய் பவவினைக்கும்,
கெஞ்சும்அடி யாரைக்காப்பாய், கிறிஸ்தேசு வேஎந்நாதா.
மஞ்சுதிகழ் பரமண்டல வாழ்வைவிடுத் தேஉலகில்
துஞ்சுசிறு பாலகனாய்த் தோன்றிவரும் தேவதேவே – வந்த

3. பூவுலகை ஆளும்மன்னர், போதம்உணர் வேதியர்உன்
பொன்பதத்தை அர்ச்சியிக்க நற்பதம்தா, தேவே,
மூவுலகி னில்துதியும், முக்யமகத் துவம்கனமும்,
மாபலமு மேஉமக்கே, மங்களம்உண் டாவதாக.

*–காபிரியேல் உபதேசியார், பார்வதிபுரம், நல்லூர்.*

**258.**

### "அருள் ஏராளமாய்ப் பெய்யும்" – என்ற மெட்டு

### பல்லவி

**வா எங்கள் சுவாமி வா இந்த நேரத்திலே**
வந்துநின் சுந்தரக் கையால் தந்திடும் நன்மையெல்லாம்!

### சரணங்கள்

1. இராப்பக லெங்களைக் காரும் போக்கு வரத்தி லெல்லாம்
கூப்பிடும் போதெல்லாம் கேட்டுக், கொண்டணைத் தன்பு
செய்வாய் – வா

2. உன்னடியா ரெங்கள் வம்சம் உம்மை அடைந்திடவே
உச்சித இரட்சண்ய வேலை ஊக்கமாய்ச் செய்திடவே – வா

3. கல்வாரி ராயரின் புண்யம் கன்மிகள் எங்களுக்கே
அல்லேலூயா சொல்லும் நாங்கள் ஐயனின் பொன்னடிக்கே – வா

4. இயேசைய னும்மையல் லாமல் எங்களுக் காருமில்லை
நீசரென் றெம்மை விடாதே நின்னடி தஞ்சமையா – வா

5. வந்தனம் வந்தனம் இராசா சந்ததம் எங்களைக்கார்
வல்லமை தந்திடை கட்டி வானகத் தின்வழிசேர் – வா

**259.**

**"ஆனந்தமே பேரானந்தமே" – என்ற மெட்டு**

**வாருமையா போதகரே! வந்தெம்மிடம் தங்கியிரும்;**
சேருமையா பந்தியினிலே, சிறியவராம் எங்களிடம்

2. ஒளிமங்கி இருளாச்சே உத்தமனே வாருமையா
களித்திரவு காத்திருப்போம் காதலனே கருணைசெய்வாய்!

3. ஆதரையில் ஆறுதலே அன்பருக்குச்ச தாஉறவே
பேதையர்க்குப் பேரறிவே, பாதைமெய்ச்சீ வகுருவே

4. நாமிருப்போம் நடுவிலென்றீர் நாயனுன்பேர் நமஸ்கரிக்க
தாமதமேன் தயைபுரியத் தற்பரனே நலம்தருவாம்

5. உந்தன்மனைத் திருச்சபையை, உலகமெங்கும் வளர்த்திடுவாய்
பந்தமற பரிகரித்தே, பாக்கியமளித் தாண்டருள்வாய்!

6. பாடும்தேவ நாயகன்பா பாரினில்கேட் டனுதினமும்
தேடும்தொண்டர் துலங்கவந்தன், திவ்யஆவி தந்தருள்வாய்!

அட்டவணை

**260. இராகம்: ரீதிகௌளை** **தாளம்: திஸ்ரசாப்பு**

**பல்லவி**

**இயேசு இராசனே ஆசிடை தாரீரோ**

**அனுபல்லவி**

ஆசிடை தந்து பாசமாய்க் காரீர்

**சரணங்கள்**

1. இயேசென்னும் நாமா, காசினில் பூமா – தவி
தீசாயின் உயர் குல இராசனே – இயேசு

2. பேய்க்கணம் ஓட, சேய்க்கணம் பாட – இனி
தாய்க்கணம் துதியுடன் பாடிட – இயேசு

3. உம்பர் சோதியே, நம்பும் கதியே – அதி
சம்பிரம பூரண காரண – இயேசு

4. தேவசிங்காரா, பாவ சங்காரா – மனு
வாகப் புவியில்வந்த இராசனே – இயேசு

**261. இராகம்: ஆங்கிலம்** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**செபமே சீவன் செபம் செயம்**
சீவியத் திற்கிதுவே சட்டம்
செபமே சீவன் செபம் செயம்
சீவியத் திற்கிதுவே சட்டம்.

**சரணங்கள்**

1. செபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
செபத்தின் வாஞ்சை தந்தருளும்
செபத்திலே தரித் திருந்து
செபத்தின் மேன்மை காணச்செய்வீர் – செபமே

2. ஊக்கத் துடனே ஓர்முகமாய்
வாக்குத் தத்தத்தைப் பற்றிக்கொண்டு
நோக்கத்தை எலாம்நேர்மை யாக்கி
கேட்கும்படி கிருபை செய்வீர் – செபமே

அட்டவணை

3. ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சைவிட்டு
வாகான தாக்கும் மனமெல்லாம்
எல்லமை யோடேவேண்டிக் கொள்வோம் – செபமே

4. இடைவி டாமல் செபம்செய்ய
இடையூ றெல்லாம் நீக்கிவிடும்,
சடைப்பில் லாமல்உந்தன் பாதம்
கடைசி மட்டும்காத் திருப்போம் – செபமே

**262. இராகம்: சயிந்தவி.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**ஐயையா, நான் ஒரு மா பாவி – என்னை**
ஆண்டு நடத்துவீர், தேவாவி.

**சரணங்கள்**

1. மெய் ஐயா, இதுத ருணம் ஐயா; – என்தன்
மீதிலி ரங்கச்ச மயம், ஐயா:
ஐயையா, இப்போதென் மேல்இரங்கி – வெகு
அவசியம் வரவேணும் தேவாவி – ஐயையா

2. எனதி ருதயம் பாழ்நிலமாம் – ஏழை
என்னைத் திருத்திநீர் அன்பாக
தினமும் நல்வழி நடத்தும், – ஞானத்
தீபமே, உன்னத தேவாவி – ஐயையா

3. ஆகாத லோகத்தின் வாழ்வைஎல்லாம் – தினம்
அருவ ருத்துநான் தள்ளுதற்கு
வாகான சுத்தம னம்தருவீர் – நீர்
வல்லவ ராகிய தேவாவி. – ஐயையா

4. பத்தியின் பாதை விலகாமல் – கெட்டப்
பாவத்தில் ஆசைகள் வையாமல்
சத்திய வேதப் படிநடக்க – என்னைத்
தாங்கி நடத்திடும், தேவாவி – ஐயையா

5. அன்பு, பொறுமை,நற் சந்தோசம், – என்
ஆண்டவ ரின்மேல் விசுவாசம்,
இன்ப மிகுமெய்ச்ச மாதானம், – இவை
யாவும் தருவீரே, தேவாவி – ஐயையா

6. இயேசு கிறிஸ்துவில் நான்சார்ந்து, – அவ
ரிடத்தி லேயேநம் பிக்கைவைக்க,
மாசில்லாத் துய்யனே, வந்துதவும், – நீர்
வராமல் தீராதே, தேவாவி – ஐயையா

*–P. பாக்கியநாதன், சிவகாசி.*

**263. இராகம்: பைரவி.** **தாளம்: திரிசுரம்**

**பல்லவி**

**தீய மனதை மாற்ற வாரும்,**
தூய ஆவியே – கன – நேய ஆவியே

**சரணங்கள்**

1. தீமை செய்ய நாடு தென்றன்
திருக்கு நெஞ்சமே – மருள் – தீர்க்கும் தஞ்சமே – தீய

2. பரத்தை நோக்க மனம் அற்றேனே,
பதடி தான், ஐயா – ஒரு – பாவி நான், ஐயா – தீய

3. புதிய சிந்தை, புதிய ஆசை
புதுப்பித் தாக்கவே, – அதைப் – புகழ்ந்து காக்கவே – தீய

4. ஏக்கத் தோடென் மீட்பைத் தேடி,
இரந்து கெஞ்சவே, – தினம் – இதயம் அஞ்சவே. – தீய

5. கிறிஸ்து மீது நாட்டங் கொண்டு
கீதம் பாடவே, – அவர் – கிருபை தேடவே – தீய

6. தேவ வசனப் பாலின் மீது
தேட்டம் உன்னவே, – மிகு – தெளிவு துன்னவே. – தீய

7. செபத்தின் தாகம் அகத்தில் ஊறி
ஜெபித்துப் போற்றவே, – மிகச் – சிறப்பாய் ஏற்றவே – தீய

*–சற்குண உவின்பிரட் போதகர்.*

அட்டவணை

**264. இராகம்: உசேனி.** **தாளம்: திரிசுரம்**

**பல்லவி**

**பார்க்கமுனம் வருவேன் நெருக்கத்தில்**
பத்ரமா கத்கரி சித்தமே சியாவை.

**அனுபல்லவி**

ஆர்க்கும் இரங்கும் பராபர னின்சுதன்
அன்பின் மனுடவ தாரத்தைச் சிந்தித்து – பார்

**சரணங்கள்**

1. நிச்சய சாதா ரணசத்ய வேதனை,
அட்சய ஞான வரப்பிர சாதனை;
உச்சித வாக்கிய சுவிசேட போதனை
இரட்சகர் எங்கள் கிறிஸ்தேசு நாதனை, – பார்

2. முற்பிதாக் கள்வி ரும்பிய தேட்டம்,
செப்பும் ஆதிப் பிதாவின் சிரேட்டம்,
எப்பு விக்கும் எவர்க்கும் கொண்டாட்டம்,
ஒப்பிலான் சுதன்மேல் என்றன் நாட்டம், – பார்

3. ஆசைக் கிறிஸ்துண்மை யான நல்ஆயனை,
ஆத்தும நாயகர் ஆனஎன் நேயனை,
பாசவ லையில்கை தூக்கின நாயனை,
பட்சமொ டுகாத்த முக்யச காயனை, – பார்

4. ஆச்ச ரியமான நேசத்தை, பாசத்தை,
அன்பின் திருமுகத்தை, ஐந்து காயத்தை,
காட்சி தரும்இரு பாதத்தை, பாவியைக்
கைதூக்கி, விட்ட கரத்தை உரித்தாக. – பார்

***– வேதநாயகம் சாசுதிரியார்***

**265. இராகம்: சங்கராபரனம்.** **தாளம்: ஆதி**

**"என்ன பாக்யம்" – என்ற மெட்டு**

**பல்லவி**

**ஆசீர்வதியும் – சுவாமி என்னை**
ஆசீர்வதியும்

**அனுபல்லவி**

ஆசீர் வதித்தாலே அல்லாது நான்விடேன்
நேசா நின்வாக்கெல்லாம் நினைத்துஇப் போதேநீர் – ஆசீர்

**சரணங்கள்**

1. இயேசா வைப்போலே – சுதந்தரம்
இழந்தஎன் மேலே
கூசாது கைவைத்துக் குற்றங்கள் மன்னித்து
ஆசீர்வ தியுமென் ஆண்டவா, தேவாநீர் – ஆசீர்

2. கவிழ்ந்தே நிற்கின்றேன் – துணிந்தே என்
காத்தாவை யான்நோக்கேன்
பவம்நீக்கப் பிணைப்பட்டு பாடுகள் பட்டஎன்
பரிசுத்த மீட்பரே பவம்நீக்கி என்னைநீர் – ஆசீர்

3. நெஞ்சைநீர் மாற்றும் – வாக்குப்போல்
நித்தம்காப் பாற்றும்
கெஞ்சும்என் விண்ணப்பம் கேளும்மா கிருபையாய்
அஞ்சிகை என்நெஞ்சில் ஆண்டவா தாரும்நீர் – ஆசீர்

4. மாசில்லா வாயன் – நேற்றின்றென்றும்
மாறாத நேயன்
ஆ! சிறி யோரைநீர் ஆசீர்வ தித்தீரே
அவ்வாறே என்னையும் ஆசீர்வ தித்திடும். – ஆசீர்

**266. இராகம்: மோகனம். தாளம்: ஆதி**

**பல்லவி**

**ஆசைக் கிறிஸ்தரசே வாரும் – உந்தன்**
ஆசீர்வாதம் அடியாருக்கே தாரும்

**சரணங்கள்**

1. காணாத ஆட்டை யொத்த, கன்மசண் டாள ரெமை
வானாச னத்திலி ருந்து, வந்துஇரட் சிப்பை ஈந்த – ஆசைக்

அட்டவணை

2. அற்புத மாகவே அன்னைமரி யாளிடம்
உற்பவித் துப்பிறந்த ஒருமக னாகிய – ஆசைக்

3. நீசம னுடனாக காசினி மீதினில்
பாசமா யுதித்த பரன்மக னாகிய – ஆசைக்

4. பேயின்கை யிலிருந்து பிடுங்கியே எங்களை
ஆவலாய் மீட்டுவந்து ஆதரித் திடும்எங்கள் – ஆசைக்

**267. இராகம்: புன்னாகவராளி. தாளம்: அடம்**

**பல்லவி**

**ஆதி யாம் மகா இராசனே – எந்த வேளையும்**
அடிய னோடிரும், ஈசனே

**அனுபல்லவி**

தீதில்லா சருவேசா, தேசுறும் பிரகாசா,
பாதகன் யான்மிகு பலவீனன், ஆதலால் – ஆதி

**சரணங்கள்**

1. பாவி பெலனால், ஐயனே – நின்றால் என்னைப்
பகைவர் செயிப்பார், மெய்யனே
தேவா, துணை நீர் ஐயனே – சிறியனிடம்
சேர்ந்தே வசியும், துய்யனே;
மேவும் தஞ்சம் எனக்கு வேண்டும், காவலன் நீரே;
சாவு வரையும் என்னைத் தாங்கி அரவணையும்.– ஆதி

2. இரக்கம் பொழிய வாருமே, – கிருபையாக,
இறைவா, என்னிடம் சேருமே;
உருக்கம் நிறைந்த நீருமே – அனவரதம்
உந்தம் அருளைத் தாருமே;
செருக்கால் எம்மீ திகலோர் சேதம் செய்ய நினைக்கும்
திருக்கை அகற்றி உன்னில் தினமும் அருள் புரியும். – ஆதி

அட்டவணை

3. எந்தன் மரண மட்டுமே – அருகில் நீரே
இருந்தால் மகா இட்டமே.
எந்த அதிதர் கெட்டுமே – இமைப் பொழுதில்
ஏகிப் போவார் திட்டமே;
தந்தை சுதன் நீரல்லால் தஞ்சம் வேறாரும் இல்லை;
விந்தை மேவும் கதியில் மேன்மையு டன்வாழ்கவே! – ஆதி

*–C. யோசேப்பு, நாகர்கோவில்.*

**268. இராகம்: காப்பி.** **தாளம்: சாப்பு**

**ஆயத்த செபம் செய்ய பெலன் தாரும் சுவாமி**
அடைக்கல மாயுந்தன் துணைவேணும் நேமி.

2. காயத்தால் குணக்கேடு தடைகள் வராமல்
காப்பாற்றக் கேட்கிறேன், கிறிஸ்துவே தேவா.

3. திருக்குள்ள இருதயம் மறைத்துப் போடாமல்
சிறுமையாய்ப் பாவத்தை உணர்ந்திடச் செய்யும்.

4. நரசென்ம மனுடரின் அமளி வராமல்
நாதா நீர் கிருபையாய்க் காத்திட வாரும்.

5. சாத்தானால் சோதனை மெத்தஉண் டையா
சர்வா யுதம்தந்து காத்திடு மையா.

6. சுருக்கநா ளானதால் கொதிக்கிறான் சீறி
சுடரொளிப் பட்டயத் தூதரால் காரும்.

7. ஏழுமுறை செபத்துக்குத் தடைகள் வராமல்
இரக்கமாய் தயவுடன் நடத்துமேன் சுவாமி

8. கேட்கிற வரமெல்லாம் கிருபையாய்த் தாரும்
கேடான மனமொன்றாய்ப் பொருந்திட வாரும்.

9. கருத்தான மனதுடன் ஒருமித்துப் பாடி
களிப்புடன் மன்றாட அருள்செய்யும் சுவாமி.

10. வருகையின் நாள்மிக நெருங்குதே சுவாமி
மருரூப ஆவிக்காய் தவிக்கிறேன் பாவி.

11. கிருபையின் கரத்தினால் தாங்குமேன் சுவாமி
கிறிஸ்துவின் மூலமாய் வருகிறேன் பாவி.

12. இம்மானு வேலுக்கு எதிர்கொண்டு போக
எண்ணையும் தீபமும் தாருமேன் சுவாமி.

13. மறுபடி பிறந்துதற் பெருமையைக் களைந்து
மனத்தாழ்மை அணிந்திட படிப்பியும் சுவாமி.

14. இப்படி யாகவே கேட்கும்மன் றாட்டை
இயேசுவின் மூலமாய் ஏற்றுக்கொள் ஐயா.

**269. இராகம்: பியாகடை.** **தாளம்: ரூபகம்**

**பல்லவி**

**ஆரணத் திரித் துவமே, - எமை**
ஆண்டருள், மகத்துவமே.

**அனுபல்லவி**

பூரண தேவ பிதா, சுதன் ஆவியே,
பொன்னுல கத்தெழும் உன்னத மான
போதக் கிருபையா பத்ததி
நீதிச் சுடரே, நித்திய - ஆரணத்

**சரணங்கள்**

1. அன்றன்றை அப்பத்தைத் தாரும்; - எங்கள்
ஆபத் தனைத்தையும் தீரும்;
இன்றும் என்றெங்களைச் சேரும்; - திரு
இரக்கத் தால்முகம் பாரும்;
நன்றிகெட் டோர்களைக் கொன்று போடாதேயும்;
ஞானத் தனு மானத் தொளிர்
மேன்மைத் திவ்விய பானத் தருள், - ஆரணத்

அட்டவணை

2. மூவர் ஒன்றான யெகோவா, – உயர்
முக்ய கிருபையின் தேவா,
மேவி அடியாரை, தேவா, – பல
வெவ்வினை யினின்றும் கா, வா;
பாவிகள் நாங்கள் ஏவையின் மக்களே,
பக் ஷமே, பரம பொக் ஷமே,
பாடும்புகழ் நாடும் பரி
வோடும் தயை நீடும் பரா – ஆரணத்

*–வேதநாயகம் சாத்திரியார்.*

**270. இராகம்: செஞ்சுருட்டி. தாளம்: ஏகம்**

**பல்லவி**

**இந்த வேளை வரவேணும் – என் இயேசு நாதா**
இந்த வேளை வரவேணும்

**அனுபல்லவி**

இந்த வேளை வரவேணும், என் துயரம் தீரவேணும்
சிந்தை காட்சி தரவேணும், சீயோன் மலை இயேசு நாதா– இந்த

**சரணங்கள்**

1. மெத்தவே துயர மாயினேன் – வெயிலைக் கண்ட
மெழுகுபோ லுருகி வாடுகிறேன்;
கர்த்தனே கருணை வைத்து காட்சிதர வாரு மையா
பெத்தலை பிறந்த பாலா பேணியெமைக் காக்க வேணும்– இந்த

2. பத்து நெறி கோபுரங்களாம் – பொன்னாலே செய்த
பளிங்குமணி மண்டபங்களாம்
அத்தனையும் விட்டெழுந்து ஆதரிக்க வந்தவரே
செத்தவர் பிழைக்கச் செய்த, சீயோன்மலை இயேசு நாதா
–இந்த

3. பாவப் பாரம் தாங்கக் கூடுமோ? – அடிமை உந்தன்
பாத முத்தி செய்ய வேண்டாமோ?
ஆவலுடன் பாவமன்னிப் பருளி மனங்கசிந்து
சீவ வாக்க ருளவேண்டும், சீயோன்மலை இயேசுநாதா – இந்த

அட்டவணை

4. கூவி அருள் பாவிகட்கெல்லாம் – உமது வல்ல
ஆவியை அருளும் இரட்சகா!
பாவிஎன்னி ருதயத்தில் ஆவியின் கனிபழுக்க
சீவநதி பாயச் செய்யும், சீயோன்மலை இயேசுநாதா – இந்த

**271.**

**பல்லவி**

**இயேசையா நாங்க ளிப்போ இன்பமாக இங்கு கூடி**
ஏற்றிப் போற்றித் தொழுதிட வந்தோமே

**அனுபல்லவி**

ஆசையாயும் தாசர்களை ஆசீர் வதிக்க வாரு மையா – தேவா
ஆசீர் வதிக்க வாரு மையா

1. கேட்டால் கொடுப்பே னென்று கிருபையாய் வாக்களித்த
கிறிஸ்துவே உம்மை நாங்கள் கெஞ்சுகின்றோம்;
தேடி னால்கண் டடைவீ ரென்று
திருவாக்களித்த இராசனே – தேவா
திருவாக் களித்த இராசனே – இயேசையா

2. தட்டினால் திறப்பே னென்று தயவாக வாக்களித்த
தயாபரா உம்மை நாங்கள் கெஞ்சுகிறோம்;
தாசர் கேட்கும் இம்மன் றாட்டை
தயவுகொண்டேற்றுக் கொள்ளுமையா – தேவா
தயவு கொண் டேற்றுக் கொள்ளுமையா – இயேசையா

3. ஒருமன துடன் ஓர்இடத்தில் கூடினதால்
அருமையாய் ஆசீர் வதித்திடுமே
ஒருமன துடன்உமைக் கூடித் துதிக்க
உம்தன் ஆவியைத் தாருமையா, – தேவா
உம்தன் ஆவியைத் தாருமையா – இயேசையா

அட்டவணை

**272. இராகம்: தோடி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**இயேசு நசரையி னதிபதியே – பல**
நரர்பிணை யென வரும்.

**அனுபல்லவி**

தேசுறு பாதல வாசப் பிரகாசனே
சீவனே, அமரர் பாவனே மகத்துவ – யேசு

**சரணங்கள்**

1. இந்த உலகு சுவை தந்து போராடுதே,
எனதுடலும் உமதோ டிசைந்துசீ ராடுதே;
தந்தர அலகை சூழ நின்றுவா தாடுதே;
சாவாமி, பாவியாம நோயினில் வாடுதே; – யேசு

2. நின் சுய பெலனல்லாமல் என் பெலன் ஏது
நினைவு, செயல், வசனம், முழுதும் பொல்லாது;
தஞ்சம் உனை அடைந்தேன், தவற விடாது;
தாங்கி ஆள் கருணை ஓங்கிஇப் போது – யேசு

3. கிருபையுடன் என் இருதயந்தனில் வாரும்;
கேடு பாடுகளெல் லாத்தையும் தீரும்;
பொறுமை நம்பிக்கை, அன்பு போதவே தாரும்;
பொன்னு லகமதில் என்னையும் சேரும். – யேசு

***– சவரிமுத்து உபாத்தியாயர், பன்றிகுளம்***

**273. இராகம்: உசேனி.** **தாளம்: ரூபகம்.**

**பல்லவி**

**இயேசு நாதனே, – இரங்கும், என்**
இயேசு நாதனே.

**அனுபல்லவி**

ஆசைக் கிறிஸ்தென தன்புள்ள நேசனே,
அருளே, தெருளே, பொருளே,
ஆவல் ஆகினேன், –மகா பிர

அட்டவணை

லாபம் மூழ்கினேன்;
ஆயா, நேயா, தூயா! இரட்சியும்;
ஆபத்தி னால்பரி தபித்து நிற்கிறேன். – யேசு

**சரணங்கள்**

1. அருமை இரட்சகனே – உனை அல்லாமல்
ஆதரவார், ஐயா?
ஆத்தும நாயகன் நீ – என்னக்கல்லவோ?
அன்புகூர், மெய்யா
தருணம்! தருணம்! கைவிடாதேயும்;
தலைவா, நலவா வலவா
தாமதியாதே; – கிருபை செயும்,
சாவாமி இப்போதே,
தாதா, நாதா, நீதா, நீகா,
தருமப்பிர காசனே, பரமசரு வேசனே! – யேசு

2. ஐந்து காயத்தின் – கிருபைக்கோட்டையில்
அடைக்க லந்தரவே,
ஆதாமின் பாவத்தால் – மானிடன்
ஆனமெய் வாழ்வே,
விந்தைக் கிருபை அளிக்க வேண்டும்,
விமலா, நிமலா, அமலா
வேறு பண்ணாதே, – மிகும் சீரு
மாறு நண்ணாதே;
மேலா, கோலா, நூலா, நீயே
விரும்பிச் சேரும், கோவே! திரும்பிப் பாரும், தேவே! – இயேசு

***–வேதநாயகம் சாஸ்திரியார்***

**274. இராகம்: நவரோஜ்.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**ஐங்கா யத்தினடைக் கலந் தாவே**
ஐயா கிறிஸ்தே உன் னருள் தாவே.

அட்டவணை

**சரணங்கள்**

1. சொந்தத்தில் வந்துதித்த துரை யரசே
ஜோதிப் பிர காச முடி அணி சிரசே – ஐங்

2. தேவ கோப மெனைத் தொடராமல்
சிங்கப் பசாசு வந்து அடராமல் – ஐங்

3. பாவ உழையினில் கால் பதியாமல்
பரலோக வாஞ்சை எனில் குறையாமல் – ஐங்

4. உலக மொரு புறத்தில் நெருக் காமல்
உமது நல்லாவி என்னை வெறுக்காமல் – ஐங்

5. சகல தாசர்கள் சொல்கவி சிறக்க
சகல நரர்களு முன்னடி துதிக்க – ஐங்

***–சத்தியவாசகம், தமிழாசிரியர், பாளையங்கோட்டை.***

**275.**

**பல்லவி**

**ஐயா கொல்கதா மலை நாதா – எனக்**
கார் துணை சொல் அனுகூலா

**அனுபல்லவி**

மெய்யா இதுதருணம் வா வா – இச்
சிறியேன் முகத்தைப் பார்க்க வா வா

**சரணங்கள்**

1. பாறைக்குள் தேரைபோ லானேன் – நான்
பல துயர் பட்டவ னானேன்
ஆலைக்குள் கரும்புபோ லானேன் – இந்த
அகதிக்கும் முகம் காட்ட வாரும் – ஐயா

அட்டவணை

2. பலரும் பலவும்சொல்லி ஏய்த்து – எனை
அலைவாய்த் துரும்புபோல் ஆய்ந்து
தொலையாத கவலைக்குள் மாய்த்து – எனைத்
துரத்தி விட்ட கதியைப் பார்த்து – ஐயா

3. பெற்றோர் எனைக்கைவிட்ட போதும் – என்
பிறவிகள் மறந்திட்ட போதும்
மற்றோர்கள் இரங்காத போதும் – எனை
மறவாதென் னேசுவேநீர் பாரும் – ஐயா

4. தாகம் மிகுந்தவரே வாரும் – அமர்ந்த
தண்ணீ ரண்டைவந்து சேரும்;
பணமும் விலையுமில் லாமல் – பலதரம்
பருகியே தாகத்தைத் தீரும் – ஐயா

5. தூங்கா இசரவேலின் தேவா ஏழைத்
துயர் நீக்கும் மகிமை ஏகோவா
மங்காத வாக்குரைத்த தேவா – உனை
மறக்கவே மாட்டேன் என்தேவா – ஐயா

**276. இராகம்: சயிந்தவி.** **தாளம்: அடதாளசாப்பு**

**பல்லவி**

**ஓ! ஸ்திரீ வித்தேசையா,**
அன்பு கூராய்? துன்பம் தீராயோ?

**அனுபல்லவி**

வஸ்தோரே, கிறிஸ்துவேதா, மானுவேலே இயேசுநாதா,
வந்தெமை கிருபைக்கண், பாராயோ

**சரணங்கள்**

1. ஆதி மானிடர் புரிந்த பாதகம் ______
அண்ணலே, உமக் கபயமே!
ஓ! ஸ்திரீ வித்தேசையா,
ஆதரித் திரங்க வேண்டுமே – ஓ! ஸ்திரீ

அட்டவணை

2. எத்தனை மனக் கிலேசம்? நித்தமும்____
எந்தையே கைவிட்டு விடாதேயும்,
ஒ! ஸ்திரீ லித்தேசையா,
எப்படியும் காத்தருள் மெய்யா. – ஒ! ஸ்திரீ

3. ஆடுகள் சிதறிப் போச்சோ? அன்னியருக் கடி______
பாடுபட்ட பட்சக் கோனாரே?
ஒ! ஸ்திரீ வித்தேசையா,
காடுகளில் தேடிப் பாருமேன். – ஒ! ஸ்திரீ

4. மந்தையை கிருபைகொண்டு பாரும்; சிந்தையில் துயரம் தீரும்,
சந்ததம் தொழுவம் சேருமேன்.
ஒ! ஸ்திரீ வித்தேசையா,
வந்தனம் உமக்குத் தோத்திரமே! – ஒ! ஸ்திரீ

***–வேதநாயகம் சாத்திரியார்***

**277. இராகம்: கௌசிகை. தாளம்: ஆதி**

**“மகனே உன்நெஞ்செனக்கு” என்ற மெட்டு**

**பல்லவி**

**கல்லான நெஞ்சை இன்றே மாற்றுவீர் – ஐயா**
கல்வாரி அன்பை என்னில் ஊற்றுவீர்

**சரணங்கள்**

1. கற்பாறை போன்ற என்தன்கல் நெஞ்சே – அது
பற்பல தீமைகளைச் செய்யுதே – கல்லான

2. கீழ்ப்படி யாதஎன் கல்நெஞ்சை – ஐயோ
கீழ்ப்படியப் பண்ண மாட்டீரோ? – கல்லான

3. என்ன போதனை கேட்டும் கல்நெஞ்சில் – சுவாமி
ஒன்றும் தங்கிப்பலன் காணேனே – கல்லான

4. தினமும் திருவ சனத்தை வாசித்து – நெஞ்சில்
அனலும் அருளும் பெற வில்லையே – கல்லான

**278. இராகம்: கௌசிகை. தாளம்: ஆதி**

**பல்லவி**

**ஜீவனேசு கிருபாசன்னா, எனின்**
சிறுமை தீர்த்தருள் ஓசன்னா!

**சரணங்கள்**

1. காவில் ஆதஞ் செய் பாவமுடவே
கடிய பேய் நரகோடவே
பூவுள்ளோருமைப் பாடவே, பரி
பூரண க்ருபை நீடவே. –ஜீவ

2. தொண்டர் பாதக ரண்டகங் கெட
துயரமேபடும் அத்தனே,
தொண்டன் நின் சரணண்டினேன்; எனின்
நோயைத் தீர், பரிசுத்தனே! – ஜீவ

3. அடியர் அடி பெற, அலகை அழல் விழ
அரிய பொன்முடி கொடுபட
படியில் நான் படுங் கொடிய விடர் கெட,
பலது தீமையு முறிபட. – ஜீவ

*–எலியா தேவசிகாமணி சாத்திரியார், தஞ்சை.*

அட்டவணை

**279.**

**கண்ணிகள்**

**தம்புரானே இயேசுநாதா பொன்னுகாந்தா – எந்தன்**
சங்கடங்க ளென்றழியுஞ் சொல்ல வேணும்

2. கட்ட நட்ட மக்கட்குண்டென்றப்பன் சொன்னது – போல்
அட்ட திக்குந் தினந்தினங் கண்டு கொண்டோம்

3. தாயிழந்த கோழிக்குஞ்சின் தன்மை போன்றோம் – நாதா
பாரிலெங்கள் சங்கடங்கள் பார்க்க வேணும்

4. சாடிப்பயந் தோடுமானின் குட்டி போல – நாங்கள்
காடுமலை குன்றிலேறி ஓடுகின்றோம்

5. கூடிழந்த கோழிபோல் திகிலடைந்து – நாங்கள்
வாடி நொந்து மாற்றார்நடு வாழுகின்றோம்

6. நூறுநூறாய் சூழ்ந்துநின்று ஊறு செய்யும் – பகை
நாசமெண்ணில் காவலர்பொன் னேசு மாத்ரம்.

7. ஆழிதனில் வீழ்ந்தமிழும் பட்சி போல – நாங்கள்
வீழ்கின்றோமே சிற்றின்பமாம் செங்கடலில்

8. ஆகாரின்பு தல்வன் போல்இப் பாழ்வ னத்தில் – நாளும்
காதலனே வாழவோ யாம் கண்ணீர் சிந்தி?

9. இன்பமெனும் பரதிசில் சென்று வாழ – எங்கள்
துன்பமிந்த மேதினியி லென்று மாறும்?

10. சொர்க்கசீயோன் நகரத்தில் நாத ரோடு – விரைவில்
சேர்ந்துவாழும் நித்தியபாக்யம் நல்கிடுமே

அட்டவணை

**280. இராகம்: செஞ்சுருட்டி.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**தேவா, இரக்கம் இல்லையோ? – இயேசு**
தேவா, இரக்கம் இல்லையோ?

**அனுபல்லவி**

சீவா, பரப்ரமஏ கோவா, திரித்துவத்தின்
மூவாள் ஒன்றாக வந்த தாவீதின் மைந்தன், ஒரே – தேவா

**சரணங்கள்**

1. எல்லாம் அறிந்த பொருளே, – எங்கள்
இல்லாமை நீக்கும் அருளே, – கொடும்
பொல்லா மனதுடைய கல்லான பாவிகளைக்
கொல்லா தருள்புரியும் நல்லாயென் இயேசுநாதா – தேவா

2. எங்கும் நிறைந்த சோதியே, – ஏழைப்
பங்கில் உறைந்த நீதியே, – எங்கள்
சங்கட மானபாவ சங்கதங் களைநீக்கும்
துங்கஇ சரா வேலின் வங்கிசகிரீ டாபதி! – தேவா

3. வேதாந்த வேத முடிவே, – செக
ஆதாரம் ஆன வடிவே – ஐயா,
தாதாவும் எமைப்பெற்ற மாதாவும் நீயே; – இயேசு
நாதா, இரட்சியும், வேறே ஆதாரம் எமக்கில்லை – தேவா

***–வேதநாயகம் சாத்திரியார்***

**281. இராகம்: மலையாமி.** **தாளம்: ரூபகம்**

**பல்லவி**

**தேவா, திருக்கடைக்கண் பார், ஐயா;**
வினைதீர், ஐயா! வினைதீர், ஐயா!

**அனுபல்லவி**

கோவாய் உலகில் வந்த யோவா, சச்சிதா னந்தா! – தேவா

**சரணங்கள்**

1. மேவிய தயைநிரம்பி, ஆவலு டனேவிரும்பி,
பாவி எனையே திரும்பிப் பார், ஐயா, சுவாமி – தேவா

2. பொல்லா உலகம் பகை, எல்லாச் செல்வமும் புகை;
வல்லா, உணின் கிருபை கூர் ஐயா, சுவாமி – தேவா

3. அந்தி சந்தியும் விடாமல், தந்திரப் பசாச டாமல்,
எந்த விதமும் கெடாமல் ஆளுமே, சுவாமி! – தேவா

4. சர்ப்பனை யதாய் உலகம் இப்படித் துரோகம் செய்தால்,
எப்படி அடிமைகரை யேறுவேன், சுவாமி. – தேவா

5. எத்தனை துயர் அடைந்தேன்? மெத்தவுமன துடைந்தேன்;
சித்தம் இரங்காய், என்மண வாளனே, சுவாமி. – தேவா

6. இந்தத் தினத்தில் எனக்குத் தந்த சுகத்துக் குனக்கு
வந்தனம்! அனந்த னந்தம் தோத்திரமே, சுவாமி. – தேவா

***–வேதநாயகம் சாசுதிரியார்***

**282. இராகம்: சங்கராபரணம்.** **தாளம்: ஏகம்**

**பல்லவி**

**மாற்றீ ரென்கவலை – அருள்பெற**
மாற்றீ ரென்கவலை – மிக
மாற்றி யேகலி தீர்த்தீர் உமது
மகிமையை நிறைவேற்றி.

**சரணங்கள்**

1. சமான வரசே, நீர் – தந்தை
சமான வரசே, நீர் – ஒரு
சந்திர பதம்போல் சுடரே விடுத்தீர்,
தாச னுரு வெடுத்தீர். – மாற்றீர்

2. சூதல கையை நீக்கி – அழலின்
சூதல கையை நீக்கி, – என் கை
தூக்கி, உலகிடர் போக்கி, எமையே
துதிக்கவும் மயலாக்கி; – மாற்றீர்

அட்டவணை

3. சடல முலகம் சூது, பொல்லாச்
சடல முலகம் சூது; – இது
தகாது அதின்மட வாது கொடியது;
சஞ்சலம் இனி யேது? – மாற்றீர்

4. நலங்க டனை வழுவி, – சுகிர்தன்
நலங்க டனை வழுவி, – வழி
நழுவி விழுமெனைக் கழுவி, அழகாய்
நலமாக் கவே வருவீர். – மாற்றீர்

*–வேதநாயகம் சாஸ்திரியார்*

**283. இராகம்: பைரவி. தாளம்: திரிசுரம்**

**பல்லவி**

**வாரும், எமது வறுமை நீக்க**
வாரும், தேவனே – மழை தாரும் சீவனே.

**சரணங்கள்**

1. பாரில் மிகுக்கும் வருத்தத் தாலே
பாடும் நீண்டதே – வெகு – கேடு நீண்டதே. – வாரும்

2. நட்ட பயிர்கள் மழை இல்லாமல்
பட்டுப் போச்சுதே – மிகக் – கஷ்டம் ஆச்சுதே. – வாரும்

3. பச்சை மரங்கள் கனிகள் இன்றிப்
பாறிப் போச்சுதே – அன்னம் – பாறல் ஆச்சுதே. – வாரும்

4. தரணி யாவும் காந்தி யாலே
ததும்புதே, ஐயா – நரர் – தயங்கிறோம் மெய்யாய் – வாரும்

5. கருணை யுள்ள நாத னே இத்
தருணம் வாருமே – எங்கள் – தயங்கல் தீருமே – வாரும்

*–C. யோசேப்பு, நாகர்கோவில்*

அட்டவணை

**284. இராகம்: உசேனி.** **தாளம்: ரூபகம்**

**பல்லவி**

**தந்தைசரு வேஸ்பரனே,**
உந்தன் மகன் இயேசுவுக்காய்
எந்தன் முகம் பார்த்திரங்கு வாயே
இம்மாத்ரம் நீயே.

**சரணங்கள்**

1. அந்தமதி லாஅகாரி சந்ததமு மேவிசாரி
விந்தைஅருள் மேவும் அசரீரி, மெய்ஞ்ஞான வாரி! – தந்தை

2. ஞானபரனே, ஒருத்வ மானமுதலே, திரித்துவ
மேன்மை வடிவான மகத்வ, மேலான தத்வ – தந்தை

3. விற்பன விவேக நூலா, அற்புதம தான சீலா,
நற்பரம லோக அனுகூலா, நன்மை க்ருபாலா – தந்தை

4. ஆதிமுத லான நேசா, வேதமறை மீதுலாசா,
போதம் இலாத சத்ய வாசா, ஞான பிரகாசா – தந்தை

5. வந்த வினை யாவும் தீரும், நிந்தைஅணு காமல் காரும்;
சிந்தை மகிழ்ந் தேகண் ணாலே பாரும், சீர்பாதம் தாரும்–தந்தை

6. எட்டுத்திர ளாகத்கூட்டி நீட்டுபுக ழாகத் தீட்டி
பாட்டுச் சொல்லும் வேதநாயகன், கொண்டாட்டுக்கீட்டு–தந்தை

***–வேதநாயகம் சாத்திரியார்***

**285. இராகம்: முகாரி.** **தாளம்: ரூபகம்**

**பல்லவி**

**உலோக நாதா உலோக நாதா, தியாக னுன்மேல் சோகமே**
ஏக மாயுன் தாக மிஞ்சி, இன்ப மின்றி வாடுறேன்.

அட்டவணை

### அனுபல்லவி

சாகவோ நான் வேகவோ நான் போகவோ சோ டாகவோ?

### சரணங்கள்

1. இராச பாலா இராச பாலா இராச ஞான லோலனே
ஆசை யுன்மேல் இயேசு பாலா நீச லோகம் சஞ்சலம்
ஈசனே நீர் மோசஞ் செய்தால் நீசப் பூச்சி நாசமே – உலோக

2. பெண்டு பிள்ளை பந்து லோகம் கண்டும் கொண்டும் தள்ளுமே
ஒண்டி யான உன்சகிஎன் உற்ற தோழன் நீ பாரா
கொண்ட தோழன் நீமணாளன் மண்டலத்தில் யாரையா?
– உலோக

3. நீயும் நானும் சோடி யானோம் நேச பாந்த மாகினோம்
தாயும் சேயும் போலிருக்கத் தயவு செய்யும் நாயகா
மாய லோகம் காயம் போனால் நாய னுன்னைக் காணுவேன்
– உலோக

***–இரத்தினம் பரதேசியார், திருநெல்வேலி.***

**286. இராகம்: கரகரப்ரியா.** **தாளம்: ஆதி.**

### பல்லவி

**உகந்தவரைத் தேடு, உறுதி பெற நாடு**
உண்மையுடன் மன்றாடு – எனதுள்ளமே

### சரணங்கள்

1. வள்ளல் தாவீதின் குலத்தில் மாதிட முதித்தவர் – இவர்
உள்ள வினை தீர்க்க வந்தவர் – எனதுள்ளமே – உகந்த

2. கோத்திரப்பி தாக்கள்தொழும் கோதில்லாத நாயகன் – இவர்
சாத்திர முழுதும் கற்றவர் – எனதுள்ளமே – உகந்த

3. ஐந்தப்பமீ னிரண்டுகொண்டு ஐயாயிரம் பேர்களுக்கு – இவர்
பந்தி போசனம் அளித்தவர் – எனதுள்ளமே – உகந்த

4. பத்து நெறி தந்தவர் கொடும், பார்வோனை அழித்தவர் – இவர்
பக்தர்களைச் சிறை மீட்டவர் – எனதுள்ளமே – உகந்த

5. காக்கையைக் கொண்டுமெளிய கைம்பெண்ணைக்
கொண்டு மெலியாவை – இவர்
ஏக்கமறப் பசி தீர்த்தவர் – எனதுள்ளமே – உகந்த

6. தக்க சிங்கப் பற்களுக்கு தானியேலை அன்புடனே – இவர்
தற்காத்து இரட்சை செய்தவர் – எனதுள்ளமே – உகந்த

7. தூரத் தூரத் தூரமாய்த் துரத்தப்பட்ட பாவிகளை – இவர்
ஆறுதல் சொல்லி அழைத்தவர் – எனதுள்ளமே – உகந்த

8. வேளைக்கொரு வேளையாய், நல்ல தாழம்பூவுச் சாயலாய்
–இவர்
சோலையிலே வந்த குயிலோ? எனதுள்ளமே – உகந்த

9. வெல்லைமலை தன்னிலேஒரு புல்லணையின் மீதிலே – இவர்
வல்ல பரனாக வந்தவர் – எனதுள்ளமே – உகந்த

**287. இராகம்: பிலகரி. தாளம்: செம்படை.**

**பல்லவி**

**ஞான சுவிசேடமே**
நன்மை தரும் நேசமே

**அனுபல்லவி**

வான உபதேசமே, வளரும் விசுவாசமே, – ஞான

**சரணங்கள்**

1. சத்திய வாக்கியமே, சந்தோச பாக்கியமே,
புத்தியா ரோக்கியமே, புண்ணிய சிலாக்கியமே, – ஞான

2. நீதிப்பிர சங்கமே, நிமலன்அருள் தங்கமே,
சோதி மிகும் துங்கமே, துதிபெருகும் பொங்கமே, – ஞான

3. அஞ்ஞானத் தைஅழிக்கும், அலகையிட றொழிக்கும்,
மெய்ஞ்ஞானத் தைஅளிக்கும், விளங்கிஎன் றுஞ்செழிக்கும்,
– ஞான

4. இயேசு அண்டையில் சேர்க்கும், எல்லா இடரும் நீக்கும்,
பேசும் பவத்தைப் போக்கும், பேதைமை யோரைக் காக்கும்
– ஞான

***– J. யாக்கோபு, கருவூர்.***

**288. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**சத்திய வேதத்தைத் தினம் தியானி**
சகல பேர்க்கும்அு தபிமானி

**அனுபல்லவி**

உத்தமசீவிய வழிகாட்டும், உயர்வா னுலகி லுனைக் கூட்டும் – சத்திய

**சரணங்கள்**

1. வாலிபர் தமக்கூண் அதுவாகும்; வயோதியர்க் கும்அது
உணவாகும்;
பாலகர்க் கினிய பாலும் அதாம்; படிமீ தாத்தும பசிதணிக்கும்
– சத்திய

2. சத்துருப் பேயோ டமர்புரியும், தருணம் அது நல் ஆயுதமாம்;
புத்திரர் மித்திரரொடே மகிழும் பொழுதும் அதுநல் உறவாகும்
– சத்திய

3. புலைமே வியமா னிட ரிதயம் புனிதம் பெறுதற்க துமருந்தாம்;
நிலையா நரர்வாணாள்நிலைக்க நேயகாய கற்பம் அதாம்.
– சத்திய

4. கதியின் வழிகா ணாதவர்கள் கண்ணுக்கரிய கலிக்கம் அது;
புதிய எருச லேம்பதிக்குப் போகும் பயணத் துணையும் அது.
– சத்திய

5. மாந்தர் இரட்சிப் படையும்வழி வழுத்தும் வேத வார்த்தை அது;
வேந்தர் அமைச்சர் முதலெவர்க்கும் விதித்த பிரமாண மும்
அதுவே– சத்திய

***– M. சாமுவேல், நாகர்கோவில்.***

**289. இராகம்: இந்துஸ்தானி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**வேத புத்தகமே, வேத புத்தகமே,**
வேத புத்தகமே, விலைபெற்ற செல்வம் நீயே!

அட்டவணை

**சரணங்கள்**

1. பேதைகளின் ஞானமே, பெரிய திரவியமே,
பாதைக்கு நல்தீபமே, பாக்கியர் விரும்புந் தேனே – வேத

2. என்னை எனக்குக் காட்டி என் நிலைமையை மாற்றி,
பொன்னுல கத்தைக் காட்டிப் போகும் வழி சொல்வாயே, – வேத

3. துன்பகாலம் ஆறுதல் உன்னாலுண்டு; சாகுதல்
இன்பமாகு மென்றாயே என்றும்நம் பினபேர்க்கே, – வேத

4. பன்னிரு மாதங்களும் பறித்துண்ண லாம் உன் கனி;
உன்னைத்தி யானிப்பவர் உயர்கதி சேர்ந்திடுவார். – வேத

***– அருளானந்தம் பிரசங்கியார், திருநெல்வேலி.***

**290. இராகம்: மோகனம்.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**பாதைக்கு தீபமாமே**
பரிசுத்த ஆகமம் – மா நல்ல.

**சரணங்கள்**

1. பாதைக்குத் தீபமே, பாவிக்கி லாபமே
பேதைக்குத் திரவியமே, பரிசுத்த ஆகமம். – மா நல்ல

2. தேனின் மதுரமே, திவ்ய அமுதமே,
வான பிதாவின் வாக்கே, பரிசுத்த ஆகமம். – மா நல்ல

3. நீதியி னாதாரமே நெறியுள்ளோர் செல்வமே
ஜாதிகள் மேன்மையாமே, பரிசுத்த ஆகமம். – மா நல்ல

4. ஞான சமுத்திரமே, நல்ல சுமுத்திரையே,
ஈனர்க்கும் ஆதரவே, பரிசுத்த ஆகமம். – மா நல்ல

5. உலகோர்க் குயிர்துணை, உண்டோ அதற்கினை?
அலகையை வெல்லுங்கணை, பரிசுத்த ஆகமம்.– மா நல்ல

6. எல்லையில்லா வித்தாரம், எவர்க்கும்ப ரமாகாரம்,
வல்ல பரனின் வேதம், பரிசுத்த ஆகமம். – மா நல்ல

***– D. அருளானந்தம், யாழ்ப்பாணம்.***

அட்டவணை

**291. இராகம்: இந்துஸ்தானி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**வானாதி தாள் காட்டும் – நல்ல**
வாத்தி சுவிசேடம்.

**அனுபல்லவி**

கோன் ஆதி இயேசு கிறிஸ்து மொழிந்த தோர்
கோதில்லா நீதி நிறைந்த சுவிசேடம். – வானாதி

**சரணங்கள்**

1. ஆதி ஒளி தோண – நல்ல – அறிவு மிகக் காண, – சத்திய
நீதியின் வேர் ஊன, – அதை – நீணிலத்தோர் பூண,
சாதிக ளான சகல மனிதரும்
சத்ய மறை என்று துத்தியம் புரியவும், – வானாதி

2. அன்பு நிறைந்திடவும்,–கெட்ட–ஆசை குறைந்திடவும்,–மோட்ச
இன்பம் சிறந்திடவும் – பாவ – இருள்கள் மறைந்திடவும்,
முன்பு நடந்தமு ரட்டாட்டத் தைவிட்டு
முற்றிலும் நற்குண சுத்தம் பெருகவும் – வானாதி

3. கார்இருள் நீங்கிடவும் – பாவக் – கயிறுபின் வாங்கிடவும்–நித்ய
பேர்ஒளி ஓங்கிடவும், – சத்ய – பிரபல்யம் நூங்கிடவும்,
தாரணி யில்உள்ள சர்வ மனிதரும்
சத்ய பிதாஎனும் வஸ்துவைச் சேரவும் – வானாதி

4. பாலர்கள் கூடிடவும், – நித்ய – பரகதி தேடிடவும், – சீவ
காலங்கள் நீடிடவும், – மோட்ச – கனமுடி சூடிடவும்,
கோலம் நிறைந்தம ணவாளன் இயேசுவைக்
கூடி அனுதினம் பாடித் துதிக்கவும் – – வானாதி

***– மரியான் உபதேசியார், திருநெல்வேலி.***

**292. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**வேத வசன விதைதனைப் புவியில்**
விதைப்பில் தெளிப்பில் வெகு நல்ல பாடம்

### அனுபல்லவி

போதனையைக் கேட்டுப் புத்தியாக நடப்போர்
வேதனைகள் நீங்கி விண்ணிலென்றும் வாழ்வர் – வேத

### சரணங்கள்

1. அதிசய வசனம் இந்தியக் கரையில்
செடியாய் மரமாய் நடப்பட்டு வருதே;
நடப்பட்டு வருதே, நலமிக்கத் தருதே
பெரும்பாவி யிடத்தில் பேர்பெற்று வருதே – வேத

2. தீயராம் பாவிகள் துன்புறும் வேளையில்
தூணாய்த் துணையாய் துலங்கிடும் வசனம்;
இந்தியர் மனதில் இறுகவே பாய
ஈசனின் கிருபை இலங்கிடச் செய்யும் – வேத

3. நால் வகைத் தாளங்க ளோடு
ஆட பாட சபை மிகக் கூட
சபை மிகக் கூட சாமி வந்து சேர
சங்கீதங்கள் பாட சந்தோடங்கொண் டாட – வேத

**293. இராகம்: சங்கராபரணம். தாளம்: மட்டியம்.**

### பல்லவி

**தேன் இனிமை யதிலும் சத்ய வேதம்**
திவ்யமான மதுரம்

### அனுபல்லவி

ஞானமது நிறையும் வேதமதில் எனக்கு,
நாதனே, அருள்ஆசை அனுதினம் ருசித்திட – தேன்

### சரணங்கள்

1. ஆரணம் அதி புனிதம் களங்கம் இல்
லாத சுகிர்த அமுதம்;
பூரண மாய்அதைத் தான்உட்கொண் டே வரில்,
பொன்னுல கதற்கேற்ற தன்மைஉண் டாக்குமே. – தேன்

2. பாதைக் குரியதீபம்; மெய் வேதம்
பற்றிடில் மிகு இலாபம்;
வாதை செய்திடும்பல சோதனை களும்எதிர்
வரில்அனைத் தும்வென்றிடத் தகும்படைக் கலமதே.– தேன்

3. விண்ண தழிந்தாலும், அதோ டிந்த
மேதினி ஒழிந்தாலும்,
திண்ணம தாய்என்றும் சிறந்திருக் கும்சீவ
திருமறை எனில்தங்கிப் பலன்தர அனுக்ரதி – தேன்

4. எத்திசை யிலுமுள்ள நரர் யாவரும்
ஏகன்நின் அறிவு கொள்ள
சுத்த சுவிசேடம் துலங்கிப்ர காசிக்க
தூயநல் ஆவியை யாவர்க்கும் ஈந்தருள் – தேன்

*–ஜான் பால்மர், நாகர்கோவில்.*

## 3. மனந்திரும்புதல், பாவ அறிக்கை.

**294. இராகம்: கெசிகை.** **தாளம்: ஆதி.**

**“மகனே உன் நெஞ்செனக்கு” – என்ற மெட்டு.**

**பல்லவி**

**சொந்தம் உமக்கினி என் இயேசுதேவா – பாவ**
தொந்தம் நீக்கி எனைஆள் பிராண நாதா.

**சரணங்கள்**

1. சந்தோச மென்று பேயின் வழி நடந்தேன் – அது
சதி யென்று ணர்ந்திடாமல் மயங்கி நின்றேன்.

2. பாவத்தில் இன்பம் எதிர் பார்த்திருந்தேன் – துயர்
பங்காகக் கிடைத்தால் பயந்து வந்தேன்.

3. உலகம் உதவுமென்று உனைமறந்தேன் – அதின்
உதவாக் குணத்தைக் கண்ட ஓடி வந்தேன்

அட்டவணை

4. ஆவி உடல் உயிரை ஆண்டவனே – நீயும்
ஆண்டு நடத்தியெனை மீண்டிடுவாய்

5. காயம் பெலன் சுகமும் கர்த்தருக்கே – நானும்
கனிவாய் படைக்கிறேன்என் இயேசு நாதா.

6. விக்கினம் நீக்கியென்வா ணாள்முழுதும் – இந்த
மேதினியில் ஏழையென்னை நடத்திடுவாய்.

**295. இராகம்: இந்துஸ்தான், காப்பி. தாளம்: ரூபகம்.**

**பாதகனாய் நானலைந்தேன் பாவி என்று நானுணர்ந்தேன்**
தத்தளிக்கும் ஏழை வந்தேன் சத்தியத்தை யாவும் கண்டேன்.

2. மன்னா உந்தன் விண்ணை விட்டு மண்ணில் வந்து பாடுபட்டு
மரித்தடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த் தெழுந்தீர் என்னையிட்டு

3. சிரசினில் முள்ளின்முடி அரசர்கோலாம் மூங்கில் தடி
நீர் குடிக்கக் கேட்டால் காடி ஒர்பாதகன் தந்தான் தேடி

4. கெத்சேமனே தோட்டத்திலே, கஸ்திபட்ட என் அண்ணலே
உந்தன் ஆவி உள்ளத்திலே வந்தால் வெல்வேன் யுத்தத்திலே

5. உந்தன் பாடு கஸ்தியதால், வந்ததெந்தன் பாக்கியமெல்லாம்
இம்மைச் செல்வம் அற்பப்புல்லாம், உம்மைப்பெற
விட்டேனெல்லாம்!

**296. இராகம்: முகாரி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**கண்ணையா கண்ணீர் பாரேன்**

**சரணங்கள்**

1. உனைத் தான் துணையாகக் கொண்டேன் – ஐயனே
எனக் கான வன் நீ, எனக் கான வன் நீ – கண்ணையா

2. ஓடிவா நெஞ்சம் வாடிடுமோ – கெடுமோ
உலகைத் தேடுமோ, உலகைத் தேடுமோ – கண்ணையா

3. என்னைப் போல் பாவி யாருமில்லை – ஒப்பில்லை
உன்னைநான் விடல்லை உன்னைநான் விடல்லை
– கண்ணையா

4. புண்பட்டேன் நோகுதே என் செய்வேன் – ஐயனே
பொங்குதே பொங்குதே, பொங்குதே பொங்குதே – கண்ணையா

5. இராசப்பா நேசப்பா இயேசப்பா – பேசப்பா
லட்சம்தோத் திரமப்பா, இலட்சம் தோத் திரமப்பா– கண்ணையா

6. இரட்சகா நம்பினேன் நீ கதி நீ கதி
நயமாம் சுகம் நீ நயமாம் சுகம் நீ – கண்ணையா

***– இரத்தினம் பரதேசியார், திருநெல்வேலி.***

**297. இராகம்: கல்யாணி. தாளம்: செம்படை.**

**பல்லவி**

**தீயன் ஆயினேன், ஐயா! – எளியேன் உற்ற**
தீவினை அனைத்தும் தீரும்;
தேவரீர் மேலே என் பாரம்,
தீயன் ஆயினேன், ஐயா,

**அனுபல்லவி**

மாயவலை வீசுவலு பேயின்வினை தீர,
நேயமுட னேஉறுச காயனாய் நமக்கென்றிங்கு
நிச்சயித் தெழுந்த எங்கள்
அச்சயா, திருக்குமாரா,

**சரணங்கள்**

1. நன்மை செய்யவே நான் நினைத்தாலும், என்
தன்மை வேறதாய்ப் பின்னம் ஆகுமே;
என்ன என்தன் நீதி கந்தை
அன்ன அருவருப் பாமே;
எத்தனை ஆனாலும் உன்தன்
சித்தம் வைத்தனுக் கிரகிப்பாய். – தீயன்

அட்டவணை

2. பாவமீறி என்ஆவி தள்ளாடி நற்
சீவ பாதையைத் தாவி ஓடியே,
ஆவலாய் அழிவு றும்துர்ச்
சாவின் வழியே தொடர்ந்து
அக்கி ரமச்செய் கைகளில்
சிக்கினேன்; ஐயோ, உன் தஞ்சம்! – தீயன்

3. தீது செய்பவன் தேவன் முன்னேஉத்ர
வாதி யாய்உறு நீதம் உண்டென,
போதம் உற வேத நெறி
ஓதிய ஏசு நாதா, உன்
புண்ணியத்தால் என்னை உய்யப்
பண்ணிடக் கிருபை செய்வாய். – தீயன்

***–ஜான் பால்மர், நாகர்கோவில்.***

**298. இராகம்: காம்போதி. தாளம்: சாப்பு.**

**பல்லவி**

**அத்தனே உன் திருநாமத்தை யொத்தருசி வேறதுண்டோ**
எத்துணை யேனும் எனக்கு ஈவாய்.

**அனுபல்லவி**

நித்தம் நித்தம் தூதர் திரள், துத்தியம் செய்தே பணியும்
சுத்தனே சுயாதிபா நல் கர்த்தனே என் ஆவல் தீர.– அத்தனே

**சரணங்கள்**

1. நேசவிசு வாசிகளின் பேசவரி தானஇன்பம்
இயேசு வென்ற பேரல்லலால் வேறேது
தாசன் தாவீ தாசையோடு தேடி ருசி பார்க்கச் சொன்னான்
தேசமெங்கும் அந்தநாம தேயத்ததைப்போல் நாமமில்லை
– அத்தனே

2. ஆரமது மணமுமிஞ்சி நாறுமேஒர் வேளை நஞ்சே
ஆகுமோ தின் நாமம் ருசி ஆகா
தேனுமது சுவை ருசியைசெப்பிடினு மதற்கொப்பாமோ
சேவடிதாழ்ந் தேனுனது சித்தமிரங் காயென்மீது – அத்தனே

3. தப்பிதந்தான் பலசெய்யினும் அப்புறம்தள் ளாமலெனை
ஒப்பமாய்நின் கிருபையினால் சேர்த்தாய்;
இப்போசீவ பானம்அப்ப மும்அருள்வே னென்றுநீரே
செப்பினதைக் கேட்டுமன மற்றிருப்ப தெனதுமப்போ –அத்தனே

4. வருத்த முற்ற பாவியேஉன் பெருத்தபாவச் சுமையை என்னில்
வைத்து இளைப் பாறி வாழ்வா யென்றார்
பெருத்தஉந்தன் கருணைக்கேது செயத்தகுந் தோன் பேதை மீது
உருத்துளனாய் ஆருயிரைக் கொடுத்தருளினாய் அத்தாலே
– அத்தனே

**299.**

**பல்லவி**

**ஆரிடம் போவேன் நான் அவதிகள் மிகுந்திடில்**
ஆதரிப்பாய் என்னை ஐயனே

**அனுபல்லவி**

பாரினில் உனையல்லால் பாவிக்கோர் துணையுண்டோ
யாருமில் லையேகண் பாருமெனை யென்நாதா – ஆரிடம்

**சரணங்கள்**

1. சித்தம் இரங்காதோ திருவுள்ளம் கனியாதோ
தினம் தினம் படும் பாடும் தீராதோ
அத்தனே என்பிழை அத்தனை யும்பொறுத்
தாண்டு இரட்சித் தருளுவாய் அன்பேஎன் ஆருயிரே– ஆரிடம்

2. சோதனை யனுதினம் நூதனமாய் வருதெ
சொல்லி முடியாத் துயர் தருதே
நாதனே போகும் வழி ஏதும் காணேனே ஐயோ
வேதனே வெற்றி வழி விளங்கிடச் செய்திடாயோ– ஆரிடம்

3. நிர்பந்த மனிதன்நான் நின் கிருபை யில்லையேல்
நெறிதவறி விழுந்து கெடுவேன்.
அப்பனே என் நிலை,கண் டெப்படியு மிரங்கி
ஒப்பிலாத் துணைசெய்யாய் உன்னைவிட் டெங்கு போவேன்
– ஆரிடம்

அட்டவணை

4. உண்மை குறையும், உலோகம் உரைத்திடும் தீர்ப்புகள்
உத்தம மாயிரா தென்றறிவேன்
எண்ண மெல்லாம் நிறுக்கும் அண்ணலுன் நிர்ணயத்தில்
என்ன குறைவுமின்றி ஏழையேன் காணச் செய்வாய்– ஆரிடம்

**300. இராகம்: நீலாம்புரி,** **தாளம்: ஆதி.**

**நிபதை – கண்ணிகள்**

**ஐயோ, நான் ஒரு பாவ சென்மி ஆனேனே**
ஆண்டு இரட்சித் தருளாய் – பரப்பொருளே!
உய்யும்படி, தெய்வமே, உன்னை அல்லால் எனக்கோர்
ஒதுக்கிட முண்டோ வேறே, – பரப்பொருளே!

2. நல்வர மாய்பெற்ற நீதி, சுசி, பாக்கியம்,
ஞானம், எலாம் இழந்து – பரப்பொருளே!
சொல்ல வெட்கம் அநீதி, சுசிகேடு, நிர்பாக்கியம்,
துர்ப்புத்தியும் அடைந்தேன், – பரப்பொருளே!

3. மாட்சி உறும் சிங்கார வனமாம் என துளத்தை
மங்கு கடாக்கி னேனே, – பரப்பொருளே!
ஆட்சி கொளும் உன்சுத்த ஆலயமாம் என்நெஞ்சை
அலகைக் கிடம் ஆக்கினேன், – பரப்பொருளே!

4. உன்னை முழுப் பலத்தால் நேசியா மலே நெஞ்சம்
உரம் கொண்ட பாவி ஆனேன்; – பரப்பொருளே!
என்னை நிகராக என் பிறனை நேசியாமல்நான்
இகலுற் றிருந்தேனே – பரப்பொருளே!

5. துப்பா வாம் சுத்தக் கண்ணனே, உன்முன் இன்னும்
துணிகர மாய் நடந்து, – பரப்பொருளே!
இப்படி சென்ம கன்ம பாவத்தால் கேடடைந்த
ஏழைப் பாவிக் கிரங்காய் – பரப்பொருளே!

***–ஜான் பால்மர், நாகர்கோவில்.***

அட்டவணை

**301. இராகம்: வசந்த பைரவி.** **தாளம்: ஆதி.**

**நிபதை – கண்ணிகள்**

**பாவியாம் எனை மேவிப் பார், ஐயா – இயேசுநாதா சுவாமி;**
பட்சமாகஎன் பாவந் தீர், ஐயா.

2. தேவத்ரோகி பாவி நான் அன்றோ, – இயேசுநாதா சுவாமி
சீர்பதம் துணையன்றி வேறுண்டோ?

3. தீவினைஉறு சாவு மேவிற்றே, – இயேசுநாதா சுவாமி
சித்தம் வைத்தி ரட்சித்தாள் ஏழையே.

4. சஞ்சல மிகுந் தஞ்சல் ஆயினேன், – இயேசுநாதா சுவாமி
தங்கும் உனை விட்டெங்கே ஏகுவேன்?

5. மன்னுயிர்க் கெனத் தன்னுயிர் விட்ட, – இயேசுநாதா சுவாமி
வந்தெனது நிர்ப்பந்தம் பார், ஐயா.

6. மனது, வாக்கு, வினைகளில் எல்லாம் – இயேசுநாதா சுவாமி
மாசு ளோனாய்க் கூசினேன் ஐயா.

7. எந்தன் நீதிஓர் கந்தை அல்லவோ, – இயேசுநாதா சுவாமி
என் செய்வேனே? மறு தஞ்சம் இல்லையே.

8. அலகை யோடெனை உலகம் ஏய்க்குமே,–இயேசுநாதா, சுவாமி
ஆதரவில்லை, பாதுகா, ஐயா.

***–ஜாண் பால்மர் , நாகர்கோவில்.***

**302. இராகம்: காம்போதி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**இயேசுவே கிருபாசனப் பதியே, கெட்ட**
இழிஞன் எனை மீட்டருள்,
இயேசுவே, கிரு பாசனப் பதியே.

அட்டவணை

**சரணங்கள்**

1. காசினியில் உன்னை அன்றி தாசன் எனக் காதரவு
கண்டிலேன், சருவ வல்ல மண்டலாதிபா;
நேசமாய் ஏழைக்கிரங்கி, மோசம்அணு காது காத்து,
நித்தனே, எனைத் திருத்து, வைத்தருள் புத்தி வருத்தி,
–இயேசுவே

2. பேயுடைச் சிறையதிலும், காயவினைக் கேடதிலும்,
பின்னமாகச் சிக்குண்ட துர்க்கன்மி ஆயினேன்;
தீயரை மீட்கும் பொருளாய் நேயம்உற் றுதிரம் விட்ட
தேவனே, எனைக்கண் நோக்கித் தீவினை அனைத்தும் நீக்கி.
– இயேசுவே

3. சிறைப்படுத் தினவற்றைச் சிறையாக்கி விட்டஅதி
தீரமுள்ள எங்கள்உப கார வள்ளலே,
குறைஏது னைஅண்டினோர்க் கிறைவாஎனைச் சதிக்கும்
குற்றங்கள் அறவேதீர்த்து, முற்றுமுடியக் கண்பார்த்து,
–இயேசுவே

4. பொல்லா உலகம்அதில் நல்லார் எவரும் இல்லை,
புண்ணியனே, உன்சரணம் நண்ணி அண்டினேன்;
எல்லார்க்குள் எல்லாம் நீ அல்லோ எனக்குதவி?
இந்நாள் அருள்புரிந்து உன்ஆவி யைச்சொரிந்து.
– இயேசுவே

***–ஜாண் பால்மர், நாகர்கோவில்.***

**303. இராகம்: தன்யாசி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**எத்தனை திரள் என் பாவம், என் தேவனே!**
எளியன்மேல் இரங்கையனே.

**அனுபல்லவி**

நித்தம் என் இருதயம் தீயதென் பரனே;
நிலைவரம் எனில் இல்லை! நீ என் தாபரமே – எத்தனை

அட்டவணை

**சரணங்கள்**

1. பத்தம் உன்மேல் எனக் கில்லை என்பேனோ?
பணிந்திடல் ஒழிவேனோ?
சுத்த முறுங்கரம் கால்கள், விலாவினில்
தோன்றுது காயங்கள் தூய சிநேகா. – எத்தனை

2. எந்தன் அநீதிகள் என் கண்கள் முனமே
இடைவிடா திருக்கையிலே,
உன்தன் மிகுங்கிருபை, ஓ! மிக வும்பெரிதே,
உத்தம மனமுடை யோய்; எனை ஆளும். – எத்தனை

3. ஆயங்கொள் வோன்போல், பாவ ஸ்திரீபோல்,
அருகிலிருந்த கள்ளன் போல்,
நேயமாய் உன்சரண் சரண்என வணங்கினேன்;
நீஎனக் காகவே மரித்தனை, பரனே! – எத்தனை

4. கெட்ட மகன்போல் துட்டனாய் அலைந்தேன்,
கெடுபஞ்சத் தால்நலிந்தேன்;
இட்டமாய் மகன்எனப் பாத்திரன் அலனான்,
எனை இரட்சித் திடல்உன்தன் நிமித்தமே, அப்பனே!–எத்தனை

***–மறைத்திரு. B. தைரியம், வற்றலக்குண்டு.***

**304. இராகம்: இந்துஸ்தானி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**குணப்படு, பாவி; தேவ**
கோபம் வரு மேவி – இப்போம்.

**அனுபல்லவி**

கணப்பொ ழுதினில் காயம் மறைந்துபோம்,
காலமி ருக்கையில் சீலம தாக நீ. – குணப்படு

**சரணங்கள்**

1. வேதத்தில் உந்தனைப் பார் – அந்த
வேத விதிப்படி நேர்
நீதியைச் செய்தவனார்? – தூய
நின்மலன் வாக்கதோர் கூர்;
தீதுறும் பாவியின் தீமைய றிந்துகொள்;
நாதன்கி றிஸ்துஇப் போதே உரைக்கிறார் – கணப்படு

2. துக்கமடை யாயோ? – பாவி
துயரமா காயோ?
மிக்கப் புலம்பாயோ? – மனம்
மெலிந்துரு காயோ?
இக்கணம் பாவக் கசப்பை யுணராயோ?
தக்க அருமறைப் பக்கந் தொடராயோ? –குணப்படு

3. தாவீ தரசனைப் போல், – தன்னைத்
தாழ்த்தும் மனாசேயைப் போல்
பாவி மனுசியைப்போல், – மனம்
பதைத்த பேதுருபோல்,
தேவனுக் கேறாத தீமைசெய் தேனென்று
கூவிப் புலம்புநல் ஆவியின் சொற்படி –குணப்படு

4. உன்னை நீ நம்பாதே; – இவ்
வுலகையும் நம்பாதே;
பொன்னை நீ நம்பாதே; – எப்
பொருளையும் நம்பாதே;
தன்னைப் பலியிட்டுத் தரணி மீட்டவர்
நின்னையும் இரட்சிப்பார், அன்னவ ரைப்பற்று, – குணப்படு

***–மறைத்திரு ஞா. சாமுவேல், தரங்கம்பாடி.***

**305. இராகம்: மோகனம்.** **தாளம்: அடதாள சாப்பு.**

**பல்லவி**

**சருவே சுராஏழைப் பாவிஎன் பேரிலே**

தயவாய் இரும், சுவாமி

**அனுபல்லவி**

திரியேக பரதேவா, நெறிமேவும் ஒரு யோவா,
சித்தம் இரங்கிக் காத்துக் கிறிஸ்தின் முகத்தைப் பார்த்து, – சரு

**சரணங்கள்**

1. தந்தைநின் ஒன்றான மைந்தன் தனைக்கொடுத்தித்
தகைமை உலகைநே சித்தாய்; – நின்
சொந்தக் கிருபைதனைச் சிந்தித் துணர்மறை
தொகுத்தெனக் குபதேசித்தாய்;
இந்தப் பெரிய நேசம் புந்திக் கொளிய தாக்கும்;
எந்தப் படியும் என்நிர்ப் பந்தம் அனைத்தும் போக்கும். – சருவே

அட்டவணை

2. தேவரீர்க் கேற்காத தீவினைகளைச் செய்தும்
தண்டியாமல் பொறுத்தீர், – நீர்
யாவும் அறிந்திருந்தும், கோபித்துக் கைவிடாதென்
நன்றிகேட்டை மறுத்தீர்,
சீவனே, உமக்குப் பாவி பதில்என் செய்வேன்?
மேவிஅ டிதொழாமல் ஆவி எங்ஙனம் உய்வேன்? – சருவே

3. நெஞ்சில் தெய்வ பயம் கொஞ்ச மேனும் இல்லாமல்
நீதி வழியைக் கடந்தேன்; – கெட்ட
வஞ்ச உலக வாழ்வை மிஞ்சத் தேடிப், பேயின்
மனதுக் கேற்க நடந்தேன்,
பஞ்ச பாவி கூவிக் கெஞ்சும் செபத்தைக் கேளும்,
தஞ்சம் என்றேன்; உனக்கே அஞ்சல் என்றெனை ஆளும்.
–சருவே

*–வேதநாயகம் சாத்திரியார்*

**306. இராகம்: ஆனந்தபைரவி.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**பாதகன் என் வினைதீர் ஐயா – கிருபாகரா, நின்**
பாடு நினைந் தெனைச் சேர், ஐயா!

**அனுபல்லவி**

தீதகற்ற வேசிறந்த
சேண்உலகி னிமைவிட்டு
பூதலத் துகந்து வந்த
புண்ணியனே, இயேசு தேவா – பாதகன்

**சரணங்கள்**

1. வந்துறும் எப்பாவிகளையும் – அங்கீகரிக்கும்
மாசில்லாத இயேசு நாதனே,
உந்தன் இடம் வந்துளமே உருகி அழுத மாது
முந்திமிகச் செய்தபாவம் முழுதும்பொறுத் தாய்அன்றோ?
–பாதகன்

2. சிந்தின உன் உதிரம் அதே – தீயோன் மறத்தைச்
சின்னபின்னம் செய்ய வல்லதே;
பந்தம் உற உன்றன் வலப் பாகாமுற்ற கள்வனையே
விந்தையுற வேஇரட்சித்த வேதனே,அவ் விதமாயே – பாதகன்

3. அற்பவிசு வாசமுள்ள னாம் – அடியேனை இனி
ஆதரிப்ப தார்?உன் தஞ்சமே;
தற்பரா, உனைத் தரிசித் தன்றி நம்பிடேன், எனவே,
செப்பின தோமாவுக்குப்போல், திரு உருக்காட்சி தந்து –பாதகன்

***–ஜான் பால்மர், நாகர்கோவில்.***

**307. இராகம்: மோகனம். தாளம்: அடதாள சாப்பு.**

**பல்லவி**

**பாவியாகவே வாரேன்; பாவம் போக்கும்**
பலியாம் என் இயேசுவே, வாறேன்.

**சரணங்கள்**

1. பாவக்கறை போமோஎன் பாடாய்?உன் பாட்டாலன்றிப்
போவதில்லை! என்றே பொல்லாத பாவியேநான் –பாவி

2. நீ வா, உன் பாவம் என்னால் நீங்கும், என்று சொன்னீரே;
தேவா, உன் வாக்கை நம்பி, சீர்கேடன் நீசனும்நான். –பாவி

3. பேய்மருள் உலகுடல் பேராசையால் மயங்கிப்
போயும் அவற்றோடு போரில் அயர்ச்சியாய் நான். –பாவி

4. சீவ செல்வஞான சீல சுகங்கள் அற்றேன்,
தாவென்று வேண்டிய சாவில்சஞ் சரித்த நான். –பாவி

5. துன்பங்கள் நீக்கிஉன்னைத் தூக்கிஅணைப் பேன், என்றீர்;
இன்பவாக் குத்தத்தத்தை இன்றைக்கே நம்பியே நான். –பாவி

6. உன்னைச்சேர ஒட்டாமல் ஊன்றிய தடையாவும்
உன்அன்பால் நீங்கிநல் உயிர்அடைந் தோங்கவே நான். –பாவி

***–மறைத்திரு E. உவெப்.***

அட்டவணை

**308. இராகம்: செஞ்சுருட்டி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**போதாது நீ**
போது மென்று எண்ணுவது

**சரணங்கள்**

1. காலையிலும் மாலையிலும் வேலையில்லா வேளையிலும்
ஆலய ஆராதனைக்குப் போகிறது மாத்திரமே – போதாது

2. சத்திய வேதாகமத்தைப் பத்திரமாய் வைத்து வைத்து
மற்றவர்கள் கேட்க அதை வாசிப்பது மாத்திரமே – போதாது

3. தற்பரனை நோக்கியொரு ஐக்கிய செபந்தான் செய்கையில்
சொற்களை எடுத்தடுக்கிச் செபிப்பது மாத்திரமே – போதாது

4. அச்சயன் தனதுநாளை ஆசரிக்கச் சொன்னதினால்
அச்சமொடு பக்தியாக ஆசரித்தல் மாத்திரமே – போதாது

5. இரத்தம்சிந்திப் பாடுபட்டு முக்திசம்பா தித்தநம
தத்தன்அருள் நற்கருணை சேருவது மாத்திரமே – போதாது

6. ஞானபர னானஇயேசு நாதனுக்குப் பிரீதியாக
வேணவிதம் செய்துவரும் தானதர்மம் மாத்திரமே– போதாது

7. பண்ணின பவங்களுக்காய் பலபல வேளைகளில்
அன்ன பான மின்றி தப சிருப்பது மாத்திரமே – போதாது

8. எங்கும்நிறை வியாபகற்கு ஏற்றசங்கக் காணிக்கையைத்
தங்களைக் கேட்காமுன் கொண்டு தருவது மாத்திரமே
–போதாது

9. உள்ள சுத்தம் உண்மைமொழி யோடுகற்பு நன்னடக்கை
நல்ல விசு வாச மன்பு நாதன்மேலி ருந்தா லன்றி – போதாது

அட்டவணை

**309. இராகம்: கௌசிகை.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**மகனே, உன் நெஞ்செனக்குத் தாராயோ? — மோட்ச**
வாழ்வைத் தருவேன், இது பாராயோ?

**சரணங்கள்**

1. அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே – பாவ
அழுக்கை நீக்கி அருள் கொடுப்பேனே, – மகனே

2. உன்தன் பாவம்முற்றும் பரி கரிப்பேனே, – அதை
உண்மையாய் அகற்ற யான் மரித்தேனே, – மகனே

3. பாவம் அனைத்து மேவிட் டோடாயோ? – நித்ய
பரகதி வாழ்வை இன்றே தேடாயோ? – மகனே

4. உலக வாழ்வினை விட் டகல்வாயே, – மகா
உவப்பாய்க் கதிஈவேன்; மகிழ்வாயே. – மகனே

5. உன்தன் ஆத்துமத்தை நீ படைப்பாயே, – அதில்
ஊக்கமாய் வசிக்க இடம் கொடுப்பாயே. – மகனே

***–C. யோசேப்பு, நாகர்கோவில்.***

**310. இராகம்: கரகரப்பிரியை.** **தாளம்: ரூபகம்.**

**பல்லவி**

**வேறு சென்மம் வேணும் – மனம்**
மாறுத லாகிய உள்ளசுத்தி எனும்

**சரணங்கள்**

1. கூறுபரி சுத்தர் மாறிலா தேவனின்
தேறுத லானவிண் பேறுபெற இங்கே – வேறு

2. பாவசு பாவமும் சீவிய மும்மாறி
தேவனின் சாயலை மேவுவ தாகிய – வேறு

3. மானிட ரின்அபிமா னத்தி னாலல்ல,
வானவ ரின்கிரு பாதான மாய்வரும் – வேறு

4. ஒன்றான இரட்சகர் வென்றியை நம்பி
மன்றாடு வோருக்கு ஒன்றுவ தாகிய - வேறு

5. மைந்தர் கெடாதுஉ கந்துஊ டேறவே
சொந்த மகன்தனைத் தந்தபி தாஅருள் - வேறு

6. மண்ணினில் பத்தராய் நண்ணி நடக்கவும்
விண்ணினில் சுத்தராய்த் தண்ணளி கொள்ளவும் - வேறு

*-T. யோசேப்பு, நெய்யூர்.*

**311. இராகம்: காம்போதி.** **தாளம்: அடந்தை.**

**திபதை - கண்ணிகள்**

**திருமுகத் தொளிவற்று பெருவினைக ளில்உற்று**
சீர்கெட்ட பாவி ஆனேன் - நான்
ஒருமுக மாய்உன திடம்மனந் திரும்பிட,
ஊக்கம் அருள், பரனே.

2. துரிச்சை யினால்என் அசுத்தம் நிறைந்துநல்
சோபிதம் நான் இழந்தேன்; - பேய்ப்
பரீட்சையி னாலும யக்கம் அடையும்இப்
பாவிக் கிரங்கையனே?

3. பாதகர் மீதில் பரிதபி யாமலும்
பாவம் பெறாமலும் நீ - சுத்த
நீதியை நோக்கில், உனதுச முகத்தில்
நிற்பவர் ஆர், துய்யனே?

4. தன்புண்ணி யத்தால் எவனும்மன் னிப்புறத்
தக்கவன்இ ல்லை மெய்யாய் - எந்தை,
உன்தயை யால்உன் திருச்சுதன் மூலமாய்
உண்டு பொறுப் பெனக்கே.

5. மண்ணையே நோக்கி உழன்று தவிக்கும்என்
வஞ்சக நெஞ்சதனை - நேராய்
விண்ணையே நோக்கிடப் பண்,இறை வா!உனை
வேண்டி மன்றாடுகின்றேன்.

அட்டவணை

6. மாறுபா டானஇவ் வேழைக் கிரங்கிநீ
மன்னிப்ப ருள்வ தன்றி, – எனக்
காறுத லாக உனதுநல் ஆவியை
அனுக்கிரகித் தாள், பரனே.

*–ஜாண் பால்மர், நாகர்கோவில்.*

**312. இராகம்: முகாரி.** **தாளம்: அடதாள சாப்பு.**

**பல்லவி**

**ஆரும் துணை இல்லையே, எனக்**
காதியான் திருப்பாலா – உன்தன்
ஐந்து காயத்தின் அடைக்கலம் கொடுத்
தாளுவாய், இயேசுநாதா.

**அனுபல்லவி**

சீர்உலா வுபூங் காவில் ஓர்கனி
தின்ற பாதகம் மாற்றவே
சிலுவை மீதினி லேஉ யிர்விடும்
தேவனே, என் சுவாமி. – ஆரும்

**சரணங்கள்**

1. முந்து மானிடர் தந்த தீவினை முழுவதுமாய் அற வேண்டியே
முள்முடியுடன் குருசில்ஏறிய முன்னவா, கிருபைகூர்வையே;
சிந்தும் உன்உதி ரத்தில் என்வினை தீர்த்திரட்சியும், ஐயனே;
தீய பாவி எனக்கு வேறொரு செயலிடம் துணை இல்லையே!
– ஆரும்

2. தந்தை தாயரும், மைந்தர் மாதரும் சகலரும் உதவார்களே;
சாகும்நாளதில் நீ அலால் எனைத் தாங்குவார்களும்
உண்டுமோ?
சொந்தம் நீ எனக் கன்றி, வேறொரு சொந்தமானவர்
இல்லையே;
சுற்றமும், பொருள் அத்தமும், முழ பத்தமே, என் தத்தனே.
– ஆரும்

அட்டவணை

3. கள்ளனாயினும் வெள்ளனாயினும் பிள்ளைநான்உனக்
கல்லவோ?
கர்த்தனே, வலப் பக்கமேவிய கள்ளனுக் கருள் செய்தையே;
தள்ளி என்னைவி டாமல் உன்னடி தந்து காத்தருள், அப்பனே,
தயவாயே ஒரு குருசில் ஏறிய சருவ சீவ தயா பரா. –ஆரும்

4. நன்றி அற்றவ னாகிலும், எனைக் கொன்று போடுவ தாகுமோ?
நட்டமே படும் கெட்ட மைந்தனின் கிட்ட ஓடின தில்லையோ?
கொன்றவர்க்கருள் செய்யும் என்றுபி தாவை நோக்கிய
கொற்றவா,
குற்றம் எதுசெய் தாலும் நீ, எனைப் பெற்றவா,
பொறுத்தாள்வையே – ஆரும்

5. பத்தியேதும் இலாது மாயசு கத்தை நாடிய பித்தனாய்ப்
பாழிலே என்றன் நாள்எலாங் கெடுத் தேழையாகினேன்;
என்செய்வேன்?
சத்ருவான பிசாசினால் வரும் தந்திரம் கொடி தல்லவொ?
தஞ்சம் அற்றவன் ஆகினேன், உனதஞ்சல் கூறும் அனாதியே.
– ஆரும்

6. அறிவிலாதொரு மிருகமாகநான் அலைந்த பாதகன் ஆயினும்
அருமை இரட்சக னே,திரமணம் உருகுமே, மிக உருகுமே;
மறுதலித்த பேதுரவைக் கைவிட மனதுவந்தும் உண்டுமோ?
மாதவா மரியாளின் மேல் அருள் வைத்தவா உனின் சித்தமே.
– ஆரும்

***–வேதநாயகம் சாத்திரிகள்***

**313. இராகம்: மலையாமி.** **தாளம்: திரிசுரம்.**

**பல்லவி**

**ஐயையா, நான் பாவி – என்னை**
ஆளும் தயாபரனே.

அட்டவணை

**சரணங்கள்**

1. பொய்யாம் உலக உல்லாசாத் தினால்மனம்
போனவழி நடந்தேன் – இயே
சையா, அபையம்! அபையம்! இரங்கும், மே
சையா, என் தாதாவே – ஐயையா

2. எத்தனை சூதுகள், எத்தனை வாதுகள்,
எத்தனை தீதுகளோ, – என
தத்தனே? என் பிழை அத்தனையும் பொறுத்
தாண்டருளும், கோவே. – ஐயையா

3. வஞ்சக மோ,கரவோ, கபடோ,மாய்
மாலமோ, ரண்டகமோ, – மனச்
சஞ்சலம் நீக்கி எனக்கருள் செய்யும்
சமஸ்த நன்மைக் கடலே – ஐயையா

4. பொய்யும், புரட்டும், உருட்டும், திருட்டும்பொ
றாமையும், ஆணவமும் – விட்
டுய்யும்படி அருள் செய்யும், அனாதிஓர்
ஏகதிரித்துவனே. – ஐயையா

5. உன்னை எல்லாத் திலும்பார்க்கச் சிநேகித்
துனதடி யார்களையும், – நான்
என்னைச் சிநேகிக்கி றாற்போல் சிநேகிக்க
ஏவும், பராபரனே. – ஐயையா

***–வேதநாயகம் சாத்திரியார்.***

**314. இராகம்: பைரவி.** **தாளம்: திரிசுரம்.**

**பல்லவி**

**இரங்கும், இரங்கும், கருணை வாரி,**
இயேசு ராசனே, – பவநாச – நேசனே.

அட்டவணை

**சரணங்கள்**

1. திறங்கொண் டாவி வரங்கொண் டுய்யச்
சிறுமை பார், ஐயா; – ஏழை
வறுமை தீர், ஐயா. – இரங்கும்

2. அடியன் பாவக் கடிவி டத்தால்
அயர்ந்து போகின்றேன்; – மிகப்
பயந்து சாகின்றேன். – இரங்கும்

3. தீமை அன்றி வாய்மை செய்யத்
தெரிகிலேன், ஐயா, – தெரிந்து
புரிகிலேன், ஐயா. – இரங்கும்

4. பாவி ஏற்றும் கவி மன்றாட்டைப்
பரிந்து கேள், ஐயா; – தயை
புரிந்து மீள், ஐயா. – இரங்கும்

***–அ. வேதக்கண்.***

**315. இராகம்: இந்துஸ்தான் டப்பா.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**பார், ஐயா; எளியேன் செய்**
பவவினை தீர், ஐயா.

**சரணங்கள்**

1. பார், ஐயா, உன் பதமே கதி – ஏழைப்
பாவிமேல் கண் பார்த்திரங்கி, – எனைப் – பார்

2. தீதினை உணர்ந்த சோரனைப் – பர
தீசிலே அன்று சோக்கலையோ? – எனைப் – பார்

3. மாசிலா கிறிஸ் தேசுபரா, – உனைப்
வந்த டைந்தனன்; தஞ்சம், என்றே – எனைப் – பார்

4. தஞ்சம் என்றுனைத் தான் அடைந்தோர் – தமைத்
தள்ளிடேன், என்று சாற்றினையே; – எனைப் – பார்

5. பாவம் மாசிவப் பாயினும், – அதைப்
பஞ்செனப் செய்வேன், என்றனையே; – எனைப் – பார்

6. தீயர்க்காய்ப் பிணையாய் மரித்த இயேசு
தேவனே, கருணா கரனே, – எனைப் – பார்

***–ஜாண் பால்மர், நாகர்கோவில்.***

**316. இராகம்: ஆனந்த பைரவி. தாளம்: செம்படை.**

**பல்லவி**

**தருணம் இதில் அருள்செய், இயேசு**
பரனே, பாவச்சுமை யானது
தாங்க ஏழை யாலே அரி தேங்கல் உறலானேன்.

**அனுபல்லவி**

மரண மதின் உரமே ஒழித் தலகை திறம் அறவே செய்து,
வதையே விளைத்திடு தீவினை சிதைய வகைபுரி, பரனே – தருணம்

**சரணங்கள்**

1. உலகர் உறு பவமானதைத் தலைமேல் சுமந்ததனை அற
ஒழிக்க, நண்பர் செழிக்க, வனம் தெளிக்க, வந்த பரப்பொருளே
பல காலம்இத் தலமே ஒரு நிலையே எனப் புலமீ துன்னிப்
பாழில் அழி ஏழை தனை ஆள வேஇவ் வேளை வர. –தருணம்

2. வருத்த முடன் அகப் பாரமே தரித்தோர் தமை, விருப்போடு நீர்
வாரும், எனைச்சேரும், என்றன் சீரை அறிந்தே ஏழையேன்
திருத்தமுடன் எனைக்காத்து,நற் கருத்தை அளித்திருத்த
அருள்
செய்ய, நானும் உய்யக் கருணை பெய்யக் கெஞ்சினேன்,
ஐயனே – தருணம்

***–ஜாண் பால்மர், நாகர்கோவில்.***

**317. இராகம்: பைரவி. தாளம்: சாப்பு.**

**பல்லவி**

**பின் செல்வேன் என் மீட்பரே – நானும்மைப்**
பின் செல்வேன், என் மீட்பரே

அட்டவணை

### அனுபல்லவி

நான் செய்த பாவங்கள் நின்தய வால் தீர,
நாதா சீவன் விட்டாய் ஏன்குரு சிலதால். – பின்

1. என் சிலுவை எடுத்தேன், – எல்லாம் விட்டு
என்றும் நின்னை யேஅடுத்தேன்;
நின்திருப் பாதத் தடங்களை நோக்கிநான்
நித்தமும் வாழ்வேனுன் சித்தம்என் றும்என்றும் – பின்

2. சிங்கம் போல கெர்ச்சித்தே, – என்தன் நேரே
சீறி மிக வெதிர்த்தே,
கங்குல்ப கலும்தீ அம்பு என் மேல் எய்யும்
கடியின்மேல் செயம்பெற்று அடியேன்நின் னருள் பெற்றுப்–பின்

3. நெருக்கம் செய்தால் மனுடர் – அதென்னையுன்
நெஞ்சண்டை யோட்டுவதாம்;
யாரிடத்தில் பல சோதனைகள் வதைத்தாலும்
பார்த்திபனே, உன்னை ஒருபோது மேவிடேன். – பின்

4. காசினி யோர்கள் என்னைப் – பகைத்தாலும்
காதல னேசு உன்னைப்
பாசம தாகவே பணிந்து தொழுவேனே;
பாக்கிய நகரில்பின் உன்னோடு வாழ்வேனே – பின்

***–திரு. P.J. சிங், திருவனந்தபுரம்.***

## 3. விசுவாசம், நம்பிக்கை

**318. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி.**

### பல்லவி

**இத்தரையில் என்னை மீட்க ஏழையாக வந்தவா**
பெத்தலையி லேபிறந்த மன்னவா

### அனுபல்லவி

பாடுவேன் பாடுவேன் உன் திரு நாமத்தை,
தேடுவேன் தேடுவேன் தேடுவேன் உன் திவ்ய நாமத்தை
என்னைத் தேடி வந்தஇயேசு நாதனே.

அட்டவணை

1. பெற்ற தாயும் தந்தையும் எனின் பிரிய இயேசுவே
பேணி என்னைக் காப்பவரும் நீரல்லோ - பாடுவேன்

2. ஆடையா பரணங்கள்ஆ காரமும்நீர் தானல்லவோ
ஆஸ்தியும் சம்பாத்தியமும் நீரல்லோ - பாடுவேன்

3. நித்தநித் மும்நினைக்கும் சத்தியமும் நீரல்லோ
பித்தனைப் பிரபாக்கு வோரும் நீரல்லோ - பாடுவேன்

4. ஏழைஎன்னைப் போதிப்பிக்கும்உ பாத்தியாயர் நீரல்லோ
ஏற்றபாடம் படிப்பது நான் உம்மிலே - பாடுவேன்

5. எந்தனுக்கா கஇருக்கும் எந்தன்நல்ல, இயேசுவே
உந்தனுக்கா கமாத்திரம் நான் அல்லலோ - பாடுவேன்

**319. இராகம்: நாதநாமக்கிரியை. தாளம்: சாப்பு.**

**பல்லவி**

**இயேசு என் அஸ்திபாரம் ஆசை எனக்கவரே**
நேச முசிப்பாறுதல் இயேசுவில் கண்டேன் யானும்

**சரணங்கள்**

1. என்ன மதுரம் அவர் நன்னய நாமச் சுவை
என்னகத்தில் நினைத்தால் இன்னல் பறந்திடுமே - இயேசு

2. பஞ்சம் பசியுடனே மிஞ்சும் துயர் வந்தாலும்
அஞ்சிடேன் இவையை என் தஞ்சம் இயேசிருக்கையில்
-இயேசு

3. வியாதியால் என்தனது காயங் கெட்டுப் போயினும்
மாயத் தோற்றத்தை இயேசு நாயகன் மாற்றிடுவார் -இயேசு

4. உலோகம் என்னை எதிர்த்துப்போ வென்று சொல்லிடினும்
சோகம் அடைவேனோ என் ஏகன் எனக்கிருக்க - இயேசு

5. என்னென்ன மாயலோகக் கன்னல் என்மேல் வந்தாலும்
முன்னும் பின்னுமாய்இயேசு என்னை நடத்திடுவார் - இயேசு

அட்டவணை

6. பாவத்தால் என்னில் வந்த சாபக் கறைகள் மாற்றி
சோபித நீதியுடை ஆபரணமாய் ஈவார் – இயேசு

7. ஆசை என் மணவாட்டி ஆக்குவேன் உன்னை எனும்
நேச உறுதி யுரை இயேசு எனக் களித்தார் – இயேசு

**320. இராகம்: இந்துஸ்தானி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**இயேசையா, பிளந்த ஆதி மலையே,**
மோச நாளில் உன்னில் ஒளிப்பேனே

**சரணங்கள்**

1. மோசமுள்ள பாவ நோய் முழுவதும் என்னில் நீர், ஐயா;
தோசம் நீக்கும் இரு மருந்தாமே – சொரிந்த உதிரம் தீருமே
– இயேசையா

2. இகத்தில் என்னென்ன செய்தாலும் ஏற்காதே உன் நீதிக்கு,
மிகவாய் நொந்தழுதும் தீராதே – மீளாப் பாவ ரோகமே;
–இயேசையா

3. பேரறம் அருந்தவம் பெரு மிதமாய்ச் செய்திடினும்
நேரஸ்தரின் பாவம் நீங்குமோ? – நீங்காதே உன் னாலல்லால்;
– இயேசையா

4. வெறுங் கையோ டோடிவந்து, வினைநாசன் பேரருள் கெஞ்சி;
திருச்சிலுவை தஞ்சம் புகுந்து, – தியங்கிஅ ணைத்தே நிற்பேன்;
– இயேசையா

5. அருளி லிருகோன் ஆனாலும், அபய முன்தன் நீதிக்கே!
கருணை ஊற்றிக் கழுவ மாட்டாயோ? – கழுவாயாகிற்
சாவேனே. – இயேசையா

6. ஜீவனோடே தங்கினாலும், தெளிகண் சாவில் மங்கிலும்,
தேவாசனமுன் அஞ்சி நின்றிட – தேவலோக மேறிலும்.
– இயேசையா

***–அருள் மறைத்திரு. R.C. கால்டுவேல் அத்தியச்சர்.***

அட்டவணை

**321. இராகம்: நாட்டை.** **தாளம்: அடம்.**

**பல்லவி**

**எல்லாம் இயேசுவே, – எனக் கெல்லா மேசுவே.**

**அனுபல்லவி**

தொல்லைமிகு மிவ்வுலகில் – சுகமில்லையே, – எல்

**சரணங்கள்**

1. ஆயனும் சகாயனும் நேயனு முபாயனும்
நாயனு மெனக்கன்பான ஞானமண வாளனும், – எல்

2. தந்தைதா யினம்சனம் பந்துளோர் சிநேகிதர்
சந்தோட சகலயோக சம்பூரண பாக்யமும், – எல்

3. கவலையி லாறுதலும் கங்குலிலென் சோதியும்
கட்டநோய்ப் படுக்கையிலே கைகண்ட ஔடதமும். – எல்

4. போதகப் பிதாவுமென் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங்கூட் டாளிமென் தோழனும், –எல்

5. அணியு மாபரணமும் ஆஸ்தியும் சம்பாத்யமும்
பிணையாளியும் மீட்பருமென் பிரியமத்தி யஸ்தனும், – எல்

6. ஆன சீவ அப்பமும் ஆவலுமென் காவலும்,
ஞானகீதமும் சதுரும் நாட்டமும்கொண் டாட்டமும், – எல்

*–பு. ஞானமணி, அருப்புக்கோட்டை.*

**322.**

**"பாலர் ஞாயிறிது பாசமாய் வரும்" – என்ற மெட்டு.**

**பல்லவி**

**கர்த்தன் சத்துவத்தில் நித்தம் வளரும்**
யுத்தம் செய்திடுங்கி றிஸ்து வீரரே

**அனுபல்லவி**

மாம்சம் இரத்தம் மட்டுமல்ல, மண்ணின் பொல்லா ஆவிகளும்
வானலோக சேனைகளும் வளைந்தும்மைச் சூழ்வதாலே
– கர்த்தன்

அட்டவணை

## சரணங்கள்

1. தீங்கு நாளில் உம்மைத் தீயோன் எதிர்ப்பான்
பாங்காய் யாவையும் முடித்து நின்றிடும்
உம்தன் ஆயுதங்க ளெல்லாம்
ஒன்றுக்கும் உதவா தன்று
ஓங்கி அன்பர் தந்திடும்சர்
வாயுத வர்க்கம் அணிந்து – கர்த்தன்

2. கச்சை ஒன்றரையில் கட்டிடவேணும்
கர்த்தர் உரைப்படியே நின்றிடவேணும்
மனதின் அரையைக் கட்டும்
மங்களமாய் சத்தியத்தால்
தினமும துந்தமக்குத்
தேவபெல னாயிருக்கும் – கர்த்தன்

3. வாளால் உந்தன் நெஞ்சை வாட்ட வருவான்
வல்ல மார்க்கவசம் வாங்கித் தரிப்பீர்
அடியாரின் சுயநீதி
அத்தி இலை போல்கிழியும்
அன்பர் நீதி யாடை தனை
ஆத்திரமாய் அணிந்து நீர் – கர்த்தன்

4. எப்போ துந்தம் கெதிரி வருவான்
இரவிலோ பகலிலோ என்பதறியீர்
தப்பித மெல்லாங் களைவீர்
சுவாமி இயேசின் சமாதானம்
ஒப்பில்லாத ஆயத்தமாம்
பாதரட்சை யாக்கிடுமே – கர்த்தன்

5. அம்பும் மேல்பறக்கும் அணியணியாய்
ஆகாதோன் நினைவு அதிகரிக்க
வெள்ள மதில் வீழும் கொள்ளி
விக்கினம் தொல்லை தருமோ
விசுவாசப் பரிசையின் மேல்
வினை வந்து பற்றிடுமோ? – கர்த்தன்

6. சத்ரு தாக்குவானெப் போதும் தலைமேல்
தழல் மே னின்றுவிழும் தாரகத் தோர்மேல்
காருண்ய மெனுந் தயவால்
கர்த்தனளித்த இரட்சிப்பை
கருத்துடன் அனுதினம்
தலைச்சீரா வாக்கிடுமே – கர்த்தன்

7. ஐந்தும் அணிந்திட்ட பின்னால் மட்டுமே
ஆறாம் ஆயுதமாம் வாளை எடுப்பீர்
சந்ததம் வேத வசனம்
சரிவர ருசித்த பின்
புந்தியைத் தெளிவதாக்கிப்
போர்புரியச் சென்றிடுவீர் – கர்த்தன்

**323. இராகம்: ஆனந்தபைரவி. தாளம்: அடதாளம்**

**பல்லவி**

**காட்டும், நல் வகை காட்டும், ஐயரே; ஏழைப்பா விக்குமது**
கருணை அருளைச் சூட்டும் ஐயரே.

**அனுபல்லவி**

நீட்டும் கரத்தைச் சூட்டும் கிருபை
நிறைந்த நின்அருள் சிறந்த சபையில்
நாட்டுவீர், எனைத் தேற்றுவீர், உமை
நம்பினேன், கிறிஸ்தம்பரா, என்பரா. – காட்டும்.

**சரணங்கள்**

1. கிருமியே, நீதிகை யாதே, எனவும் – நாம் எப்போதும் உன்தன்
கிட்டவே தரித்திருக்கிறோம், எனவும்
நெருக்கத்தில் நமைக் கூப்பிடும் எனவும்,–நாம் உன்னோடிருந்து
நேச மகிமை அருள்செய்வோம், எனவும்,
வருத்தத்துடனே பாரம் சுமந்து
வந்தோர்களின்நிர்ப் பந்தம் அகல
உரித்தாய் ஆறுதல் செய்வோம், எனவும்,
உரைத்த யாவையும் நினைத்துத் தேற்றும்; – காட்டும்

அட்டவணை

2. தேடுங்கள், கண்டடைவீர்கள் எனவும். – தட்டுங்கள்,
அப்பொழுது
திறந்திடப்படும் உங்களுக்கெனவும்,
நாடிப் பணிந்து கேளுங்கள், எனவும், – அப்பொழுதுங்களுக்கு
நலமுடன் கொடுக்கப்படும், எனவும்,
சூடும் கிருபைத் திருவாய் மலர்ந்து
சொன்ன உமது நன்மொ ழிப்படிப்
பாடும் அடியேன் பலன் பெற நீர் என்
பங்கிலே தங்கும், விளங்கிய தெய்வமே – காட்டும்

3. பெருவானும் பூவும் ஒழிந்து போயினும் – என் திரு உரை
ஒன்றும்
பிசகிடா தென்றீர், இது மெய்யே என்றும்;
பருவதங்கள் நிலை விலகினும் – மேடாக உயர்ந்த
பலத்த குன்றுகள் யாவும் சாயினும்
கிருபையும் சமாதானமும் நிறைந்த
கீர்த்தியன் என துடம்படிக்கையும்
ஒரு போதும் உனை விட்டி டாதென
உரைத்தவா, எனை நினைத்துத் தேற்றுமே – காட்டும்

***–மரியான் உபதேசியார், திருநெல்வேலி.***

**324. இராகம்: ஆனந்தபைரவி. தாளம்: ரூபகம்.**

**பல்லவி**

**நம்பினேன், உன தடிமை நான், ஐயா – திடப்**
படுத்தி என்தனை
நடத்திக் காப்பதுன் கடமை தான், ஐயா

**சரணங்கள்**

உம்பரும் புவி நண்பரும் மற்ற
உயிர்களும் பல பொருள்களும் தொழும்
தம்பிரானே, மெய் அம்பராபரா,
தாசன் மீது நன் னேசு அருள் செய். – நம்பி

[அட்டவணை](#)

**சரணங்கள்**

1. தீ தாம் என் பவம் யாவையும் பொறுத்து, – திருக்
கருணையின் அருள்
செய்து பின் வரும் இடர்களை அறுத்து,
வேதாந்தப்படி என்னைத் தான் வெறுத்து – நான்
உனைப்பின் செல்ல, உன்
மெய் அருளை என் உள்ளத்தில் நிறுத்து;
ஆதாரம் எனக்கார், உனை அன்றி?
அம்புவியில் யான் நம்ப வேறுண்டோ? – உன்
பாதா தாரத்தில் ஒதுங்கினேன்; எனைப்
பாரும், கிருபையைத் தாரும், ஐயரே! – நம்பி

2. என்னைப் படைத்த தேவனும் நீயே; – திரு
உதிரத்தைச் சிந்தி
ஈடேற்றிக் கொண்ட மீட்பனும் நீயே;
இன்னமும் பின்னும் காப்போனும் நீயே; – ஒரு
போதும் குன்றிடா
இன்பத்தில் வைக்கும் சீவனும் நீயே;
உன்னை யன்றி யான் சொன்னலை வேற
துண்டோ? உன்தன்வாய் விண்டுரை செய்யேன்,
என் ஐயா, இதை யாவும் சொல்லுமே;
ஏழைக்குன் திருத் தாள்அருள் செய்யுமே. – நம்பி

3. சுத்த இருதயத்தினைத் தருவாய்; – பரி
பூரணானந்த
சோதி ஆவியின் நல்துணை அருள்வாய்;
நித்தமும் பய பக்தியைத் தருவாய்;
அத்தனும் பரிசுத்தனும் என
தன்பனும் அனு கூலனுமான
பத்தனே; பரி சித்தனே, உனைப்
பாடினேன்; கிருபை சூடி ஆள், ஐயா. – நம்பி

அட்டவணை

4. ஊக்கமும் மனத்தீர்க்கமும் வேணும்; – சுவி
சேட உரையை
உற்றுப் பார்த்ததில் தேறவும் வேணும்;
ஆக்கமும் அன்பர்ச் சேர்க்கையும் வேணும்; – உனக்
கூழியம் செய்ய
ஆவியும் அதின் ஈவதும் வேணும்;
ஏக்கமும் மனக் கவலையும் நித்ய
இன்ப முள்ளஉன் அன்பின் நல்திரு
வாக்கையே நோக்கி இருப்பதால் என்முன்
வாரும்; கிருபை தாரும், ஐயரே. – நம்பி

**325. இராகம்: செஞ்சுருட்டி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**நேசமணி வாசமணி ஈச னென்னும் இயேசு மாமணி**

**அனுபல்லவி**

பாசமாக இவ்வுலகில் நேசமாய்தற் காத்துவரும் – நேசமணி

**சரணங்கள்**

1. எங்கே ஓடிப் போனா யப்பா ஏழை மனம் கலங்கு தப்பா
தாழ அன்றி மீள ஒரு நாளும் என்னால் கூடாதே– நேசமணி

2. இட்டனென்ற இயேசையனே பவக் குட்டமஅறக் கார்
மெய்யனே
என்பக்தனே மாகர்த்தனே நித்தனே வாநிச்சயமாய் – நேசமணி

3. சூட்சமான மீட்சிபெற காட்சிகொடு மாட்சிபெற
மீட்டு இரட்சித்த பத்தா நல்கூட்டுறவான சித்தா – நேசமணி

4. வாருமையா காருமையா பொற்கரத்தில் சேருமையா
நாதா பொற் பாதா நின் பாதம் பணிவேன்இயேசு – நேசமணி

5. அஞ்சாதகல் நெஞ்சுருக அஞ்சல் செய்யும் மனம்நொறுங்க
அன்பனே என்நண்பனே மாஇன்பனேசெம் பொன்னே இயேசு
– நேசமணி

6. நின்னை யல்லால் எங்கே போவேன் நீசனான பாவி யானேன்
உன்னை யல்லால் இந்நிலத்தில் என்னைஆத ரிப்பாரில்லை
– நேசமணி

7. என் செபங்கேள் என் பாவந் தீர் என்னாசை தீர உன்னாசிகூர்
மன்னவனே பொன்னகரை உண்மையாகச் சொன்னவனே
– நேசமணி

**326.**

**பல்லவி**

**விடுவேனோ நான் உம்மை விடுவேனோ.**

**சரணங்கள்**

1. ஆசீர் வதிப் பேனென்றுதான், ஆணையிட்டீ ரேதுரையே
ஆசீர்வதித் தாலொழிய, உம்மைவிட மாட்டே னையா – விடு

2. பாவி யான எந்த னுக்காய், பாடு பட்டீ ரேது ரையே
பங்கில் லையோ உம்மி டத்தில், பட்ச மாயென் முகம் பாராய்
– விடு

3. பங்கு தர மாட்டே னென்றால், பட்ட பாடு வீணா குமே
பார்த்தி பனே உம்மை ஒருக் காலும் விட மாட்டேனையா– விடு

4. என்பா வம்பொ றுக்கா விட்டால், ஏன்தானையா பாடு பட்டீர்
உம்தன் பாட்டா லென்ன பயன், உண்டு அதைச்
சொல்லுமையா – விடு

**327. இராகம்: காவடிச் சிந்து** **தாளம்: ஆதி.**

**எந்தன் இயேசு உன்னதத்தில் அன்புள்ளோராய் வாழும்போது**
ஏழையான் கலங்கிறேன் இப்பூமியில் – அதால்
என்றுமவர் கிருபை மட்டும் போதுமே

2. இன்னல்களாம் குன்றுதனில் பின்னிடாமல் ஏறுதற்கு
இயேசு தன் கால் தன்னை மான் கால் போலாக்கி – என்னை
இன்பமான யென் பாதை யோடச் செய்குவார்

3. ஆரும் துணை இல்லை என்றோ ஏகனாய் நான் ஆனேன் என்றோ
என் மனதில் எண்ணிடேன் ஓர் நாளுமே – இயேசு
என்னுட னில்லாமல் எங்கு போயினர்?

4. என்னருமைத் தோழரன்றோ தெய்வதூத சங்கமெல்லாம்
இப்போதவர் என் பிதாமுன் நிற்கிறார் – பின்னால்
உன்னையும் தம் ஊழியத்தால் தேற்றுவார்

5. வியாகுலம் என் வீட்டை விட்டுக் காட்டிலோடப் பண்ணிடினும்
அங்கே யொரு தூதன் என்னைச் சந்தித்து – சூடாம்
அப்பமுந் தண்ணீரும் தந்து தேற்றுவான்

6. வருந் நாளுக் காகவீணாய் என் மனம்நொந் தென்ன புண்ணியம்
என்னைத் தினம் போசிப்பவர் இல்லையோ – இன்னும்
ஏழையேன் அவரை மட்டும் நம்புவேன்

7. கவனிப்பாய் காகத்தைநீ விதைப் புண்டோ? அறுப்புண்டோ?
விலையின்றிப் போற்ற வில்லையோ நாதன் – லீலிப்
புட்பங்களில் வல்லமையைத் தான் வைத்ததார்

8. பத்மு தீவில் ஏகனாய் நான் தங்கிவிடினும் பயப்படேன்
வானந் திறந் தேசு நாதர் சோதியாய் – என்னைப்
பரதீசில் ஆவிக்குள் எடுப்பாரே

9. ஆம கேசா கருணேசா பொன்னு நாதா நீ ரெனக்காய்
வேண்டிய தெல்லாம் தயவாய்த் தந்தால் – நான் என்
வாணாளெல்லாம் உம்மைப் போற்றிப் பாடுவேன்

**328. இராகம்: காம்போதி.** **தாளம்: சாப்பு.**

**பல்லவி**

**இயேசுவை நான் நம்பி சீவியம் செய்குவேன்**

அட்டவணை

**அனுபல்லவி**

இயேசு தான் என் தஞ்சம் வானிலும் பூவிலும் – இயேசுவை

**சரணங்கள்**

1. பூமியின் பாரங்கள் யாதொன் றெனக்கில்லை
போக்கிட மாகுவேன் என் இயேசு தானல்லோ – இயேசுவை

2. இராப் பகல் அன்பர்தம் கண்மணி போல்என்னை
காப்பதற் காகவே தூங்கிடேன் என்கிறார் – இயேசுவை

3. சாத்தானும் சேனையும் சண்டைசெய் திடினும்
சாவை வென்றுயிர்த் தோனாய் செயக்கொடி நாட்டுவேன்
– இயேசுவை

4. பூலோக மாய்கையில் நான் வீழ்ந்தி டாமலே
மேலோக காட்சி என் கண்களில் வீசுதே – இயேசுவை

5. பாவம் பெருகுதே உலோகம் உயருதே
நீதியின் சூரியன் மங்கி எரியுதே – இயேசுவை

6. ஒவ்வொருவரும் தம்தம் காரியம் நோக்கவே
இயேசுவின் காரியமோ யாருமே தேடிடார் – இயேசுவை

7. மார்க்கந் தப்பிச் செல்லும் மனிடரை எல்லாம்
வழிப்படுத் துவதில்என் வாணாளைப் போக்குவேன்–இயேசுவை

**329. இராகம்: காம்போதி. தாளம்: சாப்பு.**

**பல்லவி**

**நெஞ்சமே ஏன் வீணாய் சஞ்சலம் கொள்கின்றாய்**

**அனுபல்லவி**

தஞ்சமிலா இந்தத் தாரணி மீதினில்

**சரணங்கள்**

1. அஞ்சேல் உனைவிடேன் நெஞ்சம் பதறாதே
என்றோதும் நம் தெய்வம் உன் முன்னிருக்கையில் – நெஞ்சமே

அட்டவணை

2. என்வினை பெரிதல்லோ எம்பிழை பொறுப்பாரோ
என்றிந் நினைவெல்லாம் எதிரியின் மோசம் காண் – நெஞ்சமே

3. எந்தப் பாவமும் மூடும் விந்தைக் கிருபை உண்டெனில்
என்று வாக் களித்திட்டோன் உந்தனுக் கிருக்கையில்
–நெஞ்சமே

4. துன்பப் பெருக்கிலே சோர்பேதும் அடையாதே
அன்பர் அறியாமல் யாதும் வரவிடார் – நெஞ்சமே

5. இன்பக் கானானுக்குள் இசரேலை நடத்திட
செங்கடலைப் பிளந்தோன் என்றுமுன் தோழரே – நெஞ்சமே

6. காத்திருப்போரெல்லாம் கழுகைப்போல் புதுப்பெலன்
கண்டு மகிழுர் என்றது பொய்யாமோ – நெஞ்சமே

7. ஆத்திர மாகாதே ஆண்டவர் வேளைகள்
காத்திருப்போ ரல்லால் யாரும் அறிந்திடார் – நெஞ்சமே

**330.**

**பல்லவி**

**எனக்கினி என்பயம் இயேசு என் துணையே**
அனுதினம் நான்அவர் கரமதில் சாருவேன்.

**சரணங்கள்**

1. உன்மன மின்றியே ஒன்றுமே நேர்ந்திடா
தொருமயி ராயினும் நீர்அறிந் தேவிழும் – எனக்கினி

2. சுற்றிலும் சத்துரு சேனைகள் சூழ்ந்திடில்
தூதர்கள் வந்தெனைக் காவல்செய் திடுவார் – எனக்கினி

3. கன்னம தில்அடி படத்தருகிலோ நான்
கர்த்தனேசுவைப் போல் மறுகன்னம் காட்டுவேன்– எனக்கினி

4. திருடர் என் பொருளெல்லாம் கொள்ளைகொண் டோடுகில்
சீக்கிரம் சென்று நான் மீந்ததும் ஈகுவேன் – எனக்கினி

அட்டவணை

5. வீட்டினில் பெற்றோரால் கஷ்டம் வந்தீடுகில்
வீடும்விட் டேகனாய் இயேசுவைப் பின் செல்வேன் – எனக்கினி

6. மரண தூதன் வந்தென் சீவனைக் கேட்டிடில்
மங்களம் பாடியே வாறேன் இதோ என்பேன் – எனக்கினி

**331.**

**பல்லவி**

**இன்ப துன்ப நேரத்திலும் உன் அன்புள்ள இயேசுவைப் பார்**

**சரணங்கள்**

1. இன்பத்தினால் அகமகிழ்ந்து கிலேசத்தினால் துக்கித்துச்
சிற்றின்பப் பேருலகில்
சிக்கிக்கொண்டு இருக்கும் போதும் – இன்ப

2. சோதனையால் பிடிபட்டு இடுக்கணில் இருக்கும் போதும்
சாத்தான் உன்னை மேற்கொள்ளும்
போதும் அக்கினியாஸ்திரம் எறியும் போதும் – இன்ப

3. தோழரால் பகைக்கப்பட்டு, மனக்கிலேசம் அடையும் போதும்
உலகம் உன்னை இகழ்ச்சி செய்து
தங்கள் இடத்தை விட்டோடும் போதும் – இன்ப

4. அவர் தாமேசோ திக்கப்பட்டு பாடு நமக்காய்ப்பட்டதனால்
அவர், சோதிக்கப் படும் நமக்கு
உதவி செய வல்லவராம் – இன்ப

5. வறுமையினால் யாசித்துப் பாடுமிகப் படும் போதும்
சாத்தான் உன்னைப் பகடிபண்ணி உன்
விசுவா சத்தை குறைக்கும் போதும் – இன்ப

6. கடு நோயால் பெலன் குன்றி பெலவீனத்தால் தள்ளாடி
சீவன் உனக்குக் கசப்பாகி
சாவை நீ விரும்பும் போதும் – இன்ப

7. பகைஞரால் கல்லெறி யுண்டு மரணநேரம் கிட்டும் போதும்
பக்தன் ஸ்தேவானைப்போல்
தைரிய மாய் உன் இயேசுவைப் பார் - இன்ப

8. நான் என் இயேசுவின் தரிசனத்தை நிமிடந்தோறும்
காண்கிறதால்
நான்தான் பயப்படா திரு
என்றவர் என்னைத் தேற்றுகிறார் - இன்ப

**332. இராகம்: கரகரப்பிரியா. தாளம்: ரூபகம்.**

**பல்லவி**

**அஞ்சாதே, இயேசு இரட்சகர்**
ஆத்து மத்துயர் நீக்க வல்லவர்.

**அனுபல்லவி**

வஞ்சமே மிஞ்சுமா? பஞ்சபாதகன் நானென்று - அஞ்சாதே

**சரணங்கள்**

1. திருடன் ஒருவன் மரிக்கும் வேளையில்
திருச்சுதன் பதம் தழுவிக் கற்கதிக்
அருள் பெற்றான், என் வேதஞ் சொல்வதை
ஆய்ந்து மனஞ் சாய்ந்து நீ செல். - அஞ்சாதே

2. வெள்ளிக் காசொன்றை இழந்துவிட்டவள்
வீட்டைப் பெருக்கிப் பார்த் தெடுத்தபின்
துள்ளிப் பூரிக்கும் போலுன் மேலே
தூதர் சங்கமும் களிப்ப தாலே. - அஞ்சாதே

3. மேய்ப்பன் மந்தையை விலகின ஆட்டை
வெகு கவலையாய்த் தேடிக் கண்டபின்
வாய்ப்புடன் மனம் மகிழும் போலே
மானு வேலுனைத் தழுவ லாலே. - அஞ்சாதே

4. தொண்ணூற் றொன்பது நீதிமான்களில்
துயரடை பாவி யொருவன் மீதினில்
எண்ணருந் தூதர் மகிழ்வ தாலே
இரட்சிப் புனக்குப் பலித்த தாலே. – அஞ்சாதே

5. மரணத்தின் கூரை ஒடித்த வல்லவன்
வருந்தி அழைத்த விருந்துக்கு வரத்
தருணம் ஈதெனத் தாசர் கூடிச்
சாற்றும் மொழியை ஏற்று நீவர. – அஞ்சாதே

*–ச.ஐ. (லுத்தரன்)*

**333. இராகம்: சங்கராபரணம்.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**அடைக்கலம் அடைக்கலமே இயேசுநாதா உன்**
அடைக்கலம் அடைக்கலமே!

**அனுபல்லவி**

திடனற்றுப் பெலனற்றுன் அடியுற் றழும் ஏழைக்கு –அடைக்

**சரணங்கள்**

1. ஆசையோடு பவமதில் அலைந்து திரிந்தேனே
அன்புள்ள பிதா உனைவிட் டகன்று பிரிந்தேனே
மோசமதையே அலால் மற்றொன்றையும் காணாமலே என்
தோசமோடு சேர்ந்தனன் துரத்திடாது சேர்த்தருள் – அடைக்

2. கட்டுப்படாக் காயமதின் கெட்ட இரணம் போலவே
மட்டுப்படாப் பாவமதில் மயங்கி உறங்கினேன்
கெட்டவனே போவெனக் கிளத்தினும் நியாயமே
கிட்டி வந்தழும் ஏழைக் கெஞ்சுதல் கேள் ஐயனே! – அடைக்

3. சிந்திய உதிரமதும் ஐந்துதி ருக்காயமும்
நொந்துரு கெனது மனச் சஞ்சல மகற்றிடும்
பஞ்சமா பாவியானேன் கெஞ்சிடும் ஏழையேனே
எந்த விதமும் தள்ளாமல் இரங்கிடு மையனே – அடைக்

அட்டவணை

4. பெரு வெள்ளத் துக்குத் தப்பப் பேருதவி நீயல்லோ
பருதி தருவெயிற்குப் பரம சகாயனே
குருதி சிந்தி உயிர்த்த கோதில்லாத நாயனே
நெருக்கப்படு மெனக்கு நீ உதவி அல்லவோ? – அடைக்

5. என்னிடத்தில் வருவோரை எந்தவிதமும் தள்ளேன்
என்று சொன்ன வாக்கதினில் எனக்கும் பங்கில்லையோ
அன்று வலப் பக்கமதில் அறையுண்ட கள்ளனுக்கு
இன்று பரதீசி லிருப்பாயென் றுரைத்தீரல்லோ – அடைக்

**334. இராகம்: சகானா. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**ஆதாரம் நீதானையா – என் துரையே**
ஆதாரம் நீதானையா.

**அனுபல்லவி**

சூதாம் உலகில் நான் தீதாய் மயங்கையில் – ஆதாரம்

**சரணங்கள்**

1. மாதா பிதாவெனைத் தீதாய் மதிக்கையில்
மற்றோர்க்குப் பற்றேதையா – எளியன்மேல்
மற்றோர்க்குப் பற்றேதையா – எளியனுக்கு – ஆதாரம்

2. நான்தா னெனும் பல நரர்துணை தழுவ
நட்டாற்றில் விட்டாரையா – தனியனை
நட்டாற்றில் விட்டாரையா – தனியனுக்கு – ஆதாரம்

3. கற்றோர் பெருமையே மற்றோர் அருமையே
வற்றாக்கிருபை நதியே – என்பதியே
வற்றாக்கிருபை நதியே – என் மதியே – ஆதாரம்

4. சோதனை அடர்ந்து வேதனை தொடர்ந்து
துக்க மிகு வேளையில் – என் சுகிர்தமே
துக்க மிகு வேளையில் – உன் தாசனுக்கு – ஆதாரம்

அட்டவணை

5. சஞ்சலச் சடலம் வஞ்சகப் படலம்
பஞ்சா மிர்தக்கடலே – படலம்
பஞ்சா மிர்தக்கடலே – என் உயிரே – ஆதாரம்

**335.**

**பல்லவி**

**காப்பார், உன்னைக் காப்பார்,**
காத்தவர் காப்பார், இன்னும் இனிமேல்
காத்திடுவார், கலங்காதே மனமே
காத்திடுவார்

**சரணங்கள்**

1. கண்டுனை அழைத்தவர் கரமதைப் பார், அவர்
கை விடாதிருப்பார்,
ஆண்டுகள் தோறும் உனக்கவர் அளித்த
ஆசிகளை எண்ணிப் பார்
என்ணிப்பார், என்ணிப்பார், எண்ணிப்பார்
என்றுமதை எண்ணிப்பார் – காப்பார்

2. இஸ்ரவேலுக்கு வாக்குப்படி இன்பக்
கானான் அளிக்க வில்லையோ
இப்போ திவர்களை நிர்மூலம் செய்வ தென்று
பின்னும் இரங்க வில்லையோ,
இல்லையோ, இல்லையோ, இல்லையோ
மனத்தாபம் கொள்ள வில்லையோ, – காப்பார்

3. வீழ்ச்சியில் விழித்துன்னை மீட்பவரும் இகழ்ந்து
விடாது சேர்ப்பவரும்
சிற்சில வேளையில் சிட்சையி னாலுன்னைக்
கிட்டி யிழுப்ப வரும்
செயமும், கனமும், சுகமும்
இரக்கமாயுனக் களிப்பவரும், – காப்பார்

4. தாயின் கட்டில் வரு முன் உனக்காய்த்
தாமுயிர் கொடுத்தவரே,
காயீனைப் போலுனைத் தள்ளி விடாது
கை கொடுத் தெடுத்தவரே,
அவரே, அவரே, அவரே
அன்பு கொண்டு மணந் தவரே - காப்பார்

5. ஆதரவாய்ப் பல ஆண்டுகளில் பரன்
அடைக்கல மாயிருந்தார்,
காதலு டன்னவர் கைப்பணி செய்திடக்
கனிவுட னாதரித்தார்,
ஆதரித்தார், ஆதரித்தார், ஆதரித்தார்
பரிசுத்தத்தில் லங்கரித்தார். - காப்பார்

**336. இராகம்: ஆல்செபம் தாளம்: ஆதி**

**வேத நூல் ஓதிடும் நல்ல மேய்ப்பர்**
பாதையும் சத்தியமும் சீவன் நீரே
பேதையாம் ஏழையும் பாதை செல்ல
நீர் அல்லால் யாரு மில்லை!

**பல்லவி**

இயேசு நாதா! ஏழைக்கு நீர் அல்லால் யாரு மில்லை
இயேசு நாதா! நீர் அல்லால் யாரு மில்லை!

**சரணங்கள்**

2. சாபத் தீடானதை வைத்த ஆகான்
கோபத்திற் காளாய் எதிர்த்த தாதான்
பாவத்தில் சாகாது யிர்பிழைக்க
நீர் அல்லால் யாரு மில்லை - இயேசு

3. சத்ய விசுவாசத் தைக்காத்திடவே
நித்தம் நுங் கீர்த்தியைப் பாடிடவே
சத்துரு சேனையில் வெற்றி தர
நீர் அல்லால் யாரு மில்லை - இயேசு

4. ஒரே பிதாவை அறிந்திடவே
பரிசுத் தாவியை பெற்றிடவே
வேறேது போக்கும் வழியுமில்லை
நீர் அல்லால் யாருமில்லை – இயேசு

5. சாத்தான் தலையைச் சிதைப் பதற்கும்
சாத்தான் வெற்றி யான் கொள்ளுதற்கும்
சமாதானத் தேவ நீர் கிருபை செய்ய
நீர் அல்லால் யாரு மில்லை – இயேசு

6. நன்மை ஏதும் செய்யத் தெரிகிலேன்
தின்மையே யான்செய்யத் திறனுளேன்
நற்செய்கை யாகும்உன் சித்தம் செய்ய
நீர் அல்லால் யாரு மில்லை – இயேசு

7. நினைவுக் குள் பாவம் வருகுதையா
கனவுக்குள் என்னை இழுக்குதையா
ஆவி உடல் உயிர் மீட்பதற்கே
நீர் அல்லால் யாரு மில்லை – இயேசு

8. தேவன் மகத்து வத்தில் வரவே
சீவ கிரீடத்தை தான் தரவே
அப்போதும் நாங்கள் பாடு வோமே
நீர் அல்லால் யாரு மில்லை – இயேசு

**337. இராகம்: இந்துஸ்தான் டப்பா. தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**விசுவாசியின் காதில்பட இயேசுவென்ற நாமம்**
விருப்பாய்அவர் செவியில் தொனி யினிப்பாகுது பாசம்.

**சரணங்கள்**

1. துயரை யது நீக்கிக் காயந்தீர்த்துக் குணப்படுத்தும்;
பயங்கள் யாவும், இயேசுவென்றால் பறந்தோடியே போகும்–விசு

2. காயப்பட்ட இருதயத்தைக் கழுவிச் சுத்தப்படுத்தும்,
தியக்கமுள்ள நெஞ்சையது மயக்கமின்றி விடுக்கம். – விசு

3. பசித்த ஆத்துமாவைப் பசியாற்று மன்னாவதுவே;
முசிப்பாறுதல் இளைத்தோர்க்கெல்லாம் முற்றுமந்தப்பெயரே
–விசு

4. எல்லை இல்லாக் கிருபைத்திரள் ஏற்று நிறைந்திருக்கும்
எல்லா நாளும் மாறாச்செல்வம் இயேசுவென்ற பெயரே. – விசு

5. என்னாண்டவர், என் ஜீவனே, என் மார்க்கமே, முடிவே,
என்னால் வருந் துதியை நீரே ஏற்றுக்கொள்ளும், தேவே.– விசு

***–பாளையங்கோட்டைப் பாடல்.***

**338. இராகம்: பங்களா. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்; – மெய்**
விசுவாசமுள்ளவன் தான் தழைப்பான்.

**சரணங்கள்**

1. நிசமாக நாம் பாவத்தினிற் பிறந்தோர்; – முழு
விடமான பாவத்தினால் இறந்தோர். – விசு

2. உய்யும் வகையறியோம்; பெலனேயில்லை; – நரர்
செய்யும் கிரியைகளில் நலனேயில்லை. – விசு

3. பாவக் கடனொழிக்கப் பலமே யற்றோம்; – எச்
சாபம் அழிவினுக்கம் தகைமை யுற்றோம். – விசு

4. தேவன் கிருபையொன்றே நமைப் பார்க்கும்; – அவன்
மாவன்பே பாவிகளின் கடன் தீர்க்கும். – விசு

5. நீதிமானைக் குற்றஞ்சாட்ட யாராலே யாகும் – அவன்
பாதகம் பழி மரணம், யாவுமே போகும். – விசு

6. தேவனின் பிள்ளை நானென்றேயுவன் துள்ளுவான்; – தீய
பாவ வழிதனைப் பகைத்தே தள்ளுவான். – விசு

***–மறைத்திரு. ஞா. சாமுவேல், தரங்கன்பாடி.***

அட்டவணை

**339. இராகம்: எதுகுலகாம்போதி.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**கிஞ்சிதமும், நெஞ்சே, அஞ்சிடாதே; – நல்ல**
கேடகத்தைப் பிடி நீ; — விசுவாசக்
கேடகத்தைப் பிடி நீ.

**அனுபல்லவி**

வஞ்சனையாகவே பேய் எதிர்த்துன்தனை
வன்னிக் கணைதொடுத் தெய்கின்ற வேளையில்,
நெஞ்சில் படாமல் தடுக்க அதுநல்ல
நிச்சய மான பரிசை அறிந்துநீ – கிஞ்சிதமும்

**சரணங்கள்**

1. பாவத்தை வெறுக்க, ஆபத்தைச் சகிக்கப்
பத்தியில் தெளிக்கவும், – நித்ய
சீவனைப் பிடிக்க, உலோகத்தை செயிக்க
திறமை அளிக்கவும்,

சாவே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன்
செயம் எங்கே? என்று நீ கூவிக் களிக்கவும்,
தேவன் உகந்துனைத் தான் அங்கீகரிக்கச்
செய்யவு மேஅது திவ்ய நல் ஆயுதம்; – கிஞ்சிதமும்

2. பண்டையர் அந்தப் பரிசையினால் அல்லோ,
கண்டடைந்தார் பேறு? – நல்ல
தொண்டன் ஆபேல்முத லான வைதீகரைத்
தொகுத்து வெவ்வேறு

விண்டு ரைக்கில் பெருகும்; தீ அணைத்ததும்,
வீரிய சிங்கத்தின் வாயை அடைத்ததும்,
கண்டிதமாய் வெற்றி கொண்டது மாம்பல
காரியங் களையும் பார்இது மா செயம். – கிஞ்சிதமும்

3. ஊற்றமுடன் இப்பரிசைப் பிடித்திட
உன் செயல் மா பேதம்; – அதின்
தோற்றமும் முடிவும் இயேசுபரன் செயல்,
துணை அவர் பாதம்;
ஏற்றர வணைக்க வேபணி வாக
இரந்து மன்றாடி, அவர்மூல மாகவே
ஆற்றல்செய் தேற்றர வாளன் பரிசுத்த
ஆவி உதவியை மேவி, அடைந்து நீ. – கிஞ்சிதமும்

***–ஜான் பால்மர், நாகர்கோவில்.***

**340. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**தேவ பிதா என்றன் மேய்ப்பன் அல்லோ?**
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே.

**அனுபல்லவி**

ஆவல தாய்எனைப் பைம்புன்மேல்
அவர்மேய்த் தமர்நீர் அருளுகின்றார் – தேவ

**சரணங்கள்**

1. ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி,
அடியேன் கால்களை நீதிஎன்னும்,
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார் – தேவ

2. சா நிழல் பள்ளத் திறங்கிடினும்,
சற்றும் தீங்குகண் டஞ்சேனே;
வான பரன்என் னோடிருப்பார்,
வளைதடி யும்கோ லுமேதேற்றும். – தேவ

3. பகைவர்க் கெதிரே ஒருபந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்தி,
சுகதயி லம்கொண் டென்தலையைச்
சுகமாய் அபிடேகம் செய்குவார். – தேவ

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமு மாய்நிரம்பும்,
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன். – தேவ

*– J. யோசேப்பு, செய்யூர்.*

**341. இராகம்: இந்துஸ்தானி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**என் மீட்பர் உயிரோடிருக்கையிலே – எனக்**
கென்னகுறை வுண்டு? நீ சொல், மனமே.

**சரணங்கள்**

1. என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தோர்,
என்னோ டிருக்கவே எழுந்திருந்தோர்;
விண்ணுல குயர்ந்தோர், உன்னதஞ் சிறந்தோர்,
மித்திர னே,சுக பத்திர மருளும். –என்

2. பாபமோ, மரணமோ, நரகமோ, பேயோ,
பயந்து நடுங்கிட செயஞ் சிறந்தோர்,
சாபமே தீர்த்தோர் சற்குரு நாதன்;
சஞ்சல மினியேன்? நெஞ்சமே, மகிழ்வாய் –என்

3. ஆசிசெய் திடுவார், அருள்மிக அளிப்பார்,
அம்பரந் தனிலெனக்காகசெ பிப்பார்;
மோசமே மறைப்பார், முன்னமே நடப்பார்;
மோட்ச வழி சத்யம் வாசல் உயிரெனும் –என்

4. கவலைகள் தீர்ப்பார், கண்ணீர் துடைப்பார்,
கடைசி மட்டுங் கைவி டாதிருப்பார்;
பவமனிப் பளிப்பார் பாக்கியங் கொடுப்பார்,
பரம பதவியினுள் என்தனை எடுப்பார். –என்

*–மறைத்திரு நா. சாமுவேல், தரங்கன்பாடி.*

அட்டவணை

**342. இராகம்: செஞ்சுருட்டி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**நம்பிவந்தேன், மேசையா, நான் நம்பி வந்தேனே; – திவ்ய**
சரணம்! சரணம்! சரணம் ஐயா, நான் நம்பி வந்தேனே

**சரணங்கள்**

1. தம்பிரான் ஒருவனே, தம்பமே தருவனே; – வரு
தவிது குமர குரு பரமனுவேலே, நம்பி வந்தேனே – நான்

2. நின்பாத தரிசனம், அன்பான தரிசனம்; – நித
நிதசரி தொழுவ திதம் எனவும் உறுதியில், நம்பி வந்தேனே –நான்

3. நாதனே கிருபைகூர்; வேதனே, சிறுமைதீர்; – அதி
நலம் மிகும் உன திரு திரு வடி அருளே, நம்பிவந்தேனே – நான்

4. பாவியில் பாவியே, கோபியில் கோபியே – கன
பரிவுடன் அருள் புரி, அகல விடாதே, நம்பிவந்தேனே – நான்

5. ஆதி ஒலோலமே, பாதுகா காலமே; – உன
தடிமைகள் படுதுயர் அவதிகள் மெத்த, நம்பிவந்தேனே – நான்

***–வேதநாயகம் சாத்திரியார்.***

**343. இராகம்: பிலகரி.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**உனக்கொத் தாசை வரும்நல் உயர்பரு வதம், இதோ!**

**அனுபல்லவி**

தினமும் மனது நொந்து, சிந்தை கலங்கு வோனே, –உனக்

**சரணங்கள்**

1. வானம் புவி திரையும் வகுத்த நன்மைப் பிதாவின்
மாட்சிமையின் கரமே வல்லமை யுள்ள தல்லோ? – உனக்

2. காலைத் தள்ளாட வொட்டார், கரத்தைத் தளர வொட்டார்
மாலை யுறங் கமாட்டார்; மறதியாய்ப் போக மாட்டார். –உனக்

3. கர்த்தருனைக் காப்பவராம், கரமதில் சேர்ப்பவராம்;
நித்தியமு முன்றனுக்கு நிழலா யிருப்பவராம். – உனக்

4. பகலில் வெயிலெனிலும், இரவில் நிலவெனிலும்
துயர்தரு வதுமில்லை; துன்பஞ் செய்வதுமில்லை. –உனக்

5. தீங்கு தொடரா துன்னை, தீமை படரா துன்மேல்;
தாங்குவார் தூதர் கோடி, தாளி டறாதபடி. – உனக்

6. போக்கும் ஆசீர்வாதமாம், வரத்தும் ஆசீர்வாதமாம்;
காக்கைக் குஞ்சுகள் முதல் கதறி நம்பி விடுமே. – உனக்

7. துன்பந் துயரத்திலும் துக்கச் சமயத்திலும்
இன்ப முறும் பொழுதும் எல்லாம்உ னக்கவரே. – உனக்

***–பாளையங்கோட்டைப் பாடல்.***

**344. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி.**

**பல்லவி**

**துங்கனில் ஒதுங்குவோன் பங்கமின்றித் தங்குவான்**

**அனுபல்லவி**

கங்குல் பக லும்பரனார் காவல் அர ணாதலால் – துங்க

**சரணங்கள்**

1. வேடன் கண்ணி குத்துங்கால், விக்கினங்கள் சுற்றுங்கால்
மூடி உனைக் காப்பாரே, ஓர் மோசமின்றிச் சேர்ப்பரே. – துங்க

2. பக்கத்திலே ஆயிரம், பாலே பதினாயிரம்
சிக்கென வீழ்ந்தாலுமே, தீங்குனைஅண் டாதுகாண். – துங்க

3. கண்ணினாலே பார்க்குவாய், கடவுள் செயல் நோக்குவாய்;
அண்ணலே உன் அடைக்கலம், ஆண்டவர் உன் தாபரம்–துங்க

4. தீங்குனை அண்டாமலும், தீனங்கள் தீண் டாமலும்,
பாங்கு தூதர் காபந்தில் பத்திரமாய் வாழ்வையே. – துங்க

5. பாதம் கல்லிட றாமல், பகைவர் உக்ரம் மீறாமல்,
தூதர் உனைக் கைகளில் தூக்கி ஏந்திக் கொள்வரே. – துங்க

6. நீடுநாட்க ளாகவே கேடு துன்பம் போகவே,
வீடுபர தீசினில் சூடுவான் மா மகிமைகள். – துங்க

*–J. யோசேப்பு, நெய்யூர்.*

**345. இராகம்: இந்துஸ்தானி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**வாரா வினை வந்தாலும் சோராதே மனமே;**
வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே.

**சரணங்கள்**

1. அலகை சதித்துன் மீது வலை வீசினாலும்,
அஞ்சாதே; இயேசுபரன் தஞ்சம் விடாதே – வாரா

2. உலகம் எதிர்த்துனக்கு மலைவுசெய் தாலும்
உறுதிவிட் டயராதே, நெறிதவ றாதே. – வாரா

3. தேகம் மோகம் மிஞ்சி வேகங்கொண் டாலும்,
திடமன தாயிருந் தடல் புரிவாயே; – வாரா

4. பெற்ற பிதாப்போல் உன் குற்றம் எண்ணாரே;
பிள்ளை ஆகில் அவர் தள்ளிவிடாரே. – வாரா

5. தன் உயிர் ஈந்திட்ட உன் இயேசுநாதர்
தள்ளுவரோ? அன்பு கொள் அவர் மீதே. – வாரா

6. மரணம் உறுகின்ற தருணம் வந்தாலும்,
மருள விழாதே, நல் அருளை விடாதே. – வாரா

*–ஜாண் பால்மர், நாகர்கோவில்.*

**346. இராகம்: சஹானா.** **மிசுராதாளம்.**

**பல்லவி**

**நெஞ்சமே, தள்ளாடி நொந்து, நீ கலங்காதே – கிறிஸ்**
தேசுவே உனக்கு நல்ல நேச துணையே.

**சரணங்கள்**

1. நேசமான தோழர்களும் வஞ்சகமாகச் – சற்றும்
நேரறப் பகைஞராக நின்ற போதிலும், – நெஞ்சமே

2. அன்னை தந்தை ஆனவரும் பின்ன பேதமாய் – உனை
அங்கலாய்க்க விட்டெளிஞன் ஆன போதிலும், – நெஞ்சமே

3. சீவனம் இழந்து துன்பம் மேவினாலும், – மா
சிறுமையாய்ச் சகிக்கொணா வறுமை கொண்டாலும்,
–நெஞ்சமே

4. பஞ்சமும் பசியும் வந்து கெஞ்ச வைத்தாலும், – மிகு
பாரமாய்ச் சுமை உன்மேலே பற்றி நின்றாலும், – நெஞ்சமே

5. கெட்ட வழியிலும் நீ அகப் பட்டுழன்றாலும், – எந்தக்
கேடுகள் உன் மேலே வந்து மூடினாலும், – நெஞ்சமெ

6. ஆன வீடு தானும் கொள்ளை ஆன போதிலும், – கிறிஸ்
தண்ணலே, உனக் கெல்லாம்என் றெண்ணி நிறைவாய்
–நெஞ்சமே

**347. இராகம்: கரகரப்பிரியை.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**பாதம் ஒன்றே வேண்டும்; – இந்தப்**
பாரில் எனக்குமற் றேதும் வேண்டாம் – உன்

**சரணங்கள்**

1. நாதனே, துங்க மெய் – வேதனே, பொங்குநற்
காத லுடன் துய்ய தூதர் தொழுஞ் செய்ய – பாதம்

2. சீறும் புயலினால் வாரிதி பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல் நீர்மேல் நடந்த உன் – பாதம்

3. வீசும் கமழ்கொண்ட வாசத் தைலத்தை
ஆசையு டன்மரி பூசிப் பணிந்த பொற் – பாதம்

4. போக்கிட மற்ற எம் ஆக்கினை யாவையும்,
நீக்கிடவே மரந் தூக்கி நடந்த நற் – பாதம்

5. நானிலத்தோர் உயர் வான் நிலத் தேற வல்
ஆணி துளைத்திடத் தானே கொடுத்த உன் - பாதம்

6. பாதம் அடைந்தவர்க் காதரவாய்ப் பிர
சாதம் அருள் இயேசு நாதனே, என்றும் உன் - பாதம்

***-யாழ்ப்பாணப் பாடல்.***

**348. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி.**

**கண்ணிகள்**

**என் சீவன் சுகம் பெலன் யாது**
என் இயேசுவே யல்லாம லேது?
நான் நோக்கும் போதெல்லாம்
இயேசுவை யல்லாமல் வேறெதுங் காணேன்

**பல்லவி**

கண்டு களிப்பேன் நானே,
கண் குளிரப் பார்ப்பேனே!
கதி பெறுவேன், - நான் கதி பெறுவேன்,
அல்லேலூயா! அல்லேலூயா! - ஓ

ஆமென்! ஆமென்! சுவாமி, இயேசு நாதரோடு
அல்லும் பகலுமாயவர் திருப் பாதமதி லமர்ந்திடுவேன்;
அறிந்திடுமோ லோகம், அறிந்திடுமோ லோகம்
அறிந்திடுமோ லோகம்
அறிந்திட்டால் இயேசுவைக்கண் டானந்திக்குமே.

2. ஈலோக காட்சி எல்லாம் மாய்கை!
மேலோகம் பார்க்கவே என் ஆசை!
நான் நோக்கும் போதெல்லாம் இயேசுவையல்லாது வேறெதுவுங் காணேன்.

நித்த சீவி யத்திலே,
அத்தனோ டுறவாட,
அருள் புரிந்தார்; - இயேசு - அருள் புரிந்தார்!
அல்லேலூயா! அல்லேலூயா! - ஓ

ஆனந்தமே! பரமானந்தமே, தேவ
ஆலயம் என் அகம் ஆனதினாலே துதி ஆனந்தமிதே;
அகமகிழ்வேன் – நானே – அகமகிழ்வேன் – நானே
அகமகிழ்வேன்!
அருமை இயேசுவோடென்றும் மகிழ்ந்திடுவேன்!

**349. இராகம்: சாமா. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**பயமேது நமக்குப் பயமேது**

**அனுபல்லவி**

செய மிகும் தேவனுக்குச் சேயர் களாய் நாமிருக்க – பயமேது

**சரணங்கள்**

1. ஆறு நாளி லண்ட மெல்லாம் அற்பு தமா கப்ப டைத்து
சீருடன் பூ சிங்காரித்த தேவ னும்நம் மோடி ருக்க – பயமேது

2. சத்து ருக்க ளைச்சி வந்த சமுத்தி ரத்தி லுள்ள மிழ்த்தி
வெற்றி யுடனிசர வேலை மீட்டு இரட்சித் தோனி ருக்க–பயமேது

3. பஞ்சத் தில்எ லியா வுக்குப் பட்சி களால் அன்ன மிட்டு
மிஞ்சும் தய வால்இரட் சித்த மேலோ னும்நம் மோடிருக்க
– பயமேது

4. மூழும் சூளை யில்கிடந்த மூவ ருடனேஉ லாவி
தோழ ரைத்துன் பின்றிக் காத்த துய்ய னும்நம் மோடிருக்க
– பயமேது

5. சிங்கக் குகை யிற்கி டந்த சீலன் தானி யேல்பக்தன் தனை
பங்க மேது மின்றிக் காத்த பக்த னும்நம் மோடிருக்க – பயமேது

6. பாடையிலெ டுத்துப் போன வாலி பனைத் தொட்டெழுப்பி
வாடும் தாயைத் தேற்றி வைத்த வல்லோ னும்நம் மோடிருக்க
– பயமேது

7. நாலு நாளாய் கல்ல றைக்குள் நாறி ஊனெல் லாங்க ழிந்த
சீலன் லாச ருஉ யிர்க்கச் செய்தோ னும்நம் மோடிருக்க
– பயமேது

அட்டவணை

8. ஐந்தப் பமி ருமீன் கொண்டு ஐயா யிரம் பேர்க ளுக்கு
விந்தை யாய்ப்போ சன மிட்ட விண்ண வர்நம் மோடிருக்க
– பயமேது

9. தந்தை யும்தாயுமுன் தனைத் தார ணியில் தள்ளி டினும்
உந்த னைம றவே னென்ற உன்ன தன்நம் மோடிருக்க –பயமேது

**350. இராகம்: நாதாநாமக்கிரியை. தாளம்: ஆதி.**

**நிபந்தை – கண்ணிகள்**

**ஆத்தும அடைக்கலம் அன்புள்ள இயேசுவே,**
ஐயா, புகலிடம் தாரும்;
காற்றுப் பெருவெள்ளம்போல் சீற்றம்கொள்ளுது துன்பம்,
கைகொடுத் தெனை ஆற்ற வாரும்.

2. நீரே என் நம்பிக்கை, நீரே என் தஞ்சம்;
நீசன் எனக்கு வேறார் ஐயா?
சாரும் நிராயுதன் யான் போரில் விழாப்படித்
தாங்கும் உன் மறைவினில், ஐயா.

3. நீதம் கெட்ட பாவியான், நீதி பரி சுத்தமும்
நிறைந்த நீர் எனக்குத்ர வாதி;
பாதகத்தால் நிறைந்த பேதையான்; கிருபை சத்தியம்
பரிபூரணம் உள்ளோன் நீர் சோதி.

4. எந்தப் பாவமும் மூடும் விந்தைக் கிருபை உண்டும்மில்,
என் பாவம் தீர்த்தருளும், கோவே,
நொந்த எனை நீர் ஆற்றிச் சிந்தையைப் புதுப்பித்துமே
நோக்கும் அதைத் துய்யதாய், தேவே.

5. சீவ ஊற்றே, உம்மில் யான் தெளிந்து குடிப்பேனாக;
தீராத தாகங்கள் தீரும்;
ஓவா நித்தியமட் டாகப் பாவி என் நெஞ்சில் ஊறும்
உன்னத அன்பன் இயேசு, வாரும்.

***– திரு. A. வேதக்கண்.***

அட்டவணை

**351.**

**பல்லவி**

**தற்பரனே எனது மேய்ப்பர் தாழ்ச்சியை நானடையேன்**

**அனுபல்லவி**

மெய்ப்பரன் புல் தரையில் என்னை மேய்த்துக் காப்பாரே – மகா

**சரணங்கள்**

1. ஊற்றின் சுத்தத் தண்ணீரண்டை சேர்த்திடுவாரே – என
தாத்துமத்தின் தாகமெல்லாம் அமரச் செய்வாரே – தற்ப

2. தம்நாம நிமித்தமெனில் தயவு வைப்பாரே – வெகு
செம்மையுள்ள வழியி லென்கால் செல்லச் செய்வாரே – தற்ப

3. மரணநிழல் பள்ளத்தாக்கல் வழி நடந்தாலும் – என்னைப்
பரன் காப்பார் மோசத்துக்கு பயப்பட் டஞ்சேனே – தற்ப

4. எனது துணை யாக விருந் தென்னைக் காப்பாரே – அவர்
தமது தண்டக் கோலா லென்னைத் தாங்கி தேற்றுவாரே – தற்ப

5. என் தலையில் அபிடேகம் இதமாய்ச் செய்தாரே – எனின்
சந்தோசநன் மனப்பாத்திரம்தான் நிரப்பச் செய்தாரே – தற்ப

6. தேவ நம்மை கிருபையென்ற செல்வ பாக்கியங்கள் – என் தன்
சீவனுள்ள நாளி லெல்லாம் சேர்த்துச் செல்லுவாரே – தற்ப

7. கர்த்தருடை நல்வீட்டில் காதலுடனே – நான்
நித்திய காலமெல்லாம் நிலைத்திருப்பேனே – தற்ப

**352. இராகம்: பியாகு.** **தாளம்: சாப்பு.**

**பல்லவி**

**கண்களை ஏறெடுப்பேன் – மாமேரு நேராய் என்**
கண்களை ஏறெடுப்பேன்

**அனுபல்லவி**

விண்மண் உண்டாக்கிய வித்தக னிடமிருந்து
எண்ணில்லா ஒத்தாசை என்றனுக் கேவரும் – கண்களை

அட்டவணை

**சரணங்கள்**

1. காலைத்தள் ளாட வொட்டார் – உறங்காது காப்பவர்
காலைத்தள் ளாடவொட்டார்
வேலையில் நின் றிசர வேலரைக் காத்தவர்
காலையும் மாலையும் கண்ணுறங் காரவர் – கண்களை

2. பக்கதர் நிழல் அவரே – எனை ஆதரித்திடும்
பக்க நிழல் அவரே
எக்கால நிலைமையும் எனைச்சேதப் படுத்தாது
அக்கோலம் கொண்டோனை இக்காலம் அடையவே
–கண்களை

3. எல்லாத் தீமைகட்கும் – என்னை விலக்கியே
எல்லாத் தீமைகட்கும்
பொல்லா உலகினில் போக்கு வரத்தையும்
நல்லாத்து மாவையும் நாடோறும் காப்பவர் – கண்களை

**353. இராகம்: மலையாமி. தாளம்: திஸ்ர சாப்பு.**

**பல்லவி**

**இரட்சகர் பட்சம் எனக் கிருந்தால்**
நிச்சயம் தீமை பறந்திடுமே

**அனுபல்லவி**

எச்சாதி யாருக்கும் இரட்சா பெருமானே
இந்நிலம் தன்னில் மனுவாகத் தோன்றினார் – இரட்சகர்

1. ஆரணி யந்தனியில் தீவுலகை
அருண்டு ருண்டோடச் செய்தனரே
மாறாத பூரண வல்லமை யுள்ளோரே
ஞான பராபரன் வஸ்துவாய்த் தோன்றினார் – இரட்சகர்

2. ஆழி அலை மிஞ்சி மோதிடவே
வீசிய காற்றை அமர்த்திடவே
வேளை அதிகாலை விந்தையாய்த் தோன்றியே
வேதனை சோதனை யாவுமே நீக்கின – இரட்சகர்

**354. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி.**

**சாவெனக் காதாயம் சல்தி விளைக்கும்**
சுவாமிஇயேசு சீவன்தாச னெனக்கே
பூவெனக்குச் சத்திரம் போன்ற வீடாமே
போவேன் பொன்னகர் நோக்கி

**பல்லவி**

போவேன் வாழ்வேனே பொன்னகரில்
சாவாம் யோர்தானைத் தாண்டி வாழவே
சாவெனக் கா தயம் சல்தி விளைக்கும்
சுவாமி இயேசு நாதரால்

2. தொல்லை மிகு லோகத் துயர் முடியும்
வல்லவரின் கை என் வாட்டம் தீர்த்திடும்
தொல்லை மிகும் சாத்தான் தொடர்ந்து வாரான்
எல்லை கடவா நாடே – போவேன்

3. மீட்ட நாதரின் பொன்மேனியைக் காண்பேன்
ஆட்டுக் குட்டியின் வெண் ஆசனம் காண்பேன்
கூட்டத் தூதரோடு கூடிப் போற்றுவேன்
குரல் கம்மா தென்றுமே – போவேன்

4. என் முன்னதாய் சென்ற இட்டர் உற்றாரை
மன்னன் வீடாம் மோட்ச வாசலில் காண்பேன்
சொர்ணவாசல் கோட்டை சோதியிற் காண்பேன்
சொந்தமாம் சுரர் நாடே – போவேன்

5. பாழ்புரியி லெங்கும் பயமே தங்கிடும்
பகைஞன் தான் வீழப் பண்ணுவா னென்றோ
வீழ்வ தில்லை சாவு வெற்றி முடியும்
மேல் வீட்டில் இனி வாழ்வேன் – போவேன்

6. வானத்தின் கீழ் வாழ்வு மாய்கை யானதே
மானிடரின் கண்ணீர் வருத்தும் மெய்யே
வானவரின் நாட்டின் வாழ்வு சதமே
மரணமதின் வாசலே – போவேன்

அட்டவணை

7. வெண்ணங்கி தரித்து மேல்வீட்டில் வாழ்வேன்
வெற்றி பெற்றோர்க்குள் என் வீதம் பெறுவேன்
கண்ணீர் துடைப்பார் தம் கரத்தா லேசு
கவலை தீர என்றும் – போவேன்

8. ஓட்ட முடிவாகும் உறக்க மாகும்
சூட்டக் கிரீடம் என் சொந்த மாகிடும்
நாட்டமாய் மீட்பர் நேர் நடத்தினோரை
நான் கண்டு மகிழுவேன் – போவேன்

9. தேகம் விட்ட என்னை செங்கரத் தேந்தி
வேகமாக தூதர் மேல் வீடேகுவார்
ஏகக் கணப் பொழுதில் இயேசு மடியில்
என்னைக் கொண்டு சேர்ப்பார் ஆமென் – போவேன்

**355. இராகம்: அமீர்கல்யாணி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**இனி நமக் கென்ன பயமேது – இயேசு**
நாதர் நம் மோடிருக்கும் போது.

**அனுபல்லவி**

மனித வடிவா யிந்த மானிலம் வந்த இயேசு
அனுதினம் நமதுட னருகி லிருக்கும்போது – இனி

**சரணங்கள்**

1. வழிதனில் பிறவிக் குருடன் – வரு
வோரிடம் பிச்சை கேட்டி ருக்க
ஒளி போலி லங்கும் இயேசுசவன் மேலிரங்கி வந்து
விழிகள் திறந்து மனம் களிக்கச் செய்தோரிருக்க – இனி

2. பெரும்பாடு கொண்ட ஒரு மாது – ஐயன்
பேணி வஸ்திரம் தொடும் போது
ஒருவரு மறியாம லுடனே உதிரம் நீங்க
வருவார் யாவர் இதயம் மகிழ்ச்சி செய்தோரி ருக்க – இனி

3. குட்ட வியாதி கொண்ட ஒருவன் – குளக்
கரையில் அனுதின மிருக்க
அட்ட திசை புகழும் ஆயனாய் அங்கு வந்து
கிட்ட அவனைத் தொட்டு கிருபை செய்தோரிருக்க – இனி

**356. இராகம்: சங்கராபரணம். தாளம்: ரூபகம்.**

**சத்தாய் நிட்களமாய் ஒருசாமிய மும்மிலதாய்,**
சித்தாய் ஆனந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே,
எத்தால் நாயடியேன் கடைத்தேறுவன் என்பவந்தீர்
அத்தா! உன்னையல்லா எனக்கார்துணை, யாருறவே?

*சத்தாய் நிஷ்களமா யொரு சாமிய மும்மிலதாய்ச்*
*சித்தா யானந்தமாய்த் திகழ் கின்றதி ரித்துவமே*
*எத்தால் நாயடியேன் கடைத் தேறுவ னென்பவந்தீர்ந்*
*தத்தா வுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.*

2. எம்மா விக்குருகி உயிரீந்துபு ரந்ததற்கோர்
கைம்மா றுண்டுகொலோ? கடைகாறுங் கையடையாய்,
சும்மா ரட்ணைசெய், சொல்சுதந்தரம் யாதுமிலேன்,
அம்மான், உன்னையல்லா எனக்கார்துணை, யாருறவே?

*எம்மா விக்குருகி யுயிரீந்துபு ரந்ததற்கோர்*
*கைம்மா றுண்டுகொலோ கடை காறுங் கையடையாய்ச்*
*சும்மா ரக்ஷணைசெய் சொல்சு தந்தரம் யாதுமிலேன்*
*அம்மா னுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே*

3. பித்தே றிச்சுழலும் செகப்பேய்பிடித் துப்பவத்தே
செத்தேன், உன்னருளால் பிழைத்தேன்மறு சென்மமதாய்;
எத்தோ டங்களையும் பொறுத்தென்றும் இரங்குகவென்
அத்தா! உன்னையல்லால் எனக்கார்துணை யாருறவே?

*பித்தே றிச்சுழலும் ஜெகப் பேய்பிடித்து துப்பவத்தே*
*செத்த னுன்னருளாற் பிழைத் தேன்மறு ஜென்மமதாய்*
*எத்தோ டங்களையும் பொறுத் தென்றுமி ரங்குகவென்*
*அத்தா வுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.*

4. துப்பார் சிந்தையிலேன் மறைந்தீட்டிய தொல்வினையும்
தப்பா தேவெளியா நடுநாளெனைத் தாங்கிக்கொள்ள
இப்பார் உய்யவென்றே மனுக்கோலமெ டுத்தஎங்கள்
அப்பா! உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

*துப்பார் சிந்தையிலேன் மறைந் தீட்டிய தொல்வினையுந்*
*தப்பா தேவெளியா நடு நாளெனைத் தாங்கிக்கொள்ள*
*இப்பா ருய்யவென்றே மனுக் கோலமே டுத்தவெங்கள்*
*அப்பா வுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.*

5. திரைசேர் வெம்பவமாம் கடல்மூழ்கிய தீயரெமைக்
கரைசேர்த் துய்க்கவென்றே புணையாயினை கண்ணிலியான்,
பரசேன் பற்றுகிலேன்; என்னைப்பற்றியப் பற்றுவிடாய்,
அரசே! உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

*திரைசேர் வெம்பவமாங் கடன் மூழ்கிய தீயரெமைக்*
*கரைசேர்த் துய்க்கவென்றே புணை யாயினை கண்ணிலியான்*
*பரசேன் பற்றுகிலே னெனைப் பற்றியப் பற்றுவிடாய்*
*அரசே யுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.*

6. தாயே, தந்தைதமர், குருசம்பத்து நட்பெவையும்
நீயே எம்பெருமான், கதிவேறிலை நிண்ணயங்காண்;
ஏ ஏ என்றிகழும் உலகோடெனக் கென்னுரிமை?
ஆயே! உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

*தாயே தந்தைதமர் குரு சம்பத்து நட்பெவையும்*
*நீயே யெம்பெருமான் கதி வேறிலை நிண்ணயங்காண்*
*ஏயே யென்றிகழு முல கோடெனக் கென்னுரிமை*
*ஆயே யுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.*

***–கென்றி ஆல்பர்ட் கிருட்டிணன்***

***இப்பாடல், H.A. கிருஷ்ணபிள்ளை பாடிய இரட்சணிய யாத்திரிகம் என்னும் காப்பியத்திலமைந்த தேவாரப் பதிகங்களில் ஒன்று: அதிலுள்ள பத்து செய்யுட்களில் இவை ஆறு செய்யுட்கள்.***

அட்டவணை

## 4. அன்பு, தேவகிருபை.

**357. இராகம்: பரசு.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**நினையேன், மனம், நினையேன் தினம்**
உனை மீட்ட இயேசுவையே.

**அனுபல்லவி**

கன மேவிய மனு வேலரைக் கன காசன சுதனை – நினை

**சரணங்கள்**

1. கவன முடன் நீடி, உனக் காக அருள் தேடி,
புவன மதில் பிறந்து திவ்ய புதுமை மிகச் சிறந்து,
தவன முறு ஆத்மா ஜீவ தண்ணீர் உண, சும்மா
பவம் நீக்கிய வானாசன பதியை, சுரர் கதியை. – நினை

2. நரக அழலாலே கெடு நாசம் வந்த காலே
உருகி, மனம் இரங்கி, தொலைத் துண்மையுடன் இணங்கி
பரமனோடு உறவாக்கி, மெய்ப்பலனும் பெறத் தாக்கி,
பெருக நலம் புரிந்தோன், மறை பேதம் இன்றி அறைந் தோன்.
– நினை

3. ஜெயமும், புத்ர சுவிகாரமும், சிறந்த நீதியும் மகா
நயந்த பரிசுத்தம் தேவ ஞானமுடன் மீட்பும்
சுயமாக்கியும் அளித்தும் தனதுயிரைப் பலிகொடுத்தும்
பயன் ஏலவே தூய ஆவியைப் பரிந்தோனையே கனிந்தே
–நினை

***– வேதநாயகம் சாத்திரியார்.***

**358. இராகம்: யமுனாகல்யாணி.** **திரிபுடைதாளம்.**

**பல்லவி**

**என் அப்பா தாய் மேய்ப்பர்**
அன்பர் குரு தெய்வம் நீயே

[அட்டவணை]

## சரணங்கள்

1. கண் விழி போலென்னைத் காத்தோனும் நீயே
கடந்த காலமெல்லாம் காவலும் நீயே
கருணைக் கடலே கடலே கடலே
மண் எனைக் கையில் வரைந்தோனும் நீயே
மட்டில்லாப் புகழ் உமக்கே - என்

2. விண் இறை நீயே வேந்தனும் நீயே
மேதினி யாவுக்கும் மேலோனும் நீயே
விண்ணோர் வீழ்ந்து போற்றும் நாதா
மண்னுல கோரும் வான் சோதி சுடரும்
வகுத்தவா வான் நாடா - என்

3. தூதர்கள் போற்றும் சுயாதிபன் நீயே
ஆதங்கம் நீக்கினோன் அருள் ஊற்றும் நீயே
வேதம் நிறை வான கோனா
கோதில்லாக் குன்றே குறைவில்லா ஒன்றே
குணமிகு நீதி நிறைவே - என்

4. அன்பர்க்குக் கிருபை அளிப்பவன் நீயே
அருணோ தயஒளி ஆனோனும் நீயே
அன்பர்க் கன்பா நண்பா நண்பா
என் பரன் நீயே எகோவாவும் நீயே
ஏழை அடியேன் எனக்கே - என்

5. அல்பா ஒமேகா ஆதி அந்தம் நீயே
அதிசய மீட்பரை அனுப்பினோன் நீயே
அருமை வேதம் அருள்செய் தோனே
அருமைப் பிதாவே அடைக்கலம் நீயே
ஆதர வற்றோர்க்கே - என்

6. துயர் காலம் என்பக்கத் துணையாவோன் நீயே
துவண்டு விழுகையில் தூக்குவோன் நீயே
தூயா ஓயா சேயா நேயா
துன்பத்தி லின்பம் துயர்காலத்தன்பா
சுத்தக் கண்ணாளா வா - என்

## 359.

### பல்லவி

**கருணா லயபீடா – எமைக்**
காரா யாமா ஜீவா கீரீடா

### அனுபல்லவி

காரணா சம்பூரணா விஸ்தீரணா உதாரணா – கருணா

### சரணங்கள்

1. எரிதழல் அதில்நெளி கிருமியதாய்
பொரிபடு சிறியனின் புகலிடமாய்
குருசெய தரிசனம் அருள் தயவாய்
சரி சரி ஒரு பர நவ மணியாய்

மரி சுதன் உனை விட மறு துணை யிலை யிலை
மன மகிழ்ந் தென்னை ஒரு மக வெனப் பிடி– கருணா

2. அரவின் கடியால் தேரையு மானேன்
அகல எரி தாமரை நிக ரானேன்
பரவும் கடல் திரணமு மானேன்
பலரும் வசையால் பகரவு மானேன்

தருவின் கனியால் பெரும் பாரமிது
தலைமேல் சுமர சதைந் தேன் பிடி – கருணா

3. வேத நாயக மேபரம
தாதையே அனை சோதரமே
ஆதரை நரா தாள் தரமே
நீதமே செய் கிருபாகரமே

ஓத உத்தமர் கீத முன் புகழ்
நாதனே எமைப் பாதுகார் – கருணா

***–இரத்தினம் பரதேசியார், திருநெல்வேலி.***

அட்டவணை

**360. இராகம்: எதுகுலகாம்போதி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**கிருபை புரிந்தெனை ஆள் – நீ, பரனே;**
கிருபை புரிந்தெனை ஆள் – நிதம்

**சரணங்கள்**

1. திரு அருள் நீடுமெய்ஞ் ஞான திரித்து
வரில் நரனாகிய மாதுவின் வித்து, – கிருபை

2. பண்ணின பாவ மெலாம் அகல்வித்து,
நிண்ணயமாய், மிகவும் தயை வைத்து, – கிருபை

3. தந்திர வான்கடி யின்சிறை மீட்டு,
எந்தை மகிழ்ந் துன்றன் அன்புபா ராட்டு. – கிருபை

4. தீமை உறும் பல ஆசையை நீக்கி,
சுவாமி, எனை உமக் காலயம் ஆக்கி, – கிருபை

5. தொல் வினையால் வரும் சாபம் ஒழித்து,
நல்வினை யேசெய் திராணி அளித்து. – கிருபை

6. அம்பர மீதுறை வானவர் போற்ற,
கெம்பீர மாய்விசு வாசிகள் ஏத்த. – கிருபை

***–மதுரநாயகம் உபதேசியார், திருநெல்வேலி.***

**361.**

**பல்லவி**

**செகமதி லுதித்த செய சோதியே – நரர்**
சேயர்கள் துதித்திடும் திருவடியே

**அனுபல்லவி**

பாரில் பரனாக நீயே பாவிகட் காய்ப்பரி வானாய்
அன்பால் எம்மை ஆட்கொண்டோனே அதிரூப சுந்தரனே
– செகமதி

அட்டவணை

**சரணங்கள்**

1. பாவ இருள் நீக்கப் பாரினிலே – பரன்
பாவிகள் பவம்போக்க பலி யானீரோ
சாபத்தை முற்றும் தொலைத்திடவே
சக்தியாக உயிர்த்திட்டீரோ
அருபா சொருபா அற்புதனே ஆனந்த பொற்பரனே – செகமதி

2. என்தன் நீதியெல்லாம் கந்தை அல்லோ – நீர்
எந்தனின் சிறப்பான தாரகமே
அன்பே ஆனந்தப் பேரொளியே ஆதி
யந்தம் இல்லாப் பரனே
கதியே நிதியே கருணாகரா காத்திடும் புகலிடமே – செகமதி

3. ஏகனே எனக்குத் திவ்ய ஆதாரமே
ஏழைஎன்னில் தாகம் கொண்டதாலே – மா
சோக மிஞ்சி வாடுறே னையா
தாக மானேன் தாரணியில்
தூயநல் நேசரைப்போல் காணுவேனோ காசினியில் காதலரே
– செகமதி

4. அன்பரே உம்மைக் கண்டு மகிழ்ந்திடுவேன் – இயேசு
அண்ணலே இன்ப மெய்ம் மணவாளரே
கன்மலைவெ டிப்பினில் தங்குமென்
உத்தமியே என்றழைக்கு சத்தம்
கேட்கும் கீதம் ஆ இன்பமே கூறிடீ ரோ அன்பரே– செகமதி

**362. இராகம்: சிந்து பைரவி. தாளம்: ஸ்திரஏகம்.**

**பல்லவி**

**தேவ கிருபை ஆசீர்வாதம்**
தினமும் எங்களில் பெருகிட

**சரணங்கள்**

1. ஆவலா யும தோய்வு நாளில்
ஆலயந்தனில் பணிந்து புகழ
பாவ அறிக்கை செய்யும் ஜனங்கள்
பரனின் கிருபை பெற்று மகிழ – தேவ

[அட்டவணை]

2. ஆவலாய் எங்கள் ஆண்குழந்தைகள்
அழகான இள மரங்கள் போலவும்
பாவையர்களாம் பெண் குழந்தைகள்
பலத்த சித்திர அரண்கள் போலவும் – தேவ

3. எங்கள் மாடுகள் பலத்தி ருக்கவும்
இடுக்க ணுள்ளே வராதிருக்கவும்
எங்கள் ஆடுகள் கிரா மங்களிலே
இலட்சங் கோடியாய் பெருகி வரவும் – தேவ

4. எங்கள் பண்டக சாலை சகல
இன்ப வஸ்துக்கள் நிறைந் திருக்கவும்
பங்க வலசை பகலின் கூக்குரல்
பதியில் என்று மில்லா திருக்கவும் – தேவ

5. ஆலயந் தனில் உமது வசனம்
அறிவிக்கும் போதக ரனைவருக் குள்ளும்
வேலை ஓய்ந்து பணியும் சபையார்
விரும்பிப் படிக்கும் சகல ருக்குள்ளும் – தேவ

6. இத்தன் மையுடன் இருக்கும் சனங்கள்
இவர்கள் தாமென உலகம் சொல்லவும்
கர்த்தர் தெய்வமென் றென்றென்றும் போற்றவும்
கண்ட சனங்கள் எம்மைச் சொல்லவும் – தேவ

7. உன்ன தங்களில் இருக்கும் தெய்வத்தின்
உயர்ந்த நாமம் மகிமைப் படவும்
இந்நி லம்சமா தானம் பெற்றிட
இட்டர் மானவர் மேலுண் டாகவும் – தேவ

8. இந்த வீட்டுக்குச் சமாதானம் நல்
இன்ப சுகங்கள் அனைத் துண்டாகவும்
சந்ததி யாய்நீ டூழி வாழவும்
சபையார் யாவரும் துதித்திப் பாடவும் – தேவ

அட்டவணை

**363. இராகம்: சேனாவதி.** **தாளம்: ரூபகம்.**

**பல்லவி**

**பாவியே, பாவியில் பாவியே, உனில் அன்புண்டோ?சொல்**
பாவியே, பாவியில் பாவியே.

**அனுபல்லவி**

கூவியே, கர்த்தரு ரைக்கிறார்; கூர்ந்துகேள், உள்ளிந்திரியமே
பாவியே, என்கிறார் இயேசு பாவியா முனையே பார்த்து
-பாவியே

**சரணங்கள்**

1. பாவத்தால் கட்டுண்டி ருந்தாயே - பராபரனுடை
கோபத்தால் காயமுங் கொண்டாயே;
தேவனை விட்டகன்றாய்; பாவ விருள் அடைந்தாய்;
பாவனையாக வுன்னையும் பவுசாக வைத்தவர் நானே.
-பாவியே

2. தாயுடை அன்பு மாறுமோ? - தன்னருமைப் பிள்ளையைத்
தயவுடன் அழைக்க மாட்டாரோ?
தாயுமே மறந்திட்டாலும், தயவை நான் மறப்பதில்லை;
நேயமே யுனை யோர்க்காலும் நினையாதே யிருப்பதில்லை
- பாவியே

3. என்னுடைய அன்பு மாறாததே - ஆகாய உயரமும்
என்னன்பை எட்டி முடியாதே,
பின்னுங்கேள்; பாதாளத்திலும் அன்பினுக் காழம் பெரியது;
எண்ணுமுன் சாவினு றுதிபோல் என்னுடை அன்புமுறுதியே,
- பாவியே

4. கிருபையின் கிரியை முடியவே - அதிசீக்கிரமாகவே
பெருமையாய் மகிமை காண்பையே
விருத்தவா சனத்திலேயே வீற்றுமே யிருப்பதற்கு
கர்த்தராம் என்னோடே நீ கனத்தபங் காளியாவாய்
- பாவியே

*-பாளையங்கோட்டை பாடல்.*

அட்டவணை

364.

**“ஆனந்தமே பரமானந்தமே” என்ற மெட்டு.**

**பல்லவி**

**பொன்னேசு தம்புரான் நன்னேச இரட்சகன்**
என்னை நேசித்துதன் சீவன் விட்டார்.

**சரணங்கள்**

1. சொர்க்கச் சிங்காசனம் சொந்தப் பிதாமடி
தூதரின் சேவையும் நீத்தெனக்காய்
ஏழையைப் போலவர் மேதினி யில்சீவித்
தேழையென் சாபத்தை ஏற்றுக் கொண்டார் – பொன்

2. அன்னையைப் போலவும் அன்புள்ள இரட்சகன்
கள்ளனைப் போலவே எண்ணப்பட்டார்,
உள்ள முருகுது நெஞ்ச முடையுது
கண்ணீர் சொரியுதென் அண்ண லுக்காய் – பொன்

3. சங்கட சாகரந் தன்னிற் சாடி யற்ப
சாதுவை இரட்சிக்கும் நேச னிதோ!
அத்தனே யணைத்து அன்பா யெடுத்துவும்
சித்தஞ் செய்யும் பிள்ளை யாக்கிடுமே – பொன்

4. பாவந் நிரம்பிய தானமதில் வல்ல
தேவ கிருபையும் பெருகிற்றே
ஆச்சரியமே மகா பாவியில் பாவிநான்
அன்பின் சொரூபியின் இராச்சியத்திலாம் – பொன்

5. பூலோக மாயையில் பேராவல் மேற்கொண்டு
காலம் வீணாய்க் கழி யாதபடி,
சாலோக இராச்சியத்தின் சொர்ணக் கிரீடத்தில்
வாஞ்சை கொள்ள ஏவும் பொன்னேசுவே – பொன்

6. பாவம் செய்யாதெனைக் காபந்து செய்திடத்
தேவ சுதனிடம் கையளித்தேன்
இராப்பகல் நீரென்னைப் பாவத்தி னின்றுக
னாவிலும் காத்திடும் தேவரீரே – பொன்

7. தேவ புத்ரன் கோடாகோடித் தூதர் சூழ
மேகங்கள் மேலவர் வேகமதாய்,
வந்திடுங் காலத்தில் அன்பாயணைத்து என்
சங்கடந் தீர்த்திடும் துங்கவனே. – பொன்

**365.**

**பல்லவி**

**அன்பிதோ! அன்பிதோ! அன்பிதோ! என்னை**
அழைத்தீ ரரசே, அருளாலே

**சரணங்கள்**

1. நாறிக்கிடந்த என் நாற்றத்தை நீக்கியதும் கிருபை
நாசணுமாகாமல் பாது காத்தணைத்து
மந்தையில் சேர்த்துக் கொண்டீரே – அன்பிதோ

2. சுத்த சலத்தினால் சுத்தி கரித்தீர், என்னைத் தமக்காய்,
மீறிப்போகும் என்தன் சிந்தை அகற்றித், தம்
சித்தத்தைச் செய்யச் செய்தீரே – அன்பிதோ

3. ஆவி யீந்து என்தன் காயம் தம்பரிசுத் தாலயமாய்,
ஆதி தேவன் என்னைச் சொந்த மாக்கிக் கொண்டார்,
என்னை பேரின்ப மெனக்கே – அன்பிதோ

4. தூய சீவியம் இப்பூலோ கத்தில் யானும் நடத்த,
தூய கீதமுடன் துயருடன் பாட,
ஏழைக்கும் கிருபை செய்தீரே! – அன்பிதோ

5. உம்மைச் சந்தித்திட, தூய உம் சாய லெனக்கருளும்,
உன்னதங்களிலே என்றும் உம்மோ டொன்றாய்
தங்கிடத் தயவருளும் – அன்பிதோ

**366. இராகம்: கமாசு.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**அன்பே பிரதானம், – சகோதர**
அன்பே பிரதானம்

அட்டவணை

### சரணங்கள்

1. பண்புறு ஞானம், பரம நம்பிக்கை,
இன்ப விசுவாசம், இவைகளி லெல்லாம். - அன்பே

2. பலபல பாடை படித்தறிந் தாலும்,
கலகல வென்னும் கைம்மணி யாமே. - அன்பே

3. என் பொருள் யாவும் ஈந்தளித் தாலும்
அன்பிலை யானால் அதிற்பய னில்லை. - அன்பே

4. துணிவுட னுடலைச் சுடக்கொடுத் தாலும்,
பணிய வன்பில்லாற் பயனதி லில்லை. - அன்பே

5. சாந்தமும் தயவும் சகலநற் குணமும்
போந்த சத்தியமும் பொறுமையுமுள்ள. - அன்பே

6. புகழிறு மாப்பு, பொழிவு பொறாமை,
பகையநி யாயம் பாவமுஞ் செய்யா. - அன்பே

7. சினமடை யாது, தீங்கு முன்னாது,
தினமழி யாது, தீமை தராது. - அன்பே

8. சகலமுந் தாங்கும், சகலமும் நம்பும்,
மிகைபட வென்றும் மேன்மை பெற்றோங்கும். - அன்பே

**367. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி.**

### பல்லவி

**பூரண கிருபையின் மயமே, தேவா,**
பொற்புச் செப்பத் தொப்பற் றதிசயமே.
ஆரண சுசெப சொரூபா, யோவா,
அடியனையே இரட்சித் தாள்.

### அனுபல்லவி

சீருச்சப் பட்சத் திரு முதலே,
சிட்டோர்க் காதரவே, யனுசாரி,
தீமைக் கட்டற்றுப் பூமக்கட் கொத்துச்,

சாமத்திற் பெத்தலே மிற்புற் கொட்டில்
மேவு ரூபா, தேவ ரூபா, மூவொரூபா, ஜீவ வா,
தேசருள் வாசநேசா சீமா, சுரர் பதியே,
மாசதிலேசு இராச பூமா, நரர் துதியே,
தேவரெலாம் நீடியடி தொழுபரா, கா, வா,
தேடரு முனிரு சரண்மலர் துணை, துணையே, –பூரண

**சரணம்**

சாதிகளுட பரவசமே, நேயா,
சத்தியத் துத்தியச் சொற்கப் பதி நிசமே,
ஆதிவினையற வருசுதா, தீயோர்க்
கருமையினோர் மத்யஸ்தா,
மா தத்துவச் சுத்தப் பரவெளியே,
வற்றா வாரிதியே யசரீரி.

வானத்துப் பொற்புக் கானத்திற் கொட்டிற்
றானத்திற் புக்கத் தானுற்றுற்பித்த
காவலா வா, மா வல்லா, ஓ! நலவா, மேலவா,
மானுவேலாசை இயேசையா மீசுர வடிவே,
பானுவே, நேச மேசியா வாச முடிவே,
மாசதிலா மூவரு மொரு தெய்வமே, நாதா,
மாயை யற வருள் புரி தினந் துதியே. – பூரண

***– வேதநாயகம் சாத்திரியார்.***

**368.**

**பல்லவி**

**எங்கே தேடுவேன் – நான்**
எங்கே தேடுவேன்
என் நேச இயேசுவை – நான்
எங்கே தேடுவேன்

அட்டவணை

**சரணங்கள்**

1. உன்னத இராசரே – என்
உத்தம நேசரே
உந்தன் அன்பாலே – என்தன்
உள்ளம் உருகுதே – எங்கே

2. மலையின் நடுவிலோ – நேசரை
மல்லிகை வனத்திலோ
மாடி மேடையிலோ – எந்த
மன்னவன் மத்தியிலே – எங்கே

3. அழகாய் மான்போல – நேசர்
அலைந்து வாராரே
ஆசைக் குமாரருள் – ஆ என்
அன்பர் ஒருவரே – எங்கே

4. காட்டு மரங்களுள் – நேசர்
கிச்சிலி மரம்போலும்
கமழும் மலருள் – நேசர்க்
கீந்த சீவியம் – எங்கே

5. அழகாய் வந்தவர் – நேசர்
அன்பு மிகுந்தவர்
அறிவு மிகுந்தவர் – அவர்
அனைத்தும் அறிபவர் – எங்கே

6. காலையில் தேடுவேன் – நேசரைக்
கண்டு மகிழுவேன்
கருத்தாய்ப் பாடுவேன் – நேசரின்
காதலை நாடுவேன் – எங்கே

**369. இராகம்: குந்தளவராளி. தாளம்: ஆதி.**

**தெய்வன்பின் வெள்ளமே, திருவருள் தோற்றமே,**
மெய்ம்மன தானந்தமே!
செய்யாநின் செம்பாதம் சேவிக்க இவ்வேளை
ஐயாநின் அடிபணிந்தேன்

2. சொந்தம் உனதல்லால் சோரவழி செல்ல
எந்தாய்துணி வேனோயான்?
புந்திக் கமலப் பொற் பூமாலை கோர்த்து வுன்
பொற்பதம்பி டித்துக்கொள்வேன்.

3. பாவச் சேற்றில் பலவேளை பலமின்றித்
பாவியான் தவறிடினும்,
கூவிவி ளித்துன்தன் மார்போட ணைத்தன்பாய்
கோதுபொ றுத்த நாதா?

4. மூர்க்ககுணம் கோபம் மோகம்சிற் றின்பமும்
மேற்கொள்ளும் மாம்ச ஏக்கம்
தாக்கியான் தடுமாறித் தயங்கிடும் வேளையில்
தற்பரா தற்காத் தருள்வாய்

5. ஆசைபா சம்பெற் றுவலாய் நின்திருப்
பூசைபீ டம்படைப்பேன்;
மோச வழிதனை முற்றும்அ கற்றிஎன்
முன்னவாநி னைத்தொழுவேன்!

6. மரணமோ, சீவனோ, மறுமையோ, பூமியோ,
தருணமோ, வருங்காலமோ
வேறு சிருட்டியோ, உயர்ந்ததோ, தாழ்ந்ததோ,
பிரித்திடு மோதெய்வன்பை?

**370.**

**பல்லவி**

**கிருபையே உன்னை இந்நாள் வரையும் காத்தது**
என் கிருபையே –

**சரணங்கள்**

1. பாதையில் கஷ்டம் அணுகிடும் போது
பங்கம் வராதே நான் உன்னைத் தாங்கினேன்
பெலன் ஈந்தேன் கரத்தால் தூக்கினேன் உன்னைநான்
எந்தன் அன்பினால் உன்னை நிறுத்த – கிருபையே

2. சோதனையாலே சோர்ந்திடும் போது
சொந்த மெனநான் உன்னைச் சந்தித்தேன்
சோதியை உன்முன்னில் சொலித்திடச் செய்திட்டேன்
செயகீதங்கள் பாட வைத்திட்டேன் – கிருபையே

3. ஏகனாய் நீயும் சஞ்சலத் தாலே
ஏங்கும் போதுஉன் அண்டை வந்திட்டேன்
ஏற்ற நல்துணையை ஈந்திட்டேன் அல்லோ நான்
என்றும் உன்னை என் சொந்தமாக்கினேன் – கிருபையே

4. செயமான பாதை சென்றிடச் செய்தேன்
செப்பமாக உன்கரம் பிடித்தேன்
செய செய கீதங்கள் தொனித்திடச் செய்தேனே
சேவை செய்யவும் கிருபை தந்தேனே – கிருபையே

5. என்றென்று மாக என்கிருபை காட்ட
கொண்டேன் உன்னை இம்மண்ணில் பிரித்து
என்அரும் மகனே காப்பேனே உன்னைநான்
உன் தந்தை நான் உன்னை விடேனே – கிருபையே

**371.**

**பல்லவி**

**அன்பே! அன்பே!! அன்பே!!**
ஆருயிர் உறவே,
ஆனந்தம்! ஆனந்தமே!

**சரணங்கள்**

1. ஒருநாள் உம்தயை கண்டேனையா,
அந்நா ளென்னை வெறுத்தே னையா,
உம்தயை பெரிதையா – என்மேல்
உம் தயை பெரிதையா.

2. பரலோ கத்தின் அருமைப் பொருளே,
நரலோகரி லன்பேனையா,
ஆழம் அறிவேனோ – அன்பின்
ஆழம் அறிவேனோ?

3. அலைந்தேன் பலநாள் உமையுமறியா
மறந்தே திரிந்த துரோகியை,
அணைத்தீர் அன்பாலே – எனையும்
அணைத்தீர் அன்பாலே.

4. பூலோ கத்தின் பொருளில் மகிமை
அழியும்; புல்லின் பூவைப்போல்,
வாடாதே ஐயா – அன்பு
வாடாதே ஐயா.

5. இப்பா ரினில்உம் அன்பின் இனிமை,
இயம்பற் கியலா தாகில் யான்,
இசைக்கவும் எளிதாமோ – பரத்தில்
இசைக்கவும் எளிதாமோ.

**372.**

**பல்லவி**

**சிலுவை நிழலில் அனுதினம் அடியேன்**
சாய்ந்திளைப் பாறிடுவேன் – ஆ! ஆ!

**அனுபல்லவி**

சிலுவையின் அன்பின் மறைவில்
கிருபையின் இனிய நிழலில்
ஆத்தும நேசரின் அருகில்
அடைகிறேன் ஆறுதல் மனதில் – சிலுவை

**சரணங்கள்**

1. பாவப் பாரச் சுமையதால் சோர்ந்தே
தளர்ந்தஎன் ஜீவியமே
சிலுவை யண்டை வந்ததினால்
சிறந்த சந்தோசங் கண்டதினால்
இளைப்படை யாது மேலோகம்
ஏகுவேன் பறந்தே வேகம் – சிலுவை

அட்டவணை

2. இன்பம் சுரந்திடும் திருமொழி கேட்டேன்
இன்னல்கள் மறந்திடுவேன்
திருமறை இன்னிசை நாதம்
தேனிலு மினிய வேதம்
தருமெனக் கனந்த சந்தோசம்
தீர்க்குமென் இதயத்தின் தோசம் – சிலுவை

3. எவ்வித கொடிய இடருக்கு மஞ்சேன்
இயேசுவைச் சார்ந்துநிற்பேன்
அவனியில் வியாகுலம் வந்தால்
அவரையே நான் அண்டிக் கொண்டால்
அலைமிக மோதிடும் அந்நாள்
ஆறுதல் அளிப்பாரே சொன்னால் – சிலுவை

**373. இராகம்: இந்துஸ்தானி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**வாரீரோ? வினை தீரீரோ? எனைக்**
காரீரோ? சீவன் தாரீரோ, இயேசு

**அனுபல்லவி**

வாரேனென்றீர், வரந் தாரேனென்றீர், சுவாமீ;
பாரினி லெயெனக்கு யாருமில் லைதுணைக்கு – வாரீரோ

**சரணங்கள்**

1. தேனே, மரிமகனே, தேடி மறுகுங் கோனே,
சேனைகளின் சீமோனே, சிந்தை கலங்கி நானே
கானகமே மேவும் மானது போலானேன்;
வானகம் போன தேவா, ஏனோ வரத் தாமதம்? – வாரீரோ

2. அட்ட திக்கெங்கு மென்னைத் துட்டப் பாசாசுக் கூட்டம்
இட்டப் படுத்த வல்லோ கிட்ட வளையுது, பார்!
அடுத்தாலோ, அம்பைத் தொடுத்தாலோ என்ன!
அடுபடை யாகநின்று தடுபடை செய்வீர், இயேசு,– வாரீரோ

அட்டவணை

3. கோழிதன் குஞ்சுதன்னை கூவியழைக்கு நேராய்
கூளி எனை யிழுத்து ஆழியி லாக்கிடாமல்
கூப்பிட்டீரே, எனக்கு மாப்பிட்டீரே! ஒதுங்க
தாப்பிட்டீரே, வர வாக்கிட்டீரே! பின்னை. – வாரீரோ

4. காணாத ஆட்டைத் தேடிக் காடெங்கும் சென்ற கோன்நீர்
கண்டு பிடித்த ஆட்டைக் கொண்டு தொழுவஞ் சேர்க்க
கருத்துடனே மிக உரித்துடனே இரு
கரத்திலேந்தி வலப் புறத்தில் வைப்பீர் திண்ணம். – வாரீரோ

5. வீடு எனக்குச் செய்ய மேலோகம் போன தேவா
கூட இருத்தி வைக்கக் கூப்பிட வாரே னென்றீர்;
கொண்டு வருவீர் முடி, நின்று வருவீர் நொடி;
கண்டு மகிழ்வேன் கூடி, நின்று புகழ்வேன் கெடி. – வாரீரோ

***–மறைத்திரு M. தேவசகாயம், பொம்மன்பட்டி, மதுரை.***

**374. இராகம்: உசேனி.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**இயேசு நேசிக்கிறார், இயேசு நேசிக்கிறார்**
இயேசு என்னையும் நேசிக்க யான் செய்த
தென்ன மாதவமோ (2)

**சரணங்கள்**

1. நீசனாம் மெனைத்தான் இயேசு நேசிக்கிறார்
மாசிலாத பரன் சுதன்றன் முழு
மனதால் நேசிக்கிறார். – இயேசு

2. பரம தந்தை தந்த பரிசுத்த வேதம்
நரரா மீனரை நேசிக்க றாரென
நவில லாச்சரியம். – இயேசு

3. நாதனை மறந்து நாட்கழித் துலைந்தும்
நீதன் இயேசெனை நேசிக்கி றாரெனில்
நித்தம் ஆச்சரியம் – இயேசு

4. ஆசை இயேசுவென்னை அன்பாய் நேசிக்கிறார்
அதை நினைந்தவ ரன்பின் கரத்துளே
ஆவலாய்ப் பறப்பேன் – இயேசு

5. இராசன் இயேசுவின்மேல் இன்ப கீதஞ் சொலில்,
ஈசன் இயேசெனைத் தானேசித் தாரென்ற
இணையில் கீதஞ் சொல்வேன். – இயேசு

***–திரு. R. பிரேக்கன் ரிட்ஜ், யாழ்ப்பாணம்.***

**375.**

**பல்லவி**

**கிருபைவேண்டும் நாதா – இயேசு வேஉம் திவ்ய**
கிருபைவேண்டும் நாதா – இவ்வாரா தனையில்

**சரணங்கள்**

1. உம்கிருபைதான் வேண்டும் சொர்க்கலோக இராசாவே
உம்கிருபை அல்லாது எங்களால் ஆகாது – கிருபை

2. ஏழு பிசாசுகள் ஓட்டியே மரியாளை
இயேசுவே நேசித்து அன்பால் நிரப்பிய – கிருபை

3. இருவராம் சீடரின் சஞ்சலங்கள் நீக்கி
இருதயம் குளிர்ந்திட இனிமையாய்ப் பேசின – கிருபை

4. பாபத்தை இனிமேல் செய்யாதே என்றுமே
பாவியாம் ஸ்திரிக்கு நேசமாய்க் கூறின – கிருபை

5. பெந்தேகோஸ்தே நாளில் அன்பராம் சீஷர்மேல்
உந்தன் வரங்களை மாரிபோல் பொழிந்த – கிருபை

6. தாசனாம் தேவானின் சாயலை மாற்றின
நேசமாம் கிருபையை எம்மேலும் ஊற்றிடும் – கிருபை

7. வருகிறேன் சீக்கிரம் என்றுரைத்த நேசா
தருகிறேன் என்னையே ஆசீர்வ தித்திட – கிருபை

8. அடியராம் ஏழைகள் உம்மைச் சந்தித்திட
முடிவு வரைக்கும், காத்திடும் கிருபையால் – கிருபை

அட்டவணை

## 6. சமாதானம், சந்தோசம்

**376. இராகம்: ஜங்சளா. தாளம்: ஆதி.**

**கண்ணிகள்**

**என்மேலுள்ள நின்சர்வ நன்மைகட்காக நான்**
என்ன செய்வேன் உமக்கென் இயேசுபரா? – இப்போம்

2. நன்றியால் என்தன் உள்ளம் பொங்கி வழியுதே
இன்றுவ ரையுமென்னைக் காத்தாலே – தேவா

3. பாவத்தி னின்று என்தன் ஆவி உயிர்ப்பிக்க
சாபசிட்சை சகித்த தேவ சுதா – மகா

4. என்னை அனுதினம் அன்போடு நடத்திடும்
பொன்னேசுவே அனந்தம் தோத்திரமே – என்தன்

5. முற்று முடிய என்னைக் காத்து நடத்தியே
சத்துவ மீந்திடும்நல் நண்பன் நீரே – திரு

6. நாதன் வலபுறத்தில் நாதன்நீர் ஏழைக்காய்
பாதம் வேண்டியே நிற்கும் பாக்கியனே – பொன்னின்

7. குற்றம் குறைகளின்றிக் கோதில்லாச் சோதியில்
முற்றும் எனை நிறுத்த வல்லவனே – தேவா

8. இந்நிலம் தன்னிலேழை தங்கிடும் நாளெல்லாம்
ஏத்துவே னேஉன்திரு நாமமதை – ஏழை.

**377. இராகம்: தோடி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**இயேசும கேசனைநான் – சிந்திப் பதென்**
உள்ளத்தில் ஆனந்தமே

**சரணங்கள்**

1. ஈசன் திருச்சந்நி தானந்தனி லமர்ந்து
இயேசுவின் திருமுகத்தை – என்அ கத்தினில்
எண்ணிக்களித் திடுவேனே – இயேசு

2. தேவதூத ராயினும் செகத்திலுள் ளோராயினும்
திருமுக தரிசனத்தை – குறை களின்றி
செப்பவல்ல வரல்லவே – இயேசு

3. மானிடரை யெல்லாம் வானவ ராக்கிட
வானவர் மேதினியில் – மனுடனாய்
வந்து தித்த தென்ன விந்தை – இயேசு

4. பாவச் சுமையினால் பாரம் சுமந்தோர்க்குப்
பாரினில் கிடையா இன்பம் – அளிப்பவர்
பார்த்திபன் இயேசு வல்லோ – இயேசு

**378.**

**பல்லவி**

**துதி ஓயாமல் செலுத்திடுவேன் – பரி**
சுத்தரராம் இயேசு எனக்கே – புவி
எங்கும் அவர் நாமம் முழங்க.

**சரணங்கள்**

1. பாவர் வலையில் மாளும் பாவியே வா இவ்
வேளையிலே துதிக்க உன்பரனை
பார் அதோ! பார் உன் நேசர் தொங்குகிறார்
பாதகரின் தீர்ப்பைத் தன்னில் தாங்கியே தான்மாள்கிறார்.
– துதி

2. நோயால் வாடியே மாயும் ரோகியே
தேவசுதன் உன்நோய் சுமந்தனரே
பார் அதோ!பார் கல்வாரியிலே சாபம் நீக்க
பாவ மாகி ஈந்தாரே தம் சீவனையே உனக்காய் – துதி

3. ஆதி முதலாக வீழ்ந்த பேதையே வா
அண்டியே துதிக்க உன் நேசரை
தாழ்த்தினாரே உன் தேவன் உனக்காய்
பாதாளம் வரையும் சென்றே செயித்தார் உன்னாசையால்
– ஆதி

4. ஆதரவின்றி வாடும் தோழனே, பாராய்!
உன் நேசர் நிற்கிறார் உன் அண்டையே
கைவிட்டாலும் தன் கர்த்தன் கையிலே
கருத்துடன் தனதாவி ஈந்ததால் செயித்தாரே – ஆதி

5. வானம் புவியும் வாழும் சிருட்டியும்
வாழ்த்திடாயுன் மீட்படுத்திடுதே
வென்றார்க்கும் தொனியே அல்லேலூயா
அம்பரம் நின்றுகேட்கு மந்நாளிலே சேர்ப்பாரே – ஆதி

**379.**

**பல்லவி**

**பார்ப்பேனே என் நேசரை நான்,**
ஆர்ப்பரிப்பேன் கூடி யந்நாள்.

**அனுபல்லவி**

தீர்த்தார் என் கண்ணீரையெல்லாம்
சாற்றுவேன் நான் துதியே, துதியே. – பார்ப்பேனே

**சரணங்கள்**

1. பாரில் என்தன் பாவம் தீர்த்தார்,
பரத்தில் என்தன் ஆவல் தீர்ப்பார்,
அகத்திலே சந்தோசமளித்தார்,
இகத்தி லென்றும் துதியே, துதியே, – பார்ப்பேனே

2. ஆயிரங்களிற் சிறந்தோர்,
ஆத்துமாவின் நேசரவர்,
ஆபத்திலென் தோழனவர்,
நாமத்திற்கே துதியே, துதியே. – பார்ப்பேனே

3. எண்ணிறந்த தூதர் கூட்டம்
விண்ணினின்று போற்றும் நாளில்,
அண்ணல் இயேசின் அடி பணிந்து,
நின்று சொல்வேன் துதியே, துதியே. – பார்ப்பேனே

4. மண்ணின் சாயல் மாறி யானும்,
மகிமை யேறி மாசற்றோனாய்,
மன்னனோடு மணவறையில்,
மகிழ்வேன் என்றும் துதியே, துதியே. – பார்ப்பேனே

***–இரத்தினம் பரதேசியார், திருநெல்வேலி.***

**380.**

**பல்லவி**

**சீவனைக் கொடுப்பேன் சீவாதி பதிக்கே**
சீவனைக் கொடுப்பேன் நானே

**சரணங்கள்**

1. பாடும் பறவைகள் பாடாமல் போகும்
வீடு தோட்டம் காடாகும் இந்த – சீவனைக்

2. முகத்தின் அழகும் முழுவதும் மறையும்
செகத்தின் அழகும் அழியும் இந்த – சீவனைக்

3. நரரின் நட்பால் நட்டமே ஏற்படும்
பரனின் நட்பால் வரும் நன்மை இந்த – சீவனைக்

4. மரணம் வருவது மறுக்கா நிச்சயம்
தருணங் கிடைப்பத சாத்தியம் இந்த – சீவனைக்

5. ஆடையா பரணம் அழிந்தே போகும்
கூட கோபுரம் குழி யிலாழும் இந்த – சீவனைக்

6. இன்புறும் பாவங்கள் இங்கே யிருக்கும்
இந்தச் சடலம் மண்ணாகும் இந்த – சீவனைக்

7. அல்லேலூ யாவை அறிவிப்ப தாலே
இல்லாத இன்னல் வாராதே இந்த – சீவனைக்

அட்டவணை

**381. இராகம்: நவரோஜ். தாளம்: ஏகம்**

**என்னஎன் ஆனந்தம், என்னஎன் ஆனந்தம்**
சொல்லக் கூடாதே
மன்னன் கிறிஸ்துஎன் பாவத்தை எல்லாம்
மன்னித்து விட்டாரே

2. கூடுவோம் ஆடுவோம் பாடுவோம் ஒன்றாய்
மகிழ்கொண் டாடுவோம்;
நாடியே நம்மைத் தேடியே வந்த
நாதனைத் தோத்தரிப் போம்

3. பாவங்கள் சாபங்கள் கோபங்கள் எல்லாம்
பரிக ரித்தாரே;
தேவாதி தேவன்என் உள்ளத்தில் வந்து
தேற்றியே விட்டாரே

4. அச்சயன் பட்சமாய் இரட்சிப்பை எங்களுக்
கருளின தாலே
நிச்சயம் சுவாமியைப் பற்றிய சாட்சி
பகர வேண்டியதே.

5. வெண்ணங்கி பொன்முடி வாத்தியம் மேல்வீடு
செயக் கொடியுடனே
மண்ணுலகில் வந்து விண்ணுலகில் சென்ற
மன்னனைத் தோத்தரிப் போம்.

**382. இராகம்: செஞ்சுருட்டி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**இவராலே யல்லோ பரதேசி யாகினே னையா**
இனந்தானே சகியுன்மனங் கல்லோ என்னோடு வா சும்மா

**அனுபல்லவி**

ஏகாம்பர சோதிபரன் இவர் என்மேல் தயாபரராம் – இவராலே

**சரணங்கள்**

1. இனமும் சனமும் பணமும் கனமும் எனக்கோர் பெரிதல்ல
–இவர்
குணமும் மனவிற் பனமும் பிரியா வனமும் என்சொல்ல
– இவராலே

2. சுந்தர சௌந்தர கந்த நிறைந்தவர் என்தனைப் புரந்தனராம்
– எனை
அப்புறம் இப்புறம் எப்புற முஞ்சுமந் தாண்டு சுமந்தனராம்
– இவராலே

3. சோலையில் வந்தவர் சாலை யிலாவழி கால்கடவே நடந்தார்
– கொடும்
தோசியாம் மாசுப் படிந்தவள் என்தனை சோபனமாய் மணந்தார்
– இவராலே

4. சொல்லம் சொல்சொல் இல்லை இலைஇலை நல்லம்பல
குன்றாம் – ஜல்
திம் திம் திம் திமி ஜெந்திரி கிடவன் திரு நட எம்பலனாம்
– இவராலே

5. எத்தனை பாக்கியம் எத்தனை இன்பம் எனக்கிதே யானந்தம்
– இராச
ரத்தினம் கவியைக் கற்கண்டதாக இவர் கண்டதாலே சொந்தம்
– இவராலே

***–இரத்தினம் பரதேசியார், திருநெல்வேலி.***

**383.**

**பல்லவி**

**என்ன சந்தோசம் என்ன சந்தோசம்**

என்ன சந்தோசம், என்ன சந்தோசம்

### அனுபல்லவி

மணவாட்டியின் பாட்டைக் கேட்டால் என்ன சந்தோசமே

### சரணங்கள்

1. என்ன வினோதமே அண்டி வந்து பாருமே
அண்ணலுக் குகந்ததோர் கன்னிகையின் ரூபமே
மின்னல் போ லிலங்கிடுதே விண்ணிலழ குடனே – என்ன

2. மன்னனோடு மகிழுவோம் மனையிலேறி வாழுவோம்
கன்னியர்கள் யாவரும் காதலனைக் காணுவோம்
அன்னையோடு அனந்தகாலம் அழிவில்லா திருப்போம்
–என்ன

3. பெருகுதேபே ரின்பமே பேதைகட்கு இன்றுமே
பேருலகில் யாவுமே வீணதாகத் தோணுதே
மேலுலகில் உண்டெமக்கு என்னபே ரின்பமே – என்ன

4. ஆகா இது அதிசயம் அளவில்லாத பரவசம்
சாவில்லாத நித்தியம் நாமுமர சாளுவோம்
பாவமணு காத பாலன் சாயல் பெற்றுவாழுவோம் – என்ன

## 384.

**தொண்டு செய்வேன், என்றும் – தொண்டு செய்வேன்**
தொண்டு செய்வேன், என் ஆண்டவர்க்கே
அவர் அழைப்பை அனுசரித்துத்
தொண்டு செய்வேன், என் ஆண்டவர்க்கே!

### சரணங்கள்

1. வீடானாலும் காடானாலும்
தொண்டு செய்வேன், என் ஆண்டவர்க்கே – தொண்டு

2. கந்தையானாலும், நிந்தையானாலும்
தொண்டு செய்வேன், என் ஆண்டவர்க்கே – தொண்டு

அட்டவணை

3. அடியானாலும், மிதியானாலும்
தொண்டு செய்வேன், என் ஆண்டவர்க்கே - தொண்டு

4. மழையானாலும், வெயிலானாலும்
தொண்டு செய்வேன், என் ஆண்டவர்க்கே - தொண்டு

5. துன்பமானாலும் இன்பமானாலும்
தொண்டு செய்வேன், என் ஆண்டவர்க்கே - தொண்டு

6. தனித்தானாலும் கூட்டமானாலும்
தொண்டு செய்வேன், என் ஆண்டவர்க்கே - தொண்டு

**385. இராகம்: சங்கராபரணம். தாளம்: ஆதி.**

**பல்லவி**

**தீம் தோமென நடனம் செய்குவோம்**
தீம் தோம் தசம்

1. தம்புரு கின்னரம் சாலர்வீணை மிர்தங்கம்
சாரங்கிச் சுரமண்டல சங்கீத மெட்டுடனே - தீம்

2. கெம்பீரத் தொனியாய்க கிடுகிடெக் காளமாய்
கேரூபின் சேராபீ னோடு கிறிஸ்துவின் சமுகத்தில் - தீம்

3. சுத்தரோடு சுத்தராய், தூதரோடு தூதராய்
பக்தியுடன் துதிபாடி நாதனையே முத்தம்செய் - தீம்

**386. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி.**

**ஆனந்தம் பாடிடுவோம், அமலா திபர்க்கே**
ஆனந்தம் பரமானந்தம் கொண் டாடிடுவோம்
ஆம் ஆம்! இத்தினம் மகிழ்வோம்
இத்தினம் மகிழ்வோம், இத்தினம் மகிழ்வோம்!

2. சங்கீதம் பாடிடுவோம் சுவாமி இயேசுவுக்கே
சங்கீதம் ஓர் இங்கிதம் பாடிடுவோம்
ஆம் ஆம்! இத்தினம் மகிழ்வோம்
இத்தினம் மகிழ்வோம், இத்தினம் மகிழ்வோம்!

3. தூதரோடு கூடித் துதிசெய்வோம்
சுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரெனவே
ஆம் ஆம்! இத்தினம் மகிழ்வோம்
இத்தினம் மகிழ்வோம், இத்தினம் மகிழ்வோம்!

4. ஆமென் அல்லேலூயா இயேசுபரர்க்கே
அல்லேலூயா அல்லேலூயா பாடிடுவோம்
ஆம் ஆம் இத்தினம் மகிழ்வோம்
இத்தினம் மகிழ்வோம், இத்தினம் மகிழ்வோம்!

***–இரத்தினம் பரதேசியார், திருநெல்வேலி.***

**387.**

**“சுந்தர மேசையா” – என்ற மெட்டு**

**பல்லவி**

**ஆனந்தமே பர மானந்தமே – இயேசு**
அண்ணலை அண்டினோர்க் கானந்தமே.

**சரணங்கள்**

1. இந்தப் புவி ஒரு சொந்தம் அல்ல என்று
இயேசு என் நேசர் மொழிந் தனரே
இக்கட்டு துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பங்காய் கிடைத்திடினும் – ஆனந்தமே

2. கர்த்தாவே நீர் என்தன் காருண்யக் கோட்டையே
காரண மின்றி கலங்கேனே யான்?
விசுவாசப் பேழையில் மேலோகம் வந்திட
மேவியே சுக்கான் பிடித்திடுமே – ஆனந்தமே

அட்டவணை

3. என்உள்ளமே உன்னில் சஞ்சலம்ஏன் வீணாய்?
கண்ணீரின் பள்ளத்தாக் கல்லோஇது
சீயோன் நகரத்தில் சீக்கிரம் சென்றுநாம்
செய கீதம் பாடி மகிழ்ந்திடலாம் – ஆனந்தமே

4. கூடார வாசிக ளாகும் நமக்கிங்கு
வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ?
கைவேலை யல்லாத வீடொன்றை மேலேதான்
செய்வேன் எனச்சொல்லிப் போகலையோ – ஆனந்தமே

5. துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர்இவை
தொண்டர் எமைஅண்டி வந்திடினும்
சொல்லி முடியாத ஆறுதல் கிருபையைத்
துன்பத்தி னூடே அனுப்பிடுவார் – ஆனந்தமே

6. இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்
ஏழை வெகுவாய்க் கலங்கு றேனே
என்நேசர் தன்முக ஜோதியதே யல்லால்
இன்பம் தரும்பொருள் ஏது மில்லை – ஆனந்தமே

**388. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**சிலுவையை நான் விடேன்,**
சிலுவையை நான் விடேன்.

1. என் மீட்பர் சென்ற பாதையில் போக ஆயத்தமா?
கொல்கதா மலை வாதையின் பங்கைப் பெறுவாயா?

2. ஊரார் இனத்தார் மத்தியில் துன்பம் சகிப்பாயா?
மூர்க்கர் கோபிகள் நடுவில் திடனாய் நிற்பாயா? – சிலுவையை

3. தாகத்தாலும் பசியாலும் தொய்ந்தாலும் நிற்பாயா?
அவமானங்கள் வந்தாலும் சிலுவை சுமப்பாயா? – சிலுவையை

4. பாவாத்துமாக்கள் குணப்பட நீ தத்தம் செய்வாயா?
கோழை நெஞ்சர் திடப்பட மெய் யுத்தம் செய்வாயா?
– சிலுவையை

5. லோகத்தார் மாண்டு போகிறார் மெய் வீரர் இல்லாமல்,
பார் மீட்பர் சீவனை விட்டார் தொங்கிச் சிலுவையில்.
– சிலுவையை

**389.**

**“ஆனந்தமே பரமானந்தமே” – என்ற மெட்டு**

**பல்லவி**

**சுந்தர மேசையா உன் திரு நாமத்தை**
எந்த நாளும் போற்றிக் கொண்டாடுவேன் – நின்
இன்ப சன்னதிமுன் நின்றாடுவேன்

**அனுபல்லவி**

அந்தி சந்தி மத்தி யானங்கள் சாமங்கள்
அல்லும் பகலும் நான் ஆனந்திப்பேன் – சுந்தர

**சரணங்கள்**

1. இந்த உலகத்தில் பங்கப் படாமல்
இருந்து தவம்செய்து அஞ்சலிப்பேன்
அந்தர மானுவேல் என்செல்வ மேஎன
ஆசீர்வா தம்பெறப் பஞ்சரிப்பேன் – சுந்தர

2. ஆவிதேகம் இரண்டும் தாவிஉனைத் தேடி
ஆறுதல் நாடுதே, கார் ஐயனே!
பாவிஎன்று தள்ளிக் கோபிக்காதே எனில்
பட்சம்வைத் தன்பாய் இரட்சியும் – சுந்தர

3. உன்திரு புண்ணியம் ஆனந்தக் காருண்யம்
உறுதி விசுவாசம் எனக்கதுவே
என்தவம் கவனம் செபம்என் றென்றுமே
உன்சமு கத்திற்குள் வந்ததுவே – சுந்தர

அட்டவணை

**390. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**ஆனந்தம் ஆனந்தமே – ம**
கானந்தம் ஆனந்தமே – பே
ரானந்த மானந்தமே – மோட்
சானந்த மானந்தமே

**அனுபல்லவி**

மணியா ரமலர் நனியா ரருளால்
இனிதாய் மனமகிழ் தினமிதிலே – ஆனந்தம்

**சரணங்கள்**

1. நம் காசினி மீதினிலே–எம்
ஆயுசு காலமெல்லாம் – வெம்
தோசி பாவி எனக்கும் – உம்
ஆசிடை அருளினதால் –
மணியா ரமலர் நனியா ரருளால்
இனிதாய் மனமகிழ் தினமதிதிலே – ஆனந்தம்

2. அனுதின ஆகாரமும் – எமக்
கினிய நற் சீருடையும் – தினம்
ஆன்ம உடல் சுகமும் – நாம்
மணியா ரமலர் நனியார் அருளால்
இனிதாய் மனமகிழ் தினமிதிலே – ஆனந்தம்

3. நித்திய சீவனுடன் – ஒரு
முத் தொழில் இராச்சியமும் – நம்
கர்த்தனின் கருணையினால் – தரச்
சத்யவாக் கருளினதால் –
மணியா ரமலர் நனியார் அருளால்
இனிதாய் மனமகிழ் தினமிதிலே – ஆனந்தம்

அட்டவணை

**391. இராகம்: செஞ்சுருட்டி.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**பரிசுத்தர் பரிசுத்தரே இயேசையா உம்மைப்**
பாடுவேன் பாடுவேன் நானே!

**அனுபல்லவி**

கடைக் கண்ணால் பாரும் என்னை
படைத்தப ராபரனே – பரிசுத்தர்

1. திசை அறியாமல் தியங்கி இயேசையா சுவாமி
தெருக்க ளெல்லாம் அலைந்தேன் நான்
மனங்கசந் தழுகையில் மாளிகை காட்டினாரே – பரிசுத்தர்

2. பாவச் சுமைகள் சுமந்தேன், இயேசையா சுவாமி
பாரினிலே வெகு நாளாய்
பாவி நான் வந்தேன் என்தன் பாரம் அகற்றிவிடும் – பரிசுத்தர்

3. கட்டுக ளோடே வந்தேன் இயேசையா சுவாமி
திட்டி வாசல் திறந்தாள்வாய்
பட்ட துயர் நினைத்தால் எட்டின தற்புதமே – பரிசுத்தர்

4. விரைவுடன் வழி நடக்க இயேசையா சுவாமி
உலகிடர் படைநடு நடுவானேன்
எதிர்த்தால் இனி விடுமோ ஏகன் கிருபை தந்தால் – பரிசுத்தர்

***–திரு. C. பால் அவர்கள்.***

**392.**

**பல்லவி**

**மகிழ்வோம் இயேசுவில் மகிழ்வோம் – பரன்**
மகிமையுற்றுமே மகிழ்வோம்

அட்டவணை

**அனுபல்லவி**

மகிழ்வோம் மகிழ்வோம் மகிழ்வோம் மகிமையில் மகிழ – மகிழ்

**சரணங்கள்**

1. வானில் யாவரும் மகிழ – இயேசு – வாருமே என்றுமே பகர
மானு வோர்க்கொரு சிகரம் – மன – தாரத் தற்பர னருள
மகிமைக் கனமும் மகிமையில் மிகவும் மகிழ – மகிழ்வோம்

2. சுத்த சீவிய முடைய – தேவ – புத்திரர் துலங்கிடவே
சர்வ சிருட்டிக ளுடைய – மகா – கர்மங் களகன் றகல
மகிழும் தினமும் மகிபரின் தினமும் வரவே – மகிழ்வோம்

3. அடிமை யானவர் கூடி – பரன் – அளித்த பொன் முடி சூடி
ஆயிர மாண்டுக ளாக – கடல் – மாறி யேஅர சாள்
மயிலும் குயிலும் ஆடும் புலியுடன் வாழ – மகிழ்வோம்

4. வானம் பூமியு மகல – நவ – வானம் பூவுமே நிகழ
சாபம் பாவமும் சகல – கடும் – நோயு மோடியே விலக
சுகமும் செயமும் சகலரும் சுகித்து மகிழ – மகிழ்வோம்

5. பொன்னால் வீதிக ளுடைய – அரும் – சொல்லால் உரைப்பதற்கரிய
மின்னும் வச்சிர ஒளியே – நரர் – கண்டு களித்திடு மருளே
கண்ணீர் கவலையும் நண்ணா நகரில் மகிழ – மகிழ்வோம்

6. பளிங்கு போல்சீவ நதியே – இரு – கரையும் சீவனின் மரமே
பசியே தாகமு மிலையே – அங்குப் – புசிக்க சீவனின் கனியே
புசிப்போம் ருசிப்போம் இயேசுவில் நித்தியம் மகிழ – மகிழ்வோம்

7. சுத்த ஆவியும் சுதனும் – செய்த – மீட்பின் செயலைப் பரனும்
மற்றும் தூதர் கணமும் – அங்கு – உற்று உள்ளம் மகிழ
போற்றிப் புகழ்வோம் நூதன செயலில் மகிழ – மகிழ்வோம்

அட்டவணை

## 7. தற்பிரதிஷ்டை, காணிக்கை

**393. இராகம்: எதுகுலகாம்போதி. தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**ஆண்டவர் பங்காகவே, தசம பாகம்,**
அன்பர்களே, தாரும்; - அதனால் வரும்
இன்பந்தனை பாரும்.

**அனுபல்லவி**

வான்பல கணிகளைத் திறந்தாசீர்
வாதங்க ளிடங்கொள்ளாமற் போகு மட்டும்
நான் தருவேன், பரிசோதியுங்க ளென்று
இராசாதிராச சம்பூரணர் சொல்வதால் - ஆண்டவர்

**சரணங்கள்**

1. வேதாளராச னருஞ்சிறை மீட்டாளும்
விண்ணவர் கோமானே, - அந்த
மேதகத்தை நன்றி ஞாபகஞ் செய்திட
விதித்தது தானே,
வேதனம் வியாபாரம், காலி, பறவைகள்,
வேளாண்மை, கைத்தொழில், வேறு வழிகளில்,
ஊதிய மாகும் எதிலுமவர் பாகம்
உத்தம மாகப் பிரதிட்டை பண்ணியே. - ஆண்டவர்

2. ஆலயங் கட்ட, அருச்சனை செய்ய,
அதற்குளதைப் பேண, - தேவ
ஊழியரைத் தாங்கி யுன்னத போதனை
ஓதும் நன்மை காண;
ஏழைகள், கைமைகள், அனாதைப் பாலகர்கள்
ஏது கரமற்ற ஊனர்; பிணியாளர்,
சால வறிவு நாகரீக மற்றவர்
தக்க துணைபெற்றுத் துக்க மகன்றிட, - ஆண்டவர்

3. நம்மைப் படைத்துச் சுகம்பெலன் செல்வங்கள்
யாவும் நமக்கீந்து, – நல்ல
இம்மானுவே லென்றொரு மகனைத் தந்து
இவ்வா றன்பு கூர்ந்து,
நன்மை புரிந்த பிதாவைக் கனம்பண்ண
நம்மையும் நம்முடை யாவையு மீந்தாலும்
சம்மதத்தே யதிலும் தசம பாகம்
தாவென்று கேட்கிறார்; மாவிந்தை யல்லவோ? – ஆண்டவர்

***– திரு. S. வேதநாயகம், அரக்கோணம்.***

**394. இராகம்: கமாசு.** **தாளம்: ரூபகம்.**

**பல்லவி**

**நீயுனக்குச் சொந்தமல்லவே – மீட்கப்பட்ட பாவி!**
நீயுனக்குச் சொந்தமல்லவே.

**அனுபல்லவி**

நீயுனக்குச் சொந்தமல்லவே, ரீ–ரீ, ரீ–ரீ
நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம் – நீயுனக்குச்

**சரணங்கள்**

1. சிலுவைமரத்திற் றொங்கி மரித்தாரே – திரு இரத்தம் இரத்தம்
திரு விலாவில் வடியுது பாரே!
மிகுந்த பரிசத் தால்கொண்டாரே, ரீ–ரீ, ரீ–ரீ
மோட்ச மகிமை யுனக்கீவாரே – நீயுனக்குச்

2. இந்த நன்றியை மறந்துபோனாயோ? இயேசுவை விட்டு
எங்கேயாகிலும் மறைந்து திரிவாயோ?
சந்ததமுன திதயங் காயமும், ரீ–ரீ, ரீ–ரீ
சுவாமி கிறிஸ்தி னுடைய தல்லவோ? – நீயுனக்குச்

3. பழைய பாவத் தாசை வருகுதோ? – பசாசின்மேலே
பட்சமுனக்குத் திரும்ப வருகுதோ?
அழியும் நிமிடத் தாசை காட்டியே, ரீ–ரீ, ரீ–ரீ
அக்கி னிக்கடல் தள்ளு வானேன்? – நீயுனக்குச்

4. பிழைக்கினும் அவர்க்கே பிழைப்பாயே – உலகைவிட்டு
மரிக்கினும் அவர்க்கே மரிப்பாயே,
மரித்து உயிர்த்த இயேசு நாதரின்,
மலரடி எந்நாளும் நிலைப்பாய். – நீயுனக்குச்

***–தேவசகாயம் உபாத்தியாயர், சாட்சியாபுரம்.***

***இவர் தாசன், நேசன் எனும் தமது இரு பிள்ளைகளிடை ஒரு பொருளைக் குறித்துச் சண்டை ஏற்பட்ட போது இப்பாடலைப் பாடினார் என்பர்.***

**395. இராகம்: சங்கராபரணம். தாளம்: திரிசுரம்.**

**பல்லவி**

**என்னைச் சீவ பலியாய் – ஒப்புவித்தேன்,**
ஏற்றுக் கொள்ளும், இயேசுவே.

**அனுபல்லவி**

அன்னை தந்தை யுன்தன் சன்னதி முன்னின்று
சொன்ன வாக்குத்தத்த மல்லாது, இப்போது – என்னை

**சரணங்கள்**

1. அந்த காரத்தி னின்றும் – பாவப் பேய்
அடிமைத் தனத்தி னின்றும்,
சொந்த இரத்தக் கிரயத்தால் எனைமீட்ட
எந்தையே, உந்தனுக் கிதோ! படைக்கிறேன். – என்னை

2. ஆத்ம சரீரமதை – யுமக்கு
ஆதீன மாக்கி வைத்தேன்
பாத்ரம தாயதை பாவித்துக் கொள்ள
காத்தி ருக்கின்றேன்; கருணைசெய், தேவா. – என்னை

3. நீதியி னாயுதமாய் – அவயவம்
நேர்ந்து விட்டே னுமக்கு;
சோதி பரிசுத்த ராலய மாகவே
சொந்தமாய்த் தந்தேன் என்தன் சரீரத்தை. – என்னை

***–மறைத்திரு. சா. சீமேகன் அவர்கள், மதுரை.***

அட்டவணை

**396. இராகம்: மலையாமி.** **தாளம்: திரிசுரம்.**

**பல்லவி**

**ஐயையா, நான் வந்தேன் – தேவ**
ஆட்டுக்குட்டி, வந்தேன்

**சரணங்கள்**

1. துய்யன்நீர் சோரி பாவிஎனக் காய்ச்சிந்தி,
துட்டன் எனை அழைத்தீர், – தயை
செய்வோம் என்றே; இதை அல்லாது போக்கில்லை;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்; – ஐயையா

2. உள்ளக் கறைகளில் ஒன்றேனும் தானாய்
ஒழிந்தால் வருவேன், என்று – நில்லேன்;
தெள்உம் உதிரம் கறையாவும் தீர்த்திடும்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்; – ஐயையா

3. எண்ணம், வெளியே போராட்டங்கள், உட்பயம்
எத்தனை, எத்தனையோ! – இவை
திண்ணம் அகற்றி எளிஞனை இரட்சியும்;
தேவாட்டுக்குட்டி வந்தேன்; – ஐயையா

4. ஏற்றுக்கொண்டு மன்னிப் பீந்து சுத்திகரித்
தென்னை அரவணையும்; – மனம்
தேற்றிக்கொண்டேன் உந்தன் வாக்குத்தத் தங்களால்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன்; – ஐயையா

5. மட்டற்ற உம் அன்பி னால்தடை எதும்
மாறி அகன்றதுவே; – இனி
திட்டமே உன்தன் உடைமையான் என்றென்றும்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன் – ஐயையா

***–திரு. அ. வேதக்கண் உபாத்தியாயர், நாகர்கோவில்.***

அட்டவணை

**397. இராகம்: இந்துஸ்தான் காபி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**ஐயா, உமது சித்தம் ஆகிட வே வேணும்.**

**அனுபல்லவி**

மெய்யாய் எனது சித்தம் வெகுமோச மே காணும் – ஐயா

**சரணங்கள்**

1. ஆடுபோல் வழிதப்பி அவனவன் வழியொப்பி
கேடடைந்தோர் பாவத்தைக் கிறிஸ்துமேல் சுமத்தினீர் – ஐயா

2. ஜீவனோ, மரணமோ, செல்வமோ வறுமையோ
யாவிலெனை நிறுத்த தேவரீர் நினைக்கினும், – ஐயா

3. வசையிசை, பகை,நேசம் வாழ்வுயர், வதிமோசம்
பசி, நிரு வாணம், நாசம், பாடு, நோ யடைகினும், – ஐயா

4. என்னிட்டம் வாயாததால் எத்தனை துயர்கொண்டேன்
பொன்னடிக் கீழடங்கிப் புகழுமக் கென்றுவாழ்வேன் – ஐயா

5. குயவன்கை களிமண்ணாய், குருவே யுமக்கமைவேன்,
நயமிது வென்றறிந்த ஞானமுள்ள பிதாவே – ஐயா

***–மறைதிரு. ஐ.சு. வேதநாயகம் அவர்கள், சென்னை.***

**398. இராகம்: பிகாக்.** **தாளம்: ரூபகம்.**

**பல்லவி**

**உன்தன் சுயமதியே நெறி என்று**
றுகந்து சாயாதே; – அதில் நீ
மகிழ்ந்து மாயாதே.

**சரணங்கள்**

1. மைந்தனே, தேவ மறைப்படி யானும்
வழுத்து மதிதனைக் கேளாய்; – தீங்
கொழித்திக மனந் தாழாய் – அருள் சூழாய், – உன்தன்

அட்டவணை

2. சொந்தம் உனதுளம் என்றுநீ பார்க்கிலோ,
வந்து விளையுமே கேடு; – அதின்
தந்திரப் போக்கை விட்டோடு – கதிதேடு. – உன்தன்

3. துட்டர்தம் ஆலோ சனைப்படி யேதொடர்ந்
திட்ட மதாய் நடவாதே; – தீயர்
கெட்ட வழியில் நில்லாதே – அது தீதே. – உன்தன்

4. சக்கந்தக் காரர் இருக்கும் இடத்தொரு
மிக்க இருக்க நண்ணாதே; – அவர்
ஐக்யம் நலம்என் றெண்ணாதே – அதொண்ணாதே – உன்தன்

5. நான்எனும் எண்ணம் அதால்பி றரைஅவ
மானிப்பது வெகு பாபம்; – அதின்
மேனிற்குமே தேவ கோபம் – மனத்தாபம். – உன்தன்

***–திரு. ஜாண் பால்மர் அவர்கள், நாகர்கோவில்.***

**399.**

**“சமயமாம் இரத்தில் நான்” – என்ற மெட்டு**

**கண்ணிகள்**

**உலோகம் வேண்டாம் யாதும் வேண்டாம்**
போதும் இயேசு எனக்கு
சாத்தா னேஉன் இன்பம் வேண்டாம்
கொண்டுபோ உன் சரக்கு.

2. பாவம் லோகம் யாவுக் கும்நான்
குருசினில் மரித்தேன்
பாவி எனக்காய் மரித்த
பரனுக்குள் பிழைத்தேன்

3. என்ன விந்தை ஏது விந்தை
என்தனேசு உயிர்த்தார்
பந்த பாவம் விடுத்தென்னைச்
சொந்த மாக்கிப் புரந்தார்

அட்டவணை

4. என்ன இன்பம் ஏழை நெஞ்சம்
எங்கும் காணா இங்கிதம்
இயேசு தன்னில் கண்ட தாலென்
ஏக்க மெல்லாம் ஏகிடும்.

5. பூநெ கிழ்ந்து வான்ம கிழ்ந்து
ஆவி யோடும் நெஞ்சமே
புண்ய நாதன் பாத மல்லால்
புகலுண்டோ தஞ்சமே

6. என்பொன் னேசர் என்னு டையோர்
நானும் அவர்க்குரியோன்
சொந்த சீவன் ஈந்து என்னை
அன்பில் இணைத்தனரே.

7. கழுகைப்போல் உயர்தலத்தைக்
காண வோடும் என்மனக்
கண்ணில் ஏதும் மண்பொடிகள்
வீழ்ந்தி டாமல் காருமே.

**400.**

**பல்லவி**

**என்னை உமக்கொப்பு வித்தேன்**
நின் மனம்போல் நடத்தையா

**சரணங்கள்**

1. இன்பமுள்ள சீவியம்தான் ஏழையேன் விரும்பவில்லை
துன்பமில்லா சொகுசுகளும் தொல்லுலகில் தேவையில்லை
- என்னை

2. சீவனாலோ சாவினாலோ தேவநாமச் சீரிலங்க
பாவியெனக் காவியீந்து பாரில்வைத்தால் போதுமையா
- என்னை

அட்டவணை

3. நேர்மையுறும் பாதையிலோ நெடுகவே முட்காடதிலோ
நீடிய பொறுமையிலோ நித்தம்நித்தம் சாவினிலோ – என்னை

4. பஞ்சமதோ பட்டினியோ மிஞ்சுங் கொடும்விபத்தோ
சஞ்சலமோ வந்திடினும் சுவாமிஎன்னைக் கைவிடாரே
–என்னை

5. மூத்தமக்கள் போல என்மேல் மூர்க்கவெறி கொண்டபோது
மௌனமாய் எல்லாம் சகிக்க மன்னவா எனக்கருள்செய்
–என்னை

6. சொந்தசனம் மோசம்பல சூழ்ந்துஎன்மேல் வந்திடினும்
சுந்தரமைந் தனுனைப்போல் சோர்ந்திடாதி ருக்கச்செய்வாய்
– என்னை

**401.**

**பல்லவி**

**ஏழையை மீட்ட இயேசுவே சுவாமி,**
அடிமை சரண் புகுந்தேன்

**அனுபல்லவி**

நீசனா மென்னைத் தேடி னீரே,
காசினி யிலன்பு கூர்ந்து – ஏழையை

**சரணங்கள்**

1. என்பாவம் போக்க எடுத்தீ ரிறைவா
ஈனக் கோலமதை,
என்ன தான்இதற் கீடு செய்குவேன்,
ஏழையேன் விளம்புவீரே – ஏழையை

2. தூரமாய்க் கிடந்தே தொல்லைக ளடைந்தே
தூயா, உம்மை மறந்தேன்,
தூக்கி னீர்எனைச் சேற்றி னின்றே,
தேற்றினீராவியாலே. – ஏழையை

அட்டவணை

3. விண்ணைநீர் மறந்தீர், விரோதியா மெனையே
விண்ணில் சேர்த்திடவே
வேண்டுதல் கேளும் வேந்தனே, அருள்
வேண்டினேன் சகாயனே - ஏழையை

4. பாவத்தின் கூலி மரணமாம், பயத்தை
செயித்தவர் இயேசு
சீவனும் சமா தானமு மீந்து,
தேவச மூசமு மீந்தார். - ஏழையை

5. மாயமாம் உலகின் வேடத்தை வெறுத்தேன்,
மன்னாஉம் அன்பினாலே,
சொன்னீ ரேபர லோகம் சேர்ப்பதாய்,
தோத்திரம் தோத்திரமே. - ஏழையை

**402. இராகம்:பிலாரி. தாளம்: ரூபகம்.**

**"இந்தக் குழந்தையை நீர்" - என்ற மெட்டு**

**பல்லவி**

**கர்த்த ருக்குக் காணிக்கை**
கடிதில் கொண்டு வருவீர்.

**அனுபல்லவி**

அத்தன் கிறிஸ்து நம்மை
ஆசீர் வதிப்பார் நித்தம் - கர்த்த

**சரணங்கள்**

1. திருச்ச பையோரே நீங்கள்
தேவ சந் நிதியிலே
பரிச்சேதம் வரும்போது
பரிந்து மகிழ்ந்து தினம் - கர்த்த

2. தசம பாகங்க ளெல்லாம்
தாரும் பண்ட சாலைக்கு
நிசம தாகவே தந்து
நித்தமருள் பெறுவீர் - கர்த்த

[அட்டவணை]

3. சிறுக விதைக் கிறவன்
சிறுகவே தானறுப்பான்
பெருக விதைக்கிறவன்
பெருகவே தானறுப்பான் - கர்த்த

4. அவனவன் விசனமும்
அலட்டுத லோடு மல்ல
அவன் அன்பு தான்பெறவே
அகமகிழ் வோடு தானே - கர்த்த

5. நெல் கம்பு கேப்பை சோளம்
புல் காடைக் கண்ணி சாமை
வெல்லம் பருத்தி வற்றல்
வெங்காயம் பயறுகள் - கர்த்த

6. தேங்காய் கிழங்கு மல்லி
தேன் நெய்காய் கனிகளும்
பாங்காய் நீ செய்து வரும்
பலவேலைப் பொருள்களும் - கர்த்த

7. துட்டு ரூபாய் நகைகள்
பட்டு நெசவு பொருள்
முட்டை கோழி புறாக்கள்
நெட்டை மா டாடு கிடாய் - கர்த்த

8. யாவிலும் மேலானதாய்
தேவனுக்கே யுமது
ஆவி ஆத்துமா உடல்
அனைத்தும் படைத்தே இப்போம் - கர்த்த

9. மனித ருங்கள் செயலை
மதித்துமே மாதேவனை
மகிமைப் படுத்த அவர்
மா சோதி உம்மில் தங்க - கர்த்த

அட்டவணை

**403. இராகம்:கமாசு.** **தாளம்: ஆதி.**

**"இயேசு நாயகனைத் துதிசெய்," – என்ற மெட்டு**

**பல்லவி**

**தசம பாகங்களை – நமக்குத்**
தா–தா, தா, தா, தா.

**சரணங்கள்**

1. அசதியும் தளர்ச்சியும் வேண்டா மதிலே
அனைத்தையும் தந்த கடவுளர் நாமே
நிசமுனை ஆசீர் வதிப்போம் பக்தா
நீ–நீ, நீ, நீ, நீ – தசம

2. ஆத்தும சரீர சுகமெதி னாலே
ஆயுள் மக்கள் சுகமெதி னாலே
தோத்திரக் காணிக்கை நமக்கெது மிலையோ?
சொல்–சொல், சொல், சொல், சொல் – தசம

3. மனிதரை வஞ்சிக்கும் வண்ணம் நமையும்
வஞ்சிக்கப் போமோ? வேண்டா மறிவாய்;
தினமுதல் விளைவாய் நமதுடைக் கடமை
செய்–செய், செய், செய், செய் – தசம

4. வானமும் புவியும் மாரியும் எனதுன்
வாழ்வுக்குத் தக்க காணிக்கை யுடனே
நீநம தாலய மதனுளே வந்தே
நில்–நில்–நில்–நில், நில் – தசம

5. பிள்ளைக ளாலேபெரு நாமம் பெற்றோம்
பிழைத்தனர் யாரால் விபத்துக ணின்றி
எள்ளள வுமிதை நினையா திருப்பது
ஏன்–ஏன், ஏன், ஏன், ஏன்? – தசம

6. ஆகநம் வீட்டின் தசம பாகம்
ஆகார மாகச் சேர்த்து வைப்பாக
வாகுட னுன்தன் மனதுடன் கொண்டு
வா–வா, வா, வா, வா – தசம

7. அப்போது வானப லகணி திறந்து
அளவில்லா ஆசீர் வாதங்கள் பொழிவோம்
செப்பாய் நமக்குத் தோத்திரஞ் சொல்லித்
தின்–தின், தின், தின், தின் – தசம

8. வருசிக்க மாட்டே னோஆசீர் வாதம்
மட்டள வில்லா வகையா யுனக்கு
பரீட்சித் தென்னை சோதித் தெனினும்
பார்–பார், பார், பார், பார் – தசம

**404.**

**பல்லவி**

**தாகத்தைத் தீருமையா – அபி**
டேகத்தைத் தாருமையா – எங்கள்

**சரணங்கள்**

1. ஆகமம் முன்னே அறிவித்த வண்ணம்
ஆவியால் அடியாரை நிறைத்தீ ரின்றும்
ஏககர்த் தாவே ஏழைகள் மீது
இரங்கிடும் இப்போ–தே வந்த எங்கள் – தாகத்தை

2. சத்துரு வாலே சகிக்கவொண் ணாத
எத்தனை யோஇடர் வந்த தையோ
அத்தனே உமது அருள்பலத் தாலே
நித்தமும் செயம்கொள் வோம்நாங்கள் எங்கள் – தாகத்தை

3. வேதத்தின் பொருளை விளக்கிட வல்ல
போதக ராம்ஆ வியா னவரே
பாதத்தில் வீழ்ந்து பணிந்திடு வோமே
பரிசுத்த மாவோமே நாங்கள் எங்கள் – தாகத்தை

4. சுத்த சீவியமும் தூய ஊழியமும்
கர்த்தருக் கேற்றநற் காணிக்கை யதனால்
சித்தம்கொண் டெமைநீர் பாவிப்ப தாலே
மெத்தவும் பலன்காண் போம்நாங்கள் எங்கள் – தாகத்தை

அட்டவணை

**405. இராகம்: பைரவி** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**பொக்கிஷம் சேர்த்திடுங்கள் – பரத்திலே**
பொக்கிஷம் சேர்த்திடுங்கள்

**அனுபல்லவி**

பக்கிஷ மாகப் பரத்திலே பொக்கிஷம்
மிக்கவே சேர்ப்பது மேலான பாக்கியம் – பொக்கிஷம்

1. பொட்டும் அரிக்காதே, – அங்கே புழுப்
பூச்சும் கெடுக்காதே;
துட்டரங் கேகன்ன மிட்டுத் திருடாரே;
துருவும் பிடியாது, குறையாது, அழியாது, – பொக்கிஷம்

2. விண்ணுலகந் தன்னிலே – பொக்கிஷத்தை
விரும்பியே சேர்த்திடுவோர்
மண்ணிலும் விண்ணிலும் வாழ்வது திண்ணமே;
மாயப்பிர பஞ்சத்தின் வாழ்வெல்லாங் குப்பையே – பொக்கிஷம்

3. உங்கள் பொக்கிஷம் எங்கேயோ – அங்கே யுங்கள்
உள்ளமு மே யிருக்கும்;
இங்கித மோட்சத்தை என்றும் நினைக்கவே
அங்கே வைக்கப்பாரும் உங்கள் பொக்கிஷத்தை.– பொக்கிஷம்

4. சீவன் சுகத்துடனே – இருக்கையில்
ஆவலா யிப்பொழுதே
தேவலோ கத்திலே சீவபொக் கிஷத்தைச்
சேர்த்திடு வோர்மெத்தப் பாக்கிய வான்களே. – பொக்கிஷம்

*–திரு. ஏ. ஞானமணி, அறுப்புக்கோட்டை.*

அட்டவணை

# VI. திருச்சபை

## 1. ஆலயம், குரு பட்டாபிசேகம்

**406. இராகம்: நொண்டிச் சிந்து.** **தாளம்: ஆதி.**

**கண்ணிகள்**

**ஆலயமே தஞ்சம் – கிறிஸ்**
தேசுபொற்பாதம் பணியுமென்னெஞ்சம்

2. வேலையில்லா வேளையிலும் – எந்த
வேலை நெருக்கத்தின் மத்தியிலும்

3. என்ன வேலை யிருந்தாலும் – கிறிஸ்
தேசு பாதம் பணிவதென் முதல்வேலை

4. பாடம் படிக்கு முன்னும் – என்
பாடம் படித்து முடிந்த பின்னும்

5. விடுமுறை காலத்திலும் – நான்
விளையாடிக் களிக்கும் நேரத்திலும்

**407. இராகம்: முகாரி.** **தாளம்: ஆதி.**

**“ஆரிவ ராராரோ” – என்ற மெட்டு.**

**பல்லவி**

**வாருஞ்சபை யோரே வாரும் – சுற்றி**
வரிசையு டனே வாரும்
வாரும் இவ் வாலய வல இடப் பவனியில்
வானவ ரடி பணிந்து

அட்டவணை

**சரணங்கள்**

1. சிற்சில ஆண்டாக – வெகு
சிரத் தையுடன் முடித்தோம்
பற்பல தீமைகள் வந்திடினும் அவை
பனிபோ லகலக் கண்டோம் – வாருஞ்சபை

2. அருளுத வியுமுற்றோம் – பெரியோர்
பொருளுத வியும் பெற்றோம்
கருணைக் கடல்நின் காவல் அனுதினமும்
காத்திடவுங் கண்டோம் – வாருஞ்சபை

3. இசரவேல் பாளயத்தின் – மீதில்
இருந்த நல்லே கோவா
நிசமதாய் இத்திரு ஆலயந் தங்குவார்
நீடூழி காலமாக – வாருஞ்சபை

4. ஞானிசா லோமோன்தான் – கட்டின
நவ ரத்ன ஆலயத்தில்
மானிடர் மகிழ்ந்திட வானவர் இறங்கிய
வண்ணமிங் கருள்தங்க – வாருஞ்சபை

5. பரம எருசா லேம் – நகரின்
பாக்கியம் மரி பாலன்
பாரதில் அவரது பளிங்கொளி வீசிட
இரவும் பகல் போ லாம் – வாருஞ்சபை

6. இகத்தில் நம் மோடுதங்கி – நமது
இதயம் தம தாக்கி
பரத்தில் என்றுநற் பாக்கியங் கொடுத்திடும்
பரம னடி துதித்து – வாருஞ்சபை

அட்டவணை

**408. இராகம்: சங்கராபரணம்.** **தாளம்: ஆதி.**

**"தோத்திரப் பாத்திரனே" – என்ற மெட்டு**

**பல்லவி**

**எழுந்தருள் ஏகோவா – எங்கட்**
கரு மறை யோதிய வா,
எழுந்தருள் இத்திரு வாலயத் தில்வரும்
எவருமுன் அருள் பெறவே

**சரணங்கள்**

1. அம்பர வாசனத்தில் – இருந்து
உம்பர்கள் துதி யேற்கும்
எம்பரா பரனின் நாமம கிமைக்கென்
றியற்றிய ஆலயத்தில் – எழுந்தருள்

2. வானாதி வானங்களும் – கொள்ளா
வல்ல பிதாவே இங்கு
ஞான நன்மை பல நல்கிடவே இப்போம்
தேவனே எழுந் தருளும் – எழுந்தருள்

3. சத்துரு தலை நசுக்க – உன்தன்
பத்தரைக் கதி சேர்க்க
இத்தரை மீதிலு தித்தகி றிஸ்துவே
நித்திய திரித் துவமே – எழுந்தருள்

4. ஏலோகீம் தேவனுக்கே – அமைத்த
சாலேமின் ஆலயத்தில்
கோலமா யுன்னத மகிமையோ டெழுந்த
மேலோக அதிபதியே – எழுந்தருள்

5. இச்சிறு ஆலயத்தில் – மிக
உச்சித பதப் பொருளே
எப்பெரும் பாவியும் அச்சய னைத்தரி
சித்திட அருள் புரியும் – எழுந்தருள்

அட்டவணை

6. துன்பந் துய ரடையில் – உன
தன்பர் முறையிடையில்
அன்புடன் கேட்டவர் பாடுக ளொழிய
அம்பர னே எழும்பும் – எழுந்தருள்

7. பஞ்சம், படைநோவும் – நசித்துக்
கெஞ்சிடும் போதவர்க்கு
அஞ்சலென் றருளியுன் தஞ்சம தீயவே
கெஞ்சினோம் ஏகோவா – எழுந்தருள்

*– திரு. V. தேவசிந்தாமணி உபாத்தியார், அத்திகுளம்.*

## 2. ஞானஸ்நானம், திடப்படுத்தல்

**409. இராகம்: கல்யாணி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**என்னையும் உம தாட்டின் மந்தையோ**
டேற்றுக் காத்திடும், இயேசுவே.

**சரணங்கள்**

1. வன்னியான தோர் அலகைப் பேய்தனை
வதைத்திட ஞானப் பெலத்துடன் – சிறந்
நிந்நி லத்தினில் வந்து தித்தநல்
இயேசுவே, எனைச் சேர்த்திடும்; – என்னையும்

2. ஆயக்கார ரோடு பாவிகளின் கும்பை
அழைத்து நல்விதை முளைத்திட – வெகு
நேய மாகவே சீவ புனல்ஈந்த
நிமலனே எனைச் சேர்த்திடும் – என்னையும்

3. ஜயிருபது ஆட்டினில் ஒன்
றகன்றிட்டால், மனம் உகந்துகோன் – அதை
மெய்ய தாகவே தேடு வான்என்ற
மேய்ப்பரே, எனைச் சேர்ந்திடும் – என்னையும்

4. வாச லாகவே இருக்கி றேன்,எனால்
வந்தவன் மனம் நொந்திடான் – வெகு
நேச மாகவே வாழ்வான், என்றநல்
நிமலனே, எனைச் சேர்ந்திடும்; – என்னையும்

5. நல்ல மேய்ப்பன்நான், எனமொ ழிந்தஎன்
நாதனே, ஞான போதனே – சீவ
புல்லுள் ளதலந் தன்னில் கொண்டெனைப்
போசித்து முசிப் பாற்றிடும் – என்னையும்

6. மேய்ப்ப ராகவே இருக்கிறீர்; எந்தன்
மேய்ச் சலும்நீர் தாமலோ? – ஞான
வாய்ப்புள் ளசத்ய மறையில் மேய்ந்துநான்
வளர்ந்திட அருள் புரிந்திடும்; – என்னையும்

7. அன்பு டையமெய்ம் மேய்ப்ப ராயிருந்
தாட்டுக்காய்ச் சொந்த சீவனை – வெகு
இன்ப மாகவே ஈந்து மீட்டநல்
இயேசுவே, எனைச் சேர்ந்திடும் – என்னையும்

***–திரு. மரியான் உபாத்தியாயர், திருநெல்வேலி.***

**410. இராகம்: பிலகரி. தாளம்: செம்படை.**

**பல்லவி**

**இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள் ளும், கர்த்தாவே.**

**அனுபல்லவி**

உந்தம் ஞானஸ்நா னத்தால் உமக்குப் பிள் ளையாய் வந்த – இந்த

**சரணங்கள்**

1. பிள்ளைகள் எனக் கதிகப் பிரியம், வரலாம் என்று
உள்ளமுருகிச் சொன்ன உத்தம சத்தியனே – இந்த

2. பாலரைக் கையில் ஏந்திப், பண்பாய் ஆசீர்வ தித்த
சீலமாயின்றும் வந்தாசீர் வாதம் செய்யும் ஐயா – இந்த

3. உமக்கூ ழியஞ் செய்யவும் உம்மைச் சிநேகிக்கவும்
உமது ஆவியைத் தந்து உம்முடைய மந்தை சேர்த்து – இந்த

4. உலக மும்பேய் பசாசும் ஒன்றும் தீது செய்யாமல்,
நலமாய் இதைக் காத்தாளும், நன்மைப் பராபரனே – இந்த

5. விசுவாசத் தோடிதுந்தன் மேய்ப்புக்கும் உள்ளடங்கி
புசிய மரம்போல் தெய்வ பத்தியிலே வளர – இந்த

***– திரு. P. பாக்கியநாதன், சிவகாசி.***

## 3. திருவிருந்து, ஐக்கியம்

**411. இராகம்: சங்கராபரணம். தாளம்: திரிசுரம்.**

**பல்லவி**

**கர்த்தரின் பந்தியில் வா, – சகோதரா**
கர்த்தரின் பந்தியில் வா.

**அனுபல்லவி**

கர்த்தர் அன்பாய்ச் சொந்த இரத்தத்தைச் சிந்தின
காரணத்தை மனப் பூரணமாய் எண்ணிக் – கர்த்தரின்

**சரணங்கள்**

1. ஆபேலின் இரத்தம் அல்ல, – நீ செய்த
அநியாயத்தைச் சொல்ல,
சாபம் எல்லாம் வெல்ல, – சிந்துண்ட
தயையை நான்என்ன சொல்ல?
கோபம் இல்லாமல் உன், மா பாவம் தீர்த்திடக்
கூறிப் பிதாவின் முன் ஏறின இரத்தமே – கர்த்தரின்

2. சீவ அப்பம் அல்லோ? – கிறிஸ்தின்
திருச் சரீரம் அல்லோ?
பாவ மனங் கல்லோ? – உனக்காய்ப்
பகிரப்பட்ட தல்லோ?
தேவ குமாரனின் சீவ அப்பத்தை நீ
தின்று அவருடன் என்றும் பிழைத்திட – கர்த்தரின்

3. தேவ அன்பைப் பாரு – கிறிஸ்துவின்
சீடர் துயர் தீரு;
பாவக் கேட்டைக் கூறு – இராப்போசன
பந்திதனில் சேரு;
சாவுக் குரிய மா பாவமுள்ள லோகம்
தன்னில் மனம் வைத்து அன்னியன் ஆகாதே. – கர்த்தரின்

4. அன்பின் விருந்தாமே – கர்த்தருடன்
ஐக்யப் பந்தி யாமே;
துன்பம் துயர் போமே – இருதயம்
சுத்த திடனாமே;
இன்பம் மிகும் தேவ அன்பின் விருந்துக்கு
ஏது தாமதமும் இல்லாதிப் போதே வா; – கர்த்தரின்

***– திரு. மரியான் உபதேசியார், திருநெல்வேலி.***

***ஒரு தடவை சபையில் சீர்திருத்த சம்பந்தமாய் இவருக்கும் சபையின் மூப்பரான ஞானப்பிரகாசம் என்பவருக்கும் மனவேறுபாடு உண்டாயிற்று. அவரைச் சமாதானப்படுத்த எவ்வளவோ முயன்றும் கூடவில்லை. அதனால், ஒருநாள் இரவில் உபதேசியார் இப்பாடலை அவர் பொருட்டு எழுதி, மறுநாள் நற்கருணை ஆராதனைக்குமுன், மூப்பர் வீட்டுமுன் நின்று, மனமுருகிக் கண்ணீர் சொரிந்து இப்பாடலைப் பாடினார் என்றும், அதைக் கேட்ட மூப்பர் மனமுடைந்து, உபதேசியாரைத் தழுவிக்கொண்டு, அன்று இருவரும் திருவிருந்தில் கலந்து கொண்டனர் என்றும் சொல்லப்படுகிறது.***

**412. இராகம்: அம்சதோனி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**பாவியே உனைத்தானே தேடித் துயர் மேவினார்;**

**சரணங்கள்**

1. பரம சீயோன் மலைக் கரசர் நற்பாலன்,
பரிசுத்த தூதர் பணிசெய்யும் பொற்பாதன்,
மானிடனாக அவ தரித்த தெய்வீகன்,
வல்ல பேயைச் செயித்த மா மனுவேலன். – பாவியே

அட்டவணை

2. தீய பாவிகள் பாவ நித்திரை செய்ய,
தேவ கோபாக்கினி அவர்மீதில் பெய்ய,
தோசம் சுமந்து இயேசு தேவாட்டுக் குட்டி
துன்பக் கடலில் அமிழ்ந் தாற்றுதல் செய்ய – பாவியே

3. இந்தப் பாத்திரம் என்னை விட்டக லாதோ?
இல்லையானால் உமது இட்டம் தென்றே
சிந்தை துயரடையச் செப்பினார் அன்றோ
சுவாமி உனக்காய்ப் பிணைப்பட்டதால், அந்தோ! – பாவியே

4. கெத்செ மனேயில் இயேசு பட்டதை நினையே;
கேவலமான உன்தன் பாவத்தை மறவே;
ஆத்தும நேசர் பாதம் ஆவலாய்ப் பணியே;
அன்பின் கரத்தா லுனை அணைப்பார், நிச்சயமே.– பாவியே

***– திரு. தேவசகாயம் உபாத்தியார், சாட்சியாபுரம்.***

### 4. பரிசுத்தாவி, பரிசுத்த வாழ்க்கை

**413. இராகம்: சேனாவதி.** **தாளம்: ரூபகம்.**

**பல்லவி**

**அரூபியே, அரூப சொரூபியே, – எமை, ஆளும் பரிசுத்**
தரூபியே, அரூப சொரூபியே.

**அனுபல்லவி**

திருவினா டுறை நிதான கருணையா திபதி மோன
சுரநரர் வணங்கும் வான ஒரு பரா பர மெய்ஞ்ஞான –அரூபியே

**சரணங்கள்**

1. ஆதி காரண அரூபியே, – அசரீரி சத்ய
நீதி ஆரண சொரூபியே,
வேத வாசக சமுத்ர, ஓதும் வாய்மைகள் சுமுத்ர,
தீதிலா துயர் விசித்ர, சாதி யாருட பவித்ர – அரூபியே

2. சீருலா விய தெய்வீகமே, – திரி முதல் ஒரு பொருள்
ஏரு லாவிய சிநேகமே,
பாருளோர் பணிந்து போற்றும் ஆரியா, அடியர் சாற்றும்
நேரமே புகழை ஏற்றும்; வீரமாய் மனதை ஆற்றும் – அரூபியே

3. பக்தர் பாதகம் அடாமலே – பசா சுலகுடல்
சத்ரு சோதனை படாமலே,
அத்தனார் தேவ கோபம், நித்ய வேதனைகள் சாபம்,
முற்றும் மாறிடத் தயாபம் வைத்து நீ டுன் பிரதாபம் – அரூபியே

***–வேதநாயகம் சாத்திரியார்.***

**414. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி.**

**"அருள் ஏராளமாய்ப் பெய்யும்" – என்ற மெட்டு**

**அருளின் மா மழை பெய்யும்**
என்றுவாக் களித்தோரே
மாரியாய்ப் பெய்திடச் செய்யும்
உலோகத்தின் இரட்சகரே.

தே வன்பின் வெள்ளம்
தேவன் பின் வெள்ளம் தேவை
கொஞ்சம் ருசித்த என் உள்ளம்
கெஞ்சுதே இன்னும் தேவை.

2. கற்பாறைபோல் பாவி உள்ளம்
கடினப் பட்டதையோ
பரிசுத் தாவியின் வெள்ளம்
கரைக்க வல்ல தையோ – தேவன்பின்

3. வெட்டாந் தரைநிலந் தானும்
ஏதேன் போல் மாறு மென்றீர்
சாபத்துள் ளான முட்பூண்டு
கேதுரு வாகு மென்றீர் – தேவன்பின்

அட்டவணை

4. தேசத்தின் இருளைப் பாரும்
உலோகத்தின் மெய்த் தீபமே
ஆவியின் அருளைத் தாரும்
மன மாற்ற வல்ல வரே – தேவன்பின்

5. ஏழை என் குறைகள் யாவும்
தீர்த்திடும் வல்லவரே
யுத்தத்தில் முன்செல்ல ஏவும்
சேனைத்தள கர்த்தரே – தேவன்பின்

**415. இராகம்: இந்துஸ்தான் காப்பி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**ஆவியை யருளு மே,சுவாமீ, – எனக்**
காயுயிர் கொடுத்த வானத்தி னரசே.

**சரணங்கள்**

1. பாவிக்கு ஆவியின் கனியெனுஞ் சிநேகம்,
பரம சந்தோசம், நீடிய சாந்தம்,
தேவ சமாதானம், நற்குணம், தயவு,
திடவிசு வாசம் சிறிதெனு மில்லை – ஆவியை

2. தீபத்துக் கென்னையைச் சீக்கிர மூற்றும்,
திரியவி யாமலே தீண்டியே யேற்றும்,
பாவ அசூசங்கள் விலக்கியே மாற்றும்,
பரிசுத்தவரந் தந்தென் குறைகளைத் தீரும் – ஆவியை

3. நற்கனி தேடிவருங் காலங்க ளல்லவோ,
நானொரு கனியற்ற பாழ்மர மல்லவோ?
முற்கனி முகங்காணா வெம்பயி ரல்லவோ;
முழுநெஞ்சம் விளைவற்ற உவர்நில மல்லவோ? – ஆவியை

***– திரு. அருளானந்தம் பிரசங்கியார், திருநெல்வேலி.***

அட்டவணை

**416. இராகம்: அமிர்தகல்யாணி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**ஆவியை மழைபோலே யூற்றும் – பல**
சாதிகளை இயேசு மந்தையிற் கூட்டும்.

**அனுபல்லவி**

பாவிக்காய் சீவனை விட்ட கிறிஸ்தே,
பரிந்துநீர் பேசியே இரங்கிடச் செய்யும். – ஆவியை

**சரணங்கள்**

1. அன்பினால் சீவனை விட்டீர்; – ஆவி
அருள்மாரி பொழியவே பரலோகஞ் சென்றீர்;
இன்பப் பெருக்கிலே பொங்கி மகிழ
ஏராள மான சனங்களைச் சேரும். – ஆவியை

2. சிதறுண்ட லைகிற ஆட்டைப் – பின்னும்
தேடிப் பிடித்துநீர் தூக்கிச் சுமந்து,
பதறாதே நான்தான்உன் பர்த்தாவாம் யேசு
பாக்கிய ரென்னும்நல் வாக்கை யருளும். – ஆவியை

3. சாத்தானின் கோட்டம் அதிகம் – அவன்
தந்திரக் குணங்களின் சேட்டை அதிகம்;
கர்த்தன் கிறிஸ்துவின் காயத்தி னாலே
கலகக் குணங்களை ஒழிந்திடச் செய்யும். – ஆவியை

4. காத்தி ருந்த பல பேரும் – மனங்
கடினங்கொள் ளாமுன்னே உம்பாதஞ் சேரும்;
தோத்திரக் கீதங்கள் பாடிப் புகழ்ந்து
சுத்த லோகம் வரத் தூயாவி யூற்றும். – ஆவியை

***–திரு. அருளானந்தம் பிரசங்கியார், திருநெல்வேலி.***

**417. இராகம்: கெவுளிபந்து.** **தாளம்: அடம்.**

**சரணங்கள்**

**இந்த வேளையினில் வந்தருளும் தேவ ஆவியே, – இப்போம்**
எங்கள் மீதிறங்கித் தங்கி வரம் தாரும், ஆவியே.

2. அந்தணர் தம்மிடம் விந்தை செய்த சத்ய ஆவியே – முன்
ஆச்சரி யமாகக் காட்சி தந்த ஞான ஆவியே.

3. ஆர்ச்சியர்க் கந்நாளி லற்புதம் செய்தாண்ட ஆவியே, – இந்த
ஆதிரை மீதினில் தீதகற்றி யாளும், ஆவியே.

4. ஆரு மறியாத ஆறுதல் செய்திடும் ஆவியே, – இங்கு
அஞ்ஞானம் அகற்றி, மெய்ஞ்ஞானம் புகட்டும், ஆவியே.

5. சித்தம் இரங்காயோ, நித்திய ராகிய ஆவியே? – அருள்
சீவ வழி காட்டிப் பாவம் அகற்றிடும், ஆவியே.

6. வாரும் வாரும், கண் பாரும், பரிசுத்த ஆவியே – இன்று
வந்து சபை மீதில் சிந்தை வைத்தருளும், ஆவியே.

7. தேற்றர வாளன் என்றேற்றிப் புகழ்ந்திடும் ஆவியே, – நிதம்
சித்தம் வைத்தென் மீதில் முற்றிலுங் காத்திடும், ஆவியே.

***– திரு. C. யோசேப்பு, நாகர்கோயில்.***

**418. இராகம்: மோகனம்.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**உன்தன் ஆவியே, சுவாமி என்தன் மீதினில்**
வந்து சேரவே, அருள் தந்து காவுமே.

**அனுபல்லவி**

முந்து மானிடர் வினை தந்த சாபமும்
நிந்தை யாவுமே படவந்த ஏசுவே. – உன்தன்

**சரணங்கள்**

1. மதி மயக்குதே; பேயும் மன தியக்குதே,
அதிகமாய்க் கடல் அலை அறைந்து பாயுதே; – உன்தன்

2. சத்ய ஆவியைச் சீடர்க் கித்தரை விட,
சித்தமாய் உரை புரி நித்ய தேவனே, – உன்தன்

3. பெந்தே கோஸ் தெனும் மா சி றந்த நாளிலே
விந்தை ஆவியின் அருள் தந்த நேர்மையே, – உன்தன்

4. தாசன் யானுமே புகழ் வீசும் வாய்மையே
வாச மாகவே அருள், நேச தேவனே. – உன்தன்

***–சவரிமுத்து உபாத்தியாயர்.***

**419.**

**பல்லவி**

**வரவேணும் பரனாவியே இறங்கும் தணலாத் தாவியே**

**அனுபல்லவி**

மருளாம் பாவம் மருவிய என்னை
வானாக் கினியால் பரிசுத்தம் செய்ய – வரவேணும்

**சரணங்கள்**

1. பலமான எப்பாவமும் பாழாக்கும் மாநோய்களும்
வலியகொடும் ரோகமும் மாம்ச சிந்தையோடுமே
பலிபீடத்தில் என்னைப் பலியாக வைத்தேன்
எலியாவின் செபத்துக் கிரங்கிய வண்ணமே. – வரவேணும்

2. எந்தன் பாவம் யாவையும் எரிக்கும்வகை தேடியும்
எங்கும் இந்த லோகத்தில் எத்தீயுமே காண்கிலேன்
எந்தன் செயலால் யாதொன்றும் முடியா
இன்றே வானாக் கினிவர வேணுமே. – வரவேணும்

3. குடிகொள் எந்தப்பாவமும் அடியோடே தொலைத்திடும்
தடுத்தாள் கொள்ளும் தோசமும் சாம்பலாகச் செய்திடும்
படிதிசை காற்றுக்குப் பறந்தோடும் சாம்பல்போல்
அடியேன் இயேசுக்காய் ஓடி எங்கும் தொண்டுசெய்ய
–வரவேணும்

**420. இராகம்: ஹம்சத்வனி** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**வரவேணுமே – வல்ல ஆவியே நீர்**
வரவேணுமே – திருச்சபை மீதில் – வரவேணும்

அட்டவணை

**சரணங்கள்**

1. அன்றொரு மேடையில் ஆதிச் சீடர்மீது
வந்தருள் செய்தாப் போல் இந்தநே ரமுமே – வரவேணும்

2. உயிரேது மில்லா துழலுதே மந்தை
உன்னருள் தாராயோ மன்னவா தித்ரியேகா – வரவேணும்

3. வலையரைக் கூட்டி வல்ல சீடராக்கி
தொலையி லனுப்பத் துணைபு ரிந்தவா – வரவேணும்

4. துன்பமே சகிக்க துரிச்சை எரிக்க
இன்பமேலும் செய்தி எங்குமே யுரைக்க – வரவேணும்

5. வறண்டு ழன்ற மண்ணில் வல்ல ஆவிமாரி
இறங்கிட வேணும் ஏகோவா என்தேவா – வரவேணும்

6. வேதமொழி கூற வேண்டுமே நின்னாவி
பேதைகள் நடுவில் பெய்திடா தோமாரி – வரவேணும்

**421. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி.**

**பல்லவி**

**வல்ல ஆவியே எங்கள் மீதிலே**
வந்திறங்கி வரம் தாரும் தேவ ஆவியே

**சரணங்கள்**

1. பெந்தே கோஸ் தென்னும் நாளில் வந்த ஆவியே
எங்கள் மேலே வந்திறங்கும் சுத்த ஆவியே – வல்ல

2. பாந்த முடனே பரிசுத்த ஆவியே
சார்ந்தெங்களை யுத்தத்திற்கு உயிர்ப்பியுமே – வல்ல

3. சென்ற காலத்தில் செயம் பெற்றிடச் செய்த
செபத்தின் ஆவியை எங்கள் அகத்தில் ஊற்றும் – வல்ல

4. அன்புடன் தாழ்மை சமாதானம் பொறுமை
இன்பமும் எங்களுக் குள்ளே பெருகிடவே – வல்ல

அட்டவணை

## 5. செபக்கூட்டம், நற்செய்தி கூறல்

**422.**

**பல்லவி**

**அழைக்கிறார் அழைக்கிறார் இதோ**
நீயும் வா உந்தன் நேசர்
ஆவலாய் அழைக்கிறார் – இதோ

**சரணங்கள்**

1. பாவத்தை ஏற்றவர் பலியாய் மாண்டவர்
கல்வாரியின் மேட்டினில் கண் கொள்ளாத காட்சியே
கண்டிடும், வேண்டிடும், பாவப் பாரம் நீங்கிடும் – அழை

2. நோயையும் ஏற்றவர், பேயையும் வென்றவர்
நேசர் உன்தன் நோய்களை நிச்சயமாய் தீர்த்தாரே
நோயுற்ற உன்னையே நேயமாய் அழைக்கிறார் – அழை

3. துன்பம் சகித்தவர், துயரடைந்தவர்
இன்னலுற்ற உன்னையே அண்ணல் இயேச ழைக்கிறார்
துன்புறும் நெஞ்சமே! துரிதமாக வாராயோ – அழை

4. அந்தக் கேடடைந்தார் அழகற்றுத் தோன்றினார்
சொந்தமாகச் சேர்ந்திட இந்தப் பா டடைந்தாரே
நிந்திக்கும் உன்னையும் சந்திப்பார் நீ வாராயோ – அழை

5. கல்லறைத் திறக்க! காவலர் நடுங்க
கஸ்திக ளடைந்தாரே கட்டுக ளறுத்தாரே
உயிர்த்தார், செயித்தார்; உண்டுமீட் புனக்குமே – அழை

6. சாந்த சொரூபனே! சத்திய வாசனே!
வஞ்சமற்ற வாயனே வந்தணைக்கும் நேயனே
தஞ்சமே தன்னையே தந்துனை அழைக்கிறார் – அழை

அட்டவணை

**423.**

**“பாவிகளை மீட்க வந்த பரனிவர் தாமே” – என்ற மெட்டு**

**பல்லவி**

**அனுக்கிரக கால மிதை அசட்டை செய்யாதே**

**அனுபல்லவி**

மனுக்குலமோ அணுக்குலைய இடங்கொ டுக்காதே – அனுக்

**சரணங்கள்**

1. இயேசுபக வான்வருகை கால மாகுதே
எங்குமவர் சத்யஒளி வீச லாகுதே – அனுக்

2. இரவுசென்று பகல் வரவு சமீப மாகுதே
இப்போதேகோ டரியின் வேர் அருகே தங்குதே – அனுக்

3. யுத்தம் சத்தம் நித்த நித்த மிச்ச மாகுதே
உலோக மெங்கும் பூகம்பங்கள் ஓசை யாகுதே – அனுக்

4. பஞ்சம் பசி பட்டினியும் மிஞ்சிக் காணுதே
பாரிலெங்கும் கொள்ளை நோய்கள் மீறித் தோணுதே – அனுக்

5. யூத ரேசு நாதர் பாதம் தேட லாகுதே
யூக முள்ளோர் சீவன் தப்ப ஓட லாகுதே – அனுக்

**424. இராகம்: நவரோஜ். தாளம்: ஆதி.**

**பல்லவி**

**ஆத்ம நாதன் திருவடியே – நமக்**
காதாரம் சிலுவைக் கொடியே.

**அனுபல்லவி**

தோத்தி ரம்புகழ் துதியே சங்
கீர்த்தனம் பண் பதம் பாடியே – ஆத்தும

அட்டவணை

**சரணங்கள்**

1. புத்தியுள்ள கன்னியரே – பரி
சுத்த ராய்வி ளங்கினரே
நித்திரை மிகச் செய்தவரே – பின்
கத்திக் கத்திப் புலம்பினரே – ஆத்தும

2. ஐங்கா யத்தி லடைக்கலமே – நம்மை
ஆத ரிப்பதும் அவர் கரமே
நங்கூர மில்லா மரக்கலமே – நாற்
றிசையும் ஓடி அழிந் திடுமே – ஆத்தும

3. ஏன் கலங்குகி றாய் நெஞ்சமே – கிறிஸ்
தேசு வானவர் தான் தஞ்சமே
மானி லம்மு ழுதும் பஞ்சமே – வீண்
மாய்மை யாவும் பிரபஞ்சமே – ஆத்தும

4. இயேசுக் கிறிஸ்துவை விசுவாசி – எப்
போதுமே அவரை நேசி:
வேத வசனம் தினம் வாசி – இது
வேண்டா மென்பவன் மாதோசி – ஆத்தும

**425. இராகம்: லாவணி. தாளம்: ஆதி.**

**கண்ணிகள்**

**ஆத்ம நேசர் ஆவலாய் ஓடி**
அலைகிறார் உன்னைத் தேடி – என்மானே
அவர் அண்டை வாராயோ தொண்டு செய்யாயோ
அகல நிற்பதேன் மானே.

2. தண்ணீர்க்குப் போன சமாரியப் பெண்ணைத்
தவன முடனே நாடி – என்மானே
தாப மிகுந்தே வந்தழைத் தவர்தாம்
தாமத முனக் கேனோ

அட்டவணை

3. சின்னக் கடலில் வலைவீசி மீன்பிடித்த
செம்படவரைத் தேடி – என்மானே
சீடர்க ளாக்கி ஆதரித் தவர்பின்
செல்ல வொண்ணாதோ?

4. வெட்ட வெளியில்நின்ற நெட்டை மரத்திலேறி
குட்டையன் முகம் பார்க்க – என்மானே
கூட்டமாய்ப் பன்னிரு சீடர்கள் சூழ்ந்திட
கூட்டிச் சென்றாரே.

5. கல்லறையைப் பார்த்துக் கதறி அழுதமரி
கவலை யகற்ற வென்றே – என்மானே
கண்ணிமைப் பொழுதே வந்தழைத் தவர்தாம்
கருணா கரக் கடலே.

6. கள்ளன் கதியடைய உன்ன முருகினவர்
காதல் கொள்கிறா ருன்மேல் – என்மானே
கலங்கி நில்லாதே புலம்பி வாடாதே
காலமே வரத்தானே.

7. மானே உன்னை நான்மறந் திருப்பேனோ
மயங்காதே சொன்னேன் – என்மானே
மாடப் புறாவே மாதளங் கனியே
வந்திடுவாய் துரிதம்.

***– மறைத்திரு. S. பரமானந்தம் அவர்கள், சென்னை.***

**426. இராகம்: இந்துஸ்தானி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**இயேசு கிறிஸ்து நாதர்**
எல்லாருக்கும் இரட்சகர்.

**சரணங்கள்**

1. மாசில்லாத மெய்த்தேவன்
மானிட ரூ புடையார்;
இயேசுகி றிஸ்துவென்ற
இனிய நாமமுடையார். – இயேசு

அட்டவணை

2. வம்பு நிறைந்த இந்த
மானிட சாதிகள் மேல்
அன்பு நிறைந்த கர்த்தர்
அதிக உருக்க முள்ளோர். – இயேசு

3. பாவத்தில் கோபம் வைப்பார்;
பாவிமேல கோபம் வையார்,
ஆவலாய் நம்பும் பாவிக்
கடைக்கல மாக நிற்பார். – இயேசு

4. தன்னுயிர்தன்னை விட்டுச்
சருவ லோகத்திலுள்ள
மன்னுயிர் களை மீட்க
மரித்து உயிர்த்த கர்த்தர். – இயேசு

5. அந்தர வானத்திலும்
அகிலாண்ட கோடியிலும்
எந்தெந்த லோகத்திலும்
இவரிவரே இரட்சகர். – இயேசு

**427. இராகம்: கமாசு.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**இயேசு நாமம் ஒன்றை நம்புவீர்,**
பூலோகத்தாரே.

**சரணங்கள்**

1. இயேசு நாமம் ஒன்றை நம்பும்;
இரட்சண்யத்துக் கிதுவே தம்பம்;
பேசும் வேறே நாம மெல்லாம்
பேயின் வம்பும் தும்ப மாகும் – இயேசு

2. பார்த்திபன் தவீது குல
கோத்திரக் கன்னி மரிபால்
நேத்திரம் போல உதித்துத்
தாத்திரி இரட்சகனாக – இயேசு

3. பூதலத் தஞ்ஞான இருள்
போக்கவே மெஞ்ஞான பெருஞ்
சோதியாய் விளங்கி நிற்கும்
நீதியின் சூரியன் ஆன – இயேசு

4. பாவிக ளீடேற மோட்ச
பாக்கியம் பெறுவ தற்காய்
சீவன் விட்டுயிர்த் தெழுந்து
சேணுலகுக் கேறிச் சென்ற – இயேசு

5. விண்டலத் தவர்கள் சூழ,
கண்டலகை பதறி விழ,
மண்டலத்தைத் தீர்வை செய்யக்
கொண்டல் மிசை வரும் இராசன் – இயேசு

***–மறைத்திரு. P. தாவீது அவர்கள், டோனாவூர்.***

**428. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி.**

**இரட்சிப்பை உயர்த்திக் கூறுவோம், லோகம் நடுங்க**
நர காக்கி னையைச் சொல்லுவோம், பாவ மடங்க – ஓ
பூர்வ கால தேவ தாசர் விஸ்த ரித்தாற் போல்
மோட்ச லோகம் போகு முன்னமே.

**பல்லவி**

செல்வோம் செல்வோம் ஆர்ப் பரிப் புடனே
செய்வோம் செய்வோம் போர்ப் பலத்துடனே – ஓ
நானா சாதி பாஷைக்காரர் இரட்சிப் படைய
மோட்ச லோகம் போகும் முன்னமே.

**சரணங்கள்**

1. சுவிசேட யுத்த சத்தம் பூமி யெங்கும் கேள்
மீட்ப டைந்த பேதைகளின் சாட்சிகளும் கேள் – ஓ
முழுலோகத் தையும்வெல்ல இன்னும் கொஞ்ச நாள்
மோட்ச லோகம் போகு முன்னமே – செல்வோம்

அட்டவணை

2. தீதாய் சத்து ருக்களென்ன சொன்ன போதிலும்
சுத்த ஆவி யின் பெலத்தைப் பெற்று யாவிலும் – ஓ
உண்மை யாகப் போர் புரிந்தால் வெல்வோம் சாவிலும்
மோட்ச லோகம் போகு முன்னமே – செல்வோம்

**429. இராகம்: பியாகு. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**இவரே பெருமான் – மற்றப் பேர்**
அலவே பூமான்

**சரணங்கள்**

1. கவலைக்கிடங் கொடுத் தறியார் – வேறு
பல வினை யாதுமே தெரியார், – இப்
புவனமீது நமக்குரியார் – இவரே

2. குருடர்களுக் குதவும் விழியாம், – பவக்
கருமஇ ருளைநீக்கும் ஒளியாம் – தெய்வம்
இருக்கும் தலஞ்சல் வாசல் வழியாம் – இவரே

3. பவப்பிணி தீர்க்கும் பரிகாரி – சொல்லும்
வல்லமையில் மிக்க விபகாரி – எந்தக்
குலத்துக்கும் நல்ல உபகாரி – இவரே

4. அறஞ் செய்வதினில் ஒரு சித்தன் – கொடு
மறம் விடுபவர்க்கருள் முத்தன் – இங்கே
இறந்தோர்க் குயிரீயும் கர்த்தன் – இவரே

5. அலகைதனை செயித்த வீரன் – பவ
உலகை இரட்சித்த எழிற்பேரன் – விண்
ணுலகு வாழ் தேவ குமாரன் – இவரே

6. பொன்னுலகத் தனில்வாழ் யோகன் – அருள்
துன்ன உலகில் நன்மைத் தேகன் – நம்பால்
தன்னை யளித்த ஒரு தியாகன். – இவரே

அட்டவணை

**430. இராகம்: இந்துஸ்தானி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**இன்றைக்கே மனந்திரும்புவாய்,**
இல்லையானால் கெடுவாய்.

**அனுபல்லவி**

பின்னைக் கென்று நீ பின்னி டுவது
பிசாசின் தந்திரப் பேச்சென் றேநினை. – இன்றை

**சரணங்கள்**

1. நீதி வெட்டக் கை ஓங்குதே,
நீடிய சாந்தமோ தாங்குதே,
மாதயவோடு இயேசு இரட்சகர்
வருந்தி, பாவி, உனை அழைக்கிறார். – இன்றை

2. நாளை பிழைப்பத சாத்தியம்,
நரகப் பாடுன் சம் பாத்தியம்;
வேளை இதுவே, பரிசுத் தாவியும்
வெகுவாய்த் தூண்டப் பிகு செய்யாதே. – இன்றை

3. அந்தியக் காலம் பார்க்கலாம்,
அதுவரை தனம் சேர்க்கலாம்.
முந்திப் போகாதெனச் சிந்தை கொள்வது
மோசடியாய் முடியும், முடியும். – இன்றை

***– திரு. ஆபிரகாம் ஆல்வின், திண்டுக்கல்.***

**431. இராகம்: பியாகு. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**இன்னும் நீ என்ன செய்கிறாய் – குணப்படாமல்**
இன்னும் நீ என்ன செய்கிறாய் – தாமதமென்ன,
இன்னும் நீ என்ன செய்கிறாய் – ஓ! பாவி

**சரணங்கள்**

1. உன்னதத் திருந்த இயேசு
இந்நிலத்த வதரித்து
உன்னை மீட்க வந்தா ரல்லவா – ஓ! பாவி! – இன்னும்

அட்டவணை

2. இரட்சணிய செய்திகொண்டு,
இயேசு தாசர் வந்து நின்று,
ஓது வார்கள் நீதியைத் தானே – ஓ! பாவி! – இன்னும்

3. ஒவ்வொருநா ளும் உன் காதில்
இரட்சிப்பின் செய்தி தொனிக்க
இன்னமும் நீ தாமதிப்பதேன்? – ஓ! பாவி! – இன்னும்

4. தோழர்கள் தூசிப்பாரென்று
தூரமாக நீ நில்லாதே
ஆவ லோடெ ழுந்து வாராயோ – ஓ! பாவி! – இன்னும்

5. பகிரங்க மாக சுவாமி
உன் பாவத்தைக் காட்டும் நாளில்
பாவ மன்னிப்புக் கிடையாதே – ஓ! பாவி! – இன்னும்

6. பற்பல பா டைகளிலும்
பக்தர்களின் சாட்சிகளை
பாவிகட் கெடுத்துச் சொல்லுகின்றோம் – ஓ! பாவி – இன்னும்

**432. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**உலகமுன் சதமென்று எண்ணியிராதே**
பலவித பாதாள வலையிற் சிக்காதே

**சரணங்கள்**

1. மாதா, பிதா, மற்றுஞ் செல்வ மிருந்தாலும்
மரணம் வந்தே யுன்தன் வாழ்வைக் குலைக்கும் – உலகமுன்

2. சாவின் அகோரக் காட்சி நெருங்கையில்
பாவி நான் என் செய்வே னென்று திகைப்பாய் – உலகமுன்

3. நித்திய வாதைக்கு இரையாகி விடுமுன்
சத்தியர் பாதத்தைப் பாவி நீ தேடு – உலகமுன்

4. நரகத்தின் புழுக்களும் நெருப்பு மட்டுமல்ல
பரலோக கீதங்க ளுன்னை வதைக்கும் – உலகமுன்

அட்டவணை

5. பாவ விமோசன மிப்போதே பெறுவாய்
தாவி யுன் மீட்பரின் பாதம் பணிவாய் – உலகமுன்

**433. இராகம்: காம்போதி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**உலகில் பாவப் பாரத்தால் சோரும் – இளைப்**
பூர்ந்த நரரே, வந்து சேரும்

**அனுபல்லவி**

அலைசடிப் பட்டவரே, வாரும் – என்றன்
ஆறுதலால் அவற்றைத் தீரும் – பொல்லா – உலகில்

**சரணங்கள்**

1. பாவி என்றெண்ணித் திகைப் போரும், – என்றன்
பாவம்தீரா தென்றிருப் போரும்,
ஆவலாய் ஓடி வந்து சேரும்; – நான்
ஆகாமியர்க்காக வந்த தோரும் – பொல்லா – உலகில்

2. இளமை என்றே எண்ணி நில்லாதே, – சாவும்
இளமை என்று சொல்லிச் செல்லாதே?
வளமாய் வருவதைத் தள்ளாதே; – கெட்ட
வழக்க மிதையே கைக்கொள்ளாதே; – பொல்லா – உலகில்

3. வாலிபப் பிராய மிதில் நாளும் – இன்ப
வாழ்வு சுகிக்க வென்று மாளும்
சீலரே, இன்றென் னுரை கேளும் – அவை
சேர்க்கும் நரகத்தில் எந்நாளும் – பொல்லா – உலகில்

4. காலம் கடந்த கிழவோரே, – வீணாய்க்
காலம் கழித்தே உழல்வோரே,
காலமே தேட மறந்தோரே, – உங்கள்
கவலையைத் தீர்ப்பேன், அறிவீரே – பொல்லா – உலகில்

***– திரு. ஏசுதாசன் சவரிராயன், பாளையங்கோட்டை.***

அட்டவணை

**434. இராகம்: மோகனம்.** **தாளம்: ரூபகம்.**

**"காலமே தேவனைத் தேடு" – என்ற மெட்டு**

**பல்லவி**

**உலகையோர் நிலைஎன்றெண் ணாதே – கணம்**
ஒழிந்துபோம் உன்னோடோரடியும் வராதே

**அனுபல்லவி**

பலமாக பொக்கிசம பரத்திற்கேதேடு – வெகு
பத்திரமா யங்கே யிருக்குதே வீடு – உலகையோர்

**சரணங்கள்**

1. நிலையாது செல்வம் எந்நாளும் – அவை
நீர் குமி ழிகள்போல நிமிடத்தில் நையும்
உலையின் மெழுகு போல் உருகுமே மெய்யும்
உந்தனின் சீவனைப் பிரிக்குமே வீயும் – உலகையோர்

2. தீரம், புகழ், வெற்றி, நாசம் – மற்றும்
சேயர் மனைவி சிநேகிதர் வேடம்
தாரணி முற்றுமே தவிர்த்திடு மோசம்
சார்ந்திடில் ஆன்மாவுக் கென்றுமே தோசம் – உலகையோர்

3. வானத்தின் கீழ் யாவும் பண்டு – சால்மோன்
மாயை என் றுரைத்ததை மறவாதே கண்டு
தானத்தோ டேசுவைத் தப்பாமல் அண்டு
சாலோக நித்திய பேரின்பம் உண்டு. – உலகையோர்

**435. இராகம்: செஞ்சுருட்டி.** **தாளம்: ரூபகம்.**

**பல்லவி**

**என்தன் நிர்பந்தம் பாரும்! என் மக்களே!**
இரங்க மன மில்லையோ?

**அனுபல்லவி**

இந்துமா சமுத்திரம் தொடங்கி
இமயமலை வரைக்கும் ஐயோ! – என்தன்

அட்டவணை

**சரணங்கள்**

1. உந்தன் சோதரர் எண்ணி றந்தபேர்
உருக் குலைந்தனர் பாரீர் – என்றன்
சொந்தப் பிள்ளைகள் சோர மார்க் கத்தில்
தொலைந்து கெட்டுப் போனாரே ஐயோ – என்தன்

2. பஞ்சம் பசியுற் றோரைப் பார்க்கப்
பதறு தேஎன் உள்ளம் – யாரும்
அஞ்சும் பாழ் கொள்ளை நோயின் வாயினால்
அறுப்புண்டவர் எத்தனை? ஐயோ! – என்தன்

3. சாதி என்னும் பேயும் நுழைந்து
சகல ரையும் கலைத்தான் – அவன்
வாதினால் பல சாதிகள் எழ
வம்புகள் மிக வந்ததே ஐயோ – என்தன்

4. அருமை யாகப் பெற்ற என்பெண் மக்கள்
அந்த காரச் சிறையில் – சிக்கிச்
சிறுமை யடைந்து தவித்து நிற்பதைச்
சிந்தையில் வைப்பார் இல்லையோ? ஐயோ – என்தன்

5. இயேசு என்னும் உலக இரட்சகர்
எனக்கா கவும் மரித்தார் – பல
தேசம் அவரைப் பெற்றிருக்க அந்த
நேசா எனக்கு மில்லையோ? ஐயோ – என்தன்

**436.**

**எழுந்திடுவீர் நீர் வாலிபரே நாமும்**
இயேசுவின் நாமத்தை உயர்த்திடுவோம்
இன்னங் கொஞ்ச நேரம் இயேசு வரும்நேரம்
நித்திரை செய்யாமல் விழித்திருப்போம்.

அட்டவணை

**பல்லவி**

எழுந்திடுவோம் நாம் எழுந்திடுவோம்
இயேசுவின் வீரரே எழுந்திடுவோம்.

2. விழித்திடுங்கள் நீர் சகோதரிகளே
விளக்ககள் எரிய எண்ணெய் ஊற்றுவீர்
மணவாளன் வரும் சத்தம் கேட்பதாலே
கன்னியர்கள் நாமும் எழுந்திடுவோம் – எழுந்

3. நித்திரைகள் வேண்டாம் முதியோரே நீரும்
நேரம் வேளை தன்னை நிதானிப்பீரே;
தீர்க்கர் முற்பிதாக்கள் செப்பியவுரைகள்
தினம் நிறைவேறக் கண்ட தில்லையோ – எழுந்

4. சஞ்சலங்கள் வேண்டாம் தாய்மாரே நீரும்
தைலாபிடேகம் செய்ய வருவீர்
புதையல்கள் போன்ற புத்திரராம் பரணி
பொன்னேசர் பாதம் நீர் உடைந்திடுவீர் – எழுந்

5. போதகப் பிதாக்களே புதுப்பெலன் அடைவீர்
புறம்பான வேடம் பொய் ஒழியுமே,
ஆதித்திருச் சபையின் அனல் வேண்டுமானால்
ஆத்திரமாய் உழைப்பீர் அன்பர் பெலத்தால் – எழுந்

6. இந்து தேசம் வெல்ல யாவரும் முயல்வோம்
இயேசு முன்னே செல்வார் இனி என் பயம்
என்ன தடை வரினும் இயேசு நாமம் செயிக்கும்
இன்று முதல் யாவரும் எழுந்திடுவோம் – எழுந்

**437. இராகம்: மலையாமி. தாளம்: திரிசுரம்**

**பல்லவி**

**ஓ! தாகம் மிகுந்தவரே, அமர்ந்த**
தண்ணீரண்டை வாரும்.

அட்டவணை

**சரணங்கள்**

1. ஏகன் நானுங்களை யேஅழைக்கும் என்தன்
இன்பவாக்குத் தத்தமே – நம்பி
வேகமாக ஓடி வாருமென திடம்,
வேண்டியதைத் தருவேன். – ஓ!

2. காசு பணமது அற்றுல கந்தன்னில்
கஷ்டப் படுவோரே – விசு
வாசமாயென்னிடம் வந்து விலையின்றி
வாங்கியே சாப்பிடுமே. – ஓ!

3. பாரச்சு மையோடு பாரில் வருத்தங்கள்
பட்டு உழல்வோரே – வாரும்
நேரே, உமக்கிளைப் பாறுத லாவியை
நேசமாய்த் தந்திடுவேன். – ஓ!

4. அப்பமல் லாத பொருளையும் திருப்தி
ஆகாத வஸ்துவையும் – நம்பி
தப்பித மாய் பிர யாசத்தை யும் பணம்
தன்னையுமேன் கெடுப்பீர்? – ஓ!

5. கர்த்தரைக் கண்டடை யத்தக்க காலத்தில்
கண்டிடுமே உடனே – உன்தன்
அத்தன்சமீ பமாகஇ ருக்கும் போதே
ஆவலாய்க் கூப்பிடுமே. – ஓ!

***– மறைத்திரு. ப. மாசில்லாமணி அவர்கள், திருப்பூவணம்.***

**438. இராகம்: ஆனந்தபைரவி. தாளம்: ஆதி.**

**“பொன்னின் கிரீடம் வெண்ணங்கி” – என்ற மெட்டு.**

**பல்லவி**

**காலம் ஆதாயப்படுத்து – உனது சீவன்**
கடலின் அலையின் துரும்பு

அட்டவணை

## அனுபல்லவி

வால வயது மங்கைப் பருவம் நடுவயது
சாலச் சிதைக்கு மந்தச் சங்காரன் வருமுன்னே – காலம்

## சரணங்கள்

1. இந்த வருட மெவர்கள் – பிழைத்திடுவர்
எவர்கள் மரித்திடுவர்கள்?
தொந்தமாம் நரை திரையோ – துளிரோ எனச்
சொல்லும் செய லெனக்கில்லை
அந்தந்த வருடம் அநேகர் மடிந்தார்கள்
இந்தச் சத்திய மொன்றே எனக்குத் தெரியுமப்பா – காலம்

2. குற்றவா ளியைப்போல் – இவ்வருடத்தில்
குறித்த தின மொரு நேரம்
சற்றே தாமத முமின்றி – உன்தன் முடிவு
சடுதியாய் இருக்கு மென்றால்
அவற்றை நாள் வருவதற் காயத்தம் பண்ணினாயோ?
சிற்றின்பத்தில் மகிழ்ந்து சீவனைப் போக்கிடாதே – காலம்

3. இப்போதே இரட்சண்ணிய நாள் – இது தவறில்
எப்போதும் கிடையாது
அப்புறங் கடந்த வெள்ளம் – அணுகிவர
அழுதும் திரும்பிடாது
தப்பாது இயேசுபதம் தாழ்ந்து சரண் புகுந்தால்
ஒப்பற்ற மோட்ச வாழ்வு, உனக்குக் கிடைத்திடுமே – காலம்

4. சீவன் முடிந்த பிறகு – மனந்திரும்பச்
செயலிருக் குமென் றெண்ணாதே
ஆ வென்று திறந்திருக்கும் – அகலக்குழி
அப்புறம் திறவாது
யாவரையும் எழுப்பும் எக்காள சத்தமொன்றே
நல்லார் பொல்லார்களையும் நியாயத் தீர்ப்புக்கெழுப்பும்– காலம்

அட்டவணை

5. செங்குத்து மலைமேலே – நடக்கிறவன்
சிரித்து விளையாடு வானோ?
சிந்தை மயங்கி யேனோ – உன்தன் காலத்தை
செப மின்றிப் போக்குகிறாயே
சங்க வானவரோடு சங்கீத இராகம் பாடி
சிங்கா சனத்திருக்கும் இயேசுடன் வாழவென்றால் – காலம்

**439. இராகம்: அமிர்தபியாகு.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**குணப் பட இதுவே தருணமையா**
கோபாக் கினைநாள் கொடிதாமே.

**சரணங்கள்**

1. கணத்தில் இவ் வுலகமும்
அதிலுள்ள பொருள்களும்
தசிக்கப் படுமே, படுமே, படுமே – குணப்

2. இன்றைக்கி ருக்குமுயிர்
நாளைக்கி ருக்கு மோயென்
றெண்ணியே மனங் கசந்து, கசந்து – குணப்

3. ஆஸ்தி, கல்வி, உத்தியோக
அதிகாரத்தால் அகந்தை
ஆகிஅ ழிம்பு செய்யாதே, செய்யாதே – குணப்

4. ஆவியும் கூடுவிட்
டேகுமுன் தேவனை
யறிந்துவ ணங்கு மனமே, மனமே – குணப்

5. கனி கொடா மரங்களை
வீழ்த்துங் கோடரி ஐயன்
கரத்தி லிருக்கு தையையோ, ஐயையோ – குணப்

**440. இராகம்: செஞ்சுருட்டி.** **தாளம்: ரூபகம்.**

**பல்லவி**

**சுத்தம் தரவே, மருந்தொன் றிருக்குது**
சித்திக்கும் பக்தருக்கே.

**அனுபல்லவி**

மற்ற மருந்துகள் தின்றாலு முள்ளத்தை
மாற்ற லாகா, நாற்றம் போகா – சுத்தம்

**சரணங்கள்**

1. பாதாதி கேச பரியந்த மும்பாவப்
பாச விட முள்ளவன்
பாதக சென்மியாய்ப் பாதாள லோகத்தின்
பாத்திய தை யுள்ளவன்
பாமரமாகவே பாராமல் மந்திர
பக்குவ முமுள்ளவன் – வீணாய்ப்
பாரதமும் இராமாயண விசுவாசம்
பாரில் பரிசுத்தம் தராதிது சத்யம் – சுத்தம்

2. சரியை கிரியை இருபத்தி நாலையும்
சரியாயனு சரிப்பாய்
அறியாமல் நாலெட்ட றங்களையு மனுட்
டானித்து மேவருவாய்,
சரிதை சிவசைவ தத்துவ வேதங்கள்
சருவம் தெரிந்து ரைப்பாய் – உனை
மருவு மிருதய மாயமற இருள்
அறுதியானா லல்லோ, உறுதியாகும் நல்ல – சுத்தம்

3. ஆண்ட பொருளைய றியாதார் நற்செயல்
மாண்ட மரமணை மண்
ஆன்றோ ரிருதய ஆற்றலை மெச்சிய
சான்று மனே கமுண்டே!
வெண்கல ஓசையால், பொன்பிர காசத்தால்
அன்னதற் கென்ன பயன் – உனை
ஆண்டு நடத்தும் அக மரு ளற்றிட
வேண்டும் நற்குணம், தாண்டுந் துர்க்குணம் – சுத்தம்

4. எந்தத் திசையோரும், வந்தித்து நின்றுமே
சிந்தித்திடு மருந்தாம்
பந்த வினைகள் பறந்தோடச் செய்யத்
தகுந்த மருந்திதுவாம்
சிந்தை மெலிந்து தினந்திரி வோர்க்கிது
தேன் போன்ற நல்மருந்தாம் – தினம்
அந்தரம் பூமி யடங்கலும் மாந்தர்கள்
தின்றாலும் கொஞ்சமும், குன்றாது இரஞ்சிதம் – சுத்தம்

5. ஆனந்த லோகத்த மர்ந்த நற்பேரின்ப
ஆண்ட கையின் மருந்து
தானத்தில் வந்து தழைத்துப் பழுத்த
தயையி னருள் மருந்து
கானகத்தில் வந்து கருத்திலே நின்று
கனிந்திடு நன் மருந்து – தீய
கன்மத்தால் தீராத குன்ம வியாதியை!
கண்டிக்கும் கிறிஸ்தென்னும் கைகண்ட மருந்து – சுத்தம்

***– திரு. J.S. ஞானசிகாமணி பாகவதர், மேலைக்கலங்கல்.***

**441. இராகம்: கமாசு. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**சோபன கீதம் பாடுவோம் – சுவிசே – மேன்மை**
சொல்லிக் களிகொண் டாடுவோம்.

**அனுபல்லவி**

மாபர னான இயேசு வந்துற்ப வித்து மாசு
மாறும் நல்வழி தன்னைக் கூறும் விசேடம்,
மன்பதை கதி பெற்ற கின்ப சந்தோடம். – சோபன

**சரணங்கள்**

1. சிலுவைக் கொடி விரித்து – செங்கோ லோச்சி
செயமாய் முடி தரித்து,
அலகைதனைச் சங்கரித்து – ஒரு குடைக்கீழ்
அவனி முழுதும் வரித்து,
கொலுவாய்க் கிறிஸ்தி ருப்பார், குவலய மும்புரப்பார்,
கூஷூடன் தீவு தர்ஷூ செங்கு மிருப்பார்,
கொண்டுவந்தே தங்கள் காணிக்கை நிறுப்பார். – சோபன

அட்டவணை

2. மீட்கப் படுவார் பாடி – சீயோனுக்க
மீண்டு வருவார் கூட;
வேட்கையுடனே தேடி, – சத்தமிட்டு
மேசியாவைக் கொண்டாடி,
தாள்களெல்லா மடிப்பார், தாழ்ந்து தலை குனிப்பார்,
சாலவும் துதிகளை நாவினாற் படிப்பார்
சமஸ்தரும் இயேசுமத்தி யஸ்தரை யடுப்பார். – சோபன

***– திரு. S.S. ஏரேமியா, தெல்லிவினை, இலங்கை.***

**442. இராகம்: தீர சங்கராபரணம். தாளம்: ஆதி.**

**பல்லவி**

**தாசரே, இத்தரணியை அன்பாய்**
இயேசுவுக்குச் சொந்த மாக்குவோம்.

**அனுபல்லவி**

நேசமாய் இயேசுவைக் கூறுவோம், அவரைக் காண்பிப்போம்,
மாவிருள் நீக்குவோம், வெளிச்சம் வீசுவோம் – தாசரே

**சரணங்கள்**

1. வருத்தப்பட்டுப் பாரஞ் சுமந்தோரை,
வருந்தி யன்பாய் அழைத்திடுவோம்,
உரித்தாய் இயேசு பாவப் பாரத்தை,
நமது துக்கத்தை, நமது துன்பத்தை, சுமந்து தீர்த்தாரே – தாசரே

2. பசியுற் றோர்க்குப் பிணியாளி கட்குப்
பட்சமாக உதவி செய்வோம்;
உசித நன்மைகள் நிறைந்து, தமைமறந்து,
இயேசு கனிந்து, திரிந்தனரே – தாசரே

3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட் டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்;
பொறுக்க வொண்ணா கஷ்டத்துக்குள்,
நிஷ்டூரத்துக்குள், படுகுழிக்குள், விழுந்தனரே – தாசரே

அட்டவணை

4. இந்து தேச மாது சிரோமணிகள்,
விந்தை வொளிக்குள் வரவழைப்போம்;
சுந்தர குணங்க ளடைந்து, அறிவிலுயர்ந்து,
நிர்பந்தங்கள் தீர்ந்து, சிறந்திலங்கிட – தாசரே

5. மார்க்கம் தப்பி நடப்போரைச் சத்ய
வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்,
ஊக்கமாகச் செபித்திடுவோம், நாமுயன்றிடுவோம்,
நாம் உழைத்திடுவோம், நாம் செபித்திடுவோம் – தாசரே

**443.**

**சரணங்கள்**

**நம்ப வேண்டாம் நம்ப வேண்டாம்**
பொய் யுலகை நம்ப வேண்டாம்
நேசம் காட்டித் துரோகம் செய்யும்
பாழுலகை நம்ப வேண்டாம்

2. உன்னைப் பெற்ற மாதா எங்கே
போசித்த உன் தந்தை எங்கே
போய்விட்டாரோ போய்விட்டாரோ
உன்னை விட்டுப் போய்விட்டாரோ

3. அண்ணன் எங்கே தம்பி எங்கே
அக்காள் எங்கே தங்கை எங்கே
ஆசை யாகத் தேடி வைத்த
ஆஸ்தி செல்வம் தானு மெங்கே

4. திருட னைப்போல் சாவு வரும்
திடுக்கி டுவாய் நீயு மப்போ
பாம்பின் வாயில் தவளை போலப்
பரித பிப்பாய் பாவி யும் நீ

அட்டவணை

5. பிரேத மாகப் பாவி யுன்னைத்
தூக்கிப் போவார் கல்ல றைக்கு
அங்கே உன்னை அடக்கம் செய்வார்
நம்பு வாயோ உவகைப் பின்னும்

6. இயேசு நாதர் பாதம் தேடு
மீட்பை இன்றே பெற்றுக் கொள்வாய்
குருசில் தொங்கும் நேசர் பாராய்
குணமாக் குவார் இப்போ வாராய்

**444. இராகம்: இந்துஸ்தான் காப்பி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**நித்தியானந்தத்தை நாடு – பர**
நின்மலர் சுகந்தேடு ஓ! மனமே.

**அனுபல்லவி**

சத்திய மார்க்கந் தன்னிலே கூடு,
சர்ச்சனர் சங்கத் துடனுற வாடு – நித்தி

**சரணங்கள்**

1. இந்திர சாலம் உலக வை போகம்;
இன்றைக் கிருப்பது மே சந்தேகம்
அந்தர மின்னல் போல் அழியுமித் தேகம்
ஐயோ அதனுடன் உனக்கென்ன சிநேகம்! – நித்தி

2. தன தானிய முதலான சம்பத்து
சாஸ்வதமோ அதற்காயிரந் தத்து;
தினமுங் கவலையை விளைத்திடும் வித்து;
சீச்சி! அதனை விரும்பல் விபத்து; – நித்தி

3. மெய்யே ஒன்றுக்கும் உதவாப் பண்டம்,
மிருகாதிகள் சூழ் மாமிசப் பிண்டம்
பொய்யோ இதற்கிங்கு நித்திய கண்டம்!
புண்யஞ் செய்யுனக் காயிரந் தண்டம் – நித்தி

அட்டவணை

4. காண்பதெல்லாம் நிலை யாது, அநித்தியம்
காயமிறந்திட வேணும் அகத்தியம்
வீண்பொருள் மீதுனக் கென்னபயித்தியம்
வேதநாயகன் சொல்வதே சத்யம் – நித்தி

***–திரு. வேதநாயகம் முன்சீப், மாயவரம்.***

**445. இராகம்: சங்கராபரணம். தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**பாவம் செய்யாதே நீ பாவம் செய்யாதே**
பாவம் செய்யாதே நீ பாவம் செய்யாதே.

**சரணங்கள்**

1. தேவன் சொன்ன கற்பனைமீறித் தீமை செய்யாதே
காவல் நின்று பார்ப்பா ரென்று,
கருத்தாய் மனதில் நினைத்தே யிருநீ – பாவம்

2. எப்பொழுது சாவுவரும், என்றறி யாயே
இப்பொ ழுதே நீ திரும்பி,
ஏசுமேசை யாவை நம்பு – பாவம்

3. பெற்றதாலந் துக்களை நீ பேணாமற் போனால்
குற்ற வாளி என்றே தேவன்,
கோபங்கொள்வார் இலாபம் பண்ணு – பாவம்

4. நித்தம் நித்தம் நீ புரிந்த, நின்பாவ மெல்லாம்
கர்த்தர் எழுதி வைத்தி ருக்கும்,
கணக்கில் வழக்கில் இருக்குமல்லோ – பாவம்

**446. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி.**

**பல்லவி**

**பாவத்தின் சாபத்தைத் தீர்த்தவர் இயேசு**
தீர்த்தவர் இயேசு, தீர்த்தவர் இயேசு.

அட்டவணை

**சரணங்கள்**

1. கைலாச தூதர்கள் கீதங்கள் வெறுத்து
வையகந் தனில் இவர் மனிதனாய்ப் பிறந்தார் – பாவத்தின்

2. பாவியின் கடனை சாவினால் தீர்த்து
தாவி வரும் ஏழைப் பாவியின் பதவி – பாவத்தின்

3. முண் முடியை இவர் பூண்டார் தம் சிரசில்
புண்யம்செய் பாதையைத் திறந்தோரும் இவரே – பாவத்தின்

**447.**

**பாவத் தின்பயன் நரகம், நரகம்**
ஓ பாவி நடுங்கிடாயோ?
காண்பது எல்லாம் அழியும், அழியும்
காணாததல்லோ நித்தியம்

**பல்லவி**

இயேசு ராஜா வருவார்
இன்னும் கொஞ்சக் காலந்தான்
மோட்ச லோகம் சேர்ந் திடுவோம் – இயேசு

**சரணங்கள்**

2. உலக இன்பம் நம்பாதே, நம்பாதே
அதின் இச்சையாவும் ஒழியும், ஒழியும்
உன் சீவன் போகும் நாளிலே, நாளிலே
ஓர் காசும் கூட வாராதே – இயேசு

3. உன்கால மெல்லாம் போகுதே, போகுதே
உலகமாய் கைதனிலே, தனிலே
ஓ! தேவ கோபம் வருமுன், வருமுன்
உன் மீட்ப ரண்டை வாராயோ – இயேசு

4. தேவன்பின் வெள்ளம் ஓடுதே, ஓடுதே
கல்வாரி மலைதன்னிலே, தன்னிலே
உன்பாவம் யாவும் நீங்கிப்போம், நீங்கிப்போம்
அதில் ஸ்நானம் செய் வதாலே – இயேசு

5. மாபாவியான என்னையும், என்னையும்
என்நேசர் ஏற்றுக் கொண்டாரே, கொண்டாரே
ஓ பாவி நீயும் ஓடிவா, ஓடிவா
தேவாசீர் வாதம் பெறுவாய் – இயேசு

அட்டவணை

**448. இராகம்: செஞ்சுருட்டி** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**பாவம் போக்கும் சீவ நதியைப்**
பாராய் வந்து பாராய் – பாவி

**அனுபல்லவி**

தீவினை தீர்க்கும் தேவமறியின்
திருஇரத்த மிந்த ஆறாய், – பாவி – பாவம்

**சரணங்கள்**

1. கல்வாரி மலைச்சிகர மீதுற்றுக்
கண்கள் ஐந்து திறந்தே, – அதோ!
மல்கிச் சிலுவை யடியில் விழுந்து
வழிந்தோடுது பாராய், – பாவி – பாவம்

2. பாவச் சுமையால் நொந்து சோர்ந்து
பதறி விழுந் தலறி – நிதம்
கூவி யழுத அனந்தம் பேரிதில்
குளித்தே யுளம் களித்தார் – பாவி – பாவம்

3. பத்த ருளத்தி லிடைவிடாமல்
பாய்ந்து வள மீந்து – அதை
நித்தமும் பரி சுத்த, குணத்தில்
நிலைநாட்டுது பாராய், – பாவி – பாவம்

4. ஒருதர மிந்த நதியின் தீர்த்தம்
உண்டோர் சீவன் கண்டோர் – தாகம்
அறுதி யடைவர்; வேறொ ருநதிக்
கலையார், தேடி யலையார், – பாவி – பாவம்

5. முன்பின் ஒன்றையும் யோசியாமல்
முழுகாயோ நீ, பாவி – இந்த
அன்பின் நதியில் விசுவாசம் வைத்தால்
அதுவே போதும், பாவி – ஆ! ஆ! – பாவம்

***– திரு. S. வேதநாயகம், அரக்கோணம்.***

அட்டவணை

**449. இராகம்: ஆனந்த பைரவி,** **தாளம்: ஆதி.**

**“இம்மட்டும் சீவன் தந்த” – என்ற மெட்டு**

**பல்லவி**

**துதிக்குப் பாத்திரன் நீயே, நிதிக்கருணை வாரியே**
ததிக்குதவி செய்தாயே

**அனுபல்லவி**

துதிக்குநீ நீயே பாத்திரன் கதிக்கும் கருணை நேத்திரன்
பதிக்குள் மலபல சதிக்கனு தினமும்
ஒதுக்கி வலுசிறை பதுக்கி னோய் சுப – துதிக்குப்

**சரணங்கள்**

௧. கொள்ளை நோய் மிகுத்தெங்குமுள்ள திரளுயிர்கள்
அள்ளிச் சிதறடித்துப் போக
உள்ளமுடைந்து பெற்றோர் பிள்ளை பறிகொடுத்தோர்
கொள்ளி யழல் மெழுகென்றாக
தள்ளாதனைத் தற்பரென் றெள்ளாதெம் மேலேதயை
கொள்ள மதிகொண் டுன்ற நின்திறல்
விள்ள அருள்பொழி வள்ளலே என்றும் – துதிக்குப்

௨. சோனாமரி பொழிந்து நானாகுளம் வழிந்து
கானாறு ஒடை எங்கும் பொங்கி
மேனாட் பிரளயமே தானோவென வறியோர்
ஆனோர் ஓலமிட்டார் தியங்கி
வானோர் வழுத்துமுயர் கானான் அதிபதியே
நாணாளும் முழு வாணாளும் அரண்
ஆனாய் மலைபோல் தானாய் நின்றுமே – துதிக்குப்

௩. யுத்த முனையில் கோடி செத்து மடிந்து வாடி
இரத்த வெள்ளம் புரண்டு ஓடி
புத்தி சாலிகள் மகா சுத்தவீரர் விழுந்து
தத்தளித் தயர்ந்தார் கண் மூடி
கத்து வாரிதி சூழும் இத்தரை மீது நாங்கள்
அத்தனே மிக உத்த மர்களோ
சுத்த தண்ணளி நித்த நித்தமும் – துதிக்குப்

ச. மன்னர் மடிந்தார் தூதர் அன்னர் முடிந்தார் எங்கள்
முன்னோர் பொடிந்தார் எல்லாம் மாயை
அன்னவர் புகழ் சீர்த்தி இந்நில வாழ்க்கை செல்வம்
மின்னல் புகை நிழவின் சாயை
முன்னவனே இத்தன்மை மன்னும் மண்ணுலகிடை
அன்னையில் பரிவென்ன இடர் துயர்
இன்னல் அகற்றினை சொன்ன சொன்னபடி – துதிக்குப்

ரு. குற்றம் பொறுத்து நோய்கள் பற்றறத் தொலைத்துயிர்
முற்றும் அழிவில் நின்று மீட்டு
உற்ற கிருபை அளவற்ற இரக்கம் கொண்டு
சுற்றி வளைந்து முடி சூட்டு
கொற்றவனே அடியார் பற்றும் கொளுகொம்பே முச்
செற்றலர் சிரம் அற்றிட முழு
வெற்றி தந்திடும் பொற்றா மரைஅடி – துதிக்குப்

சா. தேவச மாதானம் இப்பாவிகள் உள்ளத் தூடு
லாவ அருள்செய் தென்றும் தேற்றி
சாவின் வழிவலக ஆவி வரமும் தந்து
சேவை செய்துன் தான்இணை சாற்றி
சீவ னுள்ளோர் நடுவே ஆவி களிகூர்ந் திந்நாள்
நாவினால் செப தூபம் வாழ்த்துரை
மேவ வகையருள் தேவ தேவனே – துதிக்குப்

எ. தூய ஆயிரத்துத் தொள் ளாயிரத் தறுபதென்
புதிய ஆண்டு கண்டோம்
சேயர் மகிழ்ந்தே எங்கள் வாயால் புகழ்ந்து பாடி
நேய துதிகள் சால விண்டோம்
காயமோ டான்மா வைஜங் காய புண்ணியத் தாலே
ஆயனே உபாயமாய் இன்னும்
நேயமோடு கா தாவீதின் செய – துதிக்குப்

***– பேராசிரியர் தா. மாசில்லாமணி அவர்கள், பாளையங்கோட்டை. இப்பாடல் இற்றைக்கு 45 ஆண்டுகட்கு முன்னர் இயற்றப்பெற்று 1915–ஆம் புத்தாண்டு நாளில் சிவகாசி நகர் கோவிலில் பாடப்பட்டது.***

அட்டவணை

**450. இராகம்: சங்கராபரணம்,** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**பாவி ஓடிவா, உன் பாவப் பாரம் தாங்க இயேசு**
பார்த்து நிற்கிறார், பரி தபித்து நிற்கிறார்.

**சரணங்கள்**

1. தாமதமென்ன! உன் சுவாமிஇயேசு தானழைக்கும்
சத்தங் கேளாயோ? அவர், தஞ்சம் தேடாயோ – பாவி

2. பின்னிடாதே நீ! உன் தன்மை யின்ன தென்றுஅவர்
முன்ன றிவாரே, தம் நன்மையீ வாரே – பாவி

3. காலம் போகுது! மாய் மாலஞ் செய்து வஞ்சியாமல்
மந்தை சேர்ந்துகொள், கிறிஸ் தன்பைச் சார்ந்துகொள் – பாவி

4. தேவ பாலனாம்! இம்மானு வேலரே உன் காவல்
தேவை வேறென்ன? உன தாவல் தான்என்ன? – பாவி

5. சுத்த சோதியே! தம் இரத்தத் தாலே உன்னை மீட்கச்
சித்தங் கொண்டிட்டார், ஆ! சிலுவை தொங்கிட்டார் – பாவி

6. நொந்த பாவியே! இவ் வந்த கார லோகந் தன்னில்
தொந்தரை மெய்யே, பல நிந்தைகள் மெய்யே – பாவி

7. சீவ அப்பம் நான்! நீ தின்று மகிழ் கொண்டு சீவன்
கண்டடை யென்றார், எனை, வந்தடை யென்றார் – பாவி

**451. இராகம்: நடபைரவி** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**பாவிக்கு நேச ராரே**
இயேசுமனு வேலரே, – ஆ! நரர்

**சரணங்கள்**

1. மாசற்ற தேவ மைந்தன் மகிமைப் பிர தாபரே
இயேசுக் கிறிஸ்து நாதரே – ஆசை, மனு வேலரே!

2. பிரயாசத் தோரே, பாரஞ் சுமந்தோரே
கிருபைப் பிதா வா வாரே – இயேசு, மனு வேலரே

3. நெரிந்த நாணல் முறியார், எரிந்த திர யவியார்
நிற்பந்தரைத் தள்ளாரே – இயேசு, மனு வேலரே

4. கெட்ட குமாரருக்குக் கிருபைப் பிதா வந்தார்
இட்டப் பிர சாதத் தாலே – இயேசு, மனு வேலரே

5. சத்துரு செய்வ தென்ன, சர்ப்பம் பொருவ தென்ன
ஸ்திரி வித்தாய் வந்தாரே – இயேசு, மனுவேலரே.

6. சீயோன் குமாரியரே, சிங்காரக் கன்னி யரே
நாயகனார் வந்தாரே – இயேசு, மனு வேலரே.

7. நித்திய விவாகமே, நீடிய சிநேகமே
பத்தினி மாதராரே – இயேசு, மனு வேலரே.

**452. இராகம்: ஜவானி.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**பாவிகளை மீட்கவந்த பரனி இவர்தாமே**

**சரணங்கள்**

1. தேவ அன்பைக் கொஞ்சமேனும், தாவித் தேடாமல்
சிற்றின்ப வலைகளிலே சிக்குண்டலையும் – பாவிகளை

2. நேசபிதா அன்பின் சத்தம், நீசர் கேட்காமல்
நான்தா னென்ற ஆணவத்தால், துன்பத்துள் ளான
–பாவிகளை

3. கல்வி பணம் உலக மேன்மை, செல்வ மென்றெண்ணி
ஐயனாரின் தாசர்களை வைது திரியும் – பாவிகளை

அட்டவணை

## 453.

**பல்லவி**

**பாவியே நீ போகும் போது, கூட வருவ தென்ன?**
கூட வருவதென்ன, கொண்டு நீ போவ தென்ன?

**சரணங்கள்**

1. ஆடுமாடு நன்செய் புன்செய் வீடுவாசல் தான் வருமோ?
பாடுபட்டு வேலைசெய்து தேடும் பணம் வருமோ? – பாவியே

2. உத்தியோக மதிப்புகளும் பி.ஏ., எம்.ஏ., பட்டங்களும்
மெத்தவே அரையில் கட்டும் ஆடைகள்தான் வருமோ
– பாவியே

3. மாயை மாயை மாயை என்று சொல்லுகிறான் பிரசங்கி
ஞாயமாய்த் தீர்ப்பு செய்தார் ஞானி சாலமோன் தானே
–பாவியே

4. தேடு நீ கண்டடைவாய் தட்டுத் திறப்பே னென்றார்
கேளு கொடுப்பேனென்றார், கேட்டவரம் தருவார் – பாவியே

## 454. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி.

**பல்லவி**

**பாவி பரம சுதன் தாவி உனைத் தயவாய்**
கூவி அழைக் கிறாரே வாராயோ – ஓ!

**அனுபல்லவி**

பூவின் பாவப் பாரத்தை மேவிச் சுமந்து தீர்த்த
தேவாட்டுக் குட்டி இதோ, பார் பார் பார் – ஓ பாவி

**சரணங்கள்**

1. ஜென்மப் பாவத்தி னோடு கன்மப் பாவமு முன்னை
சின்னப் படுத்தினதைப் பார் பார் பார் – உனின்
நன்மை ஏதுமில்லாத தன்மை அதை அறிந்து
நண்மண வாளனேசைச் சேர் சேர் சேர் – ஓ பாவி

2. சிற்றொளி வீசும் தீபம் சுற்றிப் பறந்து நிற்கும்
சிற்றுயிர் புட்கள் தனைப் போலவே – உனைச்
சுற்றி உலகளிக்கும் சிற்றின்ப மான சுகம்
தொற்றிப் பாவி நீ கெட்டாய் சாலவே – ஓ பாவி

3. எத்தனை தான தர்மம் நித்தம் பூசை பலிகள்
அத்தனை யாலும் பாவம் தீராதே – பரி
சுத்தன் இயேசு வின் திரு இரத்தம் பாவக் கறையைச்
சுத்தி கரித்திடும் நீ சேராயோ – ஓ பாவி

4. தந்தை தேவன் தமது, சொந்தக் குமாரன் தனை
தந்து உலகினைப் புரந்தாரே – நீயும்
சொந்த சேயனாகவே உந்தன் விசுவாசத்தால்
சொந்தம் உண்டாகு மென்று சொன்னாரே – ஓ பாவி

5. நீடிய பாவ மன்னிப் போடுமே பரிசுத்தம்
நித்திய சீவனுமுன் பங்காமே – இன்பம்
நாடி சீவ கிரீடம், சூடிப் பரா பரனைப்
பாடி மகிழ்வது முன் பங்காமே – ஓ பாவி

**455. இராகம்: சாவேரி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**புறப்படுங்கள் தேவ புதல்வரின் ஊழியரே**

சரணங்கள்

1. கறைபடா இயேசுநாமம் கதித்து மகிமைபெற,
பிறப்பினி லேயுங்களைப் பிரிந்த தயைநினைத்து,– புறப்

2. மாமிச இரத்தத்தோடு மயங்கி யோசிப்பதாலே
தாமசம் செய்யவேண்டாம்; தரித்தெங்கும் நிற்கவேண்டாம் –புறப்

3. அழிவின் பாதையில் செல்லும் அநேகரைக் கண்டிருந்தும்
பழி சும ராதபடி பரனுரை யைப்பகரப் – புறப்

4. சிலுவை மரத்தில் தொங்கி சீவனை விட்ட கர்த்தர்
வலுவான அன்பை உங்கள் மனதினி லேயணிந்த – புறப்

***–மறைத்திரு. சா. சீமோன் அவர்கள், மதுரை.***

அட்டவணை

## 456.

**மாயையில் மனம் ஓட வையாதே – உன்னை**
விட்டா லதுகொஞ்சமும் நில்லாதே
பாவையில் கட்டின கயறதடா – அகற்றுப்
போகக் காலம் கிட்டி வருகுதடா
ஒரு வழிபாரு, தினம் – உனை நேரு!

2. பூலோக வாழ்வதின் புகழென்ன! – பூ
வாடி உதிர்ந்தால் அதின் நிறமென்ன?
மாய உலகினி லுனக்கென்ன – சீவன்
வம்பில் விடுத்தால் அதன் பலனென்ன?
மா யையை மறந்தோடு–சுக–இடந்தேடு.

3. பலமுள்ள சிம்சோனைக் குறைவு செய்த – படு
பாதகி நீயே தாசி தெலீலாளே
மனதிழந்த மொழியைக் கேட்டாயே – படு
பாதகியே நரகவாசி நீயே
கொடு தோசி நீயே – நரகவாசி நீயே

4. கழுதை எலும்பால் செயங் கொண்டவனே – நீச
அழுது புலம்பி மாவரைப்பதென்ன?
பரகதி வாழ்வைநீ கெடுத்தாயே
பரிகாசம் பண்ண உன்னைக் கொடுத்தாயே
மதி மறந்தவனே! துயரடைந்தவனே.

**457. இராகம்: கமாசு** **தாளம்: அடதாளசாப்பு**

**பல்லவி**

**வா, பாவி, கர்த்தரின் அண்டைக்கு வா.**

**சரணங்கள்**

1. பாவியே, இன்னும் பயமின்றிப் பாவத்தில்
நிலைத்தி ருக்காதே – இப்போம்
தாவியே சோதிய ருன்னை அழைக்கிறார்
தாமதஞ் செய்யாதே வா – வா

2. பாவநா சர்உனக் கென்று சிந்தின
இரத்தம் அதோ பாராய்? உல
காசையை விட்டகன் றேசுவின் பந்தியில்
இச்சணமே சேராய்? – வா

3. ஆபத்துக் குந்தேவ கோபத்துக் குந்தப்பத்
தீவிரமாயோடி வா – உன்
பாவத்தின் சாபத்தை நீக்கவந்த பரி
சுத்தரின் அண்டைக்கு வா. – வா

4. காலத்தை வீணாய்க் கழித்துவிட் டால்இனி
யெப்போங் குணப்படுவாய்? – நீ
சாலம் பண்ணித் தேவ சாபத்தை தேடாமல்
இப்போதே குணப்படுவாய். – வா

*– திரு. அருளானந்தம் பிரசங்கியார், திருநெல்வேலி.*

**458. இராகம்: கமாசு** **தாளம்: அடதாளசாப்பு**

**பல்லவி**

**வா, பாவி, மலைத்து நில்லாதே, வா**

**சரணங்கள்**

1. என்னிடத்தில் ஒரு நன்மையு மில்லையென்
றெண்ணித் திகையாதே;
உன்னிடத்தில் ஒன்று மில்லை, அறிவேனே,
உள்ளபடி வாவேன். – வா

2. உன்தனுக் காகவே நானேயடி பட்டேன்
உன் பாவத்தைச் சுமந்தேன்,
சிந்திய என்திரு இரத்தத்தால் உன்பாவம்
தீர்த்துவிட்டேன், பாவி, வா. – வா

3. கொடிய பாவத் தழலில் விழுந்து
குன்றிப் போனாயோ?
ஒடுங்கி வருந்தும் பாவிகள் தஞ்சம்நான்,
ஒன்றுக்கும் அஞ்சாதே, வா. – வா

4. விலக யாதொரு கதியில் லாதவன்
உலகை நம்பலாமோ?
சிலுவை பாவிக ளடைக்க லமல்லோ?
சீக்கிரம் ஓடி வாவேன். – வா

5. என்னிடத் தில்வரும் பாவிக ளைஒரு
பொழுதுந் தள்ளேனே;
வன்னிய மேலோக வாழ்வை யருள்வேனே,
வாராயோ, பாவி? – வா

**459.**

**வா இயேசு பாதம்**
தருவா ராசீர் வாதம் வருவாய் ஓ இந்நேரம்
உனக்கேன் தாமதம் வாராய் தீவிரமாய்
வாச லண்டை நிற்கும் நேசர் பாராய் வா – இயேசு

**சரணங்கள்**

1. ஓ! காடு மேடாக
சாடி ஓடும் ஆடே – உன் கோனார் நாடி தேடி
வாறார் உன் காலடி நில்–நில் நீங்காமல் நில்
நாச பாதை தனில் சென்றிடாமல் வா – இயேசு

2. ஓ! கால் கரம்
கன்னம் குருதி பாயு தின்னும் உருகுதவர் உள்ளம்
உனக்கேன் கல்மனம் பார் பார் மார்பினில் பார்
பாரிலுனக்காய் தாம் பலியானார் வா – இயேசு

3. ஓ! பஞ்சைப் போல்
தஞ்சம் உன் நெஞ்சதனில் கொஞ்சம் ஓ! பஞ்சரித்து
கெஞ்சும் குரல்
கேள் இக்கணம் கேள் கேள் நேசர் குரல்
வேகமாய் திறந்திடுவார் வாசல் வா – இயேசு

**460.**

**பல்லவி**

**வா வா நேசா, வளர்சுவி சேடத்தின்**
மதுதனை யுண்டிடவே

**அனுபல்லவி**

தேவா மிர்தமாம் சீவனைக் கண்டிட
சாவா மிர்தமாம் சாமியை அண்டிட – வா வா

**சரணங்கள்**

1. சீவ போசனம் சீவ நீரதும் தினமும் சுரந்திடுமே
தினமும் பார்த்திட, தினமும் கேட்டிட, சிந்தை வரும் திடமே
பாவ மனைத்தையும் பாகுட னழித்திடும்
ஓவா மகிழ்ச்சியை உளமதில் தந்திடும் – வா வா

2. நாணா துலகினில் நலம்பல அடைந்திட நல்ல வழிதருமே
நன்மை எடுத்துடன் தின்மைவிடுத்திட நல்ல மனம்வருமே
காணாக் கடவுளைக் கண்ணினில் காட்டிடும்
தோணா நலனதைச் சுபமுட னூட்டிடும் – வா வா

3. கோரக் காப்பிரி கொல்லும் தீவினர் கொடுமை நீக்கியதே
கோடா கோடியாய் நரரைக் கூட்டிநல் குணமே தாக்கியதே
சோரர்கள் சூதினர் சுத்தராய் மாநில
மீதும் மாறியே பெருமையில் தேறினர் – வா வா

4. இயேசு நாமம தெங்கெங் குலாவுமோ இன்பம் அளித்திடுதே
இனிய மறையது இடமே தேடிடில் இதயம் மகிழ்ந்திடுதே
பேசிடும் மொழியதை பேறுடன் நல்கிடும்
வீசிடும் ஒளியதை வீறுடன் நீட்டிடும் – வா வா

அட்டவணை

5. கரும்பைப் புசித்திடக் கையில் கூலியைக் கனிவாய்க்
கொடுப்பாருண்டோ
கண்டிலும் மேலதாய் இனிக்கும் பொருளதைக் கடிந்து
தடுப்பாருண்டோ
விரும்பியே எடுத்திட வேதமே வேறில்லை
திரும்பியே அடுத்திட தேவரும் வேறில்லை – வா வா

**461. இராகம்: சங்கராபரணம் தாளம்: ரூபகம்**

**பல்லவி**

**வாருங்கள் வாருங்கள் தோழிப் பெண்காள்**
வாழ்த்திநம் தோழிக்குப் பூ முடிக்க.

**சரணங்கள்**

1. ஆதாமுக் கேவையை அலங்கரித்து
அழகிய சோலையி லமைத்து வைத்த
நாதக்க டவுளை நமஸ் கரித்து
நலமுட னவர்துணை நாடி யின்று – வாருங்கள்

2. பூச்செண்டு, பூமாலை புனுகு பன்னீர்
புதுப்பட்டுப் புடவைகள் பொன்ந கைகள்
உச்சித வச்சிரக் கற்களுடன்
உவப்புடன் உற்றாரெல் லாருங்கூடி – வாருங்கள்

3. மணம்புரி ய வரும் மணவாளன்
மங்கை மலர்ந்தமு கம்பார்த்து
குணமான கண்மணி தானுமிவள்
கூடிய மனையாளு மென்றறிய – வாருங்கள்

4. அன்புள்ள நம்முடை தங்கையரும்
அருமைத்தம் நேசம ணாளனுடன்
இன்புற்றென் னாளும்இப் புவிதனிலே
ஈசன் கிருபையில் வளர்ந்தோங்க – வாருங்கள்

*– மறைத்திரு. V. ஞானபரணம் அவர்கள், ஆள்வானேரி.*

அட்டவணை

**462. இராகம்: பைரவி** **தாளம்: அடதாளசாப்பு**

**பல்லவி**

**வான இராச்சியம் வந் ததோ ஓகோ!**
மாந்தரே! தவம் செய்யும்; ஓகோகோ!

**அனுபல்லவி**

ஆன சாட்சி, தியான சூட்சி, மெய்ஞ்
ஞான காட்சியர் தோன்றினார்;

**சரணங்கள்**

1. மன்னவன் கிறிஸ் தாதிபன் வந்தார்,
வாகுறப் பவமே ஒழிந்திட வே குணப்படு வீர்களே;
என்னிலும் பெரியார், வலியார் அவர்
இந்நி லத்திடை மேவினார்; உயர் உன்னதக் கிருபை ஆழமே!
- வான

2. பிந்தி வந்தவர், முந்தி இருந்தவர்;
பேசரும் பொருளார், பரம்பர நேசர், நம்கரு ணாம்பரர்,
சுந்தரப் பரிபூரணர், காரணர்,
சோதிசொந்த அனாதி மைந்தன் இம்மாதிரந்தனில் மேவினார்
- வான

3. அண்ணலார் பாதரட்கையின் வாரையே
அவிழ்க்க 'வாய்மையில் எடுக்க, அல்லது சுமக்கப் பாத்திரன்
அல்ல நான்;'
திண்ணம் என் முழுக் கோசலத் தீர்த்தமே;
தீயினாலும் அரூபியாலும் ஸ்நானமே அவர் ஈகுவார். -வான

4. வேதமார் பரிசேயர் சதுக்கேயரே,
வீம்புத் துட்டமுறு தீம்புக் கெட்டகுண
பாம்புக்குட்டிவிரியன்களே,
போதவே வரும் கோபத்துக்குத் தப்பிப்
போவதைத் திடமாய் உமக்கிது போதிவித் தெவர் காட்டினார்?
- வான

5. மரத்தின் வேர் அருகே முன் கோடாலியும்
வைத்திருக்குது பத்திரத்துடன் எச்சரிக்கை விடாதேயும்;
வரத்தில் நற்கனி தான்தரு தாத் தரு
வைத்திடக் கிடவெட்டி மிக்கழல் அக்கினிக்கிரை யாக்குவார்
– வான

6. தூற்றுக்கூடை கரத்தில் இருக்குது;
துறையினில் தம துரியநற்களம் மற விளக்கி, அறுதியிலே
தோற்றக் கோதுமை கேயத்தில் சேர்த்துமே
தீயதுர்ப்பதர் ஆனதைத் தழலால் எரிப்பர் இந் நேரமே –வான

***– திரு. வேதநாயகம் உபாத்தியாயர்.***

**463. இராகம்: லாவணி. தாளம்: ஆதி**

**பல்லவி**

**தேன்இனி மையிலும் ஏசுவின் நாமம்**
திவ்ய மதுரமாமே; – அதைத்
தேடியே நாடி ஓடியே வருவீர்,
திருச்சபை யானோரே

**சரணங்கள்**

1. காசினி தனிலே நேசம தாகக்
கஷ்டத்தை உத்தரித்தே – பாவக்
கசடதை அறுத்துச் சாபத்தைத் தொலைத்தார்;
கண்டுணர் நீ மனமே – தேன்

2. பாவியை மீட்கத் தாவியே உயிரைத்
தாமே ஈந்தவராம்; – பின்னும்
நேமியாம் கருணை நிலைவர முண்டு;
நிதம்துதி என் மனமே. – தேன்

3. காலையில் பனிபோல் மாயமாய் உலகம்உ
பாயமாய் நீங்கிவிடும் – என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு
கருத்தாய் நீ, மனமே – தேன்

4. துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல
துணைவராம் நேசரிடம், – நீ
அன்பதாய்ச் சேர்த்தால் அணைத்துனைக் காப்பார்;
ஆசைகொள் நீ, மனமே – தேன்

5. பூலோகத் தாரும் மேலோகத் தாரும்
புகழ்ந்து போற்று நாமம் – அதைப்
பிடித்துக்கொண் டால்தான் பேரின்ப வாழ்வை
பெறுவாய் நீ, மனமே – தேன்

***– ஆ. சவரிமுத்து போதகர், திண்டுக்கல்.***

**464.**

**“வாருமையா போதகரே” என்ற மெட்டு**

**இந்துதேச மாதர்நாமும், எழுந்திடுவோம் இயேசுவுக்காய்**
சுந்தரமைந் தன்துணையால், சோதிளங்கும் வீசிடுவோம்

2. இருள்நிறைந்த புவியிலெமக் கேகனொளி காட்டினாப்போல்
அருளின்றி தவித்திடுவோர்க் காதரவே புரிந்திடுவோம்

3. காலையில்நாம் எழுந்திடுவோம், காத்தன்முகம் கண்ட பின்னே
வேலையில் நாம், தரித்திடுவோம், விளக்கொளிபோல்
விளங்கிடுவோம்

4. அன்புடன்பொ றுமைதினம், ஆபரண மாக்கிடுவோம்
இன்பமிகும் குடும்பசெபம், என்றுமேகை விடாதிருப்போம்.

5. நாம்வளர்ப்போம் நம்சிசுவை, நலமிகுந்த பாதைகளில்
சாமுவேலைப்பொ லனுதினமும், சுவாமிதரி சனமடைய.

6. காட்டிடுவோம் வீட்டிலன்பை, கண்டிடுவோர் மகிழந்திடவே
வீட்டிலில்லா வெளிச்சடங்கை வேஷமென்று விலக்கிடுவோம்.

7. ஆலயம்நாம் ஏகிடுவோம், அன்பர்கூடி தொழுதிடவே
சாலவுமே மாதர்சங்கம், தழைத்திடவே உழைத்திடுவோம்.

8. இயேசுவென்னும் சுந்தரனை இதயமதில் இருத்திடுவோம்
காசினியில் கதிபெறவே, ஆசிபுரி பவரவரே.

அட்டவணை

## 6. திருமணம், இல்வாழ்க்கை

**465. இராகம்: ஆங்கிலம்** **தாளம்: ஆதி.**

**கண்ணிகள்**

**ஆசீர்வதியும் கர்த்தரே, ஆனந்த மிகவே**
நேசா உதியும் சுத்தரே, நித்தம் மகிழவே

வீசீரோ வான சோதி கதிரிங்கே
மேசியா எம்மண வாளனே
ஆசார்ய ரும்வான் இராசனும்
ஆசீர் வதித்திடும்.

2. இம்மண வீட்டில் வாரீரோ, இயேசு இராயரே
உம்மணம் வீசச் செய்யீரோ, ஓங்கும் நேசமதால்

இம்மண மக்கள் மீதி றங்கிடுவீர்
இவ்விரு பேரையும் காக்கவே
விண்மக்க ளாக நடக்கவே
வேந்தா நடத்துமே.

3. இம்மண மக்க ளோடுமே என்றென்றும் தங்கிடும்
உம்மையே கண்டும் பின்சென்றும், ஓங்கச் செய்தருளும்

இம்மையே மோட்ச மாக்கும் வல்லவரே
இன்பத்தோ டன்பாக்கி சூட்சமே
உம்மிலே தங்கித் தரிக்கவே
ஊக்க மருளுமே.

4. ஒற்றுமை யாக்கும் இவரை, ஊடாக நீர் நின்றே
பற்றோ டும்மையே சார்ந்துமே, பாரில் வசிக்கவே

வெற்றிபெற் றோங்கும் இவர் நெஞ்சத்திலே
வீற்றாளும் நீர் இயேசு இராசனாய்
உற்றவான் இராயர் சேயர்க்கே
ஒப்பாய் ஒழுகவே.

5. பூதல ஆசீர் வாதத்தால், பூரண மாகவே
ஆதரித் தாளும் கர்த்தரே, ஆசீர் வதித்திடும்

மாதிர ளாக இவர் சந்ததியார்
வந்துதுதித் தும்மைப் பிரஸ் தாபிக்க
ஆ தேவ கிருபை தீர்மானம்
ஆம் போல் அருளுமேன்.

6. ஞானவி வாகம் எப்போதும் ஞாபக மாகவே
வானம ணாளன் வாஞ்சித்து, வாழ்க மனையாளை

ஆனந்த மாக தூய தன்மையதை
ஆடையாய் நீர் ஈயத் தரித்து
சேனையோ டேநீர் வரும் வரையில்
சேர்ந்து சுகிக்கவே

**466. இராகம்: துசாவந்தி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**இந்த மங்களம் செழிக்கவே – கிருபை செயும்**
எங்கள் திரித் துவ தேவனே.

**அனுபல்லவி**

சுந்தரக் கானாவின் மணப் பந்தலில்சென் றம்மணத்தைக்
கந்தரசமாகச் செய்த விந்தைபோல், இங்கேயும் வந்து. – இந்த

**சரணங்கள்**

1. ஆதி தொடுத் தன்பை எடுத்தாய்; – மானுடர் தமை
ஆணும் பெண்ணு மாகப் படைத்தாய்;
நீதி வரம் நாலுங் கெடுத்தாய் — பெற்றுப் பெறுகி
நிற்க உலகத்தில் விடுத்தாய்;
மாதவர் பணியும் வேத போதனே, அந்தப்படி உன்
ஆதரவைக் கொண்டு சுதன் நீதியை நம்பிப் புரிந்த – இந்த

அட்டவணை

2. தக்க ஆபிராமும் விண்டனன் – அதனை மன
துக்குள் எலியேசர் கொண்டனன்;
முக்கிய காரன் நிலத்தண்டினன்; – நினைத்தபடி
சக்கிமதாகக் கண்டனன்;
பக்குவம் உரைத்திடா ரெபேக்காளும் ஈசாக்குவுக்கு
தக்கமண வாட்டியாகத் தந்து தயை செய்தாற்போல. — இந்த

3. சத்திய வேதத்தின் வாசனே, – அருளுபரி
சுத்த சுவிசேட நேசனே,
பக்தர்கள் பவ விமோசனே – பழுதணுவும்
அற்ற கிறிஸ் தேசு இராசனே,
வெற்றியால் யாக்கோபுவுக்கு முற்றிலும் அளித்த பேறாய்
புத்திர சம்பத்துண் டாக்கி நித்ய சுப சோபனமாய்.– இந்த

***– வேதநாயகம் சாத்திரியார்.***

**467. இராகம்: இந்துஸ்தானி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**இம்மணர்க் குன்னருள் ஈ பர வாசா,**
இயேசுக் கிறிஸ்தையா, ஓ! சருவேசா!

**சரணங்கள்**

1. செம்மையும் நன்மையும் செல்வமும் தாரும்,
தேவரீர் இவ்விரு பேரையும் காரும். –இம்

2. ஆதாமோ டேவையை அன்றமைத் தீரே
அவ்வித மாகநீர் இன்றுஞ்செய் வீரே –இம்

3. அன்பன் ஈசாக்கு ரேபேக்காட் கிரங்கி,
ஆபிர காமுடன் சாராளைக் காத்தீர். –இம்

4. உன்தயை பெற்றிவர் ஓங்கிப் பெருகவும்,
ஒருவர்க் கொருவர்நல் லன்பில் நிலைக்கவும். –இம்

5. தாழ்மை பொறுமைகள், சற்குண மேன்மைகள்
தந்தும தாவியைக் கொண்டுகாத் தாளுமேன். –இம்

6. இயேசு கிறிஸ்துவை நேசித்து வாழவும்
இன்ப விசுவாச வீட்டார் என்றாகவும். –இம்

***– மறைத்திரு. பா. தாவீது அவர்கள், டோனாவூர்.***

**468. இராகம்: சங்கராபரணம். தாளம்: ஆதி.**

**பல்லவி**

**இயேசுநாயகா, வந்தாளும் – எந்நாளும், திவ்ய**
இயேசுநாயகா, வந்தாளும்

**அனுபல்லவி**

ஆசீர்வாத மாக இந்த நேச மணமே நன்றாக, – இயேசு

**சரணங்கள்**

1. சுந்தரம் மிகும்படி முன் அந்த மண வீட்டில்
உந்தன் அருள் தந்த தயை போல, அன்பாலே, – இயேசு

2. உத்தம சன்மார்க்க நெறி, பக்தி, விசுவாசம்,
நித்திய சமாதானம் உற்றுவாழ, மிக வாழ, – இயேசு

3. துங்கம் மிகு நன்கனம் விளங்கி, வளமாக
மங்களம் தோங்க, நலம் தாங்க, நலம் தாங்க, – இயேசு

4. நித்திய சுபசோ பனமோ டெத்திசையி னும்பெருகப்
புத்திர சந்தானமே செழிக்க, தழைக்க, – இயேசு

***– வேதநாயகம் சாத்திரியார்.***

**469.**

**சித்திர வர்ணப் பொற்சரிகைச் சேலை யுடுத்தி – இரு**
சேல்விழிக்கு மையுமிட்டு மஞ்சள் குளித்து

2. இரத்தின மூக்குத்தி புல்லாக்கும் தரித்து
இன்பமாய் முருகு கம்மல் காப்பும் தரித்து

3. முத்துச் சரப்பளி பதக்கங்களுடனே
மோகன மாலை வைரத் தாலி அழகும்.

அட்டவணை

4. கட்டிய இ டைதனிலே ஒட்டி யாணமும்
காலிலிடும் பாதரசம் தண்டை கொலுசும்.

5. வைத்திருக்கும் சடை பின்னல் மயிர்மாட்டியும்
வன்மை மிகும் நெற்றிப்பிறை யாவும் தரித்து.

6. இவர்கள் இட்டர் பந்துக்கள் எல்லாரும் வாழ
இவர்கள் பெற்றுப் பெருகி என்றும் வாழவே.

**470. இராகம்: தேசிக தோடி. தாளம்: ரூபகம்**

**“தேவா பரகிறிஸ்து தேவா பரதேவா” – என்ற மெட்டு**

**பல்லவி**

**தேவா இந்த நேரம் நின்னாசீர் வாதந் தா – பரம**

**சரணங்கள்**

1. அன்று கானாவூர்க் கலியாணம் சென்று சிறப்பித்தீர் – ஆ! ஆ!
நன்று மிகவே இன்றிங் கேஇம், மன்றல் சிறந்திடவே
சத்ய தேவா.

2. ஆதிமூலனே நீதிகுணாளனே, சாதிகள் நேசனே – ஆ! ஆ!
தீதில்லாமலே மாது மணாளனும் வாழ்ந்து சுகித்திடவே
சத்ய தேவா.

3. ஈந்திடும் உந்தன் ஆவி நிறைவாய், ஆடவர் மங்கையர்க்கு
– ஆ! ஆ!
பகர்ந்திடும் இகபர நன்மை பாக்யம் சகல சம்பத்துடன்
சத்ய தேவா.

4. இன்று இம்மண பந்தலில் நாங்கள், இனசன பந்துக்களாய்
– ஆ! ஆ!
இங்கித மாகவே இட்டருங் கூடி, மங்களங் கொண்டாட
சத்ய தேவா.

**471. இராகம்: போர்த்துக்கீஸ். தாளம்: ஆதி.**

**பல்லவி**

**பாரும் உந்தன் கிருபைக் கண்ணாலே**
பக்தர் இருவரை பாலியத் தோழரை.

**அனுபல்லவி**

சேரும் நின்னருள் பெற்றுப் பெருகிட
செகத்தினில் உம்மையே போற்றித்து தித்திட – பாரும்

**சரணங்கள்**

1. ஆபிராம் ஈசாக்கு யாக்கோபின் தேவனே
அன்றுஏ தேனில்இ ணைத்தஇ றைவனே
சம்பிரம மாகஇந் நிலைமைக் குட்பட
சந்தோச மாய்உம்மை ஏற்றித்து தித்திட – பாரும்

2. ஆரஞ்சு புட்பத்தின் அற்புத வாடையும்
அழகான மல்லிகை முல்லையின் மணமும்
சோராக ஆரங்கள் சூடியி ருப்பதும்
சொக்குது சொக்குது சோதிப்பட் டாடைகள் – பாரும்

3. கோத்திரத் தில்இவர் எப்ராயீம் போலவும்
வாய்த்திறந் தில்ஆரோன் ஆரியர் போலவும்
நீதி நெறிதவ றாமல் என்றுமி ருக்கவும்
நித்திய பாக்கியம் நன்றுகி டைக்கவும் – பாரும்

4. கானாக்கல் யாணப்பந் தலில்இயே சுவோடு
கூடிவி ருந்துகொண் டாடின தேபோலும்
தானாக மோடியு டன்இங்கெ ழுந்துமே
தயை வைத்து துணைசெய்ய துரிதமா கவந்து – பாரும்

5. சேர்ந்திவர் யோசிக்கும் காரிய சித்தியும்
தேர்ந்தஉ மதருள் தேடும்நற் புத்தியும்
பெற்றோர்உற் றோர்களின் பேர்புகழ்ச் சியையும்
உற்றுணர்ந் திப்புவி யில்வாழ்ந்தி ருக்கவும் – பாரும்

அட்டவணை

6. மணவாளன் ................... வாழ்கவே
மணவாட்டி ................... வாழ்கவே
இணைபிரி யாதேஇ வர்களி ருவரும்
எந்நாளும் கனிந்து மகிழ்ந்துசு கிக்கவும் – பாரும்

**472. இராகம்: நவரோஜ். தாளம்: ரூபகம்.**

**பல்லவி**

**பூச் சொரிவோம் புண்ணியரே மாப்பிள்ளை பெண்மேல்**
பூமக்கள் இவரிருவர் புகழ்ந்து வாழவே

**சரணங்கள்**

1. கானாக் கல்யாணமதில், கனிரசந் தந்த
வானாகரன் வந்திங்கு, வாழ்வு தரவும் – பூச்

2. பலகால மாயிவர்கள், கருணை பெறவே
ஞாலமதில் வாழ்வு பெற, ஞானமுடனே – பூச்

3. இத்தரையில் பக்தியதாய், நித்தமும் வாழ
உத்தமனே நீ இவர்மேல், உறுதி கொள்ளவே – பூச்

4. இந்தமணப் பந்தலிலே, இயேசு வரவே
சந்தோசமும் மங்களமும், என்றும் தங்கவே – பூச்

5. ஆதிமண மக்களையும், ஆசீர் வதித்தே
ஆண்டுகொண்ட ஆண்டவனைத், தோத்திரஞ் செய்தே – பூச்

6. அன்றுமின்று மென்று மான, அல்பா ஒமேகா
அடிபணிந்து நிற்குமண மக்களைக் காக்க – பூச்

**473.**

**பல்லவி**

**மங்களம் செழிக்க கிருபை அருளும்**
மங்கள நாதனே

அட்டவணை

**சரணங்கள்**

1. மங்கள நித்திய மன்னவ நீ
மங்கள முத்தியும் நாதனும் நீ
எங்கள் புங்கவ நீ, எங்கள் துங்கவ நீ
உத்தம சத்திய நித்திய தத்துவ மெத்தம கத்துவ
அத்தனுக் கத்தனாம் ஆபிரகாம் தேவ நீ – மங்களம்

2. மணமகன் ..........................................................
மணமகள் ..........................................................
மானு வேலர்க்கும் மகானு பவர்க்கும்
பக்தியுடன் புத்தி முத்திய ளித்திடும் நித்திய னேஉனைத்
துத்தியம் செய்திடும் சத்திய வேதர்க்கும் – மங்களம்

3. சங்கை நித்திய நாதனும்நீ
பங்கமில் சத்திய போதனும் நீ
மங்கா மாட்சிமைநீ, தங்கக் காசியும் நீ
இத்தரை இத்திரு மணத்தின் இருவர்
ஒத்து நல் இன்பம் உற்றவர் வாழ நடத்தி யருளுமே – மங்களம்

**474. இராகம்: லாவணி. தாளம்: மட்டியம்.**

**பல்லவி**

**மங்களமணி மங்களமணி மங்களமணியே**

மங்களமணி மங்களமணி மங்களமணியே

**சரணங்கள்**

1. இராச இயேசு பாலனுக்குத் துதி என்றுமே
இராசாதி ராசனுக்குப் புகழ் என்றுமே.

2. கானாவில் சென்றுஅங்கே இரசம ளித்தாற்போல்
காதலனே இங்கெழுந்தும் தாவி ஈயுமே.

3. இன்றும ணம்புரியும் இவ்விரு வருடன்
இறையவனே என்றுமிவர் இதயந் தங்கவே

4. உற்றார்பெற் றார்யாவ ருங்க ளிக்கவே
உரிமையான நேசர்கூடி பாதம் பணியவே.

5. உந்தனருள் பெற்றவராய் வாழ்க வாழ்கவே
புத்திரசந்தா னம் பெற்று வாழ்க வாழ்கவே.

**475. இராகம்: பியாகு.** **தாளம்: ஆதி.**

**மங்கா சுபகன மங்களமே – மனம்**
நீங்கா திம்மணர் மக்கள் பெறவே – நிறை
சிங்கா தனபதி நீ அருளே
மங்களம் மங்களம் மங்களமே.

**பல்லவி**

ஓங்கா உனதருள் நீங்கா
துன்னொளி தாங்கா
சகலமும் வாங்கா – திருவடி

**சரணங்கள்**

2. கானாவூர்க் கலியாணக் குறைவை நீக்கி – நல்
சோனா ரசமது பொழிந்தவர் நீர் – இம்
மணமக்கள் இருவர் மேலுமே நீர்
உம்மா சீர்வாதம் இன்றருளும் – ஓங்கா

3. ஈசாக்கு ரெபேக்காள் போலிவர்கள் – நல்
ஈசனருள் வரம்பெற்று வாழ – நம்
ஈசாயின் கிளையை அண்டினோ ராய்உம்
நாம மகிமைக் கென்றுழைக்க – ஓங்கா

4. தந்திவர் தமதகம் உமக் கென்றுமே – ஆதி
உந்தனின் செபத்தகம் பதித்தென்றுமே – வரும்
தந்திர சோதனை செபித் தென்றுமே
சந்ததம் சந்ததம் சந்ததமே. – ஓங்கா

5. பாடகர் பாடலின் கவி பலிக்க – தூதர்
பாடிய கீதங்கள் நிதமுடிக்க – மண
மாப்பிள்ளை பெண்மேல் பதம் படிக்க
நித்திய திறையரு ளேசெழிக்க. – ஓங்கா

6. மங்களம் சோபனம் உமக்கென்றுமே – எம்
மங்கள கீர்த்தனம் துதி உமக்கே – புகழ்
தங்கும் தோத்திரம் என்றென்றுமே
ஆவிபி தாசுத னான வர்க்கே – ஓங்கா

**476. இராகம்: இந்துஸ்தானி, காப்பி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**மண வாழ்வு புவி, வாழ்வினில் வாழ்வு**
மங்கல வாழ்வு வாழ்வினில் வாழ்வு
மணவாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
மருவிய சோபன சுப வாழ்வு

**சரணங்கள்**

1. துணைபுரி யாது, தோகை யிம்மாது
சுப மண மகளிவர் இது போது
மண முறை போது வசனம் விடாது
வந்தன ருமதருள் பெறவே இப்போது, – நல்ல – மண

2. சீவ தயாபரா, சிருட்டிய திகாரா;
தெய்வீக மாமண வலங்காரா,
தேவ குமாரா திரு வெல்லை யூரா,
சேர்ந்தவர்க் கருள் தாரா திருப்பீரா – நல்ல – மண

3. குடித் தன வீரம், குணமுள்ள தாரம்,
கொடுத் துங் கொண் டாலது சமுசாரம்,
அடக்கஆ சாரம், அன்பு, உதாரம்,
அம்புவி தனில்மனைக் கலங்காரம் – நல்ல – மண

4. மன்றல் செய் தேவி, மணாளனுக் காவி,
மந்திரம் அவற்குரை மேதாவி
அன்றியிப் பூவி லமிர்த சஞ் சீவி,
அவளையில் லாதவ னொரு பாவி – நல்ல – மண

அட்டவணை

**477. இராகம்: பிலகரி.** **தாளம்: ரூபகம்.**

**பல்லவி**

**மலரெடுத்துப் பூ முடித்து**
மண மக்கள் மேல் சொரிவோம், தங்காய்!

**அனுபல்லவி**

குணமகள் மாது மங்கை குலுங்க
கொன்னைப்பூ, தென்னைக்பூ, கன்னிப்பூ நன்னிப்பூ

**சரணங்கள்**

1. காலா கால மாயிவரை, கண்மணிபோல் பாது காத்து
ஞால மதில் வாழ்ந்தி ருக்க
ஆலம்பூ வேலம்பூ ஞாலம்பூ, ஏலம்பூ – மலரெடுத்து

2. நித்தியசீ வவழியில், பக்தியுடன் னேநடந்து
எத்தருண முங்களிக்க
அத்திப்பூ, அகத்திப்பூ, துத்திப்பூ, பிச்சிப்பூ – மலரெடுத்து

3. இந்த மணப் பந்தலிலே, சந்ததமும் வாழ்ந்திருக்க
விந்தையுடன் கணங் களிக்க
வேந்திப்பூ, கேந்திப்பூ, சேந்திப்பூ, சிவந்திப்பூ – மலரெடுத்து

4. வேதம்வி ளம்புமலரில் விண்மலர் தான்பொறுக்கி
ஆதரவில் வாழ்ந்தி ருக்க
தாளம்பூ, மல்லிப்பூ, ரோசாப்பூ, மகிழம்பூ – மலரெடுத்து

5. அம்பரத்தில் வாழ்ந்திருக்க, அமலனார் கிருபையுடன்
அனவ ரதம் சுகித் திருக்க
ஆளன்பு, மெய்யன்பு, வேதன்பு, இயேசன்பு – மலரெடுத்து

6. மணவாளன் .................. மணவாட்டி .....................
குணமுடனே வாழ்ந்திருக்க
கற்புப்பூ, தாழ்மைப்பூ, அன்புப்பூ, இன்பப்பூ – மலரெடுத்து

அட்டவணை

478.

**"அன்னே கண்ணே மின்னே" – என்ற மெட்டு**

**பல்லவி**

**மனோ சனே இன்னே! நினதருள்புரி சுகிர்த**
மனோ சனே பொன்னே.

**சரணங்கள்**

1. சோடி இலை என வாடினான் ஆதம் தேடினான் சும்மா
பாடினான்
நீடி அவனிடம் ஓடினை, துணை சூடினை, கூத்தாடினான்
மோடி மங்களம் பாடுகிறோம் – மனோ

2. காணா ஊர்க் கலியாண நாயர் நீர்தானா வரமனந் தானா காண்
சோனாரசம் பொழி பானா எம்மொடு தானா தனதாயிரு ஞான
மீனா ஓம்பிர தானா அடியார்குல. – மனோ

3. ஒலிவக் கன்றுக ளொப்பப் பின்னடி பலுகப்பெருக அருள்கூரே
ஒலுகா தொலிமுக வாயிலெதிர் செய மொலிக்கக் கெலிக்கப்
பலன் தாரும்
பலியாய் சோபன தோத்திரமே – மனோ

4. வாசன் பக்தியின் நேசனின் சகவாசன் தொண்டு செய் ஈசனாம்
பாரன் .................... பாரி .....................
ஆசீரோடு வாழ்க சுந்தர – மனோ

5. தந்தை இவரன்னை சோதரும், இனபந்து உறவினர் யாவரும்
பந்தலிதிலே அமர்ந்து காண்கின்ற எந்த நேசரும்
எந்நாளும், கந்தமாக வாழ்க சுந்தர – மனோ

**479. இராகம்: ஆங்கிலம்** **தாளம்: ஆதி**

**கண்ணிகள்**

**மாம்பூ மகிழம்பூ மணக்கும் ஞான மல்லிகைப்பூ**
பூப்பூ புனிதம்பூ பூமான் தாவீது வங்கிஷப்பூ

2. ஜோதியாய் வந்தபூ சொலித்து வழங்கும் ஞானப்பூ
நீதியாய் நிறைந்தபூ நித்தம் நம்மைக் காக்கும் பூ

3. ஆதியா யிருந்தபூ ஆதிரையில் வந்த பூ
தேவ தேவ தேவன்பூ தேசிகர்கள் புகழும் பூ

4. சின்னப் பூ சிறியபூ தேசத்தார் புகழும் பூ
அன்னப்பூ ஆசைப்பூ அண்டினோரைக் காக்கும் பூ

5. வானுலகை விட்டபூ மண்ணில் வந்து தித்த பூ
பாலனாக வந்தபூ வாசத்தால் நிறைந்த பூ

6. தேசியர் அணியும்பூ தேசத்தோர்கள் மொய்க்கும் பூ
வாசமாய் நிறைந்தபூ வண்மையுடன் காக்கும் பூ

7. கானாவூருக்கு வந்தபூ கலியாணத்தில் புகழ்ந்த பூ
கனிரசத்தைக் கொடுத்தபூ களங்கமில்லா ஞானப் பூ

8. நீடூழி வாழும் பூ, நித்தியமாய் காக்கும் பூ
காலை மாலை துதிக்கும் பூ, காத்தத்துவ முள்ள பூ

9. பிச்சிப்பூ பின்னைப்பூ பின்னால் வரும் சொர்ணப் பூ
எத்திசைக்கு மேற்றபூ ஏகமாய் நிறைந்த பூ

10. இந்தமண மக்களை சொந்தமாய்க்கைக் கொண்ட பூ
என்று மிவரை ஆளும்பூ இயேசுக் கிறிஸ் தென்ற பூ

**480.**

**“நித்தம் அருள் செய் தயாளனே” – என்ற மெட்டு**

**பல்லவி**

**வந்தாள்இம் மண வீட்டிலே – மண**

வாளரில் அன்பு பாராட்டியே, சுவாமி.

அட்டவணை

**சரணங்கள்**

1. ஏது மில்லாத காலத்திலே, ஆதம்
ஏவையைப் பூங்கா வனத்திலே
ஆதரவா யிருபேரும் சிநேக
ஆகியே நாளும் வாழ
நாதனே இம்மணர் இருவரையும் காரும்
நலமுடன் உனதருள் புரிபரி வாக – வந்தாள்

2. சுந்தரச் சீயோன் குமாரியை, உனை
துதித்தக மகிழுஞ் சிங்காரியை
கந்த மணமுடிக்க என்மனந் தேறி
கலியாணம் செய்துகொண்ட கருணையின் வாரி
இந்தமணருக் குந்தன் அருள்வரம் சூடி
இரட்சிக்க வேண்டும் பரஉப காரி – வந்தாள்

3. பூமகன் பூமகள் வாழ்கவே, இவர்
புத்ர சந்தானத்துடன் வாழ்கவே
கலியாணத்திற்கு வரும் யாவரும் வாழ்க
கலியாணக் காரியம் கைகூடி வாழ
தாரணில் தேவ குமாரனின் நாமம்
சங்கீர்த் தனம்பெற்றுச் சந்ததம் வாழ – வந்தாள்

## வீட்டுப் பிரதிட்டை

**481.**

**"உனக்கொத்தாசை வரும் நல்" – என்ற மெட்டு**

**பல்லவி**

**பிரதிட்டை செய்ய வாரும், பெரியோனே! இந்த வீட்டை**

**அனுபல்லவி**

நரரான நாங்கள் தினம் நாடி உம்மைத்து திக்க – பிரதிட்டை

அட்டவணை

**சரணங்கள்**

1. நாச உலக மதில் வாசம் செய்கிற போது
நேசா நீர் கிருபையாய் ஈந்தீரே இவ்விடத்தை – பிரதிட்டை

2. கர்த்தர் வீட்டை கட்டா ராகில் கட்டுவார் பிரயாசம் வீண்
மெத்தவும் வேலை செய்து போசனம் புசிப்பதும் வீண்
– பிரதிட்டை

3. தமக்குப் பிரிய மான தாசர்க்குச் சுகமுள்ள
நித்திரையும் கொடுத்து நிதமும் ஆசீர்வதிப்பார் – பிரதிட்டை

4. இந்த மனையில் வாசம் செய்யும் பிள்ளைகள் மேலே
சந்தத மும் கிருபை கூர்ந்திடும் அன்பினாலே – பிரதிட்டை

5. அக்கினி புயல்காற்று ஆபத்துத் துன்பம் தொல்லை
நோய் சாவு மோசம் ஒன்றும் நுழையாமல் காருமையா
– பிரதிட்டை

6. தங்கி செபிக்கும் மக்கள் சத்திய ஆவியினால்
பொங்கிப் பூரித்து புதுப்பிறவியாய் மாறச் செய்யும்– பிரதிட்டை

7. தண்ணீரைச் சுத்தம் செய்து தாராளமாய்ப் பெருக்கி
புண்ணிய ரேநீர் எல்லாம் பொற்கரம் வைத்துத் தொடும்
– பிரதிட்டை

8. மன்றாட்டுக் கெல்லா முடன் மறுமொழி அருளியே
ஒன்றாகச் சேருமையா உம்மோடு எங்களையே – பிரதிட்டை

9. தேவா காப்பாற்றும் தேவ தூதர் துணையு மிங்கே
காவலாய் நிற்க வேணும் கலக்க மில்லாமல் காரும் – பிரதிட்டை

10. நித்திய வீடு பர லோகத்தில் எமக் குண்டு
பக்தியுள் ளோர்க்காய் இயேசு வைத்தார் இதையே ஈண்டு
– பிரதிட்டை

11. பிதா சுத னாவியர்க்கும் தோத்திரம் தோத்திரமே
ஆதி முதலே எல்லாக் காலமு முண்டாகவே – பிரதிட்டை

அட்டவணை

## 7. மரணம், மோட்சம்

**482. இராகம்: பியாகடை.** **தாளம்: சாப்பு.**

**பல்லவி**

**ஆ, ஆ! பூலோக வாழ்வே! அநித்தியம்**

**அனுபல்லவி**

சாகா வரங் கொண்டு, யார்தான் இப் புவி வந்தார் – ஆ ஆ

**சரணங்கள்**

1. கதைபோல் வருடங்கள், கழியுதே வீணாய்
அதை யோ சித்துனது, ஆத்துமம் பேணாய் – ஆ ஆ

2. புகைபோல் பறக்குதே புகலற்ற வாணாள்
திகையா தேசு பாதம் தேடிக்கொள் இந்நாள். – ஆ ஆ

3. தனமோ பல சொத்துப் பணம் வண்டி ரோதை
மனமோ அதில் வைப்போன், மதியற்ற பேதை – ஆ ஆ

4. புல்லோ புல்லின் கண் பூவோ இவ்வாணாள்
கல்லோ அதையுற்றுக் கவனிப்பா யானால் – ஆ ஆ

5. சிறுகால் மனைமக்கள், சேர்க்கை யோர்சந்தை
ஒருகால் உலைந்திடும், உனக்கென்ன விந்தை – ஆ ஆ

**483. இராகம்: காப்பி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**கல்லும் அல்லவே – காயம், – வல்லும் அல்லவே – இது**

**அனுபல்லவி**

வெள்ளி, பொன் விலைமதியா மேரும் அல்லவே. – கல்லும்

**சரணங்கள்**

1. வல்லமை பேசாதே, நாளை வருவதறியாய் – அதால்
நல்ல வழி தேடி, தேவ நாமத்தைத் தியானி. – கல்லும்

2. சூரியன் கீழ்க் கண்டதெல்லாம் மாயை அல்லவோ?–சால்மோன்
பார்அறிய சொன்னதை நீ பார்த்தறி யாயோ? – கல்லும்

3. காற்றடித்த மேகம்புகைக் கொப்பதாநியே, – இங்கே
போற்றிய மனுடர் சீவன் போய்ஒழியுமே. – கல்லும்

4. வேகமாய் வடியும் ஆற்றுக் கொப்பதாகவே, – மாய
தேக நரர் நாட்களும் சீக்கிரம் கழியுமே. – கல்லும்

5. இராப்பகல், இருள்,வெளிச்சம் மாறும் வண்ணமே – ஐயோ!
நாட்களின் மகிழ்ச்சிக்குமா மாறுதல் உண்டே. – கல்லும்

6. பூவதும் உதிரும், பசும் புல்லும் வதங்கும். – அது
போலவே நரர்உருவம் மாறி வதங்கும். – கல்லும்

7. கொஞ்ச நாள் செயம் சிறப்பான், பஞ்சை மனுடன்; – அவன்
கெநஞ்ச நோய்வந் தால்கிடங்பான், தொஞ்சு போவானே
– கல்லும்

8. மேலது கீழ், கீழதுமேல் ஆம் உருளைபோல்; – நரர்
மேன்மையும் வாழ்வும் கீழது மேலும் ஆகுமே. – கல்லும்

9. பூவுலகின் மேன்மை என்ன? மா தரித்திரன் – போல்,
யாவரும் வணங்கும் இராசன் சாவும் ஒக்குமே – கல்லும்

10. எத்தனை கற்றாலும் என்ன? சுத்தப் பேதைக்குச் – சரி
ஒத்தபடி செத்துப் போவான், முற்றும் மண்ணாவான். – கல்லும்

11. நுண்ணிமை ஞானி என்றாலும் கீர்த்திபெற்றாலும், – ஐயோ!
அன்னவன் மலையும் நேரம் யாவும் கலையும். – கல்லும்

12. வெள்ளச் சேதத்துக்கும் பல விக்கினத்துக்கும் – பார்
கொள்ளைக்கும் சடுதியில் போம், கூட்டும் ஆஸ்தியே.–கல்லும்

13. ஆசனம், துரைத்தனம், தத்துவங்கள் ஒழியும்; – அர
சாண்ட மன்னரும் ஒருநாள் மாண்டொ ழிவார்கள். – கல்லும்

14. கொஞ்ச நாள் மின்னுக்கும் நர ரின் சிறப்புகள் – செருக்கை
வெஞ்சிறு பூச்சிகள் அரிக்கும், வீ அழிக்குமே – கல்லும்

15. யாவும் ஒட்டமாகப் பாயும், யாவும் அழியும்; – மெய்
தேவபக்தியே கெலிக்கும்; சீவன் நிலைக்கும். – கல்லும்

***–வேதநாயகம் சாத்திரியார்.***

அட்டவணை

**484. இராகம்: செஞ்சுருட்டி.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**நாசலோக மீதிலே வாசஞ்செய் புறாவன்னமே**
இயேசுநேசர் உன்னைத் தேடுகிறார் – அதி ரூபியே
என்னோடே எழுந்துவா ஓடி நடந்து வாவே

**சரணங்கள்**

1. வாசலிலே நிற்கிறார் பாசமா யழைக்கிறார்
நாசமில்லா லோகமதற்கு – அதிரூபியே

2. பரமண்டலம் சேரலாம் சுரமண்டலம் பாடலாம்
தரை மண்டலத் துள்ள நேசமே – அதிரூபியே

3. தங்க ரூப மாகலாம்அவர் தம்மின் ரூப மாகலாம்
மங்களங்கள் பாடலாமே – அதிரூபியே

4. வெண் துகில் உடுப்போம் வெண்கொடி பிடிப்போம்
கண் திறந்து பார்க்க மாட்டாயோ – அதிரூபியே

5. மேகமீதி லோடுவோம்சங் கீதமாகப் பாடுவோம்
தாக மில்லையோ அதின் மேலே – அதிரூபியே

6. சீவ கிரீடம் தரிப்போம்நித்ய சீவனோடே யிருப்போம்
சீவ வாக்கு உரைக்க வில்லையோ – அதிரூபியே

7. ஞான மணவாளனின் கலி யாண விருந் துண்ணலாம்
வானவரின் கூட்டம் கூடலாம் – அதிரூபியே

8. சீவ மன்னா புசிப்போம் சீவ தண்ணீர் குடிப்போம்
சாப மெல்லாம் தொலைக்கப் போறாரே – அதிரூபியே

9. தங்கரத்தினக் கோட்டைகள் சிங்காரமான ஆலயம்
மங்காமல் துலங்குது பார் – அதிரூபியே

அட்டவணை

**485. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார்,**
வானெத் தெக்காளத் தொனி முழங்க

**அனுபல்லவி**

எரி புகை மேக இரத மேறி
இயேசு மகா ராசன் வருங்கால். – மரித்தோர்

**சரணங்கள்**

1. தூதர் மின் னாற்றிசை துலங்க,
சோதி வான் பறை இடி முழங்க,
பாதகர் நெஞ்சம் நடுநடுங்க,
பரிசுத்தோர் திரள் மன திலங்க. – மரித்தோர்

2. வானம் புவியும் வையகமும்
மட மட வென்று நிலை பெயர,
ஆன பொருளெல்லாம் அகன் றோட
அவரவர் தம்தம் வரிசையிலே. – மரித்தோர்

3. அழிவுள் ளோராய் விதைக்கப்பட்டோர்
அழியா மேனியை அணிந்திடுவார்;
எளிய ரூபமாய் விதைக்கப்பட்டோர்
என்றும் வாழும் சோதிகளாய் – மரித்தோர்

4. சமுத்திரம் தன்னில் விழுந்தோரை,
தரை, தீ, தாமும் தின்றோரைச்
சமூலம் தந்தது கணப்பொழுதில்
சருவேசன் நடுத் தீர்வைக்கென்றே – மரித்தோர்

***– மறைத்திரு. S.G. இயேசுவடியான் அவர்கள், புதியம்புத்தூர்.***

**486. இராகம்: காப்பி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**பொன்னகர் பயணம் போகும் புண்ணியர்களே, – மகிமை**
என்னவென் றுரைக்க வல்லோர் யாருமில்லையே.

அட்டவணை

**சரணங்கள்**

1. உன்னத சுதனுக் கேதும் ஒப்புமை யுண்டோ? – அவர்
தன்னுதிரந் தந்துகொண்ட தன்மை யருமை. – பொன்னகர்

2. இலாசருக் கழுத கண்ணீர் நம்முடையதே; – அவர்
நேசமார்பில் சாய்ந்து கொள்ளும் நித்திரையிதே. – பொன்னகர்

3. வந்தழைத்துப் போயென்னோடு வைப்பேனென்றவர் – இன்று
வந்தழைத்துப் போகு மேன்மை மாந்தருக்குண்டோ?
–பொன்னகர்

4. மண்ணினாலுண் டான வுடல் மண்ணேயாயினும், – இயேசு
தன்னுரு வோடே யெழும்பும் சத்திய மிதே. – பொன்னகர்

5. கண்ணீர் துடைத் தெம்மையாற்றும் கர்த்தரருகில் – நின்றோர்
நண்ணியே சீவகனி யுண்டு இன்னல் நீங்குவார். – பொன்னகர்

6. ஆட்டுக்குட்டி யானவர் சிங் காசனங் கண்டு – புதுப்
பாட்டுகள் பாடும் சுத்தர்க் கூட்டமடைந்தார். – பொன்னகர்

7. கர்த்தருக்குள்ளே மரிப்போர் பாக்கியரென்று – சொல்லும்
உத்தம வேதத்தி னுண்மை யுன்னத மல்லோ? – பொன்னகர்

***– திரு. S. வேதநாயகம், அரக்கோணம்.***

**487.**

**“நான் சீவ பயணம் போகிறேன்” – என்ற மெட்டு**

**பல்லவி**

**என்னுடன் வருவா ரேசு – இயேசு, இயேசு**
என்னுடன் வருவா ரேசு.

**சரணங்கள்**

1. இப்பாதையின் மேன்மை கூறுவேன் – என்னுடன்

அட்டவணை

2. நான் பயமில்லாமல் போகலாம் - என்னுடன்

3. அநேக தடைகள் சந்திப்பேன் - என்னுடன்

4. எல்லாவற்றையும் மேற்கொள்ளுவேன் - என்னுடன்

5. நான் நித்திய இராச்சியம் சேருவேன் - என்னுடன்

6. என் நெஞ்சின் மகிழ்ச்சி நிறையவும் - என்னுடன்

7. என்றென்றும் இராச்சியத்தில் வாழுவாய்- என்னுடன்

8. நீயும் இப்பாதையில் சேருவாய் - என்னுடன்

**488. இராகம்: சங்கராபரணம். தாளம்: ஆதி.**

**பல்லவி**

**அந்தோ காண்கிறேன் – என**
தருமை ரட்சகர் சமுக சன்னிதி

**அனுபல்லவி**

ஆ! பார்! போவோம் வா, வா நேசா - அந்தோ

**சரணங்கள்**

1. சுந்தர சீலமும் சுகந்த வாசமும்
இந்திர நீலமும் இதர கோலமும்
கலந்த காட்சி, கலந்த சாட்சி - அந்தோ

2. கேரூபின் கூடுது சேராபீன் பாடுது
பேரோசை யாகுது பேரொலி கேட்குது
சிறந்த காட்சி, சிறந்த மாட்சி - அந்தோ

3. பன்னிரு வாசலும், பளிங்கு வீதியும்
மின்னொளி வாசலும், மூப்பர் சூழ்தலும்
என்ன பகட்டு, என்ன பகட்டு - அந்தோ

4. இரத்தச் சாட்சிகளும், நன்முனி வோர்களும்
சுத்தர்கள் தீர்க்கரும், தூய சீடரும்
பந்தி பந்தியாய், பந்தி பந்தியாய் - அந்தோ

அட்டவணை

489.

**பல்லவி**

**ஆனந்தக் கண்ணீர் பொழியும் தேசமதில்**
நான் அன்பர் இயேசுவின் பொன்முகம் காணுவேன்

**அனுபல்லவி**

சந்தோசமே அது சந்தோஷமே – எனக்
கானந்தமே பர, மானந்தமே இயேசு – ஆனந்தக்

**சரணங்கள்**

1. முன்னொரு நாளில் என் கண்ணீரைக் கண்டவர்
என்னிலிருந்து துயரை எடுத்தவர்,
இந்நிலந் தன்னில் இவருக்கு நிகரெவர்
என்னுள்ளில் தங்கு மியேசுமா ராசன்போல் – ஆனந்தக்

2. ஒவ்வொரு நாளிலும் இயேசு என்னுடனே
ஒவ்வொரு சோதனை தன்னிலு மிருப்பார்.
சாரி இளைப்பாற இயேசுவின் மார்புபோல்
பாரில் நினைத்திடில் வேறென றெனக்கில்லை – ஆனந்தக்

3. யுத்தக் களத்தில் என் சேனைத் தலைவரும்
யுத்தத்தில் யாதுமே தோல்வி வரவிடார்
ஆதி யிடைகடை தோல்விபோல் தோன்றுகில்
ஆத்திர மாயன்பர் தாங்கி நடத்துவார் – ஆனந்தக்

4. தாயை யிழந்துயான் தந்தை மறந்து என்
வேலை இனம் ஜனம் யாவும் மறந்தேன் நான்
என்னிடன் தங்கிடும் இன்ப மாராசன்
தன்பாதம் சரணம் எல்லா மெனக்கவர் – ஆனந்தக்

5. என்னை மறவாத காருண்ய பூமானே
உன்னை நினைத்து நான் என்ன செய்வேன், ஐயோ!
என்றும் எனக்குள்ள தெல்லாம் மறந்து நான்
இன்று மென்று முமக் கூழியம் செய்குவேன் – ஆனந்தக்

அட்டவணை

**490.**

**இன்பக் கானானுக்குள் ஏழை செல்ல**
இயேசுவின் மார்பில் நான் ஆனந்திப்பேன்.

2. பரம சுகங்களின் இனிய ரசம்
பரமேச னோடு யான் பானம் செய்வேன்.

3. பரம பிதாவெந்தன் கண்ணி னின்று
அழுகையின் கண்ணீரைத் துடைத்திடுவார்.

4. சத்துரு சேனைகள் அங்கே யில்லை.
இயேசுவின் புத்திரர் மாத்திரமே.

5. தேவாட்டுக் குட்டியின் திருமனைவி
சிறப்புட னிலங்கிடும் தேசமது.

6. கேரூபின் சேராபீன்கள் பாடிடவே
மூப்பரும் சாஷ்டாங்கம் பணிகிறாரே.

7. சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டிடாதே
சொர்க்கலோக நாட்டுக்கோர் இணையில்லையே.

8. பரிசுத்த ஆவியின் பளிங்குநதி
பளபளென் றொழுகிடும் தேசமது

9. சீவ விருட்சமாங்காற்றருகில்
மாதந் தோறும் புதுக் கனி தருமே,

10. நவரத்ன நிர்மிதப் பட்டணத்தில்
இராப்பகல் சூரியன் இயேசு தாமே.

**491.**

**இன்பமே றும்கானான் நாடதில்**
ஏழையேன் சீக்கிரம் செல்லுவேன்
என் மனக் கண்ணீரும் ஓய்ந்திடும்!

அட்டவணை

### பல்லவி

வாழும் காலம் வருது வாழும் காலம் வருது
பாக்கியமே நும்கானான் நாடதில்

### சரணங்கள்

2. எகிப்தையே விட்டு யான் இயேசுவின் துணையால்
செங்கடல் தாண்டியே மறு கரை சேருவேன் – வாழும்

3. பார்வோனின் சேனைபோல் பாவமே தொடர்ந்தால்
பார்த்திபன் ஆக்கினைக் கடலினில் ஆழ்த்துவார் – வாழும்

4. மாராவின் தண்ணீர்கள் எட்டிபோல் கசந்தால்
இயேசுவாம் கிளையால் இனியநீர் ஆக்குவேன் – வாழும்

5. ஏலியீன் சலமே எழுபது மரமும்
இயேசுவின் கிருபையால் ஏழையேன் காணுவேன் – வாழும்

6. சீன் வனாந் தரத்தின் பொருள்மன்னா வைப்போல்
தேவனே ஏவிய வேதமே ஏகுவார் – வாழும்

7. அமலேக்கு யுத்தத்தில் ஏழையேன் சோர்ந்திடில்
ஆண்டவர் சோதியில் வேண்டியே நிற்கிறார் – வாழும்

8. கானானின் கனியை முன்னமே புசிப்பேன்
இந்நிலம் தன்னிலே இயேசுவை ருசிப்பேன் – வாழும்

9. எரிகோவும் ஆயியும் என்தனுக் களிக்க
இயேசுவே யோசனை சொல்லுவார் நித்தமும் – வாழும்

10. ஒளியின் தூதனும் கிபியோ னியர்போல்
ஏய்க்கில்என் அடிமை ஆக்குவார் அவனை – வாழும்

11. மரணமாம் யோர்தானை வீரமாய்த் தாண்டியே
சீவனாம் கானானில் என்றுமே வாழுவேன் – வாழும்

அட்டவணை

**492. இராகம்: லாவணி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**உச்சித மோட்ச பட்டணம் போக**
ஓடி நடப்போமே, – அங்கே
உன்னத இயேசு மன்னவ ருண்டு,
ஓயா இன்பமுண்டு.

**சரணங்கள்**

1. சித்திரச் சீயோன் பெற்றிடச் செல்லும்
சேனையின் கூட்டமதாய், –எங்கள்
சீவனிதிபர் இயேசு நம்மதிபர்
சீயோன் பதி மனுவேல். – உச்சித

2. அன்பினால் அழைப்பார், ஆறுதல் சொல்வார்
அதிபதி இயேசையர்; – அங்கே
இன்பங்க ளுண்டு; இயேசுவின் சமூகம்
என்றென்றும் ஆறுதலே. – உச்சித

3. கீதங்களோடு இயேசுவைப் போற்றிக்
கெம்பீரமாய் நடப்போம்; –அங்கே
கிளர் ஒளியுள்ள பட்டன ராசன்
கீதங்கள் நாம் அறைவோம். – உச்சித

**493.**

**உன்னத வீட்டை சீக்கிரம் சென்று**
அன்பரைச் சேர்ந்திடுவேன் – ஆ ஆ – என்
இயேசு இரட்சகர் ஏழையின் வாஞ்சை
யாவையும் தீர்த்திடுவார்

2. தூதரின் மத்தியில் மகிழ் கொண்டாடிட
தூயனைப் போற்றிடுவேன் – ஆ ஆ – கமழ்
கமிழ் வாசனை வீசும் பூக்களின் மத்தியில்
இன்பமாய் அமர்ந்திடுவேன்

3. உன்னதத் தேவர்கள் பல ஊழியம் செய்ய
ஏழையும் சேர்ந்து கொள்வேன் – ஆ ஆ – என்
இயேசுவின் துதியை நாவினால் பாடிட
நேசரால் அகமகிழ்வேன்.

4. பளிங்கு நதியின் ஓரங்க ளில்நான்
பாடி உலாவிடுவேன் – ஆ ஆ
பசும்பொன் வீதியில் அன்பருடன் நான்
பரியுடன் அடியெடுப்பேன்

5. நன்மர முண்டு பறவைகள் உண்டு
நானும் அங்கே உண்டு – ஆ ஆ – நம்
பராபரன் தாமே எனக்காய்ச் சேர்த்த
பொருட்களும் மெத்த உண்டு.

6. பேதுரு யோவான் பவுலும் கூடிய
பெரியோர் ஓய்ந்திருப்பார் ஆ ஆ – என்
எள் ஏசுவின் வீட்டில் மகாபெரும் இன்பம்
ஆ ஆ ஆனந்தமே

**494. இராகம் : சிந்து பைரவி.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**என்ன சுகம்!, ஆகா! என்ன சுகம் – என்**
இரட்சகரின் சமுகப் பேரானந்தம் – பர
மானந்த மோட்ச சுகானந்தம் – அதைப்
பெற்று அநுபவித்தால், என்னசுகம்!

**சரணங்கள்**

1. பொன்னகர் வீதியில் என்னேரம் பாடலாம்
கின்னரம் தம்புர் வீணை இன்னிசை கொட்டலாம் – என்ன

2. தங்கக் கிரீடம் தலையில் தரிக்கலாம்
சிங்கா சனத்தில் சொகுசா யிருக்கலாம் – என்ன

3. சீவ நதியில் குளித்துக் களிக்கலாம்
சீவ விருட்சக் கனியும் புசிக்கலாம் — என்ன

4. வெற்றிப்பொன் வெண்ணங்கி தரித்துக் கொள்ளலாம்
சுத்தப் பொன்னால் செய்த வீதியி லுலாவலாம் — என்ன

5. கர்த்தரோ டெப்போதும் சீவித்து வாழலாம்
அத்தனின் சமுகம் தரிசித்து ஆளலாம் — என்ன

6. வாட்டம் பசிதாகம் பட்டினி சாவில்லை
கேட்டின் மனுடர்வந்து, கிட்ட இருப்பதில்லை — என்ன

7. மேசியா நித்தமும், மேய்த்து நடத்துவார்
ஆசீர் வதித்து அரவணைத்துக் கொள்வார் — என்ன

8. நேசரின் இரத்தத்தால் மீட்பை அடைந்தவர்
ஆசன மீ திருந்து, செய கீதம் பாடுவார் — என்ன

**495.**

**கண்ணிகள்**

**சமயமாம் இரதத்தில்யான்**
மோட்ச லோகம் போகிறேன்
என் சுதேசம் காண்பதற்காய்
ஆத்திரமாய் ஓடுறேன்.

2. இன்னும் கொஞ்சம் நேரமதில்
என் பயணம் முடியும்
என் பயணமதி னந்தம்
நாளடைவில் சமீபம்.

3. கங்குலில் நான் கடவுளின்
கரமதில் தூங்குவேன்
அப்போத மென் இரதவேகம்
எப்போதைப் போலோடிடும்.

4. காலையில் நான் விழிக்கையில்
இன்பமாம் என் நம்பிக்கை
இயேசுவை நான் கண்டிடுவேன்
என்பதாலே தோத்திரம்.

5. தேகமதி னின்ப சுகம்
தேட நேர மில்லையே
சொந்த நாட்டில் தெய்வமுகம்
காண்பதே என் வாஞ்சையாம்.

6. பாரமான யாவற்றையும்
தள்ளியே நாம் ஓடுவோம்
கொஞ்சம் அப்பம் புசித்திட
தண்ணீர் கொஞ்சம் பருக.

7. தலம் கூற மா விசேடம்
பலம் என்ன மதுரம்
வேண்டாமே இப் பூவுலகம்
அல்லவே என் நகரம்.

8. என்னை எதிரேற்க வேண்டி
தேவதூதர் வருவார்
தேவையான புதுப் பெலன்
நித்தம் நித்தம் ஈகுவார்.

9. பரிசுத்த ரின் ஒளியின்
பாவி யானும் புகுவேன்
பரமனைத் துதித்து யான்
பயணத்தை முடிப்பேன்

**496. இராகம்: ஆங்கிலம். தாளம்: ஆதி.**

**தேவ ஆசனத்தின் முன்ன தாகவே**
சீவநா யகரின் சந்நிதியிலே
ஓயாப் புகழ் தூயர் தூயர் எனவே
ஒன்றாய்ப் பாடு வோம்

அட்டவணை

2. பாவ ரோகம் கண்ணீர் யாவற் றோடுமே
பாடு நோய் துயரம் பறந் தோடுமே
தேவ கிருபா நதி தீரத்தில் நின்றே
தினமும் பாடுவோம்

3. எண்ணி முடியாத ஏகக் கூட்டமாய்
இயேசு இரட்சகரின் சாயல் தரித்தோர்
வெண்ணு டைதரித்து வேந்தர் எனவே
வியந்து பாடுவார்

4. தங்க மாளிகையில் தங்குவோம் நாமே
மங்காச் செங்க திரோன் மத்தி தனிலே
எங்கள் குருவேசு நாதர் அருகே
என்றும் பாடுவோம்

5. பூவோர் கண்டிராத மேன்மை யுள்ளதாய்
பொங்கும் நீர் பளிங்கு போல் துலங்குமாம்
சீவ நதி என்னும் ஆற்றி னழகாம்
தீரத் தில் நின்றே

6. வீதி தன்னில் விளையாடுவோம் நாமே
சாதி வித்தியாசச் சாபம் நீங்குமே
நீதிமான்கள் வாழ்வு நித்யமா மங்கே
நிதமும் பாடுவோம்.

**497. இராகம்: துவிஜாவந்தி.** **தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**நடப்போம் வாருங்கள் சீயோன் மலைக்கு**
நாமனைவரும் போய் வருவோம்

அட்டவணை

**அனுபல்லவி**

சிங்கா சனங்களைச் சுற்றிப் பார்த்து
சந்தோ சங்கொண் டாடியே களிகூர — நடப்போம்

**சரணங்கள்**

1. தேவாதி தேவன் தூதர்கள் சூழ
சிறந்த மகிமையில் வீற்றிருக்க
லோகாதி மீட்பர் லோகத்துக் கொளியாய்
வலதுபாரி சத்தில் கொலு விருக்க
நாலாறு மூப்பர் இராசாவைச் சுற்றி
ஆசனங் களில்வீற் றிருக்க
தூதர்கள் சேனைகள் ஓயாத் தொனியாய்
தேவனைத் துதிக்கும் அவ்விடத் திற்கு — நடப்போம்

2. வீதிக ளெல்லாம் பொன் மயமாக
வைர இரத்தினங் கள்பதித்து
நீதியின் சூரியன் நிறைந்த ஒளியாய்
அவைகளின் மேலே இலங்கையிலே
சோதியின் மயமாய் சம்மன சோர்கள்
சூழ்ந்து லாவும் சமயத்திலே
பாவி கட்காக தேவாட்டுக் குட்டி
பரிந்து பேசுவ தைநாம் பார்க்க — நடப்போம்

3. தற்பர தேவன் வெற்புச் சீனாயில்
கற்பனை பத்தும் தந்திருக்க
அற்பமா யெண்ணி நிற்பாக் கியராகி
சற்பனை செய்த தருணத்திலே
விற்பன கிறிஸ்து அற்புத மாய்மரி
யாளு திரத்தில் உற்பவித்து
ஆடு கட்காக பாடுகள் பட்டு
வீடுபோய்ச் சேர்ந்து பாடு வதாலே — நடப்போம்

அட்டவணை

# VII. மங்களம்

## 1. ஆராதனை முடிவு

**498. இராகம்: கௌசிகம்.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**ஆசீர்வாதம் வேணும், ஆவியான சீவ தேவ.**

**சரணங்கள்**

1. தேசிகமே லோகபதி, தேவதிருப் பாதமதில்
செல்ல, வெல்ல, வல்ல, நல்ல - ஆசீர்வாதம்

2. பட்சமுடன் கூடிசுவி, சேமடலர் சூடிகவி
பாட, ஆட, நாட, தேட - ஆசீர்வாதம்

3. பூரணவிசு வாசசெபம், பூததயை தியானதவம்
புரிய, உரிய, அரிய, பெரிய - ஆசீர்வாதம்

4. காண்பிதயை நண்புடனே, கண்மணிபோ லன்புடனே
காவா, மூவா, தேவா, வாவா - ஆசீர்வாதம்

5. அத்தனேஉன் பாடுகளை, அன்புடனே சிந்தைசெய்ய
ஆசை யுள்ள, ஆவல் கொள்ள - ஆசீர்வாதம்

**499. இராகம்: இந்துஸ்தான் காபி.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**ஏற்றுக்கொண்டருளுமே, தேவா! – இப்போ**
தேழையேன் செபத்தை இயேசுவின் மூலம்.

அட்டவணை

**சரணங்கள்**

1. சாற்றின ஆதி ஆயத்த செபமும்,
சாந்தமாய் செபித்த பாவ அறிக்கையும்,
தேற்றிக்கொண் டருளும் மன்னிப்பின் மருவும்
இயேசுவின் பாதத்தில் வைக்கிறேன், சுவாமி. – ஏற்றுக்

2. குறைவுண்டு இதிலே அருமைப் பிதாவே,
குற்றம் மன்னித்திடும் இயேசுவின் மூலம்;
முறைப்படி கேட்கநான் தெரியாத பாவி;
முழுதும்மே சையாமேல் வைக்கிறேன், சுவாமி – ஏற்றுக்

3. மறுரூப ஆவி வேண்டுமென் சுவாமி,
மனமெல் லாம்புதி தாக்கிடும் சுவாமி;
சிறுமைப்பட் டடியேன் கேட்கிறேன் சுவாமி;
தேற்றிடும், புதுப் பலன் ஊற்றிடுஞ் சுவாமி – ஏற்றுக்

4. விசுவாசம் பெருகி நிலைத்திடச் செய்யும்;
வெளிப்படும் மறைபொருள் புலப்படச் செய்யும்;
சிசுவைப்போல் மறுபடி பிறந்திடச் செய்யும்;
தேவாவி என்னுளந் தங்கிடச் செய்யும் – ஏற்றுக்

**500. இராகம்: வசந்தபைரவி.** **தாளம்: ஆதி.**

**கண்ணிகள்**

**வந்து நல்வரம் தந்தனுப்பையா – ஆதி நாதா, ஜோதீ,**
வல்ல ஆவியை வார்த்தெ முப்பையா.

2. பண்ணின செபம் எண்ணிக்கேள் இன்னும் – ஆதிநாதா, ஜோதீ
பண்பாய் உள்ளினில் பதிந்தே ஆளென்றும்.

3. காதில் கேட்ட உன் கோதில் வாக்கியம் – ஆதிநாதா, ஜோதீ
கருத்தில் இருத் தப்போதே பாக்கியம்.

அட்டவணை

4. புறத்தில் சென்று அறத்தைச் செய்யவே, – ஆதிநாதா, ஜோதீ
புத்தியைத் தா நான் புதிதாய் உய்யவே.

5. இந்தப் பலியின் சொந்தக் கந்தமே – ஆதிநாதா, ஜோதீ
என்னில் கமழ ஈவாய் அந்தமே.

**501.**

**பல்லவி**

**செயம் செயம் அல்லேலூயா செயம் செயம் எப்போதும்**
இயேசு நாதர் நாமத்திற்கு செயம் செயம் எப்போதும்.

**சரணங்கள்**

1 உம்மைப் பின்செல் வேன்என் சுவாமி எனக்காக நீர்மரித்தீர்
எல்லாரும் ஓடினாலும் உமதன்பால் நானிருப்பேன்.

2 பாவி பாவி பாவி பாவி பரலோகம் சேரலாம்
பிராணநாதர் பாதத்தண்டை தாவியே ஓடிவா.

3 பாவச் சஞ்ச லத்தைவிட நாளை வர நோக்காதே
இரட்சகரே அழைக்கிறார் பாவியே ஓடிவா.

4 நானே வழி நானே சத்யம் நானேசீவன் என்றாரே
நாதன் கிறிஸ்துவண்டை பாவியே ஓடிவா.

## 2. மங்களம்

**502. இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி.**

**பல்லவி**

**மங்களம்! செய மங்களம்**
மாசில்லா திரியேகர்க்கு!

**அனுபல்லவி**

சங்கையின் இராசர்க்கு,
எங்குமா புகழ் நேசர்க்கு – மங்களம்

அட்டவணை

**சரணங்கள்**

1. அந்தம் ஆதி யில்லாதவர்,
விந்தை யுலகம் செய்தவர்,
முந்த நமை நேசித்தவர்,
மூவுலகுக்கும் ஆண்டவர்,
சந்ததம் வாழ்பவர்,
எந்தையாம் பிதாவுக்கு. – மங்களம்

2. வான லோக மே விட்டு,
ஈனப் பாவியை யிட்டு,
தானமா யுயிர் விட்டு.
தீன நரரைத் தான் மீட்டு,
வாழும் மணவா ளர்க்கு
நன்மை செய் மனுவேலர்க்கு. – மங்களம்

3. சுத்த இதயமே தந்து,
பக்தர் மனதிலே வந்து,
அத்த னாலயமா யீந்து,
நித்தம் துதிபெற நின்று,
சத்தியம் போதிக்கும்
சுவாமி பரிசுத் தாவிக்கும். – மங்களம்

**503. இராகம்: செஞ்சுருட்டி. தாளம்: ஆதி.**

**பல்லவி**

**மங்களம் சுபமையா பூமாது மணவாளா**

**அனுபல்லவி**

மங்கையரே மரி பாலசீ ராளா
பரமதயா குணாளா – பூமாது மணவாளா – மங்களம்

**சரணங்கள்**

1. சுந்தர மிகும் பர சோதிக் கண்ணாடி
வந்தனம் அனந்தம்கோடி – பூமாது – மணவாளா – மங்களம்

2. பரம பிதாவுக்கும் பரிசுத்த ஆவிக்கும்
நரர் குருவே உமக்கும் – பூமாது – மணவாளா – மங்களம்

3. அன்புடனே எமை அழைத்து வந்தீரே
இன்ப கரம் கொடுப்பீரே – பூமாது – மணவாளா – மங்களம்

**504. இராகம்: சங்கராபரணம். தாளம்: ஏகம்.**

**பல்லவி**

**அந்தர பானு சுந்தர சோதி**
அம்பரனே மங்களம்.

**அனுபல்லவி**

அன்றும் இன் றென்றும் அனாதிநீர் தாமே
அடைக்கலம் அளித்திடும் அனுக்கிரமே– அந்தர

1. தம்புர் சுர மண்டலம் சாரங்கி மிர்தங்கம்
தாளம் வீணை தபலா
ஜம் ஜம் கிண் ணென்று திம் திம் திம் மென்று
தளாம் பளாம் ஜலீர் ஜலீர் கலீ ரெனவே – அந்தர

2. தோத்ர பலி சுகிர்த பலி–சு
கந்த உன் பிரீது பலி
சொல்லுவோம் லாலி அதுவே எம் சோலி
சகா சலா பலா பலன் கொடுத் தம் சலி – அந்தர

**505.**

**“நேசமணி வாசமணி” என்ற மெட்டு**

**பல்லவி**

**மங்களங்கள் பாடிடுவோம் சங்கீதத் தியானத்தோடு**
இங்கிதமா யிங்கு கூடி சங்கை திரி யோர்க்கு

**சரணங்கள்**

1. அண்டசரா சரங்க ளெல்லாம் எண்ணமுட னேவகுத்த
தொண்டர்களின் நாயகனுக்குத் தொண்டனிட்டுத்
தெண்டனிட்டு – மங்களங்கள்

2. வானலோ கத்தை விட்டு ஈனப்பா வியை யிட்டு
தானமாக உயிரீந்து தீனரெமை மீட்டவர்க்கு – மங்களங்கள்

3. சத்தியநெ றியிலேற பக்தியில் தினமும்தேற
புத்தியதை நித்த நித்தம் தந்து வரும் சுத்தாவிக்கு – மங்களங்கள்

4. எல்லாம்ப டைத்தவர்க்கு பொல்லாரை மீட்டவர்க்கு
நல்வரங்கள் நமக்கீயும் வல்ல பரி சுத்தாவிக்கு – மங்களங்கள்

**506. இராகம்: நவரோஜ் தாளம்: சதுர்ச்ர ஏகம்.**

**சீவ சுந்தர விலாசா மங்களம்**
செயா வாகனம் கிரு பாசனம்
சித் சபா சின்மயா தியாக இராச மேசியா
சீர் மிகும் பேரின்ப நாம மீது மங்களம்
தியான கியான மான மோன சிந்தா மங்களம்.

2. வீணை தம்பூர் கிண் கிண் சாலர் தொனிக்க
மிர்தங்கமும் திம்திம் மென் றொலிக்க
மீட்டுடன் சாப்புடன் பாடகர் நடனிக்க
வேத சித் சதானந்த சபையில் மங்களம்
மேலுலக ரத்ன புரி விலாசா மங்களம்

**507.**

**பல்லவி**

**தேவாதி தேவனுக்கும் தேவ குமாரனுக்கும்**
தேவாவி யானவர்க்கும் மங்களம்

**அனுபல்லவி**

பாடுவோம் துதி பாடுவோம் என்தன் – தேவாதி

**சரணங்கள்**

1. திரிலோக நாதனுக்குச் செகபரி பாலனுக்கும்
தேற்றர வாளனுக்கும் மங்களம் – பாடுவோம் – தேவாதி

2. வானாதி வானனுக்கும் வல்ல கிறிஸ்துவுக்கும்
வரம் அருள் சுத்தாவிக்கும் மங்களம் – பாடுவோம்– தேவாதி

3. திரியேக தேவனுக்கும் தேவதிருச் சேயனுக்கும்
தேவாவி யானவர்க்கும் மங்களம் – பாடுவோம் – தேவாதி

4. ஆதி அந்தமில்லானுக்கும் ஆட்டுக்குட்டி யானவர்க்கும்
அசரீரி யானவர்க்கு மங்களம் – பாடுவோம் – தேவாதி

5. அன்பேயுரு வானவர்க்கும் அருமைப்பிதா வானவர்க்கும்
அன்பருள் வசிப்பவர்க்கும் மங்களம் – பாடுவோம் – தேவாதி

**508. இராகம்: சங்கராபரணம் தாளம்: சாப்பு**

**பல்லவி**

**சுப செயய மங்களமே நித்திய சுப செப மங்களமே**
சுகமே தரவே புவிமீ துயிர்த்த சுதனேசு நாதருக்கே

**சரணங்கள்**

1. தீர்க்க ருரைத்தனரே இன்று இயேசு உயிர்த்தனரே
செகதீஸ்பரனார் சுதனார் கிறிஸ்து செயமாய் எழுந்தவர்க்கே
–சுப

2. தூதர் சங்க முழங்க வான சோதிகளு மிலங்க
துரிதாய் பரனார் களிகூர்ந் திடவே தொனியாய் எழுந்தவர்க்கே
– சுப

3. அங்கங்குளிந் திடவே உல கெங்கும் மகிழ்ந்திடவே
அடியாருடை சாவின் கூரொடித்து ஆறுதல் தந்தவர்க்கே – சுப

4. சாத்தான் நடுங்கிடவே அவன் சக்தி ஒடுங்கிடவே
தலையே படுகாயமதாய் இரத்தம் ஓட மிதித்தவர்க்கே – சுப

5. கல்லறை காத்திருந்த காவல்காரர்களும் வருந்த
கருணைப் பர தூதனுமே திறக்கக் கனமா யெழுந்தவர்க்கே – சுப

6. நித்திரையே அடைந்து வாழ்ந்த சுத்தர் உயிரடைந்து
நேராக சாலே மேகிடச்செய் நித்தியா னந்தருக்கே – சுப

7. மகதலனாள் மரியும் கூடவந்த மற்றோர் மரியும்
வழியேகிடும் வேளையில் வா உகவென வார்த்தை
பகர்ந்தவர்க்கே – சுப

8. பயமெனக் கென்பயனே இயேசுபரனைத் துதி மனமே
பரமே கிடவே விசுவா சிகட்கு பாதை காட்டுப வர்க்கே – சுப

**509. இராகம்: சுருட்டி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**சீர் இயேசு நாதனுக்குச் செய மங்களம் – ஆதி**
திரி யேக நாதனுக்குச் சுபமங்களம்.

**அனுபல்லவி**

பாரேறு நீதனுக்குப், பரம பொற் பாதனுக்கு,
நேரேறு போதனுக்கு, நித்திய சங்கீதனுக்கு, – சீர்

**சரணங்கள்**

1. ஆதி சரு வேசனுக்கு, ஈசனுக்கு மங்களம்;
அகிலப்பிர காசனுக்கு, நேசனுக்கு மங்களம்;
நீதி பரன் பாலனுக்கு, நித்திய குணாலனுக்கு,
ஓதும் அனு கூலனுக்கு, உயர் மனு வேலனுக்கு – சீர்

2. மானாபி மானனுக்கு, வானனுக்கு மங்களம்;
வளர்கலைக் கியானனுக்கு, ஞானனுக்கு மங்களம்;
கானான்நல் தேயனுக்குக் கன்னிமரி சேயனுக்கு,
கோனார் சகாயனுக்கு, கூறு பெத்த லேயனுக்கு – சீர்

3. பத்து லட்ச ணத்தனுக்கு, சுத்தனுக்கு மங்களம்;
பரமப தத்தனுக்கு நித்தனுக்கு மங்களம்;
சத்திய விஸ்தாரனுக்கு, சருவாதி காரனுக்கு,
பத்தர்உப காரனுக்கு, பரம குமாரனுக்கு. – சீர்

அட்டவணை

# சிறுவர் பாடல்கள்

**சிபா. 1**

**இயேசு அண்டை சேருவோம் ஒளியில் ஒளியில்**
அவரோ டுலாவுவோம் திவ்விய ஒளியில்

**பல்லவி**

ஒளியில் உலாவுவோம் ஒளியில் ஒளியில்
ஒளியில் உலாவுவோம், ஓ! இயேசு வுடனே

**சரணங்கள்**

2. சாப மொன்று மில்லையே ஒளியில் ஒளியில்
பாவமங்கே இல்லையே திவ்விய ஒளியில்

3. சத்துரு பயமில்லை ஒளியில் ஒளியில்
சதாவும் செயமங்கே திவ்விய ஒளியில்

4. பயமொன்று மில்லையாம் ஒளியில், ஒளியில்
பகலெப்போ துமுண்டாம் திவ்விய ஒளியில்

5. இயேசுவையே சேவிப்போம் ஒளியில், ஒளியில்
பெலனுமே பெறுவோம் திவ்விய ஒளியில்

6. பரலோகம் சென்றபின் ஒளியில், ஒளியில்
பரிசுத்த வீட்டில் வாழுவோம் திவ்விய ஒளியில்

7. அல்லேலூயா கீதமே ஒளியில், ஒளியில்
பாடிக்கொண் டேஇருப்போம், திவ்விய ஒளியில்

**சிபா. 2**

**இயேசுவைப் போல்நல்ல நேசருண்டோ**
இல்லையே, இல்லையே,
ஆத்தும நோய்தீர்க்கும் வைத்யருண்டோ
இல்லையே, இல்லையே!

[அட்டவணை]

**பல்லவி**

இயேசு நேசாரறிவா ரென்னை
என்றும் என்னோ டிருப் பாரே

**சரணங்கள்**

2. இயேசையா மேன்மைக்கோர் நிகருண்டோ
இல்லையே, இல்லையே,
இராசனின் தாழ்மைக்கோர் ஒப்புமுண்டோ?
இல்லையே, இல்லையே – இயேசு நே

3. எப்பொழு தாயினும் கைவிடு வாரோ
இல்லையே, இல்லையே,
காரி ருளில்அவர் நீங்கு வாரோ
இல்லையே, இல்லையே, – இயேசு நே

4. யாரும் அவரில் ஏமாந்த துண்டோ
இல்லையே, இல்லையே,
எப்பாவி யும்தள்ளப் பட்ட துண்டோ
இல்லையே, இல்லையே – இயேசு நே

5. இயேசுவைப் போல் மீட்ப ரெங்கு மில்லை
இல்லையே, இல்லையே
அன்பரில் அன்பர்வே றொருவரில்லை
இல்லையே, இல்லையே – இயேசு நே

**சிபா. 3 இராகம்: குந்தலவராளி** **தாளம்: ஏகம்.**

**கண்ணிகள்**

**உலோக ஞானத் தாலே மோசம் போகாதே**
பாவ ஆசை யாலே நாச மாகாதே

2. மாய்மா லத்தி னாலே முடிந்து போகாதே
மனதில் பகை பேணி தினமும் வாழாதே

3. சோம்பே றித்த னத்தால் சோரம் போகாதே
சுயந லத்தி னாலே சிதைவு கொள்ளாதே

4. சத்ய வேதம் வாசி நித்தம் நித்தமே
பக்தி யாய்செபித்து பாவம் வெல்லுவாய்!

***– மறைத்திரு. எம்.எஸ். இயேசுதாசன் அவர்கள், பாளையங்கோட்டை.***

**சிபா. 4**

**பல்லவி**

**ஓர் வெண்ணங்கி ஓர் பொன்முடி**
ஓர் வாத்தியம் ஓர் மேல் வீடு
ஓர் செயக் கொடி, ஓயா இன்பம்!
எனக்குண்டு சொர்க்கத்தில்

**சரணங்கள்**

1. இயேசு என் இரட்சகர் பாவம் தீர்த்தார்,
கல்வாரி மலையில் கடன் தீர்த்தார்
அவர்அன்பில் நான்மூழ்கி என்றும் வாழுவேன்
வாழுவேன் சீவ ஊற்றில் வாழுவேன் – ஓர்

2. பாவிகள் நடுவில் போகிறேன்
போகிறேன் நான் போகிறேன்
மீட்பர் சென்ற பாதைகளில்
போகிறேன் நான் போகிறேன் – ஓர்

3. வீண் பக்திக்காரர் நகைத்தாலும்
போகிறேன் நான் போகிறேன்
பூரண அன்பு பயம் தீர்க்கும்
போகிறேன் போகிறேன் நான் போகிறேன் – ஓர்

4. சிலுவைக் கொடியுடன் போகிறேன்
போகிறேன் நான் போகிறேன்
மீட்பரின் நேசத்தைக் காட்ட நான்
போகிறேன் நான் போகிறேன் – ஓர்

அட்டவணை

**சிபா. 5 இராகம்: ஆங்கிலம்.** **தாளம்: ஆதி**

**கண்ணிகள்**

**தேவசேயன் பால்யர் சேனையர் நாமே**
தேவவேலை சற்றே செய்வோம் வாருமே.
தேசமெங்கும் போகசற்று
சிறுவரா யினும் கற்று
செய்யசிறு வேலை யுண்டு
செய்தா லதில் செய முண்டு

2. பாரில் வந்துதித்த பரன் சேயனைப்
பாவிக் குயிரீந்த பரிசுத்தனை
பாசத் தோடென்றும் நினைத்து
பணிவாகத் தோத்திரித்து
பட்சமிகும் பொக்கிசமாய்
பாலர் நாம் நெஞ்சில் பதித்து

3. இயேசுபாலன் செய்கைக் கேற்க நடப்போம்
என்றும் தேவ தயவினுள் நிலைப்போம்
எங்கள் நம் சிற்றொளிப் பாச
மிருத யங்களில் வீச
இயேசுவான ஞான சோதி
ஏற்றகத் தெக்காளம் ஊதி

4. வார்த்தையோடு செய்கை வாசம் நிறைந்து,
வானோர் நாயர்க்கேற்கும் வளம் பொருந்த
மற்றொர் இதே கிறிஸ்தேசு
மக்கள் என்றெமை யறிந்து
மகிமை இயேசுமக் கென்று;
வாழ்த்தச் செய்வோம் நாம் உவந்து.

5. பாலர்க் கேற்க இயேசு பாதம் பணிவோம்.
பண்போ டுட்கருத் தாய்ப்பாடிப் புகழ்வோம்.
பாலர் நேசர் இயேசு நம்மேல்
பட்ச முள்ளோர் என்று ரைப்போம்
பள்ளித் தோழர்க் கந்நல்நண்பரைப்
பற்றிப் பாடி விவரிப்போம்

6. நல்ல போர்வீரராய் நாமெங்கும் நின்று
நாதன் கட்டளையை நன்கு மதித்து
வல்லவரின் சக்தி பெற்று
வழுவற்ற நடை யையுற்று
சொல்லில் தவறாமை யுற்று
சுகிப்போம் சந்தேக மற்று

7. கர்த்தர்க் கேற்கும் மனக்களிப் புடனே
காணிக்கை களீந்து கண்யஞ் செய்வோம்.
கர்த்தர் தங்கள் மீட்பரென
கருத்தி லுணராப் பாலர்
கண்டுணரக் காட்டுதற்காய் கனிவாகச் செபிப்போமே.

***– மறைத்திரு. பாக்கியநாதன் அவர்கள், ஆழ்வானேரி.***

**சிபா. 6 இராகம்: பிலஹம்சா.** **தாளம்: ஏகம்**

**பல்லவி**

**தோழரே சேர்ந்து வாருங்கள்**
தேவனைப் புகழ்ந்து பாடுங்கள்
சேனையின் தேவன் நல்லவர்
தேவன் நல்லவர், தேவன் நல்லவர்
என் றல் லேலூயா சொல்லி ஆடுங்கள்

1. காவலர் தளர்ந்து போய்ப் பல
சாலிகள் கூனிப் போமுன்னும்
கிண்ணிகள் நசுங்கிப் போமுன்னும்
கேட்பவர் குன்றிப் போமுன்னும்
பார்ப்பவர் மறைந்து போமுன்னும்
ஆதர வான இயேசு நாதரை
வாலி பத்தினில் நீர் நினைத்திடும் – தோழரே

2. கடைசி நாள் வரும்போது நீர்
சுத்தராய் எழுந்திருக்கவும்
பேரிகை தொனிக்கக் கேட்கவும்
தேவனைத் தரிசித்தாளவும்
சுத்தராய் ஆர்ப்பரிக்கவும்
வால வயதில் சீவ நதியில்
தாகந் தீர்த்து உம் பாவம் நீக்கிடும் – தோழரே

அட்டவணை

3. மைந்தனார் பதத்தைப் போற்றி நல்
விந்தையாய் சிறந்து நல் வேத
மந்தையில் சேர்த்திடும் திரு
வேந்தனை வணங்கிடும் பரி
சுத்தனைப் போற்றிடும் மறு
லோக மதினில் தூதர் சேனையோ
டேகி மாமகி ழாகி வாழலாம் – தோழரே

**சிபா. 7**

**கோழி தன் குஞ்சுகளைக்**
கூட்டிச் சேர்ப்பது போல
கூவி அழைக்கிறாரே
சீவன் தந்த இரட்சகர்

2. சாக்கு போக்குச் சொல்லாமல்
சல்தியாய் ஓடி வந்து
காக்கும் செட்டை களின்கீழ்
கண்டடை வாய் இரட்சிப்பு

3. தினமும் செபிப்ப தாலும்
வேதம் வாசிப்ப தாலும்
திட்டமாய் இயேசு நாதர்
செட்டையின் கீழ் இருப்பாய்

**சிபா. 8 இராகம்: கமாசு** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**பட்ட பாடு போதா தோடா – பேயே**

**அனுபல்லவி**

இட்டன் இயேசு அதட்டி யுன்னைச்
சுட்ட சூடுன் மேலிருக்க – பட்ட

அட்டவணை

**சரணங்கள்**

1. கல்லை அப்பம் ஆக்கிடச் சொன்னாய் – இயேசுவை
புல்லறிவி னால்சருவ வல்லவரை வெல்ல வந்தாய்– பட்ட

2. வான் சிகர மேல் நிறுத்தினாய் – இயேசுவை
யார் உனக்கிக் கெடு புத்தி போதித்திட்டார் பாருனக்கு– பட்ட

3. உப்பரிக்கை மேல் நிறுத்தினாய் – இயேசுவை
மப்புனக்கு அப்பொழுது எப்படியுண் டானதடா – பட்ட

4. இங்கு முண்டோ பேயாட்டடா – பேயே
சங்குனில் மிதித்துனை எங்கெறிவேன் தெரியுமா – பட்ட

**சிபா. 9 இராகம்: தேசிக தோடி** **தாளம்: சாப்பு**

**பத்தி யாய்ச்செபம் பண்ணவே**

சுத்த மாய்த்தெரி யாதையா!
புத்தி யோடுமைப் போற்றநல்
சித்தம் ஈந்திடும் இயேசுவே!

2. பாவ பாதையை விட்டுநான்
சீவ பாதையில் சேரநல்
ஆவி தந்தெனை ஆட்கொளும்,
தேவ தேவகு மாரனே!

3. பொய்யும் வஞ்சமும் போக்கியே
மெய்யும் அன்பும்வி டாமல்யான்
தெய்வ மேஉனைச் சேவித்திங்
குய்யும் நல்வரம் உதவுவாய்

4. அப்ப னே!உன தன்பினுக்
கெப்ப டிப்பதில் ஈட்டுவேன்?
செப்பும் என்னித யத்தையே
ஒப்ப டைத்தனன் உன்னதே!

5. சிறுவன் நானுனைச் செவ்வையாய்
அறிய வும்முழு அன்பினால்
நிறையும் உள்ளம் நிலைக்கவும்
இறைவ னே! வரம் ஈகுவாய்!

6. அண்ண லே! உன தாலயம்
நண்ணி நல்லுணர் வோடுனை
எண்ணி யெண்ணிஇ றைஞ்சஉன்
கண்ணில் இன்னருள் காட்டுவாய்!

***– திரு. H.A. கிருஷ்ணன் அவர்கள்.***

***இவை "இரட்சணிய மனோகரம்" என்னும் நூலில் 'பால்ய பிராத்தனை' யாகப் பாடிய 45 கவிகளில் ஆறு கவிகள்.***

**சிபா. 10 இராகம்: இலாவணி.** **தாளம்: ஆதி.**

**பாலகர்எல் லாரும்கூடி பரம இரா சனைத் தேடி**
ஆடிப் பாடி அவர் நமத்தைப் போற்றுங்கள்.

2. மூவரி லொருவருமாய் முத்தொழில் புரிவோருமாய்
ஆவியா யிருப்பவர்க்கு தோத்திரம்.

3. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவமைந்தா உந்தனுக்கு
மங்களக் கவிகள்சொல்லி வாழ்த்து றோம்.

4. ஆதியிலே ஆதாம்ஏவை அடைந்தபாவக் குணத்தை
அகற்றிப்போட வந்தவர்க்கு தோத்திரம்.

5. மன்னுயிரை மீட்கவென்று தம்முயிரை ஈயவந்த
பொன்னுல காதிபதிக்கே தோத்திரம்.

6. சுந்தரப் பிதாகுமாரன் சோதிபரி சுத்தாவிக்கே
வந்தனம் அனந்தம் எங்கள் சுவாமியே

அட்டவணை

**சிபா. 11**

**கண்ணிகள்**

**மாட்சிமிகும் மோட்சநகர் மகிமை என் சொல்வேன் – அந்த**
மங்களம்சேர் மாளிகைக்குள் என்று சேருவேன்

2. நாம் எல்லோரும் நாடுகின்ற பட்டணமது – நமது
நாதரேசு வீற்றிருக்கும் பட்டணமது

3. பட்டணத்தின் வீதியெல்லாம் சுத்தப் பொன்னாமே – அங்கே
பாடுவோரும் ஆடுவோரும் கோடா கோடியே

4. முத்து மய மாயிலங்கும் பட்டணமது – நமது
முன்னோர் பலர் போயிருக்கும் பட்டணமது

5. சீவநதி பாயுகின்ற பட்டணமது – நித்தம்
சித்திரமோ டேயிலங்கும் பட்டணமது

6. சாவுதுக்க மேஇல்லாத பட்டணமது – நிதம்
சங்கீதங்கள் தான்முழங்கும் பட்டணமது

7. எண்ணிறந்த தூதர் போற்றும் பட்டணமது – அங்கு
எப்பொழுதும் கீதம் கேட்கும் பட்டணமது

**சிபா. 12 இராகம்: இந்துஸ்தானி.** **தாளம்: ஆதி**

**வீராதி வீரர் இயேசு சேனை நாங்கள்,**
சேனை நாங்கள், இயேசுவின் சேனை நாங்கள்.

2. திருவசனத் தையெங்கும் திரிந்து சொல்வோம்,
திரிந்து சொல்வோ மதை அறிந்து சொல்வோம்.

3. அறிவீன மென்னும் காட்டை அதமாக்குவோம்,
அதமாக்குவோம்; ஞான மதால் தாக்குவோம்.

4. சிலுவைக்கொ டியைச் சேரத் தேடிப் பிடிப்போம்,
தேடிப் பிடிப்போம்; அன்பு கூர்ந்து பிடிப்போம்.

அட்டவணை

5. இரட்சணிய சீராவுடன் நீதிக் கவசம்
நீதிக் கவசம் கை யாடுவோம் வசம்.

6. விசுவாசக் கேடகத்தை மேலுயர்த்துவோம்,
மேலுயர்த்துவோ, மதை மேலுயர்த்துவோம்.

7. பாவச்சோத னைத்தடைகள் பாசம் நீக்குவோம்,
பாசம் நீக்குவோம்; ஆ,பாசம் போக்குவோம்.

**சிபா. 13 இராகம்: பிலஹம்சா.** **தாளம்: ஏகம்**

**பல்லவி**

**பாலரே நடந்து வாருங்கள்,**
காலையில் எழுந்து கூடுங்கள்
மேலோகம் நோக்கிப் பாருங்கள்
சாலவே சீவன் சுகமும்

**அனுபல்லவி**

தந்த தேவனை மைந்த னேசுவைச்
சந்தோ சத்துடன் போற்றிப் பாடுங்கள்!

**சரணங்கள்**

2. சிறுகண்கள் இரண்டு தந்தனர்
தேவன்செய்தவை நோக்கிப் பார்க்கவே;
சிறுசெவி இரண்டு தந்தனர்
தேவன்சொல்லைக் கேட்ப தற்குமே;
சிறப்பு டன்அவர் பரத்தை நோக்கியே
திவ்ய வார்த்தையை கேட்டு வாருங்கள் – பாலரே

3. சிறியகால் இரண்டு தந்தனர்
செல்லவே மோட்ச பாதையில்,
சிறுகைகள் இரண்டு தந்தனர்
செய்யவே தேவ ஊழியம்;
சீக்கி ரம்அந்தப் பாதை சென்றுமெய்த்
தேவ னைத்தினம் சேவித் தேத்துங்கள் – பாலரே

4. நாவுமோர் மிடறுந் தந்தனர்
நன்மையைப் பேசிப் பாடவே
மாஇளம் இதயம் தந்தனர்
வால வயதில் அவரை நோக்க
ஆத லால்நம திருத யத்தையே
அவருக் காலய மாய்ப்ப டைப்போமே! – பாலரே

5. தூதர்கள் அனந்தம் பேர்முனி
மாதவர் அநேக மாயிரம்
சுத்தர்கள் நரரும் யாவரும்
பத்தியாய் வணங்கிப் போற்றுமோர்
துய்ய தேவனை திவ்ய நாதனை
மெய்ம னதுடன் தோத்த ரியுங்கள் – பாலரே

**சிபா. 14 இராகம்: சுருட்டி. தாளம்: ஆதி**

**பல்லவி**

**இயேசுவைப் பார்த்து நட – என் நேசா**
இயேசுவைப் பார்த்து நட

**சரணங்கள்**

1. நமது பாவங் களுக்காக மரித்து – நாம்
நடந்திட வழிகாட்டி முன்சென்ற – இயேசுவை

2. தீமைக்குத் தீமை செய்தாரோ? – தமைச்
சிலுவையி லறைந்தோர்க் காய் செபித்தாரே – இயேசுவை

3. சண்டை கூக்குரல் செய்தாரோ – தம்
சத்தத்தை வீதியில் காட்டாரே – இயேசுவை

4. நெரிந்த நாணலை முறியாரே – மங்கி
எரிந்த திரியை அவியாரே – இயேசுவை

5. உருக்க விரக்கங்க ளுள்ளாரே – செவி
டூமை குருடர்தமைத் தள்ளாரே – இயேசுவை

6. நன்மை செய்வதில் ஓய்ந்ததும் இல்லை அவர்
நாட்களை வீணிலே கழித்ததும் இல்லை – இயேசுவை

அட்டவணை

**சிபா. 15 இராகம்: அனந்த கல்யாணி.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**ஏதேன் வனத் தோட்டம், என்ன சிங்கார வனம்**

**சரணங்கள்**

1. ஆதாம் ஏவாளை அன்பாகப் படைத்து
அமைத்து வைத்த தோட்டமது – ஆ, ஆ

2. காயும் கனியுமாய் கால்வாய்கள் ஓரமாய்
கனியும் மரங்க ளுண்டு – ஆ, ஆ

3. பைசோன் கீகோன் இதெக்கேல் ஐப்பிராத்
பளிங்கு நதிக ளுண்டு – ஆ, ஆ

4. சுடரொளிப் பட்டயம் வாச லிருபுறமும்
சூரிய காந்தி வீசும் – ஆ, ஆ

5. அரூபியாய் நின்று ஆசீர் வதிக்கிறார்
ஆசை மகா தேவனும் – ஆ, ஆ

**சிபா. 16 இராகம்: ஹனுமதோடி.** **தாளம்: ஆதி**

**பல்லவி**

**பல்லரங்க கனக சபை மானுவேலனே**

**அனுபல்லவி**

பைங்கிளி நான் பறந்து வாறேன், பாக்கிய சீலனே

**சரணங்கள்**

1. அல்லேலூயா ஓசியன்னா அல்பா ஒமேகா
ஆசைகொண்டு நேசமிஞ்சி வந்தீர் எனக்காய் – பல்லரங்க

2. அழுகையின் பள்ளத்தாக்கை கடப்ப தெந்நாளோ
ஆனந்த சுகமடைந்து சுகிப்ப தெந்நாலோ – பல்லரங்க

3. கூடுவிட்டு வீடுதொட்டு குலாவி வாழவே
கொஞ்சுங் கிளி யாகநானுன் கரத்தில் வாழவே – பல்லரங்க

4. பாடு துக்கம் கண்ணீர் துன்பம் இப்போ என் பங்கே
பரம சுக மிஞ்சி எப்போ என்பங் காகுமோ – பல்லரங்க

அட்டவணை

**சிபா. 17 இராகம்: காப்பி.** **தாளம்: ஆதி**

**சிங்கார ஒரேப் சார்பில் மங்காத் தீச் சுவாலை இதோ**
எரியுது பார் – முட் – செடிதனிலே.

2. அக்கினி மூண்டெறிந்தும் முட் செடி வேகா தென்ன
அதிசயமே–பே–ரதிசயமே.

3. கிட்ட முட்செடி மோசே எட்டி நடக்கையிலே
இடி முழக்கம்–பே–ரிடி முழக்கம்.

4. மோசே மோசே உனக்கு மோசம் வரும் கிட்டாதே
முனிபர் பூமி–இது–மகிபர் பூமி.

5. கழற்று உன் பாதரட்சை கர்த்தா எகோவா இங்கு
நிழற்றல் செய்தோம் நல்ல நிலைமையாவோம்.

6. உன்சனக் கூக்குரலும் என்முன்னே எட்டினதால்
உனை அழைத்தேன்–உயர்–பதி கொடுத்தேன்.

7. ஐயாநான் திக்குவாயன் ஆகாதென் னாலேசுவாமி
ஆளனுப்பும் வே றாளனுப்பும்.

8. ஆரோன்உன் அண்ணனல்லோ அவனுன்னைச் சந்திப்பானே
அவனேஉன் வாய்இனி அலட்டாதே போ.

9. என்னவென் றாலும்சுவாமி என்னாலே கூ டாதையா
என்குலம்–கீழ் எகிப்–பத்திலே.

10. சுவாமி நின் நாம மென்ன சாதிகள் கேட்பா ரென்னை
சாற்றிடுவீர்–சபை–கூட் டிடுவீர்.

11. ஏகோவா என்ற நாமம் இது முதல் உண்டு மோசே
எகிப் பத்தின் நேர்–ஏகிச்– சேர்வாய்.

12. அல்ல மோசே உனக்கு அடையாளம் தாரே னிப்போம்
அதோ பார் உன்–கோல்–அரு ளடையுது!

[அட்டவணை]

**சிபா. 18**

**நாம வழிகள்**

**முள்முடி சூட்டப்பட்டார் பாவியை இரட்சிக்க.**

2. விலாவிலே குத்தப்பட்டார் பாவியை இரட்சிக்க.

3. தலையிலே குட்டப்பட்டார் பாவியை – உயிர்ப்பிக்க.

4. வாரினால் அடிக்கப்பட்டார் பாவியை, இழுக்க.

5. சிலுவையில் அறையப்பட்டார் பாவியை, உயர்த்த.

6. தூய துயில் உரியப்பட்டார் பாவியை, உடுத்த.

**சிபா. 19 இராகம்: சங்கராபரணம். தாளம்: ஏகம்.**

**உன்னதத்தின் தூதர்களே ஒன்றாகக் கூடுங்கள்**
மன்னன் இயேசு நாதருக்கு வான்முடி சூட்டுங்கள்.

2. நாலா தேசத்துள் ளோர்களே நடந்து வாருங்கள்
மேலோன் இயேசுநாதருக்கு மெய்ம்முடி சூட்டுங்கள்.

3. இரத்தச் சாட்சிகளே உங்கள் சத்தியம் சொல்லுங்கள்
முத்தமிட்டு இயேசுவுக்கு பொன்முடி சூட்டுங்கள்.

4. குற்றமில்லாப் பாலர்களே கூடிக் குலாவுங்கள்
வெற்றி வேந்தன் இயேசுவுக்கு வெண்முடி சூட்டுங்கள்.

5. வாலிபரே கன்னியரே வந்து மகிழுங்கள்
சாலேம் மக்கள் கூட்டத்தோடு போய்முடி சூட்டுங்கள்.

6. இயேசு என்ற நாமத்தையே எல்லாரும் போற்றுங்கள்
நசரேயன் அவர் தலைக்கு நன்முடி சூட்டுங்கள்.

7. நல்மன தோடே சொல்கிறேன் நாட்டார்களே நீங்கள்
புன்னகை கொண்டு நிற்பானேன் பூமுடி சூட்டுங்கள்.

8. இந்தியா தேசத்தார்களே ஏகமாய்க் கூடுங்கள்
பூத்தானங்கள் அற்பமென்றே பொன்முடி சூட்டுங்கள்.

9. சின்ன நாடுகளை விட்டுச் சீக்கிரம் ஏகுங்கள்
பொன்னகராம் சாலேமுக்குப் போய்முடி சூட்டுங்கள்.

10. சகல சுட்டத்தார்களே சாஷ்டாங்கம் செய்யுங்கள்
மகா அரச ரிவர்தமக்கு மாமுடி சூட்டுங்கள்.

11. மண்கல்செம்பு பொன்னைவிட்டு வானோரண்டை வந்து
முண்முடி பெற்றதலைக்கு பொன்முடி சூட்டுங்கள்.

**சிபா. 20**

**வாடி அம்மா வாடி,–ஒரு–ஞானப் பாட்டைப் பாடி**
தேவ சுதனைத் தேடி–நித்திய–சீவ பாதையில் வாடி

2. ஓடு அம்மா ஓடு–ஒரு–சாலை வழியே ஓடு
மோட்ச வழியைத் தேடு–உனக்–கங்கே இருக்குது வீடு

3. கட்டு அம்மா கட்டு–சத்தியக்–கச்சைதனைக் கட்டு
பரிசுத்த புடவையைக் கட்டு–அது–தான் உனக்குப் பட்டு

4. முத்து நல்ல முத்து–வேத சத்ய–வசனக் கொத்து
வேத நெறிகள் பத்து–பார்–அதுவே உன்சம்பத்து

5. அன்பு நல்ல அன்பு–உன்–ஆண்டவர் பேரிலன்பு
ஒருவரி லொருவர் அன்பு–பார்–மற்ற தெல்லாம் வம்பு

6. சண்டையடி சண்டை இரண்டு பெண்கள் சண்டை
தீர்ந்ததடி சண்டை சாலோமோனின் அண்டை

7. கொண்டையடி கொண்டை அப்சலோமின் கொண்டை
தொங்குதடி கொண்டை கர்வாலிமரத் தண்டை

8. கள்ளியடி கள்ளி விக்கிரகக் கள்ளி
இராகேலல்லோ கள்ளி லாபான் மனம் தள்ளி

9. தீனாளடி தீனாள் தெரு வுலாத்தித் தீனாள்
சீகேமுக்குப் போனாள் சீரழிந்து வந்தாள்

10. அன்னாளடி அன்னாள் பிள்ளையற்ற அன்னாள்
அவர் பெயரைச் சொன்னாள் பிள்ளை பெற்றாள் அன்னாள்

11. கூழு அடி கூழு, கொம்மடிக்காய்க் கூழு
கூழுக் குள்ளே சாவு, கூப்பிட்டார் எலிசாவே

12. வேசியடி வேசி இராகாப் என்ற வேசி
வேசி விசுவாசி எபி ரேயர் வாசி

13. பாதை அம்மா பாதை இயேசுவே நல்பாதை
நித்திய சீவ பாதை–அதைச் சேரா விடில் வாதை

**சிபா. 21**

**"மாட்சி மிகும் மோட்ச நகர்" – என்ற மெட்டு**

**நாதனேசு நலமிந்த திறவுகோலாமே – இந்த**
வேதமென்னும் மாளிகையைத் திறந்திடுவோமே

2. எத்தியோப்பா மந்திரியும் ஏற்றுக் கொண்டானே – அவன்
நித்தியமாய் சீவ வழி தேடிக் கொண்டானே

3. தங்கமான திறவுகோலைப் பெற்றிடுவோமே – அதைத்
தட்டித் திறந்துள்ளே சென்றிடுவோமே.

மின்நூல்: S.K.ராஜன்
டக்கரம்மாள்புரம்.